890

# வேத அகராதி

## ஐந்தாம் பாகம்

மூக்கு—வௌவால்

(பக்கம் 737–910)

இஃது

எ. சி. கிலேற்றன் ஐயரால்

இயற்றப்பட்டது

1745

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 FEB 1927
MADRAS

இரண்டாம் பதிப்பு

# A TAMIL BIBLE DICTIONARY

by A. C. CLAYTON

PART V

(*Second Edition.* Pages 737–910)

ACL-TNAL
03050

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS ALLAHABAD RANGOON COLOMBO

1927

496
220·3

# வேத அகராதி

OFFICE OF THE REGISTRAR
16 FEB 1927

## ஐந்தாம் பாகம்

### மூ

மூக்கு. **Nose.** 2 இரா $19^{28}$ யோபு $40^{24}$ $41^{2}$ சங் $115^{16}$ நீதி $30^{33}$ உன். பா $7^{4}$ ஏசா $37^{29}$. நாசி காண்க.

மூக்குத்தி. **Nose-jewel.** ஏசா $3^{21}$ நீதி $11^{22}$. ஆபரணம் காண்க.

மூசி. **Mushi.** யாத் $6^{19}$ எண் $3^{20-33}$.

மூஞ்சூறு. **Mole.** ஏசா $2^{21}$. எபிரெய பதம் எலிகளைப் பொதுவாய்க் குறிக்கும்.

மூடத்தனம். **Folly.** நீதி $15^{21}$ $26^{11}$.

மூடன். **Fool.** யோபு $30^{8}$ சங் $92^{6}$ நீதி $1^{7}$ $7^{22}$ $8^{5}$ $10^{8,21,23}$ $12^{16-23}$ $14^{3-9}$ $15^{5}$ $17^{10,28}$ $18^{2}$ $19^{1,29}$ $20^{3}$ $24^{7}$ $26^{3-12}$ $27^{3,22}$ $29^{9,11}$ பிர $2^{14-19}$ $4^{5,13}$ $5^{1-4}$ $6^{8}$ $7^{4-9}$ $9^{17}$ $10^{2-15}$ ஏசா $19^{13}$ எரே $17^{11}$ ஓசி $9^{7}$. புத்தியீனன், மதியீனம், மதிகேடு காண்க.

மூடுகிறது. **Cover.** ஆதி $38^{15}$ யாத் $14^{28}$ எண் $4^{5}$ $9^{15}$ நியா $4^{18}$ யோபு $36^{32}$ எஸ்தர் $7^{8}$ சங் $32^{1}$ $91^{4}$ $104^{6}$ நீதி $10^{12}$ $12^{16}$ ஏசா $60^{2}$ எசே $32^{7}$ ஓசி $32^{9}$ ஆப $3^{3}$ 1 கொரி $11^{7}$ 1 பேது $4^{8}$.

மூத்தவள். **Elder (woman.)** எசே $23^{4}$ 1 சாமு $18^{17}$.

மூத்தவன். **The elder.** ஆதி $25^{23}$ $43^{33}$ $44^{12}$ எண் $1^{20}$ யோபு $1^{13}$ ரோம $9^{12}$.

'மூத்த குமாரன்', 'மூத்த மகன்.' ஆதி $10^{15}$ $27^{19}$ யோசு $6^{26}$ நியா $8^{20}$ 1 சாமு $17^{13}$ 1 இரா $16^{34}$ 1 நாளா $1^{13}$, $2^{13}$ லூக் $15^{25}$.

மூப்பராகிய சங்கத்தார். **The Council of the Elders.** ஆலோசனைச்சங்கம், சங்கம், மூப்பன் காண்க.

மூப்பன். **Elder.**

1. பழைய ஏற்பாடு.

எபிரெயர்களுக்குள்ளே பூர்வகாலத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் அந்தந்தக் குடும்பத் தகப்பனே அதற்குத் தலைவனாயிருந்து அந்தக் குடும்பத்தைச்சேர்ந்த யாவரையும் சர்வ அதிகாரத்துடனே நடத்தி அவர்கள் செய்த குற்றங்களைக் கண்டித்து அவர்களுக்குள் உண்டான சண்டை சச்சரவுகளைத் தீர்த்து, தன் குடும்பத்துக்கு ராஜாவாகவும் நியாயாதிபதியாகவும் இருப்பான். கானான் தேசத்திலுள்ள மற்ற ஜாதியாரும் தங்கள் தங்கள் ஊர் மூப்பர்களால் நடத்தப்பட்டதாகத் தோன்றுகிறது. எண் $22^{4}$ யோசு $9^{11}$ எசே $27^{9}$ சங் $105^{22}$. இஸ்ரவேலர் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணும்பொழுது மூப்பர்கள் அவர்களை நடத்தினது போல அவர்கள் கானான் தேசத்துக்குள் பிரவேசித்தபிறகும் அவர்கள் குடியேறின சகல ஊர்களிலும் அம்மூப்பர்கள் அதிகாரம் செலுத்தினார்கள் என்பதற்குப் பல திருஷ்டாந்தங்கள் உண்டு. நியா $8^{14}$ ரூத் $4^{2}$ 1 சாமு $4^{3}$ $8^{4}$ $11^{3}$ $15^{30}$ 2 சாமு $3^{17}$ $5^{3}$ $17^{14}$ 1 இரா $8^{1}$ $21^{8}$ 2 இரா $10^{1}$.

குடும்பத்தலைவர்கள் அவ்வூர்க் காரியங்கள் அனைத்தையும் நடத்துவார்கள். குடும்பத் தலைவர்கள் வழக்கமாய் வயதுசென்றவர்களானதினால் அவர்களுக்கு 'முதியோர்' என்றும் 'மூப்பர்கள்' என்றும் பெயர் வழங்கலாயிற்று. ஆசாரத்தைப்பற்றியும் நல்லொழுக்கத்தைப்பற்றியும் குடும்ப விஷயங்களைப்பற்றியும் அவர்கள் மேல்விசாரணை செய்ததற்குப் பல திருஷ்டாந்தங்கள் உண்டு. யாத் $3^{16}$ $12^{21}$ $17^{5}$ $18^{12}$ $19^{7}$ எண் $11^{16}$ உபா $5^{23}$ $27^{1}$ $31^{28}$.

பிந்தின காலத்தில் அவர்களுக்குரிய நியாய விசாரணைசெய்யுங் கடமையைப் பற்றி உபாகமத்தில் விபரமாய்ச் சொல்லியிருக்கிறது. உபா $19^{12}$ $21^{2}$ $22^{15}$ $25^{7}$. இஸ்ரவேலர் தங்களுக்கு ராஜாவை ஏற்படுத்திக்கொண்டபிறகு நியாய விசாரணைசெய்யும் மேலான அதிகாரத்தை அந்த ராஜாக்களே வகித்துக்கொண்ட காலத்தில் ஊர் மூப்பருடைய அதிகாரம் படிப்படியாய்க் குறைவுபட்டிருக்கும் என்று நினைக்க வேண்டும். 1 சாமு $8^{20}$ 2 சாமு $15^{4}$ 1 இரா $3^{9}$ 2 இரா $15^{5}$ ஏசா $11^{5}$ ஆமோ $2^{3}$. ஆனால் ராஜாக்கள் மூப்பர்களின் அதிகாரத்தை முற்றிலும் அழிக்கவில்லை. 1 இரா $20^{7}$ 2 இரா $10^{1}$. சிறையிருப்புக்காலத்தில் மூப்பர்கள் ஆசாரவிஷயங்களில் அதிகாரஞ் செலுத்தினார்கள். எரே $29^{1}$ எசே $8^{1}$ $14^{1}$ $20^{1}$ எஸ்றா $5^{9}$ $6^{7}$. சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த யூதர்களுக்குள்ளே மூப்பர்கள் ஆசார விஷயங்களில் மேலான அதிகாரத்

தைத் திரும்பவும் பெற்றார்கள். எஸ்றா $10^{8}$ சங் $107^{32}$ நீதி $31^{23}$ யோவே $1^{14}$ $2^{16}$.

இதற்குப் பிந்திய காலங்களில் மகா ஆலோசனைச்சங்கம் இவ்விஷயங்களில் அதி சிரேஷ்டமான அதிகாரத்தைப் பெற்றது. ஆலோசனைச்சங்கம் காண்க.

2. புதிய ஏற்பாடு.

கிறிஸ்தவ சபையில் ஆசார விஷயங்களைக்குறித்து ஆதிகாலமுதல் வயதுசென்றவர்களுக்கு அதிகாரம் இருந்தது. புதிய ஏற்பாட்டில் இவர்களுக்கு 'மூப்பர்' என்னும் பெயர் விசேஷமாய் வழங்கிவந்தது. கண்காணி, தேவஊழியன் காண்க.

மூர்க்கம். **Fury**. நீதி $29^{22}$. கோபம் காண்க.

மூர்க்கவெறி. '**Madness**.' லூக் $6^{11}$ அப் $26^{11}$. =மதிகேடு. 2 தீமோ $3^{9}$.

மூலவியாதி. **Emerods**. சிலர் நினைக்கிறபடி இவை பிளேக் வியாதியில் தோன்றும் கொப்பளங்களாயிருக்கலாம். உபா $28^{27}$ 1 சாமு $5^{6}$ $6^{4}$. வியாதி காண்க.

மூலை. **Corner**. யாத் $26^{24}$ $36^{29}$ நீதி $21^{9}$ $25^{24}$ எசே $46^{21}$ மத் $21^{42}$ அப் $10^{11}$ $26^{26}$. ஓரம் காண்க.

மூலைக்கல். **Corner-stone**. கட்டடங்களின் அஸ்திபாரத்திலே இரண்டு சுவர்கள் இணைக்கப்படும் இடத்தில் வைக்கப்படும் கோடிக்கல் மிகவும் முக்கியமானது. அதைச் சரியாய் வைக்காவிட்டால் அதன் மேல் நிற்கும் அசல் சுவரில் வெடிப்புகள் உண்டாகும். ஆகையால் பூர்வீகத்தாரில் அநேகர் இந்த முக்கியமான மூலைக்கல்லை வைக்கும்போது தங்கள் தேவர்களுக்குப் பலியிடுவார்கள். சமயாசமயங்களிலே பலியிடப்பட்ட குழந்தைகளை மூலைக்கல்லுக்குக் கீழே வைப்பார்கள். 1 சாமு $14^{38}$ ஏசா $19^{13}$ $28^{16}$ எரே $51^{26}$ மத் $21^{42}$ அப் $4^{11}$ 1 பேது $2^{6}$. கல் காண்க.

மூலை-வாசல். **Corner-gate**. 2 இரா $14^{13}$ 2 நாளா $25^{23}$ $26^{9}$. எருசலேம் காண்க.

மூன்று. **Three**. எண்கள் காண்க.

மூன்று சத்திரம். **The Three Taverns**. ரோமாபுரிக்குத் தெற்கே 33 மைல் தூரத்திலே இராஜபாதையின் ஓரத்திலிருந்த ஒரு சிறு ஊர். பிரயாணிகள் இதில் சிறிதுகாலம் தங்கி இளைப்பாறுவதுண்டு. அப் $28^{15}$.

மூன்று பரிசுத்த பிள்ளைகள் பாடின பாட்டு. **The Song of the Three Holy Children**. கிரேக்க வேதாகமத்தில் மூன்று பரிசுத்த பிள்ளைகள் பாடின பாட்டு தானியேலின் ஆகமத்தோடு சேர்ந்திருக்கிறது. இதில் நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையை வணங்காத மூன்று எபிரெய வாலிபர்களை அக்கினிச் சூளையிலே போட்டபோது, அசரியா என்பவன் செய்த ஒரு ஜெபமும்; அதிலிருந்து அற்புதமாய் இரட்சிக்கப்பட்டபின் அவர்கள் பாடின ஒரு ஸ்தோத்திரப்பாட்டும் அடங்குகிறது. இதை இயற்றின ஆக்கியோன் பெயரும் எழுதப்பட்ட காலமும் தெரியாது. அப்போகிரிப்பா காண்க.

## மெ

மெகதபேல். **Mehetabel**. [கடவுள் நன்மை செய்கிறார்.]

1. செமாயாவின் பாட்டன். நெகே $6^{10}$.

2. ஏதோமிய ராஜாவாகிய ஆதாரின் மனைவி. ஆதி $36^{39}$.

மெகராதியன். **Mecherathite**. இப்பெயருள்ளவனும் 'மகாத்தியன்' என்பவனும் ஒரே ஆளாயிருக்கலாம். 1 நாளா $11^{36}$.

மெகிதா. **Mehida**. நெதனீமியரில் ஒரு குடும்பம். எஸ்றா $2^{52}$.

மெகிதோ. **Megiddo**. சாரோன் சமபூமிக்கும் யெஸ்ரயேல் சமபூமிக்கும் இடையிலுள்ள இந்தக் கோட்டை கர்மேல்மலைக்குத் தென்கிழக்கே 20 மைல் தூரத்திலிருந்தது. பூர்வீகத்தில் கானான்தேசத்தில் வசித்த கானானியரால் கட்டப்பட்ட விசேஷமான கோட்டைகளில் இது ஒன்று. மனாசேக் கோத்திரத்திற்கு இது விடப்பட்டபிற்பாடு சிலகாலம் கானானியர் இதில் வசித்தார்கள். பாராக் இதற்குச் சமீபத்தில் சிசெராவை ஜெயித்தான். யோசு $17^{12}$ நியா $1^{27}$ $5^{19}$.

சாலொமோன் இதின் அலங்கத்தைப் பழுதுபார்த்தான். 1 இரா $9^{15}$.

அகசியா, யோசியா என்கிற ராஜாக்கள் இங்கே மரித்தார்கள். 2 இரா $9^{27}$ $23^{29}$.

'அர்மகெதோன்' என்பதற்கு 'மெகிதோவின் மலை' என்று அர்த்தம். மெகிதோவில் பல யுத்தங்கள் நடந்ததினாலே, ஆவிக்குரிய விதமான யுத்தம் இவ்விடத்தில் நடந்ததாக வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வெளி $16^{16}$.

மெகுமான். **Mehuman**. அகாஸ்வேரு ராஜாவின் ஏழு பிரதானிகளில் ஒருவன். எஸ்தர் $1^{11}$.

மெகுயவேல். **Mehujael**. காயீனுடைய சந்ததியான். ஆதி $4^{18}$.

மெகுனியர். **Meunnim.** மாகோன் (1) காண்க.

மெகேதாபேல். **Mehetabel.** மெக தாபேல் காண்க.

மெசிலேமீத். **Meshillemith.** ஒரு ஆசாரியன் = மெசிலெமோத். 1 நாளா $9^{12}$ நெகே $11^{13}$.

மெசிலேமோத், மெஷிலேமோத். **Meshillemoth.**

1. எப்பிராயீம் கோத்திரத்தான். 2 நாளா $28^{12}$.

2. ஓர் ஆசாரியன் = மெசிலேமித். நெகே $11^{13}$ 1 நாளா $9^{12}$.

மெசுல்லா. **Meshullam.** 1 நாளா $8^{17}$. மெசுல்லாம் காண்க.

மெசுல்லாம். **Meshullam.** [நேசன், தோழன்.]

1, 2, 3. பென்யமீனரில் மூவர். 1 நாளா $8^{17}$ $9^{7}$.

4. காத் கோத்திரத்தான். 1 நாளா $5^{13}$.

5. சாப்பானின் பாட்டன். 2 இரா $22^{3}$.

6. இல்க்கியாவின் தகப்பன். 1 நாளா $9^{11}$.

7. ஓர் ஆசாரியன். 1 நாளா $9^{12}$.

8. ஓர் லேவியன். 2 நாளா $34^{12}$.

9. செருபாபேலின் மகன். 1 நாளா $3^{19}$.

10. ஒரு பெரியவன். எஸ்றா $8^{14}$.

11. எஸ்றாவுக்கு விரோதமாயிருந்த ஒரு லேவியன். எஸ்றா $10^{15}$.

12. அந்நியஜாதிப் பெண்ணை விவாகம் செய்த ஒருவன். எஸ்றா $10^{29}$.

13. அலங்கத்தைப் பழுதுபார்த்தவன். தொபியா இவனுடைய மகளை விவாகம் செய்தான். நெகே $3^{4}$ $6^{18}$.

14. பழைய வாசலைப் பழுதுபார்த்தவன். நெகே $3^{6}$.

15. எஸ்றா நியாயப்பிரமாணத்தை வாசிக்கும்போது பக்கத்தில் நின்றவன். நெகே $8^{4}$.

16, 17. உடன்படிக்கைக்கு முத்திரை போட்டவர்கள். நெகே $10^{7.20}$.

18. எருசலேமின் மதில் பிரதிஷ்டையில் பங்குபெற்றவன். நெகே $12^{33}$.

19, 20. ஆசாரியர்களில இருவர். நெகே $12^{13.16}$.

21. ஒரு லேவியன் = மெஷெலேமியா. நெகே $12^{25}$ 1 நாளா $9^{21}$.

மெசுல்லேமேத். **Meshullemeth.** மனாசே ராஜாவின் மனைவி. 2 இரா $21^{19}$.

மெசொப்பொத்தாமியா. **Mesopotamia.** இந்தப் பதத்திற்கு 'இரண்டு நதிகளுக்கு இடையிலுள்ள பூமி' என்று அர்த்தம். வடசீரியா தேசத்திற்கும் அசீரியா ராஜ்யத்திற்கும் நடுவேயுள்ள இப்பாகத்தின் மேற்கே எல்லையில் ஐபிராத்து நதியும், கிழக்கே எல்லையில் திகிரீஸ் நதியும் பாய்ந்தோடினதினாலே இதற்கு 'மெசொப்பொத்தாமியா' என்னும் பேர் கொடுக்கப்பட்டது. இதன் மறுபேர் பதான்-ஆராம். ஆபிரகாம் இந்தத் தேசத்திலிருந்து புறப்பட்டு ஐபிராத் நதியைக் கடந்து சீரியாவின் வழியாய்க் கானான் தேசத்திற்கு வந்தான். பிலேயாமின் முன்னோர் இதில் குடியேறினார்கள். ஆதி $24^{10}$ உபா $23^{4}$ நியா $3^{8}$ 1 நாளா $19^{6}$ சங் 60 தலைப்பு. அப் $2^{9}$ $7^{2}$.

மெசோபாப். **Meshobab.** 1 நாளா $4^{34}$.

மெசோபாயா ஊரார். **Mezobaite.** மெசோபாயா என்பது ஓர் ஊர். அது இருந்த இடம் தெரியாது. 1 நாளா $11^{47}$.

மெஷிலேமோத். **Meshillemoth.** மெசிலேமோத் காண்க.

மெஷேசாபேல், மெஷேசாபேல். **Meshezabel.**

1. மதிலைப் பழுதுபார்த்தவர்களில் ஒருவன். நெகே $3^{4}$.

2. உடன்படிக்கைக்கு முத்திரை போட்டவர்களில் ஒருவன். நெகே $10^{21}$.

3. பெத்தகியாவின் தகப்பன். நெகே $11^{24}$.

மெஷெலேமியா. **Meshelemiah.** ஒரு லேவியன். 1 நாளா $9^{21}$. = சல்லூம். 1 நாளா $9^{19}$. = செலேமியா. 1 நாளா $26^{14}$ = மிசுல்லாம் (21) நெகே $12^{25}$.

மேதேபா, மேதேபா, மேதேபா. **Medeba.** உப்புக்கடலின் வடகிழக்கு மூலையிலிருந்து ஏறக்குறைய 10 மைல் தூரத்திலுள்ள இந்த ஊர், அரபியா தேசத்திலிருந்து தமஸ்குப் பட்டணத்துக்குப் போகும் வழியோரத்திலிருந்தது. சீகோன் ராஜா மோவாபியரிடமிருந்து இதைக் கைப்பற்றினான். பின்பு இது ரூபன் கோத்திரத்திற்குக் கொடுக்கப்பட்டது. சீரியர்கள் இதிலே ஒரு சமயத்தில் பாளையமிறங்கினார்கள். ஏசாயாவின் காலத்தில் இது மோவாபியரின் வசத்திலிருந்தது. ஆதிக்கிறிஸ்தவர்கள் இதில் நாலு கோவில்களைக் கட்டினார்கள். எண் $21^{30}$ யோசு $13^{9}$ 1 நாளா $19^{6}$.

மெத்தூசலா. **Methuselah.** சேத் என்பவனின் சந்ததியான். இவன் குமாரனாகிய லாமேக் என்பவன் நோவாவின் தகப்பன். இயேசுவின் முன்னோர்களில் மெத்தூசலா ஒருவன். இவன் 969 வருஷகாலம் ஜீவித்து

ஜலப்பிரவாகத்துக்கு முந்தின வருஷத்தில் இறந்து போனதாக ஆதியாகமத்திலுள்ள வம்ச அட்டவணையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதி $5^{27}$ 1 நாளா $1^{3}$ லூக் $3^{37}$.

மெத்தூசவேல். **Methushael.** காயீனுடைய சந்ததியான். லாமேக்கின் தகப்பன். ஆதி $4^{18}$.

மெபுன்னய். **Mebunnai.** = சிபேக்காய். தாவீதினுடைய 30 போர்வீரர்களில் ஒருவன். 2 சாமு $21^{18}$ $23^{27}$ 1 நாளா $11^{29}$.

மெமுகான். **Memucan.** அகாஸ்வேரு ராஜாவின் ஆலோசனை சங்கத்தைச் சேர்ந்த பார்சிய பிரபுக்களில் ஒருவன். எஸ்தர் $1^{14}$.

மெம்பிஸ். **Memphis.** பூர்வீக காலத்திலே இது எகிப்து தேசத்திற்குத் தலைநகரியாயிருந்தது. அநேக தலைமுறைகளாக எகிப்திய ராஜாக்கள் இதில் குடியிருந்தார்கள். இதற்குச் சமீபத்தில் 'பிரமிட்ஸ்' (*Pyramids*) என்கிற கோபுரங்கள் இருந்தன. எகிப்தியர் ஆபிஸ் என்ற காளங்கன்று உருவமுள்ள தெய்வத்தை இதில் வணங்கினார்கள். இதின் மறுபேர்கள் நோப், மோப். ஏசா $19^{13}$ எரே $2^{16}$ $44^{1}$ ஓசி $9^{6}$ எசே $30^{13}$. நோப் காண்க.

மெயாரா. **Mearah.** இஸ்ரவேலர் ஜெயிக்க வேண்டியிருந்த இந்த இடம் இன்னதெனத் திட்டமாய்த் தெரியாது. யோசு. $13^{4}$.

மெயோனத்தாய். **Meonathai.** 1 நாளா $4^{14}$.

மெயோனெனிம். **Meonenim.** சீகேம் ஊருக்குச் சமீபத்திலுள்ள ஒரு இடம். இதில் ஒரு கர்வாலிமரமிருந்தது. நியா $9^{37}$. ஒருவேளை இப்பதத்திற்குக் 'குறிசொல்லுகிறவர்கள்' என்று அர்த்தம்.

மெய்க்காவலன். '**Keeper of mine head**' 1 சாமு $28^{2}$. சேவகன் காண்க.

மெரதாயீம். **Merathaim.** ஐபிராத் நதி கடலிலே சங்கமமாகுமுன், அது பாய்ந்தோடுகிற விசாலமான உப்புத்தரைக்கு 'மெரதாயீம்' என்று பேர். 'இரட்டிப்பான கசப்பு' அல்லது 'இரட்டிப்பான கலகம்' என்பது இப்பதத்தின் அர்த்தம். இது பாபிலோன் ராஜ்யத்தைக் குறிக்கும். எரே $50^{21}$.

மெராயா. **Meraiah.** ஓர் ஆசாரியன். நெகே $12^{12}$.

மெராயோத். **Meraioth.**

1. சாதோக்கின் தகப்பன். 1 நாளா $9^{11}$.
2. லேவியரில் ஒருவன். 1 நாளா $6^{6}$.
3. ஓர் ஆசாரியன். = மெரெமோத் (2). நெகே $12^{15}$.

மொராரி. **Merari.** லேவியின் மூன்று புத்திரரில் இளையவனாகிய மொராரி கானான் தேசத்தில் பிறந்து லேவி கோத்திரத்திலுள்ள ஒரு வம்சத்துக்குத் தலைவனாயிருந்தான். ஆதி $46^{11}$ யாத் $6^{16}$ எண் $3^{17}$ $26^{57}$ எஸ்றா $8^{19}$. மொராரியர்களில், மகேலியர் மூசியர் என இருபிரிவார் உண்டு. எண் $3^{33}$ 1 நாளா $23^{21}$.

இஸ்ரவேலர் வனாந்தரத்தில் பிரயாணம் செய்தகாலத்தில், மொராரியர் ஆசரிப்புக் கூடாரத்தின் வடபக்கத்திலே பாளையமிறங்குவார்கள். வழியிலே பிரயாணம் செய்யும் போது அதின் பலகை கயிறு முதலியவைகளையும், நாலுவண்டிகளில் ஏற்றிக்கொண்டு போவார்கள். எண் $3^{35}$ $4^{33}$ $7^{8}$. கானான் தேசத்திலே இவர்களுக்கு 12 ஊர்களுண்டு. யோசு $21^{7}$. தாவீதின் காலத்தில் மொராரியர்கள் தேவாலயத்திலே பாடகராயும் காவற்காரராயும் இருந்தார்கள். 1 நாளா $6^{44}$ $23^{21}$ $26^{10}$. எசேக்கியா ராஜாவின் காலத்தில் தேவாலயத்தைச் சுத்திகரித்தார்கள். 2 நாளா $29^{12}$.

மெரெமோத். **Meremoth.**

1. ஒரு ஆசாரியன். எஸ்றா $8^{33}$.
2. = மொராயோத் (3) நெகே $12^{3}$.

மெரேசா. **Meresha.** 1 நாளா $2^{42}$. மரேசா காண்க.

மெரோதாக். **Merodach.** மெரொதாக் அல்லது மார்தூக் என்பது பாபிலோன் பட்டணத்தின் தெய்வம். பாபிலோனிய ராஜாங்கம் ஸ்தாபிக்கப்பட்டபின், அந்த ஜனங்கள் தாங்கள் வணங்கின எல்லா தேவர்களிலும், பெரிய தெய்வமாக இவனையே மதித்தார்கள். பேல் தேவனும் இவனும் ஒரே தெய்வம்தான் என்று, பிற்காலங்களிலுள்ள பாபிலோனியர் நினைத்தார்கள். அப்போகிரிப்பாவில் பேல் தேவனையும் வலுசர்ப்பத்தையும்பற்றிய கதையில் சொன்ன பேல் என்பவன் மெரொதாக் தான். நேபுகாத்நேச்சார் இந்தத் தெய்வத்தை விசேஷமாய் வணங்கிவந்தான். எரே $50^{2}$ ஏசா $46^{1}$.

மெரோதாக்-பலாதான். **Merodach-Baladan.** ஏசா $39^{1}$. அசீரியா காண்க.

மெரோனோத்தியன், மெரோனோத்தியன். **Meronothite.** மெரோனோத் கிபியோனுக்கும் மிஸ்பாவுக்கும் கிட்ட இருந்த ஒரு ஊர். 1 நாளா $27^{30}$ நெகே $3^{7}$.

மெர்க்கூரி. **Mercury.** மெர்க்கூரி என்பது கிரேக்கர்கள் வணங்கின எர்மேஸ் (*Hermes*) என்கிற தெய்வத்துக்கு ரோமர்

கள் இட்ட லத்தின் பெயர். தாங்கள் வணங்கிய தேவர்களில் இவன் மிகவாய் சாதுரியனென்றும், மகா தந்திரவாதியென்றும், மனுஷருக்குத் தேவர்கள் அனுப்புகிற நன்மைகளைக்குறித்து விளம்பரம் செய்கிறவனென்றும் நினைத்தார்கள். அப் 14[12].

மெலதீயா. **Melatiah**. நெகே 3[7].

மெலிகு. **Melicu**. நெகே 12[14]. மல்லூக் (4) காண்க.

மெலித்தா. **Melita, Malta**. மத்திய தரைக்கடலிலுள்ள மெலித்தா என்னும் தீவு தற்காலத்தில் மால்தா (*Malta*) என்று அழைக்கப்படுகிறது. இது சிசிலித்தீவுக்குத் தெற்கே ஏறக்குறைய 60 மைல் தூரத்திலிருக்கிறது. கி—மு 218-ம் ஷூத்தில் ரோமர்கள் இதை ஜெயித்து, தங்கள் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார்கள். ஆனாலும் இத்தீவார் நாகரீகத்தில் தேர்ச்சியடையவில்லை. தற்காலத்திலுள்ள சில சாஸ்திரிகள் கடல் யாத்திரை செய்து, பரி. பவுல் யாத்திரை செய்த சப்பல் சென்ற மார்க்கத்தைத் தீர்க்கமாய்க் கண்டறிந்து, பரி. லூக்கா அதைப் பற்றி எழுதியிருப்பது நம்பத்தக்கதென்றும், தற்காலத்தில் பரி. பவுலின் குடாக்கடலிருக்கிற இடத்திலேதான் அந்தக் கப்பற்சேதம் நேரிட்டதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். தற்காலத்திலே மெலித்தாத்தீவில் ஜனங்கள் அதிகமாய் வசிக்கிறதினால், அங்கே விஷப்பாம்புகள் இல்லை. அப் 28[1].

மெலெயா. **Melea**. இயேசுவின் முன்னோர்களில் ஒருவன். லூக் 3[31].

மெல்கி. **Melchi**. இயேசுவின் முன்னோர்களில் இருவருக்கு மெல்கி என்று பேர். லூக் 3[24,28].

மெல்கிசேதேக். **Melchizedek**.

1. இவன் சாலேமின் ராஜாவும் உன்னதமான தேவனின் ஆசாரியனுமாய் இருந்தான் என்றும் படையெடுத்துவந்த ராஜாக்களை ஜெயித்தபிறகு ஆபிரகாம் இவனுக்கு தசமபாகத்தைக் கொடுத்தான் என்றும் ஆதியாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதி 14[18].

(i) சாலேம் என்னும் இந்த ஊர் சீகேமுக்குக் கிட்ட இருந்த ஊர். ஆதி 33[18].

(ii) அல்லது சாலேம்=யோர்தான் நதியின் பள்ளத்தாக்கில் யோர்வா 3[23]-ல் சொன்ன சாலிம்.

(iii) அல்லது சாலேம்= எருசலேம். ஆதிகாலத்தில் எருசலேமிலுள்ள எகிப்து தேசத்து அதிபதி தனது ராஜாவுக்கு எழுதிய கடிதங்களில் தான் இருந்த எருசலேமின் பெயரை உருசலீம் என்று சொன்னதினாலும், சங் 76[2]-ல் எருசலேமுக்கு 'சாலேம்' என்று பெயர் கூறப்பட்டிருக்கிறதினாலும், மெல்கிசேதேக் எருசலேமுக்கு ராஜாவாயிருந்தான் என்று நினைக்கலாம். இவனைப்பற்றி ஆதியாகமத்தில் சொன்ன விஷயங்களைத் தவிர அக்காலத்தில் எழுதப்பட்ட களிமண் பலகைகளில் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை.

2. ஆபிரகாம் இவனுக்குத் தசமபாகங் கொடுத்ததினாலே எபிரெய வேதசாஸ்திரிகள் மெல்கிசேதேக்கைச் சிறப்பித்து அவன் தங்களுக்கு வரும் மீட்பருக்கு முன்னடையாளமாய் இருந்தான் என்றும், அவன் அந்த மீட்பரின் ராஜத்துவத்தையும் அந்தமில்லாத ஆசாரியத்துவத்தையும் குறிப்பிடுகிறான் என்றும் நினைத்தார்கள். சங் 110[4].

3. இதின்படி எபிரெயர்களுக்கு நிருபம் எழுதினவன் மெல்கிசேதேக் மீட்பராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்னடையாளமாய் இருந்தான் என்னும் கோட்பாட்டை விபரித்துச்சொல்லுகிறான். எபி 5[10] 7 அதி.

மெழுகு. **Wax**. சங் 22[14] 68[2] 97[5] மீகா 1[4].

மெனாகேம். **Menahem**. கி-மு. 737-735-ஷூ வரை இஸ்ரவேலை ஆண்ட ராஜா. இவன் சல்லூம் ராஜாவை ஜெயித்து ராஜபதவி அடைந்தான். 2 இரா 15[13]. அசீரியர் தனக்கு உதவி செய்யும்படி, இவன் அவர்களுக்குக் கப்பங்கட்டினான். அல்லது அசீரியர்கள் பலவந்தமாய் இவனிடமிருந்து அதை வாங்கிவந்தார்கள். இஸ்ரவேல் காண்க.

மெனுகோத். **Menuhoth**. 1 நாளா 2[52].

மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின். **Mene, Mene, Tekel, Upharsin**. இப்பதங்கள், பெல்ஷாத்சாரின் அரமனைச் சுவரிலே அற்புதமானவிதமாய் எழுதப்பட்டன. தானி 5[25]. தானியேல் இவைகளை வாசித்து இவைகளின் அர்த்தத்தை வெளிப்படுத்தினான். 28-ம் வசனத்தில் 'உப்பார்சின்' என்பதற்குப் பதிலாக 'பெரேஸ்' என்று சொல்லப்பட்டிருந்தாலும், இவ்விரு பதங்களும் ஒரே கருத்துள்ளவைதான். இப்பதங்கள் எல்லாம் நிறை கற்களின் பெயராம்.

'மெனே' என்பது எபிரெயர்கள் வழங்கின மனே (*Maneh*) என்கிற இராத்தல்.

'தெக்கேல்' என்பது எபிரெயர்கள் வழங்கின சேக்கல் (*Shekel*) என்கிற நிறை.

'உப்பார்சின்' அல்லது 'பெரேஸ்' என்பது அரை இராத்தலைக் குறிக்கும். ஆகவே இப்பதங்களின் அர்த்தத்தைப் பின்வரு

மாறு திட்டமாய்ச் சொல்லலாம்: 'இராத்தல், சேக்கல், அரைராத்தல்.' தானியேல் இதை வெளிப்படுத்தினபோது இப்பதங்களின் வழக்கமான அர்த்தத்தைச் சொல்லாமல் மூல அர்த்தத்தைத் தெரிவித்தான். எப்படியெனில், 'மெனே' என்பதற்கு 'எண்ணுகிறது' என்பதும்; 'தெக்கேல்' என்பதற்கு 'நிறுக்கிறது' என்பதும்; 'உப்பார்சின்' என்பதற்கு 'பங்கிடப்படுகிறது' என்பதும் இப்பதங்களின் மூல அர்த்தங்களாம். ஆகவே 'மெனே' என்பதற்கு 'கடவுள் உன் ராஜ்யத்தை எண்ணி முடிவுண்டாக்கினர்' என்றும்; 'தெக்கேல்' என்பதற்கு 'நீ தராசிலே நிறுக்கப்பட்டுக் குறைவுள்ளவனாய்க் காணப்பட்டாய்' என்றும்; 'உப்பார்சின்' அல்லது 'பெரேஸ்' என்பதற்கு 'பாபிலோனிய ராஜ்யம் பிரிக்கப்பட்டுப் பங்கிடப்படும்' என்றும் பொருள்படும். மேலும் 'பெரேஸ்' என்பதற்கும் 'பாரசீகம்' என்பதற்கும் உச்சரிப்பில் ஒற்றுமையிருப்பதினால், தானியேல் சொன்னபடி அந்த ராஜ்யம் பார்சியருக்குக் கொடுக்கப்பட்டது. தானியேல் இவ்விதமாக கடவுள் பெல்ஷாத்சார் செய்த அக்கிரமத்தை அறிந்து, அவனுடைய குறைவுகளைக் கண்டு, அவனுடைய ராஜ்யத்தைப் பாரசீகருக்குக் கொடுத்து, இப்படி அவனைத் தண்டிப்பார் என்று சொல்லுகிறான்.

மென்ன. **Menna**. இயேசுவின் முன்னோர்களில் ஒருவன். லூக் $3^{31}$. தமிழ் வேதாகமத்திலே இவனுடைய பேர் 'மயினான்' என்று எழுதப்பட்டிருக்கிறது. லூக் $3^{31}$.

## மே

மேகம். **Cloud**. மேகங்கள் வானத்திலே சடுதியாய்த் தோன்றி, சற்றுநேரத்தில் திடீரென்று மறைந்துபோவதினாலே, வேதாகமத்தில் மேகம் அநித்தியத்தையும் (ஓசி $6^{4}$), துன்பத்தையும் (புல $2^{1}$), முதிர்ந்த பிராயத்தையும் (பிர $12^{3}$) குறிக்கும். மேலும், உயரத்தையும் (யோபு $20^{6}$), பெருந்தொகையையும் (எபி $12^{1}$), குறிக்கும். மேகங்களுக்குள்ளே மழைத்தண்ணீர் அடங்கியிருக்கிறது என்று யோபின் ஆகமத்தில் வாசிக்கிறோம். யோபு $26^{8}$. சமுத்திரத்திற்கு மேகம் வஸ்திரமாயிருக்கிறது. யோபு $38^{9}$. மேகங்களின் போக்குவரவு மனுஷருக்குத் தெரியாது. யோபு $36^{29}$ $37^{17}$ $38^{37}$.

மேகம் கடவுளின் பிரசன்னத்தைக் காட்டி, அவருடைய மேன்மையை ஜனங்களுக்கு மறைக்கிறது. யாத் $16^{10}$ $19^{9}$. ஒளியுள்ள மேகம் பரமபிதாவின் பிரசன்னத்திற்கு அடையாளம். மத் $17^{5}$. கார்மேகம் அவருடைய கோபத்திற்கு அறிகுறி. புல $3^{44}$. தேவதூதனுடைய வஸ்திரம் மேகமாயிருந்தது. வெளி $10^{1}$. மேகஸ்தம்பம் பிரயாணம் செய்த இஸ்ரவேலருக்கு வழிகாட்டியும் ஆதரவுமாயிற்று. யாத் $13^{21}$ சங் $105^{39}$. மேகங்கள் யேகோவாவின் ரதம். ஏசா $19^{1}$. மேசியாவும் அவருடைய தொண்டர்களும் மேகங்களுடனே வானத்தில் பிரவேசிப்பார்கள். தானி $7^{13}$ மத் $26^{64}$ மாற் $14^{62}$ 1 தெச $4^{17}$ வெளி $1^{7}$. மேசியாவின் சிம்மாசனம் மேகமே. வெளி $14^{14}$.

மேகீர். **Mehir**. யூதா கோத்திரத்தான். 1 நாளா $4^{11}$.

மேகோலாத்தியன். **Meholathite**. இவன் ஆபேல்-மேகோலா என்கிற ஊரான். 1 சாமு $18^{19}$ 2 சாமு $21^{8}$.

மேகோனா. **Meconah**. சிறையிருப்புக்குப் பிற்பாடு யூதர்கள் போய்க் குடியேறின ஒரு ஊர். நெகே $11^{28}$. இது இருந்த இடம் நமக்குத் தெரியாது.

மே-சகாப். **Me-zahab**. [தங்கத்தண்ணீர்.] மெகதாபேலின் பாட்டன். ஆதி $36^{39}$.

மேசக். **Meshech**. = மாஸ். ஆதி $10^{23}$ 1 நாளா $1^{17}$.

மேசா. **Mesha**.

1. மோவாபியரின் ராஜாவாகிய மேசா, ஒரு சாமர்த்தியமுள்ள யுத்தவீரன். இஸ்ரவேலின் ராஜாவாகிய உம்ரி மோவாப் தேசத்தில் பிடித்திருந்த நாடுகளில் பலவற்றை மேசா மறுபடியும் தன் கைவசப்படுத்தி, ஏறக்குறைய கி-மு. 855-ம் ஆண்டில் அந்நாடுகளிலிருந்த எபிரெயரைத் துரத்தினான். இதினிமித்தம் இஸ்ரவேல் ராஜாவாகிய யோராமும், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும் படையெடுத்துவந்து முதலில் சற்று ஜெயம் பெற்றபோதிலும், மேசா தன் மூத்தகுமாரனைத் தகனபலியாகச் செலுத்திக் கடைசியாக ஜெயமடைந்தான்.

'மோவாபியரின் கல்' என்று தற்காலமட்டும் இருக்கிற ஒரு கற்பலகையில் மேசா இந்த ஜெயத்தை வெட்டிவைத்தான். 2 இரா 3-ம் அதி.

2. யொக்தான் சந்ததியாருடைய நாட்டின் எல்லையிலுள்ள ஒரு ஊர். இது இருந்த இடம் நமக்குத் தெரியாது. ஒருவேளை இது சீரியாவுக்கும் அரபியாவுக்கும் இடையிலுள்ள வனாந்தரத்தையாவது அதில் ஒரு இடத்தையாவது குறிக்கலாம். ஆதி $10^{30}$.

3. பென்யமீன் கோத்திரத்தான். 1 நாளா $8^{9}$.

4. காலேபின் மூத்தமகன். 1 நாளா $2^{42}$.

மேசியா. **Messiah.**

I. பதம்.

மேசியா என்னும் எபிரெய பதத்துக்கு 'அபிஷேகம் பண்ணப்பட்டவன்' என்று அர்த்தம். இதுவும் கிரேக்க பதமாகிய 'கிறிஸ்து' என்பதும் ஒரே அர்த்தம் உடைய சொற்கள். ஆரம்பத்தில் ராஜாக்கள் ஆசாரியர் முதலியவர்கள் சாதாரணமாய் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள். ஆகையால் முதலில் மேசியா என்னும் இந்தப் பதத்துக்கு இந்த அர்த்தத்தைத் தவிர ஆவிக்குரியவிதமான விசேஷித்த அர்த்தம் இல்லை. தீர்க்கதரிசிகளின் போதகத்தினாலே இப்பதத்துக்கு கடவுளுடைய ஊழியத்தைப் பூரணமாய்ச் செய்யும்படிக்கு அவருடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டவன் என்னும் விசேஷித்த அர்த்தம் உண்டாயிற்று.

II. பழைய ஏற்பாடு.

1. பூர்வீகம்.

தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்குப் போதகம் பண்ணுவதற்கு முன்னே மேசியாவைக் குறித்து ஒன்றும் தெளிவாய்ச் சொல்லப்படவில்லை. யேகோவாவை வணங்கின ஜனம் அதன் சத்துருவை ஜெயிக்கும் என்று எலியாவும் எலிசாவும் நம்பினார்கள். அந்த ஜனம் பாவம் செய்தால் அதற்குத் தண்டனையிருக்கும் என்று ஆமோஸ் தீர்க்கதரிசி அறிவித்தான். தண்டிக்கப்பட்ட அந்த ஜனம் விக்கிரக ஆராதனையை ஒழித்துவிட்டு, யேகோவாவினிடத்துக்குத் திரும்பி, பாவமன்னிப்பைத் தேடினால், யேகோவா அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்களுக்குச் சுகசெல்வத்தை அருளுவார் என்று ஓசியா போதித்தான். ஆனால் இவர்கள் மேசியாவைக் குறித்து ஒன்றும் திட்டமாய்ச் சொல்லாமல் யேகோவாவின் சகாயத்தினால் தங்கள் சத்துருக்கள்மேல் தாங்கள் அடையவேண்டிய ஜெயத்தையும் மேன்மையையுங் குறித்தே விசேஷமாய் நினைத்தார்கள். அந்த மேன்மையைப்பற்றி மோசேயின் ஆகமங்களில் பல வசனங்களில் சொல்லியிருக்கிறது. ஆதி $9^{27}$ $12^{3}$ $17^{27}$ $49^{8}$ எண் $24^{17}$ உபா $32^{6}$. சர்ப்பத்தின்மேல் ஜெயமடையவேண்டிய ஸ்திரீயினிடத்தில் பிறந்தவனைப்பற்றியும் வரப்போகிற தீர்க்கதரிசியைப்பற்றியும் கூறுகிற வாக்கியங்கள் வருகிறவரைக் குறித்துக் கொஞ்சம் மாத்திரம் முதலாவது பேசுகிறது என்று நாம் சொல்லலாம். ஆதி $3^{15}$ உபா $18^{15}$.

2. பெரிய தீர்க்கதரிசிகள்.

ஏசாயாவின் உபதேசத்திலே மேசியாவைக்குறித்த நம்பிக்கை விபரமாய்த் தோன்றுகிறது. அசீரியா ராஜா வந்து இஸ்ரவேலர் செய்த குற்றங்களினிமித்தம் யேகோவாவினுடைய ஜனத்தைத் தண்டித்தபிறகு அவர்களுக்கு மீட்பு உண்டாகும். 'கடவுள் நம்மோடிருக்கிறார்' என்று அர்த்தமுடைய 'இம்மானுவேல்' என்ற பிறக்கப்போகிற பிள்ளையின்பெயர் யேகோவா தமது ஜனத்துக்குச் செய்யப்போகிற மீட்புக்கு அத்தாட்சி. ஏசா $7^{10}$. இவர் தாவீதின் வம்சத்தைச் சேர்ந்தவராயிருந்து எங்கும் சமாதானத்தை உண்டாக்கி யேகோவாவினுடைய சித்தத்தின்படி யாவற்றையும் செய்தினாலே சீயோனிலே முடிவில்லாத ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். ஏசா $9^{6}$ $11^{1}$ $33^{14}$ மீகா $4^{1}$ $5^{2}$. இவர்கள் சொன்ன தீர்க்கதரிசனங்களில் ராஜாவாகிய மேசியாவைக் குறித்துத் தோன்றின நம்பிக்கையை எபிரெயர்கள் எல்லாரும் ஏற்றுக்கொண்டு வந்தார்கள். யோசியா செய்த மார்க்க சீர்திருத்தத்தைக்குறித்து எரேமியா யோசித்து யேகோவா தாவீதின் வம்சத்தைச் சேர்ந்த ஒருவரை இஸ்ரவேலை மீட்கும்படி ஏற்படுத்தி, ஆவிக்குரிய புதிய உடன்படிக்கையைச் செய்து, இஸ்ரவேலைத் தமது ஊழியக்காரனாக நியமித்து, அவர்கள் செய்த குற்றத்தை மன்னித்துவருவார் என்று நினைத்தான். எரே $31^{31}$ $33^{17}$. ஆனால் எரேமியா மேசியாவைக் குறித்து விசேஷமாய் ஒன்றும் பேசவில்லை.

III. சிறையிருப்புக்குப் பின்.

பாபிலோனியா ராஜா யூதராஜ்யத்தை அழித்தபின் சிறையிருப்புக்குப் போன யாவரும் முற்றிலும் நம்பிக்கையற்றவர்களாயிருந்தார்கள். கோரேஸ் ராஜாவோ பாபிலோனிய ராஜ்யத்தைப் பிடித்து நியாயமான பல காரியங்களைச் செய்து யூதருக்குத் தயவுகாண்பித்து, தங்கள் தேசத்துக்குத் திரும்பிப்போகும்படி அநேகருக்கு உத்தரவு கொடுத்ததினாலே அவனை யேகோவாவினுடைய ஊழியக்காரன் என்றும், அவன் மூலமாய்த் தங்களுக்கு மீட்பு உண்டாகும் என்றும் அவனைப்போன்றவனும் பாடுபடும் தேவ ஊழியக்காரனுமாகிய ஓர் பெரியவன் மூலமாய்ப் பூரண ரக்ஷிப்பு வரும் என்றும் இஸ்ரவேலர் நினைத்தார்கள். அல்லது அந்தப் பாடுபடும் ஊழியன் இஸ்ரவேல் ஜனந்தான் என்றும் நினைத்தார்கள். ஏசா $43^{1}$ $49^{9}$ $52^{13}$ $53^{1}$ $61^{1}$. எபிரெய வேதசாஸ்திரிகள் வழக்கமாய் இந்த வாக்கியங்களில்

சொன்ன 'தேவ ஊழியன்' இஸ்ரவேல் ஜனம் என்று நினைத்தாலும் தங்கள் தேசத்துக்கு வந்த அபஜெயத்தினின்று மீட்பை விரும்பின யாவருக்கும் ஒரு மீட்பர் வேண்டும் என்று கருதி, கூடிய சீக்கிரத்தில் இந்த வசனங்களில் வரப்போகிற மேசியாவைக் குறித்து இந்தத் தீர்க்கதரிசிகள் பேசுகிறார்கள் என்று நம்பிவந்தார்கள். (யேகோவாவினுடைய தாசன் காண்க.)

யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தபிறகு அவர்கள் நியாயப்பிரமாணத்துக்கு இணங்கி நடக்கும்படி பிரயாசப்பட்டு வருகிற மேசியாவினுடைய வருகைக்காக இவ்விதமாய்த் தங்களை ஆயத்தப்படுத்தினார்கள். யோவேல் $2^{28}$ ஆகாய் $1^{13}$ சக $2^{1}$ ஏசா $60^{1}$. ஆகாய் சகரியா என்னும் தீர்க்கதரிசிகள் செருபாபேலின் மகுடாபிஷேகத்தைக் கண்டு தாவீதின் வம்சத்தானாகிய பிரபு வந்துவிட்டான் என்று நினைத்தார்கள். ஆகாய் $2^{23}$ சக $3^{8}$. ஆனால் இந்த நோக்கம் தப்பானதினாலே ஜனங்கள் 'இனி வருகிறவரை' எதிர்பார்க்க வேண்டியிருந்தது. சீரியா ராஜாவாகிய அந்தியோகு எப்பிப்பானேஸ் (கி-மு 175-164) யூதமார்க்கத்தை அழிக்கும்படி பிரயாசப்படும்பொழுது யூதர்கள் வரவேண்டிய மேசியாவைப்பற்றி அதிகமாய் நினைத்து அவருடைய வருகையை மிக்க ஆவலுடனே எதிர்பார்த்தார்கள். உலகம் எங்கும் பரவும் ஒரு ராஜ்யத்துக்கு யூத ஜனத்தை ஓர் பிரதான ராஜ்யமாய் யேகோவா நியமிப்பார் என்றும், அந்த ராஜ்யத்திலே தாவீதின் வம்சத்தைச் சேர்ந்த ஒரு ராஜாவை ஸ்தாபிப்பார் என்றும், அவர் யூதருடைய சத்துருக்கள் அனைவரையும் ஜெயித்து அவர்களைத் தண்டிப்பார் என்றும், அவர்களுடைய துன்பங்களினின்று யூதர்களை அவர் ரக்ஷிப்பார் என்றும் நினைத்தார்கள். இக்காலமுதல் எபிரெயர் எல்லாரும் தாவீதின் குடும்பத்தைச் சேர்ந்த ராஜாவைப்பற்றியும் நியாயத்தீர்ப்பைப்பற்றியும் நீதிமான்கள் அந்த ராஜ்யத்தில் அடையவேண்டிய உயிர்த்தெழுதலைப்பற்றியும் அதிகமாய்ப் பேசத்தொடங்கினார்கள். இதின்படி அவர்கள் தாவீதின் வம்சத்தைச் சேர்ந்த அந்த ராஜாவைக்குறித்து விசேஷமாய் யோசித்து அக்காலத்தில் அவர்கள் எழுதின நூல்களில் அதைக்குறித்துச் சொன்னார்கள். சாலொமோனின் சங்கீதங்கள் என்ற தரிசனகமத்தில் அதைக்குறித்து விசேஷமாய்ச் சொல்லியிருக்கிறது.

IV. புதிய ஏற்பாட்டுக் காலம்.

இயேசு பிறக்குங் காலத்தில் யூதர்கள் சாதாரணமாய் மேசியாவைக்குறித்து மிகுதியாய் நினைத்தார்கள். கடவுள் மேசியாவை அனுப்புங் காலம்வரை பொறுமையோடே காத்திருந்த அவர்களில் அநேகர் இயேசு பிறக்குங்காலத்தில் மேசியாவினுடைய வருகைக்காக மிக்க ஆத்திரப்பட்டு அந்த ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படி தாங்கள் தெரிந்துகொண்டவனை அதற்கு மேசியாவாக ஏற்படுத்த விரும்புவார்கள். இதினிமித்தம் அக்காலத்தில் ரோம ராஜாங்கத்துக்கு விரோதமாய் அநேகர் கலகம் செய்தார்கள். அப் $21^{38}$. இப்படியே இயேசு செய்த அநேக அற்புதங்களை ஜனங்கள் பார்த்து அவரைத் தங்களுக்கு ராஜாவாக்க விரும்பினார்கள். யோவா $6^{15}$. சமாரியரும் ஒரு தீர்க்கதரிசி வருவார் என்று நினைத்துவந்தாலும் அவர்களுடைய நம்பிக்கையின் விபரம் நமக்கு நன்றாய்த் தெரியாது. யோவா 4-ம் அதி.

V. புதிய ஏற்பாடு.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கிறிஸ்தவர்கள் மேசியா என்னும் அர்த்தங்கொண்ட கிறிஸ்துவைத் தங்கள் மார்க்கத்துக்குத் தலைவராக ஏற்படுத்திக்கொண்டதினாலே அவர்கள் கடவுளினிடத்திலிருந்து வருகிறவரைக்குறித்து நம்பிக்கையுடையவர்களாயிருந்ததாக காண்பித்தார்கள். ஆனால் இயேசுவின் போதகத்தையும் பவுல் முதலியவர்களின் உபதேசத்தையும் நாம் பார்த்தால் அவர்கள் மேசியாவைக்குறித்துக் கொண்டிருந்த நம்பிக்கைக்கும் முந்திய காலத்தில் யூதர்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்கும் வித்தியாசம் இருந்தது என்று பார்க்கிறோம்.

1. இயேசுவின் போதனை.

தாமே மேசியா என்று இயேசு போதித்தார். மாற் $14^{61}$. அவர் மேசியாவாயிருந்து சாத்தானை ஜெயிப்பார். மாற் $3^{23}$. பேதுரு முதலிய சீஷர்கள் அவரைக்குறித்து அறிக்கையிடும்பொழுது அவர் அவர்களுடைய அறிக்கையை அங்கீகரித்துக்கொண்டார். மாற் $8^{27}$ மத் $16^{13}$. மேசியாவைக் குறிக்கிறதென்று ரபிமார் வியாக்கியானம் செய்த வேதவாக்கியங்கள் தம்மைக் குறிப்பதாக அவர் யோவான்ஸ்நானனுக்குச் சொன்னார். மத் $11^{5}$ ஏசா $35^{5}$. அவர் நாசரேத்தூரில் ஜெப ஆலயத்தில் பிரசங்கம் பண்ணும்பொழுது மேசியா செய்யவேண்டிய ஊழியத்தைப்பற்றி விபரமாய்ச் சொல்லுகிறார். மத் $13^{54}$ மாற் $6^{1}$ லூக் $4^{16}$. மேசியாவைப்பற்றிய விஷயத்தில் ஐந்து காரியங்களை நாம் கவனிக்கவேண்டும்:

a. ஆரம்பத்தில் சிலர் அவரை ராஜாவாக அங்கீகரித்துக்கொண்டாலும் பொதுவாய் ஜனங்கள் அவரைத் தீர்க்கதரிசியாகவும் அற்புதம் செய்கிறவராகவும் மட்டுமே ஏற்றுக்கொண்டார்கள். அவர்களில் சிலர் பலவந்தமாக அவரை மேசியாவாகவும் ராஜாவாகவும் ஏற்படுத்தப் பிரயாசப்பட்டபொழுது அவர் அதற்கு இணங்கவில்லை. மத் $4^{8}$ மாற் $14^{47}$ லூக் $4^{5}$ யோவா $6^{15}$.

b. இயேசுதாமே திரும்பிவந்து ராஜ்யத்தை ஸ்தாபிப்பதாகப் பலதடவை பேசுகிறார். மத் 25-ம் அதி. மி.

c. மேசியாவாகிய இயேசு தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்பொழுது நியாயத்தீர்ப்புச் செய்வார். ஆனால் அதைச் செய்யும்படி அவர் திரும்பி வருமுன் தமது சீஷர்களை அழைத்து அற்புதங்களை நடத்தி பிரசங்கம் பண்ணி இவ்விதமாய்த் தமது ரக்ஷணிய ஊழியத்தை ஆரம்பிப்பார். மத் $24^{44}$ $25^{31}$ $28^{19}$ மாற் $16^{17}$.

d. இந்த ஆயத்த ஊழியத்துக்கும் மேசியா அடையவேண்டிய மகிமைக்கும் இடையில் அவருடைய மாணம் நேரிடும் என்று இயேசு தமது சீஷர்களுக்குத் தெளிவாய் அறிவித்தார். மத் $12^{40}$ மாற் $8^{31}$ $9^{30}$ $14^{24}$ லூக் $12^{45}$.

e. கடவுளைப் பிதாவாக நம்பி அவர்மேல் பக்திவைக்கிறவர்கள் இயேசுவையும் அறிந்து அவர் மூலமாய்த் தங்கள் பராபரனாலே அங்கீகரிக்கப்படுவார்கள் என்றும், இயேசு மனுஷர்களுக்கு ரக்ஷிப்புக் கொடுக்கும்பொருட்டாகப் பராபரனாலே அனுப்பப்பட்ட மேசியா என்றும் நினைக்கவேண்டும். இயேசு சிலுவையில் பாடுபட்டதினாலே, அவர் தம்மிடத்தில் அநேகரை அழைத்து, உயிர்த்தெழுந்து, மகிமையடைந்து, அவர்களைத் தமது ராஜ்யத்திலே ஏற்றுக்கொள்ளுவார். யோவா $3^{14}$ $12^{32}$.

இவ்விதமாய் இயேசு தாம் படவேண்டிய பாடுகள் உலக ரக்ஷிப்புக்கு அவசியம் என்றும், இந்த ரக்ஷிப்பு யூத ஜனத்துக்கு மாத்திரம் அல்ல, பிதாவாகிய பராபரனைத் தேடுகிற யாவருக்கும் உண்டு என்றும் மேசியா யூதருக்கு ராஜாவாகமாத்திரம் அல்ல, உலகம் அனைத்துக்கும் இரக்ஷணியம் அருளும் மீட்பராயும் இருக்கிறார் என்றும் தெரிவித்தார்.

2. ஆதிச் சபை.

அப்போஸ்தலர் போதுவாய்

a. இயேசு இவ்வுலகத்திலே இருக்கும்பொழுது தேவ ஆவியினாலே தமது ஊழியத்துக்கு அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்றும்;

b. அவர் இவ்வுலகத்திலே இருக்கும் பொழுது தமது ஊழியத்தை ஆரம்பித்தார் என்றும்;

c. அவர் உயிர்த்தெழுதலினாலே மேசியாவாய் இருப்பது தோன்றுகிறது என்றும்;

d. பரலோகத்திலே அவருக்கு மேலான அதிகாரம் இருக்கிறது என்றும்;

e. அவர் திரும்பிவந்து தமது அடியார்களுக்கு ரக்ஷிப்பை அருளி இந்த உலகத்திலே தமது ராஜ்யத்தை ஸ்தாபித்து யாவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்வார் என்றும் நினைத்தார்கள்.

பேதுருவும் யூதகிறிஸ்தவர்களும் மேசியா மோசேயின் நியாயப்பிரமாணத்தை அங்கீகரித்தவர்களுக்குமாத்திரம் மீட்பை அருளுவார் என்று முதலில் நினைத்தார்கள். அப் 2-ம் அதி. $15^{1}$.

3. பரி. பவுல்.

பரி. பவுல் மேசியாவைக்குறித்துப் போதித்த விஷயங்களாவன :

a. கிறிஸ்து தமக்காக அல்ல இவ்வுலகத்திலுள்ள யாவருக்காகவும் மரித்துத் தமது புண்ணிய பலன்களினாலே அவர்களுக்கு ரக்ஷிப்பு அருளுகிறார்.

b. ஆதிமுதல் இயேசு மேசியாவாய் இருந்தார்.

c. முதல் ஆதாம் மனுஷர் யாவருக்கும் எப்படி மாதிரியாய் இருந்தானோ அப்படியே உயிர்த்தெழுந்த கிறிஸ்துவும் ரக்ஷிப்படைந்த யாவருக்கும் மாதிரியாய் இருக்கிறார்.

d. அவர் தமது பரிசுத்த ஆவியின் மூலமாய்த் தமது சீஷர்களோடிருப்பார்.

இவ்விதமாகப் பரி. பவுல் இயேசுவின் போதகத்தை விபரமாய்ச் சொல்லாமல், மேசியாவாகிய கிறிஸ்து மனுஷர்களோடிருந்து அவர்களுடைய இருதயங்களில் செய்யப்போகிற ஊழியத்தைக்குறித்துத் தனது நிருபங்களிலும் பிரசங்கங்களிலும் விசேஷமாய்ச் சொல்லுகிறான். மேசியா ஸ்தாபிக்கும் ராஜ்யத்தைப்பற்றி பவுல் நம்பிக்கையோடிருந்தாலும் அவன் மேசியா பாவிகளுக்குச் செய்யும் ரக்ஷிப்பைக் குறித்தே விசேஷமாய்க் கூறுகிறான். இதின்படி இவ்வுலகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட லௌகிக ராஜ்யத்துக்கு அல்ல, தாம் ரக்ஷிக்கப்பட்ட சபைக்கே இயேசு ராஜர்வாய் இருக்கிறார். இரக்ஷணியத்தை அருளும் இந்த ராஜா சபைக்குத் தலைவராயிருந்து அச்சபையைச் சேர்ந்தவர்களுக்குத் தேவ

வரங்களை ஈந்து அதை நடத்தி அதற்குள் வாசஞ்செய்கிறார். அவர் மரணத்தையும் பாவத்தையும் ஜெயித்ததினாலே அவர்மேல் நம்பிக்கை வைத்தவர்கள் மீட்பராகிய தங்கள் ராஜாவின் கிருபையினால் நித்திய ஜீவனை அடைந்தவராவர். மேசியா ஸ்தாபித்த ராஜ்யத்துக்கு முடிவு இல்லை என்று பரி. பவுல் சொல்லமாட்டார். மேசியா தமது ஊழியம் அனைத்தையும் முடித்துத் தம் ராஜ்யத்தை ஸ்தாபித்து நியாயத்தீர்ப்புச் செய்தபிறகு தமது ராஜ்யத்தையெல்லாம் பிதாவாகிய பராபரனுடைய கைவசத்திலே ஒப்புக்கொடுப்பார். 1 கொரி $15^{24}$. இவ்விதமாய் யூதர்களை மாத்திரம் அல்ல, சகலரையும் ரக்ஷிக்கும்படி அனுப்பப்பட்டு அபிஷேகம் பண்ணப்பட்ட 'மேசியா' தமக்கு இட்ட தெய்வீக ஊழியம் எல்லாம் முற்றுப் பெறச் செய்வார்.

4. பரி.பவுலின் காலத்துக்குப் பிற்பாடு. ஆதிக்கிறிஸ்தவர்கள் இயேசுவே மேசியா என்று நம்பி, பழைய ஏற்பாட்டில் மேசியாவைப்பற்றிச் ;சொன்ன வாக்கியங்களும் வேறு அநேக வசனங்களும் இயேசுவைப் பற்றிச் சொன்னவைகள்தான் என்று நினைத்தார்கள். எபிரெயர்களுக்கு எழுதின நிருபத்திலே இதற்குப் பல திருஷ்டாந்தங்கள் உண்டு. பரி. மத்தேயு இந்த விஷயத்தைக் குறித்து அநேக வேதவாக்கியங்களைச் சொல்லுவான். மத் $1^{23}$ $2^{15}$ $2^{23}$ $12^{40}$. இதற்குப் பிந்தின காலங்களில் வேதசாஸ்திரிகளில் அநேகர் இந்தக் கொள்கையை ஸ்திரப்படுத்தும்படி வேத வாக்கியங்களைத் தங்கள் இஷ்டப்பிரகாரம் வியாக்கியானம் செய்து வருவார்கள். கிறிஸ்தவர்களும் மேசியாவைக்குறித்து நினைக்கும்பொழுது அவர் மூலமாய்ப் பிதாவாகிய தேவனே இவ்வுலகத்தாருக்குப் பாவமன்னிப்பையும் பாவத்திலிருந்து மீட்பையும் கொடுத்து, தமது தெய்வீக ராஜ்யத்திலே அவர்களைச் சேர்ப்பார் என்றும் அவர்மேல் வைத்த பக்தியின் மூலமாய் அவர்கள் அந்த மேசியாவை அறிந்து அவருடைய அருளைப்பெற்று அவருடைய ராஜ்யத்திலே பிரவேசிப்பார்கள் என்றும் நம்பி, நசரேயனாகிய இயேசுவே எபிரெய தீர்க்கதரிசிகள் எதிர்பார்த்த மேசியா என்று சொல்லி அவரையே சிறப்பித்து வந்தார்கள்.

மேசேக்கு. **Meshech**. யாப்பேத்தின் புத்திரரில் ஒருவன். ஆதி $10^{2}$ சங் $120^{5}$ எசே $32^{26}$ $38^{2}$. மேசேக் என்கிற கோத்திரத்திற்கும் தூபால் கோத்திரத்திற்கும் சம்பந்தம் உண்டு. மேசேக் கோத்திரத்தார் சின்ன ஆசியாவின் தென்கிழக்குப் பாகங்களில் வசித்தார்கள். இவர்கள் அடிமை வியாபாரம் செய்தார்கள். எசே $27^{13}$.

மேசை, மேஜை. **Table**. நியா $1^{7}$ 2 இரா $4^{10}$ மாற் $7^{28}$ லூக் $16^{21}$. 'சமுகத்தப்பத்தின் மேசை.' யாத் $25^{23}$ $30^{27}$ 1 இரா $7^{48}$ 2 இரா $4^{10}$ எபி $9^{2}$.

மேஷாக். **Meshach**. மீஷாவேலுக்கு மறுபெயர். தானி $1^{7}$ 3 அதி.

மேடை. **High place**.

1. 'மேடு' என்பது இயற்கையான ஓர் உயர்ந்த ஸ்தலம், 'மேடை' என்பது மனுஷர்களால் போடப்பட்ட ஒரு உயரமான ஸ்தலம். தமிழ் வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்கள் இந்தப் பதத்தினாலே கானான்தேசத்தில் உள்ள 'பாமா' (*Bamah*) என்னும் ஸ்தலங்களைக் குறித்திருக்கிறார்கள். வழக்கமாய் இந்த ஸ்தலங்கள் மேடான இடங்களில் இருந்ததினாலே அவைகளுக்கு 'மேடு' என்று சொல்வதே நியாயம். சில இடங்களில் இந்தச் செய்குன்றுகளை உண்டாக்கினதினாலே இவைகளுக்கு 'மேடை' என்று சொல்வதும் நியாயமே. ஆனால் சில இடங்களில் இந்த ஸ்தலங்களில் மேடான இடங்களிலே அல்ல பள்ளங்களிலே இருந்ததினாலே இவைகள் எப்பொழுதும் குன்றுகள் என்று நினைக்கக்கூடாது. ஆதலால் இதிலே நாம் 'மேடை' என்னும் பதத்தை அல்ல எபிரெய பதமாகிய 'பாமா' என்னும் பதத்தைச் சொல்வோம்.

2. 'பாமா' என்பது தேவதரிசனம் விசேஷமாய்க் கிடைத்த ஒரு ஸ்தலத்தையும், தேவனை வணங்கும்படி பலிபீடமும் கல்தூண்களும் உள்ள இடத்தையும் குறிக்கிறது. சேமியருடைய அபிப்பிராயத்தின்படி தேவர்கள் நீரூற்றுகளுள்ள இடங்களிலும் பெரிய மரங்களிலும் விநோதமான கற்பாறைகளிலும் மலைகளிலும் தரிசனமாவார்கள். ஆதலால் அவர்கள் இந்த இடங்களைக் கவனித்து இவைகள் தேவஸ்தலங்களாயிருப்பதற்குத் தகுந்தவை என்று நினைத்து, பெயர்செபாவிலுள்ள கிணற்றண்டையும், மோரேவிலுள்ள மரங்களின் கீழும், ஒரேப் சீனாய் தாபோர் முதலிய மலைகளிலும் 'பாமா' என்னும் தேவ ஸ்தலங்கள் இருக்கின்றன என்று நினைத்தார்கள். ஆதி $12^{6}$ யாத் $3^{1}$ உ.பா $11^{20}$ ஓசி $5^{1}$.

3. 'பாமா' என்னும் ஸ்தலங்களில் சில மேட்டிலே இருக்கும். ராமா முதலிய இடங்களில் 'பாமா' என்னும் தேவஸ்தலங்கள் மேட்டிலே இருந்தன. 1 சாமு $9^{13}$. ஆனால் எரேமியா தீர்க்கதரிசி தோப்பேத்

பள்ளத்தாக்கிலுள்ள 'பாமாவை'ப்பற்றிப் பேசுகிறான். எரே $7^{31}$. கேசேர் பட்டணத்தில் அந்தப் பட்டணம் கட்டப்பட்டிருந்த இரண்டு மலைகளுக்கிடையிலுள்ள பள்ளத்தாக்கிலே அந்த ஊர்ப் 'பாமா' இருந்தது. இந்த ஸ்தலங்கள் பூர்வீக காலமுதல் இருந்தன. அவைகளில் முக்கியமானவை 'பெத்தேலில் உள்ள ராஜாவின் பரிசுத்தஸ்தலம்' (ஆமோ $7^{13}$) தாணில் இருக்கிற ஸ்தலம், கில்காலிலும் பெயர்செபாவிலும் கிபியோனிலும் இருந்த ஸ்தலங்கள் ஆகிய இவைகள். கிபியோனில் இருக்கிற ஸ்தலம் பெரிய மேடையாயிருந்தது. நியாயாதிபதியின் காலத்தில் சீலோவிலும் அதற்குப் பிற்பாடு நோப்பிலும் பெரிய தேவஸ்தலம் இருந்தது. நியா $21^{19}$ 1 சாமு $1^{3}$ $21^{1}$ 1 இரா $3^{4}$.

4. கானானியர் தாங்கள் ஏற்படுத்தின மேடைகளில் பாகால் அஸ்தரோத் முதலிய தேவதைகளை வணங்கிவந்தார்கள். 'பாமா' என்னும் அந்த ஸ்தலங்களின் ஆராதனையாவது: ஒரு கற்பாறையின் மேற்பரப்பைச் சமமாக்கி, பலியில் சிந்தின ரத்தத்தை ஏற்றுக்கொள்ளுகிறதற்குக் கிண்ணங்கள் போன்ற பள்ளங்களை அதில் வெட்டுவார்கள். இதினாலே பூர்வீகத்தார் கற்பாறையில் வசிக்கும் தங்கள் தேவதைகள் ரத்தத்தைச் சாப்பிடும்படி இந்தப் பள்ளங்களை வெட்டினார்கள் என்று தோன்றுகிறது. எபிரெயர்கள் கானான்தேசத்தைப் பிடிக்கும் காலத்தில் 'பாமா' என்னும் ஒவ்வொரு ஸ்தலத்திலும் பலிபீடம் இருக்கும். இந்தப் பலிபீடம் மண்குவியலாய் அல்லது வெட்டப்படாத கற்களினால் செய்யப்பட்டதாய் இருக்கும். யாத் $20^{25}$. இவ்விடங்களில் கல்தூண்களும் அசேரா என்னும் மரங்களும் தண்ணீர்தொட்டியும் இருந்தன. இந்த ஸ்தலங்களில் சிலையாவது விக்கிரகமாவது ஏபோத்தாவது உடன்படிக்கைப் பெட்டியாவது இருந்தால், இவற்றை வைக்கும்படி ஒரு வீட்டையாவது ஆலயத்தையாவது கட்டுவார்கள். நியா $17^{5}$ 1 சாமு $1^{9}$ 1 இரா $12^{31}$. சில ஸ்தலங்களில் போஜனசாலை ஒன்றிருக்கும். 1 சாமு $9^{22}$. மற்றபடி இந்த ஸ்தலங்களில் கட்டடம் இல்லையென்றும், அங்கே பூசைசெய்கிறவர்கள் வெளியிடத்தில் ஆராதனை நடத்துவார்கள் என்றும் தோன்றுகிறது. பூர்வகாலத்து 'பாமா' என்னும் ஸ்தலங்களில் சிலவற்றைச் சேர்ந்த நிலத்தைத் தோண்டி ஆராய்ச்சிசெய்த வேதசாஸ்திரிகள் கணக்கில்லாத சிறிய மண்பாத்திரங்களை இங்கே கண்டுபிடித்து, அவைகளில் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளின் எலும்புகளைப் பார்த்து இவ்விடங்களில் கானானியர் தங்கள் தேவதைகளுக்குத் தங்கள் முதற்பேறான பிள்ளைகளைப் பலியாகச் செலுத்தினதாக அறிந்திருக்கிறார்கள்.

5. இஸ்ரவேலர் கானான்தேசத்தை ஜெயித்து இந்தத் தேவஸ்தலங்களைத் தங்கள் வசப்படுத்தினபிறகு மார்க்க விஷயமாய் அவர்களுக்குப் பலவிதமான நஷ்டங்கள் உண்டாயிற்று என்று தோன்றுகிறது. ஏனென்றால் பக்தர்கள் அவ்விடங்களிலே பயபக்தியுடனே யேகோவாவை வணங்கிவந்தாலும் சாதாரண ஜனங்கள் பூர்வீகத்தார் அவ்விடங்களில் வணங்கின பேய் பிசாசுகளையும் தேவ தேவதைகளையும் குறித்துக் கேள்விப்பட்டு அவைகளை வணங்கும்படி வஞ்சிக்கப்பட்டுப் போனார்கள். வழக்கமாய் 'பாமா' என்னும் ஸ்தலங்களில் ஆராதனை செய்கிறவர்கள் தசமபாகம் முதலிய காணிக்கைகளைக் கொண்டுவந்து, பலிசெலுத்தி யேகோவாவுக்கு முன்பாகப் போஜனம்பண்ணினார்கள். இங்கேதான் ஆசாரியர்கள் மூலமாய் தேவ சித்தத்தை அறிய நாடுவார்கள். இவ்விடங்களில் நியாயவிசாரணை நடத்தி யேகோவாவுக்கு முன்பாகத் தங்கள் வழக்கைத் தீர்த்துக்கொள்ளுவார்கள். யுத்தகாலத்தில் இவ்விடங்களிலே யேகோவாவினுடைய யுத்தத்தை நடத்தும்படி போர்வீரர்களைப் பிரதிஷ்டை செய்வார்கள். கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றுபோட்டவன் இந்த ஸ்தலங்களில் அடைக்கலம் புகுந்துகொள்ளலாம்.

6. இவ்விதமாய் இஸ்ரவேலர் இவ்விடங்களிலே யேகோவாவை வணங்கினதினால் அவர்கள் குற்றஞ்செய்யவில்லை. ஆனால் அவர்கள் பூர்வீகத்தார்களைப்போல மட்டுக்கு மிஞ்சி சாப்பிட்டு மதுபானம்பண்ணி துன்மார்க்கமாய் நடக்கும்போது யேகோவாவைப்பற்றிய மெய்பக்தியெல்லாம் அற்றுப்போயிற்று. உபா $23^{18}$ 1 இரா $14^{24}$ ஆமோ $2^{8}$ ஏசா $28^{7}$. தீர்க்கதரிசிகள் இதைக்குறித்து அடிக்கடி சொல்லுகிறார்கள். ஓசியா இஸ்ரவேலர் எல்லாரும் விக்கிரக ஆராதனை செய்து ஒழுங்குக்கு விரோதமான சடங்காசாரங்களை நடத்துகிறவர்கள் என்று தெளிவாய்ச் சொல்லுகிறான். பிந்தின காலங்களில் எபிரெயர்கள் யேகோவா ஒருவரே கடவுள் என்று எப்படி நினைக்கவந்தார்களோ அப்படியே தாங்கள் எருசலேமிலே மாத்திரம் ஆராதனை செய்வது அவசியம் என்று நினைத்தார்கள். உபாகமத்தில் சொன்ன கட்டளை இதற்கு அத்தாட்சி.

உபா $12^{4}$. எசேக்கியா ராஜா எபிரெயர்கள் இவ்விதமாய் எருசலேமிலேமாத்திரம் இந்த ஆராதனையை நடத்தும்படி பிரயாசப்பட்டான். யோசியா ராஜா கி-மு. 621-ம் ஷூத்தில் 'பாமா' என்னும் ஸ்தலங்களை அழித்து அவைகளில் நடந்த ஆராதனையை ஒழித்துவிட்டான். 2 இரா $23^{5}$. யோசியா இறந்தபிறகு ஜனங்களில் சிலர் மறுபடியும் இந்த ஸ்தலங்களில் ஆராதனையை நடத்தினார்கள். சிறையிருப்புக் காலத்தில் யூதர்கள் எல்லாரும் தீர்க்கதரிசிகள் அருளின மெய்ப்போதகத்தின் மூலமாய் யேகோவாவைக் குறித்த மெய்ஞ்ஞானத்தைப் படிப்படியாய் அடைந்ததினாலே அவர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த பிறகு 'பாமா' என்னும் ஸ்தலங்களில் ஆராதனை நடத்திக்கொள்ளவே இல்லை.

மேட்டிமை. **Loftiness**. ஏசா $2^{17}$ $16^{6}$ எரே $48^{29}$ எசே $28^{2}$ ரோம $12^{16}$.

மேதாத். **Medad**. ஜனங்களுக்குள்ளே வழக்குகளை நியாயம் விசாரிக்கும்படி மோசே ஏற்படுத்தின 70 மூப்பர்களில் ஒருவன். பாளையத்திலே இவன்பேரிலும், எல்தாத்தின்பேரிலும் யேகோவாவின் ஆவி இறங்கிற்று. எண் $11^{26}$.

மேதான். **Medan**. ஆபிரகாமின் குமாரன். இவன் தாயின் பேர் கேத்தூராள். ஆதி $25^{2}$.

மேதியர். **Medes**. பார்சியர் காண்க.

மேதியா. **Media**. மேதியர் வடதேசங்களிலிருந்து வந்து அசீரிய ராஜ்யத்திற்குக் கிழக்கிலும், கஸ்பியன் கடலுக்குத் தெற்கிலும் தங்கள் ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். இவர்களுடைய தலைநகரி அக்மேதா. எஸ்றா $6^{2}$. அசீரியா ராஜாவாகிய சர்கோன் இவர்களை ஜெயித்து சிலரைச் சமாரியாவுக்குச் சிறையாகக் கொண்டுபோனான். 2 இரா $17^{6}$ $18^{11}$. இதற்குப்பின் மேதியர்கள், மறுபடியும் சுயாதீனமடைந்து அசீரியரை ஜெயிக்கும்படி பாபிலோனியருடனே உடன்படிக்கை செய்தார்கள். கி-மு. 604-ம் ஷூத்தில் இவர்களுக்கும் பார்சியருக்கும் சம்பந்தம் உண்டு. ஆதலால் இவ்விரு ஜாதியாரும் சேர்ந்து பலத்த பார்சிய ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். பெரிய கோரேஸ் கி-மு. 550-ம் ஷூத்தில் இதற்குச் சக்கரவர்த்தியாயிருந்தான். 'எபிரெயர்களுக்குப் பார்சியரைப் பார்க்கிலும் மேதியர் மிகவும் அறிமுகமானவர்களானபடியால், எபிரெய ஆகமங்களில் பொதுவாக பார்சியரைக் குறிக்கும்படி 'மேதியர்' என்கிற பதம் சொல்லப்படுகிறது. ஏசா $13^{17}$ $21^{2}$ எரே $25^{25}$ $51^{11}$. 'மாதாய்' என்பது மேதியரைக் குறிக்கும். ஆதி $10^{2}$.

மேதெபா, மேதேபா. **Medeba**. மெதேபா காண்க.

மேத்தேக்-அம்மா. **Metheg-amma**. தாவீது பெலிஸ்தரிடமிருந்து கைப்பற்றின ஒரு ஊர். 2 சாமு $8^{1}$.

மேபாகாத், மேப்காத். **Mephaath**. ரூபன் கோத்திரத்திலுள்ள ஒரு ஊர். யோசு $13^{18}$ $21^{37}$. இது லேவியர்களுக்கு விடப்பட்டிருந்தபோதிலும் எரேமியா தீர்க்கதரிசியின் காலத்தில் மோவாபியர்கள் இதிலே குடியேறினார்கள். எரே $48^{21}$.

மேப்காத். **Mephaath**. மேபாகாத் காண்க.

மேம். **Mem**. எபிரெய எழுத்தட்டவணையில் 13-ம் எழுத்தாகிய மேம் என்பது சங் $119^{97-104}$ வசனங்களில் ஒவ்வொரு வசனத்தின் முதல் பதத்துக்கும் முதல் எழுத்தாயிருக்கிறது.

மேயா. **Meah, Hammeah**. [நூறு.] மேயா என்னும் கோபுரம் எருசலேம் மதிலின் வடகிழக்கு மூலைக்குச் சமீபத்திலிருந்தது. நெகே $3^{1}$ $12^{39}$.

மே-யார்கோன். **Me-Jarkon**. தாண் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு ஊர். யோசு $19^{46}$.

மேய்கிறது. **Feed**. ஆதி $29^{7}$ $41^{2}$ யோபு $1^{14}$ நீதி $15^{14}$ உன். பா $2^{16}$ $6^{2}$ ஏசா $44^{20}$ $5^{17}$ $11^{7}$ $27^{10}$ $30^{23}$ ஓசி $4^{16}$ $12^{1}$ மத் $8^{30}$ மாற் $5^{11}$ லூக் $8^{32}$.

மேய்க்கிறது. **Feed, shepherd**. ஆதி $30^{31}$ $37^{12}$ 1 சாமு $17^{15}$ 2 சாமு $5^{2}$ சங் $78^{71}$ ஏசா $40^{11}$ $61^{5}$ எரே $3^{15}$ $23^{2}$ எசே $34^{3}$ ஓசி $7^{14}$ சக $11^{4}$ லூக் $17^{7}$ யோவா $21^{15}$ அப் $20^{28}$ 1 கொரி $9^{7}$ 1 பேது $5^{2}$ யூதா $1^{12}$ வெளி $7^{17}$.

மேய்ச்சல். **Pasture**. சங் $65^{13}$ ஏசா $30^{23}$.

மேய்ப்பன். **Shepherd, pastor**. வேதாகமத்தில் ஆபேல் முதல் மேய்ப்பனாயிருந்தான் (ஆதி $4^{2}$) என்று சொல்லப்பட்டிருந்தும், யாபால் கூடாரங்களில் வாசம்பண்ணி அலைந்து திரிபவர்களுக்கும், மந்தைமேய்க்கிறவர்களுக்கும் 'தகப்பன்' அல்லது 'முற்பிதா' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதி $4^{20}$. பூர்வீககாலத்தில் சீமான்களுடைய ஆஸ்தியில் மந்தைகளே விசேஷித்ததாயிருந்தது. குமாரரும், குமாரத்திகளும், ஊழியக்காரரும் இவற்றைக் காப்பாற்றும்படி மிகவும் முயற்சியாயிருப்பார்கள். ஆதி $13^{7}$ $29^{1}$ $37^{2}$. மந்தையைக்

காக்கும்படி மேய்ப்பர் இருந்தார்கள். யோபு 30$^{1}$. யாக்கோபு லாபானுக்கு மேய்ப்பனா யிருந்தான். ஆதி 31$^{39}$. மேய்ப்பர்கள் தங்கள் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட ஆடுகளுக்கு உத்திரவாதம் பண்ணவேண்டும். யாத் 22$^{12}$ ஆமோ 3$^{12}$. ராஜாக்களின் காலத்திலிருந்த மேய்ப்பரின் தலைவருக்கு உயர்ந்த சலாக்கியம் இருந்தது. 1 சாமு 21$^{7}$ 1 நாளா 27$^{29}$.

பலெஸ்தீனாதேசத்தில் ஆடுகளை வளர்க்கிற கிராமவாசிகளைத் தவிர, ஆடுகளைமட்டும் வளர்த்து ஜீவனம் செய்கிற இத்தேசத்து இடையரைப்போன்ற அநேகர் இருந்தார்கள். இவர்கள் ஒரே இடத்தில் நிலையாக வாசம்பண்ணாமல், தங்கள் மந்தைகளை மேய்ச்சலுள்ள பல இடங்களுக்குக் கொண்டுபோவார்கள். ஆதி 37$^{12}$ யாத் 3$^{1}$ சங் 23$^{2}$ 66$^{12}$. மதிப்புக்குரியவர்களாகிய இவர்கள் தங்களைப் பாதுகாக்கும்படி தைரியமாய்ப் போர்புரிவார்கள். ஆதி 14$^{14}$ 21$^{22}$ 26$^{13}$ 30$^{43}$ யோபு 1$^{3}$.

எகிப்திய மேய்ப்பர்கள் இழிகுலத்தாரா யிருந்தபடியால், மேய்ப்பர்கள் எல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பா யிருந்தார்கள். ஆதி 46$^{34}$. ஆனால் தேவதூதர்கள் இயேசு பிறந்த செய்தியை மேய்ப்பருக்கு தெரிவித்தார்கள். லூக் 2$^{8}$.

கடவுள் இஸ்ரவேலுக்கு மேய்ப்பன். சங் 80$^{1}$ எரே 31$^{10}$. ராஜாக்கள் தங்கள் பிரஜைகளுக்கு மேய்ப்பர். ஏசா 44$^{28}$ எசே 34$^{10}$. மேசியா இஸ்ரவேலின் மேய்ப்பன். சக 13$^{7}$.

பலெஸ்தீனாவிலுள்ள மேய்ப்பர் தங்கள் ஆடுகளை மிகவும் அன்பாய் பரிபாலித்துக் காப்பாற்றி இவை காட்டு மிருகங்களால் சேதமடையாதபடிக்கு மிகவும் எச்சரிக்கையாயிருப்பார்கள். ஆதி 31$^{40}$ 1 சாமு 17$^{34}$ யோவா 10$^{15}$. கறவலாடுகளையும் சிறு குட்டிகளையும் மெதுவாய் நடத்தியும் தோளில் சுமந்துகொண்டும் போவார்கள். ஆதி 33$^{13}$ ஏசா 40$^{11}$ மாற் 10$^{14}$. காணாமற்போன ஆடுகளைத் தேடுவார்கள் சங் 23 லூக் 15$^{4}$. இதினிமித்தம் ஆடுகள் மேய்ப்பனுடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. அவன் அவைகளுக்கு முன்பாக நடந்து போகும்போது அவனுக்குப் பின்செல்லுகிறது. கூலியாட்களான அந்நியர்பேரில் ஆடுகளுக்கு யாதொரு நம்பிக்கையுமில்லை. இதைப்போலவே நல்ல மேய்ப்பனாகிய இயேசுவானவர் நம்மில் அன்புகூர்ந்து, நம்மை வழிநடத்தி, நமக்காகவே ஜீவனைக் கொடுத்தார். யோவா 10$^{1-14,27-29}$. இயேசு நல்ல மேய்ப்பன். யோவா 10$^{11}$. அவர் மந்தையாகிய திருச்சபைக்கு மேய்ப்பன். எபி. 13$^{20}$ 1 பேது 5$^{4}$.

அந்தந்த சபையின் போதகர்கள் அவற்றிற்கு மேய்ப்பர்களா யிருக்கிறார்கள். எரே 3$^{15}$ 23$^{3}$ யோவா 21$^{16}$ அப் 20$^{28}$ எபே 4$^{13}$.

மேரப், மேராவ். **Merab**. சவுலின் மூத்த மகள். கோலியாத்தைக் கொன்றவனுக்கு இவளை விவாகம்செய்து கொடுப்பதாக சவுல் வாக்குப்பண்ணியிருந்தாலும், அப்படிச் செய்த தாவீதுக்கு இவளைக் கொடாமல் ஆதரியேல் என்பவனுக்கு விவாகம் செய்துகொடுத்தான். 1 சாமு 14$^{49}$ 17$^{25}$ 18$^{17}$.

மேராவ். **Merab**. மேரப் காண்க.

மேரிபா. **Meribah**. [கலகம்.] மாசா என்கிற இடத்தின் மறுபேர். மாசாவும் மேரிபாவும் காண்க.

மேரிபால். **Merib-baal**. யோனத்தானின் மகன். இவன் மறுபேர் மேவிபோசேத். 2 சாமு 4$^{4}$ 1 நாளா 8$^{34}$ 9$^{40}$.

மேரிபால் என்பதற்கு 'பாகால்தேவதையின் போர்வீரன்' என்று அர்த்தம். பெலிஸ்தர் சவுலை ஜெயித்தபோது மேவிபோசேத்துக்கு 5 பிராயம். சவுலின் வீட்டார் தப்பியோடின சமயத்தில் இவன் முடவனானான். 2 சாமு 4$^{4}$.

தாவீது சிம்மாசனமேறினபோது, தனக்கும் யோனத்தானுக்கும் இருந்த சிநேகத்தினிமித்தம் மேவிபோசேத்தைப் பராமரித்து வந்தான். 2 சாமு 9$^{1}$. அப்சலோம் தாவீதைத் துரத்தினபோது மேவிபோசேத் தாவீதுக்கு உதவிசெய்ய வராமல் எருசலேமில் தங்கிவிட்டபடியால், தாவீது மேவிபோசேத்துக்குக் கொடுக்கப்பட்டிருந்த சவுலின் நிலங்களில் சீபா என்பவனுக்கும் ஒரு பாகம் கொடுத்தான். 2 சாமு 16$^{4}$ 19$^{24}$.

மேரேஸ். **Meresh**. அகாஸ்வேருவின் ஏழு ஆலோசனைக்காரரில் ஒருவன். எஸ்தர் 1$^{14}$.

மேரேத். **Mered**. ஒரு யூதன். 1 நாளா 4$^{17}$.

மேரோம். **Merom**. மேரோம் ஏரி கலிலேயாக் கடலுக்கு வடக்கே ஏறக்குறைய 10 மைல் தூரத்திலிருந்தது. இதற்குச் சமீபத்திலே யோசுவா கானான் தேசத்தின் வடபாகங்களிலுள்ள ராஜாக்களை ஜெயித்தான். தற்காலத்தில் இதற்கு ஊலே (*Huleh*) என்று பேர். இதன் பக்கத்தில் சதுப்பு பூமியுண்டு. யோசு 11$^{5}$.

மேரோஸ். **Meroz**. மேரோசின் குடிகள் சிசெராவுக்கு விரோதமாக பாராக்கு

யுத்தத்தில் உதவிசெய்ய வரவில்லை. இந்த ஊர் இருந்த இடம் தெரியாது. நியா $5^{23}$.

மேலெழுத்து. **Superscription**. ரோமர்கள் தாங்கள் அச்சிட்ட நாணயங்களில் ஒரு பக்கத்தில் ராயனுடைய சுரூபமும் அதைச்சுற்றி அவனுடைய பெயரும் இருக்கும். மறுபக்கத்திலோ பலவிதமான சுரூபங்களையும் எழுத்துக்களையும் அச்சிடுவார்கள். இயேசுவுக்குக் காட்டின மேலெழுத்து என்பது ராயனுடைய பெயர்தான். மத் $22^{20}$ மாற் $12^{16}$ லூக் $20^{24}$.



மேரோம்

மேலேக். **Melech**.

1. மேரிபாலின் பேரன். 1 நாளா $8^{35}$.

2. மேலேக் என்பதற்கு 'ராஜா' என்றர்த்தமாகையினாலும், மோளேகு என்பதும் மேலேக் என்பதும் ஒரே அர்த்தங்கொள்ளும் பெயர்களாகையாலும், சில வசனங்களில் 'ராஜா' என்பது மோளேகு தேவதையைக் குறிக்கிறது. ஏசா $30^{33}$ $57^{9}$ எரே $32^{35}$. மோளேகு காண்க.

மேல்ஷார். **Melzar**. 'உக்கிராணக்காரன்' என்பது இப்பதத்தின் அர்த்தம். இது பாபிலோனியா ராஜாவின் அரமனையிலுள்ள ஒருவனுடைய சொந்தப்பெயராய் அல்லது பட்டப்பெயராயிருக்கலாம். தானி $1^{11.16}$.

மேல்விலாசம். **Title**. ரோமர்களுடைய வழக்கத்தின் படி போர்ச்சேவகர் குற்றவாளிகளைத் தண்டனைக்குக் கொண்டுபோகும் போது ஒரு பலகையில் குற்றவாளியின் பெயரையும், அவன் செய்த குற்றத்தையும் எழுதி, அவனுக்கு முன்பாக அதைக் கொண்டுபோவார்கள். அல்லது அவன் கழுத்திலே அதைக் கட்டுவார்கள். சிலுவையில் அவனை அறைந்தபின் தலைக்குமேலே அதை ஏற்றிவைப்பார்கள். மத் $27^{37}$ மாற் $15^{26}$ லூக் $23^{38}$ யோவா $19^{19}$.

மேவிபோசேத். **Mephibosheth**.

1. மேரிபால் காண்க.

2. சவுலின் மறுமனையாட்டியாகிய ரிஸ்பாளின் மகன். 2 சாமு $21^{8}$.

மேளம். **'Timbrel.'** 2 சாமு $6^{5}$ 1 நாளா $13^{8}$. கீதவாத்தியம் காண்க.

மேற்புறமான வாசல். **'The gate shallecheth'**. சல்லேகேத், எருசலேம் காண்க.

மேனி. **Meni**. மனுஷர்களுக்கு நேரிடும் சம்பவங்களை ஏற்படுத்துகிற ஓர் தேவதை. அரபியர்களும் சீரியர்களும் இதை வணங்கினார்கள் என்று தோன்றுகிறது. பின்வாங்கின எபிரெயர்களும் இதை வணங்கினார்கள். ஏசா $65^{11}$. காத் (3) காண்க.

மேன்மை. **Excellence**. ரோ $5^{11}$ 1 கொரி $12^{31}$ $15^{31}$ எபே $1^{19}$ பிலி $3^{8}$.

மேன்மைபாராட்டுகிறது. **Boast**. ரோம $5^{2}$ மூ. பரி. பவுல் இந்தப் பதத்தை அடிக்கடி சொல்லுகிறான். சந்தோஷம் காண்க.

## மை

மை. **Ink**. எரே $36^{18}$ 2 கொரி $3^{3}$ 2 யோவா $1^{12}$ 3 யோவா $1^{13}$. எழுத்து காண்க.

மை இடுதல். **R. V. 'Enlarge the eyes'**. எரே $4^{30}$ எசே $23^{40}$. கண் காண்க.

மைக்கூடு. **Ink-horn**. லிகிதர்களும் வேதபாரகர்களும் மெல்லிதான நாணலினால் செய்யப்பட்ட பேனாக்களும் மை வைக்கும் கூடும் சேர்ந்த ஒருவித மைக்கூடுகளை உபயோகித்து வந்தார்கள். இதைச் சாதாரணமாய்த் தங்கள் அரைக்கச்சைகளில் கட்டிக்கொள்வார்கள். எசே $9^{2}$.

மைல். **Mile**. புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட மைல் என்பது இங்கிலீஷ் மைலுக்குக் கொஞ்சம் குறைவு. மத் $5^{41}$. அளவு காண்க.

## மொ

மொக்கு. **Bowl**. குத்துவிளக்கின் கிளைகளின் மொக்கு. யாத் $25^{33}$.

மொட்டை. **Bald**. லேவி $13^{40-53}$ $21^{8}$ உபா $14^{1}$ 2 இரா $2^{23}$ ஏசா $3^{24}$ $15^{2}$ $22^{15}$ எரே $16^{6}$ $47^{5}$ $48^{37}$ எசே $7^{18}$ $27^{31}$ $29^{18}$ ஆமோ $8^{10}$ மீகா $1^{16}$. கூந்தல் காண்க.

மொரேசா. **Moresha**. மீகாத் தீர்க்க தரிசியின் பிறப்பிடம். இந்த ஊரும் மோர் ஷேத்-காத் என்பதும் ஒன்றுதான். இது யூதாக்கோத்திர நாட்டின் மேற்குப்பாகத்தி லிருக்கிறது. எரே $26^{18}$ மீகா $1^{1}$ $1^{14}$.

மொர்தேகாய். **Mordecai**.

1. எஸ்தர் ராணியின் இனத்தான் அல்லது 'சிறிய தகப்பன்' ஆகிய இவன் ஆமான் யூதர்களுக்குச் செய்த துரோகமான உபாயத்தை அகற்றினான். இவனுடைய சரித்திரம் எஸ்தர் ஆகமத்தில் விபரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. எஸ்தர் $2^{5}$ $3^{5}$ $4^{1}$ $5^{13}$ $6^{2}$ $7^{9}$ $8^{9}$ $9^{4}$ $10^{3}$.

2. சிறையிருப்பிலிருந்து செருபாபேலுடனே திரும்பிவந்தவன். எஸ்ரா $2^{2}$ நெகே $7^{7}$.

மொவதியா. **Moadiah**. மர்தியா காண்க.

## மோ

மோக இச்சை. **A. V. 'Lust of concupiscence.'** 1 தெச $4^{5}$.

மோசம். **Deceit**. எபே $5^{6}$ வெளி $12^{9}$ $13^{14}$ $18^{23}$ $19^{20}$ $20^{2}$. பொய் காண்க.

மோசா. **Moza**.

1. காலேபின் மகன். 1 நாளா $2^{46}$.

2. சவுலின் சந்ததியான். 1 நாளா $8^{36}$.

மோசேரா. மோசேரோத் **Mosera, Moseroth**. இஸ்ரவேலர் தங்கள் பிரயாணத்திலே பாளயமிறங்கின ஒரு இடம். ஆரோன் இங்கே மரித்தான். எண் $33^{3}$ உபா $10^{6}$.

மோசே. **Moses**.

1. பெயர்.

யாத்திரையாகமத்தை எழுதினவன் மோசே என்னும் பதத்துக்கு 'எடுக்கப்பட்டவன்' என்று அர்த்தங் கூறுகிறான். யாத் $2^{10}$. சிலர் இதற்கு 'ஜலத்திலிருந்து ரக்ஷிக்கப்பட்டவன்' என்று சொல்லுகிறார்கள். வேறு சிலர் மோசே என்பதும் எகிப்தியர் வணங்கின மேசு என்பதும் ஒன்றுதான் என்று நினைத்து அதற்குக் 'குமாரன்' என்று அர்த்தஞ்சொல்லுகிறார்கள்.

2. மோசேயின் சரித்திரம்.

மோசேயின் சரித்திரம் மூன்று பிரிவில் அடங்கும்.

i. பால பிராயம்முதல் மீதியான் தேசத்துக்கு அவன் ஓடினதுமட்டுமுள்ள நாற்பது வருஷம்.

ii. மீதியான் தேசத்துக்கு வந்ததுமுதல் எகிப்து தேசத்துக்குத் திரும்பிப்போனது மட்டுமுள்ள நாற்பது வருஷம்.

iii. எகிப்து தேசத்துக்கு வந்ததுமுதல் அவன் நேபோமலையில் இறந்தது மட்டுமுள்ள நாற்பது வருஷம்.

i. பால பிராயம்முதல் மீதியான் தேசத்துக்குப் போனதும்மட்டும். அம்ராமின் மகன். யாத் $6^{18}$. அவன் பிறந்த குடும்பம். 1 நாளா $23^{14}$. அவனுடைய பிறப்பும் பார்வோன் குமாரத்தி நைல்நதியண்டை அவனைக் கண்டெடுத்ததும். யாத் $2^{1}$ அப் $7^{20}$ எபி $11^{23}$. மீதியான் தேசத்துக்கு அவன் ஓடினது. யாத் $2^{10}$ அப் $7^{24}$.

ii. எகிப்து தேசத்துக்குத் திரும்பிப் போனதுவரை: விவாகமும் மக்கட்பேறும். யாத் $2^{21}$ அப் $7^{29}$. முட்செடியில் கண்ட தரிசனமும் அழைக்கப்பட்டதும். யாத் 3-ம் அதி. சங் $105^{26}$ அப் $7^{30}$. அவனுக்குக் கொடுக்கப்பட்ட மூன்று அடையாளங்கள். யாத் 4-ம் அதி.

iii. மரணம்மட்டும். இஸ்ரவேலரை அழைத்தல். யாத் $4^{29}$. பார்வோனைப் பார்த்தது. யாத் 5-ம் அதி. யேகோவா இட்ட வேறு கட்டளைகள். யாத் 6-ம் அதி. பார்வோனுக்கு முன்பாகச் செய்யப்பட்ட அற்புதங்களும் பத்து வாதைகளும். யாத் $6^{19}$–$11^{10}$. சிவந்த சமுத்திரத்தைக் கடந்துபோதல். யாத் 14-ம் அதி. அப் $7^{36}$. மோசே பாடின பாட்டு. யாத் 15-ம் அதி.

மாராவிலும் சீனிலும் ரெவிதீமிலும் ஜனங்கள் முறுமுறுத்தது. யாத் $15^{24}$ $16^{2}$ $17^{2}$. ஜனங்களுக்குக் காடைகளும் மன்னாவும் கொடுத்தது. யாத் $16^{13}$ எண் $11^{13}$ உபா $8^{3}$ சங் $78^{24}$ $105^{40}$ யோவா $6^{31}$. கன்மலையிலிருந்து தண்ணீரைப் பெற்றது. யாத் $17^{5}$. அமலேக்கியரோடு செய்த யுத்தம். யாத் $17^{9}$. நியாயப்பிரமாணத்தைப் பெறும்படி சீனாய் மலைக்குப் போனது. யாத் 19-ம் அதி. $31^{18}$ 32-அதி.

பொன் கன்றுக்குட்டியை அழித்தது. யாத் 32-ம் அதி.

சீனாய்மலையில் அவன் யேகோவாவுடன் முகமுகமாய்ப் பேசி, புதுப்பிரமாணப் பலகையைப் பெற்றுக்கொண்டது. யாத் 33-ம் அதி 34-ம் அதி.

ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்கினது. யாத் $40^{17}$. ஆரோனையும் அவனுடைய புத்தி

ரர்களையும் ஆசாரியராகப் பிரதிஷ்டை செய்தது. லேவி 8–ம் அதி.

முதல் குடிமதிப்பு. எண் 1-ம் அதி.

வேவுகாரரை அனுப்பினது. எண் 13-14–ம் அதி.

கோராகின் கலகம். எண் 16-ம் அதி.

காதேசில் அவன் தண்ணீர் பெறும்பொழுது கோபங்கொண்டதினிமித்தம் கானான் தேசத்தில் பிரவேசிக்கக்கூடாதென்று கட்டளை பெறுதல். எண் $20^{12}$ சங் $106^{32}$. வெங்கல சர்ப்ப விஷயம். எண் $21^{8}$ யோவா $3^{14}$. இரண்டாம் குடிமதிப்பு. எண் 26–ம் அதி.

கானான் தேசத்தை மலையிலிருந்து பார்த்தல். எண் $27^{12}$ உபா $44^{1}$. யோசுவாவை நியமித்தது. எண் $27^{15}$. நியாயப்பிரமாணத்தை ஓதி ஜனங்களுக்குப் புத்திமதி கூறினது. உபா 27–31–ம் அதி.

அவன் கடைசியாய்ப் பாடின பாட்டு. உபா 32–ம் அதி.

பன்னிரண்டு கோத்திரங்களையும் ஆசீர்வதித்தது. உபா 33–ம் அதி.

மரணமும் அடக்கமும். உபா 34–ம் அதி.

3. தாங்கள் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்பட்டு கானான் தேசத்தில் பிரவேசிக்கும்பொழுது கானானியர் முதலிய ஜனங்களைவிட மிகவும் சொற்பத்தொகையினராயிருந்த இஸ்ரவேலர் தக்க தலைவன் இல்லாமல் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப் போவதும் கானான் தேசத்தை ஜெயிப்பதும் எப்படி? இவனுடைய சரித்திரத்தை நாம் விசாரித்தால், இவன் மூன்று காரியங்களில் பெரியவனாயிருக்கிறான் என்று காண்கிறோம்.

i. மோசே ஒரு மகா சபையை நடத்துகிறதில் பெரியவன்.

ii. சன்மார்க்கத்தை ஸ்தாபிக்கிறதில் பெரியவன்.

iii. நியாயப்பிரமாணத்தைக் கொடுக்கிறதில் பெரியவன்.

i. சபைத்தலைவன்.

எகிப்துதேசத்தில் பல வருஷம் அடிமைத்தனத்திலிருந்த எபிரெயர் அக்காலத்தில் நிர்ப்பந்த நிலைமையிலிருந்து தைரியம் முன்யோசனை சன்மார்க்கத்துக்குரிய வைராக்கியம் முதலிய நற்குணங்கள் அற்றுப்போயிருந்தார்கள். ஈன ஜனமாகிய இவர்களுக்குள் மோசே நம்பிக்கையையும் பயபக்தியையும் தைரியத்தையும் உண்டாக்கி இவர்கள் விடுதலை பெறும்படி வனாந்தரத்தில் பிரவேசித்து அதில் பல வருஷம் பிரயாணம்பண்ணி, கானான் தேசத்திலுள்ள ஜனங்களை ஜெயிக்கும்படி இவர்களை நடத்துவது ஆச்சரியமான காரியந்தான்.

ii. சன்மார்க்கத்தை ஸ்தாபிக்கிறதில் பெரியவன்.

மோசே விசேஷித்தவிதமாய் யேகோவாவின் ஊழியன் என்று நாம் எப்போதும் ஞாபகமுள்ளவர்களாயிருக்கவேண்டும். யேகோவா என்பதற்கு 'இருக்கிறவர்' என்று அர்த்தமானதினாலே பாபிலோனியர் பெனிக்கேயர் முதலியவர்கள் வணங்கின தேவதைகளைப்போல அல்லாமல் இவரே உண்மையான கடவுள் என்று இப்பதம் குறிப்பிடும். எபிரெயர் இவ்விதமாய்த் தாங்கள் வணங்கின கடவுள் உண்மையுள்ளவராயிருக்கிறார் என்று தெரிவிக்கிறார்கள். கடவுளுக்கு யேகோவா என்று பெயரிட்டவன் மோசேயோ அல்லவோ என்பதைப்பற்றி நமக்குத் தெரியாது. ஏனெனில் ஆதியாகமத்தில் நாம் விசாரித்தால் எபிரெயர்கள் ஆதிகாலமுதல் தாங்கள் வணங்கின கடவுளுக்கு யேகோவா என்னும் பெயரை வழங்கிவந்ததாக அறிகிறோம். இதினாலே அவர் எபிரெயர்களுடைய தேவனாகிய யேகோவா என்று சொல்லப்பட்டிருக்கிறார். யாத் $3^{18}$ $5^{8}$ $7^{16}$ $9^{1}$ $9^{13}$ $10^{3}$. இது எப்படியாயினும் மோசேயின் போதனையினால் எபிரெயர்கள் யேகோவாவுக்கும் தங்களுக்கும் விசேஷித்த சம்பந்தம் உண்டு என்றும், அவர் தங்களை எப்பொழுதும் காப்பாற்றுவார் என்றும், மற்ற ஜனங்கள் வணங்கின தேவர்களைவிட அவர் பெரியவர் என்றும், அந்நிய தேவர்களையல்ல யேகோவாவாகிய ஒருவரை மாத்திரம் வணங்குவது அவசியம் என்றும், வனாந்தரத்திலே சீனாய் மலையிலிருந்து அவர்கள் பெற்றுக்கொண்ட நியாயப்பிரமாணம் யேகோவாவினுடைய திருச்சித்தம் என்றும் அறிந்துகொண்டார்கள். இஸ்ரவேலர் பல தடவை அந்த அந்நிய தேவர்களை வணங்கி வந்தாலும் அவர்களுக்குள் இருந்த பக்தர்கள் மோசேயின் காலமுதல் யேகோவாவை மாத்திரம் வணங்குவது அவசியம் என்பதை அறியவந்தார்கள். உண்மையான கடவுளாகிய யேகோவாவை மாத்திரம் வணங்குவது இஸ்ரவேலர் அனைவருக்கும் கடமை என்று மோசே முதல் முதல் எபிரெய ஜனங்களுக்குப் போதித்தான்.

iii. நியாயப்பிரமாணம்.

யேகோவாவைமட்டும் வணங்கவேண்டும் என்று மோசே ஜனங்களுக்குப் போதிக்கும் போது அவர்கள் அவரை ஆராதிக்கவேண்

டிய முறைமையையும் போதித்தான். யாத்திராகமம் லேவியராகமம் உபாகமம் என்னும் ஆகமங்களில் கூறப்பட்டிருக்கிற நியாயப்பிரமாணங்களில் மோசே இயற்றினவை சிலமாத்திரம் என்று சொன்னாலும் அவன் இயற்றின பிரமாணங்கள் எபிரெயர் கைக்கொண்ட நியாயப்பிரமாணத்துக்கு மூலப்பிரமாணம் என்பதற்குச் சந்தேகம் இல்லை. கற்பனை பத்து காண்க. மோசே இயற்றிய பிரமாணங்கள் சில ஆனாலும் சரி, பல ஆனாலும் சரி, இவற்றின் மூலமாய் இவன் போதித்த போதனையில் விசேஷித்தவைகளாவன :

*a.* எபிரெயர் எபிரெயர்களுக்கு அநியாயம் செய்யாமல் எப்பொழுதும் நீதி நியாயத்தையே செய்யவேண்டும். எபிரெயனுக்கு எபிரெயன் அநியாயம் செய்வது யேகோவாவின் பார்வையில் பெரிய குற்றம்.

*b.* குடும்ப விஷயத்தில் ஒழுங்காய் நடப்பது அவசியம். எபிரெய பெண்கள் விசேஷமாய்க் கற்புள்ளவர்களாய் நடக்கும்படி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். எபிரெய ஸ்திரீயைக் கெடுப்பது மகா பாவம்.

*c.* யேகோவாவைத்தவிர பொய்த்தேவதைகளை வணங்குவது மகா பாதகம். இஸ்ரவேலருடைய யாத்திரையின் சரித்திரங்கள் சொல்லுகிறபடி மோசே இந்த நோக்கத்துடனே அநேக நல்ல ஆசாரங்களை ஏற்படுத்தி மார்க்க விஷயத்துக்குரிய அநேக காரியங்களைப்பற்றி நியாயத்தீர்ப்பு செய்வான். ஜனங்கள் இவனால் நியமிக்கப்பட்ட மூப்பர்களிடத்தில் சாதாரண விஷயங்களைப்பற்றி விசாரித்துக்கொள்ளுவார்கள். யேகோவாவினுடைய சித்தம் இன்னதென்று விசாரிக்கும்படி மோசே ஜனங்கள் தன்னிடம் வருகிறதற்கு உத்தரவு கொடுத்தான். துன்மார்க்க நடக்கை ஆகாது என்று அடிக்கடி போதிக்கிறான். இவ்விதமாய் இஸ்ரவேலர் அடிமைத்தனத்திலிருந்து மீண்டுவரும்போதே அவர்களுக்குள் அநேக நல்வழக்கங்களை ஸ்தாபித்தான் என்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. யாத் 18 அதி. 33 அதி.

**4.** புதிய ஏற்பாடு.

i. மோசே நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தது. மத் $8^{4}$ $19^{7}$ மாற் $7^{10}$ $12^{19}$ லூக் $2^{22}$ $16^{29}$ $24^{27}$.

ii. இயேசுகிறிஸ்துவுக்கு மோசே பல விஷயங்களில் முன்மாதிரியாய் இருந்தான் என்று ஆதிக்கிறிஸ்தவர்கள் நினைத்தார்கள்.

மோசேயின் முகப்பிரகாசம். 1 கொரி $3^{7}$. வெண்கல சர்ப்பம். யோவா $3^{14}$. பஸ்கா. யோவா $19^{36}$. உடன்படிக்கையின் பலி. மத் $26^{28}$ எபி $9^{18}$. சீனாய் மலையில் நியாயப்பிரமாணத்தை மோசே பெற்றபோது இஸ்ரவேலர் அடைந்த பயம். எபி $12^{18}$. சிவந்த சமுத்திரத்தைக் கடந்துபோதல். 1 கொரி $10^{2}$. மன்னா. யோவா $6^{30}$. பாறையிலிருந்து தண்ணீர் பெறுதல். 1 கொரி $10^{3}$. தீர்க்கதரிசி. அப் $3^{22}$ $7^{37}$ யோவா $1^{17}$. எகிப்தியர் சூனிய வித்தைக்காரர். 2 தீமோ $3^{8}$. வாதைகள். வெளி 8, 9, 15, 16 அதி.

மோசேயின் பாட்டு. வெளி 15 அதி.

மோட்சம். **Heaven**.

1. நட்சத்திரம், பரமண்டலம், வானசேனை காண்க.

2. இரட்சிப்பு, முக்தி காண்க.

மோதிரம். **Ring**. எபிரெயர் முதலியோர் சாதாரணமாய்க் கைவிரல்களிலே மோதிரம் போடுவார்கள். பல வசனங்களில் சொல்லப்படும் 'மோதிரம்' முத்திரை மோதிரத்தைக் குறிக்கும். ஆதி $38^{18}$ $41^{42}$ 1 இரா $21^{8}$ எஸ்தர் $3^{10}$ எரே $22^{24}$ தானி $6^{17}$. மோதிரங்கள் பொன்னால் செய்யப்பட்டு இரத்தினங்களினால் அலங்கரிக்கப்பட்டிருப்பதால் இவைகளைக் காணிக்கையாகக் கொடுப்பது வழக்கம். எண் $31^{50}$. பொன் மோதிரம் போடுவது ஐசுவரியத்திற்கும் தயவுக்கும் அடையாளம். லூக் $15^{22}$ யாக் $2^{2}$. ஆபரணம், முத்திரை காண்க.

மோதுகிறது. **'Smite.'** தானி $2^{34}$.

மோத்சா. **Mozah**. பென்யமீன் கோத்திர நாட்டிலுள்ள ஒரு ஊர். யோசு $18^{26}$.

மோப். **Moph**. = நோப். ஓசி $9^{6}$. நோப், மெம்பிஸ் காண்க.

மோரியா. **Moriah**. ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிடும்படி கொண்டுபோன மலைநாடு. ஆதி $22^{2}$. நாளாகமம் என்னும் புஸ்தகத்தில் ஆக்கியோன், எருசலேம் தேவாலயம் கட்டப்பட்ட இடம் இதுதான் என்று நினைக்கிறான். 2 நாளா $3^{1}$. ஆனால் இதற்குப் பூரண அத்தாட்சி இல்லை. சிலர் நினைக்கிறபடி இதுவும் மோரே மேடையும் (நியா $7^{1}$) ஒன்றாயிருக்கலாம். ஆனால் இதைக் குறித்து நாம் தீர்மானமாய்ச் சொல்ல முடியாது.

மோரே. **Moreh**.

1. கில்காலுக்கும் கெரிசீம் மலைக்கும் அருகிலிருந்த இடம். ஆதி $12^{6}$ உபா $11^{30}$. இதிலே ஆபிரகாம் தேவதரிசனம் அடைந்தான்.

2. மோரே மேடை. கிதியோன் மீதியானியர்மேல் படையெடுத்துப் போனபோது அவர்கள் மோரே மேடையண்டை பாளைய

மிறங்கியிருந்தார்கள். இது யெஸ்ரயேல் சம பூமியிலிருந்தது. நியா $7^{1}$.

மோர் ஷேத்-காத். **Moresheth-gath.** மொரேசா காண்க.

மோலாதா. **Moladah**. சிமியோன் அல்லது யூதாக் கோத்திரத்தைச் சேர்ந்த ஓர் ஊர், இது பெயர்செபாவுக்குச் சமீபத்திலிருந்திருக்கலாம். யோசு $15^{26}$ $19^{2}$.

மோளித். **Molid**. ஒரு யூதன். 1 நாளா $2^{29}$.



மோளேகு.

மோளேகு, மோளோகு. **Molech, Moloch**. மோளேகு என்பதற்கு 'ராஜா' என்று அர்த்தம். சேமியர் தாங்கள் வணங்கின அநேக தெய்வங்களுக்கு 'ராஜா' என்னும் இந்தப் பொதுப்பெயரை வழங்கிவந்தார்கள். பெனிக்கேயர் தங்கள் சொந்த தேசத்திலும் ஆப்பிரிக்கா தேசத்திலும் 'ராஜா' என்னும் ஒரு தேவனுக்குக் குழந்தைகளைத் தீக்குழியில் பலிசெலுத்தினார்கள். எபிரெயர்களும் இவ்வித விக்கிரகாராதனைக்கு இசைந்து இப்படிப்பட்ட ஆசாரங்களை அநுசரித்ததினாலே அவர்கள் வணங்கின மோளேகு என்பவன் பெனிக்கேயர் வணங்கின 'ராஜா' என்ற தேவதைகளுக்குள் ஒருவன் என்று அறிகிறோம். சாலொமோன் ராஜா அந்த ஆராதனையை எருசலேம் பட்டணத்திலே ஸ்தாபித்தான். ஆகாஸ் ராஜாவும் அதை நடத்தினான். மனாசே ராஜா அந்தத் தேவனுக்குத் தனது பிள்ளையைப் பலியாக செலுத்தினான். யோசியா ராஜாவோ அந்த ஆராதனையை அகற்றினான். அப்படியிருந்தும் சிறையிருப்புக் காலம்மட்டும் அந்த ஆராதனையை யூதர்களிற் சிலர் நடத்திவந்தார்கள். லேவி $18^{21}$ $20^{2}$ 1 இரா $11^{7}$ 2 இரா $23^{10}$. பின்வரும் வசனங்களில் 'ராஜா' என்பது இந்தத் தேவனைக் குறிக்கும். ஏசா $3^{33}$ $57^{9}$ எரே $32^{35}$. சிலர் நினைக்கிறபடி மில்கோம் தேவனும் மோளேகும் ஒன்றுதான். மில்கோம் காண்க.

மோவதியா. **Moadiah**. மாதியா காண்க.

மோவாப். **Moab**. சாக்கடலுக்குக் கிழக்கிலுள்ள மலைநாட்டில் வசித்த ஜனம் மோவாபியர். இவர்கள் குடியிருந்த தேசத்துக்குக் கிழக்கே அராபிய வனாந்தரமும் தெற்கே ஏதோம் தேசமும் மேற்கே சாக்கடலும் இருந்தன. இதன் வடக்கு எல்லை வெவ்வேறு காலங்களில் வெவ்வேறாயிருந்தது. பூர்வீகத்தார் இந்தத் தேசத்துக்கு லோத்தான் என்று பெயர் வழங்கிவந்தார்கள். ஆதி $36^{20}$. ஆதியாகமத்தில் லோத்து என்பவன் மோவாபுக்குத் தகப்பன் என்று சொல்லியிருக்கிறது. ஆதி $19^{37}$. இந்தப் பாரம்பரியத்தினாலே மோவாபியருக்கும் தங்களுக்கும் ஒரு சம்பந்தம் இருப்பதாக எபிரெயர் அறிந்தார்கள் என்று காண்கிறோம். மோவாபியருடைய பாஷை, சன்மார்க்கம், வழக்கபழக்கம் ஆகிய இவைகளில் இதற்கு அத்தாட்சி உண்டு.

மோவாபியர் தங்கள் தேசத்துக்கு வந்த காலம் நமக்குத் தெரியாது. ஆனால் இஸ்ரவேலர் கானான் தேசத்துக்கு விரோதமாய்ப் படையெடுக்குமுன்னே இவர்கள் தங்கள் தேசத்தில் குடியேறியிருந்தார்கள் என்று அறிகிறோம். இஸ்ரவேலர் கானான் தேசத்துக்குள் பிரவேசிக்கும்படி வழிதேடினபோது மோவாபிய சேனைகள் பெரியவை என்றும் அவர்கள் கட்டின கோட்டை கொத்தளங்களை தாங்கள் பிடிக்கமுடியாது என்றும் அறிந்து, மோவாப் தேசத்துக்கு வடக்கேயிருக்கிற சீகோன் ராஜா முதலிய ராஜாக்களுக்கு விரோதமாய்ச் சண்டை செய்தாலும் அவர்கள் மோவாபியரோடு யுத்தஞ்செய்யவே இல்லை. மோவாபியரும் இஸ்ரவேலரோடு சண்டைசெய்ய விரும்பினாலும், அவர்களைப் பார்த்து பயந்ததினாலே அவர்களோடு சண்டைசெய்யவில்லை. உபா $2^{9}$ $2^{24}$ $23^{4}$ எண் $21^{21}$ 22–24 அதி. நியா 11 அதி. பிறகு இஸ்ரவேலர் அர்னோன் பள்ளத்தாக்குக்கு வடக்கே இருந்த மோவாபிய ஊர்களைப் பிடித்தார்கள். எண் $32^{34}$ யோசு $13^{15}$. நியாயாதிபதிகளின் காலத்தில் மோவாபியர் இந்தத் தேசமனைத்தையும் திரும்பவும்

பிடித்துக்கொண்டு, பென்யமீன் கோத்தி ரத்தாருக்கு இடுக்கண் செய்தார்கள். அக் காலத்தில் ஏகூத் மோவாபின் ராஜாவாகிய எக்லோனைக் கொன்றுபோட்டான். நியா $3^{13}$. இதற்குப்பிறகு ரூத்தின் காலத்தில் மோவாபியருக்கும்இஸ்ரவேலருக்கும் சிநேகம் இருந்தது. சவுல் தாவீது சாலொமோன் என்னும் ராஜாக்களின் காலத்தில் இஸ்ரவேலர் மோவாபியருக்கு விரோதமாய்ப் படையெடுத்தார்கள். சாலொமோன் ராஜா தன் அந்தப்புரத்திலிருந்த மோவாபிய ஸ்திரீகளுக்காக கேமோஷ் என்னும் தேவதைக்குத் தேவஸ்தலங்களைக் கட்டினான். ரூத் $1^{22}$ 1 சாமு $14^{47}$ $22^{3}$ 2 சாமு $8^{1}$ 1 இரா $11^{7}$.

ஐம்பது வருஷத்துக்குப் பிறகு உம்ரியின் காலத்தில் கி—மு. 887-ம் வருஷத்தில் மோவாபின் ராஜாவாகிய மேஷா என்பவன் கற்பலகையில் வெட்டிவைத்திருக்கும் எழுத்தை நாம் பார்க்கும்பொழுது அதில் உம்ரி ராஜா மோவாப் தேசத்தை ஜெயித்திருந்தான் என்றும், மேஷா அரசன் திரும்பவும் அதை ஜெயித்து தன் தேசத்தை விடுதலைசெய்தான் என்றும் அறிகிறோம். இதற்குப்பின் இஸ்ரவேல் ராஜா, யூதா ராஜா, ஏதோம் ராஜா ஆகிய மூவரும் மோவாபுக்கு விரோதமாய்ப் படையெடுத்தார்கள். அவர்கள் மோவாபின் தலை நகரத்தை முற்றுகை போடும்பொழுது அதின் ராஜா தன் முதற்பேறான குமாரனை கேமோஷ் என்னும் தேவதைக்கு நரபலியாக அக்கினியில் செலுத்தினான். 2 இரா $3^{27}$. இதைக் கண்ட மோவாபியர் தைரியங்கொண்டு இஸ்ரவேலரை ஜெயித்துத் துரத்தினார்கள். இதற்குப் பிறகு மோவாபியர் அடிக்கடி இஸ்ரவேலுக்கு விரோதமாய்ப் படையெடுத்தார்கள். 2 இரா $13^{20}$.

ஏறக்குறைய நூறுவருஷத்துக்குப் பிறகு கி—மு. 770-ம் வருஷத்தில் ஆமோஸ் தீர்க்கதரிசி மோவாபியர் செய்த கொடூரத்தைக் கண்டிக்கிறான். ஆமோ $2^{1}$. கி-மு. 700-ம் வருஷத்தில் அக்காலத்து மோவாபிய ராஜா அசீரிய ராஜாவாகிய சனகெரிப் ராஜாவுக்கு வரி செலுத்தினான். பாபிலோனிய ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதர்களுக்கு விரோதமாய் வந்தபொழுது மோவாபியர் அவனுக்கு உதவிசெய்தார்கள். 2 இரா $24^{2}$. ஏசாயா செப்பனியா எரேமியா எசேக்கியேல் என்பவர்கள் மோவாபியரைப்பற்றிப் பேசினாலும், இவர்கள் சொல்லுகிறதிலிருந்து மோவாபியரின் சரித்திரத்தைப்பற்றிய விசேஷம் யாதும் தோன்றுகிறதில்லை. ஏசா 15–16 அதி. செப் $2^{8}$ எரே 48 அதி. எசே $25^{8}$.

மோவாபியர் கேமோஷ் தேவனையும் அஸ்தரோத் தேவியையும் வணங்கி, அவர்கள் ஆராதனையில் துன்மார்க்கமான அநேக காரியங்களைச் செய்தார்கள். எண் $25^{5}$ $31^{16}$ யோசு $22^{7}$ சங் $106^{28}$.

## ய

யகசியா. **Jahaziah, Jahzeiah.** எஸ்றா $10^{15}$.

யகாசியேல், யாகசியேல், யாகாசியேல். **Jahaziel**

1. பென்யமீன் கோத்திரத்தானாகிய இவன் தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன். 1 நாளா $12^{4}$.

2. ஒரு ஆசாரியன். 1 நாளா $16^{6}$.

3. ஒரு லேவியன். 1 நாளா $23^{19}$.

4. யோசபாத்தின் காலத்திலிருந்த ஓர் லேவியன். 2 நாளா $20^{14}$.

5. சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்தவன். எஸ்றா $8^{5}$.

யக்ஷான். **Jokshan**, ஆபிரகாமுக்கும் கேத்தூராளுக்கும் பிறந்தவன். ஆதி $25^{2}$.

யக்மேயாம். **Jokmeam**. 1 இரா $4^{12}$ யோக்மேயாம் காண்க.

யக்மாய். **Jahmai**. இசக்கார் கோத்திரத்தான். 1 நாளா $7^{2}$.

யக்லேல். **Jahleel**. செபுலோனின் மூன்றாம் குமாரன். ஆதி $46^{14}$ எண் $26^{25}$.

யசனியா, யசினியா. **Jaazaniah**.

1. கெதலியாவினிடம் வந்த இராணுவசேர்வைக்காரன். 2 இரா $25^{23}$. = யசினியா. எரே $40^{8}$.

2. ரேகாபியரில் ஒருவன். எரே $35^{3}$.

3 விக்கிரக ஆராதனை செய்த ஒரு மூப்பன். எசே $8^{11}$.

4. எசேக்கியேல் கண்டித்த ஒருவன். எசே $11^{1}$.

யசினியா. **Jazaniah**. யசனியா காண்க.

யசுபி-லெகேம். **Jashubi-lehem.** ஒரு யூதன். 'பெத்லெகேமுக்குத் திரும்பி வருகிறது' என்பது இப்பதத்தின் அர்த்தம். 1 நாளா $4^{22}$.

யஸ்பி. **Jasper.** யாத் $28^{20}$ $39^{13}$ எசே $28^{13}$. இப்பெயர்கொண்ட இரத்தினம், பச்சை, இந்திரநீலம், வெள்ளை, சிவப்பு, மஞ்சள் முதலிய பல வர்ணங்களுள்ளதாயிருக்கும்.

யதனியேல். **Jathniel**. ஒரு லேவியன். 1 நாளா $26^{2}$.

யதார்த்தம். **Truth**. ஏசா $11^{4}$. சத்தியம். பொய் காண்க.

யதுவா. **Jaddua**.

1. உடன்படிக்கைக்கு முத்திரை போட்டவன். நெகே $10^{21}$.

2. ஒரு பிரதான ஆசாரியன். நெகே $12^{11}$.

யநோகா. **Janoah**. எப்பிராயீம் கோத்திர நாட்டின் எல்லையிலுள்ள ஒரு ஊர். யோசு $16^{6}$.

யந்நேயும் யம்பிரேயும். **Jannes and Jambres**. இவ்விரு பெயரும் மோசேக்கு விரோதமாய் எதிர்த்து நின்ற சூனியக்காரர் என்று பரி. பவுல் சொல்லுகிறான். யாத் $7^{11}$ 2 தீமோ $3^{8}$. யூதருடைய பாரம்பரியங்களில் இப்பெயர்கள் காணப்படுகின்றன. இவர்கள் பிலேயாமின் புத்திரர் என்றும், சிவந்த சமுத்திரத்தில் எகிப்தியரோடு அமிழ்ந்துபோனவர்கள் என்றும், பொற்கன்றுக்குட்டியைச் செய்யும்படி ஆரோனை ஏவினதினிமித்தம் கொலை செய்யப்பட்டவர்களென்றும் எபிரெயர்கள் பலவிதமான அபிப்பிராயங்களைக் கொண்டார்கள்.

யப்பியா. **Japhia**.

1. யோசுவா ஜெயித்த லாகீசின் ராஜா. யோசு $10^{3}$.

2. தாவீதின் புத்திரரில் ஒருவன். 2 சாமு $5^{14}$.

3. செபுலோன் கோத்திர நாட்டிலுள்ள ஓர் ஊர். யோசு $19^{12}$.

யப்லெத்தியர். **Japhletites**. நமக்குத் திட்டமாய்த்தெரியாத ஒரு வம்சம். யோசு $16^{3}$.

யப்லேத். **Japhlet**. ஆசேர் கோத்திரத்தைச் சேர்ந்தவன். 1 நாளா $7^{32}$.

யப்னே. **Jabneh**. 2 நாளா $26^{6}$. யாப்னியேல் காண்க.

யம்லேகு. **Jamlech**. சிமியோன் கோத்திரத் தலைவன். 1 நாளா $4^{34}$.

யரேஸியா. **Jareshiah**. பென்யமீன் கோத்திரத்தான். 1 நாளா $8^{27}$.

யர்கா. **Jarha**. ஒரு எகிப்தியன். சேசானுக்கு இவன் அடிமையாயிருந்தபோது சேசான் தன் மகளை இவனுக்கு விவாகம் செய்துகொடுத்தான். 1 நாளா $2^{34}$.

யர்மூத். **Jarmuth**.

1. தென் யூதாவிலுள்ள கானானியர்களுக்கு ஒரு தலை நகரம். யோசு $10^{3}$ $15^{35}$.

2. இசக்கார் நாட்டில் லேவியர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த ஒரு ஊர். யோசு $21^{29}$.

=ரெமேத். யோசு $19^{21}$.

=ராமேத். 1 நாளா $6^{73}$.

யவீரு. **Jairus**. புதிய ஏற்பாட்டில் சொல்லப்படும் 'யவீரு' என்பதும் பழைய ஏற்பாட்டிலுள்ள 'யாவீர்' என்பதும் ஒரே பதம்தான். யவீரு ஜெப ஆலயத்தலைவனாயிருந்தான். இறந்துபோன இவனுடைய மகளை இயேசு உயிரோடெழுப்பினார். மாற் $5^{22}$ லூக் $8^{41}$.

யனோவா. **Janoah**. நப்தலிக் கோத்திரத்தைச் சேர்ந்த மலைநாட்டிலுள்ள ஒரு கிராமம். 2 இரா $15^{29}$.

யன்னா, யன்னாய். **R. V. Jannai, A. V. Janna**. இயேசுவின் முன்னோர்களில் ஒருவன். லூக் $3^{24}$.

## யா

யாகசா, யாகாஸ், யாசா. **Jahaz**. ரூபன் கோத்திர நாட்டில் லேவியருக்கென்று ஏற்படுத்தப்பட்ட ஒரு ஊர். எண் $21^{23}$ யோசு $13^{18}$ நியா $11^{20}$ ஏசா $15^{4}$ எரே $48^{21}$.

யாகசியேல். **Jahaziel**. யகாசியேல் காண்க.

யாகாசியேல். **Jahaziel**. யகாசியேல் காண்க.

யாகாத். **Jahath**.

1. யூதாவின் பேரன். 1 நாளா $4^{2}$.
2. லேவியின் சந்ததியான். 1 நாளா $6^{20}$.
3. சீமேயின் மகன். 1 நாளா $23^{10}$.
4. செலெமோத்தின் மகன். 1 நாளா $24^{22}$
5. ஒரு லேவியன். 2 நாளா $34^{12}$.

யாகின், யாகீன், யாக்கீன். **Jachin**.

1. சிமியோனின் நாலாம் மகன். ஆதி $46^{10}$ எண் $26^{12}$.
2. சிறையிருப்புக்குப் பிற்பாடு ஒரு ஆசாரியன். 1 நாளா $9^{10}$ நெகே $11^{10}$.
3. ஒரு லேவியன். 1 நாளா $24^{17}$.
4. ஒரு வெண்கலத்தூண். தூண் காண்க.

யாகீன். **Jachin**. யாகின் காண்க.

யாகூர். **Jagur**. தென் யூதாவிலுள்ள ஓர் ஊர். யோசு $15^{21}$.

யாகேல். **Jael**. கேனியனாகிய ஏபேரின் மனைவி. கேனியர்கள் இஸ்ரவேலரோடும் கானானியரோடும் சிநேகிதராயிருந்தார்கள். இவர்கள் கானானியரோடு சிநேகமாயிருந்ததினிமித்தம், சிசெரா என்பவன் பாராக்கினால் ஜெயிக்கப்பட்டபோது சமுசயமின்றி ஏபேரின் கூடாரத்திற்குத் தப்பியோடி, யாகேலின் அழைப்புக்கு இணங்கி, ஏபேரின் கூடாரத்திலே ஒளித்துக்கொண்டான். அப்போது யாகேல் சதி

யோசனை செய்து இவனைக் கொன்றாள். நியா $4^{21}$. இவள் இவ்விதத் துரோகம் செய்தது குற்றமல்ல என்று யார் சொல்லக்கூடும்? ஆனால் இச்செய்கை எபிரெயர்களுக்குப் பெரிய நன்மையை உண்டுபண்ணினதினால், தெபோராள் இவளைப்பற்றிப் புகழ்ந்து பாடுகிறாள். நியா $5^{24}$. இதேவிதமாய்ப் பிற்காலத்திலுள்ள யூதர்கள் யூதீத் செய்த விஷயத்தைப் புகழ்ந்தார்கள். ஆனால் தஞ்சமென்று வந்த அதிதிக்குத் துரோகம் செய்வது இயேசுவின் போதனைக்கு முற்றிலும் விரோதமே.

யாகோபா. **Jaakobah.** 1 நாளா $4^{36}$.

யாக்கான். **Jakan.** [விவேகமுள்ளவன்.] = அக்கான். ஆதி $36^{27}$ உபா $10^{6}$. ஓரியர்களில் ஒரு வமிசம்.

யாக்கான். **Jachan.** [துன்பப்படுத்துகிறவன்.] காத் கோத்திரத்தலைவன். 1 நாளா $5^{13}$.

யாக்கிம். **Jakim.**

1. பென்யமீன் கோத்திரத்தான். 1 நாளா $8^{19}$.

2. ஒரு ஆசாரியன். 1 நாளா $24^{12}$.

யாக்கீன். **Jachin.** யாகீன் காண்க.

யாக்கே. **Jakeh.** நீதி 30-ம் அதிகாரத்தில் எழுதப்பட்ட வாக்கியங்களை உரைத்த ஆகூரின் தகப்பன். நீதி $30^{1}$.

யாக்கோபித்தர். **Jacobites.** முற்காலத்தில் கிரேக்க சபைக்கும் லத்தீன் சபைக்கும் வித்தியாசம் ஏற்பட்டபோது, ஒவ்வொரு சபையிலும் பல பிரிவினைகள் இருந்தன. கிரேக்க சபையிலுள்ள ஒரு பிரிவாருக்கு 'யாக்கோபித்தர்' என்று பெயர். இவர்களுக்கும் நெஸ்டோரியருக்கும் கொஞ்சம் பேதம் மாத்திரம் உண்டு. இவர்கள் சீரியா நாட்டில் வசித்தார்கள். அப்போஸ்தலனாகிய யாக்கோபு அந்தப் பாகத்திலுள்ள சபைக்குத் தலைவனாயிருந்ததினிமித்தம் 'யாக்கோபித்தர்' என்னும் பெயர் இவர்களுக்கு வழங்கிற்று. எகிப்திலுள்ள காப்த்ஸ் (*Copts*) என்ற வகுப்பார் இவர்களைப்போலொத்தவர்கள்.

இவர்கள் இயேசுகிறிஸ்துவின் தெய்வீகத்துவமும் மனுஷீகத்தன்மையும் ஒன்றோடொன்று கலந்து, யாதொரு வித்தியாசமுமின்றி ஒரே தன்மையுள்ளதாயிருக்கிறதென்று சாதித்தார்கள். இந்தக் கொள்கைக்காரருக்கு 'ஒரே தன்மையுடையவர்' என்று அர்த்தங்கொண்ட கிரேக்கப்பதமாகிய (*Monophysites*) மானோபிசைட்ஸ் என்னும் பட்டப்பெயர் வழங்கிற்று.

யாக்கோபினுடைய கிணறு. **Jacob's Well.** சமாரியா நாட்டிலுள்ள சீகாரும், சீகேமும் ஒரே ஊர்தான் என்று தோன்றுகிறது. இதற்குச் சமீபத்திலுள்ள கிணறு யாக்கோபினுடைய கிணறு என்பதற்குச் சந்தேகமில்லை. இது கெரிசீம் மலையடிவாரத்திலிருக்கிறது. பூர்வீகத்தில் இது மகா ஆழமாயிருந்தாலும், தற்காலத்தில் ஜனங்களுடைய அஜாக்கிரதையினால், இதில் கல் மண் முதலிய குப்பைகள் விழுந்ததினால் 75 அடி ஆழமாய்மாத்திரம் இருக்கிறது. இதின் அகலம் 7½ அடி, இக்கிணற்றின் அருகே இயேசு ஒரு சமாரிய ஸ்திரீக்குப் போதகம் செய்தார். ஆதி $33^{18}$ யோசு $24^{32}$ யோவா $4^{5}$.

யாக்கோபு. **Jacob.**

1. ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் பிறந்த மகன். வேதாகமத்தில் இவனுடைய பெயருக்கு 'வழியில் நடக்கிறவனை இடறச்செய்கிறவன்' அல்லது 'ஓடிப்போகிறவனுடைய குதிங்காலைப் பிடிக்கிறவன்' என்று அர்த்தம். ஆதி $25^{26}$ $27^{36}$ ஓசி $12^{3}$. இவனுடைய சரித்திரம் ஆதி $25^{21}$-$50^{13}$ மட்டும் சொல்லியிருக்கிறது. இவனுடைய பெற்றோர் செய்த ஜெபத்தின் பலனாக இவன் பெயர்செபாவுக்குக் கிட்டப் பிறந்தான். ஆதி $25^{21}$. இவனோடேகூட இரட்டைப் பிள்ளைகளாக பிறந்த ஏசாவுக்கும் இவனுக்கும் உள்ள சண்டை ஏதோமுக்கும் இஸ்ரவேலுக்கும் உள்ள சண்டைக்கு முன்னடையாளம். ஆதி $25^{22}$ ரோம $9^{11}$. யாக்கோபு ஆடுமாடுகளை மேய்க்கும் மேய்ப்பன். ஏசா யுத்தத்தில் தைரியசாலி. யாக்கோபு ஏசாவை மோசம்பண்ணி அவனுடைய சிரேஷ்டபுத்திர சுவிகாரத்தைப் பெற்றான். ஆதி 27 அதி. ஈசாக்கு கானான் தேசத்தையும் அதிலிருக்கிற ஜனங்களின்மேல் அதிகாரத்தையும் யாக்கோபுக்குக் கொடுத்தான். ஏசாவோ சாக்கடலுக்குத் தென் தேசத்திலுள்ள வனாந்தரத்திலே அலைந்து திரியவேண்டியிருந்தது. ஏசாவின் கோபத்துக்கு யாக்கோபு பயந்து, அவ்விடத்தைவிட்டு ஓடி பெத்தேலிலே தேவதரிசனத்தை அடைந்ததினாலே அங்கே அவன் யேகோவாவை வணங்கி, அவர் தன்னைக் காப்பாற்றும்படி அங்கே ஒரு பிரதிக்கினை செய்தான். ஆதி 28 அதி. இவன் இங்கே யேகோவாவுக்குத் தன்னைப் பிரதிஷ்டை செய்த விஷயம் இவனுடைய ஜீவிய சரித்திரத்தில் கவனிக்கவேண்டிய மூன்று விசேஷ காரியங்களில் ஒன்று.

யாக்கோபு இவ்விதமாய் யேகோவாவை வணங்கினாலும் உலக விஷயங்களில் முன் போலவே கொஞ்சம் பிசகாய் நடந்தான்.

யாக்கோபு தன் தாயின் சகோதரனுகிய லாபான் வீட்டுக்கு வரும்போது லாபான் தனது இரண்டு குமாரத்திகளையும் இவனுக்கு மனைவிகளாக கொடுத்த விஷயத்தில் இவனை வஞ்சித்துப் பதினலு வருஷக்காலமாக தனக்கு வேலை செய்யும்படி கட்டாயம் பண்ணினபோது, யாக்கோபு அதற்குப் பதிலாக தந்திரம்பண்ணி ஆடுமாடுகளை விர்த்திசெய்கிறவிஷயத்தில் அதிக லாபம் சம்பாதித்தான். இது சம்பந்தமாக இவனுக்கும் இவன் மாமனுக்கும் உண்டான விரோதத்தினல் யாக்கோபு அவ்விடம் விட்டோடும்பொழுது இவன் மனைவியாகிய ராகேல் லாபானுடைய குலதேவதைகளின் விக்கிரகங்களைத் திருடினதினலே இவனேடு சண்டைசெய்யும்படி லாபானும் அவன் பந்துக்களும் படையெடுத்து வந்தார்கள். யாக்கோபோ அவர்களுடைய கோபத்தைத் திருப்பி அவர்கள் தன்னேடே உடன்படிக்கை பண்ணும்படி செய்து அவ்வுடன்படிக்கைக்குச் சாட்சியாக ஒரு கற்குவியலை உண்டாக்கினன். ஆதி 30–31 அதி. யாக்கோபு திரும்பவும் பிரயாணம் பண்ணிக் கானன் தேசத்து எல்லைகளுக்குள்ளே வந்தவுடனே யேகோவாவின் தூதர்கள் இவனைச் சந்தித்தார்கள். ஆதி 32[1]. அதேசமயத்தில் இவனல் வஞ்சிக்கப்பட்ட ஏசா நானூறு போர்வீரர்களுடனே வருகிறதாக கேள்விப்பட்டான். இக்காலத்தில் யாக்கோபு ஏசாவை சமாதானத்துக்கு ஏவும்படி பிரயாசப்பட்டு இராத்திரியில் யாப்போக்கு என்னும் சிற்ருற்றின் கரையில் தனிமையாய் நடக்கும்பொழுது தேவதூதன் ஒருவன் வந்து இவனை மல்ல யுத்தத்தில் ஜெயித்தும், இவனுக்கு யேகோவாவினுடைய ஆசீர்வாதத்தைக் கொடுத்தான். அக்காலமுதல் யாக்கோபு இஸ்ரவேல் என்னும் புதுப் பெயரைப் பெற்றுக்கொண்டான். இஸ்ரவேல் என்பதற்கு 'கடவுள் முயலுகிருர்' அல்லது 'கடவுள் போராடுகிருர்' என்று அர்த்தம். இஸ்ரவேலரோ வழக்கமாய் இந்தப் பதத்துக்கு 'கடவுளுடனே முயலுகிறவன்' அல்லது 'கடவுளுடனே போராட்டஞ் செய்கிறவன்' அல்லது 'தன் முயற்சியினலே கடவுளிடத்தில் ஆசீர்வாதம் பெறுகிறவன்' என்பது அர்த்தம் என்று நினைத்தார்கள். இந்தக் காலம் முதல் யாக்கோபு தந்திரங்களையெல்லாம் நீக்கி பயபக்தியுடனே யேகோவாவை வணங்கி முழு மனதோடே அவரைச் சேவித்துவந்தான். இதுதான் யாக்கோபின் ஜீவிய சரித்திரத்தில் நாம் கவனிக்கவேண்டிய மூன்று முக்கிய விஷயங்களில் இரண்டாவது விஷயம்.

அடுத்த நாளில் இவன் ஏசாவைப் பார்த்து அவனேடு சமாதானம்பண்ணினன். இதற்குப்பின் யாக்கோபு யோர்தான் நதிக்குக் கிழக்கே சுக்கோத்து என்னும் இடத்திலே சில வருஷக்காலம் தங்கினன் என்று தோன்றுகிறது. சுக்கோத்து என்னும் இடத்தைவிட்டுப் பெயர்ந்து யோர்தான் நதியைத் தாண்டி சீகேம் என்னும் ஊருக்கு வந்து, இங்கே சில வருஷக்காலம் குடியிருந்து இதில் ஒரு பலிபீடங் கட்டினன். ஆதி 33[20]. இந்த இடத்தில் இவன் ஒரு கிணற்றையும் வெட்டினன். யோவா 4[6]. இங்கே சீகேம் என்னும் அந்நாட்டுத் தலைவன் யாக்கோபின் மகளாகிய தீனளைக் கற்பழித்ததினலே சீகேமியருக்கும் யாக்கோபின் புத்திரருக்கும் சண்டையுண்டாயிற்று. ஆதி 34 அதி. யாக்கோபு அங்கு நேரிட்ட கலகத்துக்குப் பயந்து இருபது மைல் தூரம் பிரயாணம்பண்ணி பெத்தேலுக்குத் திரும்பி வந்தான். பெத்தேலிலே இவன் யேகோவாவை வணங்க எண்ணங்கொண்டதினலே அங்கே போகும் முன்னே தன் வீட்டாரிடத்தில் இருந்த அந்நிய தேவதைகளின் விக்கிரகங்களையெல்லாம் ஒரு கருவாலி மரத்தின் கீழ்ப் புதைத்துவிட்டான். இவ்விதமாய் யாக்கோபு பெத்தேலிலே யேகோவாவை மாத்திரம் தொழுதுகொண்டான் என்று தோன்றுகிறது. பெத்தேலிலே இவன் பலிபீடங் கட்டினபின்பு அங்கே தேவதரிசனம் அடைந்து, மறுபடியும் யேகோவாவின் ஆசீர்வாதத்தைப் பெற்ருன். ஆதி 35[7]. பெத்தேலிலிருந்து எப்பிராத்தாவுக்குப் போனபோது அங்கே ராகேல் பிரசவகாலத்தில் இறந்துபோனள். ஆதி 35[19]. இங்கேயிருந்து, ஆட்டுமந்தையைக் காப்பாற்றும்படி கட்டப்பட்ட சிறு கோட்டையாகிய ஏதேர் என்னும் ஸ்தலத்துக்குப் போனன். கடைசியாக இவன் எப்பிரோனின் பக்கத்திலிருந்த மம்ரே என்னும் ஊருக்கு வந்து அவ்விடத்திலே தங்கினன். இவன் தகப்பனுகிய ஈசாக்கு இறந்த சமயத்தில் ஏசா அடக்கத்துக்கு வந்தபோது இரண்டு சகோதரரும் கடைசியாக ஒருவர் முகத்தை ஒருவர் கண்டார்கள். ஆதி 35[25].

ஆதியாகமத்தை எழுதினவன் இக்கால முதல் யாக்கோபின் சரித்திரத்தை அவ்வளவு விசேஷமாய் எழுதாமல் யோசேப்பைக் குறித்தே விரிவாய்ப் பேசிக்கொண்டு போகிருன். யோசேப்பின் சரித்திரத்தைச் சொல்லுகிறதற்கு இது இடம் அல்ல. ஆனல் கஷ்டகாலத்தில் விருத்தாப்பியனை யாக்கோபு தன் குடும்பத்தாருடனே

கானான் தேசத்தை விட்டு பிழைப்புக்காக எகிப்து தேசத்திலுள்ள கோசேன் என்னும் நாட்டிற்குப் போனது யாக்கோபின் ஜீவிய சரித்திரத்தில் நாம் கவனிக்கவேண்டிய மூன்று முக்கிய காரியங்களில் மூன்றாவது காரியம், எனென்றால் இப்படி யாக்கோபு எகிப்து தேசத்துக்குள் நுழைந்தநிமித்தம் இஸ்ரவேலர் படிப்படியாய் எகிப்தியர்களின் அதிகாரத்துக்குள் அமைந்து அடிமைத்தனத்தில் அகப்பட்டார்கள். ஆதி $46^{1}$ $47^{6}$ உபா $26^{5}$ அப் $7^{14}$.

யாக்கோபு எகிப்துதேசத்தில் 17 வருஷம் வாசஞ்செய்து தன் பிள்ளைகளை ஆசீர்வதித்து, பூரண வயதில் இறந்தான். ஆதி 49 அதி. யோசேப்பு யாக்கோபின் பிரேதத்தை வாசனைத் திரவியத்தால் பக்குவம் பண்ணி, கானான் தேசத்துக்குக் கொண்டு போய் அங்கே மக்பேலா என்னும் கெபியிலே அடக்கஞ்செய்தான்.

யாக்கோபின் சரித்திரமனைத்தையும் நாம் விசாரித்தால் இவனிடத்தில் நற்குணங்களும் தீக்குணங்களும் கலந்திருந்தன என்றும், இவன் ஆரம்பத்தில் நீதி நியாயத்தைக் கவனிக்காமற்போனாலும் பல கஷ்டங்களுக்குள்ளாகி யேகோவாவினுடைய அருளை அடைந்து படிப்படியாய்க் குணசீலனான் என்றும் நாம் சொல்லக்கூடும். இவனிடத்தில் குற்றம் அதிகமிருந்தாலும் கடவுள் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிய தமது திருச்சித்தத்தின்படி இவனை நடத்தினார்.

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசன ஆகமங்களிலே யாக்கோபு என்னும் பெயர் இஸ்ரவேல் புத்திரராகிய ஜனத்தைக் குறிக்கும். சங் $14^{7}$ $79^{7}$ ஏசா $9^{8}$ $44^{1}$ எரே $30^{10}$ ஆமோ $6^{8}$.

புதிய ஏற்பாட்டிலே கடவுளினுடைய அதிகாரத்தையும் விசுவாசத்தின் வல்லமையையும் குறிக்கும்படி யாக்கோபு என்னும் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. ரோம $9^{13}$ எபி $11^{9.21}$.

2. மரியாளின் புருஷனாகிய யோசேப்பின் தகப்பன். மத் $1^{15}$.

யாக்கோபு. **James.**

1. செபெதேயுவின் மகனாகிய யாக்கோபு பன்னிரு அப்போஸ்தலரில் ஒருவன். யோவானுடைய அண்ணன். இவர்களுடைய தகப்பன் கலிலேயாக்கடலிலே மீன்பிடிக்கிற செம்படவன். இவர்களுக்குக் கூலியாட்கள் இருந்ததினால் இவர்கள் ஸ்திதிவந்தர் என்று தோன்றுகிறது. மாற் $1^{20}$. இவர்களின் தாய் இயேசுவின் தாயாகிய மரியாளின் சகோதரியாகிய சலோமியாகையால் இவனும் இயேசுவும் இனத்தார். மத் $27^{56}$ மாற் $1^{20}$ யோவா $19^{25}$. யோவான், யாக்கோபு, சீமோன், அந்திரேயா ஆகிய இவர்கள் வேலையில் கூட்டாளிகள். லூக் $5^{10}$ மத் $4^{21}$. தேவனுடைய ராஜ்யமாகிய சுவிசேஷத்தைக் கூறும்படி இயேசு இவனை யோவானோடு அனுப்பினார். மத் $10^{2}$ மாற் $3^{17}$ $6^{7}$ லூக் $6^{14}$. இவர்கள் ஆத்திர குணமும் வாய்ச்சாதுரியமும் உடையவர்களாயிருந்ததால் இயேசு இவர்களுக்கு 'பொவனெர்கேஸ்'. என்று பெயரிட்டார். மாற் $3^{17}$. இவர்களுக்கும் இயேசுவுக்கும் விசேஷித்த சிநேகம் உண்டு. ஆனாலும் யோவானைப்போல இவன் அத்தனை விசேஷித்த சிநேகிதன் அல்ல என்று சொல்ல வேண்டும். ஏரோது அகிரிப்பா இவனை ரத்தசாட்சியாய்க் கொன்றுபோட்டதினால் இவன் சபைவிஷயத்தில் விசேஷமான யாதொன்றும் செய்யவில்லை. அப் $12^{2}$.

2. அல்பேயுவின் மகனாகிய யாக்கோபு. இவனுக்குச் சின்ன யாக்கோபு என்றும் பெயர் வழங்கிவந்ததினால் இவன் செபெதேயுவின் மகனாகிய யாக்கோபைவிடக் கொஞ்சம் குள்ளனாயிருந்தான் என்று தோன்றுகிறது. மாற் $15^{40}$. இவன் தகப்பனுக்கு மறுபெயர் கிலயோப்பா; இவன் தாயின் பெயர் மரியாள்; இவன் சகோதரன் யோசே. ஒருவேளை இவன் தகப்பனாகிய அல்பேயுவும் லேவியின் தகப்பனாகிய அல்பேயுவும் ஒரே ஆளாயிருக்கலாம். அப்படியானால் இவனும் லேவியும் சகோதரர். மாற் $15^{40}$ $16^{1}$.

3. இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு. கிறிஸ்து உயிர்த்தெழுவதற்குமுன் இவன் அவரை நம்பவில்லை. இயேசு இவனுக்குத் தரிசனமானார். யோவா $7^{5}$ 1 கொரி $15^{7}$. எருசலேம் சபைக்கு இவன்தான் தலைவன். பரி. பவுல் குணப்பட்டு மூன்று வருஷத்துக்குப்பின் எருசலேமுக்குப் போனபோது யாக்கோபைச்சந்தித்தான். கலா $1^{18}$. பதினாலு வருஷத்துக்குப்பின், சபையில் பிரவேசிக்கிற அந்நியர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி நடக்கவேண்டுமோ இல்லையோ என்னும் விஷயத்தைப்பற்றித் தர்க்கஞ்செய்யுஞ் சமயத்தில், யாக்கோபு அச்சங்கத்தலைவனாயிருந்து அந்த விஷயத்தில் யாவரும் அங்கிகரிக்கக்கூடிய தீர்மானம் பண்ணினான். அப் $15^{4}$ கலா $2^{1}$. ஏறக்குறைய கி–பி. 57–ம் வருஷத்தில் பரி. பவுல் தனது மூன்றாம் பிரயாணத்தை முடித்து எருசலேமுக்கு வரும்போது அவன் பரி. யாக்கோபு முதலியவர்களுக்குத் தான்

செய்த யாவற்றையும் தெரிவித்தான். அப் $21^{18}$. இந்த யாக்கோபு எப்போதும் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி திட்பநுட்பமாய் நடந்து திராக்ஷாசம் குடியாமலும் மாம்சம் புசியாமலும் இருந்து, தனது முழங்கால்கள் ஒட்டகத்தின் முழங்கால்போல மரத்துப் போகும்வரைக்கும் முழங்காலூன்றி எப்பொழுதும் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தபடியினால் ஆதிக்கிறிஸ்தவர்கள் இவனுக்கு ‘நீதிமான்’ என்று பெயரிட்டார்கள். அவர்களுடைய பாரம்பரியத்தின்படி வேதபாரகரும் பரிசேயரும் இவனைத் தேவாலயத்தின் உப்பரிகையிலிருந்து தள்ளி, இவன்மேல் கல்லெறிந்து இவனை அடித்து இவ்விதமாய் இவனை ரத்தசாட்சியாகக் கொன்றுபோட்டார்கள். இந்த யாக்கோபு யாக்கோபின் நிருபத்துக்கு ஆக்கியோன் என்று நினைக்கவேண்டும்.

4. அப்போஸ்தலனாகிய யூதாவின் தகப்பன். லூக் $6^{16}$. தமிழ் வேதாகமத்திலும் அங்கிலேய A. V. வேதாகமத்திலும் காணப்படுகிற சகோதரன் என்பதற்குப் பதிலாக இந்த வசனத்தில் பூர்வீக காலத்துக் கை பிரதிகளில் ‘மகன்’ என்பது எழுதப்பட்டிருக்கிறது. யூதா $1^{1}$.

யாக்கோபு எழுதின நிருபம். **The Epistle of James**.

1. ஆக்கியோன். இதன் ஆக்கியோன் தன்னைத் தேவனுக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரன் என்று சொல்லுகிறதைத் தவிர தன்னைக்குறித்து வேறொன்றும் சொல்லாதபடியால் இவன் இன்னான் என்று திட்பநுட்பமாய்ச் சொல்லுவது நம்மாலே முடியாதகாரியம். ஆனால் வேதசாஸ்திரிகள் பெரும்பாலும் இவன் இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு என்றே நினைக்கிறார்கள். இந்த யாக்கோபு எருசலேம் பட்டணத்திலும் மற்ற இடங்களிலுமுள்ள கிறிஸ்தவர்களுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தவனானதினாலும், இவனே இந்நிருபத்தை எழுதினான் என்று அவர்கள் தெரிந்துகொண்டதினாலும், இவன் தன்னைக் குறித்து வேறொன்றும் சொல்லவேண்டியது அவசியமில்லை. மற்றப்படி இவன் தன்னைக்குறித்து ஏதாவது சொல்லியிருப்பான் என்று நினைக்கிறது நியாயந்தான்.

2. காலம். இவன் கி–பி. 62–ம் வருஷத்தில் ரத்தசாட்சியாய் மரித்ததினாலே இந்த நிருபம் அதற்குமுன்னே எழுதப்பட்டிருக்கவேண்டும். வேதசாஸ்திரிகளில் சிலரோ நமக்குத் தெரியாத இன்னொரு யாக்கோபு இதை யெழுதினதினாலே இது பிந்தின காலத்தில் எழுதப்பட்டது என்று நினைக்கிறார்கள். ஆனால் ஆதிக்கிறிஸ்தவ பிதாக்கள் எழுதிய நூல்களில் இதிலிருந்து எடுக்கப்பட்ட சில வாக்கியங்கள் உண்டு. ஏறக்குறைய கி-பி. 220–ம் வருஷத்தில் ஒரிகேன் (*Origen*) முதலாவது இதை வேதாகமமாக சொல்லுகிறான். ஐசேபியு (*Eusebius*) ஏறக்குறைய கி–பி. 330–ம் வரு தனக்கு முந்தினவர்கள் இதைக்குறித்துக் கொஞ்சம் சந்தேகப்பட்டார்கள் என்று சொல்லியும், தான் இதை வேதாகமமாகக் கூறுகிறான். நாம் இதை வாசிக்கும்பொழுது இது கிறிஸ்தவசபை உண்டான முதல் வருஷங்களில் எழுதின நூல் என்றும், இது எழுதப்படும் காலத்தில் கிறிஸ்தவர்கள் யூதகொள்கைக்கு இசைந்த பல நோக்கங்களைக் கைக்கொண்டதினால் இது ஆதிக்கிறிஸ்தவ சபைக்கு எழுதப்பட்ட நிருபம் என்றும் தீர்மானமாய்ச் சொல்லக்கூடும்.

3. யாக்கோபும், பவுலும். ரோமருக்கும் கலாத்தியருக்கும் பரி. பவுல் எழுதின நிருபங்களில் சொல்லப்பட்ட சில விஷயங்கள் இந்த நிருபத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் அதின்படி செய்கிறவர்கள் (யாக் $1^{22}$ $4^{11}$ ரோம $2^{13}$), சோதனை துன்பம் இவற்றின் விபரம் (யாக் $1^{2}$ ரோம $5^{3}$), தங்களைக் குறித்து மேன்மை பாராட்டுகிறவர்கள் (யாக் $4^{11}$ ரோம $2^{1}$ $14^{4}$), ஒழுங்குள்ள சாந்தம் (யாக் $1^{21}$ $4^{1}$ ரோம $7^{23}$ $13^{12}$), ஆபிரகாமின் விசுவாசம் (யாக் $2^{21}$ ரோம $4^{2}$) ஆகிய இவற்றைப்பற்றி இருவரும் பேசுகிறார்கள். ஆனால் பவுல் யாக்கோபின் நிருபத்தைப் பார்த்திருப்பான் என்றாவது யாக்கோபு பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தைப் பார்த்திருப்பான் என்றாவது நாம் இதினிமித்தம் சொல்லக்கூடாது. ஏனெனில் இவவிரண்டு அப்போஸ்தலர்களும் தங்களுடைய வெவ்வேறான நோக்கங்களின்படி சகல காரியங்களையுங்குறித்துப் புத்திபோதனைகளைக் கூறுகிறார்கள்.

திருஷ்டாந்தமாக பரி. பவுலும் பரி. யாக்கோபும் விசுவாசத்தைப்பற்றி விபரமாய் எழுதுகிறார்கள். யாக் $2^{17-21}$ ரோம $3^{28}$ 4 அதி. கலா $2^{16}$. இவர்கள் இருவரும் விசுவாசத்துக்கு ஆபிரகாமை உவமையாகச் சொல்லுகிறார்கள். ஆனால் பரி. யாக்கோபின் அபிப்பிராயத்தின்படி ஆபிரகாம் விசுவாசத்தினாலே அல்ல கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டான் என்றும்; பரி. பவுலின் அபிப்பிராயத்தின்படி ஆபிரகாம் கிரியைகளினாலே அல்ல விசுவாசத்தினாலே

நீதிமானாக்கப்பட்டான் என்றும் பார்க்கிறோம். இவ்விரண்டு அப்போஸ்தலரும் இப்படி ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசுகிறது தோற்றத்தில் மாத்திரமேயொழிய உள்ளபடி அவர்களுடைய மனதில் விரோதமில்லை. இதற்குக் காரணம் விசுவாசம் என்னும் பதத்தை இவ்விருவரும் வித்தியாசமான கருத்தோடு சொல்லுகிறார்கள். கடவுளைப்பற்றியும் அவர் செய்யும் காரியங்களைப்பற்றியும் அவருடைய சித்தத்தைப்பற்றியும் ஒருவன் மனதிலே ஏற்றுக் கொண்ட கொள்கையே விசுவாசம் என்பது யாக்கோபின் அபிப்பிராயம் யாக் $2^{19}$. பரி. பவுலின் அபிப்பிராயத்தின்படி இயேசுவின் மேல் வைக்கப்பட்ட பக்தியே விசுவாசம். இயேசுவை மனதிலே ஏற்றுக்கொள்ளல், இயேசுவுக்கென்று பாவத்துக்கு மரித்தல், அவருக்குள் ஜீவனுக்கென்று உயிர்த்தெழுதல் ஆகிய இவைகள் விசுவாசம் என்பதற்குள் அடங்கியிருக்கிறது. சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் யாக்கோபின் 'விசுவாசம்' கொள்கை, பவுலின் 'விசுவாசம்' பக்தி. ரோம $3^{22}$ $2^{6}$ கலா $2^{20}$ $5^{6}$. இந்த நிருபங்களை நாம் வாசித்து யாக்கோபு கிறிஸ்தவ சபைக்குக் கொடுத்த புத்திபோதனைகள் நல்லவைகளும் ஒழுங்குக் கேற்றவைகளுமாயிருந்தன என்று சொல்லக்கூடுமானால், பரி. பவுல் இந்த விஷயங்களைக்குறித்து ஆழ்ந்து யோசித்து, பரி. யாக்கோபைப் பார்க்கிலும் விசேஷமானவைகளைப் போதிக்கிறான் என்று சொல்வது அவசியம்.

4. யாக்கோபும் புதிய ஏற்பாட்டின் மற்ற நூலாசிரியரும். இந்த நிருபத்தில் நமது ஜீவியத்தின் அற்பத்தன்மையைப்பற்றியும் பாவத்திலிருந்து மனிதர்களைத் திருப்புவதைப்பற்றியும் சொன்ன வாக்கியங்களுக்கும் பரி. பேதுருவும் எபிரெயருக்கு நிருபம் எழுதினவனும் கூறிய வாக்கியங்களுக்கும் ஒற்றுமை இருக்கிறது. யாக் $1^{10}$ $5^{19}$ 1 பேது $1^{24}$ $4^{8}$ யாக் $2^{25}$ எபி $11^{31}$. இதே நோக்கத்துடனே சுவிசேஷகர்களும் பரிசுத்த யாக்கோபும் நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் (யாத் $1^{22}$ மத் $7^{26}$ யோவா $13^{17}$), தங்களைக்குறித்து மேன்மை பாராட்டினவர்கள் (யாக் $4^{11}$ மத் $7^{1}$), லௌகீக ஆசை (யாக் $1^{10}$ $2^{5}$ மத் $6^{19}$ லூக் $6^{24}$), ஜெபம் (யாக் $1^{5}$ மத் $7^{7}$ மாற் $11^{23}$), தரித்திரம் (யாக் $2^{5}$ லூக் $6^{20}$), தாழ்மை (யாக் $4^{10}$ மத் $23^{12}$), மரமும் கனியும் (யாக் $3^{11}$ மத் $7^{16}$) ஆகிய இவைகளைப்பற்றிச் சொன்ன வாக்கியங்களைக் கவனித்த சிலர் பரி. யாக்கோபு சுவிசேஷங்களைப் பார்த்து எழுதியிருப்பான்; அல்லது சுவிசேஷகர் இந்நிருபத்தைப் பார்த்துச் சுவிசேஷத்தை எழுதியிருப்பார்கள் என்று சொல்ல விரும்புகிறார்கள். ஆனால் இந்த யாக்கோபு இயேசுவின் சகோதரனானதினாலும் இயேசுவோடு பல வருஷக்காலம் ஒரேவீட்டிலே ஜீவித்ததினாலும் இயேசு செய்த போதனையை அடிக்கடி கேட்டிருந்ததினாலும், இந்த விஷயங்களைப்பற்றி இவன் சுவிசேஷங்களைப் பாராமலே இயேசு அருளின போதகத்தைக்குறித்து ஞாபகமுள்ளவனாயிருந்து இவைகளைப்பற்றி நினைக்கிறது இயல்புதானே.

5. இந்த நிருபத்தில் விபரீத்த கிறிஸ்தவ சபை. இந்த நிருபத்தில் இயேசுகிறிஸ்துவினுடைய பெயர் இரண்டுதட்டவை மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. யாக் $1^{2}$ $2^{1}$. இதில் அவருடைய மரணம் உயிர்த்தெழுதல் முன்மாதிரியாய் அவர் செய்த ஜெபம் பொறுமை இவற்றைப்பற்றி ஒன்றும் சொல்லப்படுகிறதில்லை. அவருடைய இரண்டாம் வருகை (யாக் $5^{7}$), புதுஜென்மம் ($1^{18}$), ராஜ்யம் ($2^{5}$), நாமம் ($2^{7}$), சுயாதீனப்பிரமாணம் ($1^{25}$ $2^{8}$) ஆகிய இவைகளைப்பற்றிச் சொன்ன வாக்கியங்கள் இதன் ஆக்கியோனும் இதை வாசிக்கிறவர்களும் கிறிஸ்தவ மார்க்கத்தை நன்றாய் அறிந்திருந்தார்கள் என்பதற்கு அத்தாட்சியாய் இருக்கின்றன. ஜெப ஆலயம் ($2^{2}$), சபையின் மூப்பர்கள் ($5^{14}$), நமது பிதாவாகிய ஆபிரகாம் ($2^{21}$), சேனைகளின் கர்த்தராகிய தேவன் ($5^{4}$) இவைகளைப்பற்றி விசாரித்து எப்பொழுதும் யூதமார்க்கத்தை அனுசரித்த பரி. யாக்கோபு யூதமார்க்கத்திலிருந்து கிறிஸ்துமார்க்கத்துக்குள் பிரவேசித்து மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்ட யூத கிறிஸ்தவர்களுடன் இந்நூலில் பேசுகிறான் என்று அறிகிறோம். இந்த நிருபத்தில் யூதமார்க்கத்திலிருந்து கிறிஸ்து மதப் பிரவேசஞ் செய்த யூத கிறிஸ்தவர்கள் கைக்கொண்ட மார்க்கத்தைப் பார்க்கிறோம். அப்போஸ்தலர் நடபடியாகமத்தின் முதல் அதிகாரங்களில் இத்தன்மையுடைய கிறிஸ்தவர்களைக்குறித்து வாசிக்கிறோம்.

6. இதின் போதனை. முன்சொன்னது போல இந்த நிருபம் யூத கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. இதின்படி இதிலே நீதி நியாயத்தைப்பற்றியும், ஞானம் தரித்திரம் ஆகிய இவைகளைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. தீர்க்கதரிசன ஆகமங்களிலும் நீதிமொழி யாகமத்திலும் சொல்லப்பட்ட கற்பனைகளைப்போன்ற பலவித கட்டளைகள் இந்த நூலிலே உண்டு. கிரேக்க பாஷையில்

ஏவல் வினையாகவுள்ள இவ்வித ஐம்பத்து நாலு கட்டளைகள் இந்நூலில் இருக்கின்றன.

இதன் ஆக்கியோன் சமயத்துக்குத்தகுந்தபடி வெவ்வேறு விஷயங்களைக்குறித்து எழுதுகிறதினால் இதில் அடங்கிய விஷயங்களை ஒழுங்குபடுத்திப் பொருள் அட்டவணை எழுதுவது கஷ்டம்.

துன்பகாலத்தில் தைரியத்தை உண்டாக்கவும்; பாவம் நிறைந்த இவ்வுலகத்தில் நல்லொழுக்கமுடையவர்களாய் நடக்கும்படி போதிக்கவும்; ஆத்திரப்பேச்சு, ஐசுவரியம், சண்டைசச்சரவு, லௌகீக ஆசை ஆகிய இவைகளைப்பற்றி எச்சரிக்கை உண்டாக்கவும்; விசுவாசம், ஜெபம் ஞானம் இவற்றை அடையும்படி கூறவும், இந்நூலின் ஆக்கியோன் இதை எழுதினான். எந்தவிஷயத்திலும், நல்லொழுக்கமே சிரேஷ்டமானது என்பது இவனுடைய அபிப்பிராயம்.

யாசாய். **Jaasai.** அன்னியஜாதி பெண்ணை விவாகஞ்செய்தவன். எஸ்றா $10^{37}$.

யாசிஸ். **Jaziz** தாவீதின் மந்தைகளை விசாரித்தவன். 1 நாளா $27^{31}$.

யாசியா. **Jaaziah.** மெராரியின் மகன். 1 நாளா $24^{26}$.

யாசியேல். **Jaasiel.** அப்னேரின் குமாரன். 1 நாளா $27^{21}$.

யாசியேல். **Jaaziel.** ஒரு லேவியன். 1 நாளா $15^{18}$. = ஆசியேல். 1 நாளா $15^{20}$.

யாசீயேல். **Jaasiel.** தாவீதின் போர் வீரரில் ஒருவன். 1 நாளா $11^{47}$.

யாசு. **Jaasu** = யாசாய்.

யாசுப், யாசூப். **Jashub.**

1. இசக்காரின் நாலாம் மகன். எண் $26^{24}$. = யோபு. ஆதி $46^{13}$.

2. அன்னியஜாதி பெண்ணை விவாகம் பண்ணினவன. எஸ்றா $10^{29}$.

யாசேரா. **Jahzerah** ஒரு ஆசாரியன். 1 நாளா $9^{12}$. = அகசாய். நெகே $11^{13}$.

யாசேரின் புஸ்தகம். **The Book of Jasher.** [நீதிமானின் புஸ்தகம்.] பூர்வீக காலத்து எபிரெயர்களின் பாட்டுப்புஸ்தகம். யோசு $10^{12}$ 2 சாமு $1^{18-27}$. இந்தப் புஸ்தகம் எபிரெயர்களுக்கு நன்றாய்த் தெரியும். இதில் சில சரித்திரங்கள் அடங்கியிருக்கலாம். சவுலைப்பற்றித்தாவீது பாடின பாட்டு இதில் அடங்கியிருந்தது. இதைப்பற்றி வேறொன்றும் தெரியாது.

யாசேர். **Jazer.** உப்புக்கடலின் வடகிழக்கு மூலைக்கு ஏறக்குறைய 15 மைல் தூரத்தில், காத்கோத்திர நாட்டிலுள்ள எமோரியர் ஸ்தாபித்த ஒரு கோட்டை. எண் $21^{32}$ யோசு $13^{25}$. காத்கோத்திரத்தார் இக்கோட்டையைத் தங்களுக்கு அரணாக வைத்துக்கொண்டார்கள். எண் $32^{35}$. இந்த நாடு மிகவும் செழிப்புள்ளது. ஏசா $16^{8}$ எரே $48^{32}$.

யாசேன். **Jashen.** 1 நாளா $11^{34}$. = ஆசேம். 1 நாளா $11^{34}$.

யாசொபேயாம். **Jashobeam.** ஒரு லேவியன். 1 நாளா $12^{6}$.

யாசோன். **Jason.** 'யோசுவா' என்ற பெயருடைய எபிரெயர்களில் அநேகர் 'யாசோன்' என்கிற கிரேக்க பெயரைத் தரித்துக்கொண்டார்கள். மக்கபெயர் ஆகமத்தில் இப்பேர்கொண்ட மூன்று ஆட்களைப்பற்றி வாசிக்கிறோம். புதிய ஏற்பாட்டிலே தெசலோனிக்கே பட்டணத்தில் தன் வீட்டில் பரி. பவுலை ஏற்றுக்கொண்டு அவனுக்கு ஜாமீனாக இருந்த யாசோனும், கொரிந்து பட்டணத்திலிருந்து ரோமாபுரி சபையாருக்கு வாழ்த்துதல் அனுப்பிய யாசோனும், ஒரே ஆளோ அல்லது வெவ்வேறு ஆட்களோ என்பதைப்பற்றித் திட்டமாய்த் தெரியாது. இந்த யாசோனைக்குறித்து வேறொன்றும் தெரியாது. அப் $17^{5}$ ரோம $16^{21}$.

யாஷோபியாம். **Jashobeam.** தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன். 1 நாளா $11^{11}$.

யாதா. **Jada.** யெராமெயேலின் பேரன். 1 நாளா $2^{28}$.

யாதாய். **A. V. Jadau. R. V. Iddo.** = யதாய். அன்னியஜாதி பெண்ணை விவாகம் செய்தவன். எஸ்றா $0^{43}$.

யாதாய். **Jahdai.** காலேபின் சந்ததியான். 1 நாளா $2^{47}$.

யாதியேல். **Jahdiel.** யோர்தான் நதிக்குக் கிழக்கேயிருந்த மனாசேயின் பாதி கோத்திரத்தின் தலைவன். 1 நாளா $5^{24}$.

யாதோ. **Jahdo.** பூசின் மகன். 1 நாளா $5^{14}$.

யாதோன். **Jadon.** மதிலைப் பழுது பார்த்தவன். நெகே $3^{7}$.

யாத்சா. **Jahaza.** எரே $48^{21}$. யாகாஸ் காண்க.

யாத்சியேல். **Jahziel.** நப்தலியின் மகன். ஆதி $46^{26}$ எண் $26^{48}$.

யாத்திராகமம். **Exodus.**

1. பெயர். இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டது முதல் அவர்கள் செய்த யாத்திரையின் விபரத்தைச் சொல்லுகிறதினால் இதற்கு யாத்திராகமம் என்னும் பெயர் வந்தது. இது ஆதியாகமத்தில் சொன்ன சரித்திரத்தின் தொடர்ச்சி.

2. பொருளடக்கம்.

இதின் இரண்டு பங்குகளாவன:

I. சரித்திரம். $1^{1}$–$18^{27}$.

A. $1^{1}$–$12^{36}$. அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலர் மீட்புக்கு ஆயத்தப்படுதல்.

$1^{1}$–$2^{22}$. மோசேயின் பிறப்பு. பார்வோனின் குமாரத்தி அவனை ரட்சித்தது. அவன் இஸ்ரவேலரைப் பார்க்கும்படி போனது, சண்டைசெய்ய ஒரு எகிப்தியனைக் கொன்றது, இதினிமித்தம் மீதியான் தேசத்துக்கு ஓடினது.

$2^{23}$–$4^{17}$. இஸ்ரவேலருடைய அடிமைத்தனத்தின் கொடூரம். யேகோவா மோசேக்குத் தரிசனமானது. அற்புதங்கள். யேகோவா மோசேயை எகிப்துக்கு அனுப்பினது. அவன் போனது.

$4^{18-31}$. மோசே எகிப்துக்குத் திரும்பிப் போனது. ஆரோன் கூடப்போனது.

$5^{1-21}$. பார்வோன் அவனை அசட்டைசெய்து இஸ்ரவேலின் உபத்திரவத்தை அதிகரிக்கச்செய்தது.

$5^{22}$–$7^{7}$. யேகோவா மறுபடியும் தரிசனமானது, இஸ்ரவேலரின் வம்சஅட்டவணை, யேகோவா மறுபடியும் கட்டளையிட்டது.

$7^{8}$–$12^{36}$. மோசே செய்த அதிசயங்கள். பத்து வாதைகள். அவைகளுக்குப் பார்வோனும் எகிப்தியரும் பயப்படல். பஸ்கா பண்டிகையை ஏற்படுத்தினது.

B. $12^{37}$–$18^{27}$. அடிமைத்தனத்தினின்று மீட்புப்பெறுதல்.

$12^{37}$–$13^{16}$. இஸ்ரவேலர் புறப்பட்டுப் போனது. பஸ்காவைப்பற்றிய ஏற்பாடும் எச்சரிப்பும். முதற்பேறானவர்களைப் பிரதிஷ்டைசெய்தல்.

$13^{17}$–$15^{21}$. சிவந்த சமுத்திரத்தைக் கடந்துபோனது. பார்வோன் சேனையின் சங்காரம். மோசே பாடின பாட்டு.

$15^{22}$–$17^{16}$. சீனாய் மலைக்கு யாத்திரைசெய்யும்போது நேரிட்டவை. மாராவில் கசப்பான தண்ணீர். காடைகள் மன்னா. ரெவிதீமில் பாறையிலிருந்து தண்ணீர் பெற்றது. அமலேக்கியருடன் சண்டை.

18 அதி. எத்திரோ பாளையத்துக்கு வந்து நியாயவிசாரணை விஷயத்தில் செய்த யோசனை.

II. $19^{1}$–$40^{38}$. பிரமாணங்களும் ஆசரிப்புக் கூடாரமும். சீனாய் மலையில் இஸ்ரவேலருக்கென்று யேகோவா ஸ்தாபித்த ராஜ்யமும் அதின் பிரமாணங்களும்.

19 அதி. ஜனங்களை ஆயத்தப்படுத்தினது. மோசே மலைக்குப்போனது.

$20^{1}$–$23^{19}$. பத்துக்கற்பனையும் இஸ்ரவேலருக்குக் கொடுத்த முதற்பிரமாணங்களும்.

$23^{20}$–$24^{18}$. மோசே நாதாப் முதலிய மூப்பர்களுக்கும் யேகோவாவுக்கும் உள்ள உடன்படிக்கையை ஸ்திரப்படுத்தல்.

$25^{1}$–$31^{18}$. ஆசரிப்புக்கூடாரம், உடன்படிக்கைப்பெட்டி, தகனபலிபீடம், ஆசாரியமுறை, தூபபீடம் முதலியவற்றைப் பற்றிய பிரமாணங்கள். நியாயப்பிரமாண கற்பலகையை மோசேக்குக் கொடுத்தல்.

$32^{1}$–$34^{35}$. பொற்கன்றுக்குட்டியை ஜனங்கள் வணங்கினது யேகோவாவின் கோபம். மோசேயின் வேண்டுதல். மன்னிப்பு.

$35^{1}$–$40^{38}$. ஆசரிப்புக் கூடாரத்தையும் அதின் பணிமுட்டுகளையும் செய்தல்.

3. நோக்கம்.

அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலர் விடுதலையடைந்ததையும், வனாந்தரத்திலே அவர்கள் பிரயாணம் பண்ணினதையும், அவர்கள் மற்றவர்களிடத்தினின்று பிரிக்கப்பட்டதையும், இஸ்ரவேலர் எந்த விஷயத்திலும் யேகோவாவின் நியாயப்பிரமாணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதையும்பற்றி யாத்திராகமத்தில் சொல்லியிருக்கிறது.

இதைக்குறித்து நாம் திட்ப நுட்பமாய் விசாரித்தால் வேதசாஸ்திரிகளில் அநேகருடைய அபிப்பிராயத்தின்படி மூன்று நூலாசிரியர்கள் எழுதின மூன்று ஆகமங்களை ஒரு ஆசிரியன் ஒன்றாய்ச் சேர்த்து இந்த ஆகமத்தை உண்டாக்கினான் என்று நாம் பார்க்கக்கூடும்.

i. இவர்களில் ஒருவன் சடங்காசாரங்களில் வைராக்கியமுடையவனாயிருந்து முதலாவது இந்த நூலில் பஸ்காபண்டிகை, புளிப்பில்லாதஅப்பபண்டிகை, முதற்பேறானவற்றை நியமித்தல், ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்கல் முதலியவற்றைப்பற்றிய விபரத்தை இதில் எழுதினான் என்று தோன்றுகிறது. இஸ்ரவேல் புத்திரர் எந்த விஷயத்திலும் யேகோவாவின் சித்தப்படி நடந்து எந்த விஷயத்திலும் யேகோவா அவர்களுக்கு உதவிசெய்தார் என்றும், அவர்களுடைய சமயாசாரத்தின் சகல விபரத்தையும் யேகோவாவே ஏற்படுத்தினார் என்றும் நினைத்துத் தனது நூலை இவன் எழுதினான். இவன் தன்னுடைய நூலில் பூர்வீகத்திலுண்டான அநேக பிரமாணங்களைச் சேர்த்து அவைகளைத் தெரிவித்தபடியினாலே, இவன் பிந்தின காலத்தில், ஒருவேளை எஸ்றாவின் காலத்தில் தனது நூலை இயற்றினான் என்று நினைக்கவேண்டும்.

யாத்திரையைப்பற்றி எழுதின மற்ற இரண்டு நூலாசிரியரில் ஒருவன் தீர்க்கதரிசி

களின் காலத்திலும் மற்றவன் சாலொமோனின் காலத்திலும் எழுதியிருக்கவேண்டும் என்று வேதசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். தங்கள் முன்னோர்கள் கைக்கொண்ட பாரம்பரியங்களை இவர்கள் மகா ஜாக்கிரதையுடனே சேர்த்தெழுதி இஸ்ரவேல் எகிப்தி லிருந்து புறப்பட்டுப்போனதைப்பற்றிப் பேசி, 34-ம் அதிகாரத்தில் சொன்ன யேகோவாவினுடைய நியாயப்பிரமாணத்தை எழுதினார்கள். இதுவே முற்காலத்தில் எபிரெயர்கள் கைக்கொண்ட பூர்வீக நியாயப்பிரமாண நூல் என்பது நிச்சயமே.

ii. எபிரெயர் கைப்பற்றிய ஒழுங்கு இன்னொரு நூலிலே எழுதப்பட்டது. 21¹-22¹⁶.

iii இஸ்ரவேலர் அனுசரித்த ஆசாரங்கள் முதலியவற்றைப் பற்றியும் கடவுள் அவர்களுக்குச் செய்கிற தயவைப் பற்றியும் இன்னொரு நூலில் சொல்லியிருக்கிறது. 22¹⁷-23³³.

iv. இவைகளைத்தவிர 20-ம் அதிகாரத்தில் சொன்ன பத்துக்கற்பனைதான் இஸ்ரவேலர் முதலாவது யேகோவாவினிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட நியாயப்பிரமாணம் என்று நாம் சொல்லத் துணிகிறோம். இது சன்மார்க்கத்துக்குரியது என்றும், எல்லா ஜனத்துக்கும் கொடுக்கப்பட்டது என்றும், சர்வ ஜனங்களும் அங்கிகரிக்க வேண்டியது என்றும் நாம் சொல்லவேண்டும். எபிரெயர் கைக்கொண்ட சன்மார்க்கத்துக்கும் நல்லொழுக்கத்துக்கும் சடங்காசாரத்துக்கும் இதுதான் மூலம்.

4. காலம்.

யாத்திராகமத்தில் பூர்வீக காலத்துப் பிரமாணங்களையும் தீர்க்கதரிசிகளின் காலத்துக்கடுத்த பிரமாணங்களையும் சேர்த்திருக்கிறதினாலும் இதைக் கடைசியாய் எழுதின நூலாசிரியன் இன்னான் என்பது நமக்குத் தெரியாததினாலும் இது எழுதப்பட்டகாலம் நமக்குத் தெளிவாய்த் தெரியாது.

5. ஆக்கியோன்.

இதில் மோசே ஜனங்களுக்குக் கொடுத்த பிரமாணங்கள் இருக்கிறதினால் இந்த நூலுக்கு மோசேயின் இரண்டாம் புத்தகம் என்ற பெயர் வழங்கலாயிற்று. மோசே இந்தப் பிரமாணங்களை இயற்றினான் என்று சொல்லுவது நியாயமானாலும் அவனே இந்த நூலுக்கு ஆக்கியோன் என்று சொல்ல முடியாது. நாம் முன்னே சொன்னபடி இதில் பல நியாயப்பிரமாணங்கள் சேர்ந்திருப்பதினாலே இந்த நூலை ஒருவன் அல்ல, பலபேர இயற்றினார்கள் என்று சொல்லவேண்டும்.

யாத்திராயி: **Jeatherai** = எத்னி. ஆகாபின் முன்னோர்களில் ஒருவன். 1 நாளா 6²¹.

யாத்திரை. **Voyage**. அப் 27¹⁰.

யாத்தீர். **Jattir**. தென் யூதாவில் லேவியர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட ஓர் ஊர். யோசு 15⁴⁸ 1 சாமு 30²⁷.

யாபால். **Jabal**. லாமேக்கின் மகன். ஆதி 4²⁰.

யாபீன். **Jabin**. [கடவுள் அறிகிறார்.]

1. யோசுவா ஜெயித்த ஆத்சோரின் ராஜா. யோசு 11¹.

2. தெபொராளும் பாராக்கும் ஜெயித்த ஆத்சோரின் ராஜா. நியா 4².

யாபேஸ். **Jabesh**. இஸ்ரவேல் ராஜாவாகிய சல்லூமின் தகப்பன். 2 இரா 15¹⁰.

யாபேஸ். **Jabez**.

1. கடவுளை வணங்கி விண்ணப்பம் பண்ணி அருள்பெற்ற யூதா கோத்திரத்தான். 1 நாளா 4⁹.

2. யூதாவிலுள்ள ஓர் ஊர். 1 நாளா 2⁵⁵.

யாபேஸ், கீலேயாத்திலுள்ள யாபேஸ். **Jabesh, Jabesh Gilead**. யாபேஸ் காத் கோத்திர நாட்டிலும் யோர்தான் நதிக்கு 6 மைல் தூரத்திற்குக் கிழக்கிலும் இருந்தது. இஸ்ரவேலர் இந்த ஊராரைக் கொன்று இதிலிருந்து பென்யமீனருக்கு 400 பெண்களை மனைவிகளாகக் கொடுத்தார்கள். நியா 21 அதி. அம்மோனிய ராஜாவாகிய நாகாஸ் இந்த ஊராரை அவமானப்படுத்தும்போது, சவுல் ராஜா நாகாசை ஜெயித்தான். 1 சாமு 11 அதி. இதினிமித்தம் இந்த ஊரார் சவுலின் உடலை அடக்கம் பண்ணினார்கள். 1 சாமு 31 அதி. 2 சாமு 2² 21¹².

யாப்போக். **Jabbok**. உப்புக்கடலின் வட எல்லையிலிருந்து ஏறக்குறைய 25 மைல் தூரத்தில் யோர்தான் நதியில் பாய்கிற ஒரு சிற்றாறு. இது யோர்தானுக்கு ஏறக்குறைய 40 மைல் தூரத்திலுள்ள ஒரு மலைநாட்டிலே உற்பத்தியாகி வடக்கேயும் வடமேற்கேயும் ஓடி, ஆழ்ந்த பள்ளத்தாக்கின் மூலமாய் மேற்கே போய் யோர்தான் நதியில் சங்கமமாகிறது. இது பாய்கிற பள்ளத்தாக்கு, பாசானுக்கும் எமோரியருடைய நாட்டிற்கும் எல்லையாயிருக்கிறது. இந்த நதியின் துறையிலேதான் யாக்கோபு ஒரு தூதனோடு போராடினான். ஆதி 33²² எண் 21²⁴ உபா 2³⁷ 3¹⁶ யோசு 12² நியா 11¹³.

யாப்பேத். **Japheth**. [பெருகுகிறது.] நோவாவின் குமாரர் மூவரில் இவன் இரண்டாம் மகன். ஆதி 5³². இவன் ஜலப்பிரவாகத்துக்கு நூறு வருஷத்துக்குமுன் பிறந்து

நோவாவுடனே பேழையில் இரட்சிக்கப்பட்டவர்களில் ஒருவன். ஆதி $7^{13}$ 1 பேது $3^{20}$. இவனுக்கு ஏழு புத்திரருண்டு. ஆதி $10^{2}$. 1 நாளா $1^{5}$. எபிரெயர்களுடைய பாரம்பரியத்தின்படி இவனுடைய சந்ததியார் தங்களால் அறியப்பட்டிருந்த பூமியின் வடபாகங்களில் குடியேறினார்கள். மாதாயி என்ற மேதியரும், யாவான் என்ற கிரேக்கரும் இவர்களில் முக்கியமானவர்கள்.

யாப்போ. **Japho**. யோசு $19^{46}$. யோப்பா காண்க.

யாப்னியேல். **Jabneel**.

1. யூதா கோத்திர நாட்டின் வடகிழக்கு எல்லையிலுள்ள ஓர் ஊர். பெலிஸ்தர்களிடத்திலிருந்து பிடிக்கப்பட்ட 'யப்னே' இது தான். யோசு $15^{1}$ 1 நாளா $26^{6}$.

2. நப்தலி கோத்திர நாட்டிலுள்ள ஓர் ஊர். யோசு $19^{33}$.

யாமீன். **Jamin**.

1. சிமியோனின் மகன். ஆதி $46^{10}$ யாத் $6^{15}$ எண் $26^{12}$.

2. ஒரு யூதன். 1 நாளா $2^{27}$.

3. நியாயப்பிரமாணத்தை ஜனங்களுக்குத் தெரிவிக்கிறவன். நெகே $8^{7}$.

யாரா. **Jarah**. சவுலின் சந்ததியாரில் ஒருவன். 1 நாளா $9^{42}$. = யோகதா. 1 நாளா $8^{36}$.

யாரிப், யாரீப். **Jarib**.

1. சிமியோனின் மகன். 1 நாளா $4^{24}$. = யாக்கீன். ஆதி $46^{10}$ யாத் $6^{15}$.

2. எஸ்றாவுடன் எருசலேமுக்கு வந்தவன். எஸ்றா $8^{16}$.

3. அன்னியஜாதி பெண்ணை விவாகம் பண்ணின ஆசாரியன். எஸ்றா $10^{18}$.

யாரே-யோர்கிம். **Jaar-Oregim**. 'யோர்கிம்' என்பதற்கு 'நெசவு தொழில் செய்கிறவர்கள்' என்றர்த்தம். 'யாரே' என்பதும் 'யாவீர்' என்பதும் ஒன்றுதான். ஆதலால் இந்த முழுப்பெயரும் 'நெசவு தொழில் செய்கிற யாவீர்' என்பவனைக் குறிக்கும். இவன் எல்கானானின் தகப்பன். 2 சாமு $21^{19}$ 1 நாளா $20^{5}$.

யாரேத். **Jared**.

1. ஏனோக்கின் தகப்பன். ஆதி $5^{15}$ லூக் $3^{37}$.

2. ஒரு யூதன். 1 நாளா $4^{18}$.

யாரேப். **Jareb**. 'யாரேப்' என்ற பதத்திற்கு 'கலகம் செய்கிறவன்' என்று அர்த்தம். ஆதலால் ஓசியா தீர்க்கதரிசி அசீரிய ராஜாவாகிய 'யாரேப்' என்பவனைக் குறித்துப் பேசும்போது, இவன் கலகம் செய்கிற அசீரிய ராஜாக்களில் ஒருவன் என்று காட்டுகிறான். அல்லது இப்பதம் 'பெரிய ராஜா' என்பதைக் குறிக்கலாம். ஓசி $5^{13}$ $10^{6}$.

யார்மூத். **Jarmuth**. யர்மூத் காண்க.

யாலா. **Jaala**. சிறையிருப்பிலிருந்து செருபாபேலுடனே திரும்பிவந்த ஒரு குடும்பம். எஸ்றா $2^{56}$ நெகே $7^{58}$.

யாலாம். **Jaalam**. ஏசாவின் புத்திரரில் ஒருவன். ஆதி $36^{5}$.

யாலோன். **Jalon**. காலேபின் சந்ததியான். 1 நாளா $4^{17}$.

யாவான். **Javan**.

1. யாப்பேத்தின் நாலாம் குமாரன். ஆதி $10^{2}$. சின்ன ஆசியாவின் மேற்பாகத்தில் வசித்த கிரேக்கர் தங்களை இயாயோனியர் (*Iaones*, *Ionians*) என்று அழைத்தார்கள். எபிரெய பாஷையில் இந்தப் பதம் 'யாவான்' என்னப்படும். எபிரெய அபிப்பிராயத்தின்படி யாப்பேத்தின் நாலாம் மகனாகிய யாவான் கிரேக்கர் முதலியவர்களுக்குக் கோத்திரப் பிதாவாயிருந்தான்.

கிரேக்கர் யேகோவாவின் மகிமையை அறிவார்களென்றும், கிரேக்கர் பெனிக்கேயரிடமிருந்து யூதர்களை அடிமைகளாக வாங்கினார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஏசா $66^{19}$ யோவே $3^{6}$ எசே $27^{13}$ தானி $8^{21}$ $10^{20}$ $11^{2}$ சக $9^{13}$ யோவா $12^{20}$ அப் $20^{2}$.

2. தென் அரபியாவில் கிரேக்கர் குடியேறின ஒரு பட்டணம். எசே $27^{19}$.

யாவீர். **Jair**.

1. யூதாகோத்திரத்தையும் மனாசே கோத்திரத்தையும் சேர்ந்தவன். எண் $32^{41}$ உபா $3^{14}$.

2. கிலேயாத்தில் ஆளுகைசெய்த ஒரு நியாயாதிபதி. நியா $10^{3}$.

3. மொர்தெகாயுவின் தகப்பன். எஸ்தர் $2^{5}$.

4. எல்கானானின் தகப்பன். 1 நாளா $20^{5}$.

5. = அவோத் யாயீர். யோசு $13^{3}$.

யானாய். **Jaanai**. காத் கோத்திரத்தான். 1 நாளா $5^{12}$.

யானூம். **Janum**. யூதாவில் உள்ள ஒரு ஊர். யோசு $15^{53}$.

யானை. **Elephant**. தந்தம் காண்க.

## யு

யுக்தி. **'Wisdom.'** 1 இரா $2^{6}$.

யுஸ்து. **Justus** [நீதிமான்] 'நீதிமான்' என்று அர்த்தங்கொண்ட யுஸ்து என்ற பதம்

வேதாகமத்திலே மூன்று பெயருக்குப் பட்டப்பெயராய் வழங்குகிறது. அவர்கள் யாவரெனில்:

1. யோசேப்பு பர்சபா. அப் $1^{23}$. யூதாஸ் காரியோத்திற்குப் பதிலாக அப்போஸ்தலனாகும்படி குறிக்கப்பட்ட இருவரில் ஒருவன். ஆனால் சீட்டு இவன் பெயருக்கு விழவில்லை. பர்சபா காண்க.

2. கொரிந்து பட்டணத்தான். தன் வீட்டிலே பவுலை ஏற்றுக்கொண்டான். அப் $18^{7}$.

3. பரி. பவுல் ரோமாபுரியில் முதல் தடவை சிறைச்சாலையிலிருந்தபோது அப்பட்டணத்தில் வசித்த ஒரு யூதன். கொலோ $4^{11}$.

யுத்த புஸ்தகம். **The Book of the Wars**. எண் $21^{14}$. கர்த்தருடைய யுத்த புஸ்தகம் காண்க.

யுத்தம். **War**. ஆதி $14^{2}$ யோசு $11^{18}$. உபா 20 அதி. சங் $18^{34}$. ஆயுதம், சண்டை, முற்றுகை காண்க.

யுத்தா. **Jutah, Juttah**. யூதாவிலுள்ள அடைக்கலப் பட்டணங்களில் ஒன்று. யோசு $15^{55}$ $21^{16}$.

## யூ

யூகால். **Jehucal**. சிதேக்கியா ராஜா எரேமியா தீர்க்கதரிசியிடம் அனுப்பின செலேமியாவின் மகன். எரே $37^{3}$ $38^{3}$.

யூக்கரிஸ்ற். **Eucharist**. இராபோஜனம் காண்க.

யூதமார்க்கத்தமைந்தவன். **Proselyte**. அப் $2^{10}$ $6^{5}$ $13^{43}$.

1. சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த காலம்வரைக்கும் யூதர்கள் தங்கள் மார்க்கத்தில் அந்நியர் சேரும்படி இடங்கொடுத்திருந்தாலும், அவர்களை அதில் சேர்க்கும்படி பிரயாசம் எடுக்கவில்லை. ஆனால் கி—மு. 300—ம் வருஷத்துக்குமுன் அவர்கள் அநேகரைத் தங்கள் மார்க்கத்தில் சேர்க்கும்படி முயற்சி செய்யத் தொடங்கினார்கள். யூதர்கள் தாங்கள் போன பற்பல தேசங்களில் தங்கள் மார்க்கத்தைப்பற்றிப் பேசினதும், அந்நிய மார்க்கத்தாரில் அநேகர் யூதமார்க்கத்தின் ஆசார மேன்மையைக் கண்டு அதில் சேர விரும்பியதும், பிந்தின காலத்துத் தீர்க்கதரிசிகளும் சங்கீதக்காரரும் யேகோவா எல்லாரையும் தம்மிடம் அழைக்கிறார் என்று போதித்ததுமே, யூதர்கள் தங்கள் நோக்கத்தை இவ்விதமாய் மாற்றினதற்குக் காரணம். இதினாலே பரி. பவுலின் காலத்தில் ரோம ராஜ்யத்திலுள்ள சகல பட்டணங்களிலும், யூதர்களையன்றி, அந்நிய மார்க்கத்திலிருந்து யூதமார்க்கத்திற்கு வந்து 'யூதமார்க்கத்தமைந்தவர்கள்' என்னப்பட்ட அநேகர் இருந்தார்கள்.

2. இவ்விதமாய் வந்தவர்கள் விருத்தசேதனத்தையும், ஞானஸ்நானத்தையும்போன்ற ஒருவகை சுத்திகரிப்படையவேண்டும். விக்கிரக ஆராதனைசெய்து அதினால் தன்னைத் தீட்டுப்படுத்திக்கொண்ட அந்நியன் தன்னைச்சுத்திகரிக்கவேண்டுமென்பதே இதின் நோக்கம்.

இந்தச் சுத்திகரிப்புக்கும் கிறிஸ்தவ ஆசாரமாகிய ஞானஸ்நானத்திற்கும் சம்பந்தம் கிடையாது.

தான் யூத ஆசாரத்தைக் கைக்கொள்ளுகிறவன் என்று காட்டும்படி யூதமார்க்கத்தமைந்தவன் பலி செலுத்துவான்.

இவ்விதமாய்ச் சேர்ந்த அந்நியர் யேகோவாவினுடைய பரிசுத்தத்தையும் நீதியையும் நம்பி, அவர் அருளின நீதிநெறியிலே நடக்கவேண்டுமென்பதை யூதர்கள் அவர்களுக்குக் கண்டிப்பாய்ப் போதித்தார்கள்.

3. இவ்விதமாய் யூதமார்க்கத்தமைந்தவர்களில் வேறு அநேகர் கிறிஸ்தவ மதத்தை அனுசரித்து, கிறிஸ்தவர்கள் மோசேயின் நியாயப்பிரமாண ஆசாரத்தைக் கைக்கொள்வது அவசியமென்று யூதரைப்போலவே போதித்தார்கள் என நினைக்கலாம்.

பரி. பவுல் சின்ன ஆசியா கிரேக்கு முதலிய தேசங்களில் சுவிசேஷ பிரயாணம் செய்தபோது, ஜெப ஆலயங்களில் காணப்பட்ட 'யூதர்கள்' என்பவர்களில் அநேகர் யூதமார்க்கத் தமைந்தவர்கள் என்று தோன்றுகிறது.

இவர்கள் யூதமார்க்கத்தின் உத்தமத்தை விரும்பி இதை அநுசரித்தவர்களாதலால், பரி. பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தின் பரம மேன்மையைக் கண்டு அதை ஏற்றுக்கொண்டார்கள் என்று நினைக்க இடமுண்டு. அவன் ஸ்தாபித்த சபைகளில் இவர்களும் சேர்ந்தவர்களே. அப் $13^{16,34}$ $16^{14}$.

யூதர்கள். **The Jews**. இஸ்ரவேல், யூதா, எசேனேயர், சதுசேயர், பரிசேயர் மு காண்க.

யூதா. **Judah**. [மேன்மை பாராட்டத்தக்கவன்.]

I. பழைய ஏற்பாடு.

1. யாக்கோபுக்கும் லேயாளுக்கும் பிறந்த நாலாம் மகன். ஆதி $29^{35}$ $35^{23}$. யூதா யாக்கோபுக்கும் லேயாளுக்கும் நாலாம் மகனாயிருந்தாலும் இவனுடைய மூத்த சகோதரனாகிய ரூபன் துன்மார்க்கம் செய்ததினாலும் சிமியோன் லேவி என்பவர்கள் சீகேம்

ஊராருக்கு துரோகம் செய்ததினாலும் சிரேஷ்ட புத்திரபாகம் அவர்களுக்கல்ல, யூதாவுக்கே வந்தது. ஆதி 35[22] 37[26] 44[14] 49[4]. ஆதியாகமம் 38–ம் அதிகாரத்தில் சொன்ன சரித்திரத்தை நாம் விசாரித்தால் ஆதிகாலத்தில் யூதாகோத்திரத்துக்கும் கானானியருக்கும் சம்பந்தம் இருந்தது என்பதற்கு அத்தாட்சியுண்டு என்று காண்கிறோம். யூதா கோத்திரத்தில் காலேபின் வம்சம் விசேஷமானது. எண் 13[6] 32[12] யோசு 14[6] நியா 3 அதி. 1 சாமு 27[10] 30[14]. காலேபின் குடும்பத்தார் பிடித்த எபிரோன் பட்டணம் தாவீதின் காலத்தில் யூதா கோத்திரத்துக்குத் தலைநகரமாயிருந்தது. பிறகு கானான் தேசத்தின் தென்பாகத்தில் யூதாகோத்திரம் மேன்மையடைந்ததினாலே சாலொமோன் காலத்துக்குப் பிற்பாடு பன்னிரண்டு கோத்திரங்களும் இரண்டு ராஜ்யங்களாகப் பிரிக்கப்படும்பொழுது யூதா கோத்திரம் தென்பாகத்திலுள்ள ராஜ்யத்தில் முதன்மைபெற்றது. இக்கோத்திரம் பெற்றுக்கொண்ட நாடு சாக்கடலுக்கும் பெலிஸ்தியா தேசத்துக்கும் இடையிலிருந்தது. இதற்கு வடகிழக்கே பென்யமீன் கோத்திரமும் வடமேற்கே தாண் கோத்திரத்தின் தென்பாகமும் இருந்தது. இதற்குத் தெற்கே சிமியோன் கோத்திரமும் கிழக்கே சாக்கடலின் பக்கத்திலுள்ள வனாந்தரமும் இருந்தன. இதன் நடுவிலே எபிரோன் மலைநாடும் இதற்கு மேற்கே பெலிஸ்தியா நாடுமட்டும் எட்டின மைதான பூமியும் இருந்தன. யூதா பென்யமீன் என்னும் கோத்திரங்கள் சேர்ந்து இந்த யூதா ராஜ்யம் உண்டானது. அதாவது அது எப்பிராயீம் என்னும் மலைநாட்டிலிருந்து ஏதோம் ராஜ்யம்வரை எட்டினது. யூதா ராஜ்யத்தின் சரித்திரம் இஸ்ரவேல் என்னும் நிபந்தத்திலே விபரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

2. தேவாலயத்தைத் திரும்பக் கட்டினவர்களில் ஒருவன். எஸ்ரா 3[9].

3. ஒரு லேவியன். எஸ்ரா 10[23].

4. நெகேமியாவின் காலத்தில் எருசலேமிலிருந்த அதிகாரிகளில் ஒருவன். நெகே 11[9].

5. ஒரு லேவியன். நெகே 12[8].

6. ஒரு பிரபு. நெகே 12[34].

7. வேறொரு லேவியன். நெகே 12[36].

8. யோர்தான் நதியின் கரையிலுள்ள ஓர் ஊர். இது இருந்த ஸ்தலம் இன்னதென்று நமக்குத் தெரியாது. யோசு 19[34].

9. இயேசுவின் முன்னோர்களில் ஒருவன், *A. V. Juda R. V. Judah*. லூக் 3[26].

II. புதிய ஏற்பாடு.

யூதா, யூதாஸ். **Judas**.

1. யூதாஸ்காரியோத்து.

இவன் சீமோன் ஸ்காரியோத்தின் மகன். பன்னிரு அப்போஸ்தலரில் ஒருவன். யோவா 6[71] 13[26]. ஸ்காரியோத் என்பதற்கு கீரியோத் ஊரான் என்று அர்த்தம். எரே 48[24]. இந்த ஊர் தென் யூதாவில் இருந்தது. யூதாவைத்தவிர மற்றப் பதினொரு சீஷரும் கலிலேயா நாட்டார். யூதாஸ் அப்போஸ்தலருடைய சவரட்சணை சம்பந்தமான கணக்கெல்லாம் பார்த்து, பணம் சம்பாதித்து செலவிட்டுவந்தான். யோவா 12[6] 13[29] அக்காலத்தில் ஒரு அடிமையின் விலை முப்பது வெள்ளிக்காசாகையினால் யூதாஸ் இயேசுவை அடிமையின் கிரயத்துக்காக அவருடைய சத்துருக்களுக்குக் காட்டிக்கொடுத்தான். மத் 26[14] மாற் 14[10] லூக் 22[3]. செவ்வாய் அல்லது புதன்கிழமை சாயரக்ஷை யூதாஸ் இக்காரியத்தைச் செய்யச் சம்மதித்து வியாழக்கிழமை இரவு கெத்செமனே தோட்டத்தில் இம்மகா பாதகத்தை இயற்றினான். மத் 26[47] 14[43] லூக் 22[47].

இந்த விஷயத்தைப்பற்றித் தீர்க்கவேண்டிய சில சந்தேகங்கள் உண்டு. அவைகளாவன: யூதாஸ் செய்யப்போகிறது இயேசுவுக்குத் தெரியாவிட்டால் அவர் முன்னறிவில் குறைவுள்ளவர். அவர் அதை அறிந்திருந்தால் ஏன் யூதாஸைச் சீஷனாகத் தெரிந்துகொண்டார்?

i. இயேசு தமது மரணத்தினால் பேய் பிசாசுகளை ஜெயிப்பார் என்று யூதாஸ் அறிந்திருந்ததினிமித்தம், அவர் கொலையுண்ணும்படி அவருடைய சத்துருக்களுக்கு அவரைக் காட்டிக்கொடுத்தான் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

ii. இயேசு தமது சத்துருக்களின் கையில் தம்மை ஒப்புக்கொடாமல் அவர்கள் கையினின்று தம்மைக் காப்பாற்றிக்கொள்வார் என்றும்; தான் செய்த துரோகத்தினால் இயேசுவுக்கு நஷ்டம் வராது என்றும்; தனக்கும் இதினால் லாபம் கிடைக்கும் என்றும் கருதி யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

iii. வேறு சிலர் இயேசு இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருக்கவேண்டும் என்றும், இயேசுவை அவர் சத்துருக்களின் கையில் காட்டிக்கொடுத்தால் அவர் தமது வல்லமையைக் காண்பித்துத் தம்மை ரக்ஷிக்கும்படி தமது ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்றும் யூதாஸ் நம்பி, அவருடைய சத்துருக்களின் கையில்

அவரை ஒப்புக்கொடுப்பது நல்லதுதான் எனத் தீர்மானித்தான் என்று சொல்லுகிறார்கள்.

iv. இன்னும் சிலர் யூதாஸ் முதலில் இயேசுவின்பேரில் பக்திவைத்தவனானாலும் பிற்பாடு இவன் அவரைக்குறித்துக் கொஞ்சம் சந்தேகப்பட்டு, அவரை அவருடைய சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுப்பதினால் அவர் உண்மையாய் மேசியாவோ அல்லவோ என்பதைத் தெரிந்துகொள்ளும்படி அவரைக் காட்டிக்கொடுத்தான் என்று நினைக்கிறார்கள்.

இவைகளைத்தீர்க்கும்படி நாம் சொல்வது என்னவென்றால் :

i. இயேசு யூதாஸைத் தமது சீஷனாகச் சேர்த்துக்கொண்டதற்கான காரணம் நமக்குத் தெரியாது.

யூதாஸ் முதலிலே கெட்டுப்போனவன் அல்ல, இவன் மற்றவர்களைப்போல இயேசு அருளின போதகத்துக்கு இணங்கி நடந்திருந்தால் இவன் இந்தப் பாப சாகரத்தில் விழுந்திருக்கமாட்டான். யூதாஸ் ஸ்திரமாய் இயேசுவுக்குப் பின்செல்லாதபடியால் இவன் இந்தப் பெரிய துரோகத்துக்குத் தன் மனதிலே இடங்கொடுத்தான்.

ii. யூதாவின் குற்றம் மகாபெரிய துரோகம் என்று சுவிசேஷகர் யாவரும் சொல்லுகிறார்கள். இப்பாதகத்தைச் செய்யும்போது யூதாவினுடைய மனதில் நல்லெண்ணம் இருந்தால் அது சுவிசேஷகர்களுக்குத் தெரியாது.

iii. இந்தத் துரோகத்தைச் செய்த யூதாஸ் பூரணமனதோடே மனஸ்தாபப்பட்டு, தேவ தயவைத் தேடினால் அதை மன்னிக்கும்படி கடவுளுக்கு அதிகாரமும் இரக்கமும் உண்டு.

2. யாக்கோபின் மகனாகிய யூதா.

இவன் பன்னிரு அப்போஸ்தலரில் ஒருவன். இவனுக்கு மறுபெயர் லெபேயு. மத் 10³. அல்லது ததேயு. மாற் 3¹⁸. இவன் இயேசுவினிடத்தில் கேட்ட கேள்வியைத் தவிர இவனைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. யோவா 14²². ததேயு காண்க.

3. இயேசுவின் சகோதரனாகிய யூதா.

மத் 13⁵⁵. இவன் இவனுடைய சகோதரனாகிய யாக்கோபைப்போலச் சன்மார்க்க விஷயத்தில் வைராக்கியமுடையவன். இவன் யூதாவின் நிருபத்தை எழுதினவன் என்று நாம் நினைக்கவேண்டும்.

4. கலிலேயனாகிய யூதாஸ்.

கலிலேயாக் கடலுக்குக் கிழக்கே பிறந்தவனாகிய இவன் கி-பி. 7-ம் வருஷத்தில் ரோம அதிகாரிகள் குடிமதிப்பெழுதும்போது கலகம்பண்ணி யுத்தத்தில் மரித்தான். இவனுடைய சீஷர்கள் ரோமருடைய அதிகாரத்துக்கு விரோதமாகத் தீராத பகையுடையவர்களாய்ப் பலதடவை கலகம் செய்தார்கள். அப் 5³⁷.

5. தமஸ்கு பட்டணத்தில் வாசஞ்செய்த யூதாஸ். பரி. பவுல் குணப்பட்டபின் அவன் இவனுடைய வீட்டிலே தங்கியிருந்தான். அப் 9¹¹.

6. பர்சபாவாகிய யூதாஸ். இவனும் சீலாவும் பவுலோடும் பர்னபாவோடும் அந்தியோகு பட்டணத்துக்குப் போய், புறமதஸ்தர் கிறிஸ்தவசபையில் பிரவேசிக்கிறதைப் பற்றி எருசலேம் பட்டணத்தில் கூடின சங்கத்தின் தீர்மானத்தைத் தெரிவித்தார்கள். அப் 15²².

7. இயேசுவின் முன்னோர்களில் ஒருவன். லூக் 3²⁶.

8. இயேசுவின் முன்னோர்களில் யூதா கோத்திரத் தலைவன். லூக் 3³⁰ (*R. V.*) யூதா (1) காண்க.

**யூதா வனாந்தரம். The wilderness of Judah.**

யூதேயாவின் வனாந்தரம். மத் 3¹. இதுவும் யூதாவின் வனாந்தரமும் ஒன்றுதான். இது சாக்கடலின் மேற்குக்கரையிலுள்ள கற்பாறையான தேசம். நியா 1¹⁶ சங் 63¹ மத் 3¹ லூக் 3².

**யூதாவின் நிருபம். The Epistle of Jude.**

1. இந்த நிருபத்தை எழுதினவன் கள்ளப் போதகத்தால் இழுப்புண்ட சில சபைகளுக்கு இதினால் எச்சரிப்புச் செய்கிறான்.

பரி. பவுல் எழுதின நிருபங்களுக்கும் யூதாவின் நிருபத்துக்கும் பல ஒற்றுமை உண்டு.

யூதா ...1¹ 1 தெச 1⁴ 2 தெச 2¹³.
யூதா ...1¹⁰⁻¹⁹ 1 கொரி 2¹⁴.
யூதா ...1²⁰⁻²¹ ரோம 5⁵ 8²⁶ கொலோ 2⁷.
யூதா ...1²⁴⁻²⁵ ரோம 14²⁵ கொலோ 1²².

இந்த நிருபத்திலும் பேதுருவின் இரண்டாம் நிருபத்திலும் கூறப்பட்ட போதகம் ஒன்றுதான்.

2. பொருளட்டவணை.

i. வ. 1–2. வாழ்த்துதல்.

ii. வ. 3–4. கள்ளப்போதகர்கள் சபையில் பிரவேசித்தது.

iii. வ. 5–7. சன்மார்க்கத்தை விட்டு விலகிய இஸ்ரவேலருக்கும் தூதருக்கும் வந்த தண்டனை.

iv. வ. 8–16 கள்ளப்போதகர் செய்த துன் மார்க்கம், கொடுத்த அவர்கள் போதகம், தேவ தூஷணம், தண்டனை.

v. வ. 17–23. கள்ளப்போதகர்கள் செய்த முயற்சியைப்பற்றி ஆச்சரியப்பட வேண் டியதில்லை. இதை நீக்கும்படி கிறிஸ்தவர் கள் பயபக்தியிலும் ஜெபத்திலும் இயேசு வின் மறு வருகைக்காக எதிர்பார்த்திருந்த திலும் நிலைத்திருக்கவேண்டும். சந்தேகத் திலும் பாவத்திலும் விழுகிறவர்களுக்காகக் கிறிஸ்தவர்கள் மகா இரக்கத்துடனே பிர யாசப்படவேண்டும்.

vi. வ. 24–25. நம்மைக் காத்துப் பரிசுத்த மாக்கின கடவுளுக்கு ஸ்தோத்திரம்.

3. இந்த நிருபத்தைப் பெற்றுக்கொண்ட வர்கள் ஒரே நாட்டிலுள்ள கிறிஸ்தவர்கள் என்றும் புறமதத்திலிருந்து வந்தவர்களென் றும் தோன்றுகிறது. அவர்களிருந்த நாடு இன்னதென்று தெரியாது. ஆனால் அது பலெஸ்தீனா அல்லது சீரியா தேசமாயிருக்க லாம்.

4. ஆக்கியோன். யூதா எருசலேம் பட்ட ணத்திலுள்ள சபைத்தலைவனாகிய யாக்கோ புக்குச் சகோதரனானதினால் இவன் இயேசு வின் சகோதரனாகிய யூதா என்று நாம் நினைக்கவேண்டும். அப்படியானால் இவன் கி-பி. 75–80–ம் ஆண்டுகளில் இந்த நிரு பத்தை எழுதியிருப்பான். ஏறக்குறைய கி-பி. 200–ம் வருஷத்துக்குள்ளே கிறிஸ் தவர்கள் இதை வேதாகமமாக அங்கிகரித் தார்கள் என்பது நிச்சயம்.

யூதீத். **Judith.** ஏசாவின் மனைவிகளில் ஏத்திய ஜாதியைச் சேர்ந்த ஒருத்தி. ஆதி 26 34.

யூதீத்தின் ஆகமம். **The Book of Judith.** தள்ளுபடியாகமத்தில் சேர்க்கப் பட்ட யூதீத்தின் ஆகமம் 16 அதிகாரங்கள் அடங்கிய ஒரு பாரம்பரியக் கதை. இதில் சொன்ன கதை என்னவென்றால் :

அசீரியா ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் மேதியர்களுடனே சண்டை செய்யும்பொ ழுது யூதர்கள் தனக்கு உதவிசெய்யவில்லை யென்று கோபங்கொண்டு அவர்களை ஜெயிக்கும்படி தனது சேனாபதியை அனு ப்ப, அவன் அவ்வண்ணமே புறப்பட்டு, சமாரியா தேசத்தை அழித்து யூதேயாவை யும் ஜெயிக்க ஆயத்தமாயிருந்தான். இக் காலத்தில் பெத்தூலியா என்னும் ஊரில் உள்ள ஜனங்களுக்குப் பஞ்சம் முதலிய உபத்திரவங்கள் விசேஷமாய் உண்டானது. இதைக் கேள்வியுற்ற யூதீத் என்னும் யூத விதவை தன் ஜனத்தை இரக்ஷிக்கும்படி சேனாபதியின் பாளையத்துக்குப் போய் யேகோவா அவன் கையில் யூதர்களை ஒப் புக்கொடுப்பார் என்று தந்திரமாய்த் தீர்க்க தரிசனமுரைத்து மூன்று நாள் பாளையத் திலே தங்கினாள். அசீரிய சேனாபதியான வன் அவளைக் கற்பழிக்கும் இச்சை கொண்டு, அவளை அழைத்து, பெரிய விருந்துசெய்து அவள் தனது விருப்பத் துக்கு இணங்குவாள் என்னும் நம்பிக்கை யோடு அளவுகடந்த மதுபானம் பண்ணி ஆனந்தமுற்றிருந்தான். அக்காலத்தில் அவன் வேலைக்காரர் அவன் முன்னமே செய்திருந்த கட்டளைப்படி யூதீத்தை அழைத்து அவனுடைய கூடாரத்தில் அவனோடு விட்டுவிடும்பொழுது அவள் அவனைக் கொன்றுபோட்டு அவ்விடத்தை விட்டுச் சேதமின்றி தன் ஊர்போய்ச் சேர்ந் தாள். இவ்விதமாய் அவள் மூலமாய் யூதர் களுக்குச் சௌகரியம் உண்டானது. அவள் மகா பாக்கியவதியாய் 105 வருஷகாலம் ஜீவித்தாள்.

2. அத்தாட்சி.

இந்த நூலில் சொன்னவைகளுக்கு யா தொரு சரித்திர அத்தாட்சியும் இல்லை, ஆனால் இவ்வித சம்பவம் நிகழ்ந்திருக்கக் கூடியதே.

3. காலம்.

வேதசாஸ்திரிகளில் சிலர் நினைக்கிறபடி இந்தச் சம்பவம் மக்கபெயரின் காலத்தில் நேரிட்டிருக்கலாம். ஆதிக்கிறிஸ்தவர்கள் இந்த நூலைக்குறித்துப் பேசுகிறதினாலே இது அந்தக் காலத்துக்குமுன் எழுதப்பட்டி ருக்கும் என்று நாம் சொல்லலாம்.

4. இதன் போதனை.

இதில் சொன்ன போதனை பரிசேயர் கொள்கைக்கு இசைந்தது. இதின்படி பக் தர்கள் விசேஷமாய்த் தேவாலயத்துக்காக வைராக்கியமுடையவர்களா யிருக்கவேண் டும்; யூதர்கள் பாவஞ்செய்யாதிருந்த காலத் தில் அவர்களுக்குத் துன்பம் இல்லை; ஆகா ரம் உபவாசம் ஸ்நானம் முதலியவற்றைப் பற்றிய ஆசாரத்தைக்குறித்து மகா ஜாக் கிரதையாயிருக்கவேண்டும்; யூதீத் கைம் பெண்ணானும் அவள் செய்த ஜெபத்தின் வல்லமையால் கடவுள் தமது ஜனங்களுக்கு அவள் மூலமாய் உதவிசெய்யக்கூடும். இந் நூலில் அற்புதங்களைப்பற்றிச் சொல்லப்பட வில்லை. இதில் தேவதூதர்கள், மறுஜீவியம், மேசியாவைக்குறித்த நம்பிக்கை இவைக ளைப்பற்றி யாதொன்றும் நாம் காண்கிற தில்லை.

யூதேயா. **Judaea.** யூதேயா என்னும் பெயர் பலெஸ்தீனு தேசத்தின் தென்பாகத்தைச் சில வசனங்களில் குறித்தாலும் (லூக் $23^{5}$ அப் $10^{37}$ $26^{20}$), அது விசேஷமாய் ரோமர் ஸ்தாபித்த நாட்டையே குறிக்கும். மத் $2^{22}$ லூக் $1^{5}$ $2^{4}$ $3^{1}$. பலெஸ்தீனு தேசத்தின் மற்ற இரண்டு நாடுகள் கலிலேயாவும் சமாரியாவுமே. யூதேயா நாடு சமாரியாவுக்கும் அரபிதேசத்தைச் சேர்ந்த வனந்தரத்துக்கும் இடையிலிருந்தது; ஆனால் இதன் தென் எல்லைகளைத் திட்ப நட்பமாய்ச் சொல்லமுடியாது. பெரிய ஏரோது மரித்தபின் அர்கெலாயு என்பவன் பட்டத்துக்கு வந்து அரசாட்சி செய்து இறந்து போகும்போது ரோமர் யூதேயாவைச் சீரியா நாட்டோடு சேர்த்து செசரியாவில் வசித்த தேசாதிபதியின் அதிகாரத்துக்குள் அந்நாட்டை வைத்தார்கள். லூக் $3^{1}$ அப் $12^{19}$. யூதா காண்க.

யூதேயா வனந்தரம். **The Wilderness of Judah.** யூதாவின் வனந்தரம் காண்க.

யூபால். **Jubal.** லாமேக்கின் மகன். எபிரெய பாரம்பரியத்தின்படி இவன் முதலாவது கீதவாத்தியங்களை உண்டுபண்ணினவன். ஆதி $4^{21}$.

யூபிலி. **Jubilee.** ஐம்பதாம் வருஷந்தோறும் நடந்துவந்த ஓர் உற்சவம். லேவி $25^{10}$ $27^{17}$ எண் $36^{4}$. பண்டிகை I. 5. காண்க.

யூப்பித்தர். **Jupiter.** ரோமர் வணங்கி வந்த தேவர்களில் இவன் சிரேஷ்டமானவன். கிரேக்கர் இவனை 'செயுஸ்' (*Zeus*) என்று அழைத்தார்கள். கிரேக்க கவிராயர்களும், லத்தீன் கவிராயர்களும் யூப்பித்தரைப்பற்றிச் சில துஷ்ட கட்டுக்கதைகளைச் சொன்னாலும், இந்தத் தேவன் ரோமரையும் ரோமராயனையும் பராமரித்து, நீதி நியாயத்தைப் பரிபாலிக்கிற வான பகவான் என்று பாடியிருக்கிறார்கள். லீஸ்திராப் பட்டணத்தார் பர்னபாவை 'யூப்பித்தர்' என்று அழைத்தார்கள். யூப்பித்தருக்குப் 'பிரகாசத்தின் தகப்பன்' என்று பேர். இவனும், ஆதிகாலத்தில் ஆரியர் வணங்கிய தியௌஸ் பிதர் (*Dyaushpitar*) என்பவனும் ஒன்றே. அப் $14^{12}$.

யூரோக்கிலிதோன். **Euraquilo.** மத்தியதரைக் கடலில் வடகிழக்கிலிருந்து அடிக்கிற இப்புயல்காற்று கிரேத்தாதீவின் மலைநாட்டில் திடீரென்று எழும்பி அதிவேகமாய்க் கடலுக்குள் மோதி கப்பல்களுக்குப் பெருஞ் சேதத்தை விளைவிக்கும். பரி. பவுல் ரோமாபுரிக்கு யாத்திரைசெய்த கப்பல் இப்புயல் காற்றினால் தாக்கப்பட்டது. அப் $27^{14}$.

யூலியாள். **Julia.** ரோமாபுரியிலுள்ள சபையைச்சேர்ந்த ஒரு கிறிஸ்தவள். ரோம $16^{15}$.

யூலியு. **Julius.** யூலியு என்பவன் அகுஸ்துபட்டாளத்தைச் சேர்ந்த ஒரு நூற்றுக்கதிபதி. இவன் பரி. பவுலுக்குப் பட்சம் காட்டினான். அப் $27^{1}$ $28^{16}$. அகுஸ்து பட்டாளம் காண்க.

யூனியா. **R. V. Junias. R. V. Marg. Junia.** யூனியா என்னும் பதம் ஆண்பாலாய் அல்லது பெண்பாலாய் இருக்கலாம். இது ரோமாபுரிச் சபையைச்சேர்ந்த ஒரு கிறிஸ்தவனை அல்லது ஒரு கிறிஸ்தவளைக் குறிக்கும். ரோமர் $16^{7}$.

## யெ

யெகமியா. **Jecamiah.** நேரியின் மகன். 1 நாளா $3^{18}$.

யெகியேலி. **Jehieli.** தேவாலயத்தின் பொக்கிஷத்தைப் பார்க்கிற ஒரு லேவியன். 1 நாளா $26^{21}$.

யெகியேல். **Ehiel.** எகியேல் காண்க.

யெகுதி. **Jehudi.** 'யெகுதி' வழக்கமாய் 'யூதன்' என்னும் அர்த்தங்கொள்ளும் பொதுபெயராய் இருக்கும். ஆனால் எரே $36^{14,21,23}$-ல் சொன்ன 'யெகுதி' பாருக்குக்குப் பிரபுக்கள் அனுப்பினவனுடைய சொந்த பெயர். எகுதியாள் காண்க.

யெகுவேல். **Jeuel.** சேராவின் சந்ததியான். 1 நாளா $9^{6}$.

யெகூ. **Jehu.** ஏகூ காண்க.

யெசனியா. **Jezaniah.** கெதலியாவினிடம் வந்த யூதன். எரே $40^{8}$ = யசனியா. 2 இரா $25^{23}$. = அசரியா. எரே $43^{2}$.

யெசிமியேல். **Jesimiel.** சிமியோன் கோத்திரத்தான். 1 நாளா $4^{36}$.

யெசியா. **Izziah.** எஸ்றா $10^{25}$.

யெசுவா. **Jeshua.**

1. ஒரு ஆசாரியன். 1 நாளா $24^{11}$.
2. ஒரு லேவியன். 2 நாளா $31^{15}$.
3. செருபாபேலுடன் திரும்பிவந்த ஒருவன். எஸ்றா $2^{6}$.
4. எஸ்றாவுடனே பாபிலோனியாவிலிருந்து வந்த லேவியன். நெகே $8^{7}$.
5. செருபாபேலுடன் திரும்பிவந்த பிரதான ஆசாரியன். ஆகாய் சகரியா என்னும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களில் இவனுக்கு

யோசுவா என்று பெயர். எஸ்ரு $2^2$ $5^2$ நெகே $12^1$ ஆகாய் $1^1$ சக $3^1$ $6^{10}$.

6. ஒரு ஆசாரிய குடும்பம். எஸ்ரு $2^{36}$ நெகே $7^{39}$.

7. தென் யூதாவிலுள்ள ஓர் ஊர். நெகே $11^{26}$.

8. உடன்படிக்கைக்கு முத்திரையிட்ட ஒரு லேவியன். நெகே $10^9$.

9. எருசலேமின் மதிலைப் பழுதுபார்த்த ஒருவன். நெகே $3^{19}$.

யெசோகாயா. **Jeshohaiah.** சிமியோன் கோத்திரத்தான். 1 நாளா $4^{26}$.

யெஸ்ரயேல். **Jezreel.** [கடவுள் விதைக்கிறார்.]

1. இசக்கார் நாட்டின் கிழக்கு எல்லையிலுள்ள ஒரு பட்டணம். இதன் பக்கத்தில் ஒரு நல்ல ஊற்றுண்டு. இஸ்ரவேலர் கில்போவாவிலே பெலிஸ்தரோடு யுத்தம் செய்யுமுன் இதிலே பாளயம் இறங்கியிருந்தார்கள். 1 சாமு $29^1$. சில காலம் இவ்வூரார் இஸ்போசேத்தின் அதிகாரத்துக்குட்பட்டவர்களாயிருந்தார்கள். 2 சாமு $2^9$. ஆகாப் ராஜா இங்கே ஓர் அரமனை கட்டியிருந்தான். 1 இரா $18^{45}$ $21^1$. இதிலே நாபோத்தின்



யெஸ்ரயேல்

திராட்சத்தோட்ட மிருந்தது. 1 இரா $21^2$. யோராம் ராஜா இங்கே வாசம் பண்ணினான். 2 இரா $8^{29}$. எசபேலும் ஆகாபின் சந்ததியாரும் இவ்விடத்திலே கொல்லப்பட்டார்கள். 2 இரா $9^{36}$ $10^7$.

2. யெஸ்ரயேல் சமபூமி. இது இசக்கார் நாட்டின் வடகிழக்கு மூலையிலிருந்து கர்மேல் மலைநாட்டிற்கு வடக்கே 20 மைல் நீளமும் 14 மைல் அகலமுமுள்ள ஒரு மகா செழிப்பான சமபூமி. கீசோன் நதி இதின் மூலமாய்ப் பாய்கிறது. இதிலேதான் தெபோராளும் பாராக்கும் செசராவை ஜெயித்தார்கள். நியா 4 அதி. கிதியோன் மீதியானரை ஜெயித்த இடம் இதுவே. நியா 7 அதி. பெலிஸ்தர் இங்கே சவுலை ஜெயித்தார்கள். 1 சாமு 28–31 அதி. எகிப்தியர் இதில் யோசியாவை ஜெயித்துக் கொன்றார்கள். 2 இரா $23^{30}$.

3. யூதா நாட்டிலுள்ள ஓர் கிராமம். யோசு $15^{56}$. தாவீதின் மனைவியாகிய அகினோவாம் இதில் பிறந்தாள். 1 சாமு $25^{43}$.

4. ஓர் யூதன். 1 நாளா $4^3$.

5. ஓசியா தீர்க்கதரிசி தன் மூத்த குமாரனுக்கு உவமையாக இட்ட பெயர். ஓசி $1^4$.

6. ஓசியா தீர்க்கதரிசி இஸ்ரவேலுக்கு உவமையாய்க் கொடுத்த பேர். ஓசி $2^{22}$.

யெஷூரன். **Jeshurun.** 'கடவுளின் நீதிமான்' என்றர்த்தங்கொள்ளும் இப்பதம் இஸ்ரவேல் என்பதைக் குறிக்கும். உபா $32^{15}$ $33^{5, 26}$ ஏசா $44^2$.

யெஷ்ரகியா. **Jezrahiah.** பாடகரின் தலைவன் = இஸ்ரகியா. நெகே $12^{42}$ 1 நாளா $7^3$.

யெதாயா. **Jedaiah.**

1. ஒரு ஆசாரியன். 1 நாளா $9^{10}$ எஸ்ரு $2^{36}$ நெகே $12^6$.

2. சிறையிருப்பிலிருந்து செருபாபேலுடனே திரும்பிவந்த ஆசாரியன். சக $6^{10}$.

3. சிமியோன் கோத்திரத்தான். 1 நாளா $4^{37}$.

4. மதிலைப் பழுதுபார்த்தவன். நெகே $3^{10}$.

யெதிதியா. **Jedidiah**. [யேகோவாவினால் நேசிக்கப்பட்டவன்.] நாத்தான் தீர்க்கதரிசி சாலொமோனுக்குக் கொடுத்த பெயர். 2 சாமு 12[25].

யெதியாயேல். **Jediael**. [கடவுள் அறிகிறார்.]

1. பென்யமீன் குமாரரில் ஒருவன். 1 நாளா 7[6].

2. தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன். 1 நாளா 11[45].

3. தாவீதினிடம் வந்த ஒரு போர்வீரன். 1 நாளா 12[20].

4. கோராகின் சந்ததியாரில் ஒருவன். 1 நாளா 26[2].

யெத்தூர். **Jetur**.

1. இஸ்மவேலின் மகன். ஆதி 25[15].

2. இவனுடைய சந்ததியார். 1 நாளா 5[19].

யெத்தேர். **Jether**.

1. கிதியோனின் மூத்த மகன். நியா 8[20].

2. இஸ்மவேலின் கோத்திரத்தான். = எத்தேர். 1 இரா 2[5] 1 நாளா 2[17].

3. யெரமெயேலின் மகன். 1 நாளா 2[32].

4. காலேபின் சந்ததியான். 1 நாளா 4[17].

5. ஆசேர் கோத்திரத்தான். 1 நாளா 7[38].

யெத்லா. **Ithlah**. தாண் கோத்திர நாட்டிலுள்ள ஓர் ஊர். யோசு 19[42].

யெபூசியர். **Jebusites**. எபூசியர், எருசலேம் காண்க.

யெபெரேகியா. **Jeberechiah**. [யேகோவா ஆசீர்வதிக்கிறார்.] ஏசாயாவின் சிநேகிதனாகிய சகரியாவின் தகப்பன். ஏசா 8[2].

யெப்தா. **Jephthah**. கீலேயாத் நாட்டிலுள்ள ஒரு பராக்கிரமசாலி. தோப் நாட்டில் வசித்தான். அம்மோனியர் கீலேயாத்தின்மேல் படையெடுத்து வந்தபோது அந்நாட்டார் யெப்தாவைத் தங்களுக்குத் தலைவனாக ஏற்படுத்தினார்கள். இவன் அம்மோனியரோடு போர்புரிந்து ஜெயம் பெற்றால் தன் வீட்டுவாசற்படியிலிருந்து தனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ, அதை யேகோவாவுக்குச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவதாக பிரதிக்கினை செய்தான். இதின்படி தன் குமாரத்தியையே தகனபலியாக செலுத்தவேண்டியதாயிற்று. பிறகு இவன் எப்பிராயீம் கோத்திரத்தாரை ஜெயித்தான். ஆறு வருஷக்காலமாக யோர்தான் நதிக்குக் கிழக்கிலுள்ள இஸ்ரவேலருக்கு நியாயாதிபதியாயிருந்தான்.

யெப்தா தன் குமாரத்தியைத் தகனபலி பலியாகச் செலுத்தினது யோகோவாவினுடைய சித்தத்திற்கு நேர்விரோதம் என்று நாம் அறிவோம். ஆகிலும் அக்காலத்தில் கானானியர் முதலியோர் மோளேகு முதலிய தேவர்களுக்கு அடிக்கடி நரபலி செலுத்தி வந்ததினாலும், இஸ்ரவேலருக்கு யேகோவாவைப்பற்றிய பூரண அறிவில்லாதிருந்தபடியாலும், யெப்தா இவ்விதமான தகனபலியிட்டது ஆச்சரியமல்ல. நியா 11 அதி.

யெயாரீம். **Jearim**. ஒரு சிறுமலை = கெசலோன். யோசு 15[10].

யெரமெயேல், யொரமெயேல், யெர்மெயேல். **Jerahmeel**. [கடவுள் இரக்கம் செய்வாராக.]

1. தென் யூதாவிலிருந்த இஸ்ரவேலர் அல்லாத ஒரு கோத்திரம். தாவீது இவர்களுக்குத் தயவு பாராட்டினதினால், சவுலின் மரணத்திற்குப்பின் யெரமெயேலர் தாவீது எபிரோனில் ஸ்தாபித்த ஆளுகைக்கு உட்பட்டார்கள். 1 சாமு 27[10] 30[29]. பிற்காலங்களில் இவர்கள் காலேபின் சந்ததியார் என்றும், யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 1 நாளா 2[26,42]. மோளித் என்ற ஊர் இவர்களுடையது. இவர்களைப்பற்றி நமக்கு வேறொன்றும் தெரியாது.

2. எரேமியாவையும் பாருக்கையும் பிடிக்கும்படி யோயாக்கீம் ராஜா அனுப்பியவர்களில் ஒருவன். எரே 36[26].

3. ஒரு லேவியன். 1 நாளா 24[29].

யொரமெயேல். **Jerahmeel**. யெரமெயேல் காண்க.

யெரிமோத். **Jerimoth**. எரிமோத் காண்க.

யெரியேல். **Jeriel**. இசக்கார் கோத்திரத் தலைவர்களில் ஒருவன். 1 நாளா 7[2].

யெரு-பாகால். **Jerub-baal**. [பாகால் தேவன் சண்டை செய்கிறான்.] கிதியோனின் பெயர்களில் ஒன்று. நியா 6[32] 8[29] 9[16,28] 1 சாமு 12[11]. பிந்தின காலங்களில் எபிரெயர்கள் 'பாகால்' என்னும் தேவனின் மார்க்கத்தை வெறுத்து, 'யெருபாகால்' என்பதற்குப் பதிலாக 'வெட்கம் என்னும் தேவன் சண்டை செய்கிறான்' என்றர்த்தங்கொண்ட 'எருப்பேசேத்' என்பதைச் சொன்னார்கள். 2 சாமு 11[21]. கிதியோன் காண்க.

யெருவேல். **Jeruel**. யூதேயாவின் வனாந்தரத்தில் ஓர் பாகமாகிய யெருவேல் உப்புக்கடலின் தென்மேற்கு ஓரத்திலிருக்

கிறது. இங்கே யோசபாத் ராஜா மோவாபியர் முதலியவர்களுக்கு வந்த ஆபத்தைக் கண்டான். 2 நாளா $20^{16}$.

யெரொபெயாம். **Jeroboam**.

1. நேபாத்தின் மகன். யூதாவிலிருந்து பிரிக்கப்பட்ட இஸ்ரவேலின் முதல் ராஜா. சாலொமோன் ராஜாவின் ஊழியரில் ஒருவனயிருந்த இவன் ராஜதுரோகம் செய்ய ஆரம்பித்த விஷயம் சாலொமோன் ராஜாவின் காதுக்கெட்டினபோது இவன் எகிப்துக்குத் தப்பியோடினுன். சாலொமோனின் மரணத்திற்குப்பின் காஞன் தேசத்துக்குத் திரும்பிவந்து, வடபாகத்திலுள்ள கோத்திரங்கள் சாலொமோனின் குமாரனுகிய ரெகொபெயாமை விட்டு விட்டுத் தன்னைத் தங்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தும்படி அக்கோத்திரத்தாரைத் தூண்டிவிட்டான். 1 இரா $11^{26}$ $12^{1}$–$14^{20}$. இவ்விதமாய் யூதராஜ்யம் பிரிந்து இஸ்ரவேல் ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. யுத்தத்தில் சாமர்த்தியமுள்ளவனுகிய இவன் யூதாவோடு போர் புரிந்தான். எகிப்தியர் இவனுடைய ராஜ்யத்தில் படையெடுத்துவந்தார்கள். சீகேம் பெனியேல் என்ற கோட்டைகளைக் கட்டினுன். பெத்தேல் தாண் என்னும் ஊர்களில் பொற் கன்றுக்குட்டிகளைச் செய்வித்து விக்கிரக ஆராதனைக்கு இடங்கொடுத்தான். இவன் கி–மு. 937-915-ஆ வரை ராஜ்யபாரம் செய்தான். இஸ்ரவேல் காண்க.

2. எகூவின் பேரனும் யோவாசின் குமாரனுமாகிய இரண்டாம் யெரொபெயாம் இஸ்ரவேல் ராஜ்யத்தில் ஆளுகை செய்த ஓர் அரசன். இவன் காலத்தில் இஸ்ரவேல் ராஜ்யத்திற்குச் சிறந்த மேன்மையும் செல்வாக்கு மிருந்தது. பல வருடங்களாய் இஸ்ரவேலரை உபத்திரவப்படுத்திவந்த சீரியர்களை இவன் ஜெயித்து அவர்களிடமிருந்த பல நாடுகளையும் பிடித்தான். இவனுடைய காலத்தில் இஸ்ரவேலர் ஆசாரமுறைமையிலும் சன்மார்க்க விஷயமாயும் குறையுள்ளவர்களா யிருந்தார்களென்று ஆமோஸ், ஓசியா தீர்க்கதரிசிகள் சொல்லியிருக்கிருர்கள். இவன் கி-மு.781-740-ஆ வரை இஸ்ரவேலை அரசாண்டான். 2 இரா $14^{23}$. இஸ்ரவேல் காண்க.

யெரோவா. **Jaroah**. காத் கோத்திரத்தான். 1 நாளா $5^{14}$.

யெர்மெயேல். **Jerahmeel**. யெரமெயேல் காண்க.

## யே

யேகாய். **Hegai**. அகாஸ்வேருவின் அரமனையிலுள்ள ஒரு பிரதானி. எஸ்தர் $2^{8,15}$.

யேகூத். **Jehud**, தாண் நாட்டிலுள்ள ஓர் ஊர். யோசு $19^{45}$.

யேகோவா. **Jehovah**. கடவுள், பராபரன் காண்க.

யேகோவா-ஷம்மா. **Jehovah-Shammah**. எசேக்கியேல் தீர்க்கதரிசி தன் தரிசனத்தில் கண்ட மகிமையுள்ள எருசலேமுக்கு 'யேகோவா அங்கே யிருக்கிருர்' என்றர்த்தங்கொண்ட இப்பெயரைக் கொடுத்தான். எசே $48^{35}$ ஏசா $60^{14}$ $62^{2}$ வெளி $21^{2}$.

யேகோவா - ஷாலோம். **Jehovah-Shalom**. 'யேகோவா சமாதானமாயிருக்கிருர்' என்றர்த்தங்கொண்ட இப்பதம் கிதியோன் தேவதரிசனம் அடைந்த இடத்தில் தான் கட்டின பலிபீடத்தின் பெயராயிருக்கிறது. நியா $6^{24}$.

யேகோவா-நிசி. **Jehovah-Nissi**. இதற்கு 'யேகோவா என்னுடைய விருதுக்கொடி' என்று அர்த்தம். மோசே அமலேக்கியரை ஜெயித்தபின் தான் கட்டின பலிபீடத்திற்கு 'யேகோவா-நிசி' என்று பெயரிட்டான். யேகோவாவின்பேரில் பக்தி வைத்தால் எப்படியாவது ஜெயம் கிடைக்கும். யாத் $17^{15}$ சங் $20^{7}$ $60^{4}$ நீதி $18^{10}$ ஏசா $11^{10}$.

யேகோவா-யீரே. **Jehovah-Jireh**. 'யேகோவா-யீரே' என்பதற்கு 'யேகோவா காண்கிருர்' அல்லது 'யேகோவா குறைவை நிவிர்த்தி செய்கிருர்' என்று அர்த்தம். ஆபிரகாம் தன் மகனுகிய ஈசாக்கைப் பலியிடக் கொண்டுபோனபோது, யேகோவா தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்று சொன்னதினிமித்தமும், புதரில் சிக்குண்டிருந்த ஆட்டுக்கடாவை கண்டதினிமித்தமும், ஆபிரகாம் மோரியாமலைக்கு இப்பெயரிட்டான். எபிரெயர்கள் 'கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும்' என்ற பழமொழியைச் சொல்லி, யேகோவா எவ்விஷயத்திலும் தமது ஜனங்களுக்கிருக்கிற குறைவுகளை நிவிர்த்திசெய்வார் என்ற நம்பிக்கையுடையவர்களாயிருந்தார்கள். ஆதி $22^{14}$.

யேகோவாவினுடைய தாசன். **The Servant of the Lord.**

1. முதலில் பக்தர்கள் ஈசன் 'எஜமான்' என்றும், ஈசனை வணங்குகிறவன் 'தாசன்' என்றும் நினைத்தார்கள். இதின்படி 'தாசன்' என்பது, பாகால் அல்லது அஸ்தரோத் அல்லது வேறொரு தேவனைப் பற்றிக் கொண்டவனைக் குறித்தது. இவ்விதமாய்ப் பாகால் முதலிய தேவர்களுடைய அடியார்கள் அத்தெய்வங்களின் 'தாசர்' என்று அழைக்கப்பட்டார்கள். 2 இரா $10^{23}$.

2. இதின்படி யேகோவாவை வணங்கின எந்த இஸ்ரவேலனும் யேகோவாவினுடைய தாசனாயிருக்கவேண்டும்.

3. பிற்பாடு 'யேகோவாவினுடைய தாசன்' என்பதற்கு ஒரு விசேஷித்த கருத்து கொடுக்கப்பட்டது. அதாவது: யேகோவாவின் சித்தத்தை அறிந்து, அவருடைய நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறவனே யேகோவாவினுடைய தாசனாவான். இதின்படி தீர்க்கதரிசிகள் (2 இரா $9^{7}$ ஆமோஸ் $3^{7}$ எரே $7^{25}$), ஆசாரியரும் லேவியரும் (சங் $134^{1}$), ஆபிரகாம் (ஆதி $26^{24}$), மோசே (யாத் $14^{31}$ எண் $12^{7}$), யோசுவா (யோசு $24^{29}$), காலேப் (எண் $14^{24}$), யோபு (யோபு $1^{8}$), தாவீது (2 சாமு $3^{18}$), எலியாக்கீம் (ஏசா $22^{20}$), செருபாபேல் (ஆகாய் $2^{23}$), 'கிளை' என்பவன் (சக $3^{8}$) ஆகிய இவர்கள் யேகோவாவினுடைய தாசர் என்று சொல்லப்படுகிறார்கள்.

[குறிப்பு. தமிழ் வேதாகமத்தில் சில வசனங்களிலுள்ள 'ஊழியக்காரன்' என்ற பதங்களுக்குப் பதிலாக 'தாசன்' என்று சொல்வது தகும்.]

4. ஏசாயா தீர்க்கதரிசனத்தில் சொல்லப்படும் 'யேகோவாவினுடைய தாசன்' என்பதைப்பற்றி விசேஷமாய்க் கவனிக்க வேண்டும்.

A. ஏசாயா தீர்க்கதரிசனத்தின் கடைசி பாகத்தைக் கூறினவன் சில வசனங்களில் 'யேகோவாவினுடைய தாசன்' என்பதினால் இஸ்ரவேல் ஜனத்தைக் குறிப்பிடுகிறான். ஏசா $41^{8}$ $44^{1}$ $44^{21}$ $45^{4}$ $49^{3}$. இதோடே வேறு சில வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அவையாவன: சங் $136^{22}$ எரே $30^{10}$ $46^{27}$ எசே $28^{25}$ $37^{25}$ ஓசி $11^{1}$.

B. i. மேற்கூறிய வாக்கியங்களைத்தவிர வேறு சில வாக்கியங்களில் சொல்லப்படும் 'யேகோவாவின் தாசன்' என்பதின் கருத்தைப்பற்றி வேதசாஸ்திரிகளில் சிலருக்குச் சந்தேகம் உண்டு. அதாவது ஏசா $50^{4-9}$ $52^{13}$–$53^{12}$ வாக்கியங்களைக் கூறினவன் மேசியா, எரேமியா, செருபாபேல், இஸ்ரவேலில் ஒருபாகம் ஆகிய இவர்களில் யாரையோ ஒருவரைக் குறிப்பிட்டுப் பேசுகிறான் என்று நிதானிக்கிறார்கள். ஆனால் நாம் இந்த வசனங்களை ஆராய்ந்து பார்த்தால், இஸ்ரவேல் ஜனத்தைப்பற்றியும், இஸ்ரவேலின் முற்கால சரித்திரத்தைப்பற்றியும், வருங்காலத்தில் இஸ்ரவேலருக்கு வரும் மேன்மையைப்பற்றியும் தீர்க்கதரிசி பேசுகிறதாகத் தோன்றுகிறது.

ii. ஒரு வாக்கியத்திலே (ஏசா $50^{10,11}$) தீர்க்கதரிசி இஸ்ரவேல் ஜனத்தைப் பொதுவாய்க் குறியாமல், எவன் விசேஷமாய் யேகோவாவுக்குப் பயந்து அவரை வணங்குகிறானோ, அவனை 'யேகோவாவின் தாசன்' என்று சொல்லியிருக்கலாம்.

iii. இன்னும் சிரேஷ்டமான நான்கு வாக்கியங்களுண்டு. அவையாவன: ஏசா $42^{1-4}$ $49^{1-6}$ $50^{4-9}$ $52^{13}$—$53^{12}$. இவ்வசனங்களிலே தீர்க்கதரிசி இஸ்ரவேலரைக் குறித்துப் பேசவில்லை என்று சிலர் சொன்னபோதிலும், இவைகளை நாம் உற்று ஆராயும்போது இவைகளில் சொல்லப்படும் 'யேகோவாவின் தாசன்' என்பது இஸ்ரவேல் ஜனத்தைக் குறிக்கிறதென்பதற்கு யாதொரு ஆட்சேபனை இல்லை. ஏசா $49^{3}$–ல் இஸ்ரவேலர் யேகோவாவின் ஊழியக்காரர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் நாம் இந்த வாக்கியங்களெல்லாவற்றையும் சேர்த்துக் கவனிக்கும்போது, 'யேகோவாவினுடைய தாசன்' உலகத்தாருக்குச் செய்யவேண்டிய ஊழியத்தைப்பற்றியும், மற்ற அந்நியருக்கு மார்க்கபோதனை செய்வதைப்பற்றியும் தீர்க்கதரிசி கூறுகிறான் என்று பார்க்கிறோம். இப்படி இஸ்ரவேல் ஜனத்தைப்பற்றிப் பேசவில்லையென்றால், வேறு யாரைப்பற்றிப் பேசுகிறானென்று தீர்மானிக்க நம்மால் முடியாது. ஆகையால் நமது அபிப்பிராயத்தின்படி இவ்வசனங்களில் ஏசாயா கூறுகிற 'யேகோவாவினுடைய தாசன்' என்பது சிறையிருப்பிலிருந்து வந்து, மீட்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனத்தையே காட்டுகிறது.

5. பிற்காலங்களில் இவ்வாக்கியங்களைக் கவனித்தறிந்த யூதர் இது மேசியாவை முன்னறிவிக்கும் என்று நம்பினார்கள். ஆகையால் 'யேகோவாவினுடைய தாசன்' என்பவர் இயேசுகிறிஸ்துதான் என்று ஆதிக் கிறிஸ்தவர்கள் நம்பிவந்தார்கள். மத் $8^{17}$ $12^{18}$ லூக் $22^{37}$ அப் $8^{32}$.

யேசபேல். **Jezebel** ஏசபேல் காண்க.

யோராகு. **Jerah**. தென் அரபிதேசத்தில் குடியிருந்த ஒரு கோத்திரத்தின் பிதா. இவன் யொக்தானின் நாலாம் மகன். ஆதி 10$^{26}$ 1 நாளா 1$^{20}$.

## யொ

யொகிபெயா. **Jogbehah**. காத் நாட்டிலுள்ள ஓர் ஊர். எண் 32$^{35}$ நியா 8$^{11}$.

யொக்தான். **Joktan**. ஏபேரின் குமாரனாகிய இவனுக்குப் பதிமூன்று புத்திரரிருந்தார்கள். ஆதி 10$^{25}$ 1 நாளா 1$^{19}$. இவனுடைய குமாரர் அரபிதேசத்திலுள்ள சில வம்சங்களுக்குக் கோத்திரப் பிதாக்களாயிருந்தார்கள் என்று தோன்றுகிறது.

யொக்தியெல், யோக்தியேல். **Jokteel**.

1. தென் யூதாவிலுள்ள ஓர் ஊர். யோசு 15$^{38}$.

2. =சேலா. 2 இரா 14$^{7}$.

யொக்தெயாம். **Jokdeam**. யூதாவிலுள்ள ஓர் ஊர். யோசு 15$^{56}$.

யொக்நியாம். **Jokneam**. செபுலோன் நாட்டில் லேவியர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட ஓர் ஊர். யோசு 12$^{22}$ 21$^{34}$.

யொக்லி. **Jogli**. தாண் கோத்திரத்தின் தலைவர்களில் ஒருவன். எண் 34$^{22}$.

யொசவியா. **Joshaviah**. தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன். 1 நாளா 11$^{26}$.

யொசிபியா. **Josiphiah**. எஸ்றாவுடனே வந்த ஒரு தலைவனின் தகப்பன். எஸ்றா 8$^{10}$.

யொயகீம். **Joiakim**. யெசுவாவின் மகனாகிய ஒரு ஆசாரியன். நெகே 12$^{10}$.

யொயதா, யொய்தா, யோயதா, யோய்தா. **Johoiada, Joida**. [யேகோவா அறிகிறார்.]

1. பெனாயாவின் தகப்பன். 2 சாமு 8$^{18}$ 20$^{23}$.

2. யோவாசைச் சிம்மாசனத்தின்மேல் ஏற்றின பிரதான ஆசாரியன். 2 இரா 11$^{4}$ 12$^{2}$ 2 நாளா 22$^{11}$ 23$^{11}$.

3. தாவீதினிடம் வந்தவன். 1 நாளா 12$^{27}$.

4. தாவீதின் ஆலோசனைக்காரரில் ஒருவன். 1 நாளா 27$^{34}$.

5. வாசலைப் பழுதுபார்த்தவன். நெகே 3$^{6}$.

6. ஓர் ஆசாரியன். எரே 29$^{26}$.

7. செருபாபேலுடனே திரும்பிவந்த ஆசாரியன். நெகே 12$^{10}$ 13$^{28}$.

யொய்தா. **Jehoida**. யோயதா காண்க.

யொவதானுள், யோவதானுள். **Jehoaddan**. யூதா ராஜாவாகிய அமத்தியாவின் தாய். 2 இரா 14$^{2}$ 2 நாளா 25$^{1}$.

யொவேசர். **Joezer**. தாவீதினிடம் வந்தவன். 1 நாளா 12$^{6}$.

யொவேலா. **Joelah**. தாவீதினிடம் வந்தவன். 1 நாளா 12$^{7}$.

## யோ

யோகதா. **Jehoadah**. சவுலின் சந்ததியான். =யாரா. 1 நாளா 8$^{36}$ 9$^{42}$.

யோகனான். **Jehohanan**. [யேகோவா இரக்கம் செய்கிறார்.]

1. கோகாத்தியன். 1 நாளா 26$^{3}$.

2. யோசபாத்தின் சேனாதிபதிகளில் ஒருவன். 2 நாளா 17$^{15}$.

3. ஒரு ஆசாரியன். எஸ்றா 10$^{6}$ நெகே 12$^{22}$.

4. அன்னியஜாதி பெண்ணை விவாகஞ்செய்தவன். எஸ்றா 10$^{28}$.

5. தொபியாவின் மகன். நெகே 6$^{18}$.

6. செருபாபேலுடனே திரும்பி வந்த ஆசாரியன். நெகே 12$^{13}$.

8. அலங்க பிரதிஷ்டை செய்த ஆசாரியர்களில் ஒருவன். நெகே 12$^{42}$.

9. யோய்தாவுக்கு உதவிசெய்த அதிபதி. 2 நாளா 23$^{1}$.

10. கரேயாவின் மகன். கெதலியாவைச் சேர்ந்த ஒரு சேனைத் தலைவன். கெதலியாவைக் கொன்றுபோட்ட இஸ்மவேலை ஜெயித்தான். 2 இரா 25$^{23}$ எரே 40$^{8}$ 41$^{14}$ 42$^{8}$ 43$^{2}$.

11. யோசியாராஜாவின் மகன். 1 நாளா 3$^{15}$.

12. தாவீதின் சந்ததியான். 1 நாளா 3$^{24}$.

13. ஒரு லேவியன். 1 நாளா 6$^{9}$.

14. தாவீதினிடம் வந்த பென்யமீனன். 1 நாளா 12$^{4}$.

15. தாவீதினிடம் வந்த காத் கோத்திரத்தான். 1 நாளா 12$^{12}$.

16. எஸ்றாவுடனே திரும்பி வந்தவன். எஸ்றா 8$^{12}$.

17. எப்பிராயீம் கோத்திரத்தான். 2 நாளா 28$^{12}$.

யோகா. **Joha**.

1. ஒரு பென்யமீனன். 1 நாளா 8$^{16}$.

2. தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன். 1 நாளா 11$^{45}$.

யோகெபேத். **Jochebed**. கோகாத்தின் சகோதரி. அம்ராவின் மனைவி. ஆரோன், மீரியாம், மோசே என்பவர்களின் தாய். யாத் 6$^{20}$ எண் 26$^{59}$.

யோக்கியமானவை. **A. V. Honest. R. V. Honourable.** ரோம $12^{17}$.

யோக்கீம். **Jokim.** ஒரு யூதன். 1 நாளா $4^{22}$.

யோக்தியேல். **Jokteel.** யோக்தியேல் காண்க.

யோக்மேயாம். **Jokmeam.** எப்பிராயீம் நாட்டில் லேவியர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட ஓர் ஊர். 1 நாளா $6^{68}$.
=யக்மேயாம். 1 இரா $4^{12}$.
=கிப்சாயீம். யோசு $21^{22}$.

யோசகார். **Jozacar.** [யேகோவா ஞாபகமுள்ளவர்.] யூதாவின் ராஜாவாகிய யோவாசைக் கொன்றுபோட்டவர்களில் ஒருவன். 2 இரா $12^{21}$.

யோசதாக், யோத்சதாக். **Jehozadak, Jozadak, Josedech.** [யேகோவா நீதியுள்ளவர்.] பிரதான ஆசாரியனாகிய யோசுவாவின் தகப்பன். 1 நாளா $6^{14}$ எஸ்றா $3^{2}$ நெகே $12^{26}$. ஆகாய் $1^{1}$ $2^{2}$ சக $6^{11}$.

யோசபாத். **Jehozabad.**

1. யோவாஸ் ராஜாவைக் கொன்றுபோட்டவர்களில் ஒருவன். 2 இரா $12^{21}$.
2. பென்யமீன் கோத்திரத்தான். 2 நாளா $17^{18}$.
3. ஒரு லேவியன். 1 நாளா $26^{4}$.

யோசபாத். **Joshaphat.**

1. தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன். 1 நாளா $11^{43}$.
2. தாவீதின் காலத்திலுள்ள ஓர் ஆசாரியன். 1 நாளா $15^{24}$.

யோசபாத். **Jozabad.**

1, 2, 3. தாவீதின் பராக்கிரமசாலிகளில் மூவர். 1 நாளா $12^{4,20}$.

4, 5, 6. மூன்று லேவியர்கள். 2 நாளா $31^{13}$ $35^{9}$ எஸ்றா $8^{33}$.

7. அன்னியஜாதிப் பெண்ணை விவாகம் செய்த ஆசாரியன். எஸ்றா $10^{22}$.

8. இப்படிச் செய்த ஒரு லேவியன். எஸ்றா $10^{23}$.

9. நியாயப்பிரமாணத்தின் அர்த்தம் சொன்ன ஒரு லேவியன். நெகே $8^{7}$.

10. எருசலேமில் வசித்த ஓர் லேவியன். நெகே $11^{16}$.

யோசபாத். **Jehoshaphat.** ஆசா ராஜாவின் குமாரனாகிய யோசபாத் யூதாவின் ராஜ்யத்திலே இருபத்தைந்து வருஷக்காலம் அரசாட்சி செய்தான். (கி-மு. 876-851). 1 இரா $22^{42}$. இவன் காலத்தில் யூதாவின் ராஜ்யத்திற்கும் இஸ்ரவேல் ராஜ்யத்திற்கும் சமாதான மிருந்தது. இவனுடைய மகன் ஆகாபின் குமாரத்தியாகிய அதலியாளை விவாகம் செய்தான். 2 இரா $8^{18}$. சீரியர்களுக்கு விரோதமாய் இவன் ஆகாப் ராஜாவோடு சேர்ந்து யுத்தம் செய்யப் போனான். அரபிதேசத்திலும் மற்றத் தென்தேசங்களிலும் வியாபாரம் செய்யும்படி சிவந்த சமுத்திரத்தின் கரையில் ஓர் துறைமுகத்தை ஏற்படுத்தி அங்கிருந்து கப்பல்களை அனுப்பினான். 1 இரா $22^{48}$.

யோசபாத்தின் பள்ளத்தாக்கு. **The valley of Jehoshapat.** எருசலேம் பட்டணத்திற்குக் கிழக்கிலிருந்த ஓர் ஆழ்ந்த பள்ளத்தாக்கு. மகமதியரும் யூதரும் இதிலே கடைசி நியாயத்தீர்ப்பு நடக்கும் என்று எண்ணினார்கள். ஆனால் யோவேல் தீர்க்கதரிசி தன் தரிசனத்தில் கண்ட பள்ளத்தாக்குக்கு இப்பெயர் உவமையாய்ச் சொல்லப்பட்டிருக்கலாம். யோவேல் $3^{2}$. நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கு காண்க.



யோசபாத்தின் பள்ளத்தாக்கு.

யோசிபியா. **Josibiah.** சிமியோன் கோத்திரத்தான். 1 நாளா $4^{35}$.

யோசியா. **Josiah.**

1. யோசியா தன் எட்டாம் வயதிலே யூதாவின் ராஜ்யத்தின் அரசனாக நியமிக்கப்பட்டு 31 வருஷக்காலம் ராஜ்யபாரம் செய்தான். (கி-மு. 639-608). இவனுடைய அரசாட்சியின் 18-ம் வருஷத்தில், நமக்குத் தெரிந்திருக்கிற உபாகமம் என்ற புஸ்தகம் தேவாலயத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இதில் நியாயப்பிரமாணங்களின்படி யோ

சியா எபிரெயருடைய ஆசாரங்களைச் சீர்திருத்தி, மேடைகளில் பலி செலுத்தும் வழக்கத்தை அகற்றி எருசலேமிலேமாத்திரம் பலிசெலுத்தும்படி அவர்களை வற்புறுத்தினான். யோசியா எப்போதும் நீதி நியாயத்தை விரும்பிவந்தான். பார்வோன் நேகோ என்ற எகிப்திய அரசன் அசீரியாவின்மேல் படையெடுத்து வந்தபோது யோசியா அவனை எதிர்த்துப் போர்செய்து அபஜெயமடைந்து மரித்தான். 2 இரா $21^{24}$ $22^{1}$–$23^{34}$ 2 நாளா $33^{25}$–$35^{23}$ எரே $22^{11}$ $25^{3}$. இஸ்ரவேல் காண்க.

2. செப்பனியாவின் மகன். சக $6^{10}$.

யோசுவா. **Joshua.**

எபிரெயபாஷையில் யோசுவா என்பதும் கிரேக்கு பாஷையில் இயேசு என்பதும் ஒரே பெயர்தான். இவைகளுக்கு 'யேகோவாவே மீட்பு' என்பது மூல அர்த்தம்.

1. மோசேயின் தோழன். கீழே காண்க.

2. பெலிஸ்தியர் உடன்படிக்கைப் பெட்டியைப் பெலிஸ்தியாவிலிருந்து அனுப்பும்போது அதைக் கொண்டுபோன வண்டி நின்ற வயலை உடையவன். 1 சாமு $6^{14}$.

3. யோசியாவின் காலத்தில் எருசலேமின் தலைவன். 2 இரா $23^{8}$.

4. யூதர்கள் எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது தேவாலயத்தை மறுபடியும் கட்டின ஆசாரியன். ஆகாய் $1^{12}$ சக $3^{1}$ எஸ்றா $3^{2}$ $4^{3}$ நெகே $12^{1}$ $10^{26}$. எஸ்றா நெகேமியா ஆகமங்களில் இவனுக்கு யெசுவா என்னும் பெயர் கூறப்பட்டிருக்கிறது.

யோசுவா. **Joshua.**

எண் $13^{8-16}$–ல் இவனுக்கு ஓசெயா என்று பெயர். இதற்கு 'யேகோவா மீட்பு' என்று அர்த்தம். இவன் எப்பிராயீம் கோத்திரத்தானாகிய நூனின் மகன். இவன் அமலேக்கியருடனே சண்டைசெய்யும் போது இஸ்ரவேலின் சேனாபதியாய் இருந்தான். யாத் $17^{8}$. சீனாய் மலையிலும் ஆசரிப்புக் கூடாரத்திலும் மோசேக்கு இவன் ஊழியன். யாத் $32^{17}$ $33^{11}$. இஸ்ரவேலர் பொன் கன்றுக்குட்டியை வணங்கின போது இவன் அதற்குச் சம்மதிக்கவில்லை. யாத் $24^{13}$ $32^{17}$. கானான் தேசத்தைப் பார்க்கும்படி மோசே அனுப்பின 12 வேவுகாரரில் காலேபும் யோசுவாவும் மாத்திரம் யேகோவாவின் மேல் நம்பிக்கையுடையவர்களாயிருந்தார்கள். எண் $13^{8}$ $13^{6,30}$. மோசே இறந்தபின் யோசுவா இஸ்ரவேல் அனைவருக்கும் தலைவனானான். இதற்கென்று மோசே இவனை அபிஷேகம் பண்ணியிருந்தான். உபா $34^{9}$ யோசு $1^{1}$. இவன் ஆறு வருஷத்தில் கானான் தேசத்துள் பிரவேசித்து எரிகோ பட்டணத்தைப்பிடித்து, குற்றஞ்செய்த ஆகானைத் தண்டித்து, கிபியோனியருடன் உடன்படிக்கை செய்து, பல யுத்தங்களில் ஜெயமடைந்து, தேசம் அனைத்தையும் பன்னிரு கோத்திரங்களுக்கும் பங்கிட்டுப் பல வருஷக்காலம் இஸ்ரவேலரை நியாயம் விசாரித்து, சீகேமிலே ஜனங்கள் எல்லாரையும் கூட்டி அவர்களுக்குப் புத்திமதி சொல்லி, பதிதாய் உடன்படிக்கை செய்யும்படி அவர்களை அழைத்து தனது 110–ம் வயதில் திம்னாத்சேராவில் மரித்தான். யோசு $19^{50}$ $24^{30}$.

யோசுவாவின் ஆகமம். **The Book of Joshua.**

1. நியாயாதிபதிகள் சாமுவேல் இராஜாக்கள் என்னும் மூன்று புஸ்தகங்களுடனே யோசுவா என்னும் ஆகமத்தையும் யூதரபிமார் சேர்த்து இவற்றிற்கு 'முந்திய தீர்க்கதரிசிகள்' என்று பெயரிட்டார்கள். இவைகளில் யோசுவாவின் ஆகமத்தில் யோசுவாவைக்குறித்து விபரமாய்ச்சொல்லியிருக்கிறதினால் இதற்கு யோசுவாவின் ஆகமம் என்று பெயர். நியாயாதிபதிகளின் காலத்துச் சரித்திரமனைத்தையும் கூறுகிற ஒரு பெரிய நூலில் இது ஒரு பாகம் என்று சிலர் நினைக்கிறார்கள்.

2. காலமும் ஆக்கியோனும்.

இதில் பூர்வீககாலத்தில் இரண்டு அல்லது மூன்று சரித்திரக்காரர் எழுதின சரித்திரங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது என்றும், இஸ்ரவேலர் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தகாலத்தில் ஒருவன் கடைசியாய் இந்தப் பூர்வீக சரித்திரங்களை இணைத்தெழுதினான் என்றும் தற்காலத்து வேதசாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். முதலில் எழுதினவர்கள் இன்னார் என்று தெரியாது. ஆனால் இந்த நூலிலே பழையகாலத்துச் சரித்திரம் விபரமாய்க் கண்டிருக்கிறது என்பதற்குச் சந்தேகமில்லை.

3. பொருளடக்கம்.

I. 1–12 அதி. கானான் தேசத்தில் இஸ்ரவேலர் அடைந்த ஜெயம். யோசுவாவின் அழைப்பு, எரிகோ பட்டணத்தின் முற்றுகை, ஆகான் செய்த பாவம், கிபியோனியருடன் செய்த உடன்படிக்கை, பல யுத்தங்களில் யோசுவா அடைந்த ஜெயம்.

II. 13—21 அதி. சீலோவில் கோத்திரங்கள் கூடினது. கோத்திரங்களுக்குத் தேசத்தைப் பங்கிட்டது. அடைக்கலப் பட்டணங்கள் ஸ்தாபிக்கப்பட்டது.

III. 22—24 அதி. ரூபன், காத், பாதி மனாசே என்னும் கோத்திரங்களை யோர்தான் நதிக்கு கிழக்கே அனுப்பினது. யோசுவா ஜனங்களை அழைத்து, எச்சரித்தது. சீகேமில் யேகோவாவுடனே உடன்படிக்கையைத் திரும்பவும் புதுப்பித்தது. யோசுவாவின் மரணம்.

யோசே. **Joses**.

1. இயேசுவின் சகோதரன். மத் $13^{55}$ $27^{56}$ மாற் $6^{3}$ $15^{40.47}$. இயேசுகிறிஸ்துவின் சகோதரர் காண்க.

2. இயேசுவின் முன்னோர்களில் ஒருவன். லூக் $3^{29}$.

3. பர்னபாவின் மறுபெயர். அப் $4^{36}$. (R. V. யோசேப்பு.)

யோசேபாள், யோசேபியாத். **Jehosheba, Jehoshabeath.** யூதா ராஜாவாகிய அகசியாவின் மகளை யோவாஸ் என்னும் குழந்தையைக் காப்பாற்றின யோராம் ராஜாவின் மகள். 2 இரா $11^{2}$ 2 நாளா $22^{11}$.

யோசேபியாத். **Jehoshabeath**. யோசேபாள் காண்க.

யோசேப்-பாசேபேத். **Josheb-Basshebeth**. =யாஷோபியாம். 2 சாமு $23^{8}$ 1 நாளா $11^{11}$.

யோசேப்பு. **Joseph**.

1. யாக்கோபின் மகன். அடியிற் காண்க.

2. இசக்கார் கோத்திரத்தான். எண் $13^{7}$.

3. ஆசாபின் மகன். 1 நாளா $25^{2}$.

4. அந்நியஜாதி பெண்ணை விவாகம் பண்ணின ஒருவன். எஸ்று $10^{42}$.

5. ஒரு ஆசாரியன். நெகே $12^{14}$.

6. கன்னிமரியாளின் புருஷன். அடியிற் காண்க.

7. அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு. அடியிற் காண்க.

8. கன்னிமரியாளின் புருஷனுடைய முன்னோர்களில் ஒருவன். லூக் $3^{24}$.

9. யோசேப்பின் முன்னோர்களில் இன்னொருவன். லூக் $3^{26}$ =யோசேக்கு. R. V.

10. யோசேப்பின் முன்னோர்களில் வேறொருவன். லூக் $3^{30}$.

11. யூதாஸ்காரியோத்துக்குப் பதிலாக நியமிக்கப்பட்டவன். இவனுக்கு 'நீதிமான்' என்னும் அர்த்தங்கொண்ட யுஸ்து என்று பெயர். அப் $1^{23}$. யுஸ்து காண்க.

யோசேப்பு. **Joseph**.

1. யாக்கோபின் மகன். யாக்கோபின் பதினோராம் மகன். ராகேலின் இரண்டு மக்களில் மூத்தவன். ஆரான் ஊரில் பிறந்தவன். யோசேப்பு என்பதற்கு 'கடவுள் விருத்தியாக்கக்கடவர்' என்று அர்த்தம். ஆதியாகமத்தின் கடைசிப்பாகத்தில் யோசேப்பைப்பற்றி விவரமாய்ச் சொல்லியிருக்கிறது.

யாக்கோபு வடகீழ்த் தேசத்திலிருந்து கானான் தேசத்துக்குத் திரும்பிவந்து எபிரோனில் குடியேறினபிறகு (ஆதி $35^{27}$) யோசேப்பு மற்ற சகோதரரைவிட அவனுக்குப் பிரியமுள்ளவனாயிருந்தான் என்று சொல்லியிருக்கிறது. இதினிமித்தம் இவன் சகோதரர் இவனைத் தந்திரமாய் எகிப்திலே அடிமையாய் விற்றுப்போட்டார்கள். ஆதி 40 அதி. இத்தேசத்திலே இவனுக்கு வந்த சோதனை, துன்பம், மேன்மை ஆகிய இவைகள் ஆதியாகமத்தில் விபரமாய்ச் சொல்லியிருக்கிறது. இவன் பார்வோனின் உத்தியோகஸ்தருக்குள் விசேஷித்தவனானான். ஆவேன் பட்டணத்தில் எகிப்தியர்களில் பிரதான ஆசாரியனுடைய மகளை விவாகம்பண்ணினான். யோசேப்பு சேவித்த பார்வோன் என்னும் பட்டப்பெயர் தரித்த ராஜாவின் சொந்த பெயர் நமக்குத் தெரியாததினால் இவன் எகிப்து தேசத்திலிருந்த காலத்தைப்பற்றி நமக்குத் தெரியாது. ஆனால் இவன் ஏறக்குறைய கி-மு. 1650-ம் வருஷத்தில் இறந்துபோனான் என்று நாம் சொல்லலாம்.

'இவன் பிழைக்கும்படி கடவுள் உத்தரவு செய்கிறார்' என்று அர்த்தங்கொண்ட சாப்நாத்பன்னேயா என்னும் பெயரைப் பார்வோன் ராஜா யோசேப்புக்கு இட்டதினால் யோசேப்பின்பேரில்கடவுளினுடையதயவு விசேஷமாய் இருக்கிறது என்று எகிப்தியர் நினைத்ததாகத் தோன்றுகிறது. நைல் நதியில் உண்டான வருஷாந்தப் பிரவாகத்தினால் எகிப்து தேசத்துக்கு நீர்ப்பாய்ச்சல் உண்டானது. அந்தப் பிரவாகம் குறைந்திருந்தால் அநேக நாடுகளுக்கு நீர்ப்பாய்ச்சல் இராது. இவ்விதமாய் நீர்வளம் குன்றிப் போகும்போது பஞ்சம் உண்டாகும். இப்படிப்பட்ட கஷ்டகாலங்களில் ஜனங்களுக்கு ஆகாரங்கொடுப்பது ராஜாங்கத்தாருடைய விசேஷ கடமை என்று யோசேப்பு நினைத்து, நைல் நதியில் பிரவாகம் உண்டாகும் வருஷங்களில் விளையும் விளைச்சலிலிருந்து ஒரு பங்கை எடுத்துக் களஞ்சியங்களில் சேர்த்து வைத்து, இவ்விதமாய் வரப்போகும் பஞ்சக்காலத்துக்கென்று அதிகமான தானியத்தை ஆயத்தம் பண்ணினான். இவன் ஜனங்களிடத்திலிருந்து எடுத்த தானியத்தைப் பஞ்சகாலத்

தில் கிரயத்துக்கு விற்கிறது நமக்கு ஆச்சரியமாயிருக்கலாம். நமது அபிப்பிராயத்தின்படி க்ஷேமகாலத்தில் இவன் பிரஜைகளிடத்திலிருந்து வாங்கின தானியத்தைக் கஷ்டகாலத்தில் கிரயமில்லாமல் கொடுத்தல் நியாயமாகத் தோன்றினாலும் அந்தத் தேசத்தின் வழக்கம் நமக்குத் தெரியாததினாலே நாம் யோசேப்பின்மேல் குற்றஞ்சாட்ட விரும்ப மாட்டோம். ஆதி $47^{15}$. இவன் செய்த பிரயத்தனத்தினால் எகிப்தியருடைய நிலமெல்லாம் பார்வோன் ராஜாவின் கைவசம் ஆயிற்று. ஆதி $47^{24}$. இந்தப் பஞ்சம் எகிப்து தேசத்தில் மாத்திரம் அல்ல, கானான் தேசம் முதலிய இதர தேசங்களிலும் கொடூரமாயிருந்ததினால் யாக்கோபு தன் புத்திரரை எகிப்து தேசத்துக்கு அனுப்ப வேண்டியிருந்தது. அவர்கள் யோசேப்பை அறியாவிட்டாலும் யோசேப்பு அவர்களை அறிந்துகொண்டு அவர்களிடத்தில் உண்மையை விசாரித்து, கடைசியில் தான் இன்னான் என்று அவர்களுக்குத் தெரிவித்து, அவர்களை எகிப்து தேசத்துக்கு அழைத்து, அவர்களையும் யாக்கோபையும் வெகு பத்திரமாய்க் காப்பாற்றினான். ஆதி 42–47. யாக்கோபு 17 வருஷம் எகிப்து தேசத்தில் வாசஞ்செய்து முதிர்வயதுள்ளவனாய் இறந்தான். இதற்குமுன் அவன் யோசேப்பின் இரண்டு புத்திரர்களையும் விசேஷமாய் ஆசீர்வதித்தான். எகிப்தியருடைய வழக்கத்தின்படி, யோசேப்பு யாக்கோபின் பிரேதத்திற்குச் சுகந்த வர்க்கமிட்டு 70 நாள் துக்கங்கொண்டாடி, கானான் தேசத்திலே மக்பேலா என்னும் கெபியிலே அவனை அடக்கம் பண்ணினான். யோசேப்பு 110 வருஷம் உயிரோடிருந்தான் என்று சொல்லியிருக்கிறது. கடைசியிலே இவன் எகிப்து தேசத்திலேயே மரித்தான். இவனுடைய சந்ததியார் எகிப்தியருடைய வழக்கத்தின்படி இவனுடைய பிரேதத்துக்குச் சுகந்த வர்க்கமிட்டு அதைப் பெட்டியிலே வெகு பத்திரமாய் வைத்தார்கள். ஆதி $50^{26}$. பின்பு இஸ்ரவேலர் கானான் தேசத்துக்குத் திரும்பிப் போகும்போது அந்தப் பெட்டியைத் தங்களுடன் கொண்டுபோய், அத்தேசத்தை ஜெயித்தபொழுது சீகேம் ஊரிலே அதை அடக்கம்பண்ணினார்கள். ஆதி $50^{26}$ யாத் $13^{19}$ யோசு $24^{32}$.

யோசேப்பின் குணாதிசயங்களைப்பற்றி நாம் விசாரணை செய்தால் இவன் சோதனைக்கு உட்படாமல் அதை மேற்கொண்டான் என்றும், துன்பத்தில் வெகு பொறுமையைக் கையாடினான் என்றும், தான் உயர்வடைந்தபொழுது தாழ்மையோடும் புத்தியோடும் நடந்தான் என்றும், அநியாயஞ்செய்கிறவர்களுக்கு இரக்கங்காட்டினான் என்றும் அறிகிறோம்.

இவனுடைய இளம்பிராயத்தில் யாக்கோபு இவனுக்கு அளவுக்கு மிஞ்சின தயவு காட்டினதினாலும், இவன் தன்னை மிதமிஞ்சி மெச்சிக்கொண்டதினாலும், இவனுடைய சகோதரர் இவன்மேல் பொறாமைகொண்டு இவனைத் துன்பப்படுத்துகிறதற்கு இவனே இடங்கொடுத்தான் என்றாலும், தான் பெரியவனானபோது நல்லாலோசனையுடையவனாயிருந்தான் என்று சொல்ல வேண்டும்.

யூதர்களும் கிறிஸ்தவர்களும் துன்பத்திலும் சுகத்திலும் இவன் காட்டிய முன்மாதிரியை எப்பொழுதும் சிறப்பித்து வருகிறார்கள் என்று காண்போம். எபி $11^{22}$.

2. கன்னிமரியாளின் புருஷன். **Joseph the husband of Mary**.

யூதர்கள் எல்லாரும் தங்கள் வம்ச அட்டவணைகளைப் பத்திரமாய் வைத்திருந்தார்கள். யோசேப்பின் வம்ச அட்டவணையின்படி இவன் தாவீதின் வம்சத்தைச் சேர்ந்தவன். மத் $1^{20}$. தாவீதின் ஊராகிய பெத்லகேமில் பிறந்தவனாகிய இவன் நாசரேத்தூருக்குப் போய் அங்கே தச்சனாயிருந்தான். லூக் $2^{4}$ மத் $13^{55}$.

மரியாளைத் தனக்கு மனைவியாக நியமகஞ்செய்யும்போது, இவன் அவளுக்கு மூத்தவனாய் இருந்தான் என்று தோன்றுகிறது. மரியாள் எப்பொழுதும் கன்னிகையாய் இருந்தாள் என்று நம்பின சிலர் இவனுடைய பிள்ளைகள் இவனுடைய முதல் தாரத்துக்குப் பிறந்த பிள்ளைகளென்றும், முதல் தாரம் இறந்தபின் இவன் மரியாளை விவாகஞ்செய்தான் என்றும் சொல்லுவார்கள். ஆயினும் இந்தப் பாரம்பரியத்துக்குப் போதிய அத்தாட்சி இல்லை. இவன் யூதமார்க்க ஆசாரத்தின்படி வெகு பயபக்தியாய் நடந்தான். லூக் $2^{21,41}$. மரியாளை இவன் விவாகம் முடிக்குமுன் அவள் கர்ப்பவதியாய் இருப்பதை அறிந்து அவள் பாவத்தில் விழுந்தவள் என்று நினைத்தும் அவளுடைய விஷயத்தில் தயவுபாராட்டினதினாலே அவன் இரக்கசாலி என்று காண்கிறோம். மத் $1^{19}$. இவன் மகா பக்திமானாயிருந்து தான் தரிசனத்தில் கண்டவைகளை நம்பி, தான் பெற்ற கட்டளைகளின்படி நடந்தான். மத் $1^{20}$ $2^{13,19}$. மரியாளிடத்தில் அற்புதமாய்ப் பிறந்த இயேசுவின்மேல் இவன் அன்புவைத்து, தகப்ப

னைப்போல் அவருக்குச் சவரக்ஷணைசெய்து வந்தான். லூக் $2^{33}$ யோவா $1^{45}$. இயேசு தேவாலயத்திலே சாஸ்திரிகளோடு பேசிக் கொண்டிருக்கும்பொழுது, யோசேப்பும் மரியாளும் அவரைக் கண்டு தங்கள் ஊருக்குக் கூட்டிக்கொண்டு போனபிறகு யோசேப்பைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. லூக் $2^{51}$. ஆகவே இயேசு தமது ஊழியத்துக்குள் பிரவேசிக்கிறதற்கு முன்னமே யோசேப்பு இறந்துபோனான் என்று நினைக்கிறதற்கு இடம் உண்டு.

3. அரிமத்தியா ஊரானகிய யோசேப்பு. **Joseph of Arimathea.**

செல்வத்திலும் பக்தியிலும் சிறந்த இவன் யூதர்களின் மகா ஆலோசனைச் சங்கத்தைச் சேர்ந்தவனாயிருந்தான். இவன் இயேசுவின் சீஷர்களில் தான் ஒருவன் என்று அறிக்கையிடாமல் ரகசியமாய் அவர்மேல் பக்திவைத்தான். இயேசுவின் சத்துருக்கள் அவரை விசாரிக்கும்பொழுது, இவன் ஆலோசனைச் சங்கத்தில் இல்லை என்று தோன்றுகிறது. இயேசு இறந்தபின் இவன் பயமில்லாமல் பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் பிரேதத்தைக் கேட்டு வாங்கித் தன் தோட்டத்திலுள்ள புதிய கல்லறையில் அதை அடக்கம் பண்ணினன். மத் $27^{55}$ மாற் $15^{42}$ லூக் $23^{50}$ யோவா $19^{38}$.

யோஸ்பெகாஷா. **Joshbekashah.** ஏமானின் மகன். ஒரு பாடகன். 1 நாளா $25^{4,24}$.

யோஷா. **Joshah.** சிமியோன் கோத்திர தலைவன். 1 நாளா $4^{34}$.

யோட். **Jod.** எபிரெய எழுத்தட்டவணையில் பத்தாம் எழுத்து. சங் $119^{73-80}$ வசனங்களில் ஒவ்வொரு வசனத்தின் முதல் பதத்தின் முதல் எழுத்து 'யோட்.'

யோதாம். **Jotham.**

1. கிதியோனின் இளைய குமாரன். சிகேம் ஊரார் தங்களுக்கு அபிமெலேக்கை ராஜாவாக ஏற்படுத்தினபோது யோதாம் அவர்களுக்கு 'மரங்களின் உவமையைச்' சொல்லி அபிமெலேக்கின் துர்க்குணத்தை எடுத்துரைத்தான். சிகேமியர் இவனுடைய வார்த்தையை அசட்டை செய்தபடியால் இவன் ஓடிப்போக வேண்டியதாயிற்று. நியா 9 அதி.

2. யூதாவின் ராஜாவாகிய உசியாவின் மகன். கி-மு. 737-735வரை ராஜ்யபாரம் பண்ணினன். இவனுடைய தகப்பன் குஷ்டரோகியாயிருந்தபடியால், இவன் தன் தகப்பனுக்குப் பதிலாக இராஜ பிரதிநிதியாயிருந்ததாகத் தோன்றுகிறது. இவன் காலத்தில் ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்து வந்தான். தேவாலயம் இவனால் பழுதுபார்க்கப்பட்டது. இவன் இஸ்ரவேல் ராஜ்யத்துடனே யுத்தம் செய்தான். 2 இரா 15 அதி. 2 நாளா $26^{21}$ ஏசா $1^{1}$ ஓசி $1^{1}$ மீகா $1^{1}$.

3. காலேபின் வம்சத்தான். 1 நாளா $2^{47}$.

யோத்பா. **Jotbah.** யூதாவிலுள்ள ஓர் ஊர். 2 இரா $21^{19}$.

யோத்பாத்தா. **Jotbathah.** இஸ்ரவேலர் பிரயாணத்தில் பாளயமிறங்கின இடம். எண் $33^{33}$ உபா $10^{7}$.

யோபாப். **Jobab.**

1. யொக்தானின் மகன். ஆதி $10^{29}$.
2. ஏதோமின் ராஜா. ஆதி $36^{36}$.
3. மாதோனின் ராஜா. யோசு $11^{1}$.
4, 5. இரண்டு பென்யமீனர். 1 நாளா $8^{9,18}$.

யோபின் ஆகமம். **The Book of Job.**

I. யோபு. **Job.** எசே $14^{12}$–லும் யாக் $5^{11}$–லும் யோபின் நீதி நியாயத்தையும் பொறுமையையும்பற்றிச் சொல்லியிருந்தும் யோபின் ஆகமத்தில் யோபைப்பற்றிச் சொன்னவைகள் மட்டுமே நமக்குத் தெரியும். இதின்படி இவன் யோர்தான் நதிக்குக் கிழக்கேயுள்ள தேசத்திலாவது சாக்கடலுக்குத் தென்கிழக்கேயுள்ள தேசத்திலாவது வாசஞ்செய்தான் என்றும், இவனும் இவனுடைய சிநேகிதர்களும் இஸ்ரவேலர் அல்ல அந்நியஜாதியார் என்றும் நாம் நினைக்கவேண்டியிருக்கிறது.

II. ஆகமம். 1. வேதாகமத்தில் இதன் இடம்.

எபிரெயர்கள் வேதாகமத்தை 'நியாயப்பிரமாணம்', 'தீர்க்கதரிசிகள்', 'எழுதப்பட்டவைகள்' என மூன்று பாகங்களாகப் பிரித்தார்கள். அவர்கள் யோபின் ஆகமத்தை மூன்றும் பாகத்தில் சங்கீதங்களோடும் நீதிமொழிகளோடும் சேர்த்தார்கள்.

2. பொருளடக்கம்.

இந்த ஆகமத்தில் குணசாலிக்குண்டாகும் துன்பத்தின் காரணத்தைப்பற்றிய ஆராய்ச்சியைக்குறித்து விபரமாய்ச் சொல்லியிருக்கிறது.

*a*. 1—2 அதி. முகவுரை. யோபின் சுகக்ஷேமம். கடவுள் உத்திரவின்படி நேரிட்ட துன்பங்கள். அவனிடத்தில் காணப்பட்ட உண்மை. மித்திரர்கள் வருதல்.

*b*. 3. அதி. யோபு துன்பமுற்றுத் தனது ஜனனதினத்தைச் சபிக்கிறான்.

*c*. 4—28 அதி. யோபின் மித்திரர்கள் செய்த சம்பாஷணைகள். பாவம் செய்த

தினாலே ஒருவனுக்குத் துன்பம் வரும் என்று நினைத்த இவனுடைய சிநேகிதர் யோபுக்கு நேரிட்ட துன்பங்களைப் பார்த்து இவன் பாவம் செய்திருப்பான் என்று தீர்மானித்து அதைக்குறித்து அறிக்கையிட வேண்டுமென்று இவனுக்குப் புத்திமதி கூறுகிறார்கள். தேமானியனாகிய எலிப்பாஸ், சூகியனாகிய பில்தாத், நாகமாத்தியனாகிய சோப்பார் ஆகிய இவர்களே யோபின் மித்திரர். இவர்கள் யோபின்மேல் குற்றஞ்சாட்டப் பிரயாசப்படும்பொழுது இவன் அதற்குப் பதிலாகத் தன் மனச்சஞ்சலத்தை வெளியிட்டாலும், தான் பாவம் செய்யவில்லையென்று உறுதியாய்ச் சொல்லுகிறான். அந்தச் சம்பாஷணைகள் மூன்று:

i. 4–14 அதி.
ii. 15–21 அதி.
iii. 22–28 அதி.

*d*. 29–39 அதி. யோபு முந்தின காலத்தில் தான் அனுபவித்த சுகத்தையும் தற்காலத்தில் தனக்குள்ள துயரத்தையும் தான் கடவுளுக்கு முன்பாகச் செய்த உடன்படிக்கையையும் நல்லொழுக்கத்தையும் விவரமாய்ச் சொல்லுகிறான்.

32–37 அதி. யோபு தனது பார்வையில் தான் நீதிமானாயிருப்பதை இவனுடைய மூன்று மித்திரர்களும் பார்த்து மௌனமாயிருக்க, எலிகூ என்னும் இன்னொருவன் வந்து யோபு சொன்னதையும் அந்த மூன்று சிநேகிதர் சொன்னவைகளையும் கண்டித்து, யோபு செய்த பாவத்தைக்குறித்துப் பிரசங்கம்பண்ணுகிறான். எலிகூவினுடைய அபிப்பிராயத்தின்படி யோபு தன்னை நீதிமான் என்று சொல்வது மகா பாவம் (யோபு $34^{5}$); துன்பம் ஒருவித சிக்ஷையும் ஜனங்கள் முன்னேறுகிறதற்கு ஒரு ஏதுவுமாயிருக்கிறது (யோபு $33^{19}$ $36^{8}$); கடவுள் ஜனங்களையும் தனித்தனி ஆட்களையும் நடத்தி நீதி நியாயத்தைச் செய்கிறார்.

யோபு இதற்குப் பதிலாக ஒன்றும் சொல்லுகிறதில்லை.

எலிகூ என்பவனைக்குறித்து நமக்கு வேறொன்றும் தெரியாது.

38–42 அதி. யேகோவா செய்த இரண்டு உபநியாசங்கள்.

(i) $38^{1}$–$40^{2}$. இதில் யேகோவா சிருஷ்டித்த வானலோகத்தின் மேன்மையும் பூலோக சிருஷ்டிப்பின் மேன்மையும் அவருடைய அளவற்ற ஞானமும் விபரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. யேகோவா அத்தனை சர்வஞானமுள்ளவரா யிருக்கிறதினாலே மனுஷன் அவருடைய செய்கையைக் குறித்து மொறுமொறுப்பது ஏன்?

(ii) $40^{3-5}$. யோபு பிரதியுத்தரம் சொல்லுகிறான்.

(iii) $40^{6}$–$41^{34}$. யேகோவா செய்த இரண்டாம் உபநியாசம். இதிலும் யேகோவாவின் சர்வஞானம் தெளிவாகிறது.

(iv) $42^{1-6}$. யோபு யேகோவாவினுடைய மேலான ஞானத்தையும் வல்லமையையுங்கண்டு, அதைக்குறித்து ஆக்ஷேபனை செய்யாமல் அவருடைய சித்தமே நல்லது என்றறிந்து அதற்கு அடங்குகிறான்.

(v) $42^{7-17}$. முடிவுரை. இதில் கடவுள் யோபின் மித்திரர்களைக் கண்டித்து யோபுக்கு மறுபடியும் சுகக்ஷேமத்தை அருளுகிறார்.

3. நூலின் தன்மை.

எபிரெயர் அதிக விருப்பத்தோடு வாசித்துவந்த ஞான ஆகமங்களில் யோபின் புஸ்தகமும் ஒன்று என்று நாம் அறியவேண்டும். ஞானாகமம் காண்க. இந்நூலிலே தத்வசாஸ்திரத்துக்கும் சமயாசாரத்துக்கும் இசைந்த விஷயங்களைக் குறித்து நூலாசிரியன் விசாரணைசெய்து அதற்குரிய புத்திபோதனைகளைச் சொல்லுகிறான்.

4. நோக்கம்.

நாம் முன்னே சொன்னதுபோல நீதிமான்களுக்குத் துன்பம் நேரிடுகிறதைக் குறித்து இந்நூலானது விசாரணை செய்கிறது. இதில் பக்திமான்கள் படுகிற துன்பம், பொறுமையோடே அவர்கள் அதைச் சகித்தல், அவர்கள் மனதில் உண்டாகும் பயம், சந்தேகம், உண்மை முதலியவைகளைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. நீதிமான்கள் துன்பப்படுகிறதைப்பற்றிய சந்தேகத்தைத் தீர்க்கும்படி யேகோவா தர்க்கவாதம் பண்ணாமல், சிருஷ்டிப்பிலும் பராமரிப்பிலும் தாம் இயற்றும் அற்புதங்களை அவர்களுக்குக் காண்பித்து, பக்தர்கள் யேகோவாவின் சித்தத்தைப் பூரணமாய் அறியமுடியாது என்றும், அவர்கள் அவருடைய திருச்சித்தமே சிறந்தது என நம்பவேண்டும் என்றும் கற்பிக்கிறார். சில சமயங்களில் துன்பத்துக்குக் காரணம் தெரியாவிட்டாலும், தகுந்த காரணம் இல்லாமல் அவர் அவர்களைத் துன்பப்படுத்தமாட்டார். துன்பத்தினாலே அவர் அவர்களைச் சிக்ஷிக்கிறபடியால் அவர்கள் அதன் மூலமாய்ப் பக்தி விருத்தி யடையவேண்டும். யோபு $36^{15,22}$ $42^{5}$. மற்ற எபிரெய நூல்களில் இருப்பதுபோலவே இந்நூலிலும் மா

ணத்துக்குப் பிற்பாடு மனிதர்கள் அடைய வேண்டிய நிலைமையைப்பற்றியும், ஷெவ்வோல் என்னும் பாதாளத்தைப்பற்றியும் சொல்லியிருக்கிறது. யோபு $14^{13}$ $19^{25}$.

5. இந்நூலின் ஆட்கள்.

இந்த நூலில் ஆறு பேர்களைக்குறித்து விபரமாய்ச் சொல்லியிருக்கிறது.

i. யோபு. இவன்தான் இந்தக் காவியத்துக்குக் கதாநாயகன். இவன் அநுபவித்த சுகம், பட்ட கஷ்டம், சொன்ன வாக்கியம், கடவுளிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட பாக்கியம் முதலிய இவைகள் விசேஷமானவைகள்.

ii. சாத்தான். இவனைக்குறித்து நாம் கவனிக்கவேண்டிய சில விஷயங்கள் முகவுரையில் உண்டு. சாத்தானே பிசாசு என்றும், இவன் மகா பொல்லாதவன் என்றும் பிந்தினகாலங்களில் ரபிமார் நினைத்தார்கள். இந்த நூலிலோ அவன் பக்திமான்களை இம்சைப்படுத்துகிறவனும் அவர்கள் பாக்கியத்தின்மேல் பொறாமைகொண்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவனுமா யிருக்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

iii, iv, v. மூன்று மித்திரர்கள். எலிப்பாஸ் என்பவன் வயதிலும் அறிவிலும் முதிர்ந்தவன். தீர்க்கதரிசனம் உரைக்கிறவன். யோபு $4^{12}$. பில்தாத் என்பவன் முன்னோர் சொன்னவைகளை அதிக ஆவலுடனே நம்பினான். சோப்பார் என்பவன் இளைஞனும் தான் நம்பினவற்றைக் கொஞ்சம் ஆத்திரத்துடனே சொல்லுகிறவனுமா யிருக்கிறான்.

vi. எலிகூ. இளைஞனும் தைரியமுள்ளவனும் ஆத்திரக்காரனுமாயிருந்தாலும், அவன் மற்றச் சிநேகிதரைக்காட்டிலும்கடவுளைப் பற்றிய நல்லெண்ணம் அடைந்து அதை மகா சாதுரியத்துடனே சொல்லுவான்.

6. காலம்.

எபிரெய ரபிமாரில் சிலர் மோசேதான் இந்த ஆகமத்தை எழுதினான் என்றார்கள். யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த பிறகு இது எழுதப்பட்டது என்று வேறு சில ரபிமார் சொன்னார்கள். எபிரெயர்களுக்குள்ளே இவ்வளவு வித்தியாசம் இருக்கும்போது இதைப்பற்றி நாம் தீர்மானமாய் யாதொன்றும் சொல்வது கூடாதகாரியம். தற்காலத்து வேதசாஸ்திரிகள் இதன் ஆக்கியோன் ஒரு யூதன் என்றும், யூதர்கள் பாபிலோனியாவில் சிறையிருப்புக்குக் கொண்டுபோகப்பட்டபின் இது எழுதப்பட்டது என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆதலால் கி-மு. 600–400–வுக்கு இடையில் இது எழுதப்பட்டது என்று நாம் சொல்லலாம்.

7. ஆக்கியோன்.

சிலர் இதற்கு ஆக்கியோன் மோசே என்றும் சிலர் சாலொமோன் என்றும் சிலர் பாரூக் என்றும் சிலர் எரேமியா என்றும் கூறுகிறார்கள். இதைப்பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது. இவன் எபிரெயனும் வனாந்தர மிருகஜாதிகளின் வழக்கபழக்கங்களை நன்றாய் அறிந்திருந்தவனும் அக்காலத்து வான சாஸ்திரமும் எபிரெயர் ஞானத்தைக்குறித்து அடைந்திருந்த புத்திபோதனைகளும் நன்றாய்த் தெரிந்திருந்தவனும் எபிரெயபாஷைச் செய்யுள் இயற்றுவதில் மகா சாமர்த்தியனுமாய் இருந்தான் என்று நாம் சொல்லக்கூடும்.



யோப்பா

யோப்பா. **Joppa**. தென் பலெஸ்தீனாவின் மேல் ஓரத்திலிருந்த ஓர் விசேஷித்த துறைமுகம். பூர்வீக காலமுதல் இத்துறைமுகப் பட்டணத்திலிருந்து மத்தியதரைக் கடலோரத்திலுள்ள தேசங்களுக்கு வியா

பாரிகள் போவார்கள். எபிரெயரின் சிறையிருப்புக்குமுன் இது தாண் கோத்திரத்தாருடைய நாட்டைச் சேர்ந்திருந்தபோதிலும், இது அவர்களுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டிருக்கவில்லை. யோசு $19^{46}$ 2 நாளா $2^{16}$ எஸ்று $3^{7}$ யோனு $1^{3}$.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பங்கி. பேதுரு இவ்வூரில் தபித்தாளை உயிரோடெழுப்பினுன். அப் $9^{36}$. இங்கிருந்து புறப்பட்டு, கொர்நேலியுவின் வீட்டுக்குப் போனுன். அப் $10^{5}$. தற்காலத்தில் இப்பட்டணத்திலிருந்து எருசலேமுக்கு ஓர் இருப்புப்பாதை உண்டு. இதில் வியாபாரம் மிகுதி. தற்காலத்தில் இது யாப்போ என்று அழைக்கப்படுகிறது. யோசு $19^{46}$.

யோயதா. **Jehoidah**. யோயதா காண்க.

யோயாக்கீம். **Jehoiakim**. பார்வோன் நேகோ என்னும் எகிப்து தேசத்து ராஜா யூதா ராஜ்யத்தை ஜெயித்து யோசியா ராஜாவின் மகனுகிய யோவாகாஸ் என்பவனுக்குப் பதிலாக யோவாகாவின் சகோதரனுகிய எலியாக்கீம் என்பவனை சிம்மாசனத்தில் ஏற்றி, இவனுக்கு 'யேகோவா உயர்த்துகிறூர்' என்று அர்த்தம்கொண்ட 'யோயாக்கீம்' என்ற நாமத்தைச் சூட்டினுன். இவன் கி-மு. 608—597 மட்டும் அரசாட்சி செய்தான். ஜனங்கள் செய்த அமஞ்சிவேலையின் மூலமாய் அநேக கட்டடங்களைக் கட்டினுன். 2 இரா $23^{24}$–$24^{19}$. இவன்காலத்தில் எரேமியா தீர்க்கதரிசி பாருக்கின் உதவியைக்கொண்டு ஜனங்களுக்குப் புத்திபோதனை செய்யும்படி தான் முற்கூறிய பிரசங்கச் சுருக்கத்தை எழுதினுன். ராஜாவோ அதை அசட்டை செய்து, தீர்க்கதரிசியை அவமதித்து உபத்திரவப்படுத்தினுன். எரே $22^{3}$ $26^{20}$ $36^{1.32}$.

இவன்காலத்தில் பாபிலோனியர் எகிப்தியரை ஜெயித்ததினிமித்தம் இவன் பாபிலோன் ராஜாவுக்குக் கீழ்ப்பட்டிருந்தான். ஆனுல் மூன்று வருஷத்துக்குப்பின் பாபிலோன் ராஜாவுக்கு இவன் துரோகம் செய்ததினிமித்தம் அந்த ராஜா யூதாவின் மேல் படையெடுத்துவந்தான். ஆனுல் பாபிலோன் ராஜா எருசலேமுக்குள் பிரவேசிக்குமுன்னதாக யோயாக்கீம் மரித்துப்போனுன். 2 நாளா $36^{8}$.

யோயாக்கீன். **Johoiachin**. யோயாக்கீமின் மகன். 2 இரா $24^{6}$ எரே $52^{31}$. எக்கோனியா காண்க.

யோயாரீப். **Jehoiarib, Joiarib**.

1. எருசலேமிலுள்ள ஆசாரியன். 1 நாளா $9^{10}$.

2. ஆரோனின் சந்ததியான். 1 நாளா $24^{7}$.

3. எஸ்று இத்தோவிடம் அனுப்பின புத்திசாலி. எஸ்று $8^{16}$.

4. எருசலேமில் வசித்த ஒரு தலைவன். நெகே $11^{5}$.

5. ஓர் ஆசாரியன். நெகே $11^{10}$ $12^{6}$.

யோய்தா. **Joiada**. யோயதா காண்க.

யோராது. **Jorah**. சிறையிருப்பிலிருந்து வந்த ஒரு குடும்பம். = ஆரீப். எஸ்று $2^{18}$ நெகே $7^{24}$.

யோராம். **Jehoram, Joram**.

1. இஸ்ரவேல் ராஜாவாகிய யோராம் ஆகாபின் மகன். 2 இரா $3^{1}$. இவன் கி-மு. 851–842 வரு அரசாண்டான். இவனும் யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும் ஒன்றுசேர்ந்து மோவாப் ராஜாவை ஜெயிக்கும்படி யுத்தத்திற்குப்போய் அபஜெயமடைந்தார்கள் என்று தோன்றுகிறது. 2 இரா $3^{4}$. இவன் காலத்தில் சீரியர்கள் சமாரியாவை முற்றுகைபோட்டார்கள். 2 இரா 6, 7 அதி. இவன் ராமோத் கீலேயாத்திலே காயப்பட்டபோது ஏகூ கலகம் செய்து ராஜ்யபாரத்தை அபகரித்துக் கொண்டான். 2 இரா 9, 10 அதி. இவன் காலத்தில் எலிசா தீர்க்கதரிசன ஊழியம் செய்துவந்தான். ஆகாப் ராஜாவின் துன்மார்க்கத்தை எலியா தீர்க்கதரிசி கண்டித்த வண்ணமாக, யோராமின் துன்மார்க்கத்தை எலிசா கண்டித்து, ஏகூ இவனுக்கு விரோதமாகக் கலகம் செய்யும்படி தூண்டினுன்.

2. யூதா ராஜ்யத்தை ஆண்ட யோராம் ராஜா யோசபாத்தினுடைய குமாரன். இவன் ஆகாபின் குமாரத்தியாகிய அத்தலியாளை விவாகம் செய்திருந்தான். கி-மு. 851–843 வரு அரசாட்சிசெய்தான். இவனுடைய அதிகாரத்தை ஏதோமியர் புறக்கணித்து வந்தார்கள். இவன் இஸ்ரவேலின் ராஜாக்களைப்போல் கர்த்தருடைய பார்வைக்கு ஆகாதவனுய் நடந்தான். 2 இரா $8^{16}$ 2 நாளா $21^{1}$.

3. நியாயப்பிரமாணத்தைப் போதிக்கும்படி யோசபாத் அனுப்பிவைத்த ஓர் ஆசாரியன். 2 நாளா $17^{8}$.

4. தோயீயின் மகன். 2 சாமு $8^{10}$. = அதோராம். 1 நாளா $18^{10}$.

5. ஓர் லேவியன். 1 நாளா $26^{25}$.

யோராய். **Jorai**. காத் தோத்திரத்தின் தலைவன். 1 நாளா $5^{13}$.

யோரீம். **Jorim**. இயேசுவின் முன்னோர்களில் ஒருவன். லூக் 3²⁹.

யோர்க்கேயாம். **Jorkeam**. காலேபின் சந்ததியான். 1 நாளா 2⁴⁴.

யோர்தான் நதி. **Jordan**.

1. பதம். பலெஸ்தீன தேசத்திலுள்ள நதிகள் யாவற்றிலும் பெரிய நதியாகிய யோர்தான் நதியின் பெயருக்கு 'இறங்கிப் பாய்கிறது' என்று அர்த்தம்.

2. ஊற்றுகளும் நாடும். இது எர்மோன் மலையிலுள்ள ஓர் ஊற்றினின்றும், தாண் தேசத்திலுள்ள இன்னொரு ஊற்றினின்றும், செசாரியா பிலிப்பியில் கெபியிலுள்ள ஓர் ஊற்றினின்றும் ஆக மூன்று ஊற்றுக்களினின்று உற்பத்தியாகி, ஊளே (*Huleh*) அல்லது மேரோம் என்னும் ஏரியினூடே சென்று, கலிலேயாக் கடலுக்குள் பாய்ந்து, அங்கிருந்து திரும்பவும் புறப்பட்டு அறுபத்தைந்துமைல் தூரம் ஓடி சாக்கடலில் சங்கமமாகிறது. இந்நதியின் உற்பத்தி ஸ்தானத்தினின்று சாக்கடலுக்கு உள்ள தூரம் 104 மைல் மாத்திரமானலும், இந்நதி நேராய் ஓடாமல் கோணிக் கோணிச் செல்லுகிறபடியால் இது ஏறக்குறைய 300 மைல் நீளமானதாய் இருக்கிறது என்று பூகோள சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். எர்மோன் மலை பக்கத்திலுள்ள இதின் ஊற்று மத்திய தரைக்கடல் மட்டத்துக்கு 1,700 அடிக்கு மேலேயிருக்கிறது. இந்த ஊற்றினின்று இது உற்பத்தியாகி, சமுத்திரமட்டத்துக்கு 1,292 அடிக்குக் கீழேயுள்ள சாக்கடலில் விழுந்து, தான் கடந்து சென்ற தேசத்தில் 3,000 அடிகள் இறங்குகிறதினிமித்தம் இந்நதி எப்பொழுதும் அதிவேகமாய் ஓடும். இந்நதி 90 முதல் 200 அடி அகலமானது. இதன் இருகரையிலும் பலவித மரங்களும் செடிவகைகளும் உண்டு. மாரிகாலத்தில் இந்நதி அதிக பிரவாகம் எடுத்தோடும். எரே 12⁵ 49¹⁹ 50⁴⁴ சக 11³.

3. உபநதி. பாசான் தேசத்தினின்று பாய்கிற யாமுக் என்னும் ஆறு இதன் விசேஷ உபநதி. இது கலிலேயாக் கடலுக்கு 5 மைலுக்குத் தெற்கே யோர்தான் நதியோடு கலக்கிறது. இதைக்குறித்து வேதாகமத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை. இதற்குத் தெற்கே ஏறக்குறைய முப்பது மைல் தூரத்தில் யாபோக் என்னும் இன்னொரு உபநதி கிழக்கிலிருந்து வந்து யோர்தான் நதியில் சங்கமமாகிறது. யாபோக் காண்க.

4. பாலங்களும் துறைகளும். ரோமர்கள் யோர்தான் நதியின்மேல் சில பாலங்கள் கட்டினார்கள். நதியைக் கடக்கிறதற்கான ஓர் 'படகை'ப்பற்றி தாவீதின் சரித்திரத்தில் சொல்லியிருக்கிறது. 2 சாமு 19¹⁸. வழக்கமாய் ஜனங்கள் ஆற்றில் இறங்கிக் கால்நடையாய் இதைக் கடந்துபோவார்கள். 1 சாமு 13⁷ 2 சாமு 10¹⁷.

5. யோர்தான் பள்ளத்தாக்கு. யோர்தான் நதி இறங்கிப்பாய்கிற பள்ளத்தாக்குக்கு அராபா என்று பெயர். 3 மைல் முதல் 12 மைல்வரை அகலமுள்ள இப்பள்ளத்தாக்கினிடையில் இந்நதி பாய்கிறது. இதன் பக்கத்திலுள்ள நிலமெல்லாம் மிகச் செழிப்பாயிருக்கிறது. சில இடங்களில் மழைகாலத்தில் வெள்ளம் கரைபுரண்டோடி பக்கத்திலுள்ள பூமியின்மேல் தங்கும். யோசு 3¹⁵. இது மற்றப் பாகத்தைவிட மகா செழிப்பானது. இப்பள்ளத்தாக்கின் இருபுறமும் மலைப்பிரதேச மாகையால் இதில் உஷ்ணம் அதிகம். இந்த உஷ்ணத்தாலும், நதியோரத்திலுள்ள ஈரத்தாலும் உண்டாகும் காய்ச்சலுக்கு ஜனங்கள் பயந்து இப்பள்ளத்தாக்கிலே குடியேற மாட்டார்கள். இதில் பலவித நாணல்களும் ஆமணக்குச்செடிகளும் மூங்கில்களும் முட்செடி வகைகளும் ஏராளமாய் உண்டு. இதிலுள்ள காடுகளில் நரி சிறுத்தை காட்டுப்பன்றி முள்ளுப்பன்றி கழுதைப்புலி பலவித மான்கள் முதலிய மிருகங்கள் இருந்தன. முன்காலத்திலே இதில் சிங்கமும் இருந்தது. யோர்தான் நதியில் 35 வகையான மீன்கள் உண்டு.

6. எல்லை.

யோர்தான் நதியானது கலிலேயா சமாரியா யூதேயா என்னும் மூன்று நாடுகளுக்கும் கிழக்கு எல்லையாயிருந்தது. பூர்வ காலத்தில் இது கானான் தேசத்துக்கும் பாசான் முதலிய கீழ்த்தேசங்களுக்கும் இடையிலுள்ள எல்லையாயிருந்தது. யோர்தான் நதிக்கு 'இக்கரை' என்றால் மேற்கு தேசமும், 'அக்கரை' என்றால் இதற்குக் கிழக்கேயுள்ள தேசமும் குறிக்கப்படும்.

7. வேதவாக்கியங்கள்.

வேதாகமத்தில் யோர்தான் நதியைப்பற்றிப் பல வசனங்களில் சொல்லியிருக்கிறது. லோத்து யோர்தான் நதியின் செழிப்பான பள்ளத்தாக்கை விரும்பி அதில் குடியேறினான். ஆதி 13¹⁰. யாக்கோபும் யோசுவாவும் இஸ்ரவேலரும் இதைக் கடந்துபோனார்கள். ஆதி 32¹⁰ யோசு 3¹⁷. இந்நதியைக் கடந்துபோகும் துறைகளை ஏகூத் பிடித்து மோவாபியரை ஜெயித்தான். நியா 3²⁸. கிடியோன் தாவீது எலியா எலிசா முதலிய எல்லாரும் யோர்தான் நதியைப் பற்றி அறிந்திருந்தார்கள். நியா 7²⁵ 2 சாமு

$17^{22}$ $19^{17}$ $20^{2}$ 1 இரா $17^{3}$ 2 இரா $2^{7}$. நாகமான் யோர்தான் நதியில் ஸ்நானம் செய்தான். 2 இரா $5^{10}$. யோர்தான் நதிக்குச் சமீபத்தில் யோவான்ஸ்நானகன் பிரசங்கம் பண்ணி, தனது சீஷருக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். மத் $3^{6}$ மாற் $1^{5}$. இயேசுவும் இதிலேதான் யோவான்ஸ்நானகனிடத்தில் ஞானஸ்நானம் பெற்றார். மாற் $1^{9}$ யோவா $1^{28}$. தற்காலத்தில் பல தேசங்களிலிருந்து பலெஸ்தீனாவுக்குச் செல்லும் பிரயாணிகளில் அநேகர் யோர்தான் நதியைப் பார்க்க வருகிறார்கள்.



யோர்தான்.

யோவதானுள். **Jehoaddan** யோவதானுள் காண்க.

யோவனான். **R. V. Joanan** =யோவன்னா. லூக் $3^{27}$.

யோவன்னா. **Joanna** செருபாபேலின் பேரன், இயேசுவின் முன்னோர்களில் ஒருவன். லூக் $3^{27}$.

யோவன்னாள். **Joanna** ஏரோதின் காரியகாரனான கூசாவின் மனைவி. லூக் $8^{3}$ $24^{10}$.

யோவா, யோவாக். **Joah.**

1. ஒரு 'கணக்கன்.' 2 இரா $18^{18}$ ஏசா $36^{3}$.

2. ஒரு லேவியன். 1 நாளா $6^{21}$.

3. ஒபேத் ஏதோமின் மகன். 1 நாளா $26^{4}$.

4. ஒரு மந்திரி. 2 நாளா $34^{8}$.

யோவாகாஸ். **Jehoahaz.** [யேகோவா காப்பாற்றுகிறார்.]

1. யோராமின் மகனாகிய யோவாகாஸ் கி-மு. 843–842 யூதாவின் ராஜாவாயிருந்தான். இவன் மறுபெயர் அகசியா. இவன் பாகால் முதலிய தேவதைகளை வணங்கினான். 2 இரா $8^{25}$ 2 நாளா $21^{17}$ $22^{6}$ $25^{23}$.

2. கி-மு. 814-797 இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாகாஸ். ஏகூவின் மகன். இவன் காலத்தில் சீரியர் இஸ்ரவேலுக்குத் துன்பப்படுத்தினார்கள். 2 இரா $13^{1}$-$14^{17}$.

3. யோசியாவின் மகனாகிய யோவாகாஸ் கி-மு. 608-ம் வருஷத்தில் மூன்று மாதங்களாக யூதாவின் ராஜா. எகிப்தியரின் ராஜாவாகிய நேகோ இவனை ஜெயித்து எகிப்து தேசத்தில் சிறையிலே இவனை வைத்தான். இவன் அங்கே மரித்தான். எரேமியா இவனுக்கு 'சல்லூம்' என்று பெயர் சொல்லுகிறான். 2 இரா $23^{30}$ எரே $22^{10}$.

4. மந்திரியாகிய யோவாக்கின் தகப்பன். 2 நாளா $34^{8}$.

யோவாக். **Joah.** யோவா காண்க.

யோவாஸ். **Jehoash, Joash.**

1. யூதா ராஜ்யத்தில் ஆளுகை செய்த யோவாஸ் ராஜாவின் காலம் கி-மு.836-796 வரு மட்டும். ஏகூவும் அத்தலியாளும் இவனுடைய குடும்பத்தார்களைக் கொலைசெய்தபோது, இவனுடைய தகப்பனுடைய சகோதரியும், ஒரு தாதியும் குழந்தையாயிருந்த இவனை இரட்சித்து ஆறு வருஷக் காலம் காப்பாற்றினார்கள். இவனுடைய ஏழாம் வயதிலே பிரதான ஆசாரியரும் காவலாளரும் இவனைத் தங்களுக்கு அரசனாக நியமித்தார்கள். சீரியர்கள் இவன்காலத்தில் யூதாவின்மேல் படையெடுத்து வந்தார்கள். கடைசியாக இவனுடைய பிரதானிகளில் சிலர் இவனைக் கொன்றார்கள். இத்தனை வருஷகாலம் ராஜ்யபாரம் செய்திருந்தாலும் இவனைக்குறித்து வேறொரு விசேஷமும் தெரியாது. 2 இரா 11, 12 அதி.

2. யோவாஸ் ராஜா இஸ்ரவேல் ராஜ்யத்திலே கி-மு. 797-781-ம் வருமட்டும் ராஜ்யபாரம் செய்தான். இவன் ஏகூவின் பேரன். இரண்டாம் யெரொபெயாம் இவனுடைய குமாரன். யோவாஸ் ராஜா சீரியர்களை ஜெயிப்பான் என்று எலிசா தீர்க்கதரிசி தான் மரிக்குமுன்னமே ஓர் அடையாளத்தைக் கொடுத்திருந்தான். 2 இரா $13^{14}$. இவன் சீரியர்களையும் யூதர்களையும் ஜெயித்தான். 2 இரா $14^{12}$.

3. பென்யமீனின் பேரன். 1 நாளா $7^{8}$.

4. தாவீதின் காலத்தில் எண்ணெய் கிடங்குகளின்மேல் விசாரிப்புக்காரன். 1 நாளா $27^{28}$.

5. கிதியோனின் தகப்பன். நியா $6^{11}$ $8^{32}$.

6. ஆகாபின் குமாரன். 1 இரா $22^{26}$.

7. யூதாவின் சந்ததியான். 1 நாளா $4^{22}$.

8. பென்யமீன் கோத்திரத்தான். 1 நாளா $12^{3}$.

யோவாப். **Joab**. தாவீதின் சகோதரியாகிய செருயாளின் மகன். 2 சாமு $2^{18}$ 1 நாளா $2^{16}$. தாவீது அரசாட்சிசெய்த காலமெல்லாம் இவன் தாவீதின் படைத்தலைவனாயிருந்தான். 2 சாமு $2^{13}$ $10^{7}$ 1 இரா $11^{15}$ 1 நாளா $27^{34}$. இவன் யுத்தத்தில் சாமர்த்தியமுள்ளவனும் ராஜாங்க விஷயங்களில் நல்ல ஆலோசனைக்காரனுமாயிருந்தான். ஏற்ற சமயங்களில் இவன் ராஜாவுக்கு விவேகமுள்ள எச்சரிப்பு செய்துவந்தான். 1 சாமு $19^{5}$ $24^{3}$. ஆனால் இவன் பழிவாங்கும் சிந்தையுள்ளவனும், பலதடவைகளில் தந்திரோபாயம் செய்தவனும், அப்னேரையும் அப்சலோமையும் அமாசாவையும் கொன்றவனுமாயிருந்தான். 2 சாமு $3^{27}$ $18^{14}$ $20^{9}$.

தாவீது உரியாவைக் கொன்றுபோட்ட விஷயத்தில் இவனும் சம்பந்தப்பட்டிருந்தான். 2 சாமு $11^{17}$. தாவீது தான் மரிக்கும்போது யோவாபைக் கொன்றுபோடும்படி சாலொமோனுக்குக் கட்டளையிட்டான். 1 இரா $2^{5}$. யோவாப் மகா போர்வீரனாயிருந்து இஸ்போசேத்தையும் (2 சாமு $2^{12}$) எபூசியரையும் (1 நாளா $11^{6}$) சீரியரையும் (2 சாமு $10^{13}$ $11^{1}$ $12^{26}$) அப்சலோமையும் (2 சாமு $18^{5}$) சேபாவையும் (2 சாமு $20^{4}$) ஜெயித்தான்.

2. காலேபின் சந்ததியான். 1 நாளா $2^{54}$.

3. செராயாவின் குமாரனாகிய ஓர் யூதன். 1 நாளா $4^{14}$.

4. செருபாபேலுடனே திரும்பி வந்தவன். எஸ்றா $2^{6}$.

5. எஸ்றாவுடனே திரும்பி வந்தவன். எஸ்றா $8^{9}$.

யோவான். **John**.

1. பிரதான ஆசாரியனாகிய அன்னாவின் இனத்தான். அப் $4^{6}$.

2. பர்னபாவின் சகோதரியாகிய மரியாளின் மகன். அப் $12^{12}$ 1 பேது $5^{13}$. மாற்கு காண்க.

3. பரி. பேதுருவின் தகப்பன். மத் $16^{17}$ யோவா $1^{42}$ $21^{15}$. 'யோவான்' என்பதும் 'யோனா' என்பதும் ஒன்றுதான்.

4. யோவான்ஸ்நானகன். அடியில்காண்க.

5. யோவான் அப்போஸ்தலன். அடியில் காண்க.

யோவான்ஸ்நானகன். **John the Baptist**. யோவானுடைய தகப்பனின் பேர் சகரியா; தாயின் பேர் எலிசபெத்து. யோவானுடைய பிறப்பைப்பற்றியும் அவனுக்குப் பேரிட்ட விஷயத்தைப்பற்றியும் பரி. லூக்கா விபரமாய்ச் சொல்லுகிறான். லூக் 1 அதி. இவன் ஆசாரிய குடும்பத்தைச் சேர்ந்தவன். இயேசுவின் தாயாருக்கு இவனுடைய தாயார் இனத்தாளாயிருந்தாள். லூக் $1^{36}$. இவன் தான் பிறந்த நாள்முதல் நசரேய சமயத்தைச் சேர்ந்தவனாயிருந்தான். பலகாலம் சவக்கடலுக்கு மேற்கிலிருந்த யூதேயா வனாந்தரத்திலே வனவாசம் செய்தான். மாற் $1^{4}$ மத் $3^{4}$. முற்காலத்தில் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டவைகளைத் தியானித்துத் தன் பிரசங்கங்களில் அவ்வாக்கியங்களை உபயோகிப்பான்.

லூக் $3^{17}$......... ஆமோ $9^{9}$ ஏசா $66^{24}$.
யோவான் $1^{23}$... ஏசா $40^{3}$.
யோவான் $1^{29}$... யாத் $12^{3}$ $29^{38}$ ஏசா $53^{7}$.

வனாந்தரத்திலே இவனுக்குத் 'தேவவாக்கு' உண்டாயிற்று. எபிரெயர்கள் இதினால் யேகோவா அருளும் தீர்க்கதரிசன வரம் என்று குறிக்கிறார்கள். 1 சாமு $15^{10}$ மீ. மத் $3^{1}$ மாற் $1^{1}$ லூக் $3^{1}$. வரவர சாதாரண ஜனங்கள் யோவான் மகா தீர்க்கதரிசியாயிருக்கிறான் என்று நம்பிவந்தார்கள். மத் $21^{26}$ மாற் $11^{32}$ லூக் $20^{6}$. ஏராளமான ஜனங்கள் இவன் பிரசங்கத்தைக் கேட்க வந்தார்கள். இவன் அதிகக்காலம் ஊழியம் செய்யாமல் ஆறு மாதகால மாத்திரம் உபதேசம் பண்ணினதாகத் தோன்றுகிறது. யோவா $10^{40}$.

இவன் போதனையெல்லாம் 'மனந்திரும்புங்கள். பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது' என்பதில் அடங்கியிருக்கிறது. மத் $3^{2}$. இதின்படி இவன் சடங்காசாரங்கள் உத்தமம் அல்ல, யேகோவாவின்மேல் பக்தி வைப்பது விசேஷமானது என்றும், யேகோவா யாவரையும் நியாயந்தீர்க்கப்போகிறார் என்றும், யாவரும் மனஸ்தாபப்பட்டு அவருடைய இரக்கத்தைத் தேடவேண்டுமென்றும், இதைக் குறித்து விசாரணை செய்த போர்வீரர் ஆயக்காரர் முதலியவர்கள் தீமையை வெறுத்து நன்மையை நாடி, தாங்கள் அடைந்த மனஸ்தாபத்தின் நற்பலனைக் காட்டவேண்டும் என்றும் போதித்தான். ஆயினும் இவன் போதனையைக் கேட்ட அநேகர் குணப்படவில்லை. லூக் $7^{33}$ யோவா $5^{33}$. தான் செய்த போதனையை

நம்பினவர்களுக்கு ஸ்நானம் கொடுத்தான். யோவான் கொடுத்த இந்த சடங்கின் மூலமாய் ஜனங்கள் தேகத்துக்குச் சுத்தம் எப்படி அடைவார்களோ, அப்படியே இதைப் பெற்றவர்கள் மனஸ்தாபத்தினுல் மனதிலே ஆவிக்குரிய விதமான பரிசுத்தத்தை அடைவார்கள் என்பதற்கு இது ஒரு அடையாளம். இவ்விதமான ஆத்துமஸ்நானத்தைக்குறித்து தீர்க்கதரிசிகள் எண்ணிய பிரகாரமே யோவானும் எண்ணினுன் என்று நினைக்க இடமுண்டு. ஏசா $1^{16}$ எசே $36^{25}$ சக $13^{1}$.

குறிப்பு. புறமதத்திலிருந்து வந்து யூதமார்க்கத்தமைந்தவர்கள் அந்நிய மார்க்கத்தின் அசுத்தத்தை விட்டு, மோசேயின் பிரமாணத்தின்படி சுத்தமடைந்திருக்கிருர்கள் என்பதற்கு ஸ்நானம் ஓர் அடையாளம் என்று யூதர்கள் அக்காலத்தில் நினைத்தார்கள். ஒருவேளை யோவானும் இதினிமித்தமே தன் சீஷர்களுக்கு ஸ்நானம் கொடுத்திருக்கக் கூடும்.

இயேசு யோவானுல் ஞானஸ்நானம்பெற்றபோது அவர் பாவ அறிக்கை செய்யவில்லை. யோவான் அவருக்குக் கொடுத்த ஞானஸ்நானத்தின் அர்த்தம் என்னவெனில், அவர் மேசியாவின் ஊழியத்திற்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டவர் என்பதற்கு அத்தாட்சியாக்குவதே.

யூதர்களில் சிலர் யோவான் ஒருவேளை மேசியாவாயிருக்கலாமோ என்று சந்தேகித்தார்கள். ஆனுல் யோவான் தன்னைக் குறித்து, தான் மேசியாவுக்கு முன்தூதன் தான் என்றும், அவர் பெருகவும் தான் சிறுகவும் வேண்டுமென்றும் அறிக்கைசெய்து வந்தான். மத் $11^{3}$ யோவா $3^{29}$.

இயேசுவோ, யோவான் விசேஷமாய்ச் சத்தியத்திற்குச் சாட்சிகொடுத்தான் என்றும் (யோவா $5^{33}$), யோவான் மேசியாவுக்கு முன்தூதனுகிய எலியா என்றும் (மல் $4^{5}$ மத் $11^{14}$), தாம் ஸ்தாபிக்கப்போகிற ராஜ்யத்தில் மேன்மையைக் கண்டவர்கள் அம் மேன்மையைக் காணுத யோவானைக்காட்டிலும் பாக்கியசாலிகளென்றும் (மத் $11^{11}$) சொன்னுர்.

யோவான் எப்போதும் சன்மார்க்க விஷயத்தில் தைரியசாலியாயிருந்து, ஏரோது அந்திப்பா ராஜா செய்த துன்மார்க்கத்தைக் கண்டித்ததினிமித்தம், அந்த ராஜா இவனைச் சிறைச்சாலையில் வைத்துவிட்டுச் சிறிதுகாலத்துக்குப்பின் இவனைச் சிரச்சேதம் செய்தான். மத் $4^{12}$ $14^{3}$ மாற் $6^{17}$ லூக் $3^{20}$ $9^{9}$.

இவன் சிறைச்சாலையி லிருந்தபோது, இயேசுவின் ராஜ்யம் ஆவிக்குரியது என்பதைப் பூரணமாய் அறியாமல், தன் மனதில் உண்டான சந்தேகத்தைத் தீர்க்கும்படி இயேசுவினிடம் தன் சீஷர்களை அனுப்ப, இயேசு தமது ராஜ்யத்தின் தன்மையைத் தெளிவாய்க் காட்டினுர். மத் $11^{3}$ லூக் $7^{19}$. யூதர்களில் அநேகர் இவனுடைய கீர்த்தியைப் பிரஸ்தாபப்படுத்தி, இவன் மரித்தபின் உயிரோடெழுந்திருப்பான் என்று நினைத்தார்கள். மாற் $6^{14}$ லூக் $9^{7}$. ஏரோது அந்திப்பா இப்படி அபிப்பிராயப்பட்டான். மாற் $6^{14}$. யோவானுடைய போதனையின்படி சிலர் ஏறக்குறைய இருபது வருஷக்காலம் நடந்தார்கள். அப் $19^{1}$.

யோவான் அப்போஸ்தலன். **John the Apostle**. அப்போஸ்தலனுகிய யோவான், கலிலேயாக் கடலோரத்தில் செம்படவ தொழில் செய்துவந்த செபெதேயுவினுடைய மகன். இவனுடைய தகப்பனுக்குச் சில படவுகளிருந்தபடியால் அவன் ஆஸ்திக்காரன் என்று தோன்றுகிறது. இவர்கள் குடியிருந்த ஊர் எதுவென்று திட்டமாய்ச் சொல்ல முடியாது. பெரும்பாலும் பெத்சாயிதாவாயிருக்கலாம். இயேசுவுக்குப் பணிவிடை செய்துவந்த சலோமி என்பவள் செபெதேயுவினுடைய மனைவியாயிருந்தாள் என்று சிலர் நினைக்கிருர்கள். அவள் இயேசுவின் தாயாகிய மரியாளின் சகோதரி. மத் $27^{25}$ மாற் $15^{40}$ $16^{1}$ யோவா $19^{25}$ காண்க.

யோவான்ஸ்நானகன் பிரசங்கம் செய்த காலத்தில் அதைக் கேட்க யோவான் போனுன். யோவா $1^{40}$.

அக்காலத்திலே யோவான்ஸ்நானகன் இயேசுவைக் குறித்துச் சொன்ன சாட்சியை இவன் கேட்டு இயேசுவின் சீஷனுனுன். அப்பொழுது இவன் இயேசு மேசியாவாய் இருப்பதை அறிந்தபோதிலும், மேசியாவினுடைய ராஜ்யத்தின் ஆவிக்குரிய தன்மையைப் பூரணமாய் அறியவில்லை. இதன்பின் இவன் மறுபடியும் தன் தகப்பன் வீட்டுக்குப் போய் முன்போல வேலை செய்ததாகத் தோன்றுகிறது.

இயேசு தமது ஊழியத்தை ஆரம்பித்தபோது, இவனையும், இவன் சகோதரனுகிய யாக்கோபையும், பேதுருவையும், அந்திரேயாவையும் அழைத்தார். மத் $4^{18}$ மாற் $1^{16}$ லூக் $5^{1}$. யாக்கோபும் யோவானும் பேதுருவின் கூட்டாளிகளாயிருந்ததாக இவ்வசனங்களில் காண்கிருேம். அவர்கள் அதன்பின் இயேசுவினுடைய சீஷர்களாய் எப்பொழுதும் இருந்தார்கள். இயேசு ஏற்படுத்திய பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் முதல் நால்வரில் ஒருவனுக யோவான் எப்போதும்

சொல்லப்படுகிறான். மத் $10^{2}$ மாற் $3^{17}$ லூக் $6^{14}$.

இயேசு யவீரின் மகளை உயிரோடெழுப்பின சமயத்திலும் (மாற் $5^{37}$ லூக் $8^{51}$); அவர் மறுரூப மடைந்தபோதும் (மத் $17^{1}$ மாற் $9^{2}$ லூக் $9^{28}$); பேதுருவின் மாமியைக் குணமாக்கினபொழுதும் (மாற் $1^{29}$); அவர் தேவாலயத்தின் அழிவை முன்னறிவித்த சமயத்திலும் (மாற் $13^{3}$); கெத்செமனே தோட்டத்தில் அவர் ஆத்தும வியாகுலமடைந்த வேளையிலும் (மத் $26^{37}$) யோவான் இயேசுவோடு கூட இருந்தான். இந்த வசனங்களையும் இன்னும் யோவான் சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட சில வசனங்களையும் (யோவா $13^{23}$ $19^{26}$) கவனித்து, இயேசு யோவான்பேரில் மிகவும் அன்பாயிருந்தார் என்று தெளிவாய் அறிந்துகொள்ளவேண்டும். யோவானும் அவன் சகோதரனாகிய யாக்கோபும் சுபாவத்தில் ஒற்றுமையுள்ளவர்களாயிருந்தார்கள். இயேசு அவர்களுக்குக் கொடுத்த 'போவனெர்கேஸ்' என்னும் பதம் அவர்களுடைய வைராக்கியமும் ஆத்திரமுமான குணத்தைக் காட்டுகிறது. இதின்படி இவர்கள் இருவரும் இயேசுவை ஏற்றுக்கொள்ளாத சமாரிய நாட்டிலுள்ள ஊரின்மேல் அக்கினி விழும்படியாகவும், யேசுவின் ராஜ்யத்தில் தங்களுக்கு மேலான பதவி கிடைக்கும்படியாகவும் வேண்டிக்கொண்டார்கள். மாற் $10^{35}$ லூக் $22^{8}$. இயேசுவின் உத்தரவின்றி சீஷர்களல்லாதவர்கள் தேவஊழியம் செய்யக்கூடாது என்று நினைத்து யோவான் இயேசுவினிடத்தில் வந்து அப்படிச்செய்த ஒருவனைப்பற்றி முறையிட்டான். லூக் $9^{49}$.

யூதர்கள் இயேசுவைப் பிடித்தபோது யோவானும் பேதுருவும் அவர்களுக்குப்பின் சென்றார்கள். இயேசு சிலுவையில் அறையுண்ட காட்சியை இவன் கண்ணாரக் கண்டான். யோவா $19^{35}$. மூன்றாம் நாளில் இயேசு உயிரோடெழுந்தபின் இவன் சீக்கிரமாய்க் கல்லறையண்டைக்கு ஓடி அவருடைய உயிர்த்தெழுதலைக்குறித்து விசாரித்தான். யோவா $20^{3}$.

இயேசு பரத்துக்கேறினபின் இவன் மற்றச் சீஷரோடு சேர்ந்து, புதுமார்க்கத்தைக் குறித்து பயமின்றி சாட்சியிட்டான். இவனும் பேதுருவும் ஒரு பிறவிச்சப்பாணியைத் தேவ அருளினாலே சுகப்படுத்தினார்கள். அப் 3 அதி. இதினிமித்தம் இவர்கள் மகா ஆலோசனை சங்கத்துக்குமுன் விசாரிக்கப்பட்டு, தைரியமாய் இயேசுவைக் குறித்துப் பேசினார்கள். அப் $4^{13}$. இதன்பின்பு இவனும் பேதுருவும் சமாரியாவுக்குப் போய்ச் சுவிசேஷகனாகிய பிலிப்பு செய்த ஊழியத்தை ஸ்திரப்படுத்தினார்கள். அப் $8^{14}$. இதினிமித்தம் இவனும் பேதுருவுடனே எருசலேமிலிருந்த கிறிஸ்தவ சபையிலுள்ள தலைவர்களில் ஒருவனாயிருந்தான் என்று நினைக்கவேண்டும்.

பிற்காலங்களில் யோவான் முதிர்வயதுள்ளவனாயிருந்த காலத்தில் பத்மு என்னும் தீவிலே கிறிஸ்துவினிமித்தம் தைதியாக்கப்பட்டான். ஆதிக்கிறிஸ்தவர்களுடைய பாரம்பரியத்தின்படி அதற்குமுன், ரோமராயனால் கொதிக்கிற எண்ணெயில் அமிழ்த்தப்பட்டு அற்புதவிதமாய்த் தப்பினான். இது ஏறக்குறைய கி-பி. 95-ம் வருஷத்தில் சம்பவித்ததென்று நினைக்கலாம். ரோமராயன் மரித்தபின் இவன் எபேசு பட்டணத்திற்குத் திரும்பிவந்து பலகாலம் அதில் தங்கினான். இவன் வழக்கமாய் அதிலுள்ள சபையாரைப் பார்த்து, 'சிறுபிள்ளைகளே, ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்' என்று எப்பொழுதும் சொல்லி வருவான். அவர்கள் இவன் இந்த வார்த்தைகளை அடிக்கடிச் சொன்னதைக் குறித்து ஆச்சரியப்படும்போது, அவர்களைப் பார்த்து 'ஆண்டவர் அருளிய கட்டளை இதுவே; இதின்படி நீங்கள் நடந்தால் போதும்' என்று சொல்லுவான். அக்காலத்திலே இவன் வியாதியினால் பலயீனப்பட்டவனாயிருந்தும், அந்நாட்டிலுள்ள கள்ளர்கள் அந்தச் சபையிலுள்ள ஒரு வாலிபனை ஏமாற்றி, தங்கள் கூட்டத்தோடு சேர்த்திருந்ததைக் கேள்விப்பட்டு, மலைநாட்டிலுள்ள அக்கள்ளர் கூட்டத்துக்குப் போய், அங்கிருந்த அவ்வாலிபனுக்குப் புத்திபோதனைகள் செய்து, அவனைக் குணப்படுத்தினான்.

இவன் ரோம ராயனாகிய திராஜான் அரசாண்ட மூன்றாம் அல்லது ஏழாம் வருஷத்தில் இறந்துபோனான். (அதாவது கி-பி. 100 அல்லது கி-பி. 104.) ஆகவே இவன் ஏறக்குறைய நூறு வயதுள்ளவன்.

குறிப்பு. யோவான் சுவிசேஷம், யோவான் எழுதின நிருபங்கள் ஆகிய இவைகளின் ஆக்கியோன் நிச்சயத்தைப்பற்றி அடியிற்கண்ட நிபந்தனங்களில் விபரம் சொல்லப்பட்டிருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷத்தின் ஆக்கியோன் இவன்தானோ என்பதைக்குறித்து வெளிப்படுத்தின விசேஷம் காண்க.

யோவான் எழுதின சுவிசேஷம். **The Gospel of Saint John**.

I. முகவுரை.

இந்நான்காம் சுவிசேஷம் சிறந்த வேதாகம நூல். சில விஷயங்களிலே இது மற்

றெல்லா வேதாகம நூற்களிலும் அதிக மாட்சிமையுடையது. இந்நூல் மற்ற மூன்று சுவிசேஷங்களுடன் இயேசுகிறிஸ்துவின் சரித்திரத்தை நமக்குத் தெரிவிக்கிறது. இந் நான்கு சுவிசேஷங்களைத் தவிர இயேசு கிறிஸ்துவின் சரித்திரத்தைக் காண்பிக்கும் நூற்கள் நமக்கு வேறேயில்லை. மற்ற மூன்று சுவிசேஷங்கள் தங்களுக்குள்ளே அநேக சம்பந்தங்களுடையன ஆதலாலும் இந்நான்காம் சுவிசேஷம் அவைகளுக்கு அநேக விஷயங்களில் வித்தியாசமுடையது ஆதலாலும் அந்த மூன்று சுவிசேஷங்களையும் ஒரே பிரத்தியேகமான வகுப்பாக வைத்து அவைகளுக்குத் 'திரியனுபந்த சுவிசேஷங்கள்' (*Synoptic Gospels*) என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந் நான்காம் சுவிசேஷம் கடைசியாக எழுதப் பட்டது. இதில் அநேக சிறந்த லக்ஷணங்கள் விளங்கிப் பிரகாசிக்கின்றன. அவைகளாலும் இதின் சொற்றிறத்தாலும் இது எல்லா வேதநூற்களிலும் மிக்க மேன்மையாக எண்ணப்பட்டது. இந்நூலில் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த ஜீவியம் மிக அருமையாகக் காணப்படுகிறது. இத்துடன் இந்நூலாசிரியனது லக்ஷணங்களும் இதில் தெளிவாய்த் தோன்றுகின்றன. அவனது அபிப்பிராயங்களையும் நோக்கங்களையும் ஒவ்வொரு பக்கத்திலுங் காண்கிறோம்.

இந்த நூலின் ஆசிரியன் இன்னானென்றும்; இதில் எழுதியது உண்மையான சரித்திரமோ இல்லையோவென்றும்; திரியனுபந்த சுவிசேஷங்களுக்கும் வெளிப்படுத்தின விசேஷத்திற்கும் இதற்குமுள்ள சம்பந்தமின்னதென்றும்; இதிலே காண்பிக்கப் பட்ட இயேசு உண்மையாய் அப்படிப்பட்டவரோ அல்லவோ என்றும் பற்பல தர்க்கங்கள் கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் வேத சாஸ்திரிகளுக்குள்ளே உண்டாயின. இப்போதுங்கூட இந்நான்காம் சுவிசேஷத்தைப்பற்றிச் சில சந்தேகங்கள் இருக்கின்றன. எனினும் இந்நூல் மகா அருமையானது என்று யாவரும் ஒப்புக்கொள்ளுகின்றார்கள்.

II. இந்நூல் இயற்றப்பட்ட காலம்.

I. இரண்டாம் நூற்றாண்டின் கடைசிப் பாகத்தில் மேலான அதிகாரமுள்ளதாய் அங்கீகரிக்கப்பட்ட நான்கு சுவிசேஷங்களும் இருந்ததற்குப் போதுமான அத்தாட்சியுண்டு. அப்பொழுது அந்த நான்கு சுவிசேஷங்களைத் தவிர அங்கீகாரம் பெற்ற சுவிசேஷங்கள் வேறே இல்லை. இப்போது நமது வேதத்திலிருக்கின்ற நாலு சுவிசேஷங்கள் அவையே என்பதற்குச் சந்தேகமில்லை

கி-பி. 100-130 வருஷங்களில் ஐரேனியஸ், தியாப்பிலஸ், அலெக்சான்றிய, கிலெமெந்து, தெர்த்துல்லியன் முதலியவர்களாகிய ஆதிச்சபையின் பெரியோர்கள் எல்லாரும் நான்கு சுவிசேஷங்கள் இருக்கின்றன என்று திட்டமாய் எழுதி அவைகளிலிருந்து அநேக சம்பவங்களையும் வாக்கியங்களையும் எடுத்துக்காட்டி வெளியிட்டு, இந்நான்காம் சுவிசேஷத்திலிருந்தும் அநேக உதாரணங்களையும் வார்த்தைகளையும் உபயோகித்து வந்தார்கள். ஆகையால் அந்தக் காலத்துக்கு முன்னமே இந்நூல் அநேகருக்குத் தெரிந்திருத்தல்வேண்டும். அந்தக்காலத்து வேத புஸ்தகங்களின் அட்டவணைகளிலும் இதன் பெயர் வருகின்றது. வேதப்புரட்டர்களும் இதை அங்கீகரித்தார்கள். இக் குறிப்புகளால் இந்நூல் இரண்டாம் நூற்றாண்டின் முதல் பாகத்தில் எழுதியிருத்தல் வேண்டியது என்று அறியலாம்.

கி-பி. 75-100 வருஷங்களில் இன்னும் சில வேதநூலோர் இதிலிருந்து உதாரணங்களையும் எடுத்துபயோகித்தனர் போலிருக்கிறது. ஆகையால் இது முதலாம் நூற்றாண்டின் கடைசிப்பாகத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று நினைப்பதற்கு முகாந்தரமுண்டு.

2. ஆதிச்சபையில் பெரும்பான்மையோர் இந்த நூலின்பேரைச் சொல்லாமல் இதின் வார்த்தைகளையும் சம்பவங்களையும் எடுத்துக் கூறுகிறார்கள். ஜஸ்டின் மார்டர் (*Justin Martyr*) இச்சுவிசேஷத்தின் முகவுரையில் சொல்லியிருக்கிற பரம வாக்கைப்பற்றிய போதனையை விவரித்து வியாக்கியானம் எழுதியிருந்தான். யோவான் பேர் சொல்லாதிருந்தும் அந்தப் போதனை இந்நான்காம் சுவிசேஷத்திலிருந்து எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது. ஜஸ்டின் சுமார் கி-பி. 150-ம் வருஷத்தில் தன் நூலை எழுதியிருப்பான். அப்போது சுவிசேஷங்கள் வேதங்களாக ஏற்றுக்கொள்ளப்படாமல் அப்போஸ்தலர் எழுதினவைகளென்று விசேஷமாக எண்ணப்பட்டன.

3. அக்காலத்தில் சுவிசேஷங்கள் எங்கும் பிரசித்தம் பெறக்கூடிய அச்சிடப்பெற்ற புஸ்தகங்களாயில்லாமல் சிற்சில இடங்களில் மட்டும் கையெழுத்து நகல்களாகவேயிருந்தன. அக்காலத்துக் கிறிஸ்தவர்கள் தங்களுக்குத் தெரிந்த இயேசுவின் வார்த்தைகளை மனப்பாடமாய் அறிந்து எழுதுவார்கள்.

சுவிசேஷகனின் பேர்சொலலாமல் எழுதல் சந்தேகத்துக்குரிய காரியமல்ல.

தாத்தியன் (*Tatian*) என்பவன் நாலு சுவிசேஷங்களையும் சம்பந்தமாக்கி ஒருசரித்திரத்தை எழுதினனென்று யூசிப்பியஸ் என்னும் இதிகாச வித்துவான் நாலாம் நூற்றாண்டில் எழுதினன். தாத்தியன் எழுதின அந்த நூலானது நாலு சுவிசேஷங்களுக்கும் சம்பந்தமான ஒரே சரித்திரமென்று காணப்படுகிறது. அது சுமார் கி-பி. 170-ம் வருஷத்தில் எழுதப்பட்டது. நமது நான்காம் சுவிசேஷமே அவைகளில் ஒன்றாயிருந்ததாக நிச்சயமாயறிவோம். ஆகையால் அந்தக் காலத்து கிறிஸ்தவர்களுள் இந்நான்காம் சுவிசேஷம் அதிகமாய்ப் பரம்பியிருந்ததாக நிச்சயமாய்த் தெரியவருகின்றது.

4. இப்படியிருத்தலின் அந்தப் புஸ்தகம் அவ்விதமாய்ப் பிரசித்தமடைவதற்கு அநேக வருஷங்கள் செல்லும். ஆகையால் இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலாகிலும் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

5. அன்றியும் போலிகார்ப், இக்நாத்தியஸ் (*Polycarp, Ignatius*) என்பவர்கள் (சுமார் கி-பி. 110) இந்நான்காம் சுவிசேஷம் தங்கள் காலத்தில் பரம்பியிருந்ததற்குச் சாட்சிகொடுக்கிறார்கள். அதின் வார்த்தைகளையும் உபயோகிக்கிறார்கள். போலிகார்ப்பின் சீஷனான ஐரேனியஸ் நான்காம் சுவிசேஷத்திலிருந்து அதிகமாய் எடுத்துக் கூறுவதோடு வேத நூற்கள் யாவும் போலிகார்ப்புக்குத்தெரிந்தன என்றும்சொல்லுகிறான். இனி கி-பி. 100-110 வருஷங்களில்அநேக புஸ்தகங்களில் பற்பல இடங்களில் இந்நான்காம் சுவிசேஷத்தின் வார்த்தைகளும் அபிப்பிராயங்களும் உபயோகிக்கப்பட்டு வருகின்றனபோலிருக்கிறது.

6. இந்தக் காரியங்களையெல்லாம் நாம் ஆராய்ந்து பார்த்தால் இந்நான்காம் சுவிசேஷம் இரண்டாம் நூற்றாண்டின் முதல் பாகத்தில் சபைகளுக்குள்ளே வெளிப்பட்டு வந்தது என்பது நிச்சயம். அதுவுமன்றி இது முதலாம் நூற்றாண்டின் கடைசிப் பாகத்தில் எழுதப்பட்டது என்று நாம் நம்பிக்கையுடன் சொல்லலாம்.

III. ஆசிரியன்.

இந்நூலின் ஆசிரியன் இன்னானென்னும் விஷயத்தைப்பற்றி அதிகத் தர்க்கம் நடந்தது. இது சரித்திர உண்மையுடைய நூலல்லவென்று சொல்வோர் இயேசுவின் சீஷனான யோவானே ஆசிரியனென்பதைப் பல வழிகளாலும் மறுக்கப் பிரயாசப்படுகிறார்கள். கிறிஸ்தவர்களுக்குள்ளே பெரும்பான்மையோர் கோட்பாடு யாதெனில், இயேசுவின் சீஷனான யோவானே இதின் ஆசிரியனென்பதே. இதற்குப் பின் வரும் ஆதாரங்களைக் கூறுகிறார்கள் :

A. ஆதிச்சபையில் யோவானே ஆசிரியனென்று பெரும்பான்மையோர் ஒத்துக்கொண்டார்கள்.

1. இரண்டாம் நூற்றாண்டின் கடைசிப் பாகத்தில் வேதசாஸ்திரிகளும், வேதப்புரட்டர்களும், இந்நான்காம் சுவிசேஷம் அப்போஸ்தலர்களில் ஒருவன் இயற்றின நூலாக ஏற்றுக்கொண்டார்கள் என்பதாகக் கண்டோம். இது தப்பிதமான கொள்கையானல் அக்காலத்திலுள்ள எவனாவது அதைக் காட்டியிருப்பான்.

2. சபை வித்துவான்கள் அநேகர் யோவான் இதை எழுதினனென்று சாதிக்கிறார்கள். இவர்களுக்குள் தேயோப்பிலஸ் (கி-பி. 180) ஐரேனியஸ் (கி-பி. 180) என்பவர்கள் முக்கியமானவர்கள்.

ஐரேனியஸ் (*Irenaeus*) விசேஷித்த சாட்சி. இவன் எழுதிய நூலில் கி-பி. 69-ல் பிறந்து, கி-பி. 155-ல் இறந்த போலிகார்ப்பைப்பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறது.

i. ஐரேனியஸ் போலிகார்ப்புக்குச் சீஷனானன்.

ii. போலிகார்ப்பு எபேசு பட்டணத்தில் யோவானுக்குச் சீஷன்.

iii. ஆண்டவரைக் கண்ட யோவானும் மற்றோரும் சொன்ன சங்கதிகளைப் போலிகார்ப்பு அடிக்கடி விசாரித்து ஐரேனியஸுக்கு அவைகளை அறிவித்தான் ; மேலும் ஐரேனியஸ் 'இயேசுவின் மார்பில் சாய்ந்துகொண்ட யோவான், ஆண்டவருடைய சீஷன், ஆசியாவிலுள்ள எபேசுவிலே தனது சுவிசேஷம் பிரசுரம் ஆக்கினன்' என்று தீர்மானமாய்ச் சொல்லுகிறான்.

இந்தச் சாட்சி உண்மையல்லாத சாட்சியாயின் அக்காலத்தில் யாராவது மறுத்திருப்பர். ஒருவரும் அப்படி செய்யாததால் அது மறுக்கத்தக்க சாட்சி அல்ல என்று ஒப்புக்கொள்ளவேண்டும். ஏறக்குறைய கி.பி. 130-ம்வருஷத்தில் பாப்பியாவும் யோவானைப்பற்றிச் சாட்சியிட்டிருக்கிறான்.

3. மூன்றாம் நூற்றாண்டில் யாவரும் சந்தேகமில்லாமல் இது யோவானால் எழுதப்பட்டதாக ஒப்புக்கொண்டார்களென்று ஐசேப்பியஸ் (*Eusebius*) எழுதியிருக்கிறான். யோவான் எபேசு பட்டணத்தில் இந்நான்காம் சுவிசேஷத்தை எழுதியிருக்கிறான் என்பது ஆதிகாலத்துச் சபையில் எங்

கும் பிரஸ்தாபமாயிருந்தது. இந்தப் பிரஸ்தாபம் போலிகார்ப்பு காலத்திலிருந்து வந்தது. அது பொய்யாயின் யோவானது சீஷரில் யாராவது அதை மறுத்திருப்பார்.

4. ஆகையால் ஆதிச்சபையில் கொடுக்கப்பட்ட சாட்சியெல்லாம் யோவானே இந்த நூலுக்கு ஆசிரியனென்பதற்கு சார்புள்ளது. அதோடு அச்சாட்சியின் மொத்தத்தொகையும் நம்பிக்கைக்குப் போதுமானது.

B. இந்த நூலின் உட்குறிப்புகளால் ஆகும் அத்தாட்சிகள். அக்குறிப்புகளாவன :

1. ஆசிரியன் அக்காலத்துக் குறிப்புகளையும் பலெஸ்தீனா தேசத்து விஷயங்களையும் நன்கறிந்தவனும் யூதனுமாயிருந்தானென்பது ; எப்படியெனில் அவன் யூத வழக்க பழக்கங்களையும் பழைய எற்பாட்டின் வார்த்தைகளையும் பொருளையும் யூத ஆசாரங்களையும் ($2^{6}$ $3^{25}$ $11^{55}$ $11^{44}$ $19^{40}$), பண்டிகைகளையும் ($7^{2.37}$ $10^{22}$ $19^{31}$), தேவாலயத்துக்குரிய விஷயங்களையும் ($18^{20}$ $2^{13-16}$), யூதரின் கொள்கைகளையும் ($1^{19-28}$ $4^{9.20}$ $6^{14}$ $7^{23.25-44}$ $9^{2.16}$ $10^{19}$ $11^{45-53}$ $18^{26}$ $19^{7}$) திட்டமாய் வெளிப்படுத்தினான்.

மேலும் அவன் பலெஸ்தீனா தேசத்தின் இடங்களையும் கட்டடங்களின் குறிப்புகளையும் ($4^{11.20}$ $5^{2}$ $8^{20}$ $9^{7}$ $10^{23}$ $11^{54}$), பெத்தானியா பெத்சாயிதா என்னும் பேர்கள் இரண்டிடங்களுக்குக் கொடுக்கப்பட்டதையும் ($1^{28}$ $2^{1}$), வழிகளின் வித்தியாசங்களையும் தூரத்தையும் ($6^{5.19}$ $11^{18}$ $18^{1}$) அறிந்தவன். யாக்கோபின் கிணற்றண்டையிருந்த பூமியின் காட்சியைக் கண்டவன் மட்டுமே நாலாம் அதிகாரத்திலிருக்கிற விபரத்தை எழுதக்கூடியவன். அன்றியும் அவனுக்கு அந்தக்காலத்தின் சம்பவங்கள் நன்றாய்த் தெரிந்திருந்தன ($2^{20}$ $18^{13-28.31}$.)

அதுவுமல்லாமல் எழுதின விதம் எபிரெய பாஷை நடைக்கொத்தது. எபிரெய வார்த்தைகளை மொழிபெயர்த்து எழுதுகிறதுபோலிருக்கிறது. மூன்று, எழு என்கிற எபிரெயரின் திரு எண்களை அடிக்கடி உபயோகிக்கிறான். பழைய எற்பாட்டின் உதாரணங்களைக் கிரேக்கு மொழிபெயர்ப்பின்படி எழுதாமல் எபிரெய வேதத்தின்படி திருத்தி எழுதியிருக்கிறான்.

2. ஆசிரியன் தான் எழுதின சம்பவங்களையும் பேர்களையும் பார்த்தறிந்தவனும், இயேசுவின் சீஷரில் ஒருவனுமாயிருந்தான் என்பது ; எப்படியெனில், இயேசு சீஷர்களை அழைத்த விதத்தையும் இயேசு பிடிக்கப்பட்ட மாதிரியையும் ($1^{35-51}$ 18), சம்பவங்களையும் ($1^{40}$ $4^{6.40.52}$ $5^{6}$), இடங்களையும் ($8^{20}$ $10^{23}$ $11^{30}$), எண்களையும் ($2^{6}$ $19^{23.39}$ $21^{8}$) ஆகிய எல்லாவற்றையும் திட்டமாய்க் குறிப்பிட்டெழுதுகிறான். அவன் ஒவ்வொன்றையும் பார்த்த ஒருவனைப்போலவே விவரித்தெழுதியிருக்கிறான். இன்னும் இயேசுவும் தமது சீஷரும் ஒழிய மற்றெவரும் அறியக்கூடாத காரியங்களை எழுதியிருக்கிறான்; அவர்களுக்குள் நடந்த சம்பாஷணைகளையும் ($6^{5-8}$ $11^{7-16}$ $12^{22}$), சீஷர்களின் எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் ($2^{11.17.21.22}$ $4^{27.32}$ $11^{11}$ $13^{27}$ $20^{8.12}$), இயேசுவினுடைய எண்ணங்களையும் ($2^{24}$ $4^{1}$ $5^{6}$ $6^{6.15.61.64}$ $7^{1}$ $11^{33}$ $13^{1.3.11.12}$ $16^{9}$) அறிந்தவனைப்போல எழுதியிருக்கிறான். அதோடு தான் கண்டவனென்று தன்னைக் குறித்துத் தானே திட்டமாய் எழுதியிருக்கிறான். $1^{14}$ $19^{35}$.

ஆசிரியன் இயேசு நேசித்த சீஷனென்னப்பட்ட யோவானென்று அனுமானிக்கலாம். $19^{35}$. தானே இயேசுவின் மரணத்தைக் கண்டவனென்று சொல்லுகிறான். அந்தச் சரித்திரத்தில் அந்த ஒரே சீஷன் அதைக் கண்டதாகச் சொல்லியிருக்கிறது. ஆகையினால் இயேசு நேசித்த சீஷன்தான் இதை எழுதினவன். அன்றியும் இந்தச் சுவிசேஷத்தில் உயிர்த்தெழுதலின் சரித்திரம் அதைக் கண்டவனால் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. அப்படியானால் பேதுருவாகிலும் இயேசு நேசித்த சீஷனாகிலும் இதை எழுதியிருக்கவேண்டும். கடைசியான இராப்போஜனத்தின் சரித்திரமும் ($13^{24-27}$), இயேசுவுடன் நடந்த கடைசி சம்பாஷணையின் சரித்திரமும் ($21^{19-22}$) அப்படிப்பட்டது. அச்சரித்திரத்தால் பேதுரு இதற்கு ஆசிரியனாயிருக்க முடியாதென்று தோன்றுகிறது. $21^{24}$-ல் இயேசு நேசித்த சீஷன் இதை எழுதினானென்று திட்டமாய் எழுதியிருக்கிறது. நாம் மற்றக் குறிப்புகளைக்கொண்டு எழுதினவன் யோவானென்று நினைக்கலாம். எனென்றால், பேதுருவும் யாக்கோபும் யோவானும் இயேசுவுக்கு நெருங்கிய சிநேகிதர்கள். எழுதினவன் இவர்களுக்குள் ஒருவனாயிருத்தல் வேண்டும். யாக்கோபு 44-ம் வருஷம் இறந்துபோனான். பேதுரு ஆசிரியன் அல்ல என்று நாம் மேலே பார்த்தோம். ஆகையினால் யோவானே இயேசு நேசித்த சீஷனும் இதன் ஆசிரியனுமாயிருக்கிறானென்று சொல்லலாம்.

இதை இன்னும் சில குறிப்புகளால் நிச்சயித்துக்கொள்ளலாமென்கிறார்கள். யோ

வானுடைய பெயர் ஒருபோதும் இந்தச் சுவிசேஷத்தில் காணப்படுகிறதில்லை. கடைசி அதிகாரத்தில் 'செபெதேயுவின் குமாரர்' என்னும் வார்த்தை வருகிறது. அச்சரித்திரத்தால் அக்குமாரரில் இயேசு நேசித்த சீஷன் ஒருவனாயிருக்கவேண்டும் என்றறியலாம். அந்த அதிகாரத்தில் ($21^{2}$) அவர்கள் பேர் கடைசியாக வருகிறது. மற்றச் சுவிசேஷங்களில் பேதுருவுக்குப் பிறகு இவர்களுடைய பேர்களும் வரும். அன்றியும், திரியனுபந்த சுவிசேஷங்களில் யோவான்ஸ்நானகன் என்னப்பட்டவன் இந்தச் சுவிசேஷத்திலே 'ஸ்நானகன்' என்னும் பதம் இல்லாமல் 'யோவான்' என்று அழைக்கப்படுகிறான். யோவானே ஆசிரியனென்றால், யோவானென்னும் பெயரையுடைய இருவரையும் தான் பிரித்துக் காட்டல் அவசியமில்லை யென்று நினைத்து அவ்வண்ணமாய் எழுதியிருக்கலாம்.

இவைகளெல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்தால் யோவானே இந்த நான்காம் சுவிசேஷத்திற்கு ஆசிரியனென்பதற்குத் தகுந்த அத்தாட்சி அந்நூலிலே இருக்கிறதாக பெரும்பான்மையோர் சாதிக்கிறார்கள்.

C. யோவான் ஆசிரியனல்ல வென்பதைப் பற்றியது. சிலர் யோவான் இந்நூலை எழுதவில்லையென்றும், எபேசு பட்டணத்தான் ஒருவன் இரண்டாம் நூற்றாண்டில் இதை எழுதினானென்றும் சாதிக்கிறார்கள். அதற்கிசைவாகப் பின்வரும் நியாயங்களைச் சொல்லுகிறார்கள். அவையாவன :—

1. போலிகார்ப்பு, கிலெமெந்து, இக்னேஷியஸ் முதலிய வேறு சிலர் ஆதிச்சபையில் தாங்களெழுதின நூற்களில் திட்டமாய் யோவானை ஆசிரியனாகக் காட்டுகிறதில்லை. அவர்கள் இந்த நூலிலிருந்து சில வாக்கியங்களை யெடுத்துரைத்தும் யோவானது பெயரைச் சொல்லுகிறதுமில்லை என்று சாதிக்கிறார்கள். எனினும் யோவானை ஆசிரியனென்று அக்காலத்தோர் அநேகர் சொன்னதால் அவர்கள் அதை யறிந்தும் மறுக்காமலிருந்ததே யோவானே ஆசிரியனென்பதற்குப் பலத்த சாட்சியாம் என்று இந்நியாயத்தை மறுக்க.

2. இந்நூலின் ஆசிரியன் பேதுருவிலும் யோவானை அதிகமாய் உயர்த்தலால் பவுலைச் சார்ந்தவன் ஒருவன் இதை எழுதியிருக்கவேண்டுமென்கிறார்கள். இதற்கு உதாரணமாக யோவான் இயேசுவின் மார்பில் சாய்ந்துகொண்டிருந்ததையும் யோவான் இயேசுவினிடம் பேதுருவின் கேள்வியைக் கேட்டதையும் எடுத்துரைக்கிறார்கள். ஆனால் இவ்வசனங்களில் யோவானது பெருமை காணப்படுகிறது எப்படி? இத்துடன் எல்லாச் சுவிசேஷங்களிலும் பேதுருவின் பெருமை ஒப்புக்கொள்ளப்பட்டதால் இந்நியாயத்தையும் மறுக்க. $1^{42}$ $6^{63}$ $13^{6}$ $18^{10.16}$ $20^{2.7}$ $21^{7.11.15}$ பார்க்க.

3. யோவான் தன்னையே இயேசு நேசித்த சீஷனென்று சொல்லமாட்டான் என்கிறார்கள். இது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஏனெனில், இந்தப் பெயர் இயேசுவின் கடைசியான சம்பவங்களைக்குறித்த சரித்திரத்தில்மாத்திரம் வருகிறதென்றறிக. பெருமை பாராட்டும்படியல்ல, தான் கொடுத்த சாட்சிக்கு உறுதிசொல்லும்படிக்கே எழுதப்பட்டதுபோலிருக்கிறது. $13^{23}$ $21^{7}$ பார்க்க.

4. சாஸ்திரக் கல்வியில்லாத யூத கிறிஸ்தவன் ஒருவன் இவ்வண்ணமான சின்மய போதனையுடைய நூலை யெழுத முடியாதென்கிறார்கள். இது மனச்சார்புக்குரிய நிதானிப்பு மாத்திரமாதலால் இதை நாம் மறுக்கலாம். நடபடியாகமத்தில் சொல்லியிருக்கிறபடி இயேசு தம்முடைய சீஷர்களைச் சபைத் தலைவர்களாக்கினார் என்றால், அவர் யோவானை இந்நூலை இயற்றக்கூடியவனாக்கலாமென்பது திண்ணம். யோவான் சின்ன ஆசியா நாடெங்கும் அதிக மதிப்புப் பெற்ற குருவாக எண்ணப்பட்டானாம். அப்படியிருந்தால் அவன் மனம் அநேக விஷயங்களில் விருத்தியடைந்து கிரேக்கு சாஸ்திரத்தில் சற்றுப் பழகியிருக்கவேண்டும்.

5. சிலர் பரமவாக்கைப்பற்றிய போதனை அலெக்சந்திரியா பட்டணத்திலுண்டானதால் ஆசிரியன் அப்பட்டணத்தானென்கிறார்கள். அலெக்சந்திரியா பட்டணத்துத் தத்துவ சாஸ்திரிகள் போதித்த போதனைக்கும் இந்நூலின் போதனைக்குமுள்ள பெரிய வித்தியாசங்கள் உண்டு. அடியில் XII-ம் பாகத்தில் காண்க. ஆகையால் இது உறுதியான ஆட்சேபனையன்று. யோவான் ஆசியாவிலிருந்தபோது இந்த விசேஷித்த போதனையைக் கற்றறிந்து பிறகு பரிசுத்தாவியின் வல்லமையால் இந்நூலின் போதனை அவனது மனதில் வெளிப்பட்டது என்பது நம்பக்கூடிய காரியமே. அன்றியும் கடவுளாவியின் வல்லமையால் ஏனோ தானோவென்று அசைந்தாடின பேதுரு ஆதிச்சபையின் பலத்த தலைவர் ஆதலும், தற்பெருமையும் யூதஜாதி வைராக்கியமும் நிறைந்த சவுல் எல்லாருக்கும் அடியானும் புறஜாதிக்கு மிக்க அன்புள்ள குருவுமாதலும் அற்பதகரவேலைக்காரனும் படிப்பில்லாதவனுமாகிய ஜான் பனியன் பற்பல பாஷைக்

காரரான கோடாகோடி ஜனங்களுக்கு ஆத்துமபோதகர் ஆதலும், சக்கிலிவேலே செய்தவனும் உயர்தர படிப்பில்லாதவனுமான வில்லியம் கேரி இந்தியா தேசத்திற்குப் புகழ்பெற்ற மிஷனெரியாதலும், கூடுமானல் அற்ப புத்தியும் செம்படவத் தொழிலுமுள்ள யோவான் இந்நூலுக்கு ஆசிரியனுதலும் அவ்வல்லமையாலே கூடுமென்று நினைக்கத்தக்கது.

6. சிலர் இதற்கும் திரியனுபந்த சுவிசேஷங்களுக்கும் உண்டான வித்தியாசங்கள் அநேகமாதலின், இது இயேசுவின் சீஷனுல் எழுதப்பட்டிருக்கக் கூடாதென்கிறுர்கள். அந்த வித்தியாசங்கள் சரித்திர உண்மையை மறுக்கத் தக்கதன்று என்பதை அடியில் IX-ம் பாகத்தில் காண்போம். ஆகையால் இந்நியாயம் பலத்த ஆட்சேபனையல்ல.

7. வெளிப்படுத்தின விசேஷத்திற்கும் இந்நூலுக்கும் அதிக வித்தியாசமிருத்தலின் இவ்விரண்டும் யோவானுல் எழுதப்பட்டிருக்கலாகாதென்றும்; வெளிப்படுத்தின விசேஷம் யோவானுல் எழுதப்பட்ட தென்பதற்குப் போதுமான சாட்சியிருக்கிறதால், அதிலும் கொஞ்சம் பலவீன சாட்சியுடையதாகிய இந்நூல் அவனுல் எழுதப்பட்டிருக்க முடியாதென்றும் சிலர் சொல்வார்கள். அநேக விஷயங்களில் அதிக வித்தியாசம் இவ்விரண்டிற்கும் இருப்பினும் அவைகள் ஒருவராலேயே எழுதப்படக் கூடாதென்று நிச்சயித்துச் சொல்லத் தக்கதல்ல. அது மாத்திரமல்ல அநேக விஷயங்களில் சம்பந்தமும் உண்டு. பொதுவான நோக்கங்களும், வார்த்தைகளும், வார்த்தைகளை உபயோகிக்கும் வகைகளும் இவ்விரண்டிற்கும் உண்டு. இருக்கிற வித்தியாசங்களை நாம் முழுவதுமாய்ச் சமரசப்படுத்த முடியாதெனினும் அதற்குக் காரணமாயிருக்கக்கூடிய சில குறிப்புகளைக் காட்டலாம்.

யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதினபிறகு பெரிய வயதில் இந்தச் சுவிசேஷத்தை எழுதியிருக்கலாம்.

அல்லது இரண்டையும் வெவ்வேறு குமஸ்தாக்கள் மூலமாய் இயற்றியிருக்கலாம்.

அல்லது வேறே யூத புஸ்தகத்தை ஆதாரமாகக்கொண்டு அதின் நடையை அநுசரித்துக்கொண்டு வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதியிருக்கலாம்.

இம்மூன்று காரியங்களும் உண்மையாயிருந்தால் இவ்விரண்டு புஸ்தகங்கள் அநேக விஷயங்களில் வேறுபாடுடையதாக இருக்குமென்று அனுமானிக்கலாம். ஆகையால் இது பலத்த ஆட்சேபனையாயினும் யோவான் இவ்விரண்டிற்கும் ஆசிரியனென்பதை இது மறுக்கக்கூடிய ஆட்சேபனையன்று.

இக்குறிப்புகள் எல்லாவற்றையும் ஆலோசித்துக் கொள்ளுமிடத்து எப்படி நிதானிக்கவேண்டுமெனில், ஆட்சேபனைகள் அநேகமாயிருந்தாலும் யோவானை ஆசிரியனென்று ஆதிச்சபையின் நம்பிக்கையும், பாரம்பரியமும், புறச்சாட்சியும், அகச்சாட்சியும் பலமாய்ச் சாதிப்பதை இவைகள் மறுக்கத்தக்கவை யல்லவென்று பெரும்பான்மையோர் சொல்வதை ஒப்புக்கொள்ளலாம்.

கவனிக்கவேண்டிய இன்னொரு குறிப்புண்டு. யோவானே இச்சுவிசேஷத்தை எழுதாமலிருந்தால் மிகச் சிறந்த இந்நூலே எழுதத்தக்கவன் யார்? வேறொரு அப்போஸ்தலன் எழுதியிருக்கமாட்டான். அப்படி எழுதியிருந்தால், அவனது பெயர் முழுவதுமாய் மறைந்துபோதல் முடியாது. பின்னும் இரண்டாம் நூற்றுண்டில் இந்தச் சுவிசேஷத்தை எழுதக்கூடியவன் இல்லை. இது அக்காலத்தி லெழுதின நூற்களெல்லாவற்றிற்கும் மிகவும் சிறப்புள்ளது. ஆகையால் நாம் கடைசியாய்ச் சொல்லவேண்டியது என்னவென்றல், அப்போஸ்தலனுகிய யோவான் இதை எழுதினுனென்பதற்குப் போதுமான நியாயங்களுண்டென்றும், வேறொருவன் இந்நூலே எழுதினுனென்று சாதிப்பதற்குச் சரியான நியாயமில்லையென்றும் சொல்லக்கூடும். அப்போஸ்தலனுகிய யோவான் இந்நூலே எழுதினுனென்று தீர்மானமாய்ச் சொல்லுகிறோம்.

IV. இந்நூலின் விசேஷித்த லக்ஷணங்கள்.

குறிப்பு.

இவ்விடத்தில் வாசக லக்ஷணங்களை மாத்திரம் கவனிப்போம். போதனையின் தன்மையை நாம் பிறகு ஆராய்ந்து பார்ப்போம். இந்நூலின் வாசக நடையும், வாக்கியங்களும் இதை அதிக மேன்மையான ஸ்திதியில் வைக்கத்தகும். இதிலே உயர்தரப் போதனைகள் மிக்க தெளிவான வாசக நடையில் வெளிப்படுகிறது.

(1) தெளிவு. ஆசிரியனின் கருத்தும், வாசகமும் தெளிவுள்ளன. இந்தத் தெளிவு இந்நூற்களுக்குச் சிறப்பான லக்ஷணம். பவுல் எழுதின வாசகத்தின் நடை அவன் மனோவேகத்தினுல் அடிக்கடி கலக்கமுற்று அது பலகாலும் கொந்தளிக்கின்ற சமுத்திரத்தைப்போல் இருக்கும். இந்நூலின் வாசக நடையோ எப்போதும் அமைதலும் அதிக ஆழமுமுள்ள ஒரு குளத்தைப்போல்

இருக்கும். தெளிந்த நீரிலுள்ளதெல்லாம் பிரகாசித்துத் தோன்றுகின்றதுபோல இந்தத் தெளிந்த வாசகத்தில் மிக்க அமரிக்கையும் தெளிவுமுடைய ஆசிரியனது கருத்து விளங்குகிறது. அவன் தான் விசுவாசித்ததெல்லாம் சந்தேகமற அறிந்துகொண்டு ஆழ்ந்த கருத்துடன் எழுதி அதை இலேசான வார்த்தைகளாலும் வசனங்களாலும் வெளிப்படுத்தியிருக்கிறான்.

(2) சமநிலை. வாசகமெல்லாம் சமநிலையுடையது. சில விசேஷித்த பதங்கள் அடிக்கடி வருகின்றன. அவன் உபயோகிக்கின்ற பதங்களின் தொகை அதிகமல்ல. சில சொற்றொடர்களை எப்போதும் உபயோகிக்கிறான். நுட்பமான சொற்றொடர்களை அவன் உபயோகிக்காமல் சுலபமான வார்த்தைகளையும், தொடர்களையு மாத்திரங்கொண்டு எழுதினான். ஆசிரியன் கிரேக்கு இலக்கணத்தைத் தேர்ந்தறிந்த வித்துவானல்லன். அந்தப் பாஷையில் பவுலைப் போலமிக்கபழக்கமுள்ளவனல்லன். அதின் வழக்கப் பேச்சுகளும், மாபு தொடர்களும், நுட்பமான இலக்கண வழிகளும் அவனுக்குத் தெரியாதுபோலிருக்கிறது. எனினும் எல்லாம் இலக்கண விதிகளுக்கிசைய, இலக்கண வழுக்களின்றி எழுதப்பட்டது.

அதிகமாய்வழங்கும் பதங்களாவன:-ஒளி, மகிமை, ஜீவன், சாட்சி, அறிய, உலகம், விசுவாசிக்க, கிரியை, பெயர், சத்தியம், அடையாளம் என்பவைகளே.

(3) எதிரிடை தொடர்நிலை. அவன் எதிரிடையான சொற்களையும், தொடர்களையும் அதிகமாய் வழங்கி எழுதினான். இந்த வேற்றுமையணி அவன் முக்கியமாய் உபயோகிக்கும் அலங்காரம். ஒளி இருள் என்பதும், சத்தியம், பொய் என்பதும், ஜீவன் மரணம் என்பதும் இவைகளில் சில வசனத்தின் ஒரு பாகத்தில் ஒரு நோக்கத்தையும், மறு பாகத்தில் எதிரிடையான நோக்கத்தையும் வைப்பான். இதுவும் மெத்த தெளிவுக்கு ஏதுவாகும்.

(4) உருவகம். ஆசிரியன் உருவகவணியை மிகவும் உபயோகிக்கிறான். இயேசுவின் உவமைகளை அதிகமாய்ச்சொல்லாவிடினும் அவர் சொன்ன உருவக வசனங்களை முக்கியமாய் எழுதுகிறான். தனது சொந்த எண்ணங்களை வெளியிட விரும்பி இவ்விதமாய் எழுதினான். இதினாலே இவன் உபயோகிக்கும் வார்த்தைகளின் பொதுவான அர்த்தத்தைமாத்திரம் அல்ல, அவைகளின் விசேஷித்த கருத்தையும் நாம் எப்போதும் விசாரிக்கவேண்டும். திருஷ்டாந்தமாக: உலகமென்றால் கடவுளை விரோதிக்கும் பிரபஞ்சமென்று அர்த்தமாம். இருள் என்றால் அஞ்ஞான இருளைக் குறிக்கிறது. அவன் உருவகமாய் நினைக்கிற மனமுடையவன். இப்பேர்ப்பட்ட உருவகவணி தமிழிலக்கியங்களுக்குரிய அலங்காரமென்று மிகவும் மதிக்கப்படுவதால் இந்நூல் நம் நாட்டாருடைய குணுதிசயங்களுக்குத் தக்கவிதமாய் எழுதியிருக்கிறது.

(5) தொடர்ச்சி. அவன் தொடர்ச்சியாக சரித்திர வரலாறுகளை எழுதினான். நடந்த சங்கதியை நேராய்ச் சொல்லி ஒவ்வொருவன் சொன்ன வார்த்தைகளைப் பேசின வகையாகவே எழுதுகிறான். சம்பவங்கள் எல்லாவற்றையும் நடந்தபடியே எழுதியிருப்பதால் அவைகளைக் கண்ணாரக் காண்பதுபோலிருக்கிறது.

(6) எபிரேய பாஷைக்குரிய குறிப்புகள். எபிரெய பாஷைக்குரிய அநேக சொற்றொடர்களும், அணிகளும், எழுத்து வகைகளும் வருகின்றன. உருவகவணியும் வேற்றுமையணியும் விசேஷமாய் எபிரெய பாஷைக்குரியன. கிரேக்கு வசனங்களை மொழிபெயர்த்து எபிரெய பாஷை இலக்கண விதிப்படி எழுதியிருக்கிறான்.

(7) அவன் விசேஷித்த விதமாய் எல்லாருடைய சிந்தனைகளையும் காட்டுகிறான். இயேசுவின் மனம் இன்னதென்றும், இயேசுவைப் பார்த்தவர் கேட்டவர் சந்தித்தவர்களின் மனம் இன்னதென்றும் நாம் தெளிவாய்ப் பார்க்கிறோம். அன்பும் பகையும், அதிசயமும் பொறுமையும், விசுவாசமும் அவிசுவாசமும் மாறி மாறி காணப்படுகின்றன. இயேசு செய்த பிரசங்கங்களின் பயனும், அவர் செய்த அற்புதங்களின் பயனும் நமக்கு எப்போதும் காண்பிக்கப்படுகிறது. ஆகையினால் இச்சுவிசேஷத்தின் மூலமாய் இயேசுவின் காரியங்களையெல்லாம் நடந்தவாறாகவே நாம் தெளிந்தறிந்து கொள்ளக்கூடும்.

(8) சரித்திரத்துக்குரிய நோக்கம். இந்நூலாசிரியன் முழுப் புஸ்தகத்தையும் நடந்த நடபடிகளுக் கேற்றவிதமாய் எழுதி, யூதருக்கும் சீஷருக்கும் கொடுத்த வெளிப்படுத்துதலையும் அதினால் பகை நம்பிக்கை வளர்ந்த விதத்தையும் காட்டுகிறான்.

V. பொருள் அட்டவணை.

A. முகவுரை. $1^{1-18}$. இயேசு கடவுளின் வெளிப்படுதல்.

1. பரம வாக்கினது நித்தியதன்மை. $1^{1-5}$.
2. பரம வாக்கின் வெளிப்படுத்தல். $1^{6-18}$.

B. இயேசு ஜனங்களுக்குக் கொடுத்த பொதுவான வெளிப்படுத்தல். $1^{19}$–$12^{50}$.

ஜனங்களுடைய சாட்சிகளாலும் இயேசுவின் செய்கைகளின் அத்தாட்சிகளாலும் அவரது பிரசங்கங்களாலும் முகவுரையில் கூறப்பட்ட நோக்கம் விளங்குகிறது.

1. அவரது மேன்மையைக்குறித்த மூன்று சாட்சிகள். $1^{19}$–$2^{12}$.

(i) யோவான்ஸ்நானகன் கொடுத்த சாட்சி. $1^{19-34}$.

(ii) முதல் சீஷர் கொடுத்த சாட்சி. $1^{35-51}$.

(iii) தாம் செய்த முதல் அற்புதத்தின் சாட்சி. $2^{1-11}$.

அவர்கள் கப்பர்நகூமுக்குப் போனது. $2^{12}$.

2. அந்தப் பொதுவான வெளிப்படுத்தலின் ஆரம்பம். $2^{13}$–$4^{54}$.

(i) எருசலேம் பட்டணத்தில். $2^{13}$–$3^{22}$.

பிரசங்கம். பரமராஜ்யம் சின்மய தன்மையுள்ளது.

யோவான்ஸ்நானகனின் இரண்டாம் சாட்சி. $3^{22-30}$.

ஆசிரியனது குறிப்பு: கிறிஸ்துவே பரலோகத்தை வெளிப்படுத்தினவர். $3^{31-36}$.

(ii) சமாரியா தேசத்தில். $4^{1-42}$.

பிரசங்கம். உத்தம திருப்தியும் உத்தம வணக்கமும் இன்னதென்பது.

(iii) கலிலேயாநாட்டில் ஒரு அற்புதம். $4^{43-54}$.

3. அந்தப் பொதுவான வெளிப்படுத்தலின் வளர்ச்சிகள். $5^{1}$–$12^{50}$.

(i) யூதேயாவில் தமது அதிகாரத்தை வெளிப்படுத்தினது. $5^{1-47}$.

புராதன சட்டங்களுக்கு மேலான அதிகாரம் தமக்குண்டென்று ஓர் அற்புதத்தால் காட்டினது.

(ii) கலிலேயாவில் அவர் தமது வல்லமையை வெளிப்படுத்தினது. $6^{1-71}$. எப்படியெனில்,

(*a*) ஐயாயிரம் பேர்களை அதிசயமாய்ப் போஷித்ததாலும்,

(*b*) கடலை அமர்த்தினதினாலும்,

(*c*) ஒரு பிரசங்கத்தாலும்,—அந்தப் பிரசங்கத்தின் பொருள் இயேசு உலகத்திற்கு ஜீவன் என்பதே.

(iii) எருசலேமில் நடந்த இரண்டு பண்டிகைகளில் தமது உன்னத நிலைமையை வெளிப்படுத்தினது. $7^{1}$–$10^{42}$.

(*a*) கூடாரப்பண்டிகையில் அவரது போதனைக்கு ஆதாரமான அதிகாரத்தைப்பற்றி வாக்குவாதம் நடந்தது. $7^{1-52}$.

[விபசாரத்தில் பிடிக்கப்பட்ட பெண்ணினது சரித்திரம். $7^{53}$-$8^{11}$.]

அவர் செய்த பிரசங்கம். $8^{12-59}$.

இது முன் சங்கதியுடன் பொருந்தியது. அதன் பொருளாவது: தாமே உலகத்தில் பரம தந்தையைப்பற்றி நிச்சயபோதனை செய்பவர்.

(*b*) அவர் பரிசேயர் ஏற்படுத்திய பாரம்பரியத்திற்கு எதிரிடையாக தமது மேலான அதிகாரத்தைக் காண்பித்தார். $9^{1-41}$.

குருடனைப் பார்க்கப்பண்ணினார்.

பிரசங்கம். இயேசு நல்ல மேய்ப்பரும் உலகத்திற்கு மேலான போதகருமானவர். $10^{1-21}$.

பின்வரும் சம்பவங்கள் முந்தின சம்பவங்களுக்கு மூன்றுமாதத்திற்குப்பின் நடந்தவை.

(*c*) பிரதிஷ்டை பண்டிகையில்.

பிரசங்கம். அவர் கடவுளோடு விசேஷித்த சம்பந்தமுடையவர். $10^{22-42}$.

(iv) ஓர் அதிசய கிரியையால் தமது வல்லமையை விளக்கினது. $11^{1-57}$.

அதாவது—லாசரு உயிர்ப்பிக்கப்பட்டது. அதன் மூலமாக தாம் உலகத்திற்கு உயிரின் காரணமுமானவரென்று போதித்தது.

4. அந்தப் பொதுவான வெளிப்படுத்தற்கு முடிவுகள். $12^{1-50}$.

அவையாவன:

(i) அவரை நேசித்த மரியாளது அன்பும். $12^{1-8}$.

(ii) பிரதான ஆசாரியரது பகையும். $12^{9-11}$.

(iii) ஜனங்கள் கொண்ட மனவெழுச்சியும். $12^{12-19}$.

(iv) புறஜாதியார் கொண்ட ஆவலும் $12^{20-22}$.

(v) இயேசு கடைசியாக செய்த பிரசங்கமும். $12^{23-36}$.

(vi) நூலாசிரியன் கொண்ட நிதானிப்பும். $12^{37-43}$.

(vii) இயேசு கொடுத்த போதனையின் சுருக்கத் தொகுதியும். $12^{44-50}$.

C. இயேசு சீஷருக்குக் கொடுத்த விசேஷித்த வெளிப்படுத்தல். $13^{1}$–$17^{26}$.

1. அன்புள்ள ஊழியத்தின் மேன்மையைக் காண்பிக்கத் தம்முடைய சீஷரின் பாதங்களைக் கழுவினது. $13^{1-17}$.

2. கடைசி இராப்போசனம். $13^{18-38}$.

அதோடு சம்பந்தமானவை.

(i) யூதாசின் துரோகத்தை அறிவித்ததும். $13^{18-30}$.

(ii) பரம இராஜ்யத்திற்கேற்ற கட்டளையைக் கொடுத்ததும். 13:31-35.

(iii) பேதுருவின் பலவீனத்தை முன்னறிவித்ததும். 13:36-38.

3. கடைசியான போதனைகள். 14:1-16:33

அவையாவன :

(i) ஆறுதலுக்குரிய விஷயங்கள்—பரிசுத்தாவியின் வருகை. 14.

(ii) இயேசுவுடன் சின்மய ஐக்கியம் 15:1-17.

(iii) இயேசுவின் சீஷருக்கும் உலகத்தாருக்குமுள்ள சம்பந்தம். 15:18–16:3.

(iv) தாம் விட்டுப்போவதால் உண்டாகும் சந்தோஷங்கள். 16:4-33.

4. சீஷருக்காக இயேசு செய்த வேண்டுகோள். 17:1-26.

D. அவர் உலகத்திற்குக் கொடுத்த சிறந்த வெளிப்படுத்தல். 18:1–19:42.

இதிலே யூதர் பகை நிறைவேறிற்று.

அதற்குரிய சம்பவங்களாவன :

1. அவரைக் கண்டுபிடித்தது. 18:1-11.

யூதாசின் துரோகம்.

2. ஆசாரியர் செய்த விசாரணை. 18:12-27.

இதில் பேதுரு மறுதலித்தலும் ஆசாரியர் நிந்தித்தலும் காணப்படுகிறது.

3. பிலாத்து செய்த விசாரணை. 18:28–19:16.

இதில் பிலாத்துவின் அநியாயமும் ஜனங்களின் நன்றியறியாமையும் காணப்படுகின்றன.

4. சிலுவையில் அறைந்தமரணம். 19:17-37.

மகா தாழ்மையில் அதிகப் பெருமை பிரகாசித்தது.

5. அடக்கஞ்செய்தல். 19:38-42.

நண்பர் விசனம்.

E. அவர் உயிரோடெழுந்து தமது முந்திய வெளிப்படுத்துதல்களை உறுதிப்படுத்தல். 20–21:22.

இயேசுவின் ஜெயம்.

1. உயிர்த்தெழுதல் நடந்ததாகத் தெரிய வந்தது. 20:1-10.

2. மரியாளுக்கு முதல் தரிசனம். 20:11-18.

3. சீஷர்களுக்கு இரண்டு தரிசனங்கள். 20:19-30.

தோமாவின் சந்தேகம் நிவிர்த்தியானது.

F. முடிவுரை. 20:30–21:25.

1. சுவிசேஷம் எழுதப்பட்ட நோக்கம். 20:30,31.

2. பேதுருவின் விசுவாசமும் அழைப்பும். 21:1-22.

3. கடைசி வார்த்தைகள். 21:23-25.

VI. இந்நூலில் அடங்கிய இயேசுவின் சரித்திர வரலாறு. சான்றோர் ஒருவரது ஜீவிய சரித்திரத்திலுள்ள எல்லாக் காரியங்களையும் எந்த நூலாசிரியனும் ஒரு புஸ்தகத்தில் அடைத்துவைக்க முடியாது. ஒருவரது ஜீவிய சரித்திரத்தை நன்ருயறிய வேண்டுமென்று விரும்பின் இரண்டு மூன்றுபேர் எழுதின சரித்திர வரலாறுகளை வாசிப்பது உசிதம். அதுபோல வேதத்தின் நான்குசுவிசேஷகர் தங்கள் சுவிசேஷ நூற்களை வேறு வேறுவிதமா யெழுதினர்கள். அளவற்ற குணசெல்வம் நிறைந்த இயேசுவின் சரித்திர வரலாற்றையும் லக்ஷணங்களின் விவரிப்பையும் நான்கு சிறு நூற்களில் அடைத்துவைக்கக் கூடியவர் ஒருவருமிலர். மத்தேயு, இயேசு யூதர் எதிர்பார்த்துவந்த மேசியாவென்றும்; மாற்கு, அவர் புறஜாதியார் நம்பக்கூடிய இரட்சகரென்றும்; லூக்கா, அவர் எல்லாருக்கும் சிறந்த சற்குருவென்றும்; இப்படி அவனவன் தன் தனது சுவிசேஷ நூலை யெழுதினன். இந்நான்காம் சுவிசேஷத்தில் யூதருக்கும், புறஜாதியாருக்கும், வித்துவான்களுக்கும், பேதையருக்கும் சிறந்த குருவும் இரட்சகருமாகிய தெய்வீகமனுஷனைக் காண்கிருேம். எல்லாரும் இயேசுவை தேவகுமாரனென்று விசுவாசிக்கும்படியாக யோவான் தன் சிநேகிதனுன இயேசுவின் சரித்திரத்தை எழுதினனும். அந்த விசுவாசமே கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த லக்ஷணமென்பதையும், அந்த விசுவாசமில்லாமல் கிறிஸ்துமார்க்கமேயில்லை யென்பதையும், அந்த விசுவாசமில்லாதவன் கிறிஸ்தவனல்லவென்பதையும் உறுதிப்படுத்திக் காட்டும் பொருட்டே இந்நான்காம் சுவிசேஷம் எழுதப்பட்டதாம்.

இதினுலே இச்சுவிசேஷத்தில் யூதர் கொண்ட பகையும் சிலர் அடைந்த விசுவாசமும் தெளிவாய்க் காணப்படுகின்றன். இந்நூலிலே இயேசு தம்மையும் தம் தந்தையையும் வெளிப்படுத்தி வந்ததே முக்கியமான கருத்தாம். இதற்குச் சார்பாகவே மற்றெல்லாச் சங்கதிகளையும் ஆசிரியன் எழுதினன். அந்த வெளிப்படுத்தலை சிலர் சந்தோஷமாயேற்றுக்கொண்டதையும் யூதர் அதை விரோதமாய்த் தள்ளினதையும் நமக்குத் தெளிவாய்க் காண்பிக்கிருன். முக்கியமாக அந்த வெளிப்படுத்தலின் விவரிப்பும், யூதரது பகையின் வளர்ச்சியும் படிப்படியாய்த் தோன்றுகின்றன. இவைகளைப் படிப்படியாய் வளர வளர காட்டவேண்டித் தன் நோக்கத்திற்கேற்ற சில சம்பவங்களைமாத்

திரம் அந்தச் சரித்திரத்தின் சம்பவத்தொகுதியிலிருந்து தெரிந்தெடுத் தெழுதினான். எனினும் இந்நான்காம் சுவிசேஷத்தில் இயேசுவினது முழுகுண இயல்பும் காணப்படுகிறது. இதில் சில சம்பவங்களால் இச்சரித்திர ஆசிரியன் இயேசுவின் முழு ஜீவியத்தின் தன்மையையும் எழுதினான். இதின் சரித்திரவரலாற்றை ஆராய்ந்து பார்க்குமிடத்து மேற்காட்டியவைகளை மனதில் வைப்போமாக.

சரித்திர விவரமாவது:

1. விசாரணை. இயேசுவின் சிறுபிராயம், வாலிபம் என்பவைகளைப்பற்றி நமது ஆசிரியன் ஒன்றையும் எழுதாமல் அவர் பிரசங்கம் செய்த காலந்தொடங்கி சரித்திர மெழுதியிருக்கிறான். இயேசுவைப்பற்றி அவருடைய சீஷர்கள்கொண்ட அபிப்பிராயத்தைப் பார்க்கிறோம். யோவான்ஸ்நானகன் அவரைத் தன்னுடைய சீஷர்களுக்குக் காண்பித்து, தான் முன் தூதனாய் அறிவித்தவர் இவரேயென்று அவர்களுக்குச் சுட்டிக்காட்டினான். அப்போது அவர்கள் யோவானிடம் படித்த போதனைகளால் உடனே அவரிடஞ்சென்று அவரது காரியங்களெல்லாவற்றையும் விசாரித்து அவரை அதிகமாய் விரும்பினார்கள். $1^{1-51}$.

2. ஆச்சரியம். அவர் அப்புறம் தமது தெய்வீக வல்லமையைக் காட்டினார். பக்கத்தூரிலே கலியாணமிருத்தலின் அவரும் தாயாரும் சிநேகிதர் யாவரும் போயிருப்பார்கள். அந்தச் சமயத்தில் அவர் ஒரு சிறந்த அற்புதத்தைச் செய்தனர். ஜனங்கள் இதைக் கண்டு மிகவும் ஆச்சரியமடைந்தார்கள். சீஷர்களோ அவரை நம்பினார்களென்று வாசிக்கிறோம். இதுவே அவரது முதல் அற்புதத்தின் பயன். பிறகு கலிலேயாவின் சுற்றுப்புறங்களில் அவர் தம்மைப் பிரசங்கத்தாலும் அற்புதங்களாலும் வெளிப்படுத்தினதாக மற்றச் சுவிசேஷங்களினால் தோன்றுகிறது. இதினால் அவரது பிரஸ்தாபம் எங்கும் பரந்து எருசலேம்பட்டணத்திற்கும் எட்டிற்று. அந்தப் பட்டணத்தின் பெரியோர் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டுச் சமுசயமுற்றனர். அவர் கலிலேயாவில் செய்த காரியங்களால் அந்நாட்டு ஜனங்களோ அவரை அதிகச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு நம்பினார்கள் என்பது தெரியவந்திருக்கிறது. $2^{1-12}$.

3. நம்பிக்கையும் சந்தேகமும். ஆகையால் அவர் எருசலேமுக்கு வந்துவிட்டார். அங்கே அவர் முதலாவது ஒரு கிரியையால் ஆசாரியரது துன்மார்க்கத்தையும் தமது மேலான அதிகாரத்தையும் தெளிவாய்க் காட்டினார். அதென்னவெனில், தேவாலயத்தில் கள்ள வியாபாரம் பண்ணினவர்களைத் துரத்திவிட்டது. $2^{13-22}$. பிரதான ஆசாரியர் இதுமுதலாக அவரைப் பகைக்கத் தொடங்கினார்கள். அப்போதுதான் அவர்களுக்கும் அவருக்கும் விரோதம் உற்பத்தியாயிற்று. அப்போது அவர் சாதித்த தமது மேலான ஸ்திதியையும் அதிகாரத்தையும் யூதர்கள் ஒப்புக்கொள்ளாமல் தள்ளிவிட்டார்கள். சீஷர்கள் அக்காரியத்தை மனதில் வைத்துக்கொண்டு அவரது சிறப்பைப்பற்றிச் சிந்திக்கலுற்றனர். இவைகளால் யூதருக்கு அவநம்பிக்கை உண்டானதாகவும் சீஷர்களுக்கு நம்பிக்கை வளர்ந்ததாகவும் காண்கிறோம்.

2-ம் அதிகாரத்தின் கடைசிப்பாகத்தில் ஆசிரியன் இயேசுவைப்பற்றி மற்றவர்கள் கொண்ட அபிப்பிராயங்களைக் காட்டுகிறான். ஜனங்களுடைய சந்தேகமும் இயேசுவினது நிச்சயமான விவேகமும் காணப்படுகின்றன. $3^{23}$-$3^{36}$. தம்மைப்பற்றி அவர்களுடைய சந்தேகங்களை அவர் நிச்சயமாயறிந்துகொண்டாரென்று எழுதியிருக்கிறது. இன்னொரு சம்பவத்தில் யூதருடைய விரோதமும் அவரது விஸ்தார கீர்த்தியும் தெளிவாய்த் தோன்றுகிறது. யூதசாஸ்திரி ஒருவன் இராத்திரிகாலத்தில் வந்து அவரிடம் பேசினான். இதற்குப் பிறகு யோவான்ஸ்நானகன் கூறின இன்னொரு சாட்சி எழுதியிருக்கிறது. யோவான் அப்போது மற்றைய ஜனங்களுக்குத் திட்டமாய் இயேசுவின் உயர்தர நன்மையைக் காண்பித்தறிவித்தான். எல்லாரும் யோவானைத் தீர்க்கதரிசியாக எண்ணினார்களாகையால் இந்தச் சாட்சி ஜனங்களுடைய எண்ணத்தில் மிகுந்த பலமான சாட்சியாகும்.

4. நம்பிக்கையும் சந்தோஷமும். பின்பு பயணவழியில் அந்நியநாட்டில் நடந்த சம்பவம் ஒன்றைக் காண்கிறோம். இயேசு சமாரியாநாட்டின் வழியாகக் கலிலேயாநாட்டுக்குப் போய்விட்டார். $4^{1-54}$. யூதர்கள் இகழ்ந்த அச்சாதியாருக்கு இயேசு கடவுளின் உன்னத சத்தியங்களைப் போதித்தபோது அவர்கள் அவைகளை விசுவாசித்து ஏற்றுக்கொண்டார்கள். அங்கே சிலநாளாகத் தங்கி, கலிலேயாவிற்குப் புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தார். கலிலேயாவில் மூன்று நான்கு மாதங்களாக இருந்து ஜனங்களுக்குப் போதித்து அவர்களெல்லாரும் மிக்க உற்சாகம் கொள்ளும்படி அநேக அற்புதங்களைச் செய்தார். இந்நூலில் அவை யாவும் எழுதி

யுள்ளனவல்ல. இவ்வாசிரியன் சிலவற்றை மாத்திரம் தெரிந்துகொண்டு இக்காலத்தின் சம்பவங்களைப்பற்றி யதிகமாய்ச் சொல்லாமல், கலிலேயா நாட்டார் அவரைச் சந்தோஷமாய் அங்கீகரித்ததைமாத்திரம் காண்பிக்கலுற்றான். இக்காலத்தில் நடந்த ஒரே அற்புதத்தைமாத்திரம் எழுதினான். யூத சபைத் தலைவன் ஒருவன் எவ்விதமாய் விசுவாசித்துத் தான் கோரின நன்மையைப் பெற்றான் என்பதைக் காண்கிறோம். இந்தக் காரணங்களால் இதற்குள்ளே அவரது கீர்த்தி விஸ்தாரமாய்ப் பரந்தது. யூதர்கள் யாவரும் அவரைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள்.

5. விரோதம். இயேசு மறுபடியும் எருசலேமுக்கு வந்து முப்பத்தெட்டு வருஷமாய் வியாதியாய்க்கிடந்த ஒருவனுக்கு ஒரு சிறந்த அற்புதத்தை ஓய்வுநாளில் நடப்பித்தார். யூதர்கள் அவர் செய்த நன்மையை நினைக்காமல், தங்கள் பாரம்பரிய சட்டங்களுக்கு இசையாமலிருப்பதே பாவம் என்று எண்ணி அவரை விரோதித்தார்கள். $5^{1-47}$.

6. லௌகீக பக்தி. விரோதம் அதிகரித்ததால் இயேசு எருசலேமை விட்டுக் கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார். அவர் செய்த பிரசங்கங்களையும், சீஷர்கள் பயணஞ்செய்து பிரசங்கித்ததையும் யோவான் இச்சுவிசேஷத்தி லெழுதாமல் ஒரு சம்பவத்தைமாத்திரமெழுதியிருக்கிறான். $6^{1-71}$. ஐயாயிரம் ஜனங்களுக்கு அற்புத ஆகாரத்தை யுண்டாக்கின அந்த அதிசயத்தை ஜனங்கள் கண்டு மிகுந்த மனவெழுச்சிகொண்டு அவரைஇராஜாவாக்க நினைத்ததின்பேரில் அவர் தமது வேலையின் சின்மயத்தன்மையை அவர்களுக்குக் காண்பித்தார். அப்போது அநேகர் லௌகீக ஆசையுள்ளவர்களாதலின் அவரை விட்டு நீங்கிவிட்டார்கள். இது கலிலேயாநாட்டில் நடந்த சம்பவங்களில் முக்கியமானது. அவருடைய சீஷர்கள் அவரில் கூர்ந்த அன்பு இனி அதிக உறுதியும் தெளிவுமுடையதாகிறது.

7. பகையும் வாக்குவாதமும். இயேசு இனி அடிக்கடி கலிலேயாவுக்குப் போய்ப் பிரசங்கித்தபோதிலும் நமதாசிரியன் கலிலேயாநாட்டின் சஞ்சாரங்களை அறிவிக்காமல் அவைகளை விட்டுவிட்டான்.

7-ம் அதிகாரத்தில் முதலாவது அவருடைய சகோதரர் அவரைப் பற்றிக்கொண்ட அபிப்பிராயத்தைப் பார்க்கிறோம். அதற்குப் பிறகு பற்பல ஜனங்கள் அவரைப்பற்றி எவ்விதமாய்ப் பேசுதலும், அவரது வார்த்தைகளைக் கேட்டு எவ்வண்ணம் நினைத்தலும், பரிசேயர் அதிகப்பொறாமைகொண்டு அவரைப் பிடிக்கத் தீர்மானித்தலும், பிடிக்கப்போன சேவகர்பயந்துவருதலும்காணப்படுகின்றன.

8, 9, 10-ம் அதிகாரங்களில் அவரோடு யூதரும் பரிசேயரும் செய்த வாக்குவாதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. $8^{12}$-$10^{21}$. இந்த வாக்குவாதங்களினிடையில் இன்னு மதிக விரோதத்திற்கும் பொறாமைக்கும் ஏதுகரமான ஒரு காரியம் நடந்தது. அதாவது ஓய்வுநாளில் அவர் ஒரு குருடனைப் பார்வையடையச்செய்து இவ்விதமாய் வெளிப்படையாக அவர்கள் சட்டதிட்டத்திற்கு அவமானஞ்செய்தார். $10^{21.22}$.

முன்சொல்லிய காரியங்கள் யாவும் தொடர்ச்சியாய் நடந்ததில் இதனிடையில் மூன்று நான்கு மாதங்கள் சென்றன.

கடைசியாக முன்னிருந்த பகை இன்னும் மிதமிஞ்சி யதிகரிக்கவும் மற்றோர் யாவரும் அதிகமதிகமாய் ஆச்சரியப்படவுந் தக்கதாக ஒரு விசேஷித்த கிரியை நடந்தது. அதென்னவெனில்: பெத்தானியாவில் அவர் லாசருவை உயிரோடெழுப்பினார். எருசலேம் பட்டணத்தார் யாவரும் அதைக் கேள்விப்பட்டு மெச்சினார்கள். $10^{22}$-$11^{57}$. அதில் நடந்த சங்கதிகளெல்லாம் விவரமா யெழுதப்பட்டிருக்கின்றன. பிறகு பரிசேயர் இயேசுவைக் கொலைசெய்யும்படி திட்டமாய்த் தீர்மானித்தார்கள்.

8. இயேசுவின் சிறப்பு. 12-ம், 13-ம் அதிகாரங்களில் சில அழகான சம்பவங்கள் எழுதியிருக்கின்றன. இவைகளில் இயேசுவின் சிறப்பு விளங்குகிறது.

முதலாவது மரியாளது நன்றியறிதலும் அன்பும், அதேசமயத்தில் யூதாசின் மனப் பொறாமையும்காணப்பட்டன. பிறகுஜனங்கள் அவரை மெச்சினதையும் பரிசேயர் அதினால் அவரை இன்னு மதிகமாய்ப் பகைத்ததையும் ஆசிரியன் தெரிவிக்கிறான். இயேசு பண்டிகைக்குப் போனபோது பண்டிகைக்காரர்எல்லாரும்மனமகிழ்ந்துசெய்தகொண்டாட்டத்தையும் புறஜாதியார் அவரைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையையும் பார்க்கிறோம். கடைசியாக ஆசிரியன் அவர் ஜனங்களுக்கு எச்சரித்துச்சொன்ன சில வார்த்தைகளை யெழுதி அவர் செய்த பிரசங்க ஊழியத்தின் சரித்திரத்தை முடித்துவிட்டான். பிறகு அவர் தமது சீஷர்களுக்குத் தாழ்ந்த ஊழியத்தைச் செய்து தமது பெருமையையும் உண்மையான மாட்சிமையையும் வெளிப்படுத்தினார். அவருடைய அன்பும் கடைசி இராப்போஜனமும் யூதாசின் துரோகமும் சீஷர்களது துக்கமும் பேதுருவின் ஆத்திரமான குணமுமாகிய

இவைகளெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாய்க் காணப்பட்டுக் கடந்துகொண்டே போகின்றன. கடைசியாக இயேசு தம்மைப் பற்றியும் சீஷரைப்பற்றியும் சபையைப் பற்றியும் சிறந்த போதகம்பண்ணிச் சீஷர்களுக்காகவும் சபையாருக்காகவும் சிறந்த வேண்டுதல் செய்து மரணமடையப் புறப்பட்டுப் போனதாகக் காண்பிக்கப்பட்டது.

9. இயேசுவின் மகிமை காண்பித்த விசேஷித்த காட்சி. பின்பு இயேசுவின்பாடுகளும், வியாகுலமும், மரணமும் சொல்லியிருக்கின்றன. இவைகளில் முன்வந்த பதினேழு அதிகாரங்களில் சொல்லப்பட்ட சத்தியங்களும் குணுதிசயங்களும் சிறந்த காரியங்களும் எல்லாம் தெளிவாய் விளங்குகின்றன. $18^{1}$-$21^{28}$. யூதர்களுடைய பகை முற்றுப்பெறவும், யூதாசின் துரோகமனம் இயேசுவைக் காட்டிக்கொடுக்கவும், சீஷர்கள் ஓடிப்போகவும், பேதுரு சபித்து மறுதலிக்கவும், பரிசேயர் ஒரு நியாயமுமின்றிக் கொலைத்தீர்ப்புச் செய்யவும், பிலாத்து பயந்து மரண ஆக்கினை விதிக்கவும், இயேசு அடிபடவும், பரிசேயரும் யூதர்களும் சேவகர்களும் நிந்திக்கவும், சிலுவையிலறையப்பட்டு இயேசு அதிக வேதனையடைந்து மரிக்கவும், அன்பர் வந்து அவரை அடக்கஞ் செய்யவுமாக நடந்ததெல்லாவற்றையும் நாம் விவரமாய்ப் பார்க்கிறோம். எல்லாவற்றிலும் இயேசு மனக் கலக்கமில்லாமல் அமைதியும் மாட்சிமையும் மிகுந்த அன்புமுடையவராய் இருந்து, இவ்விதமாய்க் கடைசியாகத்தம்மை வெளிப்படுத்தி எல்லாவற்றையும் ஜெயித்து உயிரோடெழுந்ததைப் பார்க்கிறோம். மரியாளின் துக்கமும் தோமாவின் சந்தேகமும் சீஷர்களின் பயமும் பேதுருவின் மனஸ்தாபமும் மாறி, அன்புள்ள சந்தோஷமும் சிறந்த நம்பிக்கையும் தைரிய மகிழ்ச்சியும் சமாதான உறுதியுமாகிவிட்டன. இந்நான்காம் சுவிசேஷ முழுவதிலும் இயேசுவின் குணத்தின் மாட்சிமை சிறந்து வெளிப்படுகிறது. அவர் உண்மையாகவே மாட்சிமையுள்ள இரட்சகர் என்பதை நாம் அறியும்படி ஆசிரியன் அவரது சரித்திரத்தை வரைந்தெழுதியிருக்கிற நோக்கம் கடைசியாகத் தெரிவிக்கப்பட்டது.

VII. ஆசிரியனதுகோட்பாடுகள். மற்றச் சுவிசேஷங்களைப்பார்க்கிலும் இந்தச்சுவிசேஷத்தில் ஆசிரியனது கொள்கைகள் அதிகமாய்க் கலந்திருக்கின்றன. ஆகையால் அவைகளைக் கவனமாய் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்நூலின் முகவுரையில் ஆசிரியன் அபிப்பிராயங்கொண்ட முக்கியமான போதனை ஒன்றிருக்கிறது. அப்போதனையின் சாரம் முழு நூலிலும் பரந்திருக்கிறது. எப்படியெனில், பரமவாக்கைப்பற்றிய போதனையே ஆசிரியன் இயேசுவைப்பற்றிச் சிந்தித்த விதத்திற்குச் சாராம்சமாயிருக்கிறது. இப்போது இவன் எழுதின சுவிசேஷத்தில் தோன்றுகிற மற்ற நோக்கங்களையும் அபிப்பிராயங்களையும் நாம் எடுத்துக் கூற வேண்டும். இவைகளை இவன் இயேசுவின் போதனைகளைக் காட்டுகிற மாதிரியிலும் இவன் பிரத்தியேகமாயெழுதின இவனது நோக்கங்களிலும் நாம் கண்டுபிடிக்கலாம். இவன் $20^{30}$-ம் வாக்கியத்தில்தான் நூலை எழுதிய நோக்கத்தைத் திட்டமாய்த் தெரிவிக்கிறான். 'நீங்கள் இயேசுவே கிறிஸ்துவாகிய தேவகுமாரன் என்பதை விசுவாசித்து அவரது நாமத்தைக்கொண்டு ஜீவன் பெறவேண்டும்' என்பதே. இந்த நோக்கத்தில் இரண்டு பாகங்களுண்டு. முதலாவது சத்தியத்தை மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்ளுதல். இரண்டாவது அதினால் ஒரு சிலாக்கியத்தை யடைதல். முதலாம் காரியம் மனதுக்கும், இரண்டாம் காரியம் ஜீவியத்துக்குமுரியது.

1. தேவகுமாரன் என்பது இந்நூலில் விசேஷித்த வார்த்தை. கிறிஸ்து என்னும் வார்த்தை யூதர்கள் எதிர்பார்த்த மேசியாவைக் குறிக்கிறது. தேவகுமாரன் என்பதும் அதற்குச் சமம். நமது ஆசிரியன் சிலவிடங்களில் அப்படியே இதை உபயோகித்துவருகிறான். அந்த வார்த்தை ஒரு பிரத்தியேகமான நிலையைக் காண்பிக்கிறது. $1^{49}$ $11^{27}$. யோவான் எல்லாரையும் தேவகுமாரரென்று சொல்லினும் விசேஷித்த அர்த்தத்தோடு இயேசு தேவகுமாரன் என்று சொல்லுகிறான். $1^{18.34}$ $3^{17.18.36}$ $4^{25-29}$ $5^{19.22.28}$ $6^{14.68}$ $9^{30}$ $10^{36}$ $11^{4}$ $12^{12-19.34-36}$ $17^{1}$ $19^{7}$ பார்க்க.

2. நித்தியஜீவன். $20^{30}$-ம் வாக்கியத்தின் இரண்டாம் பாகத்தில் நித்தியஜீவனைப்பற்றிப் பேசுகிறான். ஆசிரியன் எப்போதும் இந்த வார்த்தையால் மோக்ஷபதவியைக் குறிப்பிடுகிறான். இந்த நித்திய ஜீவன் மகா விசேஷித்தது. எல்லாரும் இதை அடையவேண்டுமென்று விரும்புவார்கள். இதை அடைவது எல்லாருடைய மனத்தாற்பரியமாதல் வேண்டும். இயேசுவை தேவகுமாரனென்று உண்மையாயறிந்துகொள்வது அந்த நித்தியஜீவனுக்குச் சாராம்சமாயிருக்கிறது. அப்படிப்பட்ட அனுபோக அறிவு நித்தியஜீவனை யடைந்தவரது உணர்ச்சியாம். அவர்களது மனம் எப்போதும் இந்தச் சத்தியத்தில் நிலைபெற

றிருக்கிறது. இந்த நித்தியஜீவன் இவ்வுலகத்தில் ஆரம்பித்து, பரலோகத்தில் பூரணத்தையடைகிறது. $3^{15}$ $4^{36}$ $5^{39}$ $6^{54.68}$ $10^{28}$ $12^{25}$ $17^{2.3}$ வசனங்களைப் பார்க்க. இந்த நித்தியஜீவன் கிறிஸ்துவினது ஈவானதேயல்லாமல், மனிதரது சொந்தக்கிரியையால் உண்டானதல்ல.

**3.** இந்த நான்காம் சுவிசேஷகன் முக்கியமாய் நான்கு விசேஷித்த வார்த்தைகளுக்குச் சார்பாக இயேசுவின் போதனையைக் காண்பிக்கிறான். இந்த வார்த்தைகளை யதிசமாய் உபயோகித்துவருகிறான். அவைகளாவன: சத்தியம், ஜீவன், ஒளி, அன்பு என்பவைகளே. இந்த வார்த்தைகள் மூலமாய் ஆசிரியனது போதனை முழுவதும் காணப்படும். இவைகளுக்கு நேர்விரோதமான காரியங்களைக் காட்டும்படி இந்த வார்த்தைகளுக்கு எதிரிடையான வார்த்தைகளையும் உபயோகிக்கிறான். அதாவது— பொய், மரணம், இருள், பகை என்பவைகளே. முறையே அவைகளும் இவைகளும் அடிக்கடி ஜதை ஜதையாக வருகின்றன. $1^{5}$ $3^{15.16.19}$ $5^{24}$ $6^{50}$ $8^{44}$ $10^{10}$ $11^{9.10.25}$ $12^{35.46}$ $15^{19}$ இவைகளைப் பார்க்க.

i. சத்தியம். இயேசு கடவுளின் சத்தியத்தை உலகத்துக்கு வெளிப்படுத்திவருகிறார். கடவுளே சத்தியமுள்ளவர். இயேசுவின் வார்த்தைகள் யாவும் சத்தியமுள்ளன. அவரே சத்திய சொரூபியானார். சத்தியம் நடப்பித்தல் என்பது யோவான் எழுதிய நூற்களில் வழங்குகிற வாசகம். இயேசுவைத் தள்ளினவர்கள் சத்தியமில்லாதவர்களானார்கள். அவருக்கு விரோதமானதெல்லாம் பொய். பிசாசு பொய்யின் தந்தையாம். கடவுளை வணங்கும்படி உண்மையான மனம் அவசியம். பரிசுத்தாவி சத்தியத்தின் ஆவியென்று சொல்லப்பட்டிருக்கிறது. $1^{14.17}$ $3^{21}$ $4^{23.24}$ $5^{33}$ $8^{32.40.44.45.46}$ $14^{6.17}$ $15^{26}$ $16^{7.13}$ $17^{17.19}$ $18^{37.38}$ இவைகளைப் பார்க்க.

ii. ஜீவன். இயேசுவே உலகத்திற்கு ஜீவன். அவரை விசுவாசித்தவன் ஜீவனையுடையவன். மனிதருக்கும் பூரணமான ஜீவனைக் கொடுக்க உலகத்தில் வந்தார். மோக்ஷம் நித்தியஜீவன் என்று அழைக்கப்படுகிறது. இயேசுவே சுயம்புவாய் ஜீவனையுடையவர். அவரை ஆகாரமாக அடைவது உண்மையான ஜீவனைப் பெறும் வழியாம். உயிர்த்தெழுதல் அவரால் உண்டாகிறது. அவரை விசுவாசிப்பது நித்தியஜீவனுக்கேதுவாம். அவரைத் தள்ளிவிடுவது மரணத்திற்குட்படுத்தும். ஜீவனே மனுஷனுக்குச் சிறந்தபொருள். இயேசுகிறிஸ்து மூலமாய்க் கடவுளை அறிவதே நித்தியஜீவனை அடைவதாம். இயேசுவினது ஜீவன் உலகத்தின் இரட்சிப்பாம். $1^{4}$ $3^{15.36}$ $4^{14.36}$ $5^{24.26.29.39.40}$ $6^{27.33.35.40.47.48}$ $6^{51.53.54.63.68}$ $8^{12}$ $10^{10.28}$ $11^{25}$. $12^{25.50}$ $14^{6}$ $17^{2.3}$ $20^{31}$ பார்க்க.

iii. ஒளி. இயேசு உலகத்திற்கு ஒளி. உலக முழுவதும் இருளால் மூடப்பட்டு ஒளியைக் காணாமலிருந்தது. அவர் எக்காலத்திலும் பிரகாசித்துக்கொண்டேயிருக்கிற நித்திய ஒளியாம். அந்த ஒளி மனுஷனது ஜீவனாயிற்று. இந்த ஞான ஒளி மனிதரது அறிவாயிற்று. இதுமூலமாய் மனிதர் யாவரும் கடவுளை அறிகிறார்கள். இயேசுவை அறிவோர் ஒளியின் மக்களாகி ஒளியில் நடக்கிறார்கள். மற்றோர் இருளின் மக்களாகி இருளில் நடந்து வழுவி இடறிப் போகிறார்கள். தீயோர் இருளை விரும்புவார்கள். ஒளியில் நடப்பதும் கடவுளின் கட்டளைப்படி நடப்பதும் ஒன்று. $1^{4.5.7.8.9}$ $3^{19-21}$ $5^{35}$ $8^{12}$ $9^{5}$ $11^{9.10}$ $12^{35.36.46}$ பார்க்க.

iv. அன்பு. யோவான் அன்பின் அப்போஸ்தலன் என்னப்பட்டான். அவன் ஒரு சின்மய அன்பைப்பற்றி முக்கியமாய் எழுதுகிறான். கடவுள் அன்புமயமாகவேயிருக்கிறார். கடவுள் உலகத்தில் அன்புகூர்ந்து இயேசுவை அனுப்பினார். இயேசு உலகத்தாரை நேசித்து தமது ஜீவனைக் கொடுத்தார். மற்றவர்களை நேசிக்கவேண்டுமென்னும் புதுக்கட்டளையை அவர் தமது சீஷருக்குக் கொடுத்தார். சீஷர்களுக்கு முக்கியமான குணமாவது: இயேசுவையும் மற்றோரையும் நேசிக்கும் அன்பு. அன்புள்ளவர் ஊழியக்காரராவார். இயேசு பேதுருவுக்கு அன்புள்ள குணத்தின் சிரேஷ்டத்தைக் காண்பித்தார். அவர் தம்முடைய சீஷர்களை மிகவும் நேசிக்கிறாரென்று இச்சுவிசேஷத்தில் காணப்படுகிறது. கடவுள் தமது குமாரனை நேசிக்கிறார். $3^{16.19.35}$ $8^{42}$ $10^{17}$ $11^{5}$ $12^{43}$ $13^{1.23.34}$ $14^{15.21.23.24.28.31}$ $15^{9-12.17}$ $17^{23.24.26}$ $19^{26}$ $21^{7.15.16.20}$ $5^{20}$ $11^{3.36}$ $12^{25}$ $15^{19}$ $16^{27}$ $20^{2}$ $21^{15.17}$ வசனங்களைப் பார்க்க.

இவ்விதமாய் அந்த நான்கு வார்த்தைகளாலும் இந்நூலின் போதனை முழுவதும் விளங்குகிறது.

**4.** இயேசுவைப்பற்றிய அபிப்பிராயம். இந்நூலின் ஆசிரியன் இயேசுவின் தெய்வீக குணத்தையும் மனுஷீகத்தையும் தெளிவாய்க் காட்டுகிறான். அவரது சின்மய தெய்வீகம் அவரது நேர்த்தியான மனுஷீ

கத்தை மறைக்க இடங்கொடுக்கிறதில்லை. தாகம் $4^{7}$ $19^{28}$, இளைப்பு $4^{6}$, நேசம் $20^{2}$, கண்ணீர்விடுதல் $11^{35}$, அறியாமை $11^{34}$, விலகுதல் $7^{1}$ $8^{59}$ ஆகிய இவைகளெல்லாம் அவருக்கிருக்கிறதாகச்சொல்லியிருக்கிறது.

உண்மையான மனுஷனானவர் சின்மய கிறிஸ்துவே. இயேசுவே உலகத்தின் இரட்சகராகக் காண்பிக்கப்பெற்றார். அந்த இரட்சிப்பில் அவரது மரணம் விசேஷித்த கிரியையாம். $1^{29}$ $3^{14}$ $4^{32.42}$ $10^{11.17.18}$ $11^{9}$ $12^{32}$ $18^{14}$. மனிதர் இயேசுவாலேதான் நித்தியஜீவனை யடைவார். இயேசுவைச் சரியானபடி விசுவாசிப்பது முக்கியமான காரியம். அவரே கடவுளின் தூதனானார்.

5. கடவுளைப்பற்றிய போதனை. ஆசிரியன் கடவுள் சொரூபமில்லாமல் சுத்த பரமாத்மாவாயிருக்கிறார் எனினும், கடவுள் மனிதர் சமீபிக்கக்கூடாதவரும் மனிதர் விஷயங்களில் சம்பந்தமில்லாதவருமாக எண்ணிக்கொள்ளமாட்டான். கடவுள் உலகத்தில் அன்புகூர்ந்து அதை மிகவும் கவனித்து முழுவதுமாய் இரட்சிக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறார். $3^{16}$ $4^{24}$. அவரது விசேஷித்த லக்ஷணங்களாவன: பரிசுத்தம், ஞானம், மாசின்மை, சத்தியம், அன்பு என்பவைகளே. $1^{4-5}$ $8^{56}$ $17^{11-25}$. இயேசு எப்போதும் கடவுளைத் தந்தை என்கிறார். கடவுளும் இயேசுவும் நித்தியமாய் தந்தை, குமாரனுமாக ஒன்றாகவே அமைந்திருக்கிறார்கள். $10^{30-42}$.

6. உலகத்தைப்பற்றிய அபிப்பிராயம். 'உலகம்' என்பது இயேசுவைத் தேவகுமாரனென்று விசுவாசியாமல் இயேசுவுக்கு விரோதமாய் நடக்கும் ஜனத்தை எப்போதும் குறிக்கிறது. உலகத்தார் இயேசுவைப் பகைக்கிறார்கள். பிசாசானவன் இவ்வுலகத்தின் அதிபதி. உலகத்தார் இருளில் நடந்து பொய்யரும் அன்பிலரும் பொறாமைகொண்டவருமாவார்கள். இந்த விரோதமான உலகத்தில் அன்புகூர்ந்து கடவுள் அதைத் தமது குமாரன்மூலமாய் இரட்சிக்கப் பிரயாசைப்படுகிறார். $1^{9.29}$ $3^{16.17}$ $7^{7}$ $8^{23}$ $9^{5}$ $12^{31}$ $14^{17}$ $16^{11}$ $17^{9.21}$ $18^{35}$ முதலியவைகளைக் காண்க.

7. இரட்சிப்பைப்பற்றிய போதனை. இது முன்னே சொல்லிய குறிப்புகளிலும் வெளிப்பட்டது. இயேசுவை விசுவாசிப்பது இரட்சிப்புக்கேதுவாம். இரட்சிப்பைப் பெறுவதும் நித்தியஜீவனையடைவதும் ஒன்றுதான். முன்னே சொன்னபிரகாரம் இயேசுவின் மரணமே உலகத்திற்கு இரட்சிப்பையுண்டாக்கின கிரியையாயிற்று. $1^{29}$ $3^{15-18}$ $11^{49}$ $12^{32}$ $18^{14.15}$. பூரண இரட்சிப்பு அடைவதற்கு இயேசுவில் நிலைத்திருக்கவேண்டும்.

8. கடைசிக்காலக் குறிப்புகள். கடைசிக்காலத்தைப்பற்றி இந்த நூலில் அதிகமாய்ச் சொல்லப்படவில்லை. ஆசிரியன் நியாயத்தீர்ப்பு எப்போதும் நடக்கிறதாக நினைக்கிறான். இயேசுவை உண்மையாய் ஏற்றுக்கொள்ளுவது நிதானிக்கப்பட்ட குறிப்பு. அவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள் தக்கப் பயனைப் பெறுவார்கள். எல்லாரும் தாங்கள் செய்கிற கிரியைகளுக்குத் தக்கதாகக் கடைசிக்காலத்திலாகிலும் பயனைப் பெறுவார்கள். கடைசிக்காலத்தில் எல்லா விஷயங்களிலும் இயேசுவே ஜெயம் அடைவார். $8^{15}$ $15^{6}$ பார்க்க.

9. பரிசுத்தாவியைப்பற்றிய போதனை. கடவுளது ஆவியைப்பற்றி நாம் பழைய ஏற்பாட்டிலும் வாசிக்கிறோம். எனினும் மற்ற நூற்களில் அதின் போதனை தெளிவாய் வெளிப்படுகிறதில்லை. திரியனுபந்த சுவிசேஷங்களில் பரிசுத்தாவியைப்பற்றி அதிகம் இல்லை. இந்நான்காம் சுவிசேஷத்திலே ஆவியைப்பற்றித் திட்பமான போதனையைக் காண்கிறோம். நிக்கொதேமுடன் நடந்த சம்பாஷணையில் ($3^{5-8}$) கடவுளின் ஆவியானவர் சின்மய ஜீவியத்திற்குக் காரணர் என்றும், சமாரிய ஸ்திரீ சம்பாஷணையிலும் ($4^{10}$) கூடாரப் பண்டிகைப் பிரசங்கத்திலும் ($7^{37}$) இயேசு அதற்குக் காரணர் என்றும் சொல்லப்படுகிறது. சீஷர்களுக்குக் கொடுத்த கடைசிப் போதனைகளிலே விசேஷமாய்க் கடவுளாவியைப்பற்றிக் கேட்கிறோம். பரிசுத்த ஆவி என்னப்பட்டவர் உலகத்தில் கிறிஸ்துவின் பிரதிநிதியாயிருந்து சீஷர்களுக்குப் பரிந்துபேசுபவர் என்பதும்; அவர் உயர் திணையுள்ள ஒருவரென்று சொல்லத்தக்கவரும் பரம தந்தையும் குமாரனுமல்லாதவராயிருக்கிறாரென்பதும்; அவர் தந்தையிலிருந்து புறப்பட்டுவந்த தந்தையோடு நித்திய சம்பந்தமுடையவராவார் என்பதும்; அவர் நித்தியமாய் சீஷர்களுடன், ஐக்கியமாகி குமாரனது வேலையாகிய போதனை, வெளிப்படுத்தல் என்பவைகளைச் செய்து, அவரை மகிமைப்படுத்தி, அவரைப்பற்றி உலகத்திற்குச் சாட்சி கூறி, பாவம், பரிசுத்தம், நீதி என்பவைகளை உணர்த்துவார் என்பதும், அந்த போதனைகளிலிருந்து காணப்படுகிறது. $14^{16.17.26}$ $15^{26.27}$ $16^{7.8.13-15}$ பார்க்க. ஆகையினால் தெய்வ தத்துவத்தில் திரிமூர்த்திகளென்று சொல்லக்கூடிய மூவரைப்

பார்க்கிறோம். அவர்கள் தந்தையானவர், வாக்கானவர், ஆவியானவர் என்பவர்களே.

VIII. இந்நூலில் அடங்கிய இயேசுவின் போதனை.

இந்நூலில் எழுதிய இயேசுவின் போதனை சில விஷயங்களில் திரியனுபந்த சுவிசேஷங்களிலெழுதிய போதனைகளைப் போல் இருக்கும். சில விஷயங்களிலே அதற்கு வேறே ஆகும். ஆசிரியனது கொள்கைகளையும் இயேசுவின் போதனையையும் பிரித்துவைப்பது அநேக இடங்களில் சுலபமான காரியமல்ல; எனினும் கூடியமட்டும் அப்படிச் செய்யப் பிரயாசப்படுவோம்.

1. கடவுள் சின்மயச் சொரூபியாயிருக்கிறார். கடவுளது குணம் சின்மயத்தன்மையுடையது; அவர் பரமாத்துமாவாயிருக்கிறார்; அவரை ஒரு உருவத்திலாவது, ஒரு இடத்திலாவது, ஒரு சாஸ்திரத்திலாவது வகிக்கமுடியாது. $4^{19-25}$. கடவுள் அத்தன்மையுடையவர் ஆதலின் அவரைச் சின்மயவிதமாய் உணரவும் வணங்கவும் வேண்டும். கடவுள் ஒருவராயிருக்கிறார். $17^{3}$. இந்த ஏகத்தன்மைக்குரிய எண்ணம் எல்லாச் சம்பாஷணைகளிலும் பிரகாசித்துக் காணப்படுகிறது. கடவுளுக்குச் சத்தியம் பரிசுத்தம் நீதி என்பவைகள் முக்கியமான குணங்களாம். $8^{26}$ $17^{11,25}$.

2. கடவுள் பரம தந்தையாவார். இந்நான்காம் சுவிசேஷத்தில் கடவுள் விசேஷமாய்த் தந்தை என்கிற பேர்பெற்றிருக்கிறார். இயேசு வழங்கும் பெயர் இதுதான். என் தந்தை என்றும் தந்தையென்றும் சொல்லுகிறார். இந்தப் பெயரால் கடவுளுக்கும் தமக்குமுள்ள விசேஷித்த சம்பந்தத்தைக் குறிப்பிட்டார். $2^{16}$ $3^{35}$ $5^{17-45}$ $8^{16-56}$ 14, 15, 16.

3. தாமே கடவுளது பூரண வெளிப்படுத்தல். இயேசு தமது விரோதிகளுக்கு முன்பாகவும் சீஷர்களுக்கு முன்பாகவும் இந்தச் சத்தியத்தை அதிகப் பலமாய்ச் சாதித்துவருவதை இந்நான்காம் சுவிசேஷத்தில் காண்கிறோம். இந்தச் சுவிசேஷத்தை அவர் தம்மை வெளிப்படுத்தின சரித்திரமென்று சொல்லக்கூடும். நிக்கொதேமுடன் நடந்த சம்பாஷணை தொடங்கிச் சீஷர்களுடன் பேசின கடைசி வார்த்தைகள் வரைக்கும் இயேசு இந்தச் சத்தியத்தை மிகச் சிறப்பித்துக் காண்பிக்கிறதைப் பார்க்கிறோம். $3^{13}$ $14^{9}$. அவரது சித்தம், கனம், புத்தி முதலியவை எல்லா விஷயங்களிலும் கடவுளுடையவைகளுக்குச் சமமானவையாம். அவர் செய்கிறவையெல்லாம் கடவுளது செய்கைகளாம். அவரிலே கடவுள் உலகத்தில் கிரியை செய்துவருகிறார். கடவுளுடன் இந்த விசேஷித்த ஒற்றுமையிருத்தலின் இயேசு உலகத்தில் விசேஷித்த நிலைமையுடையவரானார். இந்த விசேஷித்த நிலைமையை ஏழு வாக்கியங்களால் குறிப்பிட்டார். அவையாவன:

i. நானே ஜீவாகாரம். $6^{35}$.
ii. நானே உலகத்தின் ஒளி. $8^{12}$ $9^{5}$.
iii. நானே ஆடுகளின் வாசல். $10^{7}$.
iv. நானே நல்ல மேய்ப்பன். $10^{11}$.
v. நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். $11^{25}$.
vi. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். $14^{6}$.
vii. நானே மெய் திராட்சச்செடி. $15^{1}$.

இந்த வாக்கியங்களால் உலகத்தின் விஷயமாய்த் தமக்கிருந்த விசேஷித்த நிலையை அவர் காண்பித்தார். அந்த விசேஷித்த நிலையைக் காட்டும்பொருட்டு அடிக்கடி அவர் தம்மேல் பக்திவைப்பது மெய் ஜீவனுக்கு அவசியமென்றும் தம்மைத் தள்ளுவது ஆக்கினைக்கு ஏதுவானதென்றும் திட்பமாய்ச் சொன்னார். $8^{24}$ $12^{49}$.

4. மனுஷகுமாரன். இயேசு தம்மைப் பெரும்பான்மையாய் மனுஷகுமாரன் என்று சொல்லி முக்கியமாகத் தமது உண்மையான மனுஷீகத்தைத் தெரிவிக்கிறார். அத்துடன் அந்த மனுஷீகத்தின் சிறப்பை அது காட்டுகிறது.

5. கடவுளை அறிந்துகொள்ளுவதற்குச் சின்மயக்குணம் வேண்டும். கடவுளது ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கும் தம்மையுணர்ந்து விசுவாசிப்பதற்கும் தமக்குரிய சின்மயக்குணம் அவசியமென்றும், இந்தச் சின்மயக்குணம் கடவுளாவியாலே உண்டாகியிருக்கின்றதென்றும் போதித்தார். இந்தப் போதனை விசேஷமாய் நிக்கொதேமுடன் செய்த சம்பாஷணையில் காணப்படுகிறது. $3^{1-13}$ $8^{23}$.

6. உலகத்தில் கடவுளாவியானவர் அவரது வேலையைச் செய்கிறார். அந்தக் கடவுளாவியானவர் மனிதருடைய இருதயத்திலும் தமது மனத்திலும் கிரியை நடப்பித்தார் என்றும், தாம் உலகத்தை விட்டுப் போனபிறகு தமது காரியங்களை வெளிப்படுத்துவார் என்றும் இயேசு போதித்தார். $3^{8,16}$.

இவைகளே இந்நான்காம் சுவிசேஷத்திலெழுதிய இயேசுவின் போதனைக்குள்ள முக்கியமான குறிப்புகளாம்.

IX. இந்நூலுக்கும் திரியனுபந்த சுவிசேஷங்களுக்கும் உள்ள வித்தியாசங்கள். மற்ற மூன்று சுவிசேஷங்களும் ஒன்றோடொன்று சம்பந்தமுள்ளவாதலின் அவைகள் திரியனுபந்த சுவிசேஷங்கள் (*Synoptic Gospels*) என்னும் பெயர் பெற்றன. நான்காம் சுவிசேஷம் பிரத்தியேகமாயிருக்கிறது. மற்ற மூன்று சுவிசேஷங்களில் அப்போஸ்தலர் இயேசுவின் சரித்திரத்தைப் பற்றிக் கொடுத்த சாட்சி அடங்கியிருக்கிறதாக எல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். சிலர் இந்த நான்காம் சுவிசேஷத்துக்கும் அவைகளுக்கும் சில வித்தியாசங்கள் ஆனதால் இந்தச் சுவிசேஷத்திலுள்ள சரித்திரம் மெய்யல்லவென்று சொன்னதினிமித்தம் அந்த வித்தியாசங்களை நாம் நன்றாய் ஆராய்வோமாக.

1. கிறிஸ்து பிரசங்கம் செய்த நாடு. திரியனுபந்த சுவிசேஷங்கள் கலிலேயா நாட்டையும், இந்தச் சுவிசேஷம் யூதேயா தேசத்தையும் முக்கியமாய்க் குறிப்பிக்கின்றன. பொதுவாய்ப் பார்த்தால் அவைகளும் இதுவும் சொன்னவை மெய்தான். திரியனுபந்த சுவிசேஷங்கள் கலிலேயாவில் நடந்த விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றன. நான்காம் சுவிசேஷம் யூதேயாவிலும் எருசலேமிலும் நடந்த காரியங்களைச் சொல்லுகிறது. அப்படியிருந்தபோதிலும் இரண்டிலும் மற்றொன்றின் சங்கதியுடன் சம்பந்தங்கள் அநேகமுண்டு. திரியனுபந்த சுவிசேஷங்களாலும் அநேக குறிப்புகளால் யூதேயாதேசத்தில் நடந்த பிரசங்கத்தைப் பற்றி அனுமானிக்கலாம். லூக் $4^{66}$ $5^{17}$ $10^{38}$ $13^{21,33,34}$ மத் $23^{37}$ $26^{17}$. அதுமாத்திரமல்ல, நான்காம் சுவிசேஷத்தால் கலிலேயா நாட்டில் அவர் அதிகமான பிரசங்கம் பண்ணினதை நாம் அறிந்துகொள்ளலாம். $2^{12}$ $4^{3}$. இவைகள் நடந்தபின்பு $7^{13}$ காண்க. மற்ற மூன்று சுவிசேஷங்கள் எழுதப்பட்டபிறகு இந்த நான்காம் சுவிசேஷம் எழுதப்பட்டதென்பதை நாம் நினைவுகூரவேண்டும். அவைகளில் எழுதப்பட்டதை நமது ஆசிரியன் பெரும்பான்மையாய் எழுதவில்லை. இந்த விஷயத்தில் அதிக வித்தியாசமிருந்தபோதிலும் ஒன்றுக்கொன்று விரோதம் ஒன்றுமேயில்லை.

2. இயேசு ஊழியஞ் செய்தகாலம். திரியனுபந்த சுவிசேஷங்களின் சரித்திரம் பார்த்தால் இந்தக் காலம் ஒருவருஷம் மாத்திரம்போலிருக்கிறது. நான்காம் சுவிசேஷத்தில் அது இரண்டரை வருஷமென்று தோன்றுகிறது. எப்படியெனில், அவைகளில் இரண்டு பஸ்காபண்டிகைகள் மாத்திரம் சொல்லப்பட்டிருக்கின்றன. இதிலோ மூன்று பண்டிகைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. முதலிலும் கடைசியிலும் வந்த பண்டிகைகளோடு ஒன்று நடுவில் வருகிறது ($6^{4}$). அப்படியாயினும் திரியனுபந்த சுவிசேஷங்களில் சொல்லிய காரியங்களை ஒரு வருஷத்திலடக்க முடியாது. திட்பமாய்ச் சொல்லாவிடினும் இரண்டரை வருஷகாலம் உண்டு என்பதற்கு விரோதமானதொன்றும் திரியனுபந்த சுவிசேஷங்களில் இல்லை. ஆகையால் இந்த வித்தியாசம் ஒன்றுக்கொன்று விரோதம் விளைவிக்கிறதில்லை. திரியனுபந்த சுவிசேஷங்களில் யாதுகாரணத்தினாலோ ஒரு பண்டிகை சொல்லாமல் விடப்பட்டிருக்கிறது.

3. சரித்திரத்தின் பேர்களும் சம்பவங்களும். நான்காம் சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட சில பெயர்கள் திரியனுபந்த சுவிசேஷங்களில் சொல்லப்படவேயில்லை. நிக்கொதேமு, நாத்தான்வேல், லாசரு என்பவர்கள் இந்தச் சுவிசேஷத்தில்மாத்திரம் காணப்படுகிறார்கள். இன்னும் கானாவூரின் அற்புதம், பெதஸ்தா குளத்தில் சுகப்படுத்துதல், எருசலேமில் குருடனைப் பார்க்கச்செய்தல், லாசருவை உயிர்ப்பித்தல் முதலியவை திரியனுபந்த சுவிசேஷங்களில் சொல்லப்படவேயில்லை. அதுபோலவே இயேசுவின் பிறப்பு, ஞானஸ்நானம் பெற்றது, மறுரூபமாதல், இராப்போஜனம் நியமித்தல் முதலியவை இந்தச் சுவிசேஷத்தில் விடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சுவிசேஷகனும் தன்தன் நோக்கத்தின்படி அநேக சம்பவங்களிலிருந்து சிலவற்றைமாத்திரம் தெரிந்துகொண்டு எழுதினான். ஆகையினால் இந்தக் காரியத்தினால் நான்காம் சுவிசேஷத்திற்கு விரோதமானது ஒன்றும் நினைக்கவேண்டியதில்லை.

4. கிறிஸ்துவின் போதனை. திரியனுபந்த சுவிசேஷங்களில் தெளிவான உவமைகளும் லேசான போதனைகளும் பரம இராஜ்யத்தின் விஷயங்களும் விசேஷமாய் வரும். நான்காம் சுவிசேஷத்திலோ சின்மய போதனையும் கிறிஸ்துவின் தன்மையைப்பற்றிய சாஸ்திரமும் அதிகமாய் வருகிறது. இடத்தின் வித்தியாசத்தினால் இந்தப் போதனையின் வித்தியாசம் முக்கியமாய் உண்டாயிற்று என்று நாம் சொல்லக்கூடும். கலிலேயா தேசத்தாருக்கு இந்தச் சின்மய போதனை கொடுக்கலாகாது. அதுபோலவே தம்மை நேர்ந்து விரோதித்த யூதர்களுக்குத்

தெளிவாய்த் தம்முடைய காரியங்களைக் காட்டவேண்டும். அதுமாத்திரமல்ல அந்தந்தச் சுவிசேஷங்களை வாசிப்பவர்கள் வெவ்வேறானவர்கள். திரியனுபந்த சுவிசேஷங்கள் ஆதிக்கிறிஸ்தவர்களுக்கு எழுதியிருக்கின்றன. நான்காம் சுவிசேஷமோ கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றி யதிகமாய் எண்ணிக்கொண்டவர்களுக்கும், கிரேக்கு சாஸ்திரம் அறிந்தவர்களுக்கும் எழுதப்பட்டது. இரண்டையும் ஆராய்ந்து பார்க்கின் போதனையின் பொருளில் ஐக்கியமுண்டென்றறியலாம். வித்தியாசங்களிருந்தும் இது விஷயமாய்த் திரியனுபந்த சுவிசேஷங்களுக்கும், இந்நான்காம் சுவிசேஷத்திற்கும் நேர்விரோதமிருக்கிறதென்று சொல்ல இடமில்லை.

5. வித்தியாசங்களிருப்பதாக இன்னும் இரண்டொரு விஷயங்களில் தோன்றுகிறது. இயேசு மரணம் அடைந்த நாளைக் குறித்து இயேசுவின் ஜீவிய சரித்திரம் § E முடிவு பார்க்க. தாம் மேசியாவென்று சாதித்துக்கூறும் விஷயத்தைக் குறித்து இயேசுகிறிஸ்துவின் தத்துவம் VI பார்க்க.

X. இந்நூலின் சரித்திர உண்மை.

1. இந்தச் சுவிசேஷத்தின் சிறந்த லக்ஷணங்களையும் அதின் உயர்ந்த நோக்கத்தையும் நாம் கண்டிருக்கிறோம். இப்பொழுது இதற்குரிய இன்னொரு கேள்வியுண்டு. இந்தச் சரித்திர முழுவதும் உண்மையாகவேயிருக்கிறதா என்கிற கேள்வியே.

இது இதிகாசக் கதையென்பார் சிலர். ஆசிரியன் தனது நோக்கத்திற்கேற்க இயேசுவின் காரியங்களை எடுத்து மாற்றிப் பிரசங்கங்களையும் வாக்குவாதங்களையும் தானே தனது மனத்திலிருந்து எழுதிவைத்தான் என்பார் வேறு சிலர்.

கிறிஸ்துமார்க்கத்திற்கும் கிறிஸ்துவுக்கும் விரோதமாய்ச் செய்யாமல் அவரது சுவிசேஷத்திற்குச் சார்பாகவே யோவான் இந்த நூலை எழுதினானென்பது திண்ணம். இதன் சங்கதிகள் உண்மையான சரித்திர சம்பவங்கள் அல்லவெனினும், இது எப்போதும் சிறந்த சுவிசேஷமும் ஆவிக்குரியவிதமாய் கிறிஸ்துவின் உண்மையான போதனையை வெளிப்படுத்தும் நூலுமாகவே எண்ணப்பட வேண்டுமென்றறிக. ஆனால் இது நம்பக்கூடிய சரித்திர நூல் அல்ல என்று சாதித்ததற்குப் பின்வரும் காரணங்கள் சொல்லப்பட்டன.

i. திரியனுபந்த சுவிசேஷங்களுக்கு அதிக வித்தியாசப்பட்டிருப்பது ஒரு காரணம். இதன் விஷயத்தில் முந்தின பாகத்தில் சொன்னதைப் பார்க்க.

ii. இந்நூலில் காணப்படுகிறதாகிய இயேசுவைக்குறித்த நோக்கங்களும் கோட்பாடுகளும் ஆதிச்சபையிலும் சீஷர்களுக்குள்ளும் தோன்றாமை மற்றொரு காரணம். ஆகையால் சின்மய சாஸ்திரத்துக்குரிய இந்த உன்னத போதனை அந்தக் காலத்திலுண்டாகாமல் பிற்காலத்திலே உண்டாயிருந்ததாகச் சொல்லுகிறார்கள்.

இப்படியிருந்தால் பவுல் செய்த போதனையும் பிற்காலத்தில் உள்ளதாதல் வேண்டும். ஏனென்றால், இந்நூலின் போதனை அதற்கு ஒத்தது. இது மனோபாவனைக்குரிய ஆட்சேபனை யல்லாமல் நியாயமாய் ருஜுப்படுத்தக்கூடிய ஆட்சேபனையன்று. அப்படியிருக்கலாகாதெனின் இருக்கவுங் கூடுமென்றும் சொல்லலாம்.

அது மாத்திரமல்ல, இந்நூல் முதல் நூற்றாண்டின் கடைசிப் பாகத்திலிருந்ததாக முன்னே சொல்லப்பட்டது. இது உன்னத போதனையென்பதைப்பற்றிச் சந்தேகமில்லை யெனினும், இயேசு இவ்வண்ணமான உன்னத போதனையைக் கொடுத்திருக்கலாமென்று திரியனுபந்த சுவிசேஷங்களினாலும் அனுமானித்துக்கொள்ளலாம்.

iii. முக்கிய ஆட்சேபனை கடைசிச் சம்பாஷணையைக் குறித்தது. அதிலுள்ள சங்கதிகளும் அதின் நோக்கங்களும் அக்காலத்துச் சீஷர்களுக்குக் கிஞ்சித்தேனும் பொருந்தியதல்லவென்று சாதிப்பார்கள் சிலர். அதைப்பற்றிச் சில விஷயங்கள் கவனிக்கத்தக்கன. எவையெனில் கிழக்குத்தேச ஜனங்களுக்கே ஞாபகசக்தி மிக்க வலிமையுள்ளது. வார்த்தைகள் யாவும் தப்பிதமற ஞாபகப்படாவிடினும் பொருளையும் அநேக வார்த்தைகளையும் ஞாபகப்படுத்தி யெழுதுவது கூடாதகாரியம் அல்ல. அந்தக் கடைசியான பிரசங்கங்கள் எழுதின பிரகாரமே சொல்லப்படவில்லை என்று ஒப்புக்கொள்ளினும் பெரும்பான்மையான பொருட்களும் விஷயங்களும் அவ்வண்ணமாயிருந்தனவென்று நம்பத்தக்கது.

2. இன்னும் இந்நூலை ஆராய்ந்து பார்க்கின், எல்லாம் உண்மைத்தோற்றமுடையதாகக் காணப்படுகிறது. 21-ம் அதிகாரத்தில் சொல்லுவதுபோலவே நடந்ததைக் கண்ணாரக் கண்டவன் எழுதினான்போலிருக்கிறது. பிரசங்கத்தையும் சம்பாஷணைகளின் வரலாறுகளையும் கவனித்துப் பார்த்தால் அவைகளும் சம்பந்தத் தொடர்ச்சியாய் நடக்கின்றனவென்று காணப்படுகிறது.

இவ்வண்ண உண்மைத்தோற்றத்தைத் தானுக உண்டாக்கத்தக்கவன் மிக்க திறமையுள்ளவனுவான். இக்காலத்திலகூட இவ்வண்ணமாகச் சிறந்த புஸ்தகத்தை மனுே பாவனையால் கட்டி எழுதல் அரிது. ஆகையால் இது உண்மையான சரித்திரமேயல்லாமல் ஆசிரியன் தனக்குத் தெரிந்த இயேசுவின் ஜீவிய சரித்திர விஷயங்களிலிருந்து சிலவற்றைச் சேர்த்து இதைக் கதையாகக் கட்டினுனென்பது நம்பத்தக்கதன்று.

3. பின்னும் ஆட்சேபிக்கக்கூடிய விஷயங்களைப்பற்றி இரண்டொரு காரியங்களை நினைவுகூரவேண்டும்.

இயேசுவின் பிரசங்கங்களையும் சம்பாஷணைகளையும் ஆசிரியன் சுருக்கமாக எழுதினதாகத் தோன்றுகிறது. அன்றியும் இயேசு எப்போதும் 'எபிரெய' அல்லது அரமேய பாஷையில் பேசியிருக்க, ஆசிரியன் கிரேக்கு பாஷையில் மொழிபெயர்த்தெழுத வேண்டியதாயிற்று. மொழிபெயர்ப்பில் சில மாறுதல்கள் உண்டாயிருக்கவேண்டும்.

இயேசுவின் சீஷனுகிய யோவானே இந்நூலை எழுதியிருக்கிருனென்று நம்பினுல் இன்னெரு காரியத்தையுங் கவனிக்க வேண்டும். அவன் மிகவுந் தியானஞ்செய்து கடைசிநாட்களில் இதை எழுதினதாகப் பாரம்பரியமிருக்கிறது. இயேசுவின் பிரசங்கங்கள் அந்தத் தியான நோக்கங்களால் சற்று மாறுதல் அடைந்து பிந்தி வந்த சில போதனைகள் முந்தின பிரசங்கங்களில் கொஞ்சம் கலந்திருக்கக் கூடும். சில இடங்களில் இயேசுவின் வார்த்தைகளையும் யோவானது சிந்தனைகளையும் பிரிக்க அரிது. இயேசு பேசினபோது தோன்ருதிருந்த சத்தியம் அவர் உயிர்த்தெழுந்தபின்பு அதே வார்த்தைகளில் உண்மையாய்த் தோன்றினதால் அந்தச் சத்தியத்தைத் தெளிவாய்க் காண்பிக்கத் தக்கதாய் அந்த வார்த்தைகளைக் கொஞ்சம் மாற்றி யெழுதியிருக்கக்கூடும். என்னவென்ருல், யோவான் தன் மனதில் அந்த வார்த்தைகளை அதேவிதமாக வெகுகாலமாய் உணர்ந்துகொண்டிருக்க, அவைகளை வேறுவிதமாய் நினைக்க அவனுல் முடியாது. அதுபோலவே, சம்பவங்கள் நடந்தபோதே காணப்படாத ஒரு சத்தியம் பிறகு அதிலே தோன்றினது. அப்பொழுது அது சீஷர்களுக்குத் தெரியாமலிருந்தும் இப்பொழுது அதை விலக்குவது நியாயம்.

4 இந்த நான்காம் சுவிசேஷம் ஆசிரியன் செய்த இயேசுவின் ஜீவிய சரித்திர விவரிப்பாம். முன் சொன்னபடி கொஞ்சம் மாறுதலடைந்ததால் இது உண்மையான சரித்திரம் அல்ல என்று சொல்லுவதற்கு நியாயமில்லை. இது உண்மையான சரித்திரமென்று ஆசிரியனே சாட்சியிடுகிருன். பிற்காலத்தில் அவனுக்குள் தோன்றின எண்ணங்களும் கருத்துகளும் கலந்திருந்தால் உண்மையான சரித்திரத்திற்குக் கெடுதியில்லை. இயேசுவின் ஜீவியத்தில் சீஷர்களுக்குத் தெரியாத அநேக காரியங்களிருந்தன. அவைகளின் அர்த்தம் பிற்காலத்தில் பரிசுத்தாவியால் விளங்கினது. பரிசுத்தாவி யோவான் மனதிற்கு இயேசுவின் ஜீவிய சம்பவங்களில் அவனுக்கு முன்னே தெரியாத அநேக குறிப்புகளை வெளிப்படுத்தி அந்த வெளிப்படுத்தலைக்கொண்டு அவன் சுவிசேஷம் எழுதும்படி ஏவினதற்கு ஆட்சேபனை ஏது? பரிசுத்தாவியால் யோவான் அடைந்த வெளிப்படுத்தல் மூலமாய் அவன் இந்தச் சுவிசேஷத்தை விவரித்தெழுதலால் இது பொய்ச் சரித்திரமென்று சொல்வதற்கு யாதொரு நியாயமுமில்லை. சிற்சில விஷயங்களில் மனவியல்பினுலே எந்த மனுஷீகநூலும் பேதப்பட்டிருக்குமெனினும் இந்தப் பேதங்களால் அந்தச் சரித்திரத்தைப் பொய்யென்று சொல்லுவது ஞாயமல்ல. இயேசுவின் தெய்வீக வல்லமையை மறுக்க விரும்புவோர் எப்படியாவது இந்நூலின் சரித்திர உண்மையைக் கெடுக்கப் பிரயாசப்படுவார்கள். ஏனென்ருல், அந்த வல்லமை இந்த நூலின் சரித்திரத்தால் தெளிவாய்க் காணப்படுகிறது. மற்றப்படி இதன் சரித்திர உண்மையை மறுக்கத்தக்கப் போதுமான முகாந்தரங்கள் இல்லையென்று நாம் சாதிக்கலாம்.

XI. வார்த்தையல்லது பரம வாக்கைப்பற்றிய போதனை.

1. 'வார்த்தை' என்பது சொல்லப்பட்ட உரையென்றும், ஒரு பிரசங்கம் என்றும் சாதாரணமாய் அர்த்தங்கொள்ளும். கடவுள் விஷயத்தில் வார்த்தையென்பது கடவுள் உரைத்த ஒரு காரியத்தையும் கடவுள் செய்த வெளிப்படுத்தலையும் கடவுளின் சித்தத்தை வெளிப்படுத்துகிற வேதவாக்கியங்களையும் குறிக்கிறது. யோவான் விசேஷித்த அர்த்தத்தோடு அதை உபயோகித்தனன். அவன் எழுதிய நூற்களில் அது தேவகுமாரனென்னும் பரம வாக்கைக் குறிக்கிறது. இவ்விடத்தில் யோவான் இயற்றின நூற்களில் விளங்கிய அந்த அர்த்தத்தைப்பற்றி மாத்திரம் சிந்திப்போம். இவைகளில் இந்த மொழியே விசேஷித்த அர்த்தத்துடன் ஆறுமுறை உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அதா

வது நான்காம் சுவிசேஷம் 1[1] (மூன்று முறை) 1[14]. இந்த இடங்களில் 'வார்த்தை' என்றும், பிறகு முதல் நிருபம் 1[1]-ல் 'ஜீவ வார்த்தை' என்றும், வெளிப்படுத்தின விசேஷம் 19[13]-ல் 'தேவனது வார்த்தை' என்றும் எழுதியிருக்கிறான். அவ்வசனங்களில் ஒரு விசேஷித்த குறிப்புண்டு. அதென்னவெனில்: அவன் எழுதிய நூற்களில் அஃறிணைப்பொருளைக் குறிக்கும் இம்மொழி உயர்திணைப் பொருளாகிய தேவகுமாரனைக் குறிக்கிறது. இது வேதத்திலிருக்கிற மற்ற இடங்களில் வந்தால் அஃறிணைப் பொருளையே குறிக்கிறது.

2. இந்தப் போதனையின் உற்பத்தியும் வரலாறும். பரம வாக்கைப்பற்றிய போதனைக்குப் பழைய ஏற்பாட்டில் சில மூலாதாரங்களுண்டு. ஆதியாகமத்தில் கடவுள் ஏழு வார்த்தைகளினால் உலகத்தைச் சிருஷ்டித்தாரென்று சொல்லியிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் கடவுளின் வார்த்தையென்பது கடவுள் கொடுத்த வெளிப்படுத்தலைக் குறிக்கிறது. எபிரெய வேதத்தில் கடவுளின் வார்த்தை வந்தது (தமிழ் மொழிபெயர்ப்பில் வார்த்தை யுண்டாகி என்று சொல்லியிருக்கிறது) என்றும், எசா 2[1] மீகா 1[1] ஆமோஸ் 1[1] தரிசித்த வார்த்தையென்றும் சொல்லியிருக்கிறது. அநேக இடங்களில் கடவுள் யேகோவாவின் தூதன் என்னப்பட்டவரால் தம்மை வெளிப்படுத்தினாரென்று விளங்கிற்று. இன்னும் சில வசனங்களில் ஞானம் என்பது உயர்திணைப் பொருளுடையதாய்க் கடவுளை வெளிப்படுத்தும் கருவியாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. எபிரெய தள்ளுதலாகமங்களில் (அப்போகிரிப்பா) வாக்கு என்பது அடிக்கடி உயர்திணைப் பொருளுள்ளதாகிக் கடவுளின் கருவியாக காணப்படுகிறது. ஆகையால் எபிரெய சாஸ்திரத்தில் கடவுள் தம்மை வெளிப்படுத்தும் கருவியானது ஒருவராகவும், அடிக்கடி வாக்கென்னும் பெயருடையதாகவும் காணப்படுகிறது. கிரேக்கு சாஸ்திரத்திலும் விசேஷமாய்ப் பிலோவு (*Philo*) என்னும் சாஸ்திரியாலேயே கடவுள் உலகத்தில் தமது கிரியைகளை இயக்காநின்ற சக்தியே வாக்கு என்னப்பட்டது. பிலோவு எழுதின நூற்களில் இந்த வாக்கு நிர்க்குணக் கடவுளினிடத்தினின்று நித்தியமாய்ப் புறப்பட்டு, கடவுள் ஞானமுழுவதும் உடையதாய் ரூபமடைந்து, உலகத்தை யுண்டாக்கி, அதை நடத்திவருகிற சக்தியுடையதென்று சொல்லியிருக்கிறது. அதற்கு உயர்திணைப் பொருளில்லையென்றதால் யோவானின் அபிப்பிராயம் இதிலிருந்து உண்டாயிற்றென்று சொல்லத்தக்கதன்று. அந்தச் சாஸ்திரம் அந்தக் கிரேக்கு தேசங்களில் பரம்பினதாகையினால் யோவானும் அநேக சபையாரும் அதை அறிந்திருப்பார்கள். அதுவும் இப்போதனையின் உற்பத்திக்குத் துணைக் காரணமாகலாம். ஆயினும் முதல் காரணம் எபிரெய வேதத்தின் கொள்கைகள்தான்; ஆகையால் இந்தச் சொல் எபிரெயருக்கும் மற்றோருக்கும் தெரிந்த சொல்லாதலின் யோவானின் நோக்கத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தத்தக்கச் சொல்லாகும்.

3. பரம வாக்கைப்பற்றிய யோவானது போதனையின் விவரம். இந்தப் போதனையின் உற்பத்திக்குக் காரணமான கொள்கைகளிலிருந்து யோவானடைந்த அபிப்பிராயம் யாதெனில்: கடவுள் தம்மை உலகத்தில் வெளிப்படுத்துங் கருவியும், கடவுளின் சக்தியின் ரூபமும் உலகத்தைப் படைத்தழிக்கும் கர்த்தாவுமாயிருக்கிற ஒரு வஸ்து உண்டென்பதே. யோவான் இயேசுவிடம் படித்ததென்னவெனில்: அந்த வஸ்து கடவுளின் குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்பதே. இந்தச் சத்தியத்தினாலும் தாம் இயேசுவினிடங் கேட்டும் பார்த்தும் வந்த விஷயங்களினாலும் முன்னோர்களின் அபிப்பிராயப்பட்ட அநேக காரியங்கள் யோவான் மனதில் அதிக மாறுதலையும் விருத்தியையும் பெற்றன. யோவானின் போதனை விசேஷமாய் இந்தச் சுவிசேஷத்தின் முகவுரையில் காணப்படுகிறது.

பரம வாக்கைப்பற்றிய போதனையின் விவரம் பின்வருமாறு.

(i) அந்த வாக்கின் தன்மை. இந்தப் பரம வாக்கு உயர்திணையுடையவராய்த் தெய்வத்தன்மை யுள்ளவராவார். அவர் கடவுளுக்குப் பிரத்தியேகமானவராயிருந்தும் எல்லாக் காரியங்களிலும் அவருக்குச் சரிசமானமானவர். அவரது குணம் கடவுளின் குணம். அவர் கடவுளைப்போலச் சுயம்புவாய் ஜீவனுள்ளவர்.

(ii) அவரது வரலாறு. அவர் 'முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே' என்று சொல்லத்தக்கவராய் காலாகாலங்களிலும் இருப்பவரே. ஆதிகாலத்திலும் அவரிருந்ததாக யோவான் 1[1]-ல் சொல்லியிருக்கிறது. பரம வாக்கின் சரித்திரகாலத்திற்கு எல்லைகளில்லை. அவர் நித்தியகாலமாய்க் கடவுளுடனிருக்கிறார். கடவுளோடு அவர் விசேஷித்த சம்பந்தமு முள்

ளவராம். அவர் எப்போதும் கடவுளை வெளிப்படுத்துபவரும் அவருடைய கருவி கர்த்தாவுமாயிருக்கிறார். உலகத்தோற்றத்தில் அவர் மூலமாய்க் கடவுள் உலகத்தை யுண்டாக்கினார். சகலமும் அவரிடத்தில் பிறப்பிடமும் நோக்கமும் முடிவும் பெறுகிறது. 'மெய்ப்பொருட்கட் டோற்றமாய் மெய்யே நிலைபெறு, எப்பொருட்குந் தானேயாயா வைக்கும் வீடாகும்' என்று சொல்லத்தக்கதே. அவரே உலகத்தை யளித்து எப்போதும் அதற்குக் கடவுளை வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கிறார். அவர் மூலமாய் எக்காலத்திலும் கடவுளின் ஒளியும் ஜீவனும் வெளிப்பட்டுவருகிறது. மனுஷனுக்கிருக்கிற பரம ஞானமெல்லாம் அவராலே உண்டாகிறது. பற்பல மதங்களில் காணப்படும் சத்தியத்திற்கு அவரே காரணர். அவர் உலகத்தில் பிரகாசிக்காநின்ற ஒளியெனினும் மனிதர்கள் இருளினால் அந்த ஒளியைக் கண்டுபிடித்திலர். ஆகையால் ஒளியும் இருளும் ஒன்றுக்கொன்று மேற்கொள்ளாமல் உலகத்திலிருந்தன. இந்தப் பரம வாக்கு சின்மயத் தன்மையுடையவராய் எப்போதும் உலகத்தில் வியாபித்துக்கொண்டிருந்தனர். பரம வாக்கின் சரிதையில் ஒரு விசேஷித்த காலமுண்டு. அது அவர் மனுஷனான காலம். இந்தப் பரம வாக்கு கடவுளைப் பூரணமாய் வெளிப்படுத்தும்படி ஓர் காலத்தில் உலகத்தில் தோன்றி ஒரு உண்மையான மனுஷனானார். அவரது தெய்வீக குணம் மனுஷ குணமாயிற்று.

> அளகமா யாரு மறிவரி தப்பொருள்
> சகளமாய் வந்ததென் றுந்தீபற

என்றதுபோல் ஆகும். தெய்வத்தன்மை யுடைய இந்தப் பரம வாக்கான மனுஷன் இயேசுகிறிஸ்துவே. இயேசுகிறிஸ்துவைப் பரமவாக்கென்று சொல்லி இயேசுகிறிஸ்துவே கடவுளின் பூரண வெளிப்படுத்தலும் கடைசி வார்த்தையுமா யிருக்கிறாரென்பதையும் யோவான் காட்டுகிறான். காலத்தின் எல்லைக்குட்படாதவராகிய பரம வாக்கானவர் தாமே தம்மைக் காலத்தின் எல்லைக்குட்படுத்தி முன்னே கடவுளுடனிருந்த சம்பந்தத்தையே உலகத்திலும் பூரணமாய் நிறைவேற்றினார். இதினாலேதான் அவரது மகிமை ஏகாந்தமாய் ஏக புத்ரனது மகிமையாயிருந்தது. அவர் உண்மையான மனுஷனாயிருந்தார், எனினும் எப்போதும் பரமவாக்கின் உண்மையான அவதாரமானார். ஆகையினால் எல்லோரும் அவர் மூலமாகவே கடவுளைத் தரிசிக்கவேண்டும். இன்னும் அவர் விசேஷமாய் இரட்சிப்பின் கர்த்தாவாயிருந்து, உலகத்தின் இருளை நீக்கித் தாம் இயல்பாய்ப் பெற்றிராநின்ற சம்பந்தத்தில் மனுஷரை ஈவாகக் கொண்டுவர வேண்டுமென்ற விசேஷித்த நோக்கத்தோடு மனுஷனானார். கடவுள் அவர்மூலமாகவே இரட்சிப்பை ஏற்படுத்தினார். அவர் பரம வாக்காதலின் அவரது சுவிசேஷம் அவரது மனோதத்துவத்தின் வெளிப்படுத்தலாகவும், அவரது தெய்வ தத்துவத்தின் சாரமுமாயிருக்கிறது. அவரும் அவரது சுவிசேஷத்தின் பொருளும் ஒன்று. பரம வாக்கானவர் உலகத்திலிருந்த சரிதை யோவான் சுவிசேஷத்தில் எழுதப்பட்டது. முகவுரையில் போதித்த பொருளே சரித்திரத்தில் காணப்படுகிறது. பரமவாக்கு என்கிற வார்த்தையின் அர்த்தத்தில் கிறிஸ்துவின் முழுத்தன்மையும் அவர் சரிதையின் சாரமும் அவர் செய்த தொழிலும் அவருடைய நிலைமையும் அடங்கியிருக்கின்றன. ஆகையால் யோவான் கடவுளாவியின் ஏவுதலால் 'வார்த்தை' என்பதினால் இயேசுகிறிஸ்துவின் மகிமையை வெளிப்படுத்தினார் என்றறிக.

4. இந்து சாஸ்திரங்களுக்குரிய சம்பந்தம். இந்தப் போதனை இந்து சாஸ்திரங்களுக்கு அதிகச் சம்பந்தமுள்ளது. 'இந்திய ரிஷிகள் சர்வாண்டமும் பரிணாமமும் பெறு முன்னமே பரப்பிரம்மத்தினிடத்தில் எழுந்திருந்ததும், சின்மயமும், கேட்கப்படாததுமான சப்தத்தையே வாக்கென்றார்கள். அந்த வாக்கு கேட்கும்படியான சக்தியாகவேயிருந்து சர்வத்தையும் நடத்தவும் உருவப்படுத்தவும் வல்லமையாயிருந்து சர்வாண்டத்திற்கும் போதகராவார்' என்று ஓர் இந்து சாஸ்திரி எழுதினதைப் பார்க்க.

எல்லா இந்துசாஸ்திரங்களிலும் கடவுள் தம்மை உலகத்திற்கு வெளிப்படுத்தின போது ஒருவராலே தம்மை வெளிப்படுத்தினாரென்றும், கடவுள் ஒரு மனுஷாவதாரமாய் உலகத்தை இரட்சிக்கிறாரென்றும் சொல்லியிருக்கிறது. ஒரு வாக்காலே உலகத்தைச் சிருஷ்டித்தாரென்பதும், தமது வாக்கினாலே மனுஷருக்குப் போதிக்கிறாரென்பதும் இந்து சாஸ்திரத்தின் கொள்கைகள். ரிக்வேதத்தில் X. 125-ம் சுலோகத்தில் வாக்குத்தேவி சொல்லுகிறதாவது:—'நான் பரமதேவியே பொருட்களைச் சேர்த்தனர்—ஞானமுள்ளவர். யாவரும் என்னை வணங்கவேண்டும்' என்பதே.

இந்த வாக்குத்தேவி பரமாத்துமாவுடன் சமவாயநிலையி லிருக்கிறதாகவும் தேவர்

களும் மனிதரும் சந்தோஷத்துடன் அவள் சொல்லும் வார்த்தைகளை ஏற்றுக்கொள்வதாகவும் சொல்லியிருக்கிறது. சப்தபிரமாண சாஸ்திரத்திலே தேவர்கள் அவள் சம்பந்தத்துடன் இந்த வாக்குத்தேவியைப் பலியாக ஒப்புக்கொடுத்தார்கள் என்பதும் பிறகு உயிரோடு வந்தாள் என்பதும் காணப்படுகிறது. இந்துக் கொள்கையும் யோவான் போதனையும் சரிசமானமானதென்று சொல்வதற் கிடமில்லை. எனினும் யோவானது போதனை இந்துக்களுக்குச் சற்றும் சம்பந்தமில்லாத அந்நிய போதனையாகக் காணப்படவேமாட்டாது. பரம வாக்கைப் பற்றிய போதனை சித்தாந்த சாஸ்திரத்திலும் சொல்லிய சத்தியைப்பற்றிய போதனைபோலிருக்கிறது. அந்தச் சத்தியே கடவுளின் அருளாணையும் கடவுளின் வெளிப்படுதலும் கடவுள் இயக்காநின்ற கருவியும் அருட்குருவாகி இடைக்கிடையே மனுஷரூபம் பெற்று உலகத்தில் தோன்றியவருமாயிருக்கிறது என்பதாக அந்தச் சாஸ்திரத்தில் காணப்படுகிறது.

அவையே தானே யாயிரு வினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கமின்றி நிற்கு மன்றேல்

என்பது சிவஞான போதத்தில் பார்க்க.

இதற்கு, 'முதல்வன் ஆணையென்னும் பரியாயப் பெயரையுடைய தனது சிற்சத்தியால் வரும் இருவினைகளான அவை இறத்தல் பிறத்தல்களைப் புரியும்வண்ணம் அவ்வாணையிற் பிரிப்பின்றி சமவேதமாய் நிற்பன்' என்கிற சிவஞான யோகிகள் எழுதின பொழிப்புரையையும் பார்க்க. நாயனாணையாலே நடத்திடும் சகத்தையெல்லாம் என்று சிவஞானசித்தியார் சொல்லுதலையும் பார்க்க.

இந்து சாஸ்திரத்துடன் இந்தப் போதனையின் சம்பந்தத்தைக் காண்பிக்கும் பொருட்டாக ஸ்ரீ பரானந்தர் இயற்றிய வியாக்கியானத்தில் பரம வாக்கைக்குறித்து எழுதியதை நான் கீழே தமிழில் மொழிபெயர்த்தெழுதியுள்ளேன். அதாவது 'பரப்பிரம்மத்திலே உலகத்தோற்றத்திற்கு முன்னே எழும்பியுள்ள சின்மயத்தன்மையும் செவிக்குணரப்படாததுமான நாதத்தை இந்துஞானிகள் வாக்கு என்கிறார்கள். வாக்கு என்னும் இந்து மொழியும் லோகஸ் என்னும் கிரேக்க மொழியும் Word என்னும் இங்கிலீஷ் மொழியும் சரிசமானமானவைகள். தோற்றப்பட்ட எல்லா வஸ்துக்களும் அதைக் கேட்டு (அதாவது அதற்கிணங்கி) நடக்கின்றதால் இந்துஞானிகள் அந்த வாக்கை எல்லாம் கேட்கத்தக்கச் சத்தியாக எண்ணினார்கள். எங்கும் வியாபித்திருக்கிற இந்த ஆணைச்சக்தியானது நிஷ்களசகளவஸ்துக்களெல்லாவற்றையும் உருவாக்கி எல்லாவற்றிலும் கம்பித்து நடத்திவருகிறது. பரம வாக்கானது சரீரமில்லாததும் ஒடுங்கினதுமான தெய்வசத்தமாகி மனிதரது ஆத்துமாக்களில் உரைத்துக்கொண்டேயிருக்கிறது. ஆகையால் உலகத்திற்கு இந்தப் பரமவாக்கு சற்குருவாகவு மிருக்கிறார். மனுஷருக்குப் புறம்பான இந்தச் சற்குரு கடவுளது தத்துவத்தையும் வல்லமையையும் ஆத்துமா கடவுளை அறியும் வகை இன்னதென்பதையும் போதித்துவருகிறார். அப்படியே ஒருவனுக்குப் புறம்பானவராகிய சற்குரு அவனுக்குள்ளான கடவுளைப் போதித்து அவன் ஆத்துமா அறிவுற்றவனாகி அவருடன் சின்மய ஐக்கியம்பெற்று நித்தியஜீவனை யடையச்செய்கிறார். கடவுளிடத்தில் தோன்றிவரும் இந்தப் பரம வாக்கு கடவுளது பரிசுத்தாவியாகி மனிதரது பரிசுத்த ஆத்துமாவில் பிரகாசித்துக்கொண்டுவருகிறது.' இந்த வியாசம் அநேக வித்தியாசங்களைக் காண்பித்தபோதிலும் இதுவிஷயத்தில் இந்து போதனைக்கும் கிறிஸ்து போதனைக்கும் அநேக சம்பந்தங்களிருக்கின்றனவென்பது தெரிவிக்கிறது.

இந்தச் சம்பந்தங்கள் இந்துக்களும் யோவானின் போதனையை ஏற்றுக்கொள்ளும்படியான உதவிகளாயிருக்கின்றன.

யோவான் எழுதின நிருபங்கள். **The Epistles of John.**

I. பொதுவான முகவுரை.

II. முதலாம் நிருபம்.

1. நான்காம் சுவிசேஷத்தோடிருக்கின்ற சம்பந்தங்கள்.

2. ஆசிரியன், எழுதினகாலம் முதலியவை.

3. பொருள் சுருக்கம்.

4. நோக்கமும் தாற்பரியங்களும்.

III. இரண்டாம் நிருபம்.

1. ஆசிரியன், எழுதினகாலம் முதலியவை.

2. பொருள் சுருக்கம்.

IV. மூன்றாம் நிருபம்.

1. ஆசிரியன், எழுதினகாலம் முதலியவை.

2. பொருள் சுருக்கம்.

3. அதின் விசேஷம்.

I. பொதுவான முகவுரை.

இந்த மூன்று நிருபங்களும் சம்பந்தமுள்ளனவென்றும், ஒருவனாலேயே எழுதப்பட்டிருக்கும் என்றும் பெரும்பான்மையோர் ஒத்துக்கொள்ளுகின்றார்கள். கிறிஸ்தவ சபையார் ஆதிகாலந் தொடங்கி இவைகளை யோவான் எழுதினதாக எண்ணினார்கள். இவைகள் நிருபங்களுள் ஓர் விசேஷித்த வகுப்பைச் சேர்ந்திருக்கின்றன. அதுயாதெனில் எல்லாச் சபைக்குரிய நிருபங்கள் அல்லது பொதுவான நிருபங்கள் என்பதே. பவுலின் நிருபங்கள் விசேஷித்த சபைகளுக்கு எழுதப்பட்டன. யாக்கோபு, 1 பேதுரு, 2 பேதுரு, 1 யோவான், யூதா என்னும் நிருபங்கள் விசேஷித்த சபைகளுக்கு எழுதப்படாமல் எல்லாச் சபைகளுக்காக எழுதப்பட்டிருக்கின்றன. யோவான் எழுதின 2-வது, 3-வது நிருபங்கள் பிரத்தியேகமான ஆட்களுக்கு எழுதப்பட்டனவென்பது உண்மையெனினும் அவைகளும் இந்த வகுப்பில் வைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது நாம் ஆலோசிக்கும் இம்மூன்று நிருபங்களும் விசேஷித்த லட்சணங்களையுடையன. இவைகளின் ஆசிரியன் திட்பமாய்த் தன்னைக் காட்டுகிறதில்லை. அவன் யாருக்கு இவைகளை அனுப்பினானோ அதுவும் நமக்குத் தெரிகிறதில்லை. இவைகளின் போதனை சின்மயத்தன்மையும் சாந்தமும் மிக்க பயன்பெறத் தக்கதுமுள்ளது. இவைகளினால் ஆதிக்கிறிஸ்தவசபையின் நிலைமையின்னதென்று நாம் அறிந்துகொள்ளலாம்.

மூன்றாம் நூற்றாண்டிலிருந்து இம்மூன்றும் யோவானால் எழுதப்பட்டன என்று பெரும்பான்மையோர் ஒப்புக்கொண்டார்கள். முதல் நிருபம் ஆக்ஷேபனையின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இரண்டாம் மூன்றாம் நிருபங்களுக்குச் சிலர் ஆக்ஷேபனை சொன்னார்கள். இப்போது இவைகளை ஒவ்வொன்றாகப் பார்க்கவேண்டும்.

II.* முதலாம் நிருபம்.

1. நான்காம் சுவிசேஷத்தோடுள்ள சம்பந்தம். வார்த்தைகளிலும், பாஷை நடையிலும், எழுதின நோக்கங்களிலும் இந்த முதலாம் நிருபத்துக்கும் நான்காம் சுவிசேஷத்துக்கும் அதிகச் சம்பந்தமுண்டு. இரண்டிலும் எழுதின வாசகங்கள் தெளிவாயிருக்கின்றன. எண்ணங்கள் ஆழ்ந்த கருத்துடையன. இரண்டிலும் சின்மயமான போதனை விசேஷமானது. இரண்டிலும் ஒளி, இருள் என்றும், ஜீவன், மரணமென்றும், அன்பு, பகை யென்றும் எதிரிடையாய்ச் சொல்லப்பட்ட விஷயங்கள் அடிக்கடி வருகின்றன. உண்மையான, புதுக்கற்பனை, மறுபிறப்பு, ஒரேபேறான, தேற்றரவாளன், உண்மை செய்வது, உலகத்தின் இரட்சகர் முதலிய பதங்களும் இரண்டுக்கும் பொதுவாயிருக்கும். இன்னும் அநேக வசனங்கள் சமானமானவை. இரண்டிலும் இயேசு தேவகுமாரன் என்கிற அறிக்கையும் விசுவாசமும் சொல்லப்பட்டிருக்கின்றன. கடவுளோடும் மனுஷனோடும் இயேசுவுக்கு இருக்கின்ற சம்பந்தத்தைப்பற்றி இரண்டும் வெளிப்படுத்துகின்றன. இன்னும் அநேக விஷயங்களில் இந்த இரண்டும் சரிசமானமாயிருக்கின்றன. ஆகையினால் பெரும்பான்மையோர் இவ்விரண்டும் ஒருவராலேயே எழுதப்பட்டனவென்று சொல்லுகிறார்கள். சிலர் இது சுவிசேஷத்துக்கு ஒரு முகவுரை என்பார்கள். ஆனால் நாம் இதின் நோக்கத்தையும், ஒரே மாதிரியான கொள்கைகளை வெளியிடுகிற விதத்தையும், இன்னும் மற்றக் காரியங்களையும் கவனித்தால், இவ்விரண்டும் அப்படிச் சம்பந்தமுள்ளன அல்லவென்று சொல்லவேண்டும். முன் சொன்ன குறிப்புகளால், யோவான் நான்காம் சுவிசேஷத்தை எழுதியிருந்தால் அவனே இதற்கும் ஆசிரியனாவான் என்று சொல்லக்கூடும்.

2. ஆசிரியனும், காலமும், இடமும் வகையும்.

i. இது முதல் நூற்றாண்டின் கடைசி பாகத்தில் பலருக்குத் தெரிந்தது என்பதற்கும், இரண்டாம் நூற்றாண்டில் யோவானே இதின் ஆசிரியன் என்று அநேகர் நினைத்தார்கள் என்பதற்கும் போதுமான சாட்சியுண்டு. இரண்டாம் நூற்றாண்டில் இதை வேதநூலாக ஒப்புக்கொண்டார்கள் என்று அறிந்துகொள்கிறோம். மூன்றாம் நூற்றாண்டில் எல்லாரும் இதை ஏற்றுக்கொண்டார்கள். ஐரேனியு, அலெக்சாந்திரியா பட்டணத்துக் கிலெமெந்து, தெர்த்துலியான், ஒரிகேன் என்பவர்கள் தாங்கள் செய்த வேத மொழிபெயர்ப்புகளில் யோவான் இதை எழுதினதாகச் சாதிக்கின்றார்கள். ஆகையின் புறச்சாட்சி சரியாயிருக்கின்றது.

அகச்சாட்சியாவது: சுவிசேஷத்தை எழுதினவன் இதையும் எழுதியிருந்தான் என்பதற்குச் சந்தேகமில்லை என்று நாம் அறிவோம். ஆகையினால் அதைப்பற்றி நமக்கிருக்கும் கோட்பாடு இதற்கும் பொருந்தும்.

இந்த நிருபத்தில் சில வேதப்புரட்டர்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. இயே

சுவே கிறிஸ்து என்பதை மறுக்கிறவனும் ($2^{22}$), பரமதந்தையையும் குமாரனையும் மறுதலிக்கிறவனும் ($2^{23}$), இயேசு மனித தத்துவத்தை அடையவில்லை என்று தெரிவிக்கிறவனும் ($4^{2}$), ஆகிய இவர்கள் பொய் வேதியர் என்று சொல்லப்பட்டார்கள். இதனால் குறிக்கப்பட்டவர்கள் கெரிந்தஸ் என்னும் வேதப்புரட்டனது சபையார் என பெரும்பான்மையோர் சொல்லுகின்றார்கள். தேவகுமாரனது தத்துவமும் இயேசுவின் தத்துவமும் வேறே என்றும்; இயேசு ஞானஸ்நானம் பெற்றது முதற்கொண்டு மரணமடையும் வரைக்கும் தேவகுமாரன் தத்துவம் அடைந்தார் என்றும்; மரணமடையும்போது அந்தத் தத்துவம் இயேசுவை விட்டது என்றும்; இயேசு சாதாரண மனுஷனாகி இறந்துபோனார் என்றும் கெரிந்தஸ் போதித்தான். இந்த நிருபத்தில் யோவான் இப்பேர்ப்பட்ட கொள்கையை மறுத்து எழுதினதாகத் தோன்றுகிறது.

யோவான் இந்த நிருபத்தை எழுதினான் என்று நாம் புறச்சாட்சியாலும் அகச்சாட்சியாலும் சொல்லக்கூடும். இதை யோவான் எழுதவில்லையென்பதற்குத் தக்கக் காரணங்களில்லை. இதை மறுக்கும்படி வெளிப்படுத்தின விசேஷத்துக்கும் இதற்குமுள்ள வித்தியாசங்களைச் சிலர் எடுத்துக் காட்டுகின்றார்கள். [இதைக்குறித்து யோவானின் சுவிசேஷம் பார்க்க.] நான்காம் சுவிசேஷத்தைப்பற்றிச் சொல்லிய நியாயங்களை இதன் விஷயத்திலும் சொல்லலாம். ஆகையால் அந்தக் காரணத்தால் யோவான் இந்த நிருபத்தை எழுதவில்லை யென்று நாம் ஆக்ஷேபிக்க வேண்டியதில்லை. இப்போது இந்த வித்தியாசங்களுக்குக் காரணமின்னதென்று நமக்குத் தோன்றாவிடினும் மற்றச் சாட்சியும் அத்தாட்சியும் பலமுள்ளதாதலின் இதை ஒப்புக்கொள்ளவேண்டும்.

ii. இந்த நிருபத்தை யோவான் யாருக்கு எழுதியனுப்பினான் என்பதைப்பற்றிப் பார்க்கலாம்.

சின்ன ஆசியாநாட்டுச் சபைகளுக்கு எழுதினான்போலிருக்கிறது. இதைக்குறித்து திட்டமான குறிப்பில்லை. ஆனால் நமக்குத் தெரிந்தமட்டும் இக்கடிதத்தின் விஷயங்கள் அந்தச் சபைகளின் நிலைமைக்கு ஏற்றதாயிற்று.

iii. இடம்.

யோவான் எபேசுபட்டணத்தி லிருந்தபோது சுவிசேஷத்தை எழுதினகாலத்தில் இதையும் எழுதியிருக்கலாம் என்று சொல்லக்கூடியதேயொழிய தீர்க்கமாய் ஒன்றும் சொல்ல முடியாது. அவன் இதையும் தன் கடைசி வருஷங்களில் எழுதினான் என்று பெரும்பான்மையோர் சொல்லுவார்கள். யோவான் அந்தச் சபையாரையும் அவர்களது நடக்கைகளையும் குணங்களையும் திட்பமாய் அறிந்து அவர்களைச் சிறுபிள்ளைகளே யென்று அழைக்கிறான். இதினால் அவனே அவைகளுக்கு முக்கியமான அப்போஸ்தலன் என்றறிக.

இந்த நூல் ஓர் கடிதம். இதில் சில தர்க்கங்கள் இருந்தும் இது ஓர் தர்க்கநூலல்ல. பொதுவான விஷயங்களைக்குறித்து அந்தச் சபையாரிடத்தில் எழுதியனுப்பின ஓர் சாதாரண கடிதமேயொழிய வேறல்ல என்றறிக.

3. பொருள் சுருக்கம்.

1. முகவுரை. $1^{1-4}$.

ஆசிரியனது அதிகாரம்—தான் பரமவாக்காகிய இயேசுவைப் பார்த்தல்.

அவன் போதகத்தின் மூலம்—இயேசு கிறிஸ்துவின் ஜீவியம்.

அவன் போதகத்தின் நோக்கம்—கேட்டோருக்கும் கடவுளுக்கும் ஐக்கியமாதல்.

2. கடவுளுடையவர்களின் ஜீவியத்தையும் உலகத்தாரின் ஜீவியத்தையும் ஒத்துப் பார்த்தல். $1^{5}$–$2^{17}$.

(i) கடவுள் ஒளியாயிருக்கின்றார். அவருடையவர்கள் ஒளியில் நடக்கின்றார்கள். மற்றவர்கள் இருளில் நடக்கின்றார்கள். $1^{5-7}$.

(ii) பாவ அறிக்கையும் மன்னிப்பும் அவருடையவர்களுக்குண்டு. $1^{8-10}$ $2^{1-2}$.

(iii) கடவுளுடையவர்கள் அவரது கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறார்கள். $2^{3-6}$.

(iv) கடவுளுடையவர்கள் மற்றவர்களைச் சிநேகிக்கிறார்கள். $2^{7-11}$. பகை இருளுக்குரியது.

(v) கடிதம் பெற்றவர்களுக்கு இவ்விஷயத்தைப்பற்றிச் சில குறிப்புகள். $2^{12-17}$.

3. கடவுளைப்பற்றிய உண்மையான அறிவும் போதகமும். $2^{18-29}$.

(i) பொய்ப் போதகங்களைப்பற்றி எச்சரிக்கை சொல்லுதல். $2^{18-21}$.

(ii) இயேசுவைத் தேவகுமாரன் என்று சொல்வது மெய் அறிவுக்கு அடையாளம். $2^{22-24}$.

(iii) உண்மையான அறிவு நிலைத்திருக்கும்படி எச்சரித்தல். $2^{25-29}$.

4. பாவமும் நீதியும். $3^{1-10}$.

(i) நமது நிலைமை கடவுளின் மக்களாதல். $3^{1-4}$. இந்த நம்பிக்கை நீதியுள்ள நடக்கைக்குக் காரணமாம்.

(ii) கடவுளுடைய மக்களின் குறிப்புகளாவன — பாவஞ்செய்யாமையும் அன்பும் அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளுதலுமாம். $3^{5-18}$.

5. கடவுளுடையவன் இன்னுனென்று சோதித்தறிதல். $4^{1-6}$. இயேசுவே தேவ குமாரன் என்பவன் கடவுளுடையவன். அப்படிச் சொல்லாதவன் கிறிஸ்துவுக்கு எதிராளி. நாம் கடவுளுடையவராதலின் நமக்குச் செவிகொடுப்பவன் கடவுளுடையவனுயிருப்பான்.

6. அன்பே விசேஷம். $4^{7-21}$.

(i) கடவுள் அன்புமயமாயிருக்கின்ருர். அன்புடையவர்கள் கடவுளுடையவர்கள். $4^{7-8}$.

(ii) இயேசு சிறந்தவிதமாய் அன்பைக் காட்டினுர். $4^{9-10}$.

(iii) கடவுளுடையவர்கள் அவரையும் மற்றவர்களையும் பூரணமாய்ச் சிநேகிக்க வேண்டும். $4^{11-21}$.

7. விசுவாசத்தின் சிறப்பு. $5^{1-21}$.

(i) இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிப்பவன் கடவுளுடையவன். $5^{1-3}$.

(ii) இந்த விசுவாசம் உலகத்தை ஜெயிக்கும். $5^{4-6}$.

(iii) கடவுள் கொடுக்கும் சாட்சியாவது குமாரன் மூலமாய் நித்தியஜீவனைப் பெறலாம் என்பதே. $5^{7-12}$.

(iv) அவரது சித்தத்தின்படி வேண்டிக் கொண்டால் தகுதியான உத்தரவு கிடைக்கும். $5^{13-17}$.

(v) கிறிஸ்தவனது நிச்சயமான அறிவு. $5^{18-21}$.

குறிப்பு.—இப்பொருள் அட்டவணையில் அநேக நுட்பமான விஷயங்கள் எழுதாமல் விட்டிருக்கின்றன.

4. நோக்கமும் தாற்பரியங்களும். இதின் நோக்கம் தெளிவாய் எழுதியிருக்கின்றது. அது என்னவென்ருல் கேட்போர் ஆசிரியனுடன் ஐக்கியப்படுவதும் ($1^{3}$), ஆசிரியனுடைய சந்தோஷம் அவர்களில் நிறைவேறுவதும் ($1^{4}$), அவர்கள் நித்தியஜீவனைப் பெறுவதும் ($5^{13}$) ஆகிய இவைகளே. இதின் விசேஷித்த நோக்கங்கள் இவைதானெனினும் சில ஆக்ஷேபமான கொள்கைகளை மறுக்கவேண்டும் என்றும் யோவான் இவைகளுக்கு விரோதமாக இரண்டு அபிப்பிராயங்களை எடுத்துக் காட்டுகிருன்.

(i) கிறிஸ்தவர்கள் இயேசு தேவகுமாரனுகிய கிறிஸ்து என்று ஒப்புக்கொள்வார்கள் என்பதும்,

(ii.) கிறிஸ்தவர்கள் கடவுளின் நீதிக்குரிய நடக்கையுடையவர்களாவார்கள் என்பதும், இவை இந்த நிருபத்தில் கடவுளைப்பற்றிய மூன்று விசேஷித்த சத்தியங்கள் வெளிப்பட்டன. இவையாவன:

(i.) கடவுள் ஒளிமயமாயிருக்கின்ருர். $1^{5}$.

(ii.) கடவுள் நீதியுள்ளவர். $3^{3}$.

(iii.) கடவுள் அன்புமயமாயிருக்கின்ருர். $4^{8-10}$.

அவர் உலகத்தைச் சிநேகித்துத் தம்மை உலகத்துக்குக் கொடுத்தனர். அன்பினுலே அவர் நம்மில் நிலைத்திருக்கின்ருர். $4^{12}$. இயேசுகிறிஸ்து உண்மையாகவே கடவுளின் அவதாரம். நான்காம் சுவிசேஷத்தில் எழுதினதுபோல யோவான் இதிலும் இயேசுவினுடைய மனுஷீகத்தையும் தெய்வீகத்தையும் தெளிவாய்க் காட்டுகிருன். அவருடைய தன்மை இரண்டு வகையுள்ளது. $2^{22}$ $4^{23}$ $5^{6}$. இது கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கியமான பங்கு. அவர் பாவமில்லாதவரும் ($3^{5}$), சிறந்த மாதிரியுமானுர் ($3^{2}$). அவரில் அன்பு சிறந்து விளங்கிற்று. அந்த அன்பினுல் நாம் அவரையும் கடவுளையும் நேசிக்கிருேம்.

கடவுளின் ஆவியானவர் கடவுளிடம் பிறந்து வந்து கிறிஸ்துவைப்பற்றிச் சாட்சி கொடுக்கின்ருர். $3^{24}$ $5^{8}$.

மனிதர் கடவுளின் மக்கள் என்றும, உலகத்தின் மக்கள் என்றும் இரண்டு வகுப்பாராக எண்ணப்பட்டார்கள்.

கிறிஸ்தவர்களைக் கடவுளின் மக்கள் என்கிருர். அவர்களுக்குப் புதிய பிறப்புண்டு. $2^{29}$ $3^{9}$. அவர்கள் ஒளியில் நடக்கிருர்கள். நீதி செய்வார்கள். அன்புள்ளவர்கள் ஆவார்கள். $2^{10}$ $3^{14}$ $4^{7}$. அவர்கள் கிறிஸ்துவைத் தேவகுமாரனுக ஒப்புக்கொள்வார்கள். $4^{15}$. தங்கள் விசுவாசத்தினுல் உலகத்தை ஜெயிக்கிருர்கள். $5^{4}$. அவர்கள் நித்தியஜீவனைப் பெற்றிருக்கிருர்கள். நித்தியஜீவன் இப்போதே நமக்குக் கிடைத்தும் மறுமையில் நிறைவாகும். $3^{1}$ $5^{11}$. உலகத்தின் மக்களோ இருளில் நடக்கிருர்கள். $1^{6}$. அநீதி செய்வார்கள். $2^{8}$. பகையுள்ளவர்கள் ஆவார்கள். $3^{15}$. அவர்கள் கிறிஸ்துவைத் தேவகுமாரனுக ஒப்புக்கொள்ளமாட்டார்கள். $4^{3}$. அவர்களிடத்தில் நித்தியஜீவனில்லை.

உலகம் என்பதற்குக் கிறிஸ்துவுக்கு எதிரான ஆவி என்பது அர்த்தம். யோவான் எழுதிய நூற்களில் இதே அர்த்தம் உண்டு. உலகம் தீமையுள்ளது. $2^{15-17}$ $3^{13}$ $4^{1-5}$ $5^{5}$ $5^{19}$. இந்த ஆவியுடையவன் அந்திக்கிறிஸ்

துவாகிய பிரதிக்கிறிஸ்தவன் என்னப்பட்டான். 4³.

மேலே சொல்லப்பட்டவை முக்கியமான தாற்பரியங்களாம். ஆசிரியன் இவைகளைச் சரியான ஒழுங்கில் வைக்காமல் கடித நடையாக மனதில் தோன்றும்போது எழுதிவைத்தான். ஆயினும் இவைகளைத் தாறுமாறாகப் பொருள்படாமல் இவன் வைக்கவில்லை. ஆராயின் இவைகள் சுவிசேஷத்திலிருக்கின்ற தாற்பரியங்களைப் போன்றனவே என்று அறியலாம்.

III. இரண்டாம் நிருபம்.

1. ஆசிரியன், இடம், காலம் முதலியவை. இந்த நிருபத்தில் ஆசிரியன் 'மூப்பன்' என்னப்பட்டான். இந்த 'மூப்பன்' இன்னானென்பது ஆதிகாலமுதலாக சந்தேகமான காரியம். இக்காரணத்தைப்பற்றி ஆதிச்சபையில் இந்த நிருபம் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மூன்றாம் நூற்றாண்டில் ஐசேபியஸ் (*Eusebius*) இதை ஆக்ஷேபிக்கப்பட்ட நூற்களில் வைத்தான்; எனினும் பெரும்பான்மையோர் யோவான் அப்போஸ்தலன் இதின் ஆசிரியன் என்றார்கள். ஐரேனியு, அலெக்சந்திரியனான கிலெமெந்து முதலியோர் அப்படி நினைத்தார்கள். இரண்டாம் நூற்றாண்டில் அநேகர் அப்போஸ்தலனாகிய யோவானே ஆசிரியன் என்று ஒப்புக்கொண்டார்கள். சிலர் இது வேறொரு யோவானால் எழுதப்பட்டதாகச் சொன்னார்கள். பாபியஸ் சபை மூப்பனாகிய யோவான் என்பவன் ஒருவனைப்பற்றிப் பேசுகின்றான். அந்த யோவான் சுவிசேஷம் நிருபங்களெல்லாம் எழுதினதாகச் சிலர் சாதிக்கிறார்கள். அந்த யோவானைப்பற்றி நமக்கு நிச்சயமாய் ஒன்றும் தெரியவில்லை. யோவான் என்கிற பெயருடையவர்கள் அநேகர் இருந்திருப்பார்கள் எனினும் இதின் ஆசிரியன் வேறே, சுவிசேஷத்தை எழுதினவன் வேறே என்று நம்புகிறதற்குத் தகுந்த சாட்சி இல்லை.

இந்த நிருபம் அநேக விஷயங்களில் முதல் நிருபத்தைப்போலிருக்கிறது. இதிலும் அன்பு, சத்தியம், புதிய கற்பனை, சத்தியத்தில் நடத்தல், நிலைத்திருத்தல், சந்தோஷம் நிறைவேறுதல் என்னும் வார்த்தைகள் வருகின்றன. அந்திக்கிறிஸ்துவாகிய பிரதிக் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லுகிறது. இயேசு உண்மையாய் மானிடதேகம் எடுத்ததைப்பற்றிப் பேசுகிறது. இதின் நடையும் எழுத்துக் குறிப்புகளும் முதல் நிருபத்தினவற்றைப்போலும். ஆகையால் இந்தக் காரணங்களால் யோவான் இதற்கும் ஆசிரியன் என்று சொல்லக்கூடும். அப்படியே பெரும்பான்மையோர் முதலாம் நிருபம் எழுதினவன் இதையும் எழுதினான் என்பார்கள்.

சுருக்கமாய்ச் சொல்லவேண்டும் ஆனால், புறச்சாட்சி அதிகமல்லவாயினும் இது மிக்க சிறு நூலாதலின் இந்தச் சாட்சி அதிகமாயிருக்க மாட்டாதென்று சொல்லலாம். எனினும் அப்போஸ்தலனாகிய யோவான் இதை எழுதினான் என்பதற்குப் புறச்சாட்சி போதுமானதாயிருக்கின்றது. மேலும் வேறொருவன் இதை எழுதினான் என்பதற்குத் தகுந்த நியாயங்களின்று.

யோவான் இதை எழுதின காலத்தைப் பற்றி நாம் திட்டமாய்ச் சொல்ல முடியாது. அவன் எபேசு பட்டணத்திலிருந்தபொழுது முதல் நிருபம் எழுதினகாலத்தில் இதையும் எழுதியிருப்பதாகச் சொல்லலாம். யோவான் சபைகளுக்கும் ஆசாமிகளுக்கும் அநேக கடிதங்களை எழுதியிருப்பான். இந்த இரண்டாம் மூன்றாம் நிருபங்கள் அவைகளில் இரண்டு. மற்றவைகளெல்லாம் காணமற்போய்விட்டன.

இந்த நிருபம் ஒரு அம்மாளுக்கு எழுதப்பட்டதுபோலும். இந்த அம்மாள் இன்னாள் என்று நமக்குக் கொஞ்சமெங்கிலும் தெரியாது. சிலர் யோவான் ஒரு சபையை 'அம்மாள்' என்று சொல்லிக் குறிப்பித்தான் என்று நினைக்கிறார்கள். அப்படியுமிருக்கலாம். இதில் சொன்ன விஷயங்கள் சபைக்குரியன. இதைப்பற்றி ஒன்றும் தீர்மானமாய்ச் சொல்ல முடியாது.

2. பொருள் சுருக்கம். அப்போஸ்தலனுடைய அதிகாரத்தை மறுதலித்த சில பொய்ப் போதகர் வந்தார்கள் என்பதாகத் தோன்றுகிறது. இவ்விஷயத்தைப்பற்றி ஆசிரியன் இந்த நிருபம் எழுதினான். முதலாவது கிறிஸ்தவ வாழ்த்தல் சொல்லி; பிறகு கிறிஸ்துவின் அன்பின் கட்டளையை நிறைவேற்றவும் அதற்குரிய நடக்கையைக் காண்பிக்கவும் அவர்களை வேண்டிக்கொள்ளுகின்றான். பின்பு சில பொய்ப் போதகரைப் பற்றி எச்சரிக்கிறான். இவர்கள் இயேசு கிறிஸ்து உண்மையான மனுஷன் என்று ஒப்புக்கொள்ளாமல் அவருக்கு மனுஷத் தோற்றம் மாத்திரம் இருந்தது என்றார்கள். இத்தப்பிதத்தையுங் கூட மறுக்க இதை எழுதினதுபோலிருக்கிறது.

கிறிஸ்துவின் உண்மையான போதகத்தைப் பெற்றவன் கடவுளில் நிலைத்திருப்பான் என்று காண்பித்துக் கடைசியாகத்

தான் சீக்கிரமாக வருவதாகச் சொல்லி முடிக்கிறான்.

அந்தக்காலத்தில் தேசாந்திரப் பிரசங்கிகள் அநேகரிருந்ததாக இக்கடிதத்தால் தெரியவருகிறது.

IV. மூன்றாம் நிருபம்.

1. ஆசிரியன், காலம் முதலியவை. இரண்டாம் நூற்றாண்டில் இந்த நிருபத்தைப்பற்றி ஆதிச்சபை பிதாக்கள் பேசுகிறதில்லை. மூன்றாம் நூற்றாண்டில் யோவான் இதை எழுதினான் என்று சிலர் சொல்லுகிறார்கள். நான்காம் நூற்றாண்டிலிருந்து, பெரும்பான்மையோர் இதை வேத நூலாகவும் யோவான் இயற்றினதாகவும் ஏற்றுக்கொண்டார்கள்.

இரண்டாம் நிருபத்தைப்போல இதுவும் அநேக காரியங்களில் சுவிசேஷமும் முதல் நிருபமுமாகிய இவற்றிற்குச் சமானமுள்ளது. ஆகையால் யோவான் இதையும் எழுதினான் என்பதை நாம் ஒப்புக்கொள்ளலாம். இரண்டாம் நிருபத்தைப்போல இதுவும் எபேசுபட்டணத்தில் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. ஆனால் காயு, தியோத்திரேப்பு என்பவர்கள் இன்னார் என்று நமக்குத் தெரியவில்லை. எப்படியாவது இது சின்ன ஆசியாவிலிருந்த ஒரு சபையைப் பற்றி எழுதியிருக்கவேண்டும்.

இதின் காரணம் யாதெனில்:

சில தேசாந்திரப் பிரசங்கிகள் ஒரு சபைக்கு வந்தார்கள். காயு அவர்களைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு வேண்டிய உபசாரங்களைச் செய்தான். தியோத்திரேப்பு என்பவன் இறுமாப்புள்ளவனாய் அவர்களை ஏற்றுக்கொள்ளாதபடி சபையாரைத் தூண்டினான். இந்தச் சமாசாரம் யோவானுக்குத் தெரியவந்தது. அப்போது அவன் சபைக்கு ஒரு கடிதம் எழுதினான். சபையார்கள் தியோத்திரேப்புவின் வார்த்தையினிமித்தம் யோவானுடைய கடிதத்தை ஏற்றுக்கொள்ளாமல் அவனுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்படியவில்லை. பிறகு யோவான் காயுவுக்கு நேராய் இந்தக் கடிதம் எழுதினான்.

சில வித்துவான்கள் இந்த மூன்றாம் நிருபத்தின் 9-ம் வசனத்தில் குறித்த கடிதம் நமது இரண்டாம் நிருபம் என்று நினைத்தும், அதின் விஷயங்கள் வேறாதலின் அப்படிச் சொல்லத்தக்கதல்ல.

2. பொருள் சுருக்கம். இந்த நிருபத்தின் விஷயங்கள் காயுவுக்குரியவையாகி மேலே சொன்ன சந்தர்ப்பங்களுக்கடுத்தது. முதலாவது காயுவின் உண்மையைப்பற்றி யோவான் தமது சந்தோஷம் காண்பித்துப் பின்பு காயு அந்தத் தேசாந்திரப் பிரசங்கிகளுக்கு உபகாரங்களைச் செய்ததால் அவனைப் புகழ்ந்து தியோத்திரேப்புவின் குற்றத்தைக் கண்டிக்கிறான். அப்புறம் எப்போதும் நன்மையை அனுசரித்துக்கொள்ளும்படி காயுவை ஏவுகிறான். கடைசியாக தானே வருவதாகச் சொல்லி முடிக்கிறான்.

3. இந்த நிருபத்தின் விசேஷம். அந்தக்காலத்துச் சபைகளின் நிலைமையை நமக்குக் காண்பித்தலால் இச்சிறு கடிதம் மிகவும் விசேஷமுள்ளது. அக்காலம் அப்போஸ்தலரின் கடைசிக்காலம். அப்போது சிலர் அப்போஸ்தலருடைய அதிகாரத்தைத் தள்ளினதாகவும் அச்சபைத்தலைவர் தங்கள் சொந்தப் பெருமையைப் பாராட்டினதாகவும் காண்கிறோம். அக்காலத்தில் தேசாந்திரப் பிரசங்கிகள் இங்குமங்கும் திரிந்து சபைகளுக்குப் போதித்துவந்தார்கள். அந்தந்தச் சபையார் அவர்களுக்கு உபசாரஞ்செய்து அவர்கள் போதகத்தைக் கேட்பார்கள் என்று பார்க்கிறோம். ஒவ்வொரு சபையும் தனது காரியங்களைத் தானாய் நடத்தினதென்று தெரியவருகிறது. அப்போஸ்தலர் தங்கள் குணசிறப்பினால் தாங்கள் இருந்த வட்டகைகளிலுள்ள சபைகளில் அதிகாரம் பெற்றதேயொழிய, அவர்களுக்கு வேறே அதிகாரமில்லை என்பதாகத் தோன்றுகிறது. அக்காலத்தில் சபைகளில் அநேக தப்பிதங்களும் கண்டிக்கத்தக்க காரியங்களுமிருந்தன என்று அறியலாம். ஆகையால் அந்தச் சபைகள் அநேக விஷயங்களில் இந்தக்காலத்துச் சபைகளைப்போலிருந்தன என்று அறிக. இரண்டாம் மூன்றாம் நிருபங்களாகிய இவைகளுக்கு இன்னொரு விசேஷம் யாதெனில், இவைகள் சாதாரண கடிதங்களாதலின் இப்படிப்பட்ட விஷயங்களில் அப்போஸ்தலர் மனம் இன்னதென்றும் கிறிஸ்தவர் காரியம் இன்னதென்றும் வெளிப்படுகிறது. ஆதலால் இந்த நிருபங்கள் நமது சாதாரண ஜீவியத்திற்குரிய உதவியைப் புரியும்.

யோவேல். **Joel**.

1. தீர்க்கதரிசி. அடியிற் காண்க. இவனைக்குறித்து நமக்கு ஒன்றும் தெரியாது.

2. சாமுவேலின் மகன். 1 சாமு 8².

3. சாமுவேலின் முன்னோர்களில் ஒருவன். 1 நாளா 6³⁶.

4. சிமியோன் கோத்திரத்தின் பிரபு. 1 நாளா 4³⁵.

5. ரூபன் கோத்திரத்தான். 1 நாளா 5⁴.

6. காத் கோத்திரத்தான். 1 நாளா 5¹².

7. இசக்கார் கோத்திரத்தின் தலைவர்களில் ஒருவன். 1 நாளா 7³.

8. தாவீதின் போர்வீரர்களில் ஒருவன். 1 நாளா 11³⁸.

9, 10, 11. மூன்று லேவியர். 1 நாளா 15⁷ 26²² 2 நாளா 29¹².

12. மனாசே கோத்திரத்தின் தலைவன். 1 நாளா 27²⁰.

13. அந்நியஜாதிப் பெண்ணை விவாகஞ் செய்தவர்களில் ஒருவன். எஸ்றா 10⁴³.

14. பென்யமீன் கோத்திரத்தான். நெகே 11⁹.

யோவேல் என்னும் ஆகமம். **Joel.**

1. பொருளடக்கம்.

I. 1¹–2¹⁷. முதற்பாகத்தில் இஸ்ரவேலர் அடையவேண்டிய மனஸ்தாபம், அவர்களுடைய நியாயத்தீர்ப்பு, யேகோவாவின் நாள், மீட்புக்குரிய விண்ணப்பம் இவைகளைக் குறித்துச் சொல்லியிருக்கிறது. ஜனங்கள் மனந்திரும்புதலுக்கு எச்சரிப்பு, வெட்டுக்கிளிகளின் வாதை, வரட்சி, பஞ்சம் ஆகிய இவைகளே. பாவஞ்செய்த ஞானிகள் அதிகத் தண்டனையடைவார்கள். இதினிமித்தம் அவர்கள் மனந்திரும்பி துக்கங்கொண்டாடி உபவாசம்செய்து கடவுளை நோக்கி வேண்டிக்கொள்ளவேண்டும்.

II. 2¹⁸–3²¹. ஜனங்கள் செய்த விண்ணப்பத்தை யேகோவா கேட்டு, வெட்டுக்கிளிகளை ஒழித்து, சுகக்ஷேமத்தை அவர்களுக்கு அருளி, தமது பரிசுத்த ஆவியை அவர்களுக்கு ஈந்தருளி, புறமதஸ்தரின் நியாயத்தீர்ப்புநாளில் எபிரெயர் பயமற்றிருக்கும்படி செய்து, அவர்களை உபத்திரவப்படுத்தின பெனிக்கேயர் பெலிஸ்தியர் முதலியவர்களைத் தண்டித்து, எருசலேமைப் பரிசுத்தமாக்கித் தமது ஜனங்களுக்குள்ளே வாசம் செய்வார்.

2. காலம். இந்த நூல் எழுதப்பட்ட காலத்தைத் திட்பமாய்க் குறிக்கிறதற்குப் போதிய அத்தாட்சி இல்லை. யோவேல் என்னும் தீர்க்கதரிசியைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. சிறையிருப்பிலிருந்து யூதர்கள் எருசலேமுக்கு வந்தபின் ஏறக்குறைய கி.மு. 400–ம் வருஷத்தில் இது எழுதப்பட்டதென்று தற்காலத்து வேதசாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் இதைப் பற்றித் தீர்மானமாய்ச் சொல்லமுடியாது.

3. போதனை. இதின் ஆசிரியன் யூதர்களையும் எருசலேம் பட்டணத்தையும் பற்றி மாத்திரம் நினைத்தாலும் யேகோவா தமது ஆவியை யாவருக்கும் அருளுவார் என்று சொல்லுகிறான். இதில் ஆசாரத்தையும் ஆசாரியரின் முறைமையையும்பற்றி விசேஷமாய்ச் சொல்லியிருந்தாலும் தீர்க்கதரிசி உண்மையான மனந்திரும்புதலைப்பற்றியும் பேசுகிறான். யோவே 2¹³.

யோனதாப். **Jehonadab, Jonadab.**

1. தாவீதின் சகோதரனாகிய சிமியாவின் மகன். 2 சாமு 13³.

2. ரேகாபின் மகன். 2 இரா 10¹⁵ எரே 35⁶.

யோனத்தான். **Jonathan, Jehonathan.** [யேகோவா கொடுத்தார்.]

1. சவுலின் மூத்த மகன். தாவீதின் சிநேகிதன். இவனும் இவன் ஆயுததாரியும் பெலிஸ்தரின் தாணையத்தை ஜெயித்தார்கள். 1 சாமு 14 அதி. இஸ்ரவேலர் இவனை நேசித்து, சவுல் செய்த ஆணையிலிருந்து இவனைத் தப்புவித்தார்கள். 1 சாமு 14³⁶. இவன் புத்திசாலியாயிருப்பதினால், சவுல் இவனிடத்தில் நம்பிக்கை வைத்தான். 1 சாமு 20². இவனுக்கும் தாவீதுக்குமுள்ள சிநேகம். 1 சாமு 18¹ 20²·⁴² 2 சாமு 1²⁶. இவனுடைய மரணம். 2 சாமு 31². இவனுடைய அடக்கம். 2 சாமு 21¹².

2. எப்பிராயீம் மலையில் விக்கிரகாராதனை செய்த ஓர் லேவியன். நியா 17¹⁰ 18¹¹⁻³¹.

3. அபியத்தாரின் மகன். 2 சாமு 15²⁷.

4. தாவீதின் இனத்தான். 2 சாமு 21²¹.

5. தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன். 2 சாமு 23³².

6. 1 நாளா 2³².

7. தாவீதின் சிறிய தகப்பன். 1 நாளா 27³².

8. எஸ்றா 8⁶.

9. எஸ்றா 10¹⁵.

10. யோசுவாவின் சந்ததியான். நெகே 12¹¹.

11 ஓர் ஆசாரியன். நெகே 12¹⁴.

12. இன்னொரு ஆசாரியன். நெகே 12³⁵.

13. ஒரு சம்பிரதி. இவன் வீட்டிலுள்ள காவலில் எரேமியா தீர்க்கதரிசி வைக்கப்பட்டான். எரே 37¹⁵ 38²⁶.

14. எரே 40⁸.

15. தாவீதின் விசாரிப்புக்காரரில் ஒருவன் 1 நாளா 27²⁵.

16. ஜனங்களுக்குப் போதனை கொடுத்த ஓர் லேவியன். 2 நாளா 17¹⁸.

17. ஓர் ஆசாரியன். நெகே 12¹⁸.

யோனா. **Jona.**

1. தீர்க்கதரிசி. அடியில் காண்க. மத் 12³⁹ 16⁴ லூக் 11²⁹.

2. பேதுருவின் தகப்பன்.—யோவான் (3). யோவா 1[42] 21[15].

யோனு. **Jonah**.

1. யோனு தீர்க்கதரிசி. யோனு சுமார் கி–மு. 780 அல்லது 800-ல் இரண்டாம் யெரொபெயாமின் அரசாட்சி யாரம்பத்தி லிருந்தவன். இவன் தான் உரைத்த தீர்க்க தரிசனங்களை எழுதிவைக்கவில்லை. இவ் விஷயத்தில் இவன் ஆமோஸ் யோவேல் முதலிய தீர்க்கதரிசிகளுக்குப் பேதப்படு கிறான். 'காத்தேப்பேர் ஊரானுகிய அமித் தாய் என்னும் தீர்க்கதரிசியின் குமாரனுகிய யோனு' என்பவனுகிய இவன்மூலமாய் யேகோவா அறிவித்த வார்த்தையின்படியே இரண்டாம் யெரொபெயாம ஆமாத்தின் எல்லை முதற்கொண்டு சமபூமியின் கடல் மட்டுமுள்ள இஸ்ரவேலின் எல்லைகளைத் திரும்பச் சேர்த்துக்கொண்டான் என்று சொல்லியிருக்கிறது. 2 இரா 14[25]. இந்த வாக்கியம் மாத்திரமே யோனுவைப்பற்றி வேதத்தில் காணப்படும் ஒரே குறிப்பு. யோனு வடராஜ்யமாகிய இஸ்ரவேல் ராஜ் யத்தைச் சேர்ந்தவன். இவன் பிறந்த காத் தேப்பேர் கலிலேயாவில் நாசரேத்துக்குச் சற்று சமீபமான ஓர் ஊர்.

2. ஆகமப் பொருளடக்கம். மகா நகர மாகிய நினிவேயின் அக்கிரமம் கர்த்தரு டைய சமுகத்தில் வந்தெட்டினதினுல் அத ற்கு விரோதமாக ஆக்கினை கூறும்படி அமித்தாயின் குமாரனுகிய யோனு தேவ கட்டளைபெற்ருன். இந்தத் தேவ கட்ட ளைக்குத் தப்பியோட இவன் பிரயத்தனித் துத் தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினுன். சமுத்திரத்தில் கொந்தளிப்புண்டாகவே கப் பற்காரர் ஜெபிக்கையில் யோனு நித்திரை செய்துகொண்டிருந்தான். கப்பற்காரர் புய லின் மும்முரம் தேவகோபத்துக்கு அடை யாளம் என்றுணர்ந்து சீட்டுப்போட யோனு குற்றவாளியென்று கண்டுபிடிக்கப் பட்டான். விசேஷம் யாதென்று கப்பற்கா ரர் விசாரித்ததின்பேரில் இவன் அவர்களி டம் தன் குற்றத்தை ஒத்துக்கொண்டு தேவ கோபத்தைத் தணிக்கும்படி தன்னைச் சமுத் திரத்தில் எறிந்துவிடவேண்டுமென்று அவர் களுக்கு ஆலோசனை சொன்னுன். அங்கே ஒரு பெரிய மீன் அவனை விழுங்கினது. தான் மீன் வயிற்றில் உயிரோடே காப்பாற் றப்பட்டதற்காக யோனு தேவனை ஸ்தோத் தரித்தான். மூன்ரும்நாளில் மீன் இவனைக் கரையில் கக்கிவிட்டது. இப்போது இவன் தேவகட்டளைக்குக் கீழ்ப்படிந்து நினி வேக்கு வரப்போகிற அழிவை அதற்குக் கூறப்போனுன். ஆனுல் நினிவேயர் யோனு கூறின செய்தியைக் கேள்வியுற்று, அரசன்முதல் யாவரும் ஒருமிக்கப் பெரிய பகிரங்க மனஸ்தாப விரதம் கொண்டாடி னுர்கள். ஆகையால் கர்த்தர் அப்பட்ட ணத்தை அழிக்காதிருக்கத் தீர்மானித்தார். கர்த்தருடைய இந்தத் தீர்மானத்தையிட்டு யோனு விசனமடைந்து, நகரத்துக்கு வெளி யேபோய் உட்கார்ந்து சாவை விரும்பி ஜெபித்தான். இரவில் ஒரு ஆமணக்குச் செடி முளைத்தெழும்பி நிழல் தந்து அவனை இளைப்பாற்றி இன்னெரு இரவில் ஒரு பூச் சியால் அரிப்புண்டழிந்துபோனது. செடி யின் அழிவுக்காக யோனு துக்கித்துப் புலம் பிக்கொண்டிருக்கையில் கர்த்தர் அவனுக் குத் தரிசனமாகி 'ஒரு இராத்திரியிலே முளைத்ததும் ஒரு இராத்திரியிலே அழிந்து போனதுமான ஆமணக்குக்காகப் பரிதபிக் கிருயே. மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனே' என்ருர். இதுவே ஆகமத்தின் சரித்திரச் சுருக்கம்.

3. சரித்திர உண்மையைப்பற்றிய பெருந் தர்க்கம். இந்த ஆகமத்தின்பேரில் அதிக மாய்த் தர்க்கிக்கப்பட்டிருக்கிறவிஷயமென் னவெனில், இதில் அடங்கிய சங்கதிகள் உள்ளபடி நடந்த சரித்திரமா? அல்லது திவ் விய சத்தியத்தைப் போதிக்கும் நோக்கமாய் எழுதப்பட்ட உவமையா என்னும் கேள் வியே.

A. ஆகமப் பொருளின் சரித்திர உண் மையை ஸ்தாபிக்கும்படி பின்வரும் ஆதா ரங்கள் சொல்லப்படும்.

i. இதில் காணப்படும் சரித்திரஸ்தலக் குறிப்புகள் உண்மையான சரித்திர இலக்ஷ ணம் அமைந்தவைகளாயிருக்கின்றன. திரு ஷ்டாந்தமாக:

(*a*) யோனு நினிவேக்கு அனுப்பப்பட் டது அக்காலத்துச் சம்பவங்களுக் கொத் திருக்கிறது. தீர்க்கதரிசிகள் அக்காலங்களில் புறதேசங்களுக்கு அனுப்பப்படும் வாடிக்கை யிருந்தது. எலியா, எலிசா தீர்க்கதரிசி களின் சரித்திரத்தைக் கவனித்துக்கொள்க.

(*b*) ஆகமத்தில் நினிவேயைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் விபரம் உலகசரித் திரக்காரர் எழுதியிருக்கும் பாவைகளுக்கு விகற்பமின்றி இசைந்திருக்கிறது.

(*c*) இதில் சொல்லியவண்ணம் மனித ரும் மிருகங்களும் துக்கங்கொண்டாடும் வழக்கம் (யோனு 3[5]) ஆசியாவிலிருந்ததாக எரோதோத்து (*Herodotus*) என்னும் சரித் திரக்காரன் வரைந்திருக்கிருன். துக்கத் துக்கு அடையாளமாக மனுஷருக்கு எப்

படியோ அப்படியே மிருகங்களுக்கும் ரோமத்தைச் சிறைத்துவிடுவார்களாம்.

ii. பழைய ஏற்பாட்டாகமங்களை ஒன்றாய்த் திரட்டி கனோனை (*Canon*) முடித்தவர்கள் யோனாவின் ஆகமச்சரித்திர உண்மையை அங்கீகரித்து அதைத் தீர்க்கதரிசன ஆகமங்களோடு சேர்த்திருக்கிறார்கள்.

iii. இவ்வாகமத்தின் சரித்திர உண்மையைப்பற்றிய சகல சந்தேகங்களும் கிறிஸ்துவின் வார்த்தைகளால் நிவிர்த்தியாகிவிடுகிறது. மத் $12^{39}$ $16^{4}$. $11^{29}$.

B. இந்த ஆகமம் ஓர் உவமை என்பதற்குச் சொல்லும் நியாயங்களாவன :

i. யோனா இவ்வாகமத்தின் ஆக்கியோன் என்பதற்கு ருசுவான எந்தக் குறிப்பும் இதில் கிடையாது. 'நினிவே மூன்று நாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரமாயிருந்தது' என்று இறந்த காலத்தில் சொல்லப்பட்டிருப்பதைக் காண்கையில், யோனாவுக்கு வெகு காலத்துக்குப்பின் வேறொருவன் வைதீக சத்தியங்களைப் போதிக்கும் எண்ணத்தோடு இந்தச் சரித்திரத்தை உபயோகித்து இவ்வாகமத்தை எழுதியிருக்கிறான் என்று விளங்குகிறது.

ii. மேலும் இவ்வாகமத்தின் பாஷை நடையும் வாசகப்போக்கும் பொதுலக்ஷணமும் இந்த அபிப்பிராயத்தைப் பின்னும் உறுதிப்படுத்துகின்றன.

iii. இவ்வாகமத்தின் ஆக்கியோன் மெய்யான சரித்திரமே எழுதியிருந்தானானால் இவன் இயல்பாய்ச் சொல்லியிருக்கக்கூடிய அநேக சங்கதிகளை விட்டிருக்கமாட்டான், உதாரணமாக :

(*a*) நினிவேயின்மேல் குற்றமாகச் சுமந்த பாவங்கள் எவையென்று ஆக்கியோன் எழுதியிருக்கவில்லை.

(*b*) மீன் யோனாவை வெளியே கக்கிவிட்ட கரை அல்லது இடம் எதுவென்றும் இவன் சொல்லியிருக்கவில்லை.

(*c*) அங்கேயிருந்து தீர்க்கதரிசி நினிவே பட்டணத்தை நோக்கிச் செய்த பிரயாணத்தைப்பற்றியாவது, அப்போது சிங்காசன பதியாயிருந்த அசீரிய அரசனின் பேரைக் குறித்தாவது, யாதொன்றும் காட்டியிருக்கவில்லை.

iv. யோனா மூன்றுநாள் இரவும் பகலும் ஒரு பெரிய மீன் வயிற்றிலுயிரோடிருந்ததும் அதில் இவன் செய்யுள் நடையான ஜெபம் உண்டுபண்ணினதும் நம்பக்கூடாத சம்பவங்களானபடியால், இவைகளை உண்மையான சரித்திர சத்தியங்களாக அங்கீகரிக்க முடியாது. ஆனால் திமிங்கலம் காண்க.

v. இவ்வாகமம் திடீரென்று தொடர்ச்சியற்றவிதமாய் முடிவடைவதும் இது சரித்திரமாய் மதிக்கப்பட வேண்டுமென்ற கருத்து கிரந்த கர்த்தாவுக் கிருந்ததில்லையென்பதற்குச் சாட்சியாம்.

vi. யோனாவின் ஆகமத்தைக் கருத்தாய் ஆராய்ந்தால் ஒரு விசேஷ போதனையை இதின் மூலமாய்ப் புகட்டுவதே ஆக்கியோனின் நோக்கமென்பது புலப்படும். யோபின் ஆகமத்தில் யோபின் அனுபவம் முக்கியமான சத்தியங்களைப் போதிக்கும்படி உபயோகப்படுத்தப்பட்டிருப்பதெப்படியோ அப்படியே இவ்வாகமக் கர்த்தாவும் யோனா தீர்க்கதரிசியின் ஜீவியத்தில் ஒரு சம்பவத்தைத் தெரிந்துகொண்டு, தன்காலத்து ஜனங்களின் மந்த மனச்சாட்சியில் ஒரு பெரிய சத்தியத்தைப் பலமாய் அழுத்தி யுணர்த்தும்படி அதைப் பிரயோகிக்கிறான். யோபின் ஆகமத்தில் யோபு சொன்ன எல்லா வார்த்தைகளும் மெய்யாய் அவனால் பேசப்பட்டதென்று எண்ணுவார் யாருமில்லை. அவ்வண்ணமே யோனாவைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் யாவும் உண்மையாகவே சம்பவித்தது என்று நாம் நம்பவேண்டிய அவசியமில்லை.

vii. கிறிஸ்து இவ்வாகமத்தின் சரித்திர உண்மையை அங்கீகரித்திருக்கிறார் என்னும் ஆக்ஷேபத்துக்கு மாறுத்தரமான சமாதானம் யாதெனில் : தேவகுமாரன் இவ்வுலகத்தில் இறங்கும்போது வானசாஸ்திரத்துக்கும் மற்றச் சாஸ்திரங்களுக்குமடுத்த விஷயங்களைப்பற்றித் தமது காலத்து எண்ணங்களில் காணப்பட்ட தப்பறைகளை நிவிர்த்திக்கப் பாராமல், அவைகளை அங்கீகரித்த பாவனையாய் நடந்துகொண்டார். உதாரணமாக சூரியன் உதித் தெழும்புவதாகவும், இறங்கி அஸ்தமிப்பதாகவும் அவர் பேசினார். அதுபோலவே யோனாவின் ஆகமத்தைக் குறித்தும் அப்போது வியாபித்திருந்த அபிப்பிராயங்களை அவர் அநுசரித்து அவைகளுக்கொத்துப் பேசியிருக்கிறார். லௌகீக சாஸ்திரங்களில் மனிதர் பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்போகிற காரியங்களை அவர் முன் தெரிவிக்காததுபோலவே, வைதீக சாஸ்திரத்தில் பின் வெளிப்படப்போகிறவைகளை வெளிப்படும் காலத்துக்குமுன், அவர் விவரிக்கவில்லை. வெறுமை காண்க.

இதெல்லாம் பார்த்து, தற்காலத்தில் வேத சாஸ்திரிகள் பெரும்பாலும்,

i. இந்த ஆகமம் சரித்திரம் அல்ல, யூதர்களுக்கு நேரிட்டவைகளைக் குறித்த ஒரு உவமைதான் என்றும் ;

ii. இது 2 இரா $14^{25}$-ல் சொன்ன யோனுவினுல் அல்ல கி-மு. 600–200 வரையிலுள்ள வருஷங்களில் நமக்குத் தெரியாத ஒருவனுல் எழுதப்பட்டது என்றும் சொல்லுகிறுர்கள். ஆதலால் இது கி-மு. 300-ம் ஆூ எழுதப்பட்டது என்று நாம் சொல்லலாம்.

**4.** இதின் நோக்கம். இந்த ஆகமத்தின் நோக்கமென்ன, இதிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் எவை என்றுல், புறஜாதியாருக்கும்கூட கடவுள் ஜீவனுக்கேற்ற மனந்திரும்புதலை அருளியிருக்கிறுர் என்று காண்பிப்பதே இவ்வாகமத்தின் நோக்கமாம். பழைய ஏற்பாட்டில் வேறே எங்கும் இந்தச் சத்தியம் இதிலும் அதிகத் தெளிவாய்த் திருஷ்டாந்தப் படுத்தப்பட்டிருக்கவில்லை. சுவிசேஷமானது சமஸ்த ஜனங்களுக்குமுரியது என்று அறிக்கையிட்டு ஒத்துக்கொள்ளும்படி பேதுரு விசேஷ தரிசனத்தின் மூலமாய்க் கற்பிக்கப்பட்டதுபோல, இதிலும் யோனு தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படியும்படி பலவந்த பயிற்சியடைந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாகமத்திலுள்ள போதனை 'யேகோவாவினுடைய தாசனுகிய' இஸ்ரவேல் புறஜாதியாருக்காகச் செய்யவேண்டிய கடமையைத்தெரிவிக்கிறது. அஞ்ஞான நாடுகளான சீதோனுக்கும் சீரியாவுக்கும் எலியாவும் எலிசாவும் கிருபையின் விசேஷம் கொண்டுபோகும் ஸ்தானுபதிகளாய் அனுப்பப்பட்டதுபோல், யோனுவும் எருசலேமை அழித்து நாசஞ்செய்யப்போகிற ஜனத்துக்கே செய்தி யறிவிக்கும்படி நினிவேக்கு அனுப்பப்படுகிறுன் என்று இதின் ஆக்கியோன் விவரமாய் எழுதி இஸ்ரவேலர் கடவுளின் கிருபையை அறிவித்து அன்னியர் எல்லாரையும் கடவுளின் ராஜ்யத்தில், சேர்க்கவேண்டும் என்று போதிக்கிறுன்.

இவ்வாகமத்தின் போதனைகள் :

i. தேவ தீர்மானத்துக்குத் தப்பி விலகிக்கொள்வது அசாத்தியமானகாரியம். யோனு சிலகாலம் தன் சொந்த வழியே சென்றுலும் சீக்கிரம் கடவுளுக்குச் சித்தமானதை நடப்பிக்கும்படி திருப்பப்பட்டான்.

ii. எல்லாருக்கும் இயல்வேத அறிவுண்டு. அஞ்ஞான கப்பற்காரரிடத்திலும், நினிவேயின் குடிகளிடத்திலும் உன்னதமானவருக்குப் பயப்படும் பயம் காணப்படுகிறது.

iii. யோனு சமுத்திரத்தில் மரணத்துக்குத் தப்பிவிக்கப்பட்டது, கடவுள் தமது ஜனங்களை மகா மோசமான ஆபத்துகளிலிருந்து விடுவிக்க வல்லவர்.

iv. எல்லாரும் மனந்திரும்பவேண்டும் என்று பராபரன் விரும்புகிறுர்.

v. மனஸ்தாபப் படுகிறவர்களுக்கு மன்னிப்பு அளிக்க யேகோவா ஆயத்தமாயிருக்கிறுர்.

vi. பழைய எற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் தற்பொழிவும், புறஜாதியாரைப்பற்றிய நிர்ச்சிந்தையும் இங்கே வெளிப்படுகிறது. யோனுவினுடைய சத்துருக்கள் மனந்திரும்பினதினிமித்தம் யோனு விசனமடைந்தான். மனுஷருக்காகவும் பிள்ளைகளுக்காகவும் மிருக ஜீவன்களுக்காகவும் கவலைப்படுகிற பராபரனுடைய அதிசயமான உருக்க இரக்கத்தை இவ்வாகமத்தில் நாம் காண்கிறேம்.

யோனுவின் ஆகமத்திலடங்கிய சங்கதிகளை நாம் உண்மையான சரித்திரமாக மதித்தாலுஞ் சரி, அல்லது உவமைப் போங்கானதென்று எண்ணினுலுஞ் சரி, மேற்காட்டிய பூர்வ சத்தியங்கள் அதினுல் போதனையாகக் கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

யோனத்-ஏலம்-ரிக்கோகீம். **Jonath-elem-rehokim**. சங் 56. தலைப்பில் சொன்ன இப்பதங்களுக்குச் 'சத்தம் பண்ணுமல் தூரத்தில் இருக்கிறவர்களின் புரு' அல்லது 'தெரிபிந்து மரங்களில் இருக்கிற புரு' என்று அர்த்தமே. இது ஒரு எபிரெய ராகத்தின் பெயர் என்று நினைக்கிறதற்கு இடம் உண்டு.

யோனும். **Jonam**. இயேசுவின் முன்னேர்களில் ஒருவன். லூக் $3^{30}$.

## ர

ரந்காத். **Rakkath**. யோசு $19^{35}$.

ரஸ்து. **Store**, சேனையின் ஆகாரம் முதலியவை. 1 இரா $9^{19}$ 2 நாளா $8^{4}$ எசா $10^{28}$.

ரட்சிப்பு. **Salvation**. ஆதி $19^{18}$ யாத் $14^{13}$ $15^{2}$ உபா $32^{15}$ 1 சாமு $2^{1}$ யோபு $13^{16}$ சங் $3^{8}$ $21^{5}$ $35^{3}$ $62^{1}$ $91^{16}$ $98^{3}$ $116^{13}$ $118^{14}$ எசா $12^{3}$ $17^{10}$ $33^{2}$ $49^{6}$ $51^{8}$ $60^{18}$ மு. இரட்சகர் காண்க.

ரணவைத்தியன். **Physician**. எரே $8^{22}$. வைத்தியன் காண்க.

ரதாயி. **Raddai**. 1 நாளா $2^{14}$.

ரத்தினம். **Jewel**. இரத்தினம் காண்க.

ரபா. **Rabbah**. யூதாவிலிருந்த ஒரு ஊர். இந்த இடத்தைப்பற்றி வேறென்றும் தெரியாது. யோசு $15^{60}$.

ரபி. **Rabbi** மத் $23^{7}$ $26^{25-49}$ மாற் $9^{5}$ $11^{21}$ $14^{45}$ யோவா $1^{38.49}$ $3^{2.26}$ $4^{31}$ $6^{25}$ $9^{2}$ $11^{8}$.

'ரபி' என்ற எபிரெய பதத்திற்கு 'என் ஆண்டவனே' என்று அர்த்தம் 'ரப்' என்பதற்குப் 'பெரிய' என்றர்த்தம் ஆகையால் அது மேலான உத்தியோகஸ்தருக்குச் சொல்லப்படும். திருஷ்டாந்தமாக 'ரப் மாக்' 'ரப் சாரீஸ்.' எரே $39^{3}$ 2 இரா $18^{17}$.

பிற்காலங்களில் இது வேதசாஸ்திரத்தில் தேறின சாஸ்திரிமாருக்கு விசேஷமாய் வழங்கிற்று. இப்படிப்பட்டவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தை வியாக்கியானம் செய்யத் திறமையுள்ளவர்களென்று எண்ணப்பட்டார்கள். யோவானுடைய சீஷர் யோவானை இப்பெயரால் அழைத்தார்கள். யோவா $3^{26}$.

இதினாலே ஜனங்கள் யோவான்ஸ்நானகனையும் இயேசுவானவரையும், வேதசாஸ்திரத்தில் பாண்டித்தியமுள்ளவர்களாக மதித்தார்கள் என்று அறியலாம். பவுலுக்குச் சாஸ்திரத்தைக் கற்றுக்கொடுத்த கமாலியேல் என்பவன் ரபிமார்களில் சிறந்தவனாயிருந்தான். இந்தப் பதமும் 'ரபூனி' என்ற பதமும் ஒன்றுதான்.

ரபூனி. **Rabboni**. எபிரெய பாஷையில் 'ரபி' என்னும் பதத்தை அரமேய பாஷை பேசுகிறவர்கள் 'ரபூனி' என்பார்கள். இதற்கு 'என் ஆண்டவனே' என்று அர்த்தம். வேதசாஸ்திரிகளுக்கு வந்தனமாக இப்பதம் வழங்கிற்று. மாற் $10^{51}$ யோவா $20^{16}$.

ரப்-சாக்கே. **Rab-Shakeh**. அசீரிய சேனையில் தர்த்தான் என்பவனுக்கு அடுத்த ஓர் மேலான சேனாபதி. எசேக்கியா ராஜா எருசலேம் பட்டணத்தைத் தனக்கு ஒப்புக்கொடுக்கும்படி தர்த்தான், ரப்-சாக்கே, ரப் சாரீஸ் என்னும் மூன்று பிரதானிகளை அசீரிய ராஜாவாகிய சனகெரிப் அனுப்பினான். 2 இரா $18^{17}$ ஏசா $36^{2}$.

ரப்-சாரீஸ். **Rab-Saris**. அசீரிய ராஜாங்கத்திலும் பாபிலோனிய ராஜாங்கத்திலும் ஒரு மேலான உத்தியோகஸ்தனுக்கு வழங்கின பட்டப்பெயர். இவன் ராஜாவின் அரமனையிலுள்ள பிரதானிகளுக்கு மேலானவனாயிருக்கலாம்.

வேதாகமத்திலே இப்பெயர் கொண்டவர்கள் இருவர்:

1. சனகெரிப் எசேக்கியாவினிடம் அனுப்பின ஒருவன். 2 இரா $18^{17}$.
2. நேபுகாத்நேச்சார் எருசலேம் பட்டணத்தைப் பிடித்தபின் எரேமியா தீர்க்கதரிசியை விடுதலை செய்தவன். எரே $39^{3.13}$.

ரப்பா. **Rabbah**. அம்மோனியரின் தலைநகரம். யோர்தான் நதிக்கு 20 மைலுக்குக் கிழக்கே, யாப்போக் நதியோரத்தில் மலையுச்சியின்மேல்கட்டப்பட்டஒருகோட்டை. இஸ்ரவேலர்கள் கானான் தேசத்துக்கு வந்தபோது ரப்பா காத் கோத்திர நாட்டின் எல்லையோடு சேர்க்கப்பட்டது. யோவாப் இதை முற்றுகைபோட்ட சமயத்திலே உரியா உபாயமாய்க் கொல்லப்பட்டான். 2 சாமு $11^{1}$ $12^{26}$ 1 நாளா $20^{1}$. இந்த ஊரில் இரண்டு பாகங்களுண்டு. 'ராஜதானி' என்ற பாகம் யோவாபினால் பிடிக்கப்பட்டது. தாவீது மற்றப் பாகத்தைப் பிடித்தான். தாவீது இதை ஜெயித்தபின் அம்மோனியர் தனக்குக் கீழாக இதை அரசாட்சி செய்யும்படி விட்டிருந்தான். 2 சாமு $17^{27}$. ஆமோஸ் தீர்க்கதரிசியின் காலமாகிய கி-மு. 750-ம் வருஷத்தில் ரப்பா அம்மோனியருக்குத் தலைநகரியாயிருந்தது. ஆமோ $1^{14}$. இதை நேபுகாத்நேச்சார் முற்றுகை போட்டான். எரே $49^{2}$ எசே $21^{20}$ $25^{5}$. தற்காலத்திலே இதற்கு 'அம்மான்' என்று பேர். தமஸ்குவிலிருந்து மெக்காவுக்குப் போகும் இருப்புப் பாதை இதின் வழியாய்ச் செல்லுகிறது.

ரப்பா. **Rapha**.

1. பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவன். 1 நாளா $8^{2}$.
2. வேறொரு பென்யமீனன். 1 நாளா $8^{37}$. = ரப்பாயா. 1 நாளா $9^{43}$.
3. ரெப்பாயீம் என்ற பூர்வீக ஜனத்தின் ஆதி கோத்திரப்பிதா. 2 சாமு $21^{18}$. ரெப்பாயீம் காண்க.

ரப்பாய, ரெபயா, ரெப்பாயா. **Rephaiah**.

1. ஒரு யூதன். 1 நாளா $3^{21}$.
2. சிமியோன் கோத்திரத்தான். 1 நாளா $4^{42}$.
3. தோலாவின் மகன். 1 நாளா $7^{2}$.
4. சவுலின் சந்ததியான். = ரப்பா. 1 நாளா $8^{37}$ $9^{43}$.
5. மதிலைப் பழுதுபார்த்தவன். நெகே $3^{9}$.

ரப்பூ. **Raphu**. எண் $13^{9}$.

ரப்-மாக். **Rab-Mag**. பாபிலோனிய ராஜாங்கத்தில் மேலான உத்தியோகம் செய்தவனுடைய பட்டப்பெயர். இதின் அர்த்தம் 'பெரிய சாஸ்திரி' அல்லது 'பெரிய ஜோதிடன்' என்று தோன்றுகிறது. எரே $39^{3.13}$.

ரமீயா. **Ramiah**. [யேகோவா உயரமுள்ளவர்.] அந்நியஜாதிப் பெண்ணை விவாகம் செய்த ஒருவன். எஸ்றா $10^{25}$.

## ரா

ராகா, ராக்கா. **Raca**. '*ராகா*' என்பதற்கு அரமேய பாஷையில் 'வெறுமை' என்று அர்த்தம். இயேசுவின் காலத்தில் இப்பதம் நிந்தனைச் சொல்லாயிருந்தது. அக்காலத்திலே ரபிமார் நிந்திக்கிறவர்களைத் தண்டிக்கும்படி கடுமையான சட்டதிட்டங்களை ஏற்படுத்தியிருந்தார்கள். மத் $5^{22}$.

ராகாப். **Rahab**, **Rachab**. [விசாலமானது.]

1. இஸ்ரவேலர் கானான்தேசத்தில் பிரவேசித்த காலத்தில் எரிகோ பட்டணத்தை வேவு பார்க்கவந்த இரண்டு எபிரெய வேவுகாரரை உபசரித்து, அப்பட்டணத்தாரின் கைக்கு அவர்களைத் தப்புவித்த ஒரு வேசி. யோசு $2^{1}$ $6^{17}$ எபி $11^{31}$ யாக் $2^{25}$.

2. தாவீதின் பாட்டனாகிய சல்மோனின் மனைவி. போவாசின் தாய் பரி. மத்தேயு எழுதின இயேசுவின் வம்ச அட்டவணையில் சொல்லப்பட்டிருக்கும் நான்கு ஸ்திரீகளில் இவளும் ஒருத்தி. மத் $1^{5}$.

ராகாப். **Rahab**. '*ராகாப்*' என்னும் பதம் 'மேட்டிமை' அல்லது 'அகங்காரம்' என்று பொருள்படும். 'அகங்காரிகள்' யோபு $9^{13}$. 'மூர்க்கம்' யோபு $26^{12}$. இது காவியங்களிலே சொல்லப்பட்டதும், எபிரெயர்களும் பாபிலோனியரும் நம்பினதுமான ஒரு வலுசர்ப்பத்தைக் குறிக்கும். இது சமுத்திரத்தின் ஆழத்தில் வாசம்செய்தது என்றும், பூர்வீகத்தில் யேகோவாவுக்கும் இதற்கும் போராட்டம் இருந்ததென்றும், கடைசியில் யேகோவா இதை ஜெயித்தார் என்றும் எபிரெயர்கள் அபிப்பிராயங் கொண்டார்கள். பாபிலோனியர் தியமத் (*Tiamat*) என்னும் பயங்கரமான ஜெந்துவைப்பற்றியும் மார்டுக் (*Marduk*) என்னும் தேவனைப்பற்றியும் அப்படியே அபிப்பிராயங் கொண்டார்கள். சங் $87^{4}$ $89^{10}$ ஏசா $51^{9}$

ராகேல். **Rachel**. லாபானின் இளைய குமாரத்தி யாக்கோபின் மனைவி. யாக்கோபுக்கும் லாபானுக்கும் மனஸ்தாபமிருந்த சமயத்தில் தன் தகப்பனுடைய 'தேராபீம்' என்ற தெய்வங்களைத் திருடிக்கொண்டாள். யோசேப்பும் பென்யமீனும் இவளுடைய குமாரர். யாக்கோபு இவளை எப்பிராத்தாவுக்குச் சமீபத்தில் அடக்கம் செய்தான்.

ராகேலுடைய கல்லறை வெகு காலமாக அறியப்பட்டிருந்தபோதிலும் பிற்காலத்தில் அதிருந்த இடம் தெரியாமற்போயிற்று. சில வசனங்களிலே அது எருசலேமுக்கு வடக்கே பென்யமீன் கோத்திர நாட்டில் இருந்தது என்றும், வேறு சில வசனங்களிலோ அது எருசலேமுக்குத் தெற்கே பெத்லகேமுக்குச் சமீபத்திலிருந்தது என்றும் தோன்றுகிறது. ஆதி $35^{16}$ ரூத் $1^{2}$ 1 சாமு $10^{2}$ எரே $31^{15}$ மீகா $5^{2}$ மத் $2^{18}$.

ராக்கால். **Racal**. 1 சாமு $30^{29}$.

ராக்கோன். **Rakkon**. யோசு $19^{46}$.

ராஜகிரீடம். **Crown**. எஸ்தர் $1^{10}$. கிரீடம் காண்க.

ராஜகூடாரம். '**Pavilion**.' 2 சாமு $22^{12}$ 1 இரா $20^{12}$ எரே $43^{10}$. கூடாரம் (1) காண்க.

ராஜஸ்திரீ. **Queen**. 1 இரா $10^{13}$.

ராஜமுடி. **Royal diadem**. எஸ்தர் $6^{8}$ ஏசா $62^{3}$. கிரீடம் காண்க.

'ராஜரிக பிரமாணம்.' '**Royal Law**.' யாக் $2^{8}$.

ராஜரிகம். **Rule**. மீகா $4^{8}$.

ராஜவஸ்திரம். **Royal apparel**. எஸ்தர் $5^{1}$ $6^{8}$ $8^{15}$ அப் $12^{21}$.

ராஜா. **King**. இராஜா காண்க.

ராஜாத்தி, ராஜஸ்திரீ. **Queen**. 1 இரா $10^{1}$ $11^{19}$ 2 நாளா $9^{1}$ $15^{16}$ நெகே $2^{6}$ எஸ்தர் $1^{9}$ $2^{22}$ $5^{2}$ $7^{1}$ $8^{1}$ சங் $45^{9}$ உன்.பா $6^{8}$ எரே $13^{18}$ $29^{2}$ $44^{17.25}$ தானி $5^{10}$ மத் $12^{42}$ லூக் $11^{31}$ அப் $8^{27}$ வெளி $18^{7}$. இராஜா, இராஜாத்தி காண்க.

ராஜாளி. **Heron**. எபிரெய பதம் ராஜாளி அல்ல, புசிக்கத்தகாத ஒரு விதமான கொக்கு குறிக்கலாம். லேவி $11^{19}$ உபா $14^{18}$ யோபு $39^{26}$.

ராட்சதர். **Giants**. இராட்சதர் காண்க.

ராப்பித். **Rabbith**. யோசு $19^{20}$.

ராமசேஸ். **Raamses**, **Rameses**. எகிப்துதேசத்திலே அடிமைகளாயிருந்த இஸ்ரவேலர் பார்வோனுக்காகக் கட்டின பண்டசாலைப் பட்டணங்களில் ஒன்று. இது கோசேன் நாட்டிலிருந்தது. ஆதி $47^{11}$ யாத் $1^{11}$ $12^{37}$ எண் $33^{3}$.

ராமா. **Ramah**. [உயரம்.]

1. நப்தலிக் கோத்திர நாட்டிலுள்ள ஒரு ஊர். யோசு $19^{29}$.

2. ஆசேர் கோத்திர நாட்டிலுள்ள ஓர் ஊர். யோசு $19^{36}$.

3. பென்யமீன் கோத்திர நாட்டிலுள்ள ஒரு ஊர். இதற்கும் பெத்தேலுக்கும் இடையில் தெபோராள் குடியிருந்தாள். யோசு $18^{25}$ நியா $4^{5}$ $19^{13}$. சிறையிருப்பிலிருந்த பென்யமீனர் மறுபடியும் இதில் குடியேறினார்கள். எஸ்றா $2^{26}$ நெகே $11^{33}$ ஏசா $10^{29}$. இதிலே ராகேலின் கல்லறையிருந்ததென்பது ஓர் பாரம்பரியம். 1 சாமு $10^{2}$ எரே

$31^{15}$. விலங்கிடப்பட்டிருந்த எரேமியா தீர்க்கதரிசி இவ்விடத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டான். எரே $40^{1}$.

4. எப்பிராயீம் கோத்திர நாட்டிலுள்ள ஒரு ஊர். சோப்பீம் என்னப்பட்ட ராமதாயீம் என்பது இதின் மறுபேர். 1 சாமு $1^{1}$ சாமுவேல் தீர்க்கதரிசி இதில் வாசம் செய்தான். 1 சாமு $1^{19}$ $2^{11}$ $7^{17}$ $8^{5}$ $15^{34}$ $16^{13}$ $19^{18}$ $20^{1}$ $25^{1}$ $28^{3}$. இஸ்ரவேல் ராஜாவாகிய பாஷா என்பவன் இதிலே ஒரு கோட்டை கட்டியிருந்ததாகத் தோன்றுகிறது. 1 இரா $15^{17}$.

5. கிலேயாத்திலுள்ள ராமோத்தின் மறுபேர். 2 இரா $8^{29}$. ராமோத் கீலேயாத் காண்க.

6. 'தெற்கான ராமோத்' அல்லது 'தெற்கான ராமாத்'. 1 சாமு $30^{27}$ யோசு $19^{8}$. தாவீது தான் சிக்லாக்கிலிருந்து எடுத்த கொள்ளைப்பொருளை இவ்விடத்திற்கு அனுப்பினான்.

ராமாதாயீம். **Ramathaim**. 1 சாமு $1^{1}$ ராமா (4) காண்க.

ராமாத். **Ramath**. ராமா காண்க.

ராமாத்-மீஸ்பே. **Ramath-Mizpeh**. [காவல் கோபுரத்தின் மேடை.] மிஸ்பா (4) காண்க.

ராமாத்-லேகி. **Ramath-Lehi**. [தாடையெலும்பின் மேடை.] சிம்சோன் பெலிஸ்தர்களை ஜெயித்த இடம். யூதா நாட்டிலிருக்கலாம். நியா $15^{17}$.

ராமியா. **Raamiah** நெகே $7^{7}$ = ரெலாயா. எஸ்று $2^{2}$.

ராமோத். **Ramoth**.

1. ராமோத் கீலேயாத் காண்க.

2. இசக்காரில் லேவியர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட ஊர். 1 நாளா $6^{73}$. = ரெமேத். யோசு $19^{21}$. = யர்மூத். யோசு $21^{29}$.

3. 'தெற்கான ராமோத்.' 1 சாமு $30^{27}$. ராமா (6) காண்க.

ராமோத்-கீலேயாத். **Ramath Gilead**. [கிலேயாத்திலுள்ள மேடைகள்.] உப்புக் கடலுக்கு வடகிழக்கே 30 மைல் தூரத்திலும், யோர்தான் நதிக்குக் கிழக்கே 15 மைல் தூரத்திலும் இருந்த ராமோத் கீலேயாத் அடைக்கலபட்டணங்களில் ஒன்று. உபா $4^{43}$. இது லேவியர்களுக்குக் கிடைத்தது. யோசு $21^{38}$.

ஆகாப் இவ்விடத்திலே சீரியர்களோடு யுத்தம் செய்தான். 1 இரா $22^{4}$ 2 நாளா $18^{2}$. ஆகாபின் மகனாகிய யோராம் அவர்களுடனே இதில் சண்டைசெய்தான். 2 இரா $8^{28}$. எலிசா அனுப்பிவைத்த தூதன் ஏகூவை இப்பட்டணத்தில் ராஜ அபிஷேகம் செய்வித்தான். 2 இரா $9^{4}$.

இங்கிருந்த மேடைகளின்மேல் பூர்வீக கானானியர்கள் தங்கள் தேவதைகளை வணங்கிவந்தார்கள்.

ராம். **Ram**. [உயரம்.]

1. தாவீதின் முன்னோர்களில் ஒருவன். ரூத் $4^{19}$. யெராமெயேலின் சகோதரன். 1 நாளா $2^{9}$. = ஆராம். மத் $1^{3}$ லூக் $3^{33}$. = அர்னி. *Arni*. லூக் $3^{33}$. (R. V.)

2. யெராமெயேலின் மகன். 1 நாளா $2^{25}$.

3. எலிகூவின் குடும்பத்தலைவன். யோபு $32^{2}$.

ராம்சேஸ். **Raamses**. ராமசேஸ் காண்க.

ராயன். **'Caesar'** 'ரோமர்களுடைய ராயன்' என்பதைக் குறிக்கிறது. மத் $22^{17}$. மாற் $12^{14}$ லூக் $2^{1}$ $3^{1}$ $20^{22}$ $23^{2}$ யோவா $19^{12}$ அப் $14^{22}$ $17^{7}$ $25^{8}$ $26^{32}$ $27^{24}$ $28^{19}$ பிலி $4^{22}$ அகுஸ்து, நேரோ, திபேரியு, ரோமாபுரி காண்க.

ராயா. **Reaiah**. [யேகோவா காண்கிறார்.]

1. காலேபின் சந்ததியான். 1 நாளா $4^{2}$. = ஆரோவே. 1 நாளா $2^{52}$.

2. ரூபன் கோத்திரத்தான். 1 நாளா $5^{5}$.

3. நெதனீமியன். எஸ்று $2^{47}$.

## ரி

ரிஸ்பாள். **Rizpah**. ஆயாவின் குமாரத்தி. சவுலின் மறுமனையாட்டிகளில் ஒருத்தி. அப்னேர் இவளைத் தனக்கு மறுமனையாட்டியாகச் சேர்த்துக்கொண்டான். சவுலின் மகனாகிய இஸ்போசேத் இவ்விஷயத்தை ஆட்சேபித்ததினிமித்தம், அப்னேர் கானான் தேசத்தின் வடபாகத்திலுள்ள கோத்திரங்களைத் தாவீதின் பக்கத்திற்குச் சம்மதிக்கச் செய்தான். 2 சாமு $3^{6}$.

சவுல் ராஜா கிபியோன் குடிகளைக் கொன்றுபோட்டதினிமித்தம், யேகோவா தேசத்தின்மேல் பஞ்சத்தைக் கட்டளையிட்டார் என்று தாவீது அறிந்து, யேகோவாவின் கோபத்தைச் சாந்திபண்ணும்படி சவுலின் வம்சத்தைச்சேர்ந்த ரிஸ்பாளின் புத்திரரில் இருவரையும், மீகாளின் புத்திரரில் மூவரையும் கிபியோனியரின் கையிலே ஒப்புக்கொடுத்தான் கிபியோனியர் இவர்களைக் கொன்றுபோடவே, ரிஸ்பாள் பஞ்சம் நீங்கி மழை பெய்யுமட்டும் கொன்றுபோடப்பட்டவர்களின் பிரேதங்களைப் பாதுகாத்தாள். 2 சாமு $21^{11}$.

ரிஷபம். **Oxen**. தேவாலயத்திலுள்ள கடல் தொட்டி 12 'ரிஷபங்களின்' மேல் நின்றது. 1 இரா $7^{25}$ 2 இரா $16^{17}$ 2 நாளா $4^{15}$.

ரித்சியா. **Rizia**. 1 நாளா $7^{39}$.

ரித்மா. **Rithmah**. இஸ்ரவேலர் பாளயமிறங்கின ரித்மா என்னும் ஸ்தலம் நமக்குத் தெரியாது. எண் $33^{18}$.

ரிபாயி. **Ribai**. 2 சாமு $23^{29}$.

ரிப்லா. **Riblah**.

1. தமஸ்குப்பட்டணத்திற்கு வடக்கே 50 மைல் தூரத்திலுள்ள இந்த நகரத்தில் பாபிலோனியர்கள் ஒரு பெரியகோட்டையைக் கட்டியிருந்தார்கள். அசீரியாவிலிருந்து சீரியாவுக்குப் போகும் பாதை இதின் ஊடே போனது. இதிலே நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவைத் தண்டனைக்கு ஒப்புக்கொடுத்தான். 2 இரா $25^{6}$ எரே $39^{5}$ $52^{9}$.

2. கலிலேயாக் கடலுக்கு வடகிழக்கிலுள்ள ஒரு கிராமம். இது இஸ்ரவேலர் கைப்பற்றின நாட்டின் எல்லைக்குள் இருந்தது. இதைப்பற்றி வேறொன்றும் தெரியாது. எண் $34^{11}$.

ரிம்மோன். **Rimmon**.

1. ரிம்மோன் தெய்வன் புசல்காற்றடிக்கவும் மற்றக் காற்றுகள் வீசவும் செய்த ஒரு தெய்வன் என்றும், தங்கள் தேசத்தின் மேல் ரிம்மோன் இரக்கம் வைக்கும்போது மழை வருஷிக்கவும், ரிம்மோன் கோபமாயிருக்கும்போது தன் விரோதிகளை அழிக்கும்படி இடி இடிக்கவும் செய்வான் என்றும் நினைத்து, பாபிலோனியர்கள் ரிம்மோனை வணங்கிவந்தார்கள். தமஸ்குப்பட்டணத்திலே சீரியர்கள் ரிம்மோனை வணங்கி வந்ததாகத் தோன்றுகிறது. இந்தத் தெய்வனும் சீரியர்கள் வணங்கிய 'ஆதாத் ரிம்மோன்' அல்லது 'ஆதாத்' என்னும் தேவதையும் ஒன்றுதான் என்று தோன்றுகிறது. ஆதாத் காண்க. 2 இரா $5^{18}$.

2. ஒரு பென்யமீனன். 2 சாமு $4^{2}$.

3. பென்யமீன் நாட்டில் பெத்தேலுக்குக் கிழக்கே மூன்றுமைல் தூரத்திலிருந்த ஒரு பாறை. நியா $20^{45}$ $21^{13}$.

4. தென் யூதாவிலுள்ள ஒரு கிராமம் யோசு $15^{32}$. இது சிமியோன் கோத்திரத்திற்குக் கிடைத்தது. யோசு $19^{7}$ சக $14^{10}$.

5. செபுலோன் கோத்திரத்தாரின் பட்டணங்களில் ஒன்று. யோசு $19^{13}$ 1 நாளா $6^{77}$.

ரிம்மோன்-பேரேஸ். **Rimmon-perez**. இஸ்ரவேலர் பாளயம் இறங்கின இந்த இடம் தெரியாது. எண் $33^{19}$.

ரின்னா. **Rinnah**. 1 நாளா $4^{20}$.

## ரீ

ரீசா. **Rissah**. இதில் இஸ்ரவேலர் பாளயம் இறங்கினார்கள். இதிருந்த இடம் தெரியாது. எண் $33^{21}$.

ரீப்பாத்து. **Riphath**. ஆதி $10^{3}$ 1 நாளா $1^{6}$.

## ரு

ருகாமா. **Ruhamah**. ஓசி $2^{1}$. 'ருகாமா' என்பதற்கு 'இரக்கம் பெற்றவள்' என்று அர்த்தம். ஓசியா தீர்க்கதரிசி இஸ்ரவேலர்களுக்கு யேகோவாவின் இரக்கம் திரும்பக் கிடைத்தது என்பதைக் காட்டும்படி தன் இரண்டாம் குமாரத்திக்கு 'ருகாமா' என்று பேரிடச் சொன்னான். ஓசி $2^{1}$. இஸ்ரவேலருக்கு யேகோவாவின் தயவு இல்லாததைக் குறிக்கும்படி அந்தக் குமாரத்திக்கு 'இரக்கம் பெறாதவள்' என்று அர்த்தங்கொள்ளும் 'லோ-ருகாமா' என்னும் பேர் முன்னே இருந்தது. ஓசி $1^{6}$.

ருசி. **Taste**.

1. சுவை. யாத் $16^{31}$ 1 சாமு $14^{24}$ 2 சாமு $19^{35}$ யோபு $6^{6}$ $12^{11}$ $34^{3}$ மத் $27^{34}$.

2. அறிவு, உணர்வு, அநுபவம். சங் $34^{8}$ மத் $16^{28}$ யோவா $8^{52}$ கொலோ $2^{21}$ எபி $2^{9}$ $6^{4}$ 1 பேது $2^{1}$.

## ரூ

ரூத்தின் சரித்திரம். **The Book of Ruth**.

1. ரூத் என்பவள்.

'ரூத்' என்ற பதத்திற்கு அர்த்தம் திட்பமாய்த் தெரியாது. பெரும்பாலும் 'சிநேகம்' அல்லது 'பட்சம்' என்று சொல்லலாம். இவள் ஒரு மோவாபிய ஸ்திரீ. யூதாவிலுள்ள பெத்லகேமிலிருந்து வந்த ஒருவன் இவளை விவாகம் செய்திருந்தான். அவன் மோவாப் தேசத்தில் பஞ்சமுண்டான காலத்தில் இறந்துபோகவே, இவள் தன் மாமியுடனே யூதா நாட்டிற்குத் திரும்ப வந்தாள். அப்பேர்து பெத்லகேமிலிருந்த போவாஸ் இவளை விவாகம் செய்துகொண்டான். இவளுடைய குமாரனாகிய ஓபேத் தாவீதின் பாட்டன். இதினிமித்தம் சுபரி. மத்தேயு எழுதின இயேசுவின் வம்ச அட்டவணையில் ரூத்தின் நாமம் சொல்லப்பட்டிருக்கிறது. மத் $1^{5}$.

2. ஆகமம்.

ரூத் என்று பேர்கொண்ட ஸ்திரீக்கு மோவாப் தேசத்திலும் யூதாநாட்டிலும் நேரிட்ட சம்பவங்களை ரூத்தின் ஆகமம் கூறுகிறது. இந்த ஆகமத்தில் இரண்டு விஷயங்கள் விசேஷமாய்க் கவனிக்கவேண்டும். (1) யூதா

கோத்திரத்தானாகிய போவாஸ் மோவாபிய ஸ்திரீயாகிய ரூத்தை மணம் புரிந்ததும், தாவீதின் வம்ச அட்டவணையை எழுதினவர்கள் தங்கள் அரசனாகிய தாவீதின் முன்னோர்களோடு இவளுடைய பெயரையும் சேர்த்திருக்கிற விஷயமும், அக்காலத்திய எபிரெயர்கள் தங்கள் ஜாதியில் அந்நிய குலத்தாரைச் சேர்க்க ஆட்சேபனை செய்யவில்லையென்பதற்கு அத்தாட்சியாயிருக்கிறது. (ii) பூர்வீக ஆசார சடங்குகளை இந்த ஆகமத்தில் காணலாம். ரூத் $2^{20}$ $4^{1-12}$.

3. காலம்.

தாவீதின் காலத்துக்கு முன்னுள்ள சம்பவங்கள் இந்த ஆகமத்தில் சொல்லப்பட்டிருந்தபோதிலும், இது அக்காலத்துக்குப்பின் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. (ரூத் $4^{7}$ காண்க). இதின் பாஷைநடையைக் கவனித்தறிந்த வேதசாஸ்திரிகளில் பலர், இச்சரித்திரம் சிறையிருப்புக் காலமட்டும் ஜனங்களுக்கு வாய்மொழியாகதெரிந்திருந்ததென்றும், சிறையிருப்புக்குப் பின்புதான் முதலாவதாக எழுதப்பட்டதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். எபிரெய வேதாகமத்தின் மூன்றாம் பிரிவாகிய 'பரிசுத்த ஆகமங்கள்' என்ற பாகத்தில் இது சேர்க்கப்பட்டிருப்பதால், ஏறக்குறைய கி—மு. 400—ம் வருஷத்தில் எழுதப்பட்டிருக்கலாம். இதின் ஆக்கியோன் இன்னான் என்று தெரியாது.

ரூபம். **Form, Figure, Likeness.** ஆதி $1^{26}$ உபா $4^{12-15}$ 1 சாமு $28^{14}$ யோபு $4^{16}$ ஏசா $52^{14}$ $53^{2}$ தானி $2^{31}$ பிலி $2^{6}$. 'மறுரூபம்.' மாற் $16^{12}$. 'மனுஷரூபம்.' ஏசா $44^{13}$ அப் $14^{11}$. சாயல் காண்க.

ரூபவதி. **Fairest.** உன்.பா $1^{8}$ $5^{9}$ $6^{1}$.

ரூபன். **Reuben.** [மகனைப் பார்.]

1. யாக்கோபின் மனைவியாகிய லேயாள் பெற்ற மூத்தகுமாரன். ஆதி $29^{32}$ $35^{23}$ $46^{8}$. இவன் தன் தகப்பனுடைய மறுமனையாட்டியாகிய பில்காளிடத்தில் பிரவேசித்ததினிமித்தம், யாக்கோபின் சாபத்தைப் பெற்று, தன் சேஷ்ட புத்திரபாகத்தை இழந்தான். ஆதி $35^{22}$. அந்தச் சிலாக்கியம் யூதாவுக்கும் யோசேப்புக்கும் கிடைத்தது. ஆதி $48^{3}$. யாக்கோபு தன் புத்திரருக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களிலும் மோசேயின் ஆசீர்வாதத்திலும் ரூபன் செய்த பாதகத்தினிமித்தம் இவனுக்குண்டான கேடு சொல்லப்பட்டிருக்கிறது. ஆதி $49^{3}$ உபா $33^{6}$. இவன் யோசேப்பைத் தப்புவிக்கப் பிரயாசப்பட்டவிஷயம் இவனுடைய இரக்க சுபாவத்தை வெளியிடுகிறது. ஆதி $37^{18}$ $42^{22}$. பென்யமீனைத் திரும்ப யாக்கோபினிடம் கொண்டுவந்து சேர்க்க இவன் உத்திரவாதியாயிருந்தான். ஆதி $42^{37}$.

2. ரூபன் கோத்திரம். இதின் குடிமதிப்பு. எண் $1^{21}$ $26^{2}$. இது சிமியோனோடும் காத்தோடும் ஆசரிப்புக் கூடாரத்தின் தென்புறத்தில் பாளயமிறங்கிற்று. எண் $2^{10}$. மோசேக்கு விரோதமாய்க் கலகம்செய்த கோராகுவோடு சேர்ந்த தாத்தான் முதலியவர்கள் ரூபன் கோத்திரத்தாரே. எண் 16 அதி. மேய்ப்பராயிருந்த ரூபன் கோத்திரத்தார்கள் யோர்தான் நதியைத் தாண்டி அதற்கு மேற்கிலுள்ள நாடுகளை ஜெயிக்கும்படி மற்றக் கோத்திரங்களுக்கு உதவிசெய்தபிறகு, இவர்கள் யோர்தான் நதிக்கும் உப்புக்கடலுக்கும் கிழக்கேயுள்ள தேசங்களைப் பெற்றார்கள். யோசு $22^{7}$. இக்கோத்திரத்தார் தெபோராளுக்கு உதவிசெய்யவில்லை. நியா $5^{16}$. சாலொமோன் காலத்திற்குப் பின் இவர்கள் இஸ்ரவேல் ராஜ்யத்தில் சேர்ந்துகொண்டார்கள். சீரியர்கள் இவர்களுக்கு இடுக்கண் செய்தார்கள். 2 இரா $10^{32}$.

அசீரியர்கள் இவர்களை ஜெயித்து, கி—மு. 734—ம் ஆண்டில், தங்கள் தேசத்துக்கு இவர்களை அடிமைகளாக கொண்டுபோனார்கள். தென்நாட்டில் வசித்த மோவாபியர்கள் இவர்களுடைய ஊர்களில் சிலவற்றைப் பிடித்திருந்ததாகத் தோன்றுகிறது. ஏசா 15, 16 அதி. எரே 48 அதி.

ரூபு, ரூப்பு. **Rufus.**

1. சிரேனியனாகிய சீமோனின் மகன். மாற் $15^{21}$.

2. ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவன். ரோம $16^{13}$.

ரூமா. **Rumah.** யோயாக்கீமின் பாட்டனாகிய பெதாயா வசித்த ஊர். இதிருந்த இடம் இன்னதென்று நமக்குத் தெரியாது. 2 இரா $23^{36}$.

## ரெ

ரெகபியா. **Rehabiah.** 1 நாளா $23^{17}$ $24^{21}$.

ரெகுவேல். **Reuel.** [கடவுள் சிநேகிதராயிருக்கிறார்.]

1. ஏசாவின் மகன். ஆதி $36^{4}$.

2. =எத்திரோ. யாத் $2^{18}$ எண் $10^{29}$.

3. காத்கோத்திரத்தின் தலைவர்களில் ஒருவன். =தேகுவேல். எண் $1^{14}$ $2^{14}$.

4. ஒரு பென்யமீனன்? 1 நாளா $9^{8}$.

ரெகூ. **Reu.** பேலேக்கின் குமாரன். ஆதி $11^{19}$ லூக் $3^{35}$.

ரெகூம், ரெகூம். **Rehum.** [இரக்கம்]

1. சிறையிருப்பிலிருந்து வந்தவர்களில் ஒரு தலைவன். எஸ்ரு $2^{2}$.
2. அர்தசஷ்டா அரமனையில் 'ஆலோசனைத் தலைவனுகிய ரேகூம்.' எஸ்ரு $4^{8}$.
3. மதிலைப் பழுதுபார்த்த லேவியன். நெகே $3^{17}$.
4. உடன்படிக்கைக்கு முத்திரை போட்டவன். நெகே $10^{25}$.
5. ஓர் ஆசாரியன். நெகே $12^{3}$.

ரெகெம்—மெலேகு. **Regem-Melech**. சக $7^{3}$.

ரெகொபெயாம். **Rehoboam**. சாலொமோனின் மகன். பதினேழு வருஷக்காலம் (கி-மு. 937–920) யூதா ராஜ்யத்தில் அரசாட்சிசெய்தான். சாலொமோன் ராஜா இறந்தசமயத்தில் யெகொபெயாம் கலகம்செய்து இஸ்ரவேல் ராஜ்யத்தை ஸ்தாபித்தபடியால் இவன் யூதா, பென்யமீன் கோத்திரங்களை மட்டும் ஆண்டான். 1 இரா $12^{21}$. இவன் இருந்த காலமெல்லாம் இஸ்ரவேலுக்கும் யூதாவுக்கும் யுத்தம் இருந்தது. ஆனுல் இதைப்பற்றிய விபரம் சொல்லப்படவில்லை. கி-மு. 932-ம் ஆண்டில் எகிப்திய ராஜாவாகிய சீஷாக் எருசலேமை முற்றுகைபோட்டு தேவாலயத்தின் பொக்கிஷத்தைக் கொள்ளைப்பொருளாகக் கொண்டுபோனுன். 1 இரா $14^{26}$.

ரெகொபோத். **Rehoboth**.

1. தங்களுக்கும் கேராரின் ராஜாவினுடைய வேலையாட்களுக்கும் சண்டையான பிறகு ஈசாக்கின் வேலையாட்கள் வெட்டின மூன்ரும் கிணறு. ஆதி $26^{22}$.
2. ஏதோம் தேசத்திலுள்ள ஓர் ஊர். ஆதி $36^{37}$.
3. அசீரிய ராஜாவாகிய அசூர் அல்லது நிம்ரோத் கட்டின நாலு பட்டணங்களில் ஒன்று. நினிவே பட்டணத்தில் ஒரு பங்கு. ஆதி $10^{11}$.

ரெகோப், ரேகோப். **Rehob**.

1. ஆசேர் கோத்திர நாட்டில், லேவியருக்கு ஏற்படுத்தின ஓர் ஊர். எண் $13^{21}$ யோசு $19^{28}$ நியா $1^{31}$ 2 சாமு $10^{8}$.
2. ஆதாதேசரின் தகப்பன். சாமு $8^{3}$.
3. உடன்படிக்கைக்கு முத்திரைபோட்டவன். நெகே $10^{11}$.

ரேக்கேம். **Raham**. 1 நாளா $2^{44}$.

ரேக்கேம்,ரேகேம், ரேக்கேம். **Rekem**. ]சிநேகம்.]

1. மீதியானியரின் ராஜாக்களில் ஒருவன். எண் $31^{8}$ யோசு $13^{21}$.
2. காலேபின் சந்ததியான். 1 நாளா $2^{43}$.
3. மாகீரின் சந்ததியான். 1 நாளா $7^{16}$.
4. பென்யமீன் நாட்டிலுள்ள ஓர் ஊர். யோசு $18^{27}$.

ரேசேன். **Resen**. அசீரிய ராஜாவாகிய அசூர் அல்லது நிம்ரோத் கட்டின பட்டணங்களில் ஒன்று. இது நினிவே பட்டணத்தில் ஒரு பாகமாயிருந்தது. ஆதி $10^{12}$.

ரேபாயா. **Rephaiah**. ரப்பாயா காண்க.

ரெபெக்காள். **Rebekah**. ஆபிரகாமின் சகோதாரனுகிய நாகோரின் பேத்தி. ஆதி $22^{23}$. லாபானின் சகோதரி. ஈசாக்கு இவளை விவாகம் செய்த விபரம் ஆதி 24-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. துவக்கத்தில் இவளுக்குப் புத்திரபாக்கியம் இல்லாதிருந்தும், ஈசாக்கும் இவளும் செய்த வேண்டுதலின் பலனுக கடவுள் இவளுக்கு இரட்டைப்பிள்ளைகளாகிய யாக்கோபையும் ஏசாவையும் ஈந்தருளினுர். ஆதி $25^{21}$. ஈசாக்கு கேராரிலே சஞ்சரித்தபோது, அந்த ஜனங்கள் ரெபெக்காளை இச்சித்துத் தன்னைக் கொன்றுபோடுவார்கள் என்று பயந்து இவள் 'என் சகோதரி' என்று சொன்னுன். அந்த ஊரின் ராஜா உண்மையை அறிந்து ஈசாக்கை எச்சரித்து, அவனைப் பாதுகாக்கும்படி ஜனங்களுக்குக் கட்டளையிட்டு, அவனேடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டான். ஆதி 26 அதி. இவள் ஏசாவின் சேஷ்டபுத்திரபாகத்தை யாக்கோபுக்கு மாற்றும்படி தந்திர உபாயங்கள் செய்து, ஈசாக்கை ஏமாற்ற யாக்கோபுக்கு உதவிசெய்தாள். ஆதி 27 அதி.

பின்பு அவனை லாபானிடம் அனுப்பிவைத்து, அவன் அவ்விடமிருந்து திரும்பிவருமுன் மரித்துப்போனுள். ஆதி $49^{31}$. இவள் புத்திக்கூர்மையும், சுறுசுறுப்பும், தான் எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிக்கும் குணமுமுள்ளவள். தான் நோக்கினதை நிறைவேற்றும்படி தந்திர உபாயங்கள் செய்த விஷயம் இவளிடம் காணப்படுகிற பெருங்குறைவே.

ரேப்பாயா. **Rephaiah**. ரப்பாயா காண்க.

ரேப்பாயீம். **Rephaim**.

1. எபிரெயர்கள் கானுன் தேசத்துக்கு வருமுன் அத்தேசத்தில் வசித்த பூர்வீக ஜனம். ஆதி $14^{5}$ $15^{20}$.

பாசானின் ராஜாவாகிய ஒகு இந்த ஜனத்தைச் சேர்ந்தவன். உபா $3^{11}$. இவர்கள் கலிலேயாக் கடலுக்குக் கிழக்கேயுள்ள மலைநாடுகளில் வசித்தார்கள். உபா $3^{13}$. எருசலேம் பட்டணத்திற்குத் தென்மேற்கே ரெப்பாயீம் என்ற ஒரு பள்ளத்தாக்கு உண்டு. அது

இன்னும் பள்ளத்தாக்கைச் சேர்ந்தது. 2 சாமு $5^{18}$ $23^{13}$ ஏசா $17^{5}$. எபிரெயர்களுடைய பாரம்பரியத்தின்படி இவர்கள் இராட்சதர்களாயிருந்தார்கள். இராட்சதர் காண்க.

2. எபிரெய பாஷையில் 'ஷெயோல்' என்னும் பாதாளத்தில் வாசம் செய்கிற மரித்தோர்களின் ஆவிகளுக்கு 'ரெப்பாயீம்' என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. யோபு $26^{5}$ சங் $88^{10}$ நீதி $2^{18}$ $5^{5}$ $7^{27}$ $9^{18}$ $21^{16}$ ஏசா $14^{9}$ $26^{14}$.

ரெப்பாயேல். **Rephael.** 1 நாளா $26^{7}$.

ரெமலியா. **Remaliah.** இஸ்ரவேல் ராஜாவாகிய பெக்காவின் தகப்பன். 2 இரா $15^{25}$ ஏசா $7^{1}$ $8^{6}$.

ரெமேத். **Remeth.** = ராமோத் (1) யோசு $19^{21}$ 1 நாளா $6^{73}$.

ரெம்பான். **Remphan.** அப் $7^{43}$. நட்சத்திரம் காண்க.

ரெலாயா. **Reelaiah.** = ராமியா.

ரெவிதீம். **Rephidim.** இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். இதில் மோசே கல்மலையை அடித்து ஜனங்களுக்குத் தண்ணீர் கொடுத்தான். அவர்கள் இதில் அமலேக்கியரை ஜெயித்தார்கள். ஓரேப் மலைநாட்டின் வடபாகத்திலிருந்தது என்று தோன்றுகிறது. யாத் $17^{1-8}$ $19^{2}$.

## ரே

ரேகா. **Recah.** 1 நாளா $4^{12}$.

ரேகாப், ரேகாபியர். **Rechab, Rechabites.**

1. கலகம் செய்துவந்த ஏகூவுக்கு ரேகாபின் குமாரனாகிய யோனதாப் உதவிசெய்தான். இதினிமித்தம் இவன் விக்கிரக ஆராதனைக்கு இடங்கொடுத்த ஆகாபையும், அவனைச் சார்ந்தவர்களையும், அம்மார்க்கத்தையும் முற்றிலும் வெறுத்ததாகப் பார்க்கிறோம். 2 இரா $10^{15}$. இவனுடைய சந்ததியார் மகா பக்தியுள்ளவர்களாயிருந்தார்கள். எரே 35 அதி. இவர்கள் திராட்சரசம் குடியாமலும், வீடுகளைக் கட்டாமலும், தானியத்தை விதைக்காமலும், திராட்சத்தோட்டங்களை உண்டுபண்ணாமலும், நிலங்களைச் சொந்தமாக வாங்காமலும், எப்போதும் கூடாரங்களிலே ஜீவித்துவந்தார்கள். இவ்வண்ணமாக இவர்கள் பட்டணங்களில் வாசம் செய்யாமல் அலைந்து திரிகிறவர்களாயிருந்தார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி இவர்களை ஜனங்களுக்கு முன்பாகத் திராட்சரசம் குடிக்கச் சொன்னபோது இவர்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை. இதைக்கண்ட அவன் இவர்களுடைய பக்தியை மெச்சி, பாவம்செய்த யூதர்களுக்கு இவர்களை நல் முன்மாதிரியாக வைத்தான். சிறையிருப்பிலிருந்து வந்தவர்களில் சிலர் ரேகாபியர். நெகே $3^{24}$.

2. இஸ்போசேத்தைக் கொன்றவர்களில் ஒருவன். 2 சாமு $4^{2}$.

ரேகியு. **Rhegium.** இத்தாலியா தேசத்தின் தென்மேற்கிலுள்ள ஒரு துறைமுகம். இதற்குக் கிட்டிருந்த கடலில் பயங்கரமான நீர்ச்சுழி ஒன்று இருந்ததினால், கப்பல் சேதமின்றி அந்த நீர்ச்சுழியிருக்கும் இடத்தைத் தாங்கள் தாண்டிப்போகும்படி நல்ல காற்று வீசும்வரைக்கும் கப்பற்காரர் ரேகியுவிலே தங்குவார்கள். இதின்படி பரி. பவுல் ஏறின கப்பல் இதில் ஒருநாள் நின்றது. அப் $28^{13}$.

ரேகூம். **Rehum.** ரெகூம் காண்க.

ரேகேம். **Regem.** 1 நாளா $2^{47}$.

ரேகேம். **Rekem.** ரெக்கேம் காண்க.

ரேகோப். **Rehob.** ரெகோப் காண்க.

ரேக்கேம். **Rekem.** ரெக்கேம் காண்க.

ரேசா. **Rhesa.** லூக் $3^{27}$.

ரேசேப். **Reseph.** 1 நாளா $7^{25}$.

ரேசோன். **Rezon.** சோபாவின் ராஜாவாகிய ஆதாதேசரின் சேனாபதிகளில் ஒருவன். இவன் ராஜதுரோகம் செய்து, சோபாவுக்கு வடக்கேயுள்ள தமஸ்குவைப் பிடித்து ஏறக்குறைய கி-மு. 950-ம் வருஷத்திலே ஒரு ராஜ்யத்தை அதில் ஸ்தாபித்தான். சாலொமோன் காலத்தில் இவனும், அதற்குப் பிறகு இவனுடைய சந்ததியாரும் இஸ்ரவேலுக்கு எப்போதும் விரோதிகளாயிருந்து, அதோடே அடிக்கடி யுத்தம் செய்தார்கள். 1 இரா $11^{23}$.

ரேஷ். **Resh.** எபிரெய பாஷையின் எழுத்தட்டவணையில் 20–ம் எழுத்து. சங் $119^{153-160}$-ல் ஒவ்வொரு வசனத்திலுள்ள முதல் பதத்தின் முதல் எழுத்து ரேஷ் என்பது.

ரேத்சீன். **Rezin.**

1. ஏறக்குறைய 735-ம் வருஷத்தில் தமஸ்கு பட்டணத்தில் ராஜ்யபாரம் செய்த கடைசி அரசனாகிய இவன் சிம்மாசனம் ஏறினபோது தமஸ்கு ராஜ்யமும் இஸ்ரவேல் ராஜ்யமும் அசீரிய சக்கரவர்த்திக்குக் கீழ்ப்பட்டிருந்தன. இஸ்ரவேல் ராஜாவாகிய பெக்காவும் தமஸ்குவின் ராஜாவாகிய ரேத்சீனும் அசீரிய ராஜாவுக்கு விரோதமாய்க் கலகம் செய்து அவனுடைய ஆளுகையை நீக்கும்படி, அவனுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண ஆரம்பித்து, யூதாவின் ராஜாவாகிய ஆகா

சைத் தங்களுக்கு உதவிபுரியும்படி வேண்டிக்கொண்டார்கள். ஆகாஸ் அதற்குச் சம்மதிக்காதபடியால் அவர்கள் அவனோடு சண்டைசெய்து எருசலேமை முற்றுகை போட்டு அதிலிருந்தவர்களைப் பயமுறுத்தினார்கள். ஏசா 7–9 அதி. அப்போது ஆகாஸ் அசீரிய ராஜாவாகிய திகிலாத்–பிலேசருக்குக் கப்பங்கட்டி அவனுடைய உதவியைத் தேடினான். 2 இரா 16[8]. அசீரியர்கள் எருசலேமுக்கு உதவியாக வந்து தமஸ்குவை முற்றுகை போட்டார்கள். அப்பொழுது ரேத்சீன் கொலையுண்டான். 2 இரா 16[9].

2. 'ரேத்சீனின் புத்திரர்கள்' நெதனீமியர்களில் ஒரு குடும்பமாயிருந்தார்கள். இவர்களுக்கும் ரேத்சீன் ராஜாவுக்கும் சம்பந்தம் கிடையாது. எஸ்றா 2[48] நெகே 7[50].

ரேத்சேப் **Rezeph** தமஸ்குவுக்கு வடமேற்கிலுள்ள ஒரு சீரிய பட்டணம். சனகெரிப் இதைப் பிடித்தான். 2 இரா 19[12] ஏசா 37[12].

ரேபா. **Reba**. எண் 31[8].

ரேப்பாக். **Rephah**. 1 நாளா 7[25].

ரேயி. **Rei**. [யேகோவா சிநேகிதராய் இருக்கிறார்] அதோனியா ராஜதுரோகம் செய்யும்போது சாலொமோனுக்கு உதவி செய்தவர்களில் ஒரு உத்தியோகஸ்தன். 1 இரா 1[8].

ரேயுமாள். **Reumah**. நாகோரின் மறுமனையாட்டி. ஆதி 22[24].

## ரொ

ரொட்டி. **Bread**. அப்பம், ஆகாரம் காண்க.

ரொமந்தியேசர். **Romamti-Ezer**, [உத்தம உதவி.] 1 நாளா 25[4, 31].

## ரோ

ரோகம். **Disease** லேவி 13[3]. வியாதி காண்க.

ரோகா. **Rogah**. 1 நாளா 7[34].

ரோகிலிம். **Rogelim**. கீலேயாத்தில் பர்சிலா பிறந்த ஓர் ஊர். 2 சாமு 17[28] 19[31].

ரோஜா. **Rose**. உன். பா 2[1] ஏசா 35[1]. ரோஜா எல்லாப் புஷ்பங்களையும்விட மேலான புஷ்பம். வாசனையிலும், வர்ண அலங்காரத்திலும், வடிவிலும் இதற்கு நிகரான மலரில்லை. இதினிமித்தம் இதற்கு 'புஷ்பங்களின் ராஜாத்தி' என்னும் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. பாரசியா தேசத்தில் இது ஏராளம். தமிழ் வேதாகமத்தில் 'ரோஜா' என்று மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய பதம் இதைக் குறிக்குமோ வேறொரு புஷ்பத்தைக் குறிக்குமோ என்பதைப்பற்றிச் சந்தேகம்.

ரோஷ். **Rosh**. பென்யமீனின் மகன். ஆதி 46[21].

ரோதானீம். **Rhodians**. தோதானீம் காண்க.

ரோதுதீவு. **Rhodes** சின்ன ஆசியாவின் தென்மேற்கு அந்தத்திற்கு அருகே, மத்தியதரைக் கடலில் 43–மைல் நீளமும் 20 மைல் அகலமுமுள்ள தீவு. இதில் ரோதுப் பட்டணம் அக்காலத்து விசேஷமான துறைமுகங்களில் ஒன்று. ஐரோப்பாவிலிருந்து சீரியாவுக்குப் போகும் கப்பல்கள் இத்துறைமுகத்தில் தங்குவது வழக்கம். இதின் துறைமுக வாசலில் கி-மு. 280–224 மட்டும், 105 அடி உயரமுள்ள சூரிய தேவனுடைய சிலை ஒன்று தீபஸ்தம்பமாக நின்றது. அப் 21[1].

ரோதை. **Rhoda**. யோவான் மாற்கின் தாயாகிய மரியாளின் வீட்டிலுள்ள வேலைக்காரி. அப் 12[13].

ரோமம். **Hair**. ஆதி 27[11]. கூந்தல், மயிர் காண்க.

ரோமருக்கு எழுதின நிருபம். **The Epistle to the Romans**. பவுல் அப்போஸ்தலனுடைய நிருபங்கள் உயிரற்ற வெறும் வார்த்தைகளாயிராமல், கை கால்களமைந்த ஜீவ வார்த்தைகளாயிருக்கின்றன வென்றும், புதிய ஏற்பாடு முழுவதிலும் சிரேஷ்ட ஆகமம் ரோமர் நிருபமே என்றும், கலப்பற்ற சுத்த சுவிசேஷம் இதிலடங்கியிருக்கிறது என்றும் லூத்தர் ஐயர் சொல்லியிருக்கிறார்.

1. புறச்சாட்சியும் அகச்சாட்சியும். கொரிந்து, கலாத்தியா, ரோமாபுரி என்னும் இடங்களிலுள்ள சபைகளுக்குப் பவுல் எழுதின நான்கு நிருபங்களில் இதொன்று. பவுல் எழுதின நிருபங்களை ஒன்றாய்த் திரட்டின காலமுதல் இந்நிருபம் பவுலால் எழுதப்பட்ட நிருபமாக திருச்சபை ஒத்துக்கொள்ளுகிறது. புதிய ஏற்பாட்டிலுள்ள பிந்தின ஆகமங்களை எழுதினவர்களும் பூர்வகிறிஸ்தவ கிரந்த கர்த்தாக்களுமான வர்கள் புதிய ஏற்பாட்டின் மற்ற ஆகமங்களிலுள்ள வசனங்களை எடுத்து உபயோகிப்பதைப்பார்க்கிலும் இந்த நிருபத்திலுள்ள வசனங்களைச் சாதாரணமாய் உபயோகிக்கிறார்கள். கி–பி. 91–100 வரை ரோமை அத்தியட்சராகிய கிலமெந்து, கி–பி. 78–107 வரை அந்தியோகியாவுக்குப் பிரதம குருவா

கிய இக்னேஷியஸ், கி-பி. 166-ம் வருஷத்தில் மரணமடைந்த சிமர்னாவின் அத்தியட்சராகிய போலிக்கார்ப், கி-பி. 150-வருஷத்தில் இரத்தசாட்சியாய் மாண்ட ஜஸ்டின் மார்ட்டர் முதலான பூர்வ சபைத்தலைவர் இதிலடங்கிய வார்த்தைகளை ஒப்பனையாக எடுத்து உபயோகிப்பதினால் இந்த நிருபத்தின் பூர்வீகத்துக்கும் மேன்மைக்கும் ஏற்ற சாட்சிகளாயிருக்கிறார்கள். புற அத்தாட்சிகள் யாவற்றிலும் இந்நிருபத்திலுள்ள அகச்சாட்சி நமது புத்தியில் பதியத்தக்கதாகவும் மிக அருமையானதாகவு மிருக்கிறது. இது பவுலின் ஜீவிய சரித்திரத்துக்கும் பல வித உபந்நியாசங்களில் அவன் போதிக்கிற கொள்கைக்கும் ஒத்ததாயிருக்கிறது. நாம் இதை வாசிக்கும்போது இலேசாய்க் கிரகிக்கக்கூடாத பல அபிப்பிராயங்களுண்டு. ஆகிலும் இந்த நிருபத்தை அறிந்துகொள்வதின் கஷ்டம் ஆக்கியோனுடைய பாண்டித்தியத்தின் குறைவினாலாகிலும் அஜாக்கிரதையாய் எழுதுவதினாலு முண்டாகாமல் தான் எழுதப்பிரயாசப்படுகிற பொருளின் ஆழ்ந்த கருத்தும் உயர்ந்த மேன்மையுமே இதற்குக் காரணம். கடவுளுடைய கிருபையாலும் வரப்பிரசாதத்தினாலும் இவன் பரம காரியங்களைக் கண்டிருக்கிறான். ஆனாலும் மனுஷர் எண்ணங்களும் வார்த்தைகளும் அதின் மகிமையை விளக்காது.

2. ரோமை சபையார் என்ன ஜாதிக்காரர்? பல ஜாதியார் ரோமை சபையில் சேர்ந்திருந்தார்கள் என்பதை நுட்பமாய் இந்நிருபத்தை வாசிக்கிறதினால் கற்றறியலாம். 16-ம் அதிகாரத்தைக் கவனமாய் வாசித்துப் பார்க்கையில் பவுல் தனக்கு அறிமுகமானவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான். அவர்களுடைய பெயர்களை நாம் கவனித்தால் சிலர் யூதரும், சிலர் லத்தீன் பாஷை பேசின புறஜாதியாரும், சிலர் கிரேக்க பாஷை பேசின புறஜாதியாரும் இருந்தார்கள் என்று பார்க்கிறோம். இந்த நிருபத்தை வாங்கி வாசித்தவர்களில் அநேகர் இயேசுவானவரை விசுவாசித்த யூதர்களாய் இருந்தார்களென்பதற்கு அடியில் சொன்ன திருஷ்டாந்தங்கள் உண்டு.

(a) யூதருடைய நியாயப்பிரமாணத்தின் பலனும், கடவுள் இஸ்ரவேலரைத் தெரிந்துகொள்ளுதலும், மனுஷன் நீதிமானாக்கப்படுவதும் இந்நிருபத்தில் அடங்கிய முக்கியபொருள்கள். இந்த விஷயங்களைப் பவுல் பழைய ஏற்பாட்டோடு சம்பந்தப்படுத்தி இவைகளின் மெய்யான உட்கருத்தை வெளிப்படுத்துகிறான். உதாரணமாக, ஆபிரகாமுங்கூடக் கிரியைகளினால் அல்ல, பக்தியினாலே நீதிமானாக நிர்ணயிக்கப்பட்டான் என்பதை ரூபிக்கிறான். ஐந்தாம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறபடி ஆதாமின் பாவம் எவ்வளவு தூரம் எட்டி அதின் நாசக்கிரியையை நடப்பிக்கிறதோ அவ்வளவுக்கு அதிகமான தூரம் இயேசு மீட்பருடைய நீதிக்கிரியையானது சென்று ஜீவனாகிய பலனைத் தருகிறதாயிருக்கிறது.

(b) சில வசனங்களில் பவுல் யூதரை நோக்கி 'நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம்' என்று சொல்வதினால், தான் யூதனாயிருக்கிறதுபோலத் தன் நிருபத்தை வாசிக்கிற அவர்களும் யூதர்களாயிருக்கிறார்கள் என்று காட்டுவதாகத் தோன்றும் $4^{1}$. இதுவரைக்கும் பிரமாணங்களை அநுசரித்து வந்தவர்கள் யூதர்கள் ஆனாலும் கிறிஸ்துவின் மூலமாய் அப்பிரமாணங்களினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கிறான். $7^{1-6}$.

$2^{16-29}$-ல் பவுல் தான் ஒரு யூதனோடு சம்பாஷணை செய்வதுபோல் எழுதுகின்றான். பவுல், யூதருக்கு அநேக சிலாக்கியம் உண்டென்பதை ஒப்புக்கொள்ளுகிறான். $3^{2,29}$. சபையில் அநேகம்பேர் யூதராயிராவிட்டால் அப்படி எழுதியிருக்கமாட்டான் என்று நினைக்கத்தகும். 14-ம் அதிகாரத்தில் யூதர்கள் அதிக நுட்பமாகக் கவனித்த பெருநாட்களையும், அவர்கள் உணவுகளையும்பற்றி எழுதுகிறான். இப்படிப்பட்ட காரியங்களைப் பற்றி யூதரும் புறஜாதியாருமான கிறிஸ்தவர்களுக்குள் சச்சரவுகளும் பிரிவினைகளும் உண்டாகாதபடி இப்படி அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறான்.

பவுல் இந்த நிருபத்தைப் புறஜாதியாருக்குங்கூட எழுதுகிறான். இந்த நிருபத்தில் தான் புறஜாதியாருக்குள் வேலைசெய்யும்படி அனுப்பப்பட்ட அப்போஸ்தலன் என்று சொல்லி, புறஜாதியாராகிய அவர்கள் தன் கண்காணிப்பில் இருப்பதாகக் காட்டுகிறான். $15^{15,16,21}$ $1^{6,7,14}$. 11-ம் அதிகாரத்தில் புறஜாதியாரான அவர்களுடைய 'சுபாவத்திற்கு விரோதமாய்' நல்ல ஒலிவமரத்திலே ஒட்ட வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நீண்ட தர்க்கத்தினால் காண்பித்து, 13-ம் வசனத்தில் 'புறஜாதியாராகிய உங்களுடனே பேசுகிறேன்' என்று சொல்லுகிறான். ஆகவே யூதர் புறஜாதியாரான இருதிறத்தாரும் இச்சபையில் சேர்ந்திருந்தார்கள் என்று சொல்லலாம். கிறிஸ்துமார்க்கம் பொதுவாய் யூதமார்க்கத்தை அநுசரித்துவந்த புறஜாதியாருக்குள் நிலைகொண்டபடியால் யூதரைப்

பார்க்கிலும் புறஜாதியார் இன்னும் அதிகமாய் இச்சபையில் சேர்ந்திருக்கலாம். பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது முதலாவது ஒரு திறத்தாருக்கும் அப்புறம் இன்னோர் திறத்தாருக்கும் எழுதினாலும், அப்போஸ்தலனுக்கு ஜாதிபேதம் என்னும் எண்ணமானது கிஞ்சித்தேனும் இருந்ததில்லை என்பதைக் காணலாம். யூதனானாலும் புறஜாதியானானாலும் பிதாவாகிய கடவுளுடைய சமுகத்தில் ஒன்றுதான்; வித்தியாசமே இல்லை; எல்லாரும் ஒன்றுபோல் அநீதியுள்ளவர்கள்; விசுவாசத்தினால் நீதிமான்களாகிறதும் ஒன்றுபோலத்தான் என்று காட்டுகிறான்.

3. சபையின் உற்பத்தி.

பெந்தெகோஸ்தே நாளில், நூற்றுக்கணக்கான பேர் கூடிய அத்திரள் கூட்டத்தில் ரோமாபுரியாரில் சிலர் பேதுருவினுடைய வல்லமையான பிரசங்கத்தைக் கேட்டு இருதயத்தில் குத்துண்டு, குணப்பட்டுக் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். அவர்கள் சீக்கிரத்தில் எருசலேமைவிட்டும் அப்போஸ்தலரைவிட்டும் பிரிந்து தங்கள் தேசத்துக்குப் போகவேண்டியதாயிருந்தது. அவர்கள் அத்தருணத்தில் அடைந்த போதனை கொஞ்சமாயிருந்தபடியால், அவர்கள் ரோமையில் ஒன்றுசேர்ந்து சபையை ஸ்தாபித்திருப்பார்கள் என்று எண்ண இடமில்லை. 16-ம் அதிகாரத்தைக் கவனிக்கையில் பவுலுக்கு அறிமுகமானவர்கள் அநேகம்பேர் ரோமையில் கூடிவந்திருந்தார்கள் என்று தோன்றுகிறது. பவுல் ஆசியாவிலுள்ள நாடுகளைச் சுற்றிவந்தபோது சில பட்டணங்களில் இவர்களைச் சந்தித்து இவர்களைக் குணப்படுத்திச் சபையில் ஒருவேளை சேர்த்திருக்கலாம் என்று சொல்ல ஏதுவுண்டு. இவர்களில் சிலர் தலைநகரியாகிய ரோமாபுரிக்கு அலுவல் பார்க்கவும், சிலர் கல்வி கற்கவும், வேறு சிலர் அந்நகரத்தைப் பார்த்துப்போகவும் வந்திருக்கலாம். இந்தியாவில் இக்காலத்தில் பிரயாணஞ்செய்வது சுளுவும் க்ஷேமமுமானதுபோல் அக்காலத்தில் ரோமை ராஜ்யத்திலுமிருந்தது. பவுல் நெடுநாட்களாய்த் தாமதித்த விடங்களாகிய எபேசு, கொரிந்து, அந்தியோகியா என்னும் பட்டணங்களிலிருந்து ராஜ்ய முழுவதிலும் தரை மார்க்கமாயும் சமுத்திர மார்க்கமாயும் போக்குவரவு செய்வது சர்வ சாதாரணமாகவிருந்தது. விசுவாசிகளான இந்தக் கிறிஸ்தவர்கள் பிரதான பட்டணத்தையடைந்து ஒருவரையொருவர் கண்டுபிடித்து மினவி ஒன்றாய்ச் சேர்ந்திருக்கையில் பெந்தெகோஸ்தே நாளில் குணப்பட்ட கிறிஸ்தவர்களும் அவர்களோடு சேர சபை உண்டானது. $16^{5,13}$.15-ம் வசனங்களைப் பார்க்கையில் கிறிஸ்தவர்கள் சிறு சிறு கும்பாய்க் கூடி, பற்பல வீடுகளில் ஆராதித்து, ஜெபக் கூட்டங்களை நடத்திவந்தார்கள். பவுல் இந்த நிருபத்தை எழுதுவதற்குமுன் இவ்விடத்திலுள்ள கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஒன்றாகக் கூடி பவுல் ஏற்படுத்தின மற்றச் சபைகளிலுள்ள ஏற்பாடுகளையும் ஒழுங்குகளையும் கையாடினதில்லை. இந்நிருபத்தை வாசித்து அறிந்தபின் ரோமாபுரியிலுள்ள 'தேவப்பிரியரும் பரிசுத்தவான்களும்' தனிக்கிறிஸ்தவர்களாயிராமல் உயிருள்ள சபையில் இணைக்கப்பட்டிருந்தார்கள்.

பேதுரு அப்போஸ்தலன் இந்தச் சபையை ஸ்தாபித்ததாகவும், கி-பி. 42-ம் வருஷம் முதல் 67-ம் வருஷம் வரை 25-வருஷம் அதற்கு அத்தியக்ஷராயிருந்ததாகவும் பாரம்பரியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைவிடப் பூர்வ பாரம்பரியம் ஒன்றுண்டு. அதாவது, பேதுருவும் பவுலும் சேர்ந்து ரோமசபையை ஸ்தாபித்து இருபேரும் சரிசமமான குருக்களாயும், பெரியவர் சிறியவர் என்கிற பேதம் அற்றவர்களாயும் இருந்து ரோமாபுரியில்தான் இரத்தசாட்சிகளாய் மரித்தார்கள் என்பதே. இருவரும் அதை ஸ்தாபித்து இரத்தசாட்சிகளாய் மரித்தார்கள் என்கிற இந்தப் பாரம்பரியமானது பொதுவான சபையால் இரண்டாம் நூற்றாண்டில் நம்பப்பட்டுவந்தது. ஏதோ ஒரு காலத்தில் பேதுரு ரோமாபுரியைச் சந்தித்து, அதில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, விசுவாசத்தைத் திடப்படுத்தி, அங்கே மரணமடைந்திருக்கலாம். மேலும் இந் நிருபம் $1^{6}$ $15^{15,16,20}$ வசனங்களையும் பார்த்தால், இதற்குமுன் பவுல் ரோமைக்குப் போய்ச் சபையை ஸ்தாபித்து அதில் குருத்தொழில் புரியவில்லை என்பதாய்த் தோன்றுகிறது.

4. நிருபம் எழுதப்பட்ட நோக்கமும் சமயமும்.

(a) இராஜதானிப் பட்டணத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டுமென்கிற தீரா வாஞ்சை பவுலுக்கு வெகுகாலமாகவிருந்தது. ஆதலால் இந்த வாஞ்சையை ரோமைப் பட்டணத்தாருக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் திரும்பத் திரும்பத் தெரிவிக்கிறான். அப். $19^{21}$ ரோம $1^{13}$ $15^{22,33}$. தான் அங்கே போகிறதற்குச் சில வருஷமாகத் தடையுண்டானதினால் இப்போது தன் நிருபத்தின் மூலமாய் அவர்களுக்கு ஆவிக்குரிய வரங்களைக் கொடுக்கும்படிக்கும், தன் வருகைக்கு அவர்களை

ஆயத்தம்பண்ணும்படிக்கும் நிருபத்தை எழுதியனுப்புகிறான். $1^{11}$.

(*b*) 16-ம் அதிகாரத்தில் தான் வாழ்த்துகிற தன் சிநேகிதரான சிலபேர் அப்போஸ்தலனுடைய போதனையின்றி புதுக் கிறிஸ்தவர்களாய் இருந்ததினால் அவர்களுக்குச் சகாயமாக இதை எழுதுவது தகுதியாய் இருந்தது.

(*c*) அக்காலத்தில் பவுல் மக்கெதோனியாவில் சேகரித்த காணிக்கையை எருசலேமுக்குக் கொண்டுபோக வேண்டியதாயிருந்தது. யூதர் அவனைப் பகைத்துக் கொலைசெய்யப் பிரயாசப்படுவார்கள் என்று தனக்குள்ளே அறிந்துகொண்டு இனி ரோமாபுரிக்குப் போகவும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் சமயம் வாய்க்காது என்று பயந்து இந்த முக்கிய பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கு இந்த நிருபத்தை எழுதி அப்பட்டணத்துக்குப் போக எத்தனமாயிருந்த பெபேயாள் வசம் கொடுத்து அனுப்பினான்.

5. நிருபம் எழுதப்பட்ட இடமும் காலமும்.

பவுல் இந்த நிருபத்தை எழுதினபோது கொரிந்து பட்டணத்தில் வசித்துக் கொண்டிருந்தான். இப்பட்டணத்திலிருந்தே இந்நிருபத்தை எழுதினான் என்று ரூபிக்கிற சில வசனங்களைச் சுருக்கமாய்ப் பார்க்கலாம்.

(*a*) கொரிந்து பட்டணத்தில் தான் ஞானஸ்நானம் கொடுத்த (1 கொரி $1^{14}$) காயுவின் வீட்டில்தங்கியிருந்தான். ரோம $16^{23}$.

(*b*) கொரிந்து பட்டணத்துக்குச் சமீபத்திலிருந்த கப்பல்துறையாகிய கெங்கிரேயா ஊரிலிருந்து அச்சபைக்கு ஊழியக்காரியாகிய பெபேயாள் இந்த நிருபத்தைக் கொண்டுபோகப் புறப்படுகிறாள்.

(*c*) தீமோத்தேயும் சொசிபத்தரும் கொரிந்து பட்டணத்தில் பவுலோடு இருந்தார்கள். பவுல் நிருபத்தை எழுதுகிற சமயத்திலும் அங்கேயிருந்து ரோமை சபையாருக்கு வாழ்த்துதல் அனுப்புகிறார்கள். அப். $20^{4}$.

(*d*) கி-பி. 57-ம் வருஷத்தில் வசந்தகாலத்தில் கொரிந்துவில் பவுல் தாமதித்திருந்த மூன்று மாசக்காலம் முடிவாகும் தறுவாயில் மக்கெதோனியா சபைகளிலுள்ள புறஜாதியார் கொடுத்த காணிக்கைகளை எருசலேமுக்குக் கொண்டுபோகும்படி பயணப்படவிருந்த காலத்தில் இந்நிருபம் எழுதப்பட்டதென்கலாம். ரோம $15^{22-26}$ அப் $20^{1-3}$ $24^{17-19}$. 1 கொரி $16^{1-4}$ 2 கொரி $8^{1-4}$. யூதருடைய தப்பறைகளைக் கண்டிக்கும்படி கலாத்தியருக்கு நிருபம் எழுதப்பட்டபின் இந்த நிருபம் எழுதப்பட்டிருக்கலாம்.

6. பொருளடக்கம்.

ரோமாபுரியிலுள்ள ஜனங்களுக்கு இந்த நிருபம் எழுதப்பட்டதினால் மனிதன் நீதிமானாக்கப்படவேண்டும் என்கிற சுவிசேஷ ஒழுங்கின் நீதி இதன் முதல் 5 அதிகாரங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

நிருபத்திலுள்ள போதனையின் சாரம் இன்னதென்று சொல்லப் பலர் முயன்றிருக்கிறார்கள். 9-ம் 10-ம் 11-ம் அதிகாரங்களில் அடங்கிய போதனைகளே நிருபத்தின் சாரம் என்று சிலர் நிர்ணயிக்கிறார்கள். இந்தத் தீர்மானம் சரியல்லவென்று நம்பி 1-5 அதிகாரம் வரை சொல்லப்பட்டிருக்கிற பொருள்கள் முக்கியமான போதனைகள் என்று தற்கால வியாக்கியானிகளில் பெரும்பாலார் எண்ணுகிறார்கள். இந்த அதிகாரங்களில் மனுஷர் எல்லாரும் தங்கள் மனச்சாட்சியிலுண்டாகும் தீர்ப்புக்கும் கடவுளுடைய நியாயத்தீர்ப்புக்கும் உள்ளானவர்கள் என்றும், மனுஷர் யாவரும் பாவிகள் என்றும், அவர்கள் செய்யும் புண்ணியக் கிரியைகள் வீண் என்றும் பவுல் காட்டுகிறான். இதோடு பராபரனுடைய அன்பினாலும் நீதியினாலும் கிறிஸ்துவின் புண்ணிய கிரியைகளின் மூலமாய் மனுஷருக்கு மீட்பு உண்டாகிறதென்று போதிக்கிறான்.

6-ம், 7-ம், 8-ம் அதிகாரங்கள். முந்தின அதிகாரங்களில் அடங்கிய போதனைகளை அஸ்திபாரமாகக்கொண்டு, மனுஷர் நியாயமாய் நீதிமான்களாகி, பரிசுத்தமாக்கப்பட்டு கிறிஸ்துவுடன் ஐக்கியப்பட்டு அவருடைய பரிசுத்த ஜீவியத்தில் பங்குபெறுகிறார்கள். என்று போதித்து, இவைகளினால் அவர்களுடைய நடத்தையும் மாறுதலடைகிறதென்று பவுல் காட்டுகின்றான்.

9-ம், 10-ம், 11-ம் அதிகாரங்களில் பராபரன் இயேசுகிறிஸ்துவின் மூலமாய்ச் செய்கிற இந்த வேலை தீர்க்கதரிசிகள் செய்த வேலையுடன் சம்பந்தப்பட்டது என்றும்; அநேக நூற்றாண்டுகளாய்க் கடவுள் யூதர்களிடத்தில் செய்த வேலை விருதாவாய்ப் போகும்படி அவர்களைப் புறக்கணித்துவிடவில்லை என்றும்; எப்படியெனில் யாவருக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதும் இயேசு மேசியா அளிக்கிறதுமான ஆசீர்வாதத்தில் அவர்களுக்கும் பங்குண்டு என்றும் பவுல் போதிக்கிறான்.

12-ம் அதிகாரம் முதல் 16-ம் அதிகாரம் வரையுள்ள அதிகாரங்களில் சன்மார்க்க நடத்தையை யடுத்த பல புத்திமதிகளும் வாழ்த்துதல்களும் அடங்கியிருக்கின்றன.

நிருபத்திலுள்ள விசேஷித்த பொருளை நாம் சில வார்த்தைகளில் சுருக்கிச் சொல்ல வேண்டுமானால், $3^{21-26}$-ம் வசனங்களே இந்த நிருபத்தின் சுருக்கமும் சாரமுமாய் இருக்கின்றன என்று நிச்சயிக்கலாம். இந்த நிருபத்தின் உபதேசத்தைப் பூரணமாக அடியில் வரும் சுருக்க பொருள் அட்டவணையில் பார்க்கலாம்.

பொருள் அட்டவணை

I. முகவுரை.

1. வாழ்த்துதல். $1^{1-7}$.

2. பவுலின் விருப்பம். $1^{8-17}$.

II. மனுஷருடைய பாவஸ்திதி.

1. புறஜாதியானும் அவன் பாவமும் விக்கிரகாராதனையும் காமமும்; தேவகோபாக்கினை. $1^{18}-2^{16}$.

2. யூதனும் பிரமாணத்தை மீறிக் கோபாக்கினைக்குள்ளானவன். $2^{16}-3^{20}$.

III. மனுஷன் இயேசுவின் மூலமாய் நீதிமானாக்கப்படுதல்.

1. கிரியைகளாலல்ல, இயேசுவின் புண்ணியத்தினாலேயே நீதி உண்டாகிறது. $3^{21-31}$.

2. ஆபிரகாமும் கிரியைகளாலல்ல விசுவாசத்தினாலே நீதிமானானான். $4^{1-25}$.

3. விசுவாசத்தினாலுண்டாகிற நீதியின் சந்தோஷம், நம்பிக்கை, பரிபூரணம். $5^{1-21}$.

IV. விசுவாசிக்கிறவன் பரிசுத்தத்தையுமடைகிறான்.

1. பாவத்துக்குச் சாகிறான். $6^{1-23}$. பிரமாணத்தினின்று விடுதலையடைகிறான். $7^{1-25}$.

2. கிறிஸ்துவானவரோடு இணைக்கப்பட்டுப் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுகிறான். $8^{1-25}$.

3. நம்பிக்கையோடு எல்லா உபத்திரவங்களையும் சகிக்கிறான். $8^{26-39}$.

V. இஸ்ரவேலின் அவிசுவாசம்.

1. பிரமாணத்தின் கிரியைகளால் நீதியைத் தேடுகிற அவர்களைப் புறக்கணிக்கும்படி, சிருஷ்டி கர்த்தாவுக்கு அதிகாரமும் சுயாதீனமும் இருக்கிறது. $9^{1}-10^{4}$.

2. விசுவாசத்தினால் உண்டாகிற நீதி எல்லாருக்கும் சமீபமாய் இருக்கிறது. $10^{5-13}$.

3. இந்த நீதியே இஸ்ரவேலருக்குப் பிரசங்கிக்கப்பட்டது. $10^{14-21}$.

4. அவிசுவாசம் எல்லாரிடத்திலும் இல்லை. $11^{1-10}$.

5. அவிசுவாசம் சொற்பகாலத்துக்குரியது. $11^{10-32}$.

6. தேவகிருபைக்காகவும் வல்லமைக்காகவும் ஸ்தோத்திரம். $11^{33-36}$.

VI. கிறிஸ்தவனுடைய நடத்தையைப் பற்றிய போதனை.

1. வெவ்வேறு புத்திமதிகள். $12^{1-21}$.

2. கிறிஸ்தவனும் சர்க்காரும். $13^{1-7}$. சில எச்சரிப்புகள். $13^{8-14}$.

3. பொறுமை பலவானும் பலவீனனும். $14^{1}-15^{6}$.

4. யூதனும் புறஜாதியானும். $15^{7-13}$.

VII. முடிவுரை.

1. பவுல் தன் சொந்தக் காரியத்தைப்பற்றியும் ரோமாபுரிக்குப் போகிறதைப்பற்றியும் பேசுகிறான். $15^{14-33}$.

2. வாழ்த்துதல். $16^{1-16}$.

3. எச்சரிப்பு. $16^{17-23}$.

4. ஸ்தோத்திரமும் ஆசீர்வாதமும். $16^{24-27}$.

ரோமாபுரி. **Rome**. ரோமாபுரி ஆதியில் கட்டப்பட்டதைப்பற்றி நமக்குத் திட்டமாய்த் தெரியாது. ஒரு பாரம்பரியத்தின்படி இரண்டு சகோதரர் கி-மு. 753-ம் வருஷத்தில் இத்தாலியா தேசத்திலுள்ள தைபர் நதியின் தென்கரையில், கடற்கரைக்கு 18 மைல் தூரத்தில், ஒரு மலைமேலே அதைக் கட்டினார்கள், அதைச்சுற்றியுள்ள நாட்டிலே ஏழு மலைகள் உண்டு. ரோமாபுரியில் குடியேறினவர்கள் பெருகிப் பலுகி அந்த ஏழு மலைகளின்மேல் தங்கள் வீடுகளையும் ஆலயங்களையும் கட்டித் தங்கள் ஊரோடு அவைகளைச் சேர்த்து அதைச்சுற்றி ஒரு மதில் கட்டினார்கள். இந்த மதிலின் சுற்றளவு 5 மைல். இதற்கு 19 வாசல்கள் இருந்தன. இயேசு பிறக்குங் காலத்துக்கு முன்னேயே இந்த மதிலுக்கு வெளிப்புறத்தில் அநேக வீடுகள் இருந்தன. அதன் மத்தியில் [illegible]00 அடி நீளமும் 150 அடி அகலமுமுள்ள போரும் (*Forum*) என்னும் அம்பலம் இருந்தது. இந்த அம்பலத்தில் ஒரு பீடம் இருந்தது ரோமர்கள் ராஜாங்க விஷயங்களைப்பற்றி யோசனை செய்யும்படி இந்த அம்பலத்தில் கூடி, ஆலோசனைச் சங்கத்தார் பீடத்தில் நின்று செய்யும் பிரசங்கத்தைக் கேட்டு, அரசாட்சி விஷயமாய் இங்கே சீட்டுப்போடுவார்கள். ஆலோசனைச் சங்கத்தாரைச் சீட்டுப்போட்டுத் தெரிந்துகொள்ளுவதும் இங்கேதான். இந்த அம்பலத்தின் பக்கத்தில் ஆலோசனைச் சங்கத்தின் சபாமண்டபமும் சில கடைகளும் இருந்தன. அதற்குச் சமீபத்தில் இருந்த ஒரு மலைமேலே ரோமர் வணங்கின யூப்பித்தர் முதலிய தேவர்களுக்கென்று கட்டப்பட்ட மகா சிறந்த ஆலயம் ஒன்றிருந்தது. பக்கத்திலிருந்த இன்னொரு மலை



ரோமாபுரியிலுள்ள பெரிய அரங்கசாலையாகிய கொலோசெயும்

மேலே இயேசுவின் காலத்தில் ரோமராயனுடைய மாளிகையும் இன்னொரு தேவாலயமும் இருந்தன. இயேசுவின் காலத்தில் ரோமராஜாங்கத்தைச் சேர்ந்த சகல நாடுகளிலுமிருந்துதலை நகரியாகிய ரோமாபுரிக்கு வந்தவர்கள் அநேகரானதினால் அந்த நகரத்தில் இருபது லக்ஷம் பேர் குடியிருந்தார்கள் என்று தோன்றுகிறது. சிலர் கணக்கிட்டபடி இந்த இருபது லக்ஷம் பேர்களில் 10 லக்ஷம்பேர் அடிமைகள்.

2. சரித்திரம்.

இந்த அகராதியில் ரோமாபுரியின் சரித்திரத்தைச் சொல்வதற்கு இடம் இல்லை. சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் பூர்வீகத்தில் ரோமாபுரி ஒரு சிறு ராஜ்யமாயிருந்தது. இதிலே ராஜாக்கள் அரசாட்சி செய்தார்கள். இந்த ராஜாக்களில் ஒருவன் பெருத்த அநியாயஞ் செய்ததினாலே ஜனங்கள் ராஜாக்களைத் தள்ளிவிட்டுத் தங்களை ஆளும்படிக்கு கான்சல் (*Consul*) என்னும் பிரஜாபதிகள் இருவரையும் நியாயாதிபதிகளையும் வருஷந்தோறும் ஏற்படுத்திக்கொள்ளுவார்கள். இவ்விதமான அதிபதிகள் ஏறக்குறைய 500 வருஷக்காலம் ரோம ராஜாங்கத்தை நடத்திவந்தார்கள். இந்தக் காலத்துக்குள் ரோமர் தங்கள் நகருக்குச் சமீபத்திலுள்ள நாட்டையும் அதற்குச் சுற்றியுள்ள தேசத்தையும் இத்தாலியா தேசமனைத்தையும் மத்தியதரைக் கடலைச் சுற்றியுள்ள கிரேக்கு சின்ன ஆசியா ஸ்பானியா ஆப்பிரிக்கா எகிப்து முதலிய தேசங்கள் எல்லாவற்றையும் ஜெயித்து மத்தியதரைக் கடலுக்கு ரோமருடைய குளம் என்று பெயரிட்டார்கள். ஆனால் அவர்கள் இவ்விதமாய்ப் புறம்பே மேன்மையையும் செல்வத்தையும் அடைந்தபோதிலும் தங்களுக்குள்ளே பலவித சண்டை சச்சரவுகளுக்கு இடங்கொடுத்ததினாலே யூலியுசைசார் (*Julius Cæsar*) முதலிய பெரியோர் ராஜாங்கத்திலே முதன்மையான அதிகாரத்தைப் பெற்றார்கள்.

கி-மு. 31-ஆம் அகுஸ்து என்பவன் இவ்விதமாய் முதன்மையான அதிகாரத்தைப் பெற்று, தானே ரோம ராஜ்யத்துக்கு ராயனானான். இவன் மகா சேனாபதியும் சட்டம் ஏற்படுத்துவதில் சமர்த்தனுமாய் இருந்ததினாலே வெகு சம்பிரமத்துடன் ரோம ராஜாங்கத்தை நடத்தினான். இவன் ரோமாபுரியில் மாளிகைகளையும் ஆலயங்களையும் ஏராளமாய்க் கட்டினான். இவன் காலத்தில் சிற்பாசாரிகள் பலர் ரோமாபுரிக்கு வந்து அதிலுள்ள கட்டடங்களை விநோதமாய்ச் சிறப்பித்துக் கட்டினார்கள்.

இவன் கி-பி. 14-ஆம் மரித்தபின்பு திபேரியு ராயன் பட்டத்துக்கு வந்து ராஜாங்க விஷயங்களை நடத்துவதில் அதி சாமர்த்தியக்காரனாயிருந்தாலும் தனது அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவர்கள் பேரில் மிக்க சமுசயமுடையவனாயிருந்தபடியால் அவர்களில் பலரைக் கொலைசெய்வித்தான். இவனுடைய இராஜாங்க அரசாட்சி சிறப்பாய் இருந்தாலும், இவன் எப்பொழுதும் மனக்கலக்க முடையவனாகவே இருந்தான். இவன் யூதேயா நாட்டிற்கு பொந்தியு பிலாத்துவை தேசாதிபதியாக நியமித்தான். இவன் காலத்தில் இயேசு சிலுவையில் அறையுண்டு மரித்தார்.

கி-பி. 37-ம் ஆண்டில் திபேரியு ராயன் இறந்தபோது அவனுடைய ஸ்தானத்தில்

காயு என்பவன் ராயனானான். இவனைக் குறித்து வேதாகமத்தில் ஒன்றும் சொல்லப் படவில்லை.

கி-பி. 41-ம் ௵த்தில் கிலவுதியு என்பவன் ராயனானான். இவன் எப்பொழுதும் வியாதியஸ்தனாயிருந்தாலும், ராஜாங்க விஷயங்களைச் சரிவர நடத்திவந்தான். இவன் காலத்தில் ரோம ராஜாங்கத்தில் பெரிய பஞ்சம் உண்டாயிற்று. இவன் காலத்தில் ரோமாபுரியில் யூதர்கள் தங்களுக்குள்ளே செய்துகொண்ட சண்டை சச்சரவுகளை இவன் வெறுத்து கி-பி. 50-ம் ௵த்தில் யூதர் எல்லாரையும் ரோமாபுரியிலிருந்து துரத்தினான். இவனுடைய அரசாட்சியின் காலத்தில்தான் பரி. பவுல் முதலியவர்கள் கிறிஸ்துமார்க்கத்தை அந்நிய தேசங்களில் ஸ்தாபிக்கும்படி சுவிசேஷப் பிரயாணங்கள் செய்தார்கள்.

கி-பி. 54-ம் ௵த்தில் கிலவுதியு கொலையுண்டபிறகு நேரோ என்பவன் ராயனானான். நேரோ ராயனானபோது சகலத்தையும் நீதி நியாயத்தின்படி நடத்திக்கொள்ள விரும்பினாலும், இவன் வரவர துன்மார்க்கத்தில் விழுந்து நீதிமார்க்கத்தைவிட்டு விலகி ஜனங்கள் ஆச்சரியப்படத்தக்க மகா பாதகங்களையெல்லாம் செய்துவந்தான். இவன் விசேஷமாய் கி-பி. 64-ம் ௵த்தில் கிறிஸ்தவர்களை கொடூரமாய் உபத்திரவப்படுத்தினதினாலே அந்நாள் முதல் சகல அநியாயத்துக்கும் இவன் முன்மாதிரியாக நியமிக்கப்பட்டிருக்கிறான். இவன் காலத்தில் பரி. பவுல் சுவிசேஷப் பிரபல்லியத்துக்காகத் தனது மூன்றும் பிரயாணத்தை முடித்து எருசலேமில் யூதர்கள் செய்த அநியாயத்தினிமித்தம் ராயனுக்கு அப்பீல் செய்து ரோமாபுரிக்கு வந்து, பிறகு விடுதலையடைந்தும் நேரோராயன் செய்த மகா உபத்திரவத்தில் மறுபடியும் பிடிக்கப்பட்டு ரோமாபுரியில் ரத்த சாட்சியாய் மரித்தான். அப் 25–28 பிலி $4^{22}$ 2 தீமோ $4^{7}$. நேரோ கி-பி. 68-ம் ௵த்தில் கொலையுண்டு இறந்துபோனான்.

நேரோ மரித்தபின், நாலுபேர் பட்டத்துக்கு வரும்படி பிரயாசப்பட்டார்கள். கி-பி. 69-ம் ௵த்தில் வெஸ்பாசியன் (*Vespasian*) மற்றவர்களை ஜெயித்து, சிங்காசனம் ஏறி கி-பி. 69-79-ம் ௵ வரை அரசாட்சி செய்துவந்தான். இவன் நீதி நியாயத்தை விரும்பி சகலத்தையும் நல்லொழுக்கத்தின்படி நடப்பித்து ஜனங்களுக்கு யாதொரு அநியாயமும் செய்யாமல் பற்பல நன்மைகளைச் செய்துவந்தான்.

கி-பி. 79-81 வரை தீத்து என்பவன் சக்கரவர்த்தியாய் இருந்தான்.




எருசலேமைப் பிடித்த
ரோமர் ராயனாகிய வெஸ்பாசியன் அச்சிட்ட நாணயம்.

தீத்து பட்டத்துக்கு வருமுன், வெஸ்பாசியன் ராயனாயிருக்கும்போது, தீத்து ரோம சேனையில் சேனாபதியாயிருந்து, ரோம ராஜ்யத்துக்கு விரோதமாய்க் கலகஞ்செய்த யூதர்களை ஜெயித்து, எருசலேம் பட்டணத்தை முற்றுகைபோட்டு கி-பி. 70-ம் ௵த்தில் அதைப் பிடித்து அதையும் தேவாலயத்தையும் அழித்து யூத ஜனத்தையெல்லாம் சிதறடித்திருந்தான். இவன் பட்டத்துக்கு வந்தபிறகு மதவிஷயங்களில் நீதியாய் அரசுபுரிந்தான். இவன் ரோமாபுரியில் கொலோசெயும் (*Colosseum*) என்ற பெரிய அரங்கசாலையைக் கட்டினான். சிறை பிடிக்கப்பட்ட போர்ச்சேவகர் கைதிகள் குற்றவாளிகள் ஆகிய இவர்கள் தாங்கள் மரிக்குமட்டும் இந்த அரங்கசாலையில் சண்டைசெய்வதை ஜனங்கள் வேடிக்கை பார்ப்பார்கள்.

கி-பி. 81-96-ம் ௵ வரை தீத்துவின் சகோதரனாகிய தொமித்தியன் சக்கரவர்த்தியாயிருந்தான்; ஆனால் இவன் தீத்துவைப்போல நீதி நியாயத்தைத் தேடாமல் துன்மார்க்கத்தில் அமிழ்ந்து, மகா கொடூரஸ்தனாயிருந்தான். வேத சாஸ்திரிகளில் அநேகர் நினைக்கிறபடி இவன் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு வந்த துன்பத்தைப்பற்றி வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லியிருக்கிறது. இதற்குப் பிந்திய ரோமராஜ்ய சரித்திரத்துக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை.

3. ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவ சபை.

ரோமாபுரிக் கிறிஸ்தவ சபையைப் பரி. பேதுரு ஸ்தாபித்தான் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆயினும் இதற்குப் போதிய அத்தாட்சியில்லை. ஏறக்குறைய கி-பி. 57-ம் ௵த்தில் பரி. பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின நிருபத்தை நாம் வாசித்தால், அங்

கே அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் அநேகர் இருந்ததாகத் தெரிகிறது. ஏறக்குறைய கி-பி. 60-ம் ஆண்டில் பரி. பவுல் ரோமாபுரிக்குப் போய் அங்கே இரண்டு வருஷக்காலம் தங்கி, தான் ராயனுக்குச் செய்த அப்பீலின் படி தனது விசாரணைக்காகக் காத்திருந்தான். அவன் ரோமாபுரியிலிருக்கும்பொழுது எபேசியருக்கும், கொலோசெயருக்கும், பிலேமோனுக்கும், பிலிப்பியருக்கும் எழுதின நிருபங்களை நாம் விசாரித்தால் அவன் ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவர்களிடத்திலும் யூதரிடத்திலும் சுவிசேஷ ஊழியத்தை நிறைவேற்றினன் என்றும், நேரோ ராயனுடைய அரமனையிலுள்ளவர்களிலும் சிலர் கிறிஸ்து மார்க்கத்துக்கு வந்திருந்தார்கள் என்றும் அறிகிறோம். ஆயினும் ரோமாபுரியிலுள்ள சபையின் சரித்திர விபரம் நமக்குத் தெரியாது. நேரோ ராயனால் சபைக்கு நேர்ந்த உபத்திரவத்தில் சிலர் பயந்து பட்டணத்தைவிட்டு ஓடிப்போனார்கள். அநேகர் பிடிக்கப்பட்டுச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டார்கள் நேரோ, தொமித்தியான் முதலியவர்கள் கிறிஸ்தவ சபையை உபத்திரவப்படுத்தினாலும், அவர்கள் ஒருபோதும் திருச்சபையின் மேல் ஜெயமடையவில்லை என்றும், இத் துன்பங்களினிடையில் அது படிப்படியாய் விருத்தியடைந்தது என்றும் அறிகிறோம். அக்காலத்தில் கிறிஸ்தவ சபையைச் சேர்ந்தவர்களின் பெயரும் அவர்கள் ரத்தசாட்சியாய் மரித்த விதமும் நமக்கு நன்றாய்த் தெரியும். ஏனெனில் அவர்கள் பூமியில் வெட்டப்பட்ட சுரங்கங்களின் சுவரில் பிரேதங்களை வைக்கும்படி தகுந்த அறைகளைத் தோண்டி அவைகளுக்குள் மரித்தவர்களின் பிரேதங்களைச் சேமித்து அவைகளைப் படற்கற்களால் மூடி அக்கல்லுகளின்மேல் மரித்தவனுடைய பெயரையும் அவன் மரித்த விதத்தையும் எழுதிவைத்திருக்கிறார்கள்.

4. ஆளுகை.

ரோமாபுரியில் இராயர்கள் அரசாட்சி செய்யும்பொழுது பிராஜாபதிகள் நியாயாதிபதிகள் முதலியவர்களை ஏற்படுத்தும் சிலாக்கியம் முன்போல பிராஜாசங்கத்துக்கு இருந்தாலும், இவற்றைப்பற்றிய மேலான அதிகாரம் இராயனுக்கே உரியது. ஆலோசனைச்சங்கத்தார் சில நாடுகளில் நியாயாதிபதிகளை ஏற்படுத்துவார்கள். மற்ற நாடுகளில் இராயனே இவர்களை நியமிப்பான். இது எப்படியாயினும் அதிபதிகள் ராயனுடைய சித்தத்தின்படியே யாவற்றையும் செய்யவேண்டும். இராயனுக்கு அவர்கள் மேல் தயவு இருந்தால் அவர்கள் நீதி நியாயத்துக்கு விரோதமாய் எவ்வித அக்கிரமம் செய்தாலும், அது கவனிக்கப்படமாட்டாது.

ரோமர் பல நாடுகளை ஜெயித்து அந்நாடுகளின் பிரஜைகளில் அநேகரைத் தங்களுக்கு அடிமைகளாக்கினதினாலே ரோமாபுரியிலுள்ள ஏழை ரோமருக்குங்கூட அடிமைகள் இருந்தார்கள். சிலர் சொன்னபடி ஒரு ரோமன் ஏழையானால் அவனுக்கு 10 அடிமைகளும் தனவந்தனானால் 20,000 அடிமைகளும் இருப்பார்கள். இதினிமித்தம் அக்காலத்திலுள்ள ரோமர்கள் சோம்பலுக்கு இடங்கொடுத்து, துன்மார்க்கத்தில் விழுந்து, சிற்றின்ப போகத்தைமாத்திரம் தேடி, மற்ற விஷயங்களைப்பற்றிக் கவலையற்றிருந்தார்கள்.

5. மதம்.

அக்காலத்தில் எகிப்து முதலிய அந்நிய தேசங்களிலிருந்து வந்தவர்கள் தங்கள் தங்கள் தேவதைகளுக்காக ரோமாபுரியில் ஆலயங்களைக் கட்டினார்கள். ரோமர் சாதாரணமாய் விக்கிரகாராதனைக்காராயிருந்தாலும், அவர்கள் வணங்கின தேவர்களில் சிலர் சன்மார்க்கத்துக்குரியவர்கள். அந்நியர்கள் ரோமாபுரிக்குக் கொண்டுவந்த தேவர்களில் அநேகரோ மகா துன்மார்க்கர் என்று சொல்லுவதவசியம். கிறிஸ்துமதம் உற்பத்தியான காலத்தில் ரோமருக்குள் கல்விமான்களில் அநேகர் தெய்வம் இருப்பதைப்பற்றிச் சந்தேகங்கொள்ளும் தத்வ சாஸ்திரங்களை நம்பி நாஸ்தீகரானார்கள். ரோமாபுரியில் அநேகர் சகல நல்லொழுக்கத்தையும் நீக்கி, பாவத்தில் அமிழ்ந்தவர்களானதினால் இப்பட்டணத்தில் கிறிஸ்துமார்க்கத்தை ஸ்தாபிப்பது மகா அற்புதமே. அகுஸ்து, திபேரியு முதலியவர்கள் காண்க.

**ரோமாபுரி பிரஜா சிலாக்கியம். Roman citizenship.**

பிலாத்து முதலிய நாட்டுப்புற அதிபதிகள் இந்தச் சிலாக்கியத்தை அடைந்தவனை

(i) வாரினால் அடிக்கக்கூடாது. அப் 16:21 22:25.

(ii) கொன்றுபோடக்கூடாது.

இந்தச் சிலாக்கியத்தைப் பெற்றவர்கள் ரோமராயனுக்கு அப்பீல் செய்யலாம். அப் 25:12. ராயன் அல்லது தான் ஏற்படுத்தின நீதிபதிகள் அந்த அப்பீலை கேட்கவேண்டும். 2 தீமோ 4:17.

இந்தச் சிலாக்கியத்தைப் பெற்றவர்கள் எங்கே பிறந்தாலும் ரோமர்கள் என்னப்படுவார்கள். அப் 16:37.

தாய்த்தகப்பனும் ரோமர்களாய் இருந்தால் மகன் ரோமனாய் இருப்பான்.

சில பட்டணங்களுக்கு இந்தச் சிலாக்கியம் கொடுக்கப்பட்டது. (தர்சுவுக்கு இந்தச் சிலாக்கியம் இல்லை).

ராஜ்ஜியத்தில் விசேஷித்த ஊழியம் செய்த சிலருக்கு இது கொடுக்கப்பட்டது. (பவுலின் தகப்பன் இப்படியே இதை அடைந்திருக்கலாம்).

சிலர் ராயனுக்கு வெகுமதி கொடுத்து இதை வாங்கலாம். அப் $22^{28}$.

'நான் ரோமாபுரி சிலாக்கியம் அடைந்தவன்' என்று பொய்யாய்ச் சொல்வதற்கு மரணமே தண்டனை. பவுல் II (iii), IV 4 காண்க.

## ல

லகமாம். **Lahman**. யோசு $15^{40}$.

லகாய்–ரோயீ. **Laha-Roi**. [என்னைப் பார்க்கிற உயிரோடிருக்கிறவர்.] பெயர்–லகாய்–ரோயீ காண்க.

லக்கூம். **Lakkum**. யோசு $19^{33}$.

லசரோன். **Lassharon**. கலிலேயாவில் யோசுவா பிடித்த ஓர் ஊர். யோசு $12^{18}$.

லசேயா. **Lasea**. கிரேத்தா தீவின் தென் கரையிலுள்ள துறைமுகம். அப் $27^{8}$.

லஞ்சம். **Bribe**, பரிதானம் காண்க.

லத்தீன். **Latin**. ரோமர்கள் பேசின பாஷைக்கு 'லத்தீன்' என்று பெயர். யூதேயா ரோமராஜாங்கத்தில் ஒரு நாடாய் இருக்கும்போது அதில் மூன்று பாஷைகள் வழங்கின :

(i) ரோமர்கள் ஏற்படுத்தின கச்சேரிகளிலும், நியாயஸ்தலங்களிலும், உத்தியோகஸ்தர் லத்தீன்பாஷை வழங்குவார்கள்.

(ii) வியாபாரஞ் செய்கிறவர்கள் வழக்கமாய்க் கிரேக்கு பாஷையைப் பேசுவார்கள்.

(iii) சாதாரண ஜனங்கள் அரமேய என்னும் பிற்காலத்து எபிரெய பாஷையைப் பேசுவார்கள். இதினிமித்தம் சிலுவைமரத்தில் அறையப்பட்ட இயேசுவின் தலைக்குமேல் 'இவன் யூதருடைய ராஜா' என்பது அம்மூன்று பாஷைகளில் எழுதப்பட்டது. லூக் $23^{38}$.

லபிதோத். **Lapidoth**. [மின்னுகிற மின்னல்.] தெபொராளின் புருஷன். இவனைப்பற்றி வேறொன்றும் தெரியாது. நியா $4^{4}$.

லவோதிக்கேயா. **Laodicea**. சின்ன ஆசியாவின் மேற்பாகத்திலுள்ள ஒரு பட்டணம். எபேசு, சிமிர்னா என்ற பட்டணங்களிலிருந்து ராஜபாதை இதின் மூலமாய் பிசிதியாவிலுள்ள அந்தியோகியா முதலிய பெரிய பட்டணங்களுக்குச் சென்றது. எபேசு, சிமிர்னா என்னும் துறைமுகங்களிலிருந்து சுமார் 50, 70 மைல் தூரத்தில் இப்பட்டணமிருந்தது. இங்கு ஆட்டுமயிர் நெசவுத்தொழில் மிகுதி. பேர்போன வைத்திய பண்டிதர்கள் இங்கிருந்தார்கள். அநேக யூதர்கள் இதில் வசித்தார்கள்: எபேசியருக்கும் கொலோசெயருக்கும் எழுதப்பட்ட நிருபங்கள் லவோதிக்கேயா சபைக்கும் அனுப்பப்பட்டது. கொலோ $2^{1}$ $4^{13.14}$. பரி. யோவான் ஏழு சபைகளுக்கும் நிருபங்களை எழுதினபோது லவோதிக்கேயா சபையின் பக்திக்குறைவை மிகவும் கண்டிருக்கிறான். வெளி $3^{14}$.

## லா

லாகாத். **Lahat**. 1 நாளா $4^{2}$.

லாகீஸ். **Lachish**. யூதா நாட்டின் மேற்கிலுள்ள ஒரு பட்டணம். இது பெலிஸ்தியா நாட்டிலுள்ள காசா என்னும் ஊருக்குப் பத்து மைல் தூரத்திலிருந்தது. இவ்வூரார் எமோரியருடனே சேர்ந்து கிபியோனியர்களுக்கு விரோதமாய்ப் படையெடுத்ததினிமித்தம், யோசுவா இதை ஜெயித்தான். யோசு $10^{3}$. இது யூதா கோத்திரத்திற்குக் கிடைத்தது. யோசு $15^{39}$. ரெகொபெயாம் இதில் ஒரு கோட்டை கட்டினான். 2 நாளா $11^{9}$. யூதாவின் ராஜாவாகிய அமத்சியா இவ்விடத்தில் கொல்லப்பட்டான். 2 இரா $14^{19}$. மீகா தீர்க்கதரிசி ஏறக்குறைய கி–மு. 720–ம் வருஷத்தில் லாகீஸ் செய்த குற்றத்தைக் கண்டிக்கிறான். மீகா $1^{13}$.

ஏறக்குறைய கி–மு. 700–ம் வருஷத்தில் சனகெரிப் ராஜா இதை ஜெயித்தான். 2 இரா $18^{13}$. அவனுடைய தலைநகராகிய நினிவேயிலே இந்த விபரத்தைப்பற்றிக் கற்பலகைகளின்மேல் வெட்டப்பட்டிருக்கிற சித்திரங்களும் அட்சரங்களும் இந்நாள்வரைக்கும் இருக்கிறது.

ஏறக்குறைய கி–மு. 586–ம் வருஷத்தில் நேபுகாத்நேச்சார் இதை ஜெயித்தான். நெகே $11^{30}$. கி–மு. 450–ம் வருஷத்தில் சிறையிருப்பிலிருந்தவர்களில் சிலர் லாகீசில் குடியேறினார்கள்.

லாகேமி. **Lahmi**. எல்கானான் ஜெயித்த கோலியாத்தின் சகோதரன். 1 நாளா $20^{5}$.

லாசரு. **Lazarus**.

1. மார்த்தாளுக்கும் மரியாளுக்கும் சகோதரன். இயேசுவின் சிநேகிதன். எரு

சலேமுக்கு இரண்டு மைல் தூரத்திலிருந்த பெத்தானியாவில் லாசருவின் குடும்பத்தார் குடியிருந்தார்கள். இயேசு தாம் ஊழியஞ் செய்த கடைசி வருஷத்தில் அக்டோபர் மாசம் நடந்த கூடாரப் பண்டிகைமுதல் டிசம்பர் மாசம் நடந்த தேவாலயப் பிரதிஷ்டைப் பண்டிகைவரைக்கும் பெத்தானியாவில் வாசம்பண்ணினர். அக்காலத்தில் அவர் லாசருவின் வீட்டில் தங்கினர் என்று நினைக்கிறதற்கு இடம் உண்டு. பிறகு எருசலேம் பட்டணத்து அதிகாரிகள் செய்த கலகத்தினிமித்தம் யோர்தான் நதியின் அக்கரைக்குப் போனார். அவர் அங்கேயிருந்தபோது லாசருவின் வியாதியைப்பற்றி அவருக்குத் தெரிவிக்கும்படி இவனுடைய சகோதரிகள் ஆள் அனுப்பினர்கள். அவர் இருந்த இடத்துக்கும் பெத்தானியாவுக்கும் 20 மைல் தூரமாத்திரமிருந்தும், இயேசு லாசரு மரித்த நாலாம் நாளில் பெத்தானியாவுக்கு வந்து, இவன் உண்மையாகவே மரித்துவிட்டான் என்பதை அறிந்திருந்த ஜனங்களுக்கு முன்பாக, தாம் இறந்துபோனவர்களுக்கும் உயிர் தரக்கூடிய மேசியாவாயிருப்பதைக் காட்டும்படி இவனுக்குத் திரும்பவும் உயிர்கொடுத்தார். ஜனங்கள் இதைக்கண்டு இயேசுவின்மேல் நம்பிக்கை வைத்தபோதிலும், ஜனத்தின் அதிபதிகள் அவரைக் கொல்லும்படி கட்டுப்பாடு பண்ணினர்கள். இதினிமித்தம் அவர் எப்பிராயீம் தேசத்தில் சிலகாலம் தங்கி எப்பிரலில் பஸ்காப் பண்டிகைக்கு எருசலேம் பட்டணத்துக்குப் பிரயாணம் பண்ணும்பொழுது, பஸ்காப் பண்டிகைக்கு ஆறு நாளைக்கு முன்னே பெத்தானியாவுக்கு வந்து முன்னே குஷ்டரோகியாயிருந்து சொஸ்தமாக்கப்பட்ட சீமோன் வீட்டில் விருந்துண்டார். அச்சமயத்தில் லாசருவும் அங்கே இருந்தான். லாசருவைப் பார்த்தவர்களுக்கு எவ்வளவோ ஆச்சரிய முண்டாயிருக்கும். இயேசு லாசருவை உயிரோடெழுப்பினதினலே அவர் எருசலேம் பட்டணத்துக்குள் பிரவேசித்தபோது அநேகர் அவர்மேல் பக்தி வைராக்கிய முள்ளவர்களாயிருந்தார்கள். மேற்கூறியவற்றைத் தவிர லாசருவைக் குறித்து வேதாகமத்தில் வேறென்றும் சொல்லப்படவில்லை. இவனைப்பற்றிய பாரம்பரியங்களும் நமக்கு வந்தெட்டவில்லை. யோவா 11 அதி $12^{2-11,17}$ மத் $26^{6}$ மாற் 14 அதி.

2. பிச்சைக்காரனகிய லாசரு.

லாசரு என்னும் பதத்துக்கு 'கடவுள் துணையிருக்கிறர்' என்று அர்த்தமானதினல் இயேசு தாம் சொன்ன உவமையில் கடவுள் ஆசீர்வதிக்கப்போகிற ஏழைக்கு இந்தப் பெயரை இட்டிருக்கிறர் என்று காண்கிறேம். இவன் தனவானுடைய வீட்டுக்குக் கிட்டவந்ததினல், இவனுக்கிருந்தது குஷ்டரோகம் அல்ல வேறே வியாதி என்று தோன்றுகிறது. இயேசு சொன்ன உவமையில் நாம் கவனிக்கவேண்டிய இரண்டு விஷயங்கள் உண்டு.

i. இம்மையில் தனவானுக்கும் எளியவனுக்கும் உள்ள வித்தியாசம்.

ii. மறுமையில் இவர்களுடைய நிலைமை. ஆபிரகாம் என்னும் கோத்திரப் பிதாவுடன் விருந்துண்பது அதியுன்னத பாக்கியத்துக்கு அடையாளம் என்று யூத ரபிமார் எழுதிய நூல்களினல் அறிகிறேம்.

இந்த உவமையின் தாற்பரியமாவது:

i. ஒரு ஏழை தனது தரித்திரத்தினிமித்தம் அல்ல தான் கடவுளைத் துணையாகத் தேடுவதினலேயே பாக்கியசாலியாகிறன்.

ii. ஒரு தனவான் தனது திரவியத்தினிமித்தம் அல்ல தனது தன்னயத்தினிமித்தமும் பிறர் துன்பத்தைக்குறித்துத் தான கொண்ட அஜாக்கிரதையினிமித்தமுமே குற்றவாளியாகிறன். லூக் $16^{19}$.

லாசா. **Lasha.** ஆதி $10^{19}$.

லாதா. **Laadah.** 1 நாளா $4^{21}$.

லாதான். **Ladan.**

1. யோசுவாவின் முன்னேர்களில் ஒருவன். 1 நாளா $7^{26}$.

2. ஒரு லேவியன் = லிப்னி 1 நாளா $6^{17}$ $23^{7}$.

லாபம். **Profit.** ஆதி $37^{26}$ சீங் $30^{8}$ மத் $16^{26}$ மாற் $8^{36}$. பலன், பிரயோஜனம் காண்க.

லாபான். **Laban.**

1. நாகோரின் மகன். ஆதி $29^{5}$. ரெபெக்காளின் சகோதரன். ஆதி $24^{29}$. ஈசாக்கு இவனுடைய சகோதரியாகிய ரெபெக்காளை விவாகம் செய்திருந்தான். இவன் லேயாளுக்கும் ராகேலுக்கும் தகப்பன். யாக்கோபு இவனேடு 14 வருஷ காலம் வேலைசெய்து இவனுடைய குமாரத்திகளைக் கலியாணம் செய்தான். ஆதி 29 அதி.

பின்பு யாக்கோபு தன் மனைவிமக்களோடும், ஏராளமான ஆடுமாடுகளோடும் லாபானைவிட்டுப் புறப்பட்டான். அச்சமயத்தில் இவன் வணங்கிவந்த 'தொராபீம்' என்ற சுருபங்களை ராகேல் திருடிக்கொண்டாள். லாபான் யாக்கோபைப் பின்தொ

டார்ந்து கீலேயாத் மலைநாட்டிலே அவனைக் கண்டு அவன் செய்த தந்திர உபாயத்தைக் கண்டித்துக் கடைசியாக அவனோடு ஒரு உடன்படிக்கை செய்தான். ஆதி 29–31 அதி.

2. நமக்குத் தெரியாத ஒரு பட்டணம். உபா 1[1].

லாமா. **Lama**. 'லாமா' என்பதற்கு 'என்னத்தினிமித்தம்' என்று அர்த்தம். 'எலோயீ' காண்க.

லாமேக். **Lamech**.

1. காயீனுடைய சந்ததியாரில் ஒருவன். இவனுக்கு இரண்டு மனைவிகளும், மூன்று குமாரரும், ஒரு குமாரத்தியும் உண்டு. ஆதி 4[18]. இவன் பாடின பாட்டின் கருத்து என்னவென்றால்: லாமேக் தன்னைக் கொலை செய்யவந்த ஒரு வாலிபனைக்கொன்றான் என்றும்; இவனுக்கு இதினிமித்தம் அந்த வாலிபனுடைய இனத்தார்கள் பழி வாங்குவார்கள் என்று இவனுடைய மனைவிகள் பயந்தார்கள் என்றும்; லாமேக்கோ தான் காயீனைப்போல் கொலைபாதகன் அல்லாததினால், ஒருவன் பழிவாங்க வந்தால், கடவுள் அந்தப் பழிவாங்கினவனுக்கு அதிகத் தண்டனை செய்வதாக நினைத்தான் என்றும் இதன் அர்த்தமாயிருக்கலாம்.

2. நோவாவின் தகப்பன். ஆதி 5[29] லூக் 3[36].

லாமேட். **Lamed**. எபிரெய பாஷை எழுத்தட்டவணையில் 12–ம் எழுத்து. சங் 119[89-96]–ல் ஒவ்வொரு வசனத்தின் முதல் பதத்தின் முதல் எழுத்து லாமேட்தான்.

லாயீஸ், லாயீஷ. **Laish**.

1. தாண் என்னும் ஊரின் முதல்பெயர். நியா 18[29]. இதற்கு 'லேசேம்' என்பது மூன்றும் பெயர். யோசு 19[47].

2. மீகாளை விவாகம் செய்த பல்தியேலின் தகப்பன். 1 சாமு 25[44] 2 சாமு 3[15].

லாயேல். **Lael**. எண் 3[24].

## லி

லிக்கவோனியா. **Lycaonia**. சிலிசியாவுக்கு வடக்கே, கலாத்தியாவுக்குத் தெற்கே, சின்ன ஆசியாவிலுள்ள ஒரு நாடு. லீஸ்திராவும் தெர்பையும் இதிலிருந்தன. அப் 14[6]. ஆதிக்கிறிஸ்தவ சபை இந்நாட்டில் நல்ல விர்த்தியை அடைந்தது.

லிக்கே. **Likhi**. 1 நாளா 7[19].

லிசானியா. **Lysanias**. எர்மோன் மலைக்கு வடக்கு 'காற்பங்கு தேசம்' என்னும் அபிலேனே நாடு இருந்தது. இதற்கு லிசானியா அதிபதியாய் இருந்தான் என்பதற்கு ஒரு நாணயமும் கல்லில் வெட்டின சில எழுத்துக்களும் அத்தாட்சி. லூக் 3[1]. அபிலேனே காண்க.

லித்தர்ஜி. **Liturgy**. ஆராதனை நடத்துகிற ஒழுங்கு அல்லது சட்டம்.

லித்தா, லோத். **Lydda, Lod**. யோப்பாவுக்குக் கிட்ட, பென்யமீன் கோத்திர நாட்டிலுள்ள ஓர் ஊர். 1 நாளா 8[12] எஸ்று 2[33] நெகே 7[37]. இதில் பேதுரு ஐனேயாவைச் சொஸ்தமாக்கினான். அப் 9[32].

லித்தானி. **Litany**. வேண்டுதல் அல்லது விண்ணப்பம் செய்யும் ஆராதனை.

லிபர்த்தீனர். **Libertines**. அப் 6[9].

ரோமர்கள் தங்கள் வீடு, நில, வியாபார, அலுவல்களை நடத்தும்படி அநேக அடிமைகளை வைப்பது வழக்கம். சமயாசமயத்திலே ஒரு எஜமான் தன் அடிமையின் ஊழியத்தை நன்குமதித்து அவனை விடுதலை செய்வதுமுண்டு. 'லிபர்த்தீனர்' என்பது 'விடுதலையடைந்தவர்கள்' என்று அர்த்தங்கொண்ட ஒரு லத்தீன்பதம். ஆகவே 'லிபர்த்தீனர்' என்பது முதலில் அடிமைகளாயிருந்து பின் சுயாதீனம் பெற்றவர்களைக் குறிக்கிறது. கி–மு. 63–ல் பாம்பி என்ற ஒரு ரோம சேனாபதி யூதர்களை ஜெயித்து, அவர்களில் அநேகரை அடிமைகளாக்கினபடியால், ரோமாபுரியில் யூத அடிமைகள் பலர் இருந்தார்கள். இவர்களுடைய சந்ததியாரில் சிலர் அப்போஸ்தலருடைய காலத்தில் சுயாதீனமடைந்து எருசலேமுக்குத் திரும்பிவந்து அதில் தங்களுக்காக ஒரு ஜெப ஆலயத்தைக் கட்டினார்கள். இவர்கள் ஸ்தேவானுக்கு விரோதமாயிருந்தார்கள். அப் 6[9].

லிபோனா. **Lebonah**. நியா 21[19].

லிப்னா. **Libnah**.

1. அரபிதேசத்தின் வனாந்தரத்தில் இஸ்ரவேலர் பாளயம் இறங்கின நமக்குத் தெரியாத ஓர் இடம். எண் 33[20].

2. தென் யூதாவில் லாகீசுக்குச் சமீபத்திலுள்ள ஓர் ஊர். யோசுவா இதைப் பிடித்தான். யோசு 10[29]. லேவியருக்கு ஏற்படுத்தப்பட்டது. யோசு 21[13]. யோராமின் காலத்தில் இதன் ஊரார் கலகம் செய்தார்கள். 2 இரா 8[22]. சனகெரிப் இதை முற்றுகை போட்டான். 2 இரா 19[8]. அமுத்தாள் இதில் பிறந்தவள். 2 இரா 23[31].

லிப்னி. **Libni**.

1. லேவியன் கோத்திரத்தில் ஒரு குடும்பம். யாத் 6[17] 1 நாளா 6[17].

2. அந்தக் கோத்திரத்தில் இன்னொரு குடும்பம். 1 நாளா $6^{29}$.

லிலீத். **Lilith**. சாதுருவி காண்க.

லிவியாதான். **Leviathan**. அசீரியர் முதலியவர்கள் விபரீதமும் பயங்கரமுமான ஜெந்துக்கள் உண்டென்று உறுதியாய் நம்பினார்கள். இவைகளில் 'லிவியாதான்' ஒன்று. இது ஒரு பறவை முதலையாயிருக்கலாம். யோபு $41^{1}$. இது பறக்கக்கூடிய வலுசர்ப்பம் என்று சொல்லலாம். ஏசா $27^{1}$. இந்த வசனத்தில் இரண்டு லிவியாதான் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் விரோதிகளாயிருந்த அசீரியாவையும் பாபிலோனியாவையும், அல்லது பாரசிகத்தையும் கிரேக்கையும் குறிக்கலாம். ரபிமார் சிருஷ்டிப்பின் ஐந்தாம் நாளிலே கடவுள் லிவியாதானையும் பிகெமோத்தையும் உண்டாக்கினார் என்றும், லிவியாதான் சமுத்திரத்தின் ஆழங்களில் ஜீவிக்கவேண்டுமென்றும், மேசியாவின் காலத்தில் லிவியாதானுடைய தோலின் ஓர் பாதி பக்தரின் கூடாரமாயிருக்குமென்றும், மற்றப் பாதி எருசலேம் மதிலின்மேல் கட்டப்படும் என்றும் பலவித கதைகளைச் சொன்னார்கள். யோபு $41^{1}$ சங் $74^{14}$ 2 எஸ்ரூஸ் $6^{49}$.

பின்வரும் வசனங்களிலுள்ள பதங்கள் எபிரெய பாஷையில் லிவியாதானைக் காட்டுகிறது.

'லிவியாதான்.' யோபு $41^{1}$ ஏசா $27^{1}$.

'முதலை.' சங் $74^{14}$.

'திமிங்கலம்.' சங் $104^{26}$. பிகெமோத், வலுசர்ப்பம் காண்க.

## லீ

லீசியா. **Lycia**. சின்ன ஆசியாவில் பம்பிலியாவுக்குத் தென் மேற்கிலுள்ள ஒரு மலைநாடு. இதில் யூதர்கள் அநேகர், கிறிஸ்தவர்கள் சிலர். இதின் விசேஷித்த பட்டணங்கள்: மீருவும், பத்தாராவும். அப் $21^{1}$ $27^{5}$.

லீசியா. **Lysias**. எருசலேம் கோட்டையில் ரோம போர்ச்சேவகர்களுடைய சேனாபதி. அப் $22^{28}$ $23^{26}$. கிலவுதியு லீசியா காண்க.

லீஸ்திரா. **Lystra**. தென் கலாத்தியாவில் லிக்கவோனியா நாட்டிலுள்ள ஒரு பெரிய பட்டணம். இதின் மூலமாய்ப் பிசிதியாவிலுள்ள அந்தியோகியாவுக்கு ராஜபாதை சென்றது. ரோமருடைய ராயன் இதில் ரோமபிரஜா சிலாக்கியம் பெற்றவர்களைக் குடியேற்றினான். இதிலுள்ளவர்கள் பெரும்பாலும் விக்கிரகாராதனைக்காரர். அப் $14^{13}$ 2 தீமோ $3^{11}$. இதில் பலர் யூதர்கள் இருந்தார்கள். அப் $16^{1}$. தீமோத்தேயு இதில் பிறந்தவன். பரி. பவுல் இதற்கு நாலுதடவை போனான். அப் $14^{6,21}$ $16^{1}$ $18^{23}$.

லீதியா. **Lydia**. சின்ன ஆசியாவின் மேல்கரையிலுள்ள ஒரு நாடு. கி-மு. 133. இது ரோமர்களுடைய ராஜ்யத்தில் சேர்க்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில் சொன்ன 'ஆசியா' என்னும் நாட்டில் இது ஒரு பாகம். இதில் சிமிர்னா, எபேசு, சர்தை என்னும் பட்டணங்கள் இருந்தன. எபிரெயர்கள் இதற்கு 'லூத்' என்று சொன்னார்கள். லூத் காண்க. எசே $30^{5}$ எரே $46^{9}$ அப் $16^{14}$.

லீதியாள். **Lydia**. பரி. பவுல் செய்த பிரசங்கத்தினால் பிலிப்பிப் பட்டணத்தில் குணப்பட்ட தியத்தீரா ஊராளாகிய ஒருத்தி. அப் $16^{14,40}$. இவள் இரத்தாம்பரம் விற்கிறவளானதினால் இவள் தனவாட்டியாய் இருந்திருக்கலாம்.

லீபனோன். **Lebanon**. [வெள்ளை.] பலெஸ்தீனாவின் வடமேற்கிலுள்ள ஒரு மலைநாடு. இது சீதோன் தேசத்தின் கிழக்குக்கும் தமஸ்குவின் மேற்குக்கும் இடையிலுள்ள நாடு. வடக்கிலிருந்து தெற்கே நூறு மைல் நீளமும், கிழக்கிலிருந்து மேற்கே ஏறக்குறைய இருபது மைல் அகலமுமுள்ளது. இதின் மேற்குப் பாகங்கள் மற்றதைவிட உயரமானவை. இதின் உன்னதமான சிகரம் 10,000 அடி உயரமாயிருக்கிறது. பெரும்பாலும் இம்மலைநாடு தென் இந்தியாவிலுள்ள பழனிமலையைப் போல் சராசரி 6,000 அடி உயரமுள்ளது. எர்மோன் மலை இம்மலைநாட்டின் தென் கிழக்கே யிருக்கிறது. இந்த மலையுச்சியில் உறைந்த மழை காணப்படும். எரே $18^{14}$. இதினாலே வெள்ளை என்று அர்த்தங்கொண்ட 'லீபனோன்' என்ற பேர் இதற்குக் கிடைத்தது. இதின் இடையிலுள்ள பள்ளத்தாக்குகளில் லெயோன்தேஸ் (*Leontes*) நதியும் யோர்தான் நதியின் ஒரு ஊற்றும் உற்பத்தியாகின்றன. இம்மலைநாட்டில் கேதுரு முதலிய பிரயோஜனமுள்ள மரங்கள் மிகுதியாய்ச் செழித்தோங்கி வளருகின்றன. லீபனோன் மலை இஸ்ரவேல் புத்திரர் பிடித்த தேசத்தின் வட எல்லை. உபா $1^{7}$ $11^{24}$. எபிரெயர் இதைப் பிடிக்க ஆசித்த போதிலும் இதை ஜெயிக்கவில்லை. நியா $3^{3}$. இதின் மகிமையும் அலங்காரமும் பல வசனங்களில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஏசா $10^{34}$ $35^{2}$ $60^{13}$. இதில் வளர்ந்த மரங்கள். சங் $72^{16}$ ஏசா $60^{13}$ எரே $22^{23}$. சாலொ

மோன் தான் கட்டின கட்டடங்களுக்கு ஈராம் மூலமாய் இதின் காடுகளிலிருந்த கேதுரு மரங்களை வெட்டிக் கொண்டுபோனுன். 1 இரா $5^{9}$. அசீரியர்களும் இவ்விதமாகவே இங்கிருந்த கேதுரு மரங்களை உபயோகித்தார்கள். எசா $14^{8}$ $37^{24}$ எசே $31^{16}$ எசா $14^{7}$. பூர்வீக ஜனங்கள் இதில் பல கோபுரங்களையும் கட்டினுர்கள். உன்.பா $7^{4}$. முற்காலத்தில் இதில் யானை சஞ்சரித்தது. தற்காலத்தில் கரடி, சிறுத்தை, கழுதைப்புலி, ஓநாய் இங்கே காணப்படுகின்றன. தற்காலத்து ஜனங்கள் இந்த மலைச்சரிவில் திராட்சை, ஒலிவம், முசுக்கட்டை, அத்தி முதலியவைகளைப் பயிரிட்டு வருகிறுர்கள்.

லீபியா. **Libya.** 'லீபியா.' அப் $2^{10}$. 'லீபியர்.' எசே $38^{5}$ தானி $11^{43}$. 'லூபீம்.' நாகூ $3^{9}$. எகிப்துதேசத்துக்குக் கிழக்கே, வட ஆப்பிரிக்காவில் குடியேறின ஒரு ஜனம். இவர்கள் யுத்தத்தில் வீரமுள்ளவர்களாயிருந்து ஏறக்குறைய கி—மு. 930-ம் ஷூத்தில் எகிப்து தேசத்தை ஜெயித்தார்கள். சீஷாக் என்பவன் இவர்களுக்கு ராஜாவாயிருந்தான்.



சிவப்பு லீலி

லீலிபுஷ்பம். **Lily.** தமிழ் வேதாகமத்தில் சொல்லப்படும் லீலிபுஷ்பம் நாம் அறிந்த தாமரைப் புஷ்பத்தைப் போன்றது. 1 இரா $7^{19}$ 2 நாளா $4^{5}$ உன்.பா $2^{1}$ ஓசி $14^{5}$. மத் $6^{28}$ லூக் $12^{27}$–ல் சொல்லப்படும் காட்டுப் புஷ்பங்கள் இவ்வகையைச் சேர்ந்திருக்கலாம். பலெஸ்தீனுவிலுள்ள தாமரைப் புஷ்பஜாதியில் பல வகைகள் உண்டு.

லீனு. **Linus.** ரோமாபுரியில் ஒரு கிறிஸ்தவன். பவுலும் பேதுருவும் இரத்தசாட்சிகளாய் மரித்தபின் இவன் ரோமாபுரியிலுள்ள சபைக்கு 12 வருஷங்களாக அத்தியட்சராயிருந்தார். 2 தீமோ $4^{2}$.

## லூ

லூகியு. **Lucius.**

1. சிரேனேயிலிருந்து அந்தியோகியாவுக்கு வந்த ஒரு கிறிஸ்தவ தீர்க்கதரிசி. அப் $13^{1}$.

2. பரி. பவுலின் இனத்தான். இவனும் முன்சொன்னவனும் ஒரே ஆளாயிருக்கலாம். ரோம $16^{21}$.

லூக்கா 'சுவிசேஷகன்.' **Luke the Evangelist.** பரி. பவுலின் தோழன். கொலோ $4^{14}$ பிலே $1^{24}$ 2 தீமோ $4^{11}$. இவன் மூன்ரும் சுவிசேஷத்தையும் அப்போஸ்தலர் நடபடியாகமத்தையும் எழுதினுன் என்று வேதசாஸ்திரிகளில் அநேகர் அபிப்பிராயப்படுகிறுர்கள். இவன் அப்போஸ்தல நடபடியாகமத்தின் நூலாசிரியனுனல், இவன் பரி. பவுலோடு அடிக்கடி சுவிசேஷப்பிரயாணம் பண்ணினுன் என்பதை அந்நூலில் பல இடங்களில் வழங்கியிருக்கிற 'நாம்' என்னும் தன்மைப் பன்மைப் பெயரால் அறிகிறோம். சிலர் நினைக்கிறபடி இவனும் சிரேனே ஊரிலிருந்து வந்த லூகியும் ஒருவன்தான். அப் $13^{1}$. இவன் தர்சுப்பட்டணத்துச் சர்வகலாசாலையில் வைத்திய சாஸ்திரம் கற்றுத்தேர்ந்தவன் என்றும், பரி. பவுல் இவனைக் குணப்படுத்தினுன் என்றும், இவன் இயேசு செய்த விஷயங்களைக் கண்ணுல் காணவிட்டாலும் (லூக் $1^{2}$) அவற்றைக்குறித்து ஆழ்ந்த ஆராய்ச்சிசெய்து விசாரித்தறிந்தான் என்றும் வேதசாஸ்திரிகள் நினைக்கிறுர்கள். இவன் புறமதத்திலிருந்து கிறிஸ்து மதத்துக்கு வந்தவன். கொலோ $4^{14}$. பிந்திய நூற்றுண்டுகளிலிருந்த கிறிஸ்தவர்களுடைய பாரம்பரியத்தின்படி மகா விநோதமான படங்களை எழுதும் சித்திர சாஸ்திரியாகிய இவன் பரி. மரியாளின் படத்தை வரைந்தான். இவன் ரத்தசாட்சியாய் மரித்தான் என்று சிலர் நினைக்கிறுர்கள்.

லூக்கா எழுதின சுவிசேஷம். **The Gospel according to Luke.**

1. இது மூன்றும் சுவிசேஷம்.

கி-பி. 100-க்குப்பின் யுஸ்தின் மார்ட்டர், தாதியன் முதலியவர்கள் லூக்கா எழுதின சுவிசேஷத்தை நன்ருய் அறிந்திருந்தார்கள். ஏறக்குறைய கி-பி. 190-ம் வருஷத்தில் ஐரேனேயு பரி. லூக்கா இந்த சுவிசேஷத்தை எழுதினுன் என்று முதலாவது சொல்லுகிருன். கி-பி. 100-க்கு முன்னே ரோமாபுரிக் கிளமெந்து, இக்னத்தியு, போலிக்கார்பு என்பவர்கள் அப்போஸ்தல நடபடியாகமத்திலிருந்து சில வாக்கியங்களை மேற்கோளாக எடுத்துரைக்கிருர்கள். நடபடியாகமத்தின் முகவுரையில் லூக்கா எழுதின சுவிசேஷத்தைப்பற்றிப் பேசுகிறதினுலே, அப்போஸ்தலர் நடபடியாகமத்தை அறிந்திருந்த ஆதிக்கிறிஸ்தவ சபை பிதாக்கள் சுவிசேஷத்தையும் அறிந்திருந்தார்கள் என்று தோன்றுகிறது.

2. பொருளடக்கம்.

I. $1^{1-4}$. முகவுரை.

II. $1^{5}-2^{52}$. இயேசுவின் பால்ய பிராயத்தைப்பற்றிய சரித்திரம். இது இந்தச் சுவிசேஷத்துக்குமட்டுமே உரியது.

III. $3^{1}-9^{50}$. இயேசு விசேஷமாய்க் கலிலேயாநாட்டில் செய்த ஊழியம்.

இதில்—*a*. $3^{1}-6^{19}$. பரி. மாற்கு எழுதின சுவிசேஷத்தின்படி சரித்திரம் எழுதுகிற பரி. லூக்கா, பரி. மாற்கு சொல்லாத சில விஷயங்களைச் சேர்த்தெழுதுகிருன். இதில் விசேஷமானவை: யோவான்ஸ்நானகன், இயேசுவின் சோதனை, அதிசயமாய் மீன் பிடிபட்டது, பாவியான ஸ்திரீ தைலம் பூசியது, இயேசு அருளின சில நன்மொழிகள்.

*b*. $6^{20}-8^{3}$. பரி. மாற்கு சொல்லாத விஷயங்களைப் பரி. லூக்கா இங்கே சொல்லுகிருன். அவையாவன: மலைப்பிரசங்கம், நூற்றுக்கதிபதியின் சேவகனைச் சுகப்படுத்தினது, நாயினூர் விதவையின் மகனுக்கு உயிர்கொடுத்தல்.

*c*. $8^{4}-9^{50}$. கலிலேயா நாட்டில் இயேசு செய்த ஊழியம், பன்னிருபேருக்கும் இயேசு அருளிய கற்பனைகள், இயேசு மறுரூபமானது. இவைகளைப் பரி. மாற்கு சொன்னதுபோலவே பரி. லூக்காவும் சொல்லுகிருன்.

IV. $9^{51}-19^{28}$. எருசலேமுக்குச் செய்த பிரயாணங்கள்- கலிலேயா நாட்டுக்குப் புறம்பே இயேசு செய்த ஊழியம்.

*a*. $9^{51}-18^{14}$. எரிகோப் பட்டணத்துக்குப் போனவன் கள்ளர் கையில் அகப்பட்ட உவமை, இயேசு அருளிய பிரசங்கங்கள், மூடனுகிய ஆஸ்திக்காரன் உவமை, காணுமற்போன ஆட்டின் உவமை, காணுமற்போன வெள்ளிக்காசின் உவமை, காணுமற்போன மகன் உவமை, அநீதியுள்ள உக்கிராணக்காரன் உவமை, பரிசேயனும் ஆயக்காரனும் என்னும் உவமை முதலியவைகள் பரி. மாற்கு எழுதின சுவிசேஷத்தில் இல்லை.

*b*. $18^{15}-19^{28}$. பரி. மாற்குவைப்போலவே பரி. லூக்காவும் சரித்திரம் எழுதுகிருன்.

பிரதமப்பிரமாணம், தம்மரணத்தைப்பற்றிய முன்னறிவிப்பு, சகேயு, பத்துராத்தலின் உவமை, பரி. லூக்காமாத்திரம் சகேயுவைப்பற்றிப் புதிதாய்ச் சொல்லுகிருன். மற்ற விஷயங்களில் அவன் பரி. மாற்கு எழுதின சுவிசேஷத்தின் பொருள் அட்டவணையின்படி எழுதுகிருன்.

V. $19^{29}-21^{28}$. எருசலேமில் கடைசியாய்ச் செய்த ஊழியம். பரி. மாற்கு சுவிசேஷத்தைப்போலவே பரி. லூக்காவும் எருசலேமில் செய்த கடைசி ஊழியத்தைப்பற்றிச் சொல்லுகிருன். ஆயினும் பரி. மாற்கு சொல்லாத அநேக காரியங்களைப்பற்றிப் பரி. லூக்கா சொல்லுகிருன்.

VI. $22^{1}-24^{53}$. பரி. மாற்குவைப்போலவே பரி. லூக்கா இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும்பற்றிச் சொல்லுகிருன். ஆயினும் குணப்பட்ட திருடன், எம்மாவு ஊருக்குப் போன சீஷர் முதலிய சில விஷயங்களைப்பற்றிய விசேஷங்களையும் விபரமாய்ச் சொல்லுகிருன்.

3. இதன் உற்பத்தி.

இந்நூலின் முகவுரையை நீம் வாசித்தால் இதன் ஆக்கியோன் தனக்கு முந்தினவர்கள் இயேசுவைக்குறித்து எழுதியிருந்த சரித்திரங்களை வாசித்திருந்தான் என்றும், தான் இயேசுவைக் கண்ணூரக் காணவில்லையென்றும் காண்கிறோம். இவன் இயேசுவினுடைய சரித்திரத்தை எழுதும்பொழுது பரி. மாற்கு எழுதின சுவிசேஷத்தையாவது அதைப்போன்ற இன்னொரு சுவிசேஷத்தையாவது உபயோகித்திருப்பான். மேலும் இயேசுவின் பிரசங்கங்களை இவன் எழுதும்பொழுது 'இயேசுவின் நன்மொழித்திரட்டு' என்னும் நூலையும், அவருடைய பாலபருவத்தைக்குறித்து எழுதும்பொழுது ஒருவேளை பரி. மரியாள் தனக்கு அறிவித்திருந்த விஷயங்களையும் தனது நூலோடு சேர்த்தெழுதினுன். இவன் பரி. பவுலுக்குத் தோழனுயிருந்ததினுல், பரி. பவுலோடு செசரியாவில் இரண்டு வருஷக்காலமும்

ரோமாபுரியில் இரண்டு வருஷக்காலமும் சிறைச்சாலையிலிருக்கும்பொழுது, இயேசுவின் சரித்திரம் சம்பந்தமான விஷயங்களைப்பற்றி விசாரிக்கிறதற்கு இவனுக்குச் சமயம் கிடைத்திருக்கும். அப் $24^{7}$ 28 அதி.

4. ஆக்கியோன்.

அப்போஸ்தல நடபடியாகமத்துக்கும் மூன்றாம் சுவிசேஷத்துக்கும் ஆக்கியோன் ஒருவனே என்று அப்போஸ்தல நடபடியாகமத்து முகவுரையால் தெரிகிறது. ஆதிக்கிறிஸ்தவர்கள் கைக்கொண்ட பாரம்பரியத்தின்படி இதை எழுதின லூக்கா என்பவன் பரி. பவுலுடனே பிரயாணம் பண்ணின 'வைத்தியனாகிய லூக்கா.' அப்படியில்லாவிட்டால் இவன் இன்னான் என்று நமக்குத் தெரியாது.

5. காலம்.

பரி. பவுல் ரோமாபுரியில் சிறைச்சாலையில் இருக்கும்பொழுது, இவன் அவனுக்குத் தோழனாயிருந்ததினால் (கொலோ $4^{14}$ பிலே $1^{24}$) இவன் அக்காலத்தில் இந்தச் சுவிசேஷத்தை எழுதினான் என்று தோன்றுகிறது. அப்படியானால் இவன் கி-பி. 60-ம் ஞூத்தில் இந்தச் சுவிசேஷத்தை எழுதியிருப்பான். இது கி-பி. 70-80 இடையில் எழுதப்பட்டது என்று சிலர் நினைக்கிறார்கள். ஆயினும் இது எழுதப்பட்ட வருஷத்தைக் குறிக்கிறதற்குப் போதிய அத்தாட்சி இல்லை.

6. நோக்கம்.

பரி. லூக்கா, தனக்கு முந்தி எழுதினவர்கள் விஷயமனைத்தையும் தெரிந்துகொள்ளாமல் எழுதினார்கள் என்றறிந்து,தான் விபரமாய் விசாரித்தறிந்த விஷயங்களை இந்நூலில் எழுதினான். இவன் புறமதத்தினின்று கிறிஸ்துமதப் பிரவேசம் பண்ணினவர்களுக்கே இந்த நூலை எழுதினதினாலே யூதருடைய வழக்கப் பழக்கங்களை விபரமாய் எழுதுகிறான். லூக் $22^{1}$. மேலும் எபிரெய பதங்களுக்குப் பதிலாக அவைகளுக்குரிய கிரேக்கப் பதங்களைச் சொல்லுகிறான். லூக் $20^{21}$ $23^{53}$. இவன் பழைய ஏற்பாட்டு வசனங்களில் சிலவற்றை மட்டும் மேற்கோளாக எடுத்துரைக்கிறான். இப்படிப்பட்ட விஷயங்களில் யூதர்களல்லாதவர்கள் இயேசுவுக்கு நேரிட்ட விஷயங்களைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ளும்படி விபரமாய் எழுதுகிறான். இவன் வைத்தியனாயிருந்ததினால், இவனுடைய சுவிசேஷத்தில் விசேஷ வைத்திய சாஸ்திரப் பதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவன் குடும்ப விஷயமாயும் ஸ்திரீகள் விஷயமாயும் இயேசு அருளின நன்மைகளை விசேஷமாய்ச் சொல்லுகிறான். மற்ற சுவிசேஷகர்களைவிட இவன் தேவதூதரைக்குறித்து விசேஷமாய்க் கூறுகிறான். சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் அந்நியமார்க்கத்திலிருந்து கிறிஸ்துமதப் பிரவேசஞ்செய்தவர்கள் இயேசுவின் சரித்திரத்தை அறிந்துகொள்ளக்கூடியவிதமாய் இவன் இந்நூலை எழுதுகிறான் என்று காண்கிறோம்.

7. லூக்காவின் யதார்த்தத்துவம்.

அப்போஸ்தலர் நடபடியாகமத்தில் சொன்ன விஷயங்களைக்குறித்து விசாரணை செய்த வேதசாஸ்திரிகள் இந்நூலின் ஆசிரியன் பூகோளசாஸ்திரம், காலக்கிரமம், ரோம அரசாட்சியின் முறை, வெவ்வேறான ஜனங்களின் வழக்கப்பழக்கங்கள் முதலிய இப்படிப்பட்ட விஷயங்களைக்குறித்து யாதொரு தப்பிதமும் இல்லாமல் வெகு ஜாக்கிரதையாய் எழுதுகிறான் என்று அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். இவ்வண்ணமாக இவன் இந்தச் சுவிசேஷத்தில் காலக்கிரமம் முதலியவற்றைப்பற்றி அதிக ஜாக்கிரதையாய்ச் சொல்லுகிறான். லூக் $3^{1}$-ல் இவன் காலக்கிரமத்தைப்பற்றிச் சொன்ன வசனம் இதற்குத் திருஷ்டாந்தம். சிரேனியுவின் காலத்தில் செய்த குடிமதிப்பைப்பற்றி இவன் சொல்லுகிறதைக்குறித்துச் சிலர் ஆக்ஷேபனை பண்ணியிருக்கிறார்கள். ஆனால் சங்கைபொருந்திய ராம்சே பண்டிதர் சில வருஷங்களுக்கு முன்னே இதைக்குறித்து விசேஷித்த விசாரணை செய்து, பரி. லூக்கா சொன்னபடி அந்தச் சிரேனியு அக்காலத்தில் ரோமராயனின் விசேஷித்த ஏற்பாட்டின்படி சீரியாவிலே உத்தியோகஞ்செய்து யூதர்களுடைய வழக்கத்தின்படி அத்தேசத்திலே குடிமதிப்பெழுதினான். சிரேனியு காண்க. சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் லூக்கா தான் அறிந்த காலக்கிரமத்தைக்குறித்து நமக்குத் தெரிவிக்கிறான். ஆனால் இவனுடைய நூலிலே சகலமும் காலக்கிரம முறைப்படி எழுதுவது இவனுக்கு நோக்கம் அல்ல. இயேசுவின் சரித்திரத்தின் பொருளைத் தெளிவாயும் ஒழுங்காயும் காட்டுவதே இவனுடைய முதல் கருத்து.

லூஸ். **Luz**.

1. பெத்தேலின் முதல் பெயர். ஆதி $28^{19}$ $35^{6}$ $48^{3}$ யோசு $16^{2}$ $18^{13}$ நியா $1^{23}$.

2. ஏத்தியரின் தேசத்திலுள்ள ஓர் ஊர். நியா $1^{26}$.

லூத், லூதீம். **Ludim**.

1. 'லீதியா' 'லீதியர்' என்னும் கிரேக்க பதங்களுக்குப் பதிலாக எபிரெய பாஷையில் 'லூத்' 'லூதீம்' வழங்கும் பதங்கள். லிதியா காண்க. எபிரெய பாரம்பரியத்தின்படி லூத் என்பவன் சேமின் நாலாம் மகனாய் இருந்தான். ஆதி $10^{22}$.

2. மிஸ்ராயீமின் மகனாகிய லூத் என்பவனும் அவனுடைய சந்ததியாரும் ஆப்பிரிக்காவில் வசித்த ஒரு ஜனமாயிருக்கலாம். அல்லது இவர்களும் 'லூபீம்' என்னும் லீபியா நாட்டாரும் ஒரே ஜனமாயிருக்கலாம். ஆதி $10^{13}$ ஏசா $66^{19}$ எசே $27^{10}$ $30^{5}$.

லூபீம். **Lubim**. 2 நாளா $12^{3}$ $16^{8}$ நாகூ $3^{9}$. லிபியா காண்க.

## லெ

லெகாபீம். **Lehabim**. இவர்களும் 'லூபீம்' என்பவர்களும் ஒரே ஜனம். ஆதி $10^{13}$.

லெத்தூசீம். **Letushim**. ஆபிரகாமின் பேரப்பிள்ளை. இவன் சந்ததியார் வட அரபிதேசத்திலுள்ள ஒரு கோத்திரம். ஆதி $25^{3}$.

லெபாயோத். **Lebaoth** = பெத்-லெபாயோத். யோசு $15^{32}$ $19^{6}$.

லெபானா. **Lebana**. எஸ்றா $2^{45}$ நெகே $7^{48}$.

லெபேயு. **Lebbaeus**. மத் $10^{3}$. ஒரு அப்போஸ்தலன். ததேயு காண்க.

லெயூமீம். **Leummim**. ஆபிரகாமின் பேரப்பிள்ளை. இவனுடைய சந்ததியார் வட அரபிதேசத்திலுள்ள ஒரு கோத்திரம். ஆதி $25^{3}$.

## லே

லேகி. **Lehi**. (ராமாத்-லேகி காண்க.)

லேகியோன். **Legion**. இயேசுவின் காலத்தில் ரோமர்களுடைய சேனையிலுள்ள 'லேகியோன்' என்னும் பட்டாளத்தில் 6,000 பெயர் சேர்ந்ததினால், யூதர்கள் பெருந்தொகையைக் காட்டும்படி 'லேகியோன்' என்னும் பதத்தை வழங்குவார்கள். மத் $28^{53}$ மாற் $5^{9}$ லூக் $8^{30}$. 'லேகியோன்' என்னும் பட்டாளத்தின் விவரம் அறியும்படி நூற்றுக்கதிபதி காண்க.

லேக்கா. **Lecah**. 1 நாளா $4^{21}$.

லேசேம். **Leshem**. = லாயீஸ். யோசு $19^{47}$.

லேமுவேல். **Lemuel**. நீதி $31^{1-9}$-ல் அடங்கிய நல்மொழி லேமுவேல் என்னும் மாசாவின் ராஜாவுக்கு இவனுடைய தாயாரால் சொல்லப்பட்டிருக்கிறது. இவனைப் பற்றி வேறொன்றும் தெரியாது. இந்தப் பதத்தின் அர்த்தம்: 'கடவுளுக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டவன்'. இது சாலொமோன் என்பவனைக் குறிக்கும் என்று எபிரெய ரபிமார் நினைத்தார்கள்.

லேயாள். **Leah**. லாபானின் மூத்த மகள். யாக்கோபின் முதல் மனைவி. இவள் ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன் என்னும் ஆறு ஆண்பிள்ளைகளையும், தீனாள் என்னும் ஒரு பெண்பிள்ளையையும் பெற்றாள். யாக்கோபு எகிப்து தேசத்துக்குப் போகுமுன் மரித்தாள். மக்பேலாவில் அடக்கம் பண்ணப்பட்டாள். ஆதி $29^{16}$-$31^{33}$ $34^{1}$ $46^{15}$ $49^{31}$ ரூத் $4^{11}$.

லேவி. **Levi**.

1. யாக்கோபுக்கும் லேயாளுக்கும் பிறந்த மூன்றாம் குமாரன். கெர்சோன், கோகாத், மெராரி ஆகிய மூவரும் இவனுடைய புத்திரர். ஆதி $29^{34}$ $46^{11}$. இவனும் சிமியோனும் சதிமோசம்செய்து சீகேமியரில் அநேகரைக் கொன்றுபோட்டதினிமித்தம் யாக்கோபு இவன் சந்ததியாருக்குக் கெடுதிவரும் என்று முன்னறிவித்தான். ஆதி $34^{25}$ $49^{5}$. ஆனால் இவன் சந்ததியார் யேகோவாவினிடம் பக்திவைத்தபடியால் மோசே இவர்களை ஆசீர்வதித்தான். உபா $33^{3}$.

2. இவனுடைய கோத்திரத்தார் இஸ்ரவேலின் மற்றக் கோத்திரங்களைப்போலத் தங்களுக்கு ஒரு நாட்டைச் சுதந்தரித்துக் கொள்ளவில்லை. ஆனால் மற்றக் கோத்திரத்தார் தாங்கள் பெற்ற நாடுகளிலிருந்து இவர்களுக்கு மானியங்களைக் கொடுத்தார்கள். யோசு $21^{1}$.

இவர்கள் எபிரெயர்களுக்கு ஆசாரியர்களும் தேவாலயப் பணிவிடைக்காரருமாயிருந்தார்கள். எண் $3^{12}$. வனாந்தர பிரயாண காலத்திலே இவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தையும், அதின் பணிமுட்டுகளையும் பாதுகாத்துவந்தார்கள். எண் $1^{51}$. இவர்கள் சாலொமோனின் தேவாலயத்திற்குக் காவலாளிகளும் பணிவிடைக்காரருமாயிருந்தார்கள். இவர்கள் இஸ்ரவேலருக்கு வேதத்தைப் போதித்து, நியாயப்பிரமாணத்தின்படி அவர்களை நியாயம் விசாரித்தார்கள். 2 நாளா $17^{8}$ $19^{8}$ $30^{22}$ நெகே $8^{7}$. இவர்களுடைய சவரட்சணைக்காக மற்றவர்கள் தசமபாகம் செலுத்தினார்கள். எண் $18^{24}$. ஆனால் இவர்கள் ஆசாரியர்களுக்குத் தசமபாகம் செலுத்தவேண்டியிருந்தது. நெகே $10^{38}$. இவர்களுக்கு நியமிக்கப்பட்ட ஊர்

களில் அடைக்கல பட்டணங்கள் ஆறு. எண் $35^{1}$.

லேவிக்கோத்திரமானது, கெர்சோனியர், கோகாத்தியர், மொராரியர் ஆகிய மூன்று குடும்ப வழியாகப் பிரிக்கப்பட்டது. 1 நாளா $23^{26}$. ஒரு லேவியன் தன் 25-ம் வயதில் தன் ஊழியத்தைக் கற்க ஆரம்பித்து 30-ம் வயதில் லேவியருக்குரிய முழுக்கடமையைத் துவக்குவான். எண் $4^{3}$ $8^{24}$. ஆனால் தாவீது, இவர்கள் தங்கள் 20-ம் வயதில் தங்கள் ஊழியத்தைக் கற்று, 50-ம் வயதிற்குப்பின் ஊழியம் செய்ய அவசியம் இல்லை என்று ஏற்பாடு செய்தான். 1 நாளா $23^{24}$. இவர்கள் தேவாலய பணிவிடை செய்யும்படி, வகுப்பு வகுப்பாக எருசலேமுக்கு வந்து ஒரு வாரமாக ஊழியத்தை நிறைவேற்றித் திரும்புவார்கள். 1 நாளா $9^{25}$ 2 நாளா $23^{4}$ $31^{17}$ எஸ்றா $3^{8}$. சிறையிருப்பிலிருந்து வந்தவர்களில் லேவியர்கள் அநேகர். எஸ்றா $2^{40}$ நெகே $11^{15}$. புதிய ஏற்பாட்டில் சொல்லப்படும் வேதபாரகரும் நியாயசாஸ்திரிகளும் சாதாரணமாய் லேவிக்கோத்திரத்தைச் சேர்ந்தவர்களே. ஆசாரியர் காண்க.

3. லேவி என்ற அப்போஸ்தலன். மத்தேயு காண்க. மாற் $2^{14}$ லூக் $5^{27}$.

4. இயேசுவின் முன்னோர்களில் ஒருவன். லூக் $3^{24}$.

5. இயேசுவின் முன்னோர்களில் வேறொருவன். லூக் $3^{29}$.

லேவியராகமம். **Leviticus**.

1. பெயர்.

கிரேக்கு பாஷையில் எபிரெய வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்கள் இந்த நூலுக்கு 'லேவியராகமம்' என்று பெயரிட்டாலும் இந்த நூலில் லேவியரைக்குறித்து அல்ல, ஆசாரியர்களைக் குறித்தே விசேஷமாய்ச் சொல்லியிருக்கிறது. ஆதலால் தல்மூத்திலே எபிரெய வேதசாஸ்திரிகள் இதற்கு 'ஆசாரியனுடைய ஆசார ஆகமம்' என்னும் பெயரையே கூறுகிறார்கள். இந்நூலில் இஸ்ரவேலருடைய சரித்திரத்தைப் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. இதில் ஆசாரியர்கள் கைக்கொண்ட ஆசாரம், அவர்கள் நடத்தின சடங்குகள், ஜனங்களுக்கு அவர்கள் சுத்தாசுத்தத்தைப்பற்றிப் போதித்த விதிவிலக்குகள் முதலிய விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

2. பொருளடக்கம்.

I. பலிகளுக்குரிய பிரமாணங்கள். 1-7 அதி.

*a*. $1^{1}$-$6^{7}$. தகனபலி, போஜனபலி, சமாதானபலி, பாவநிவாரணபலி, குற்ற நிவாரணபலி.

*b*. $6^{8}$-$7^{38}$. ஆசாரியர் பலிசெலுத்தும் போது கவனிக்கவேண்டிய சில பிரமாணங்கள்.

II. $8^{1}$-$10^{20}$. ஆசாரியர் பிரதிஷ்டை. பரிசுத்தக்குலைச்சல் செய்ததால் நாதாப் அபியு என்னும் இருவருக்கும் வந்த தண்டனை. ஆசாரியரின் பரிசுத்தத்தைப்பற்றிய வேறு சில விதிகள்.

III. $11^{1}$-$15^{33}$.

*a*. 11 அதி. புசிக்கவும் தொடவும் தகுந்த மிருகங்களும் தகாத மிருகங்களும்.

*b*. 12 அதி. பிரசவத்தீட்டு.

*c*. 13-14 அதி. குஷ்டரோகத் தீட்டு. குஷ்டரோகி. வீட்டின் குஷ்டரோகம்.

*d*. 15 அதி. தேசசுத்தத்தைக் குறித்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரிய சில பிரமாணங்கள்.

IV. பாவநிவாரண நாளின் ஆசரிப்பு. 16 அதி.

V. பரிசுத்தத்தின் பிரமாணம். 17-26 அதி. இந்த அதிகாரங்களில் சொல்லியிருக்கிற பிரமாணங்கள் முதலிலே ஒரு பிரத்தியேக நூலாய் இருந்தது. லேவியராகமத்தை எழுதினவன் இந்தப் பிரமாண ஆகமத்தைத் தனது நூலில் சேர்த்தெழுதினான். இதில் எபிரெயர் கவனிக்கவேண்டிய பிரமாணங்கள் அநேகம் உண்டு. இந்த அதிகாரங்களுக்கும் எசேக்கியேல் தீர்க்கதரிசி எழுதிய பிரமாணங்களுக்கும் ஒற்றுமை உண்டு.

$17^{1-9}$. பலியிட்ட மிருகங்களை ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலிலே பலி செலுத்துதல்.

$17^{10-16}$. புசிக்கக்கூடாத ரத்தம் முதலியன.

18 அதி. இயற்கைக்கு விரோதமானவைகள். இயல்புக்கு விரோதமான இச்சைகள் விக்கிரகங்களுக்குக் குழந்தைகளைப் பலி செலுத்துதல்.

$19^{1-2}$. எச்சரிப்பு.

$19^{3-8}$. பெற்றோரைப்பேணல், ஷபாத்து, விக்கிரகம், சமாதானபலி.

$19^{9-18}$. பிறருக்குச் செய்யத்தகாதவை.

$19^{19}$. விதை விதைக்கிற விஷயம்.

$19^{20-37}$. அடிமைப்பெண்கள், கனிமரம், பில்லிசூனியம், வேசித்தனம், கள்ளத்தராசு முதலியவைகளைக் குறித்த பிரமாணங்கள்.

20 அதி. எச்சரிப்பு.

21–22 அதி. ஆசாரியரின் பரிசுத்தம், கலியாணம், ஊழியம்.

23 அதி. ஷபாத்து, பஸ்கா, முதற்பலன் காணிக்கை. மாதங்களின் பண்டிகை, பாவ நிவாரண நாள், கூடாரப் பண்டிகை முதலியன.

24 அதி. சந்நிதி ஸ்தானத்தில் எரியும் தீபத்துக்கு எண்ணெய், தேவ சமுகத்து அப்பம், தேவதூஷணம், இவற்றைப்பற்றிய பிரமாணங்கள்.

25 அதி. யூபிலி வருஷத்தில் நிலத்தைத் திருப்பிக்கொடுத்தல் முதலியவற்றைப் பற்றிய பிரமாணங்கள்.

26. அதி. உடன்படிக்கையைப் பற்றிய எச்சரிப்பும் வாக்குத்தத்தமும்.

VI. 27 அதி. இது இந்நூலுக்கு முடிவுரையாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிரதிக்கினை, பிரதிஷ்டை செய்தவைகளை மீட்டல் முதலியவற்றைப்பற்றிச் சொல்லுகிறது.

3. காலம். இந்த நூலை நாம் ஆராய்ச்சி செய்யும்போது பிந்தியகாலத்தில் எழுதின பிரமாணங்களையும் பூர்வீககாலத்துப் பிரமாணங்களையும் பிரித்து ஆராய்ந்தால் இதில் பூர்வீககாலத்தில் இஸ்ரவேலர் கைக்கொண்ட குடும்ப ஆசாரத்தையும் மார்க்க ஆசாரத்தையும், பிந்தியகாலங்களில் இவற்றில் உண்டான மாறுதல்களையும் அறியலாம். இதில் எழுதின பரிசுத்தத்தின் பிரமாணத்துக்கும் உடன்படிக்கையின் ஆகமத்துக்கும் (யாத் 20-23 அதி.) உபாகமத்தில் சொன்ன பலவிஷயங்களுக்கும் ஒற்றுமையுண்டு. இவைகளெல்லாம் மார்க்க விஷயத்திலும் குடும்ப விஷயங்களிலும் இஸ்ரவேல் ஜனத்தின் சுகத்துக்கடுத்த விஷயங்களிலும் அவர்கள் விருத்தியடையும்படி நாடுகிறது. விக்கிரகாராதனைக்கு விரோதமாய் இதில் சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கும் உபாகமத்தில் கூறிய பிரமாணங்களுக்கும் ஒற்றுமையுண்டு. பரிசுத்தத்தின் பிரமாணம் உண்டானகாலத்தில் இஸ்ரவேலருக்கு எருசலேமிலே மாத்திரம் அல்ல, வேறு அநேக இடங்களிலும் பரிசுத்த ஸ்தலங்கள் இருந்தன என்றும்; அக்காலத்தில் அவர்கள் நடத்தின பண்டிகைகள் பயிர் வேலை செய்தவர்கள் நடத்தின பண்டிகைகளே என்றும் பார்த்து பரிசுத்தத்தின் பிரமாணத்துக்குப் பிற்பாடு உபாகமம் என்னும் நூல் எழுதப்பட்டது என்று அறிகிறோம். ஏனென்றால் உபாகமத்தில் இஸ்ரவேலர் அனைவரும் தலைநகரியாகிய எருசலேம் பட்டணத்தில் பெரிய தேவாலயத்தில் நடத்தி வந்த ஆராதனையைப்பற்றி விவரமாய்ச் சொல்லியிருக்கிறது. ஆதலால் இஸ்ரவேலர் சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த கால முதல் நமது வேதாகமத்தில் இருக்கிற மாதிரியின்படி முதலாவது லேவியராகமம் எழுதப்பட்டது என்று நாம் சொல்லலாம்.

4. ஆக்கியோன். இதை இயற்றினவன் இன்னான் என்பது நமக்குத் தெரியாது. இதில் கண்ட பிரமாணங்களெல்லாம் இஸ்ரவேலர் சிறையிருப்புக்குப் போகுங் காலத்துக்குமுன்னே அவர்களுள் பக்தரான சிலர் கைக்கொண்ட பிரமாணம் என்று நாம் சொல்வதோடு பரிசுத்த பிரமாணத்தில் அடங்கிய பிரமாணங்கள் இஸ்ரவேலர் பூர்வீககாலத்தில் கானான் தேசத்தில் குடியேறினபொழுது, அவர்கள் கைக்கொண்ட பிரமாணங்கள்தான் என்று சொல்வது நியாயம்.

லேவியர். **Levites**. லேவி, ஆசாரியர் காண்க.

## லோ

லோ அம்மீ. **Lo Ammi**. கடவுள் இஸ்ரவேலின்மேல் கோபம் வைத்திருக்கிறார் என்று காட்டும்படி ஓசியா தீர்க்கதரிசி 'என் ஜனம் அல்ல' என்று அர்த்தங்கொண்ட இந்தப் பெயரை உவமையாய்த் தன் இரண்டாம் மகனுக்கு இட்டான். ஓசி $1^{9}$ $2^{23}$. அம்மீ காண்க.

லோகாதிபதி. **Ruler of this world**. தீமையைச் செய்யும்படி மனுஷர்களை ஏவுகிற துர்க்குணமுள்ள ஆவிகள், அல்லது அதிகாரிகள். கிறிஸ்தவர்கள் இவர்களை ஜெயிக்கவேண்டியது. எபே $6^{12}$.

லோ–தேபார். **Lo-Debar**. கீலேயாத்திலுள்ள இந்த ஊருக்கு மேவிபோசேத்து போனான். அம்மியேல் இந்த ஊரான். 2 சாமு $9^{4}$ $17^{27}$.

லோத். **Lod**. 1 நாளா $8^{12}$. லித்தா காண்க.

லோத்து. **Lot**. ஆபிரகாமின் சகோதரனாகிய ஆரானின் மகன். ஆபிரகாமுடனே கானானுக்கு வந்தான். இவ்விருவருக்கும் ஆட்டுமந்தை ஏராளமாயிருந்ததினால் இவர்களுடைய மேய்ப்பருக்குள் சண்டை யுண்டாகாதபடி ஆபிரகாம் மேல்தேசங்களில் போய் வாசம் செய்தான். லோத்து சோதோமிலே குடியிருந்தான். கெதர்லாகோமேர், சோதோம் முதலிய ஊர்களுக்கு விரோதமாய்ப் படையெடுத்து, லோத்தைச் சிறையாக்கிக்கொண்டு போனபோது, ஆபிரகாம் அவனைப் பின்தொடர்ந்து அவனை

ஜெயித்து லோத்தை மீட்டான். ஆதி 14 அதி. கடவுள் சோதோமை அழித்ததும், லோத்தும் அவன் குடும்பமும் தப்பினதும், லோத்தின் மனைவியின் முடிவும், லோத்து தன் குமாரத்திகளுடனே செய்த துன்மார்க்கமும், இதினாலே மோவாப் அம்மோன் என்னும் கோத்திரங்களின் உற்பத்தியும் ஆதி 19-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பரி. பேதுரு லோத்து நீதிமான் என்று அழைக்கப்பட்டான் என சொல்லுகிறான். லோத்து தன் காலத்திலிருந்த சாதாரண ஜனங்களைவிட நீதியை விரும்பினவன் என்பதே பேதுருவின் கருத்து. ஒரு நீதிமான் தன் சோதனைக்கு இடங்கொடுக்கும்போது பாவியாகிறான் என்பதற்கு லோத்து தன் குமாரத்திகளோடு செய்த அக்கிரமம் ஒரு திருஷ்டாந்தம். 2 பேது $2^{7}$.

லோத்து என்பவனுடைய மனைவி. **Lot's Wife**. சோதோம் கொமோரா அழிக்கப்பட்டபோது, இவள்மேல் இடி விழுந்ததினால் மரித்துப்போனாள். அந்நாட்டின் ஆகாயத்திலும் ஜலத்திலும் உள்ள உப்பு இவளுடைய தேகத்தை மூடினதினால் இவள் உப்புத்தூண் ஆனாள் என்று நினைக்கவேண்டும். ஆனால் சில வேதசாஸ்திரிகள் இந்தச் சம்பவம் நேரிடவேயில்லை என்றும், உப்புக்கடலின் ஓரத்தில் கல் உப்பினாலும் மற்ற லோகங்களினாலும் உண்டான பாறைகளில் சில மானிட ரூபத்தைப் போன்றதாயிருப்பதால் இந்தப் பாரம்பரியம் உண்டானதென்றும் சொல்லுகிறார்கள். ஆதி $19^{29}$ லூக் $17^{32}$.

லோ-ருகாமா. **Lo-Ruhamah**. பாவஞ்செய்த இஸ்ரவேலின்மேல் கடவுள் கோபமாயிருக்கிறார் என்று காட்டும்படி ஓசியா தீர்க்கதரிசி தன் மகளுக்கு 'இரக்கம் பெறாதவள்' என்னும் அர்த்தங்கொள்ள உவமையாய் இப்பெயரை இட்டான். ஓசி $1^{6,8}$ $2^{23}$.

லோவிசாள். **Lois**. தீமோத்தேயுவின் பாட்டி. 2 தீமோ $1^{5}$.

## வ

வகுப்பு. **Division**. 1 நாளா $24^{1}$ $26^{12}$ எஸ்றா $6^{18}$.

வசம்பு. **'Calamus'**. நல்ல வாசனையுள்ள ஒரு மாதிரி நாணல், அல்லது நல் வாசனையுடைய ஒரு நாணலின் பட்டை. யாத் $30^{23}$ உன்.பா $4^{14}$ எசே $27^{19}$.

வசனம். **Word**. எசா $2^{3}$ மத் $13^{19}$ மாற் $4^{14}$ லூக் $5^{1}$ $8^{11}$ அப் $11^{19}$ $13^{26}$ $16^{6}$ $19^{10}$ $20^{32}$ 1 கொரி $12^{8}$ 1 தெச $1^{5}$ எபி $5^{13}$ யாக் $1^{21}$ 1 பேது $1^{25}$ $2^{2}$ 1 யோவா $3^{18}$. வாக்கு, வார்த்தை காண்க.

வசனிப்பு. **Speech**. சங் $34^{13}$.

வச்சிரம், வயிரம். **Diamond**.

1. பிரதான இரத்தினம். எசே $1^{22}$ மி. இரத்தினம் காண்க.

2. வச்சிரம் மகா உறுதியான கல்லாகையால் பாவிகளுடைய உணர்வற்ற இருதயம் வயிரமென்னப்படும். சக $7^{12}$.

வஸ்தி. **Vashti**. அகாஸ்வேரு இந்த ராணியைத் தள்ளி, இவளுக்குப் பதிலாக எஸ்தரை விவாகம் செய்தான். எஸ்தர் $1^{9}$.

வஸ்திரம். **Garment**. உடை காண்க.

வஷ்னீ. **Vashni**. 1 நாளா $6^{28}$. = யோவேல். 1 சாமு $8^{2}$.

வஞ்சகம். **Guile, Malice**. நீதி $12^{17}$ ரோம $1^{29}$ 1 தெச $2^{3}$ 1 பேது $2^{2}$ 2 பேது $3^{17}$ யூதா $1^{11}$ 1 யோவா $4^{6}$.

வஞ்சனை. **Guile**. சங் $105^{25}$ 1 பேது $2^{22}$.

வடக்கு. **North**. ஆதி $13^{14}$ $28^{14}$ யாத் $26^{20}$ $36^{25}$ $40^{22}$ லேவி $1^{11}$ எண் $2^{25}$ $34^{7}$ யோசு $11^{2}$ $15^{7}$ $17^{10}$ சங் $89^{12}$ லூக் $13^{29}$ வெளி $21^{13}$. வடகாற்று வீசும்போது நல்ல வெயில் இருக்கும். யோபு $37^{22}$ நீதி $25^{23}$. வடதேசம் காண்க.

'வடதேசம்.' **'The North Country.'** கானானுக்குக் கிழக்கிலுள்ள வனாந்தரத்தைக் கடந்துபோகிறது சேனையினால் முடியாத காரியம் ஆனதினால், சீரியர்களும், அசீரியர்களும், பாபிலோனியர்களும் எபிரெயர்களுக்கு விரோதமாய்ப் படையெடுக்கும்போது அவர்கள் அந்த வனாந்தரத்தின் வட எல்லையின்படி போய் வடதிசையிலிருந்து வருவார்கள். இதினிமித்தம் 'வடதேசம்' என்பதற்கு அர்த்தம் மூவகையாயிருக்கும்:

i. இதிலிருந்து எபிரெயர்களுக்குச் சத்துருக்கள் வருவார்கள். எரே $6^{22}$ $10^{22}$ சக $6^{8}$.

ii. எபிரெயர்கள் சிறையிருக்கும் தேசம். எரே $3^{18}$ $16^{15}$ $23^{8}$ $31^{8}$ சக $2^{6}$.

iii. வட சீரியா. எரே $46^{10}$.

வட்டி. **Usury. (American R. V. Interest)** எபிரெயர்கள் கானான் தேசத்தில் பிரவேசித்தபின் பல நூற்றாண்டுகளாக அவர்கள் சமுசாரிகளாயும் மேய்ப்பர்களாயும் இருந்தபடியால், தங்களுடைய வறுமையான காலத்தில் மாத்திரமே தானியவிதை வாங்கவும், புது ஆடுமாடுகள் வாங்கவும் கடன் வாங்குவது வழக்கம். ஆகையால் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி கடன் கொடுத்தவன், தரித்திரத்தினிமித்தம்

பணம் வாங்கினவனிடமிருந்து வட்டி வாங்குவது தகாத காரியம். யாத் $22^{25}$ லேவி $25^{35}$ உபா $23^{19}$. எபிரெயர்கள் அந்நியரிடம் வட்டி வாங்கலாம். உபா $23^{20}$. எபிரெய பாஷையில் 'வட்டி வாங்குகிறது' என்ற வினைச்சொல்லுக்குப் 'பட்சிக்கிறது' என்பது மூல அர்த்தம். ஆகவே வட்டி வாங்குதல் கண்டிக்கப்படுகிறது. நெகே $5^{7}$ சங் $15^{5}$ நீதி $28^{8}$ எரே $15^{10}$ எசே $22^{12}$.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் யூதர்கள் விசேஷமாய் வியாபாரம் செய்கிறவர்களாயிருந்தார்கள். வியாபாரிகள் தங்கள் வியாபார முதலுக்காகக் கடன் வாங்குவதுண்டு. இவ்விதமான விஷயங்களுக்குக் கடனாக வாங்குகிற தொகைக்கு வட்டி கொடுப்பது அநியாயமல்ல. ஆனால் ஏழைகளிடமிருந்து அநியாயமாய் வசூலிக்கிற வட்டியையே நமது ஆண்டவர் கண்டிக்கிறார். என்றாலும் 'காசுக்காரர்' வட்டிக்குக் கடன் கொடுக்கிற விஷயத்தை அவர் கண்டிக்கிறதில்லை. மத் $25^{27}$ லூக் $19^{23}$.

வணங்குகிறது. **Worship**. 2 சாமு $9^{6}$ 1 இரா $1^{31}$ தானி $2^{46}$ மாற் $15^{19}$ அப் $16^{13}$ $18^{7}$ வெளி $19^{10}$ $22^{8}$. தொழுகிறது, பணிவிடை காண்க.



சீரியாதேசத்து வண்டி

வண்டில். **Cart, Wagon**. பூர்வீகத்தார் உபயோகித்த வண்டிகளின் சக்கரம் பெரும்பாலும் தற்காலத்திலுள்ள தேர்களின் சக்கரத்தைப்போல் பலகைகளினால் செய்யப்பட்டதாயிருந்தன. சாதாரண சக்கரங்களுள்ள வண்டில்கள் மிகவும் சொற்பம். இருசக்கர வண்டிகளும் அநேகமாய் இருக்கும். நாலு சக்கர வண்டில்களும் இருந்தன. இரண்டு காளைகள் இவ்வண்டிகளை இழுத்துச் செல்லும். எண் $7^{3}$. சமயாசமயங்களில் பசுக்களையும் வண்டியில் கட்டுவார்கள். 1 சாமு $6^{7}$. சாதாரணமாய்ச் சாமான்கள், தானியங்கள் முதலியவற்றின் போக்கு வரவுக்காகவும், சில சமயங்களில் ஜனங்கள் ஏறிச் சவாரி செய்வதற்காகவும் வண்டிகள் உபயோகிக்கப்பட்டது. ஆமோ $2^{13}$ ஆதி $49^{19}$. ஏசாயா $66^{20}$—ல் சொல்லப்படுகிற 'குலாரி வண்டில்' நமக்குத் தெரிந்த பல்லக்கைப் போன்றது. இது ஜனங்களால் சுமக்கப்படாமல், கோவேறு கழுதை அல்லது குதிரையினால் இழுக்கப்படும். குலாரி காண்க.

வண்டுகள். **Fly**. யாத் $8^{21}$ சங் $78^{45}$ $105^{31}$. ஈ காண்க.

வண்ணான். **Fuller**. 'வண்ணான்' மாற் $9^{3}$. 'வண்ணார்துறை' எருசலேமுக்குப் புறம்பே இருந்தது. 2 இரா $18^{17}$ ஏசா $7^{3}$ $36^{2}$. 'வண்ணானுடைய சவுக்காரம்.' மல் $3^{2}$.

வம்ச அட்டவணை, வம்ச வரலாறு. **Genealogy**.

பழைய ஏற்பாட்டிலுள்ள வம்ச அட்டவணை இருவகைப்படும்.

1. ஜனங்களின் வம்ச வரலாறுகள். இவைகளில் பழைய ஏற்பாட்டின் ஆகம ஆக்கியோன்கள் தாங்கள் அறிந்த ஜனங்களின் முற்பிதாக்களுடைய பெயர்களை எழுதினார்கள். இவைகளிலே மற்ற ஜனங்களின் உற்பத்தியைப்பற்றி எபிரெயர்கள் கைக்கொண்ட பாரம்பரியம் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் பூர்வீககாலத்து ஜனங்கள் குடியேறின இடங்களையும், செய்த பிரயாணங்களையும், பூகோள சாஸ்திரத்தையும்பற்றித் தெளிவாய்க் கூறுகிறது. ஆனால் இந்த அட்டவணைகள் பல நூற்றாண்டுகளாக ஜனங்களுடைய ஞாபகத்தில்மாத்திரம் இருந்த விஷயங்கள் அடங்கியதால் இவைகளில் பல குறைகளும், வருஷக்கணக்கில் தப்பிதங்களும் இருப்பது ஆச்சரியமல்ல.

2. பழைய ஏற்பாட்டு ஆகமங்களில் ஜனங்களின் அட்டவணைகளைப்பற்றி நமக்குச் சில சமயங்களில் சந்தேகம் உண்டானாலும், அவர்கள் அக்காலத்தில் தங்கள் வம்சத்தைப்பற்றி எழுதிய வம்ச அட்டவணைகளைப்பற்றிச் சந்தேகப்படவேண்டியதில்லை. எபிரெயர்கள் இரண்டு நோக்கங்களுக்காக பல நூற்றாண்டுகளாய்த் தங்கள் வம்ச அட்டவணையைத் திட்டவட்டமாக விசாரித்து எழுதிவந்தார்கள்.

(i) தாங்கள் யேகோவாவினுடைய ஜனத்தைச் சேர்ந்தவர்களென்றும், மேசியா தங்கள் சந்ததியில் தோன்றுவார் என்றும் நம்பி, வம்ச அட்டவணை எழுதுவதைக்குறித்து ஜாக்கிரதையாயிருந்தார்கள். (ii) மேலும் ஒருவன் இன்ன கோத்திரத்தைச் சேர்ந்தவன் என்று குறிப்பிடவும், நிலங்களின் சுதந்தர பாத்தியதையைக் காட்டவும், ஆசாரிய ஊழிய சிலாக்கியம் இன்னாருக்கென்று காண்பிக்கவும், வம்ச அட்டவணை எழுதப்பட்டது. இந்த வம்ச அட்டவணையில் விசேஷித்தவைகளாவன:—1 நாளா 3–9 அதி. 2 நாளா $12^{15}$ எஸ்றா $6^{62}$.

3. இந்த அட்டவணைகளைப்பற்றிப் பின் வரும் குறிப்புகளைக் கவனிக்கவேண்டும்.

i. 'குமாரன்' என்பது சில வசனங்களில் ஒருவனுக்குப் பிறந்த மகனைக் குறிக்காமல் புத்திர சுவிகாரம் பெற்றவனைக் குறிக்கும்.

ii. இந்த அட்டவணைகள் சாதாரணமாய் இனத்தைக் குறிக்காமல் சுவிகாரத்துவத்தைக் காட்டும்.

iii. சில வசனங்களிலுள்ள அட்டவணைகளில் எல்லாப் பெயர்களும் எழுதப்படாமல் சுருக்கமாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

iv. தாவீதின் குடும்ப வம்ச அட்டவணை விபரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

v. இயேசுவின் வம்ச அட்டவணை காண்க.

வம்பு. எபே 5$^{4}$ கொலோ 3$^{8}$.

வயது. **Age.** ஆதி 8$^{21}$ 18$^{11}$ 2 சாமு 19$^{32}$ லூக் 3$^{23}$ யோவா 9$^{21}$ எபி 11$^{11}$. 'முதிர் வயது.' ஆதி 48$^{10}$ பிலே 1$^{8}$ தீத் 2$^{2}$.

வயல். **Field.** ஆதி 27$^{27}$ யாத் 8$^{13}$ லேவி 19$^{9}$ எண் 10$^{11}$ நீதி 24$^{30}$ உபா 27$^{17}$ பிர 5$^{9}$ மத் 24$^{40}$ லூக் 15$^{25}$ யோவா 4$^{35}$ யாக் 5$^{4}$. எல்லை காண்க.

வயிடூரியம். **Agate.** இரத்தினம், வைடூரியம் காண்க.

வயிரம். **Diamond, Adamant.** வச்சிரம், இரத்தினம் காண்க.

வயிறு. **Belly.**

1. உதரம். ஆதி 3$^{14}$ எண் 5$^{22}$ நியா 3$^{21}$ யோபு 40$^{16}$ நீதி 18$^{20}$ மத் 15$^{17}$ லூக் 15$^{16}$.
2. கருப்பம். எரே 1$^{5}$ ஏசா 46$^{3}$.
3. குடல். மத் 15$^{17}$ மாற் 7$^{19}$.
4. உள்ளம். யோபு 20$^{20}$ சங் 31$^{9}$ 44$^{25}$ யோவா 7$^{38}$ தீத் 1$^{12}$ வெளி 10$^{9}$.
5. ஆசை, சிற்றின்பம். ரோம 16$^{18}$ பிலி 3$^{19}$.

வரம். **Gifts.**

i. புதிய ஏற்பாட்டிலே ஆவிக்குரிய வரங்களைக் குறிக்கும்படி 'கரிஸ்மா' (*Charisma*) என்னும் கிரேக்குப்பதம் வழங்கப்படும். கடவுளின் அருளினால் நம்மில் உண்டான புண்ணிய பலன்களை இப்பதம் குறிக்கும். இதைக்குறித்துப் பின்வரும் வசனங்களில் விபரமாய்ச் சொல்லியிருக்கிறது. ரோம 12$^{6}$ 1 கொரி 12-14 அதி. எபே 4$^{7}$ 1 பேது 4$^{10}$. இவ்வசனங்களை நாம் பார்த்தால் கிறிஸ்தவர்கள் அடையவேண்டிய வரங்கள் இரு விதம் என்று காண்போம்.

*a.* அற்புதமான வரங்கள். அவையாவன: தெரியாத பாஷைகளைப் பேசுதல், 1 கொரி 12-14 அதி; வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்கல், மாற் 16$^{17}$ அப் 16$^{18}$ 19$^{12}$; குற்றவாளிகளைத் தண்டித்தல், அப் 5$^{1}$ 13$^{9}$ 1 கொரி 4$^{21}$ 5$^{5}$; இவற்றோடு முன்னறிவிக்கும் வரமும், கடவுளினிடத்திலிருந்து எச்சரிப்புகளைப் பெற்றுக்கொள்ளும் வரமும் சேர்க்கப்படும்.

*b.* அற்புதமல்லாதவைகள். அவையாவன: பிரசங்க சாதுரியம், பக்தி, ஞானம், புத்தி என்னும் விஷயங்களில் விருத்தியடைதல், சபையை நடத்துதல், தர்மஞ் செய்தல், சபைக்கடுத்த ஊழியஞ் செய்தல், அதிதிகளான கிறிஸ்தவர்களை உபசரித் தேற்றுக் கொள்ளல். ரோம 12$^{6}$ 1 பேது 4$^{10}$. இச்சையடக்கம். 1 கொரி 7$^{7}$.

2. இந்த வரங்களின் தன்மை. அக்காலத்தில் கிறிஸ்தவர்களில் சிலர் கடவுளினுடைய அருளை மிகுதியாய்ப் பெற்று அதிசயமானவற்றை நடத்தினார்கள் என்பதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். 1 கொரி 2$^{4}$ 14$^{18}$ 2 கொரி 12$^{9}$ எபி 2$^{4}$. இவைகளைக் குறித்து ஆதிக்கிறிஸ்தவர்களுக்குச் சந்தேகமாவது ஆச்சரியமாவது இல்லை. கிறிஸ்தவர்கள் கடவுளினிடத்திலிருந்து இந்த வரங்களைப் பெற்றுக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிந்து, தாழ்மையோடும் கிரமத்தோடும் இவைகளைப் பிரயோகித்தால், இவைகளினால் சபையாருக்கு ஆவிக்குரிய விருத்தியுண்டாகும் என்பதற்குச் சந்தேகம் இல்லை. ஆனால் இந்த வரங்களைப் பெற்றுக்கொண்டபலர் கடவுள் அருளின வரங்களினிமித்தம் கர்வம் கொண்டதினாலும், இவ்வரங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் அளவு கடந்து இவைகளைச் சபையில் பிரயோகித்ததினாலும், திருச்சபையிலே பொறுமை கலகம் ஒழுங்கின்மை முதலிய குறைவுகள் உண்டானது.

3. பரி. பவுலின் போதனை.

மேற்கூறிய எல்லாவற்றையும் பரி. பவுல் பார்த்து இந்த வரங்களைக்குறித்துக் கண்டிப்பாய்ப் போதிக்கிறான்.

*a.* எல்லாவற்றையும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யவேண்டும். நல்லொழுக்கத்துக்கு விரோதமாய் ஒன்றும் செய்யக்கூடாது. நல்லொழுக்கத்துக்கு விரோதமானது பராபரன் அருளின வரமே அல்ல. ரோம 12$^{6}$ 1 கொரி 14$^{40}$.

*b.* இந்த வரங்களைச் சபையின் பொதுவான விருத்திக்காகப் பிரயோகிக்கவேண்டும். 1 கொரி 12 அதி. வரங்களெல்லாம் சபைக்கு உதவியாக இருக்கவேண்டும். ரோம 12 அதி 1 கொரி 12$^{4}$ 14 அதி எபே 4$^{11}$ 1 பேது 4 அதி.

c. வரங்களுக்குள் வித்தியாசங்கள்.

பேய்பிசாசுகள் அடிக்கடி ஆண்களையும் பெண்களையும் பிடித்து அவர்கள் மூலமாய் அதிசயமான பல காரியங்களைச் செய்யும் என்று அக்காலத்து ஜனங்கள் எல்லாரும் நினைத்ததினாலே பரி. பவுல் கிறிஸ்தவர்கள் தங்கள் வரங்கள் கடவுளால் அருளப்பட்டதோ பிசாசுகளின் ஏவுதலோ என்று ஆராயும்படி அவர்களுக்குப் புத்திமதி சொல்லுகிறான். 2 தெச $2^{9}$ 1 கொரி $12^{3.11}$ வெளி $13^{13}$. இந்த வரங்களையுடையவன் எப்பொழுதும் பயபக்தியில் சிறந்தவனாயிருக்க வேண்டும். 1 கொரி $13^{1}$. இந்த வரங்களை எப்பொழுதும் சபை விர்த்தியடைவதற்காகவே பிரயோகிக்கவேண்டும். சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால், புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள் வரங்களின் மூலமாய்த் தோன்றுகிற அதிசயத்தை அல்ல, அவற்றின் மூலமாய்ச் சன்மார்க்கத்துக்கும் மெய்ஞ்ஞானத்துக்கும் உண்டாகும் அபிவிர்த்தியையே சிறப்பித்து வருகிறார்கள். அவர்களுடைய அபிப்பிராயத்தின்படி அதிசயங்கள் அல்ல, பக்தி விருத்தியே சிரேஷ்டமானது.

ஆதிச்சபையில் தோன்றின அதிசயங்கள் பிந்தியகாலத்துச் சபையில் தோன்றவே இல்லை. இரண்டாம் நூற்றாண்டுக்குப்பின்பு இவைகள் கிறிஸ்தவ சபையில் காலாகாலங்களில் உண்டானாலும் இவைகள் சாதாரணமாய்க் கிறிஸ்தவ சபையின் அபிவிர்த்திக்கு அவசியமல்லாதவை யாகையினால் அதிசயமான வரங்களை அல்ல, ஆவிக்குரிய இதர வரங்களைமாத்திரம் கடவுள் அருளியிருக்கிறார் என்று நாம் சொல்லக்கூடும்.

வரி. **Tribute**. மத் $17^{25}$ $22^{17}$ ரோம $13^{7}$. தீர்வை காண்க.

வரிப்பணம். **Didrachmon**. மத் $17^{24}$. பணம் காண்க.

வருகை, கிறிஸ்துவின் இரண்டாவது. **The Second Coming of Christ, The Parousia**. ஆதிக்கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து அடிக்கடி பேசி, இயேசு இவ்வுலகத்துக்கு மறுபடியும் திரும்பிவந்து தமது ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று நம்பிவந்தார்கள்.

1. இந்தக் கோள்கையின் உற்பத்தி. இயேசுகிறிஸ்து தாமே இவ்வுலகத்துக்குத் திரும்பிவந்து நியாயத்தீர்ப்பு செய்து தமது ராஜ்யத்தை ஸ்தாபிப்பதாகப் போதித்தார். மத் $23^{37}$ மாற் $14^{62}$. ஆயினும் அவர் இந்த விஷயத்தைக்குறித்து அப்போஸ்தலருக்குத் திட்ப நுட்பமாய் யாதொன்றும் சொல்லவே இல்லை. மாற் $8^{39}$ லூக் $17^{22}$. இயேசு பரமேறினபிறகு ஆதிச்சபைக்கு நேர்ந்த துன்பங்களையும் உபத்திரவங்களையும் அதன் குறைவுகளையும் பார்த்த சில போதகர்கள், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை அதிக ஆவலுடனே விரும்பி, அவர் தமது வருகையைப்பற்றிச் சொன்ன வாக்கியங்களை அதிக வாஞ்சையுடனே ஞாபகப்படுத்திக்கொண்டு தங்களுடைய விருப்பத்தின்படி அவைகளை அருத்தப்படுத்திவந்தார்கள்.

2. ஆதிச்சபையின் கோள்கை.

அப்போஸ்தலர் எழுதின நிருபங்களை நாம் விசாரித்தால் ஆதிச்சபை இரண்டாம் வருகையைக் குறித்துக்கொண்டிருந்த அபிப்பிராயங்களை இலேசாய் அறிந்துகொள்ளலாம். இந்த நிருபத்தை எழுதினவர்கள் தங்கள் ஆயுசுகாலத்திலேயே மறுபடியும் கிறிஸ்து வருவார் என்று நம்பினார்கள். 1 கொரி $15^{51}$ 1 தெச $4^{15}$. இவர்கள் கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையின் காலம் சமீபித்திருக்கிறது என்றும் சொன்னார்கள். யாக் $5^{8}$ பிலி $4^{5}$ ரோம $13^{11}$ 1 கொரி $7^{29}$ 1 பேது $4^{7}$. சிலர் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. 2 பேது $3^{8}$. ஆதிக்கிறிஸ்தவர்கள் அதன் காலத்தைப்பற்றித் திட்ப நுட்பமாய்ச் சொல்லுகிறதில்லை. 1 தெச $5^{2}$. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குமுன்னே கிறிஸ்தவர்களுக்கு அநேக துன்பங்கள் இருக்கும் என்றும், அந்திக்கிறிஸ்து என்னும் மகா அக்கிரமக்காரன் வருவான் என்றும், யூதர்கள் கிறிஸ்து மதத்துக்கு வருவார்கள் என்றும் அவர்கள் நினைத்தார்கள். 1 தெச $5^{2}$ 2 தெச $2^{8}$ ரோம $11^{25}$. இந்த வருகை எவ்விதம் நிகழும் என்பதைப்பற்றி விபரமாய்ச் சொல்லுகிறார்கள். முதலாவது இயேசுகிறிஸ்துவும் தேவதூதர்களும் மேலான வானலோகத்திலிருந்து கீழான வானலோகத்துக்கு இறங்குவார்கள். பிறகு தேவதூதர் எக்காளம் தொனித்து மரித்தோரை ஆதேசிலிருந்து அழைப்பார்கள்; மரித்துப்போன பரிசுத்தவான்களுக்கு ஆவிக்குரிய சரீரம் கொடுக்கப்படும். 1 கொரி $15^{44}$. உயிரோடெழுந்த பரிசுத்தவான்கள் ஆகாசத்திலேறி மகிமையுள்ள சரீரத்துடனே இயேசுவையும் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களையும் அடைவார்கள். பிறகு இயேசு உயிரோடெழுந்தவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நியாயத்தீர்ப்பு செய்து, தமது ராஜ்யத்தை ஸ்தாபித்து, அதற்கு விரோதமாய் வந்த சாத்தானை ஜெயித்

துக் கடைசியிலே யாவரும் பிதாவானவருடைய ஆதீனத்துக்குள்ளாகும்படி செய்வார்.

ஆதிக்கிறிஸ்தவர்களில் சிலர் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக்குறித்து இன்னும் அநேக விஷயங்களைச் சொல்லுவார்கள். பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதல் வேறே, ரத்தசாட்சிகளின் உயிர்த்தெழுதல் வேறே என்றும், இயேசுவின் ராஜ்யம் ஸ்தாபகமானபின் ஆயிரம் வருஷம் சமாதானம் இருக்கும் என்றும், அதற்குப்பிறகு சாத்தான் இயேசுவுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்வான் என்றும், இப்படிப்பட்ட அநேக விஷயங்களை அவர்கள் சொல்லுவார்கள். வெளி $20^{2}$.

3. இரண்டாம் வருகை எப்படி நடக்கும்?

இயேசு சீக்கிரம் திரும்பிவந்து தமது ராஜ்யத்தை வெளியரங்கமாய் ஸ்தாபியாததைப் பார்த்தறிந்த ஆதிக்கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இவ்விதமாய் அல்ல, வேறுவிதமாய் நிகழும் என்று சொல்லிவந்தார்கள்.

*a*. இயேசு மரித்தபின் மூன்றும் நாளில் அடைந்த உயிர்த்தெழுதலே அவருடைய இரண்டாம் வருகை என்று சிலர் சொன்னார்கள். ஆனால் இந்த அபிப்பிராயத்தைக் கிறிஸ்தவர்கள் பொதுவாய் ஏற்றுக்கொள்ளவில்லை.

*b*. பெந்தெகோஸ்து நாளில் அருளப்பட்ட பரிசுத்த ஆவியின் வருகையே கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்று அநேகர் நினைக்கிறார்கள். இவர்கள் இவ்வுலகத்தில் இயேசுவுக்குள்ள அதிகாரமும் மனிதர்களின் மனதில் பரிசுத்த ஆவிக்குள்ள ஏவுதலும் ஒன்றுதான் என்று சொல்லுகிறார்கள்.

*c*. எருசலேம் பட்டணத்தின் அழிவும் இயேசுவின் இரண்டாம் வருகையும் நியாயத்தீர்ப்பும் ஒன்றுதான் என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள். மாற் 13 அதி $14^{62}$.

*d*. வேறு சிலர் எருசலேம் பட்டணத்துக்கு அழிவு உண்டான காலத்திலும், ரோமராஜ்யம் அழிந்த காலத்திலும், இவை போன்ற விசேஷ உபத்திரவ காலத்திலும், பஞ்சம் வியாதி அபஜெயம் முதலிய விசேஷ துக்க காலங்களிலும் இயேசு நியாயத்தீர்ப்பு செய்து இவ்விதமாய்த் தமது இரண்டாம் வருகையை நிறைவேற்றுகிறார் என்று சொல்லுகிறார்கள்.

சில சாஸ்திரிகள் ஆதிக்கிறிஸ்தவர்கள், மேசியா வெளியரங்கமாய் எருசலேம் பட்டணத்தில் தமது ராஜ்யத்தைத் திடீரென்று ஸ்தாபிப்பார் என்றும், வேறு சிலர் அவர் இவ்வுலகத்தில் கண்ணாரக் காணத்தக்கதாக வெளியரங்கமாய் வருவார் என்றும் இது மட்டும் போதிக்கிறார்கள். ஆயிர வருஷம் காண்க.

ஆனால் தற்காலத்து வேதசாஸ்திரிகள் அவர் அவ்விதமாய் அல்ல, ஆவிக்குரியபிரகாரம் தம்மேல் பக்தி வைத்தவர்களுடைய இருதயங்களில் தமது ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்றும், தமக்கு விரோதமாய் நிற்கிறவர்கள் மனதிலும் நியாயத்தீர்ப்பு செய்வார் என்றும், அவரது இரண்டாம் வருகை இவ்விதமாய் எப்பொழுதும் இவ்வுலகத்தில் ஆவிக்குரியபிரகாரம் கிறிஸ்தவர்களுக்குள் நிகழும் என்றும் சொல்லுவார்கள்.

வருஷம். **Year**. எபிரெய வருஷத்தைப்பற்றி காலம், பண்டிகை, மாதம், யூபிலி காண்க.

வருஷிக்கிறது. **Rain**. ஆதி $7^{4}$ யோபு $38^{26}$ சங் $11^{6}$ லூக் $17^{29}$. மழை காண்க.

வரையாடு. **Wild goat**. உபா $14^{5}$ 1 சாமு $24^{2}$ யோபு $39^{1}$ சங் $104^{18}$.

உப்புக்கடலின் ஓரங்களிலுள்ள மலைநாடுகளில் பலவகையான காட்டாடுகள் உண்டு. அவைகளில் 'வரையாடு' ஒன்று. இது நாம் தெரிந்த வெள்ளாட்டைவிட பெரிதல்ல, ஆனால் இதின் கொம்புகள் 3 அடி நீளமாய் இருக்கும்.

வர்ணம். **Colour**. ஆதி $37^{3.23.32}$ 2 சாமு $13^{18}$ நீதி $23^{31}$ எசே $1^{7}$ $10^{9}$ $16^{16}$.

குறிப்பு. வேதாகமத்தில் 'வர்ணம்' என்பது 'ஜாதி' என்பதைக் குறிக்கிறதில்லை.

வர்த்தகம். **Merchandise**. நீதி $3^{14}$ ஏசா $45^{14}$.

வர்த்தகர். **Merchant**. ஆதி $23^{16}$ $37^{23}$ 1 இரா $10^{28}$ ஏசா $23^{2}$ நெகே $13^{20}$ வெளி $18^{11}$, 'கானானியன்'. செப் $1^{11}$ நீதி $31^{4}$.

வலது கை, வலது பக்கம், வலது பரிசம். **Right hand**.

1. வலதுகரம். ஆதி $48^{14}$ நியா $5^{26}$ ஏசா $45^{1}$ மத் $5^{30}$ $6^{3}$.

2. வலது பக்கம். பிர $10^{2}$ சங் $109^{6}$ சக $3^{1}$.

3. தென்திசை. யோசு $17^{7}$ 2 சாமு $24^{5}$ 2 இரா $12^{9}$.

4. உவமையாய்:

i. வல்லமை, திறமை. யோபு $40^{14}$ சங் $137^{5}$ $144^{8}$.

ii. தேவவல்லமை. யாத் $15^{6}$ சங் $18^{35}$ $21^{8}$ $77^{10}$ $98^{1}$ $108^{7}$ எசா $48^{13}$ மத் $26^{64}$ மாற் $14^{62}$ வெளி $1^{20}$ $2^{1}$ $5^{1}$.

iii. மேன்மை. 1 இரா $2^{19}$ சங் $45^{9}$ $80^{17}$ $110^{1}$ மத் $20^{21}$ $25^{33}$ அப் $2^{33}$ $5^{31}$ $7^{55}$ ரோம $8^{34}$ கொலோ $3^{1}$ எபி $1^{3}$ $8^{1}$ 1 பேது $3^{22}$.

5. அடையாளமாக :

i. ஆசீர்வாதம். ஆதி $48^{14}$.

ii. சிநேகம். கலா $2^{9}$.

iii. ஆணையிடுதல். ஆதி $14^{22}$ எசா $62^{8}$.

வலுசர்ப்பத் தூரவு. **The Dragon's Well.** எருசலேமின் தென்மதிலுக்குக் கிட்ட இருந்த ஊற்று. நெகே $2^{13}$.

வலு சர்ப்பம். **Dragon.** அசீரியர்கள் பயங்கரமான வலுசர்ப்பங்களுக்கும் தேவர்களுக்கும் இருந்த சண்டையைப்பற்றிப் பல கதைகள் சொன்னார்கள். எபிரெயர்கள் முதலியவர்களும் இந்த ஜெந்துக்கள் உண்டு என்றும், இவைகள் துஷ்டத்தனமுள்ளவை என்றும், இவைகள் கடவுளால் சபிக்கப்பட்டவை என்றும், இவை விஷமுள்ள பெரிய பாம்புகளைப் போன்றவை (உபா $32^{33}$ எரே $51^{34}$ சங் $91^{13}$) அல்லது மனுஷர்களுக்குத் தெரியாத விபரீதமான ஜெந்துக்கள் (வெளி $12^{3}$) என்றும் நம்பினார்கள். 'லிவியாதான்' என்பதும் 'பகெமோத்து' என்பதும் 'வலுசர்ப்பம்' என்பதும் மூவகையான பறவை முதலை என்று சொல்லலாம். எசா $27^{1}$.

'வலு சர்ப்பம்' என்பது எகிப்து என்றும் (சங் $74^{13}$ $51^{9}$), நேபுகாத்நேச்சார் என்றும் (எரே $51^{34}$), சாத்தான் என்றும் (வெளி $13^{2}$ $20^{2}$) குறிப்பிடும்.

வலை. **Net.**

1. மீன், பட்சி முதலியவற்றைப் பிடிக்கிற கருவி. பிர $9^{12}$ நீதி $1^{17}$ எசா $19^{8}$ எசே $26^{14}$ ஆப $1^{16}$ மத் $4^{18}$ மாற் $1^{16}$ லூக் $5^{2}$ யோவா $21^{6}$.

2. தந்திரம். பிர $7^{26}$ சங் $19^{9}$ $31^{4}$ $35^{8}$ $140^{5}$ ஓசி $5^{1}$ மீகா $7^{2}$.

3. ஆபத்து. யோசு $23^{13}$ யோபு $18^{8}$ $19^{6}$ சங் $141^{10}$ புல $1^{13}$.

4. திருச்சபை. மத் $13^{47}$.

கண்ணி காண்க.

வல்லமை. **Power, might.**

1. தேவனுடைய இலட்சணங்களில் ஒன்று. தேவன் சர்வவல்லவர் (*Almighty, Omnipotent*). அவர் செய்யத்தக்கவைகளைத் தடையின்றிச் செய்கிறவர். சிருஷ்டிப்பினால் தேவனுடைய வல்லமை தோன்றுகிறது. ஒன்றுமில்லாமையினின்று புத்திக் கெட்டாத பெருமையும் கண்ணுக் கெட்டாத பிரகாசமுமுள்ள உலகங்களை உண்டாக்கி சர்வத்தையும் காப்பாற்றிவருகிறார்.

அவருடைய வல்லமையுஞ் சித்தமுமொன்றே. சர்வவல்லவர் பாவத்தையும் செய்வாரென்று சொல்லக்கூடாது. எனென்றால் சூரியனால் இருளுண்டாகாதது போல, பாவம் தேவனுடைய தன்மைக்கும் மாறாத இலட்சணங்களுக்கும் விரோதமாயிருக்கிறது. தேவனும் இரண்டுடன் இரண்டைச் சேர்த்து நாலாக்கக்கூடுமே ஒழிய ஐந்தாக்கக் கூடாது. தேவன் தம்மை அழித்துப்போடக் கூடுமென்று சொல்லவுங் கூடாது. சங் $21^{13}$ $24^{8}$ $33^{9}$ $62^{12}$ $115^{3}$ $147^{5}$ 1 நாளா $16^{28}$ எசா $40^{26}$ $45^{24}$ யோபு $9^{4}$ $26^{14}$ மத் $6^{13}$ லூக் $1^{37}$ $1^{49}$ வெளி $4^{11}$ $7^{12}$.

2. இயேசுகிறிஸ்து சர்வவல்லவரும் எல்லா அதிகாரத்திற்கும் உரியவருமாயிருக்கிறார். மத் $28^{18}$ கொலோ $1^{16}$ எபி $1^{4}$ மத் $16^{16}$ அப் $10^{36}$ $38^{42}$ வெளி $12^{10}$.

3. பரிசுத்த ஆவியின் கிரியை பலத்த சத்துவத்தின் வல்லமை என்னப்படுகிறது. எபே $1^{19}$.

பெரியோர்கள் வல்லவர் என்னப்படுகிறார்கள். 1 கொரி $1^{26}$.

4. அதிகாரம். மத் $28^{18}$ வெளி $17^{13}$.

பலம், பலன், அதிகாரம் காண்க.

வல்லூறு. **R. V. Falcon.** லேவி $11^{14}$ யோபு $28^{7}$ எசா $34^{15}$. எபிரெய பதம் ஒரு விதமான பருந்தைக் குறிக்கும்.

வழக்கம். **Custom.** நியா $11^{40}$ எரே $32^{11}$ லூக் $4^{16}$ யோவா $18^{39}$ 1 கொரி $11^{16}$.

வழக்கு. **Contention, Strife.** 2 சாமு $15^{4}$ யோபு $13^{8}$ எசா $1^{18}$ $58^{4}$ எரே $12^{1}$ ஆப $1^{3}$.

வழி. **Way.**

1. பாதை. ஆதி $3^{24}$ யாத் $13^{18}$ 1 இரா $18^{6}$ 2 இரா $2^{23}$ நெகே $9^{19}$ மத் $7^{13}$ $13^{4}$ மாற் $4^{4}$.

2. புறமதஸ்தர்களின் 'மார்க்கம்.' 2 நாளா $7^{14}$ எசா $59^{8}$ எரே $25^{5}$.

3. பாவமுள்ள வழி. எசே $3^{18}$ $7^{19}$ ஓசி $4^{9}$.

4. நல்நெறி. மெய் மார்க்கம். ஆதி $6^{12}$ $18^{19}$ நீதி $2^{20}$ $3^{17}$ சங் $17^{5}$ $1^{6}$ எரே $6^{16}$ ரோ $11^{33}$.

5. நடக்கை. எசா $55^{8}$.

6. செல்வம். சங் $107^{7}$.

7. மரணம். யோசு $23^{14}$ யோபு $16^{22}$.

8. முக்தி. யோவா $14^{6}$.

மார்க்கம் காண்க.

வழிபாடு. **Way.** ஆதி 31[35] எரே 10[3] கொலோ 2[8].

வழிப்போக்கர். **Wayfarer.** 2 சாமு 12[4] ஏசா 33[8] 35[8] எரே 9[2] 14[8].

வளருகிறது. **Grow.** ஆதி 21[8] யாத் 2[9] 1 சாமு 2[21] 3[19] மல் 4[2] மத் 6[28] லூக் 1[80] 2[40] 13[19] அப் 12[24] 19[20] 2 பேது 3[18].

வளையல். **Ring.** உன்.பா 5[14]. ஆனியம், மோதிரம் காண்க.

வறட்சி. **Blasting.** உபா 8[15] யோபு 24[19] சங் 32[4] ஏசா 58[11] எரே 2[5] 50[38] ஆகா 1[11].

வறட்டி. **Dung cakes.** எசே 4[12.15].

வறளுகிறது, வற்றுகிறது. **Dry up.** 2 இரா 19[24] சங் 63[1] ஏசா 44[27] 53[2] சக 10[14].

வறுமை. **Want.** நீதி 6[11] 10[15] 11[12] 28[19.22]. தரித்திரம் காண்க.

வனவாசம். **Monachism.** எபிரெயர்கள் வழக்கமாய் வனவாசம் செய்யவே இல்லை. ஆயினும் அவர்களுள் சிலர் வேளாவேளைகளிலே கடவுளைத் தியானிக்கும்படி வனாந்தரத்துக்குப் போய்ச் சிலகாலம் அங்கு தனிமையாய்ச சஞ்சரிப்பதுண்டு. இவ்வண்ணமாக மோசே சீனாய்மலைக்கும், எலியாவும் யோவானும் வனாந்தரத்துக்கும் போனார்கள். இவ்விதமாகவே இயேசுபகவானும் வனாந்தரத்துக்குச் சென்றார்.

கி-பி. 3-ம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்களில் பலர் தங்கள் ஜீவகாலமெல்லாம் தபசு புரியும்படி துறவறம் புகுந்தார்கள். இவர்கள் புரிந்த தபசு சில விஷயங்களில் விபரீதமாயிருந்தது. திருஷ்டாந்தமாக, இவர்களில் சிலர் கற்றூண்களின் மேலேறிப் பல மாச வருஷகாலமாகத் தபசு செய்தார்கள். பிற்காலங்களிலோ இவ்வித தியானம் செய்ய விரும்பினவர்கள், வனாந்தரத்துக்குப் போகாமல் மடங்களைக் கட்டி, அங்கு வாசம் செய்து, தங்கள் தபசை நிறைவேற்றிவந்தார்கள்.

நாம் சில சமயங்களில் தனிமையாய் உபவாசம் செய்து தியானிக்கவேண்டும் என்று காட்டுகிற சில பிரமாணங்கள் புதிய ஏற்பாட்டில் இருந்தபோதிலும், நமது ஜீவகாலமெல்லாம் வனவாசம் செய்யவேண்டுமென்று காட்டுகிற ஒரு கட்டளையாவது சத்திய வேதத்தில் இல்லை.

அப்படிச் செய்கிறவர்கள் பிறர் நன்மையைக் கருதாமல், பிறருடைய ஆத்மீக விஷயங்களில் வாஞ்சை கொள்ளும் எண்ணமற்று, சுய நன்மையையே நாடி, சுவிசேஷத்தைப் பிரபல்யப்படுத்தக் கவலையற்றவர்களாயிருக்கிறார்கள். ஆகவே இவ்விதமாய் ஜீவகாலமெல்லாம் வனவாசம் செய்வது உசிதமல்ல என்று நாம் தீர்மானமாய்ச் சொல்லக்கூடும்.

வனாந்தரம். **Wilderness.** வேதாகமத்தில் சொன்ன வனாந்தரங்கள் ஆவன :

1. என்-கேதி. உப்புக்கடலுக்கு மேற்கே யூதாவிலே. 1 சாமு 24[1].
2. ஏத்தாம். ஒரேப் மலைநாட்டுக்கு வடமேற்கே=சிவந்த சமுத்திரத்தின் வனாந்தரம். எண் 33[8].
3. ஏதோம். உப்புக்கடலுக்குத் தென்கிழக்கே. 2 இரா 3[8].
4. சிவந்த சமுத்திரத்தின் வனாந்தரம். =ஏத்தாம் வனாந்தரம். யாத் 13[18].
5. காதேஸ். உப்புக்கடலுக்குத் தென்மேற்கே. பாரான் வனாந்தரத்தில் ஒரு பாகம். சங் 29[8].
6. கிபியோன். பென்யமீன் நாட்டிலே. 2 சாமு 2[24].
7. கெதெமோத். ரூபன் நாட்டிலே. உபா 2[26].
8. சீப். யூதா மலைநாட்டிலே. 1 சாமு 23[14].
9. சீனாய். சீனாய் மலைநாடு. யாத் 19[1] மு.
10. சீன். (*Sin*) சீனாய் மலைநாட்டுக்கு மேற்கே. யாத் 16.
11. சீன். (*Zin.*) பாரான் வனாந்தரத்துக்கும் ஏதோமுக்கும் இடையிலுள்ளது. எண் 28[1] 27[14] உபா 32[51] மு.
12. சூர். கோசேன் நாட்டுக்குக் கிழக்கே. யாத் 15[22].
13. தமஸ்கு. இது வட சீரியாவிலே தமஸ்குவுக்குச் சமீபமாயிருந்தது. 1 இரா 19[15].
14. பாரான். காதேசுக்குத் தெற்கே. ஆதி 21[21] எண் 10[12] மு.
15. பெத்-ஆவேன். பென்யமீன் நாட்டின் வடபாகத்திலே. யோசு 18[12].
16. பெயெர்-செபா. சிமியோன் நாட்டின் தென்பாகத்தில். ஆதி 21[14].
17. மாகோன். உப்புக்கடலுக்குத் தெற்கே. 1 சாமு 23[24].
18. மோவாப். உப்புக்கடலுக்குக் கிழக்கே. உபா 2[8].
19. யூதா வனாந்தரம். யூதா மலைநாட்டின் தென்பாகம். இதில் இயேசு சோதிக்கப்பட்டார். நியா 1[16].
20. யெருவேல். *Jeruel.* உப்புக்கடலின் மேல் ஓரத்திலிருந்தது. 2 நாளா 20[16].

வனியா. **Vaniah.** எஸ்றா 10[36].

வன்கண். **Evil eye.** உபா 15[9] நீதி 23[6] 28[55] மத் 20[15] மாற் 7[22].

## வா

வாகேபு. **Vaheb**. எண் $21^{14}$.

வாக்கியம். **'Oracle', 'Proverb'**. பிர $12^{10}$ ஏசா $14^{4}$ அப் $7^{38}$ ரோம $3^{2}$ எபி $5^{12}$ 1 பேது $4^{11}$.

வாக்கு. **Testimony, Word**. ஆதி $41^{40}$ உபா $17^{6}$ யோசு $9^{14}$ 2 சாமு $16^{23}$ லூக் $21^{15}$ $24^{19}$.

வாக்குத்தத்தம். **Promise**.

i. மனுஷர் செய்யும் வாக்குத்தத்தங்கள். உபா $23^{23}$ யோசு $9^{21}$ நெகே $5^{12}$ எஸ்தர் $4^{7}$ மத் $14^{7}$ மாற் $14^{11}$ அப் $7^{5}$ $23^{21}$ 2 பேது $2^{19}$.

ii. புதிய ஏற்பாட்டில் ஆவிக்குரிய வரங்களையும், மேசியாவையும், பரிசுத்த ஆவியையும், சுவிசேஷ சிலாக்கியங்களையும் குறிக்கும் வாக்குத்தத்தங்கள் பல. லூக் $24^{49}$ ரோம $4^{13}$ கலா $3^{14}$ $4^{28}$ எபே $1^{13}$ $3^{6}$ எபி $6^{12}$ $8^{6}$ $11^{33}$ 1 தீமோ $4^{8}$ யாக் $1^{12}$.

iii. 'வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகள்' யாவர் என்றால்,

(*a*) ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் சந்ததியார். ரோம $9^{8}$ கலா $4^{28}$.

(*b*) விசுவாசிகள். கலா $3^{29}$ 2 கொரி $7^{1}$ எபி $6^{12}$.

iv. கடவுள் அருளின வாக்குத்தத்தம். லூக் $24^{49}$ 2 கொரி $1^{20}$ அப் $1^{4}$ எபி $11^{39}$ 2 பேது $1^{4}$.

v. 'வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம்'. உபா $9^{28}$ எபி $11^{11}$.

வாக்குவாதம். **Contention**. அப் $15^{2}$ 1 கொரி $1^{11}$ 2 கொரி $12^{20}$ தீத் $3^{9}$.

வாசஸ்தலம். **Tabernacle, mansion.**

i. ஆசரிப்புக் கூடாரம். யாத் 26 அதி $35^{15}$ $36^{26}$ $40^{2}$ எண் $1^{50}$ $3^{23}$.

ii. தேவாலயம். உபா $12^{5}$ 1 நாளா $23^{26}$ சங் $43^{3}$ $46^{4}$ $78^{60}$ $84^{1}$.

iii. குடியிருப்பு. யாத் $12^{20}$ $35^{3}$ புல $2^{2}$.

iv. பரலோகம். உபா $26^{15}$ சங் $132^{7}$ ஏசா $63^{15}$ எரே $25^{30}$ யோவா $14^{2}$ யூதா $1^{6}$.

வாசம்பண்ணுகிறது. **To dwell**. குடியிருக்கிறது. கடவுள் பரமண்டலத்திலும் பக்தர்களுடைய இருதயத்திலும், விசேஷமாய் வாசம்பண்ணுகிறார். யாத் $29^{45}$ எண் $35^{44}$ 1 இரா $6^{13}$ $8^{12}$ சங் $9^{12}$ $123^{1}$ $132^{14}$ ஏசா $33^{5}$ $57^{15}$ எசே $43^{7}$ அப் $17^{24}$ 2 கொரி $6^{16}$ 1 யோவா $4^{15}$.

இயேசுகிறிஸ்து மாமிசத்தில் வெளிப்பட்டு மனிதரிடத்தில் வாசம்பண்ணி (யோவா $1^{14}$), விசுவாசிகளுடைய இருதயத்தில் எப்போதும் எங்கும் வாசம்பண்ணுகிறார். எபே $3^{17}$ 1 யோவா $3^{24}$.

பரிசுத்த ஆவியானவர் மனிதர்களுடைய ஆத்துமாவில் வாசம்பண்ணி, பக்தி, அன்பு முதலிய நற்குணங்களை உண்டாக்குகிறார். ரோம $8^{9}$ 1 கொரி $3^{16}$ 2 தீமோ $1^{14}$. பக்தர்கள் கர்த்தருக்குள் வாசம்பண்ணுகிறார்கள். யோவா $6^{56}$ 1 யோவா $3^{24}$ $4^{13}$.

வேதத்தை நன்றாய் ஆராய்ந்து உட்கொள்ளும்போது அதின் வசனங்கள் நமக்குள் பரிபூரணமாய் வாசம்பண்ணும். கொலோ $3^{16}$.

சாத்தான் அக்கிரமக்காரருக்குள் வாசம்பண்ணுகிறான். மத் $12^{45}$. நல்லோர் நல்ல இடங்களில் வாசமாயிருப்பார்கள். சங் $15^{1}$ $84^{4}$ $120^{5}$ நீதி $21^{19}$ ஏசா $6^{5}$ $30^{19}$.

வாசல். **Gate, Door**.

சாதாரணமாய்க் கானான் தேசத்திலுள்ள ஊர்களைச்சுற்றி அலங்கம் கட்டப்பட்டிருக்கும். ஊருக்குள்ளே பிரவேசிக்கும்படி இந்த அலங்கங்களில் வாசல்கள் விடப்பட்டிருக்கும். பொதுவாக இவ்வாசல்களுக்கு இரட்டைக் கதவுகள் இருக்கும். சத்துருக்கள் இவைகளை எளிதில் உடைத்துப்போடாதபடி இக்கதவுகளின்மேல் செம்பு அல்லது இருப்புத் தகடுகள் பதித்திருக்கும். சில வாசற்கதவுகள் கற்பலகைகளாயிருக்கும். சங் $107^{16}$ ஏசா $45^{2}$ அப் $12^{10}$. இவைகளுக்குத் தாழ்ப்பாள்களுண்டு. உபா $3^{5}$ 1 இரா $4^{13}$. இவ்வாசல்களுக்கு அருகே காவற்கோபுரங்கள் இருக்கும். 2 சாமு $18^{24}$.

சிற்பாசாரிகளால் இவை விசித்திரமாய் அலங்கரிக்கப்படும். உபா $6^{9}$ 1 இரா $6^{31}$ 2 இரா $18^{14}$ எசே $41^{23}$.

சத்துருக்கள் ஒரு ஊரில் வாசற்கதவுகளை உடைத்தால் அவர்கள் அந்த ஊரைப் பிடிப்பார்கள் என்பது நிச்சயம். ஆகவே 'வாசலைப் பிடித்தல்' என்பது ஜெயத்தைக் குறிக்கும். ஆதி $22^{18}$ மத் $16^{18}$.

ஊர் வாசலின் பக்கத்தில் சந்தை வியாபாரத்துக்காகவும் ஊர் மந்தைக்காகவும் விசாலமான இடம் உண்டு. ஆதி $23^{10}$ உபா $16^{18}$ $21^{19}$ $25^{7}$ ரூத் $4^{1}$ 2 இரா $7^{1}$ நெகே $13^{19}$ நீதி $22^{22}$ ஆமோ $5^{10}$. இந்த இடத்தில் விசேஷித்த காரியங்களைக்குறித்து விளம்பரம் செய்யப்படும். தீர்க்கதரிசிகளும் இங்கே பேசுவார்கள். நீதி $1^{21}$ $8^{3}$ ஏசா $29^{21}$ எரே $17^{19}$ $26^{10}$. மூப்பர் பஞ்சாயத்து நடக்கும் இடம். புல $5^{14}$ ஆமோ $5^{15}$.

ஊருக்குப் புறம்பே வாசலுக்குச் சமீபமாய்க் குற்றவாளிகளைக் கொன்றுபோடுவார்கள். 1 இரா $21^{13}$ அப் $7^{58}$ எபி $13^{12}$.

ஊரின் வாசற்கதவுகள் திறந்திருப்பது, ஊரில் வசிப்பவர்களுக்கு யாதொரு பயமில்லை என்பதற்கும், உட்பிரவேசிக்கிற மற்

றவர்களுக்குச் சந்தோஷ அழைப்பு என்பதற்கும் அடையாளமாகும். வெளி $21^{25}$. பட்டணம் காண்க.

வாசல்காவலாளர். **Porter, Door-keeper.**

i. லேவியர்கள் தேவாலயத்து வாசல் காவலாளராய் இருந்தார்கள். 1 நாளா $9^{17}$ $15^{23}$ $16^{42}$ $26^{1}$ 2 நாளா $8^{14}$ $23^{2}$ $31^{14}$ $35^{15}$ எஸ்றா $2^{70}$ நெகே $12^{45}$. ஒருகாலத்தில் இவர்களின் தொகை 4,000. 1 நாளா $23^{5}$.

ii. பட்டணத்து வாசல் காவலாளர். 2 சாமு $18^{26}$ 2 இரா $7^{10}$.

iii. வீட்டு வாசலைக் காக்கிறவன். மாற் $13^{34}$ யோவா $10^{3}$. வீட்டு வாசலைக் காக்கிறவள். யோவா $18^{6}$ அப் $12^{3}$.

வாசனை. **Smell, Savour.** ஆதி $8^{21}$ $27^{27}$ யாத் $29^{18}$ உன்.பா $1^{12}$ $2^{13}$ $4^{10}$ $5^{5}$ $7^{8}$ ஓசி $14^{6}$ 2 கொரி $2^{14}$ எபே $5^{2}$ பிலி $4^{18}$.

வாசனை மரம். **Almug tree.** 1 இரா $10^{11}$ 2 நாளா $2^{8}$ $9^{10}$. இது இன்ன மரம் என்று நாம் தீர்மானமாய்ச் சொல்லக்கூடாது. எபிரெய பதம் 'செம் சந்தனம்' என்று குறிக்கலாம்.

வாச்சி. **R. V. Adze.** 1 இரா $6^{6}$ எரே $10^{3}$.

வாது. **Dispute.** நீதி $13^{10}$ $22^{10}$ ஆப $1^{3}$.

வாதுமை. **Almond.** பலெஸ்தீனு தேசத்தில் ஜனுவரி மாதத்தில் வாதுமை பூத்து, மார்ச்சுமாதத்தில் கனிகொடுக்கும். வாதுமையைக் குறிக்கிற எபிரெய பதத்துக்கும் 'தீவிரமாய்ச் செய்கிறது' என்னும் அர்த்தங்கொண்ட எபிரெய வினைச்சொல்லுக்கும் ஒற்றுமை இருப்பதினால் 'வாதுமை' என்பது எரே $1^{11}$–ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆரோனின் ஊன்றுகோல் வாதுமை மரமே. எண் $17^{8}$. இதின் பூ வெள்ளையாயிருப்பதினால் நரை மயிரைப் பற்றி வாதுமை உவமையாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. பிர $12^{5}$. ஆசரிப்புக்கூடாரத்து குத்துவிளக்கின் கிளைகளிலுள்ள மொக்குகள் வாதுமை பழத்தையும், பூவையும்போலிருந்தன. யாத் $25^{33}$ $37^{19}$. இது எகிப்து தேசத்தில் வளருகிறதில்லை. ஆதி $43^{11}$.

வாதைகள். **Plagues.** இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்படுமுன் எகிப்தியர் மேல் வந்த பத்து வாதைகளின் விபரம் யாத்திராகமம் 7–13 அதிகாரங்களில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இத்துடன் சங் $78^{44-51}$ $105^{28-36}$ ரோம $9^{14-24}$ ஒப்பிட்டுப் பார்க்க.

வெளிப்படுத்தின விசேஷம் 8, 9, 16 அதிகாரங்களில் பரி. யோவானுடைய தரிசனத்தில் சொல்லப்படுகிற வாதைகளுக்கும் யாத்திராகமத்தில் சொல்லப்படும் வாதைகளுக்கும் பல ஒற்றுமைகளுண்டு. அவையாவன:—கல்மழை, இரத்தமான தண்ணீர், இருள், வெட்டுக்கிளி, தவளை கொப்பளங்கள். வெளி $8^{7}$ $9^{1}$ $16^{2.10.13.17}$.

யாத்திராகமத்திலுள்ள சரித்திரத்தை நாம் கவனிக்கும்போது அந்தப் பத்து வாதைகளும் படிப்படியாய்க் கொரமாயும் ஒன்றுக்கு ஒன்று சம்பந்தமுள்ளதாயும் இருந்ததாகக் காண்கிறோம்.

1. ஜுன் மாதத்தில் நீலநதியின் உற்பத்திஸ்தானத்திலே அதிக மழை பெய்தபடியால் நதியில் வெள்ளம் வரும்போது, அதிலுள்ள செத்தை, மண், குப்பை முதலியவைகளினாலே தண்ணீர் சிவப்பு நிறமாக மாறும். சமயா சமயங்களில் துர்நாற்ற முண்டாகும். இக்காரணத்தினாலே நீல நதியின் தண்ணீர் ரத்தமாக மாறினதென்று யாத்திராகமம் ஆக்கியோன் சொல்வதாக வேதசாஸ்திரிகளில் அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். யாத் $7^{19}$.

2. நீல நதியில் இவ்விதமாய்ச் செத்தை, சேறு மிகுதியாயிருக்குங் காலங்களில் தவளைகள் பெருகிப் பலுகும். எகிப்தியர்களைத் தண்டிக்கும்படி யேகோவா இவைகளை அதிகரிக்கச் செய்தார். செப்டம்பர் மாதத்திலே எகிப்தில் தவளைகள் ஏராளமாயிருக்கும். யாத் $8^{2}$.

3, 4. தவளைகள் சாகும்போது பேன்களும், (அல்லது கொசுகுகளும் கண் கொசுகுகளும்), ஈக்களும் ஜாஸ்தியாக உற்பத்தியாகும். யாத் $8^{16.21}$.

5, 6. இந்தப் பூச்சிகளினாலுண்டான வாதைகளிலிருந்து மிருகங்களுக்குக் கொள்ளைநோய் உண்டாயிற்று. யாத் $9^{3}$. மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் கொப்பளங்கள். யாத் $9^{9}$.

7. ஜனுவரி மாதத்திலே எகிப்தில் கல்மழை பெய்வதுண்டு. யாத் $9^{22}$.

8. கிழக்கிலிருந்து வீசின சுழல்காற்று வெட்டுக்கிளிகளைக் கொண்டுவந்தது. யாத் $10^{13}$.

9. காரிருள். ஒருவேளை இது மண்மாரியாயிருக்கலாம். யாத் $10^{21}$.

10. தலைச்சன் சங்காரம்.

இந்த வாதைகளில் பின்வரும் விஷயங்களைக் கவனிக்கவேண்டும்:

i. யேகோவா எகிப்தியரைத் தண்டிக்கக்கூடியவரையிலும் இயற்கைப் பிரமாணத்தையே உபயோகித்தார்.

ii. அக்காலத்திய எபிரெயர்கள், நமக்குத் தெரிந்த பூச்சி முதலிய பிராணிகளின் சாஸ்

திரம்தெரியாதவர்களாயிருந்தார்கள்.[*] ஆகவே இவ்வாதைகள் யாவும் 'அற்புதங்கள்' என்று எளிதில் நம்பினார்கள்.

iii. என்றாலும் யாத்திராகம ஆக்கியோன் இவைகளின் மூலமாய் யேகோவா சர்வ வல்லமையுள்ளவராயிருக்கிறார் என்றும், பார்வோன் முதலிய எல்லோரும் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்றும், கீழ்ப்படியாதவர்கள் தண்டனை யடைவார்களென்றும், கீழ்ப்படிகிறவர்களோ மோசத்தினின்று பாதுகாக்கப்பட்டு ரட்சிக்கப்படுவார்கள் என்றும் காட்டுகிறான்.

வாந்தி. **Vomit**. நீதி $23^{8}$ $25^{16}$ எசா $19^{14}$ $28^{8}$ எரே $25^{27}$ $48^{26}$ வெளி $3^{16}$.

வாய். **Mouth**.

1. பேசுகிற வாய். ஆதி $45^{12}$ யாத் $4^{11.16}$ சங் $115^{5}$ $135^{17}$ எரே $15^{19}$ மத் $12^{34}$ $15^{11}$ ரோம $10^{9}$ கொலோ $3^{8}$.

2. வாக்கு. ஆதி $24^{57}$ யாத் $13^{9}$ உபா $19^{15}$ 1 சாமு $2^{1}$ யோபு $19^{16}$ சங் $73^{9}$ எசா $11^{4}$ $49^{2}$ ரோம $3^{14}$ $15^{6}$ 2 கொரி $6^{11}$ எபே $6^{19}$.

3. சாப்பிடுகிற வாய். யோபு $12^{11}$ சங் $103^{5}$ நீதி $15^{14}$.

4. பெருமை, வீம்பு, வீணான பேச்சு. நியா $9^{38}$ நீதி $13^{3}$ $18^{6}$ சங் $59^{12}$ $73^{9}$.

5. திருவுள்ளம். எசா $1^{20}$ $40^{5}$ $59^{21}$ $62^{2}$ மத் $4^{4}$ லூக் $1^{10}$ வெளி $1^{16}$ $2^{16}$.

6. 'முகமுகமாக' என்பதற்குப் பதிலாக 'வாய் வாயாக' என்று மூலபாஷையில் சொல்லப்பட்டிருக்கிறது. எண் $12^{8}$.

7. 'கட்டளை' என்பதற்குப் பதிலாக 'வாய்' என்று மூலபாஷையில் சொல்லப்பட்டிருக்கிறது. யாத் $45^{21}$ யோபு $39^{27}$ பிர $8^{2}$.

வாய்க்கால். **Channel**. 1 இரா $18^{32}$. சாலகம், மதகு காண்க.

வாய்க்கிறது. **Prosper**. ஆதி $39^{3}$ உபா $29^{9}$ சங் $1^{3}$ $118^{25}$.

வாய்சாதா. **Vaizatha**. ஆமானின் குமாரரில் ஒருவன். எஸ்தர் $9^{9}$.

வாரம். **Week**. காலம், பண்டிகை காண்க.

வார். **Scourge**. மத் $10^{17}$. ரோமர்களுடைய வாரின் அந்தத்தில் எலும்புகளும் ஈயக்குண்டுகளும் கட்டப்பட்டதினால் வாரினால் அடிப்பது அதிகப் பயங்கரமாயிருந்தது. மத் $20^{19}$ யோவா $19^{1}$ அப் $22^{25}$.

வார்க்கிறது. **Pour**. ஆதி $35^{14}$ லேவி $8^{12}$ 1 சாமு $2^{1}$ $10^{1}$ எரே $19^{13}$.

வார்த்தை. **The Word**.

1. பதங்கள். புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்த்தவர்கள் லாகாஸ் (*Logos*) என்னும் கிரேக்க பதத்தை 'வார்த்தை' என்பதினாலே அல்ல 'வாக்கு' என்பதினாலே மொழிபெயர்த்திருந்தால் நலமாயிருக்கும் என்று நமக்குத் தெரிகிறது. ஏனெனில் வாக்கு என்னும் சமஸ்கிருத பதத்துக்குத் தத்துவசாஸ்திர சம்பந்தமான அர்த்தம் உண்டு. வார்த்தை என்னும் பதத்துக்கோ அவ்வித அர்த்தம் இல்லை. ஆனால் வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்கள் லாகாஸ் என்னும் பதத்தை வார்த்தை என்று மொழிபெயர்த்ததினாலே, வார்த்தை என்னும் பதத்தையே நாம் இங்கே வழங்கவேண்டியது.

2. சில அர்த்தங்கள். சில வசனங்களில் வார்த்தை என்பது கடவுளின் சித்தத்தை, அல்லது அவர் அருளின வெளிப்படுத்தலை, அல்லது தேவசித்தத்தை வெளிப்படுத்தின கிறிஸ்தவ சுவிசேஷத்தைக் குறிக்கிறது. மத் $13^{19}$ பிலி $1^{14}$. யோவான் எழுதின நூல்களிலும் வார்த்தை என்னும் பதம் மனுஷர்களுக்கு ஜீவனையும் ஒளியையுங் கொடுத்துப் பிதாவினுடைய சித்தத்தைப் பூரணமாய் வெளிப்படுத்துகிற முதற்பேறான குமாரனைக் குறிக்கிறது.

3. பரி. யோவானின் சுவிசேஷம். பரி. யோவான் தன் சுவிசேஷத்தின் முகவுரையில் 'வார்த்தை' என்பவரைப்பற்றிச் சொன்னவையாவன:

i. யோவா $1^{1-5}$.

*a*. ஆதிமுதல் பிதாவானவர் ஒரு ஆள். வார்த்தையானவர் வேறே ஆள். ஆனாலும் பிதாவானவரைப்போல வார்த்தையானவர் அதே கடவுள்.

*b*. உலகம் வார்த்தையானவரால் உண்டாக்கப்பட்டு அவர் வல்லமையினால் நிலைநிற்கிறது.

*c*. மனுஷர் அவராலே சிருஷ்டிக்கப்பட்டு அவர் மூலமாய் மெய்ஞ்ஞான ஒளியை அடைந்து அவராலே பிழைக்கிறார்கள்.

ii. $1^{5-13}$. வார்த்தையானவருக்கும் யோவான்ஸ்நானகனுக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில், வார்த்தையானவர் மெய்யான ஒளியாயிருந்து தம்மையேற்றுக்கொண்டவர்களுக்கு ஜீவனை அருளுகிறார். யோவான்ஸ்நானகன் அதற்குச் சாட்சியாக இருக்கிறான்.

iii. வார்த்தையானவர் இவ்வுலகத்தில் இறங்கி, மானிட ரூபமடைந்து, மனிதர்களுக்குக் கிருபையையும் சத்தியத்தையும் அறிவித்தார். அவரும் இயேசுகிறிஸ்து

வும் ஒருவரே. ஆதலால் இயேசுகிறிஸ்து ஆதிமூர்த்தியாகிய தேவவார்த்தையும் தேவ குமாரனுமாயிருக்கிறார்.

3. இந்தக் கோள்கையின் உற்பத்தி.

i. சிலர் ஆதியாகமத்தின் முதலாம் அதிகாரத்தில் கடவுள் அருளின மொழிகளைக் குறித்தும் சங்கீதங்களிலும் தீர்க்கதரிசன ஆகமங்களிலும் யேகோவாவினுடைய வார்த்தையைக்குறித்தும் ஞானாகமத்தில் கூறிய ஞானம் என்பதைக்குறித்தும் ஆராய்ச்சி செய்து, பரி. யோவான் பழைய ஏற்பாட்டில் வார்த்தையையும் ஞானத்தையும் பற்றிச் சொன்ன வசனங்களைச் சேர்த்து, இயேசுவுக்கு வார்த்தை என்று பெயரிட்டிருக்கிறான் என்று நினைக்கிறார்கள். ஆதி 1 அதி சங் $33^{6}$ ஏசா $55^{11}$ நீதி $8^{22}$. ஆனால் பழைய ஏற்பாட்டில் சொல்லியிருக்கிற வார்த்தை, ஞானம் என்பவைகளுக்கும், மனுஷர் யாவரும் ரக்ஷிப்படையத் தக்கதாக அவர்களுக்கு மெய்ஞ்ஞானத்தைக் கொடுக்கிறவர் என்று பரி. யோவான் சொல்லுகிற வார்த்தையானவருக்கும் வித்தியாசம் உண்டு.

ii. வேறு சிலர் அக்காலத்துத் தத்துவ சாஸ்திரங்களை வாசித்து, அவைகளில் சொன்ன வார்த்தையும் பரி. யோவான் சொன்ன வார்த்தையும் ஒன்றுதான் என்று நினைக்கிறார்கள். அக்காலத்து கிரேக்க சாஸ்திரிகள் தேவனுடைய உத்தம ஞானமாகிய லாகாஸ் (*Logos*) இவ்வுலகத்தில் தோன்றி மனுஷர்களுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்கிக்காட்டினது என்று நினைத்தார்கள். ஆனால் அந்தத் தத்துவசாஸ்திரிகள் சொன்ன ஞானமாகிய லாகாஸ் என்பதற்கும் பரி. யோவான் சொன்ன வார்த்தை என்பவருக்கும் பல வித்தியாசம் உண்டு.

*a*. அவர்கள் சொன்ன லாகாஸ் ஆள்தத்துவமுடைய வஸ்து என்று சொல்லமுடியாது. பரி. யோவான் சொன்ன லாகாஸ் என்பவரோ ஆள் தத்துவமுடையவர்.

*b*. அவர்கள் சொன்ன லாகாஸ் கடவுளினுடைய குணங்களில் தானாகவே தோன்றிய ஒரு குணம். பரி. யோவான் சொன்ன வார்த்தையானவர் திரியேகத்துள் தாமாக இருக்கும் ஓர் ஆள்.

*c*. தத்துவசாஸ்திரிகள் சொன்ன லாகாஸ் மேசியா அல்ல. பரி. யோவான் சொன்ன வார்த்தையானவரோ உலகத்தை ரக்ஷிக்கிற மேசியா.

*d*. கடவுள் மானிட தேகத்தை வகிப்பது அவருடைய மேன்மைக்கு ஓர் இகழ்ச்சி என்று தத்துவசாஸ்திரிகள் நினைத்தார்கள். பரி. யோவானுடைய அபிப்பிராயத்தின்படி வார்த்தையானவர் மானிட தேகத்தை அடையும்போது அருள் நிறைந்தவராயும் மேன்மையுற்றவராயும் இருந்தார்.

iii. பழைய ஏற்பாட்டில் சொல்லியிருக்கிற ஞானத்தைப்பற்றியும் கிரேக்க தத்துவ சாஸ்திர சம்பந்தமான லாகாஸைப்பற்றியும் பரி. யோவான் வாசிக்கவே இல்லை என்று சொல்லமாட்டோம். ஆனால் அவன் இயேசுகிறிஸ்துவைக் குறித்து ஆழ்ந்த ஆராய்ச்சிசெய்து, திரியேகத்தில் அவருக்கும் பிதாவுக்கும் உள்ள சம்பந்தத்தையும், அவருக்கும் மனுஷருக்கும் உள்ள சம்பந்தத்தையும், அவர் அருளின நன்மொழிகளின் வல்லமையையும், அவர் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்ததையும், அவர் மனுஷருடைய மனதில் உண்டாக்கும் ஞான ஒளியையும், அவர் இந்த உலகத்தில் தமது ரக்ஷணிய மார்க்கத்தின்மூலமாய் அருளும் மெய்ப்பிரகாசத்தையும் குறிக்கும்படியாக வார்த்தையானவர் என்னும் இந்த நாமத்தை அவருக்கு இட்டிருக்கிறான்.

பரி. யோவான் இயேசுகிறிஸ்துவைக் குறித்து இந்தக் கொள்கையைத் தனது சுவிசேஷத்தில் எழுதும்பொழுது, ‘வார்த்தையானவர்’ என்னும் இந்தப் பதத்தில் அடங்கிய கருத்து பல வசனங்களில் தோன்றும். யோவா $3^{16}$ $6^{54}$ $7^{28}$ $8^{12}$ $10^{36}$ $12^{64}$ $14^{6}$ $17^{8}$ மு.

4. இதன் போதனை. பரி. யோவான் இரண்டு விசேஷ நோக்கங்களுடனே மேற்சொன்ன வசனங்களில் தெளிவாய்ப் போதிக்கிறான். அவையாவன:

i. வார்த்தையானவர் கடவுளை வெளிப்படுத்தினவர்.

ii. அவர் மனுஷரை மீட்கிறவர்.

i. பிதாவானவருக்கும் வார்த்தையானவராகிய குமாரனுக்கும் உள்ள சம்பந்தம் தகப்பனுக்கும் பிள்ளைக்கும் உள்ள சம்பந்தமாயிருக்கிறது என்று கூறி இயேசுவுக்கும் பிதாவாகிய கடவுளுக்கும் தன்மையில் யாதொரு வித்தியாசமும் இல்லையென்று காட்டி, பல வசனங்களில் வழி, சத்தியம், ஒளி, ஜீவஅப்பம் முதலிய நாமங்களை அவருக்குச் சொல்லி, இவ்விதமாய் வார்த்தையானவர் மனுஷர்களுக்குப் பரம கடவுளின் லக்ஷணங்களைத் தெரிவிக்கிறார் என்று சுவிசேஷகன் உரைக்கிறான். இவ்வண்ணமாக வார்த்தையானவரில் நாம் கடவுளின் லக்ஷணம் அனைத்தையும் காணலாம். கடவுளைப்பற்றி நமக்குள்ள அறிவுக்குத் தேவனுடைய வார்த்தையானவரே ஆதாரம்.

ii. ஆனால் தத்துவ சாஸ்திரிகள் நினைப்பதுபோல, மனுஷர் கடவுளைக்குறித்து மெய்யறிவை அடைவது போதும் என்று பரி. யோவான் போதிக்கவே இல்லை. அறிவு நல்லதுதான், ஆயினும் மனுஷர்களுக்கு விசேஷமாய் மீட்பே அவசியம். வார்த்தையானவர் பிதாவினிடத்திலிருந்து வந்து, மோசேயின் நியாயப்பிரமாணத்தை அகற்றி, தமது அருள் நிறைந்த சுவிசேஷத்தினால் நமக்கு வெளிச்சத்தைமட்டும் அல்ல ஜீவனையும் கொடுத்து, தம்மேல் பக்தி வைத்தவர்களுக்குப் புத்திர சுவிகாரத்தை ஈந்து, தமது சத்தியத்தின் அருளால் நம்மை இருளினின்று மீட்டுக்கொண்டு, நித்தியஜீவன் என்னும் உத்தம பாக்கியத்தையும் நமக்கு அருளுகின்றார். இவ்விதமாய் இயேசுகிறிஸ்து சர்வவல்லமையுள்ள தேவ வார்த்தையாயிருந்து நமது இருதயத்திலே புது சிருஷ்டிப்பை உண்டாக்குகிறார்.

யோவான் எழுதின சுவிசேஷம் XI-ம் பாகத்தைக் காண்க.

வார்ப்பு விக்கிரகங்கள். **Molten images.** 2 நாளா $28^{2}$ $34^{4}$.

'வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகங்கள்.' எண் $33^{52}$ உபா $9^{12}$ $27^{15}$ நியா $19^{14}$ சங் $106^{19}$.

'வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்கள்', யாத் $34^{17}$.

'வார்ப்பிக்கப்பட்ட சுரூபம்.' ஏசா $42^{17}$ ஓசி $13^{2}$.

'கன்றுக்குட்டியை வார்ப்பித்தான்.' யாத் $32^{4}$.

வால். **Tail.** யாத் $4^{4}$ உபா $28^{44}$ யோபு $40^{17}$ ஏசா $7^{4}$ $19^{15}$ வெளி $9^{10}$ $12^{4}$.

வாழுகிறது. **Hail, Prosper.** எரே $22^{21}$ மத் $26^{49}$ $27^{29}$ $28^{9}$ மாற் $15^{18}$ லூக் $1^{28}$ யோவா $19^{3}$ 3 யோவா $1^{2}$.

வாழ்த்துகிறது. **Salute.** மத் $5^{47}$ $10^{12}$ ரோ $16^{5}$ மு 1 கொரி $16^{19}$ 2 கொரி $13^{13}$ பிலி $4^{21}$ கொலோ $4^{10}$ 2 தீமோ $4^{19}$ தீத் $3^{15}$ பிலே $1^{23}$ எபி $13^{24}$ 1 பே $5^{13}$ 3 யோவா $1^{14}$.

வாழ்வு. **Prosperity.** யோபு $36^{11}$ சங் $30^{6}$. 'ஜீவவாழ்வு.' பிர $9^{9}$. 'வாழ்க்கை.' ரூத் $1^{12}$.

வாள். **Saw.** 2 சாமு $12^{31}$ 1 இரா $7^{9}$ 1 நாளா $20^{3}$ ஏசா $10^{15}$ எபி $11^{37}$. ஆக்கினை காண்க.

வாற்கோதுமை. **Barley.** மற்றத் தானியங்களைப்பார்க்கிலும் பலெஸ்தீனா தேசத்தில் வாற்கோதுமை அதிகமாய் வளரும். உபா $8^{8}$. அத்தேசத்தார்கள் அப்பம் செய்யும்படி இதை வழக்கமாய் உபயோகிப்பார்கள். நியா $7^{13}$ 2 சாமு $17^{28}$ யோவா $6^{9}$. 'எரிச்சலின்' காணிக்கையாக வாற்கோதுமை செலுத்தப்படும். எண் $5^{15}$. வாற்கோதுமையின் அறுப்புக்காலம் ஏப்ரில், மே மாதங்கள். அது கோதுமையின் அறுப்புக்கு முந்தியிருக்கும். ரூத் $1^{22}$ 2 சாமு $21^{9}$. குதிரை, கழுதை முதலிய மிருகங்களுக்கு வாற்கோதுமை தீனியாக கொடுக்கப்படும். 1 இரா $4^{28}$.

வானசாஸ்திரம். **Astronomy.** நட்சத்திரம் காண்க.

வானசேனை, வானத்தின் சர்வசேனை. **The Host of Heaven.**

1. வானசேனை என்பது நட்சத்திரங்களைக் குறிக்கும். கானானியர் நட்சத்திரங்களை வணங்கிவந்தார்கள். இப்படிச் செய்யக் கூடாதென்று பிரமாணம் இஸ்ரவேலருக்கிருந்தது. ஆனாலும் அவர்கள் அடிக்கடி இந்தத் தகாத வணக்கத்தைச் செய்துவந்தார்கள். கி-மு. 7-ம் நூற்றாண்டிலே மனாசே ராஜா இந்த ஆராதனையைத் தேவாலயத்திலே நடத்தினான். உபா $4^{19}$ $17^{3}$ 2 இரா $21^{5}$. வீடுகளின் மேல்மெத்தையில் இந்த ஆராதனை நடக்கும். எரே $19^{13}$ செப் $1^{5}$. இஸ்ரவேல் ராஜ்யத்தாரும்கூட இந்த ஆராதனையை நடத்தினார்கள். 2 இரா $17^{16}$.

யோசியா ராஜா மார்க்க சீர்திருத்தம் செய்தபோது இந்த ஆராதனையை அகற்றிவிட்டான். 2 இரா $23^{4}$.

2. பழைய ஏற்பாட்டு ஆகம ஆக்கியோன்கள் நட்சத்திரங்கள் யேகோவாவினுடைய சேனைகள் என்று பல வசனங்களில் உவமையாய்ச் சொல்லுகிறார்கள். ஆதி $2^{1}$ ஏசா $34^{4}$ $40^{26}$ $45^{12}$.

3. இதினிமித்தம் பல வசனங்களில் 'வானசேனை' என்பதும், 'பரமசேனை' என்பதும், 'கர்த்தருடைய சேனை' என்பதும் தேவ தூதர்களைக் குறிக்கும். ஆதி $32^{2}$ யோசு $5^{14}$ 1 இரா $22^{19}$ யோபு $25^{3}$ நெகே $9^{6}$ சங் $33^{6}$ $148^{2}$ லூக் $2^{13}$.

இதினிமித்தம் கடவுளுக்கு 'சேனைகளின் கர்த்தர்' என்கிற நாமம் வந்தது. 1 சாமு $17^{45}$. கடவுள் காண்க.

வானம். **Heaven.** ஆகாயம், பரமண்டலம் காண்க.

வானராக்கினி. **Queen of Heaven.** எரே $7^{18}$ $44^{17,25}$. நட்சத்திரம் காண்க.

வானவில். **Rainbow.** யேகோவாவின் இரக்கத்துக்கு அடையாளம். 'வில்.' ஆதி $9^{13}$. 'வானவில்.' எசே $1^{28}$ வெளி $4^{3}$ $10^{1}$.

வானோர். **Heavenly (Ones).** பரலோகத்தை யடைந்தவர். 1 கொரி $15^{48}$ பிலி $2^{10}$.

## வி

விகாரம். **Lasciviousness,**

'விகாரம் 6 : காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம். அன்றி, இடும்பை, அசூயையோடு எட்டெனவுமாம்.'

'காம விகாரம்'. மாற் $7^{22}$ 2 கொரி $12^{21}$ கலா $5^{19}$ எபே $4^{19}$ 1 பேது $4^{3}$ யூதா $1^{4}$.

விக்கிரகம். **Image, Idol.** நியா $4^{18}$ 2 சாமு $5^{21}$ 2 இரா $6^{5}$ 2 நாளா $33^{22}$ ஏசா $17^{8}$ எசே $7^{20}$ $8^{3}$ அப் $15^{28}$ $21^{25}$ 1 கொரி $8^{4.10}$ $10^{19}$ வெளி $2^{14}$. சிலை காண்க.

விக்கிரகாராதனை. **Idolatry.** வேதாகமத்தில் விக்கிரகாராதனையைப்பற்றிப் பல வசனங்களில் சொல்லியிருக்கிறது. பூர்வ காலங்களில் எபிரெயர்கள் பலதடவை விக்கிரகாராதனைக்கு இசைந்திருந்தும், அவர்களுக்குள்ளே சன்மார்க்கத்தைக்குறித்து ஆவலுடையவர்கள் விக்கிரகாராதனையைக் கண்டித்தார்கள். மோசேயின் மூலமாய் இஸ்ரவேலர் கடவுளின் தன்மையைக்குறித்து மெய்யறிவை அடைந்து, அவருக்கு யேகோவா என்று பெயரிட்டு அவர் எபிரெயர்களுக்கே உரிய தேவன் என்று தீர்மானித்து, தீர்க்கதரிசிகளின் போதனையினாலே அவரை ஆவிக்குரியவிதமாய்ப் பணிந்துகொள்ளுவது அவசியம் என்று அறியவந்தார்கள். அவர்கள் முந்தின காலங்களில் நடத்தின விக்கிரகாராதனையைப்பற்றியும் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் தங்களைச் சூழ இருந்த புறமதஸ்தர்கள் நடத்தின விக்கிரகாராதனையைப்பற்றியும் நாம் விசாரிக்கவேண்டும்.

1. எபிரெயர் நடத்தின விக்கிரகாராதனைக்குக் காரணம். ஆபிரகாம் பாபிலோனியா தேசத்திலிருந்து வரும்போதே அவன் யேகோவாவை வணங்கி, தான் பிரவேசித்த கானான் தேசத்திலுள்ள ஜனங்கள் வணங்கின தேவர்களை ஆராதிக்கவில்லை. யாக்கோபு முதலிலே தேராபீம் என்னும் தேவதைகளுக்குப் பயந்திருந்தாலும், கடைசியில் அவன் யேகோவாவையே முற்றிலும் வணங்கினான். ஆதி $31^{19}$. அவனுடைய சந்ததியார் கானான் தேசத்திலும் எகிப்து தேசத்திலும் இருந்தபோது சில விஷயங்களில் அத்தேசத்தி லுள்ளவர்களின் மதத்துக்கு இசைந்துபோனாலும், அவர்கள் யேகோவாவை முற்றிலுமாக மறந்துவிடவில்லை. இதினிமித்தம் மோசே யேகோவாவைக்குறித்து அவர்களுக்குப் புத்திபோதனை சொலலும் பொழுது, அவர்கள் அவனுடைய போதனையை ஏற்றுக்கொண்டார்கள்.

அவர்கள் யாத்திரைசெய்து கானான் தேசத்துக்கு வந்தபின், அத்தேசத்தார் நடத்தின ஆராதனையைப்பார்த்து, மோசேயின் பிரமாணத்துக்கு விரோதமாய் அந்த விக்கிரகாராதனைக்கு அடிக்கடி இணங்கினார்கள். இதற்குக் காரணங்களாவன ?

*a.* யேகோவாவைக்குறித்து அவர்கள் பூரண அறிவு அடையவே இல்லை.

*b.* யேகோவாவைத்தவிர வேறு பல தேவர்களும் உண்டு என்று நம்பினார்கள்.

*c.* அவர்களுடைய அபிப்பிராயத்தின்படி கானான்தேசம் அந்தத் தேவர்களின் சுதந்தரமாகையால், தாங்கள் அந்தத் தேசத்திலே சுகக்ஷேமத்தை அடையும்படி, அந்தத் தேவர்களைப் பிரியப்படுத்தி, அவர்களின் தயவைப் பெறவேண்டும்.

*d.* இஸ்ரவேலர் பிரயாணம்பண்ணுகையில் ஒரே ஜாதியாயிருந்து, மோசே என்னும் தலைவனுக்குக் கீழ்ப்படிந்து, அவன் ஏற்படுத்தின பிரமாணத்தின்படி நடந்து, அவன் கண்டித்த ஆராதனைக்கு விலகியிருப்பார்கள். அவர்கள் கானான்தேசத்துக்குள் பிரவேசித்த பின்பு, பல நாடுகளில் சிதறப்பட்டவர்களாய், மோசேயின் பிரமாணங்களை மறந்து, கானானியர் வணங்கின தேவர்களைத் தாங்களும் வணங்காவிட்டால், அத்தேவர்கள் தங்கள்மேல் வியாதி முதலிய துன்பங்களை அனுப்புவார்கள் என்று பயந்து, சீக்கிரத்தில் அத்தேவர்களை வணங்க ஆரம்பித்தார்கள்.

*e.* அக்காலத்தில் எபிரெயரில் அநேகர் அத்தேசத்து ஸ்திரீகளை விவாகம் பண்ணிக்கொண்டார்கள். பிந்திய காலங்களில் ராஜாக்களுங்கூட இவ்விதமாகவே அந்நிய ஜாதி ஸ்திரீகளை விவாகம்பண்ணினார்கள். இதினிமித்தம் அவர்களில் அநேகர் தங்கள் மனைவிகள் வணங்கின தேவதைகளுடைய மதங்களுக்கு இணங்கிப்போவார்கள்.

*f.* கானான்தேசத்துக்குப் பக்கத்திலிருந்த அசீரியா, எகிப்து முதலிய தேசங்களின் ராஜாக்கள் விக்கிரகாராதனையில் மிக்க வைராக்கிய முடையவர்களானதினால், எபிரெய ராஜாக்கள் அவர்கள் தயவைத் தேடியபொழுது, அவர்கள் நடத்தின விக்கிரக ஆராதனைக்கும் இசைந்துபோனார்கள்.

2. கானானிய தேசத்து விக்கிரக ஆராதனையின் தன்மை.

*a.* கானானியர் விருக்ஷங்களுக்கும் கிணறுகளுக்கும் ஊற்றுகளுக்கும் உரிய 'எஜமான்' என்றருத்தங்கொண்ட 'பாகால்' என்னும்

தேவர்கள் இருப்பார்கள் என்றும்; ஒவ்வொரு ஊரிலும் அவ்வூருக்கு எஜமானாகிய ஓர் தெய்வம் இருக்கும் என்றும்; அந்த ஊராரைக் காப்பாற்றுவது அந்த தெய்வத்தின் கடமையாய் இருக்கும் என்றும் நம்பி மேடை முதலிய தேவ ஸ்தலங்களை ஏற்படுத்தினதும் அல்லாமல், அத்தேவதைகளின் குடியிருப்புக்காகவும் அவைகளுக்கு அடையாளமாகவும் கல்தூண்களையும், பீடங்களையும், அசேரா என்னும் மரத்தூண்களையும் நிறுத்துவார்கள். அடையாளமாக நிறுத்தப்பட்ட சிலைகளில் சில புருஷ சாயலாகவும் சில ஸ்திரீ சாயலாகவும் சில மிருகசாயலாகவும் இருந்தன. இவ்விதமாகத்தான் எபிரெயர் வனாந்தரத்திலே பொன் கன்றுக்குட்டியை உண்டாக்கினார்கள்.

2. கானானியர் தங்கள் தேவதைகளைக் குறிக்கும்படி சிலைகளை வெட்டி அவைகளுக்கு ஆராதனை செலுத்துவார்கள். விசேஷமாய்க் குடும்ப ஆராதனையில் இப்படிச் செய்வார்கள். நியா $17^{5}$. பாகால் என்கிற தேவர்கள் பலர் இருந்தார்கள். அப்படியே அஸ்தரோத் என்னும் பெண் தேவிகளும் பலர் இருந்தார்கள். ஆண் பெண்ணாகிய இந்தத் தேவர்களைப் பிரியப்படுத்தும்படி கானானியரில் அநேகர் தங்கள் ஆசாரத்தின்படி வேசித்தனத்தை நடத்தினார்கள். எண் $25^{1}$ உபா $23^{17}$ 1 இரா $14^{24}$ ஓசி $4^{13}$ ஆமோ $2^{7}$.

கானானியர் வழக்கமாய் 'ராஜா' என்னும் அர்த்தங்கொண்ட 'மோளேகு' என்னும் தேவனுக்குக் குழந்தைகளை நரபலியாகச் செலுத்தினார்கள். 2 இரா $17^{17}$ எரே $7^{31}$.

3. கானானியர் நக்ஷத்திரங்களையும் வணங்கினார்கள் என்று தோன்றுகிறது. இஸ்ரவேலரும் இந்த ஆராதனையை நடத்திவந்தார்கள். யோபு $31^{26}$. இதற்காகச் சூரிய சிலைகளை உண்டாக்கினார்கள். 2 நாளா $34^{4}$. சூரியனுக்குக் குதிரைகளையும் ரதங்களையும் தங்கள் ஆலயங்களில் பிரதிஷ்டை பண்ணினார்கள். 2 இரா $23^{11}$. வானராக்கினி வானசேனை என்பதும் இந்த ஆராதனைக் கடுத்தவைகள். எரே $7^{18}$ $44^{19}$ 2 இரா $17^{16}$.

தேராபீம் என்னும் குலதேவதைகள் ஒரு வித சிலைகள்தான் என்று தோன்றுகிறது. தேராபீம் காண்க.

4. விக்கிரகாராதனைக் கண்டனை. எபிரெயர்கள் மோசேயின் மூலமாய் விக்கிரகாராதனையின் கெடுதிகளை அறிந்திருந்தாலும், அவர்கள் கானான் தேசத்தாரைப்போல விக்கிரகாராதனையைப் பலவிதமாயும் பல நூற்றாண்டுகளாயும் நடத்தினார்கள். ஆனாலும் அவர்கள் யோசியா ராஜாவின் காலத்தில் உபாகமம் என்னும் நூலின் பிரமாணங்களைப் பெற்று, அக்காலமுதல் தீர்க்கதரிசிகள் விக்கிரகாராதனைக்கு விரோதமாய்ப் போதித்தவைகளைப் படிப்படியாய்க் கவனித்து, சிறையிருப்பின் காலத்தில் பாபிலோனியர் நடத்தின விக்கிரகாராதனையை எப்பொழுதும் பார்த்திருந்தும் ஆவிக்குரிய விதமாய் யேகோவாவை வணங்கிவந்து, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்துவந்தார்கள். ஏறக்குறைய கி-மு. 150-ம் வருஷத்தில் சீரியா ராஜா பலெஸ்தீனா தேசத்தில் கிரேக்க முறைமையின்படி விக்கிரகாராதனையை ஸ்தாபிக்கப் பிரயாசப்படும்பொழுது, யூதர்கள் அது தங்கள் ஊருக்கும் தங்கள் தேசத்துக்கும் தகாது என்று தீர்மானித்து அதை நீக்கும்படி ரத்தசாட்சிகளாய் மரித்தார்கள். கி-பி. 37-41 வருஷங்களில் ரோம ராயனாகிய கலிகூலா (*Caligula*) எருசலேம் தேவாலயத்திலே தனது சிலையை நிறுத்தவும், ஜனங்கள் எல்லாரும் அதை வணங்கவேண்டுமென்று கட்டளையிடவும் கருதும்பொழுது அந்த ராயன் மரித்துப்போனான். அவன் அப்படிச் செய்திருந்தால் அக்காலத்திலும் அதை நீக்கும்படி யூதர்கள் மரிக்கவும் ஆயத்தமாய் இருந்தார்கள்.

5. விபசாரமாகிய விக்கிரகாராதனை. யேகோவாவை இஸ்ரவேலுக்கு புருஷனைப் போல ஆண்டவராயிருக்கிறார் என்றும், அவரைவிட்டுப் பொய் தேவதைகளை வணங்கி விக்கிரகாராதனை செய்கிறது விபசாரமும் வேசித்தனமும் என்று எபிரெய பக்தர்கள் நினைத்தார்கள். இதினிமித்தம் யேகோவா 'எரிச்சலுள்ள தேவன்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. யாத் $20^{5}$ உபா $5^{9}$ யோசு $24^{19}$ 1 இரா $14^{22}$ சங் $78^{58}$ எசே $16^{28}$ $23^{8}$ $36^{6}$ நாகூ $1^{2}$ ஓசி $2^{2}$.

6. புதிய ஏற்பாடு. இயேசுவின் காலத்தில் யூதர்கள் விக்கிரகாராதனைக்கு முற்றிலும் விலகியிருந்ததினாலே அவர் அருளின போதகத்தில் அதைக்குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை. பரி. பவுல் கொரிந்து, எபேசு, ரோமாபுரி முதலிய பட்டணங்களுக்குப் பிரயாணம் பண்ணும்பொழுது, அந்நிய மதத்தினர் நடத்தின விக்கிரகாராதனையைப் பார்த்து, அதைக்குறித்துப் பல வசனங்களில் பேசுகிறான். அப் $17^{22-31}$ ரோம $1^{18-32}$ 1 கொரி 8 அதி.

கிறிஸ்தவ போதகத்தின்படி விக்கிரகாராதனை என்பது மனுஷர் உண்டாக்கின சிலைகளை வணங்குவது மாத்திரமல்ல, கடவுளுடைய சித்தத்துக்கு விரோதமாக நாம் நமது இஷ்டத்தின்படி விரும்பின யாவையுங்

குறிக்கும். இந்த நோக்கத்துடனே, அப்போஸ்தலர் விக்கிரகாராதனையைப்பற்றிப் பல வசனங்களில் சொல்லி, உலகநேசம், பொருளாசை, பெருமை, தன்னயம் முதலியவற்றைக் கண்டிக்கிறார்கள். கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றிப் பூரண அறிவை அடைந்தவர்கள் தங்களைப்போல அவ்வளவு விவேகம் அடைந்த சகோதரரை நினைத்துக்கொண்டு, அவர்களுக்கு இடறல் உண்டாகாமல் இருக்கும்படி பரி. பவுல் போதிக்கிறான். 1 கொரி $5^{10}$ $6^{9}$ $8^{4}$ $10^{7,19}$ $12^{2}$ 2 கொரி $6^{16}$ எபே $5^{5}$ கலா $5^{20}$ கொலோ $3^{5}$ 1 யோவா $5^{21}$ 1 பேது $4^{3}$ வெளி $2^{14}$ $21^{8}$. அசேரா, தூண், சிலை, பாகால், மேடை முதலியவை காண்க.

விக்கினம். **Calamity**. சங் $57^{1}$.

விசனம். **Grief**. ஆதி $45^{5}$ ரோம $14^{15}$ துக்கம், துயரம் காண்க.

விசாரணைக் கர்த்தன். **Steward**. ஆதி $15^{2}$. உக்கிராணக்காரன் காண்க.

விசாரணைக்காரர். **Taskmasters**. யாத் $1^{11}$ = ஆளோட்டிகள். யாத் $3^{7}$ $5^{10}$. உக்கிராணக்காரன் காண்க.

விசாரிப்புக்காரன். **Treasurer**. தானி $1^{11}$. உக்கிராணக்காரன் காண்க.

விசுவாசத்தின் பூரண நிச்சயம். **A. V. 'Full assurance of faith' R. V. 'Fulness of faith.'**

எபி $10^{22}$. விசுவாசத்தினால் நாம் அடைந்த மீட்பைப்பற்றி நமக்கு உண்டான நிச்சயத்தைக்குறித்து ரோம $8^{16}$ 1 தெச $1^{5}$ கொலோ $2^{2}$ 1 யோவா $3^{19}$ காண்க.

'நம்பிக்கையின் பூரண நிச்சயம்.' எபி $6^{11}$ பரிசுத்த ஆவி காண்க.

விசுவாசப்பிரமாணம். **Creed**.

விசுவாசப்பிரமாணம் என்பது கிறிஸ்தவர்கள் சில காலங்களில் நம்பிவந்த சமயக் கோட்பாட்டை குறிக்கிறது.

ஆதிகாலத்தில் அப்போஸ்தலர் ஒரு பொதுச்சங்கத்தில் கூடிவந்து, இயேசுவைக் குறித்துத் தங்களுக்குத் தெரிந்த விஷயங்களைப்பற்றி ஆலோசித்து, விசுவாசப்பிரமாணம் என்னும் ஒரு சிறு நூலை எழுதி, அதை விளம்பரம்பண்ணி, சகல கிறிஸ்தவர்களும் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று தீர்மானம் பண்ணினார்கள் என நாம் எண்ணவே கூடாது.

பிந்தியகாலத்தில் வேதசாஸ்திரிகள் இப்படிச் செய்தார்கள் என்பதற்குச் சந்தேகம் இல்லை. முந்திய காலங்களிலோ கிறிஸ்தவர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தின் படியே தங்களுக்குத் தெரிந்த மார்க்க விஷயங்களை அங்கிகரித்துவந்தார்கள். அவர்கள் இந்தக் காரியங்களைப்பற்றி ஒரேவிதமாய் அல்ல, பற்பல மாதிரி அபிப்பிராயங் கொள்ளும் பொழுது அவர்கள் இவைகளைக்குறித்துத் தர்க்கம் பண்ணுவார்கள். சில சமயங்களில் அந்தத் தர்க்கங்களைத் தீர்க்கும்படி ஒரு தீர்மானம் பண்ணுவார்கள். திருஷ்டாந்தமாக அந்நிய மார்க்கங்களினின்று கிறிஸ்தவ மதத்துக்கு வந்தவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தை ஆசரிக்கவேண்டியதில்லை என்று ஆதிக்கிறிஸ்தவர்கள் தீர்மானம் பண்ணினார்கள். திருச்சபையானது தத்துவ சாஸ்திரத்துக்கடுத்த விஷயங்களைக்குறித்துப் பல நூற்றாண்டுகளாகத் தர்க்கவாதம் செய்தபோதிலும், அவைகள் சகல கிறிஸ்தவர்களும் அங்கிகரிக்கத்தக்கத் தீர்மானத்துக்கு வரவே இல்லை. திருஷ்டாந்தமாக, திரியேகத்துவத்தைக்குறித்து இந்நாள்மட்டும் கிரேக்க சபையைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றக் கிறிஸ்தவர்களுக்கும் வித்தியாசம் உண்டு.

இவ்வண்ணமாக விசுவாசப் பிரமாணங்கள் கிறிஸ்தவர்கள் மதசம்பந்தமான விஷயங்களைக்குறித்து அடைந்த தீர்மானங்களைக் குறிக்கும். அவைகள் கடவுள் சபைக்கு இட்ட பிரமாணங்கள் அல்ல.

கிறிஸ்தவ சபையில் பொதுவாய் வழங்கின விசுவாசப் பிரமாணங்கள் மூன்று :

1. அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணம். அப்போஸ்தலர் அனைவரும் ஒன்று கூடி இதை இயற்றினார்கள் என்பது ஆதிக்கிறிஸ்தவ பாரம்பரியம். ஆனால் இந்தப் பிரமாணம் அப்போஸ்தலர்காலத்தில் இயற்றப்பட்டது என்பதற்கும் ஆதிக்கிறிஸ்தவர்கள் பிதா குமாரன் பரிசுத்தஆவி என்பவர்களைக் குறித்துத் தாங்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைகளைச் சபைகூடி வரும்பொழுது ஏகோபித்துச் சொன்னார்கள் என்பதற்கும் யாதொரு அத்தாட்சி இல்லை. ஆனால் யூதர்கள் தங்கள் ஜெப ஆலயங்களில் நடத்தின ஆராதனையில் தாங்கள் யேகோவாவைக் குறித்து நம்பின விஷயங்களை எப்படி ஏகோபித்துச் சொன்னார்களோ அப்படியே கிறிஸ்தவர்களும் தங்கள் கூட்டங்களில், தாங்கள் நம்பினவைகளைச் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறதற்கு இடம் உண்டு. இது எப்படியாயினும் கி-பி. 150-ம் வருஷம் முதல் ஞானஸ்நானம்பெற்ற கிறிஸ்தவர்கள் சபைக்குமுன் செய்யவேண்டிய அறிக்கைக்கும் அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணத்துக்கும் அத்தனை வித்தியாசம் இல்லை. இதில் சகல கிறிஸ்தவர்களும் அநுசரிக்க வேண்டிய கொள்கைகள் அடங்கியிருக்கிறது என்று நினைத்து, அந்தச் சமயத்தில்

கிறிஸ்தவ மூப்பர்களில் சிலர் ஆராதனையில் இதைச் சொல்லத்தக்கதாக முந்திய அறிக்கைப் பிரமாணங்களைச் சுருக்கி இதைப் பிரசுரம் பண்ணினார்கள் என்று நாம் சொல்லலாம். இது அப்போஸ்தலர் போதித்த போதனையின் சாரம் என்று சொல்லுகிறதற்கு ஆக்ஷேபனை இல்லை.

2. நிசேனே (*Nicene*) விசுவாசப்பிரமாணம்.

ஏறக்குறைய கி-பி.200-ம் ஆண்டுமுதல் ஆதிக் கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவின் தத்துவத்தைக்குறித்து ஆராய்ச்சி செய்யும்பொழுது, அவர்களுக்குள்ளே பல தர்க்கவாதங்கள் உண்டாயின. கி-பி. நாலாம் நூற்றாண்டிலே அரியானர் (*Arians*) இயேசுகிறிஸ்துவின் தெய்வீகத்தைக்குறித்துச் சில ஆக்ஷேபனைகளை உண்டுபண்ணினார்கள். அதனாசி என்பவன் அரியானருடைய தப்பறைகளைக் கண்டித்தான். அப்போது ரோமராயனாயிருந்த கொன்ஸ்தந்தீன் கி-பி. 325-ம் ஆண்டில் நிசயா என்னும் ஊரில் ஒரு பொதுச்சங்கம் கூட்டி, சகல அத்தியட்சர்களும் வேதசாஸ்திரிகளும அங்கே வந்து, உண்மையான கிறிஸ்தவர்கள் இந்த விஷயத்தைக்குறித்து அங்கிகரித்தவைகளைத் தெரிவிக்கும்படி அவர்களுக்கு உத்தரவு கொடுத்தான். அவர்கள் விளம்பரம் பண்ணின விசுவாசப் பிரமாணத்தில் இயேசுகிறிஸ்து 'பிதாவானவரைப்போன்ற தன்மையுடையவராய்' இராமல் மெய்யாய்ப் 'பிதாவுடனே திரியேகத்துவத்தில் ஒரே சுபாவமுடைய ஆளாய்' இருக்கிறார் என்று தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. கி-பி. 381-ம் ஆண்டில் கொன்ஸ்தந்திநோபுரி என்னும் பட்டணத்தில் கூடின பொதுச்சங்கத்தில் பரிசுத்த ஆவியானவர் பிதாவோடும் குமாரனோடும் திரியேகத்துவத்துள் ஒருவராயிருக்கிறார் என்று சபையின் அதிபதிகள் ஏற்பாடு பண்ணினார்கள். பரிசுத்தஆவி பிதாவானவரினின்றும் குமாரனினின்றும் புறப்பட்டு வருகிறவர் என்று 5-ம் 6-ம் நூற்றாண்டுகளில் இந்தப் பிரமாணத்திலே முதலாவது சொல்லியிருக்கிறது. ஆகவே இந்தப் பிரமாணம் ஒரே சமயத்திலே ஒரே ஆசிரியனாலே அல்ல, பல நூற்றாண்டுகளிலே பல ஆசிரியராலே அபிவிர்த்தி செய்யப்பட்டுவந்தது என்று நாம் சொல்லக்கூடும்.

3. அதனாசியின் (*Athanasian*) விசுவாசப்பிரமாணம்.

அதனாசியு என்பவன் காலத்துக்குப் பிற்பாடு இயற்றப்பட்டது. இதில் திரியேகத்துவத்தைப்பற்றியும் குமாரன் இவ்வுலகத்தில் அவதாரமாய் இறங்கிவருவதைப்பற்றியும் கிறிஸ்தவர்கள் மீட்பைப் பெறும்படி அங்கிகரிக்கவேண்டிய வேறு அநேக காரியங்களைப்பற்றியும், இவைகளை அங்கிகரியாதவர்களுக்கு வரும் சாபத்தைப்பற்றியும் சொல்லியிருக்கிறது.

வேதசாஸ்திரசம்பந்தமாய் வேத புரட்டர்கள் போதித்த பல தப்பறைகளைக் கண்டிக்கும்படி இந்நூல் இயற்றப்பட்டது என்று நாம் சொல்லக்கூடும். கிறிஸ்தவர்கள் சபையிலே இதை ஏகோபித்துச் சொல்லும்பொழுது, இதன் கருத்தை அவர்கள் பெரும்பாலும் தெரிந்துகொள்ளுகிறதில்லை என்று நாம் சொல்லலாம். மேலும் இதில் சொன்னவைகளை அங்கிகரிக்கிறவர்கள் உண்மையாய் இயேசுகிறிஸ்துவின் மார்க்கத்தை அநுசரித்து வருகிறவர்களே என்பது நிச்சயமானாலும், இதில் கண்ட கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாதவன் சபிக்கப்பட்டவன் என்று இதில் சொல்லியிருப்பது நல்லதல்ல என்று நமக்குத் தோன்றுகிறது. வேதசாஸ்திரிகளில் சிலர் இது கி-பி. 450-ம் ஆண்டில் இயற்றப்பட்டது என்றும், வேறு சிலர் இது கி-பி. 700-ம் ஆண்டுக்கும் 800-ம் ஆண்டுக்கும் இடையில் இயற்றப்பட்டது என்றும் சொல்லுகிறார்கள். அரியானர், திரியேகத்துவம் முதலியவை காண்க.

விசுவாசம். **Faith**.

i. பக்தி. மத் $8^{10}$ $9^{22}$ $15^{28}$ மாற் $4^{40}$ $5^{34}$ லூக் $17^{5}$ $18^{8}$ $22^{32}$ அப் $3^{16}$ $6^{5}$ ரோம $1^{8.17}$ $14^{22}$ 1 கொரி $12^{9}$ $13^{2}$ $13^{13}$ 2 கொரி $5^{7}$ எபி $6^{12}$ $10^{23}$ 11 அதி. கலா $5^{22}$ எபே $6^{16}$ 1 தெச $1^{8}$ $5^{8}$ 1 தீமோ $1^{14}$ $2^{15}$ $6^{11}$ 2 தீமோ $2^{22}$ வெளி $13^{10}$.

ii. உண்மை. உபா $32^{20}$ நீதி $13^{17}$ $14^{5}$ $20^{6}$ ஆப $2^{4}$.

iii. ரட்சண்ய விசுவாசம். அப் $20^{21}$ $24^{24}$ ரோம $3^{25}$ $4^{5}$ 5 அதி. $9^{30}$ $10^{6}$ 1 கொரி $15^{17}$ கலா $2^{16}$ $3^{11.24}$ எபே $2^{8}$ $3^{17}$ $4^{5}$ பிலி $3^{9}$ 2 தீமோ $3^{15}$ யாக் $2^{1}$ எபி $12^{2}$ 1 பேது $1^{5}$.

iv. கிறிஸ்தவ மார்க்கம். அப் $6^{7}$ $14^{22}$ $16^{5}$ ரோம $10^{8}$ 1 கொரி $16^{13}$ 2 கொரி $13^{5}$ கலா $6^{10}$ பிலி $1^{27}$ 1 தீமோ $4^{1}$ $5^{8}$ 1 பேது $5^{9}$ வெளி $2^{13}$ $14^{12}$.

விசுவாசம். **Faith**. [சங்: *H*. பவர் ஐயர் எழுதின வேத அகராதியில் அடியில் கண்ட நிபந்தனம் முதலாவது இயற்றப்பட்டது.]

1. கிறிஸ்து ரட்சகருடைய புண்ணிய பலன்களைப் பெற்றுக்கொள்ளுகிற வகை விசுவாசமெனப்படும்.

திருஷ்டாந்தமாகத் தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தாரிடத்தில் அன்புகூர்ந்தாரென்றும், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்றும், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவானென்றும் கிறிஸ்து சொன்னார். யோவா $3^{16}$ மாற் $16^{16}$. சிறைச்சாலைக்காரன் பவுலை நோக்கி: இரட்சிக்கப்படுகிறதற்கு நான் என்ன செய்யவேண்டுமென்று கேட்டபோது, பவுல் சொன்னது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்றான். அப் $16^{30}$. குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனையுடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லையென்றும், அவனை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படானென்றும் யோவான் எழுதினான். யோவா $3^{18,36}$. வேதமுழுவதிலேயும் இரட்சிப்பின் பிரதானமான கருவி விசுவாசமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏசா $28^{16}$ $45^{22}$ யோவா $6^{40}$.

2. விசுவாசமானது இத்தனை பெரிய கிரியையானபடியினாலே அதன் தன்மையை நன்றாய் அறியவேண்டும். விசுவாசமென்பதற்கு அன்புள்ள நம்பிக்கையென்றும், ஏற்றுக்கொள்ளுதலென்றும், அங்கிகரித்தலென்றும் அருத்தமாம். ஆதலால் அது கிறிஸ்து உண்டென்றுமாத்திரம் நம்புகிறதாயிருந்தால் அந்த நம்பிக்கை பிசாசுக்களுக்கும் உண்டே. யாக் $2^{19}$. அற்புதங்களைச் செய்கிறதற்கேதுவான நம்பிக்கையாயிருந்தால், அது கெட்டுப்போன யூதாஸ்காரியோத்து முதலானவர்களுக்கும் உண்டாயிருந்ததே. மத் $7^{22}$. கிறிஸ்துவினுடைய சரித்திரம் மெய்யென்றுமாத்திரம் எண்ணுகிறதாயிருந்தால், அது துன்மார்க்கத்தில் நடக்கிற அநேகருக்குமுண்டே. கிறிஸ்துமார்க்கத்தின் முறைமைகளின்படி ஞானஸ்நானம் முதலான சடங்குகளைப் பெற்று இரட்சிக்கப்படலாமென்று எண்ணுகிறதாயிருந்தால், அது பாவத்தைவிடாத அநேக கிறிஸ்தவர்களுக்குமுண்டே. கிறிஸ்துமார்க்கத்தையும் மற்ற மார்க்கங்களையும் ஒத்துப்பார்த்து, எல்லாவற்றிலும் கிறிஸ்து மார்க்கமே நல்லதென்றும் பயனுள்ளதென்றும் மாத்திரம் எண்ணுகிறதாயிருந்தால், அது உலக நடக்கையைப் பற்றிக்கொள்ளுகிற அநேகருக்குமுண்டே. கிறிஸ்துமார்க்கத்தில் நடந்தால் சரீர சவுக்கியத்தையும் மோட்சத்தையும் பெற்றுக்கொள்ளலாமென்று மாத்திரம் எண்ணுகிறதாயிருந்தால் அது கெட்ட இச்சைகளின்படி நடக்கிற அநேகருக்குமுண்டே. தேவ இரக்கத்தை பெறும்படிக்குத் தருமங்களைச் செய்து அவைகளைக் கிறிஸ்து பூரணப்படுத்தி இரட்சிப்பாரென்று எண்ணுகிறதாயிருந்தால், அது அவருடைய புண்ணிய பலன்கள் போதாதென்று எண்ணுகிறதாயிருக்குமே. நடக்கையினால் காட்டாமல் உள்ளத்தில்மாத்திரம் பற்றிக்கொள்ளுகிற நம்பிக்கையாயிருந்தால், அது பிறருக்கு அஞ்சி உலக வழக்கத்தின்படி நடக்கிறவர்களுக்குமுண்டே. 'கர்த்தாவே கர்த்தாவே, இயேசுவே, இயேசுவே' என்று ஜெபிக்கிறதாயிருந்தால், அது குடிகாரனுக்கும் பிறருடைய புகழ்ச்சியை விரும்புகிறவனுக்குமுண்டே. இவ்வகை நம்பிக்கைகள் எல்லாம் பாவிகளை இரட்சிக்கமாட்டாது.

மெய்யான விசுவாசமானது தன் துர்க்குணத்தையும் கெட்ட நடக்கையையும் உணர்ந்து, வெறுத்துத் தேவனுடைய கிருபையை முக்கியமாய் விரும்பி, அதைப் பெறும்படிக்குத் தன்னிடத்தில் வகையைக் காணாமல், அதை இயேசுகிறிஸ்துவினிடத்தில் கண்டு அவருக்குள் ஐக்கியமாகிப் பரிசுத்தத்தில் பிரியப்பட்டு, அவரைப் பின்பற்ற விரும்புகிற இருதயத்திலே உண்டாகிற பக்தியேயாம். அதை யடைந்த பாவி கிறிஸ்துவினுடைய நீதி, மரணம் முதலான புண்ணிய பலன்கள் எல்லாவற்றையும் தன் வசமாக்கிக்கொண்டு, பாவமன்னிப்பையும் பரிசுத்தத்தையும் நித்திய ஜீவனையும் அடையும்படி தன்னுடைய நீதியை எவ்வளவாகிலும் நம்பாமல் தேவனுடைய கைம்மாறில்லாத கிருபையினாலுண்டாயிருக்கிற கிறிஸ்துவை மாத்திரம் நம்பி, அவரைத் தரித்துக்கொண்டு, அவருக்காக விடவேண்டிய யாவையும் விட்டு, அவரோடு ஞான ஐக்கியமாய் ஜீவித்து, தன்னை அவருக்கு ஒப்புக்கொடுத்து, பரிசுத்தத்தில் அவருக்குப் பின்சென்று, பாவத்தையும் உலகத்தையும் பிசாசையும் ஜெயித்து, தேவ அன்பினாலே நற்கிரியைகளைச் செய்துவருகிறான்.

திருஷ்டாந்தமாகப் பவுல் அப்போஸ்தலன் மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறதில் மிகவும் உண்மை உள்ளவனாயும், மற்றவர்களிலும் அதிக நன்னடைக்கையுள்ளவனாயும், கனம்பொருந்தியவனாயும் இருந்தும் கிறிஸ்துவை அறிந்தபின்பு

சொன்னதென்னவென்றால், 'எனக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டம் என்றெண்ணினேன்; அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்; நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கு எல்லாவற்றையும் குப்பையுமாக எண்ணுகிறேன்' என்றும் (பிலி 3[7-9,11]), 'கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்' என்றும் (கலா 2[20]), 'அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்' என்றும் (கலா 5[6]) சொல்லியிருக்கிறான். 'நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்' என்று யோவான் சொல்லியிருக்கிறான். (1 யோவா 5[4].) ஆதலால் தன்னையும் தேவனையும் கிறிஸ்துவையும் அறிகிற அறிவும், தன் கெட்ட நிலைமையை உணருகிற உணர்வும், அதற்காக மனஸ்தாபப்படுகிற துக்கமும், தேவகிருபையை விரும்புகிற விருப்பமும், சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவினிமித்தம் அதைக் கேட்கிற விண்ணப்பமும், கிறிஸ்துவைப் பின்பற்றி அவருக்காகத் துன்பத்தைச் சகித்து மரணபரியந்தம் அவரிடத்தில் நிலைநிற்கிற தைரியமும் இந்த விசுவாசத்தில் அடங்கியிருக்கிறது. மேலும் பாவமன்னிப்பும், நீதிமான் என்று எண்ணப்படுதலும், தேவபுத்திர சுவிகாரமும், பரிசுத்தமாகுதலும், நித்தியஜீவனுமாகிய இரட்சிப்பும் இந்த விசுவாசத்திற்குப் பலனாகக் கிடைக்கிறது.

3. அற்பமாய்த் தோன்றுகிற விசுவாசம் இத்தனை பெரிய நன்மைகளை எப்படிக் கொடுக்குமென்று கேட்டால், விசுவாசம் தானாய் அவைகளைக் கொடாது. இயேசு கிறிஸ்துவினிடத்திலுள்ள அருளே இவைகளைக் கொடுக்கிறது. விசுவாசம் இவைகளை வாங்குகிற கருவியாய்மாத்திரம் இருக்கிறது. அதை ஒரு உவமையினாலே காட்டுவோம். ஒரு பெரிய மனிதன் நிர்ப்பாக்கியமுள்ள எளியவர்களுக்காகநாடோறும் சகலவிதமான பதார்த்தங்களையும்சமைத்து, அவைகளை அவர்களெல்லாரும் கிரயமின்றிச் சாப்பிடும்படி அழைக்கும்போது, அந்தப்படி போய்ச் சாப்பிடுகிறவர்கள் திருப்தி யடைவார்களல்லவா? அதுபோல் பராபரன் தங்களை இரட்சிக்கத் திராணியில்லாத பாவிகளை இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அழைக்கிறார். அவரிடத்தில் வருகிறவர்கள் பூரணமீட்பை அடைகிறார்கள்.

அன்றியும் பூர்வீகத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு விரோதமாய் முறுமுறுத்ததற்காக, கொள்ளிவாய்ச் சர்ப்பங்கள் தோன்றி, அவர்களைக் கடித்தது. அநேகர் மாண்டுபோகையில் மற்றவர்கள் மனஸ்தாபப்பட்டு இரக்கத்திற்காகக் கெஞ்சினார்கள். அப்போது தேவன் வெண்கலத்தால் ஒரு சர்ப்பத்தைச் செய்யவும், அதை ஒரு கம்பத்தின்மேல் ஏற்றிவைக்கவும், கடியுண்டவர்கள் அதை நோக்கிப் பார்க்கவும் மோசேக்குக் கட்டளையிட்டார். அப்படி அதை நோக்கினவர்களே பிழைத்தார்கள்.

அதுபோலச் சிலுவையில் ஏற்றப்பட்ட கிறிஸ்துவை நோக்குகிற பாவிகள் யாவரும் நித்தியஜீவனை அடைவார்கள். அவரை நோக்குகிறதும், அவரிடத்தில் வருகிறதும், அவரை ஏற்றுக்கொள்ளுகிறதும், அநுபவிக்கிறதுமே விசுவாசம். திருஷ்டாந்தமாக, இயேசுகிறிஸ்து சொன்னது: 'என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்' என்றும், 'என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை' என்றும், 'நீங்கள் மனுஷகுமாரனுடைய மாமிசத்தைப் புசியாமலும் அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலுமிருந்தால் உங்களுக்குள்ளே ஜீவன் இல்லை' என்றும், 'என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவனுண்டு' என்றும், 'சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், அவரை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்படவேண்டும்' என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லியிருக்கிறார். (யோவா 6[35,37,53,54] 3[14].)

4. மனிதர்களுடைய குறைவு இவ்வளவாயிருக்கிறபடியால் தேவனே சகலத்தையும்

எத்தனம்பண்ணியிருக்க, அவர் விசுவாசத்தையேயன்றி வேறொன்றையும் அவர்களிடத்தில் கேட்கிறதற்கேதுவில்லையே. நீங்கள் இத்தனை கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டுமென்றும், இத்தனை வருத்தப்படவேண்டுமென்றும், இத்தனை தருமங்களைச் செய்யவேண்டுமென்றும், இப்படிச் செய்தால் உங்களை இரட்சிப்பேனென்றும் சொல்லுவாரானால் தங்களை இரட்சிக்கிற கிருபையைத் தாங்களே சம்பாதித்துக் கொள்ளும்படி சொல்லுகிறதாயிருக்குமல்லவா? அப்படியானால் கிறிஸ்து இயேசுவை அனுப்பவேண்டியதில்லை. ஆதலால் அவர் பாவமில்லாத கிறிஸ்துவை நமக்கு நீதியாக கொடுத்தார். இப்படிச் செய்தபின்பு அவர்கள் அவரை விசுவாசித்துக்கொள்ளும்படி கட்டளையிடுகிறது நியாயமல்லவா? அதினாலே பாவிகளை இரட்சிக்கிற கிருபைக்கான புகழ்ச்சி அவர்களுக்கல்ல, தேவனுக்கு மாத்திரம் எற்கும்.

இத்தனை பெரிய பொருளாகிய விசுவாசத்தை நம்முடைய சொந்தப்புத்தியினாலும் பெலனாலும் அடையக்கூடுமா? நாம் ஜென்மபாவமும் கருமபாவமு முள்ளவர்களானதினாலே திவ்விய ஜீவனில்லாமல் செத்தவர்கள்போல் இருக்கிறோம். செத்தவன் தன்னைத்தானே பிழைப்பிப்பதெப்படி? தேவ நன்மைகளை அறியாமலும் திவ்வியகாரியங்களை உணராமலுமிருக்கிறவன் இந்த நல்ல விருப்பங்களைத் தனக்குள்ளே எப்படியுண்டாக்குவான்? ஆதலால் தேவனே அவனைப் பிழைப்பிக்கவேண்டும். அவரே அவனை மறுபடியும் பிறப்பிக்கவேண்டும். அப்படி அவரே தமது ஆவியினாலே செய்துவருகிறார்.

5. சிலர் நாம் எந்தப்பொருளை விசுவாசித்தாலும் விசுவாசத்தின்படியே நன்மை கிடைக்குமென்றெண்ணி விக்கிரகம் முதலானவைகளைத் தொழுது வருகிறார்கள். ஆனால் விசுவாசம் எத்தனை உறுதியாயிருந்தாலும், நாம் தொழுதுவருகிற பொருள் நமக்கு வேண்டிய நன்மையைக் கொடுக்கத் திராணியில்லாவிட்டால் பிரயோஜனம் இல்லையே. விசுவாசம் உண்டென்று ஒருவன் ஓட்டைப்படகில் ஏறிச் சமுத்திரத்தில் இறங்கத் துணிவானோ? துணியானே. விசுவாசத்தினாலே சாணியைச் சாதமென்று ஒருவனும் சாப்பிடானே. ஒரு காசுமில்லாத தரித்திரன் எப்படி லட்சம் ரூபாய் கொடுப்பான்? வல்லமையற்ற விக்கிரகம் எப்படி திரவியம், புத்திரன், மோட்சம் முதலானவைகளைக் கொடுக்கும்? அப்படியே பாவ இயற்கையுள்ள குருக்கள் முதலானவர்கள் எப்படி மற்றவர்களைப் பாவத்தினின்று இரட்சிப்பார்கள்? குருடன் குருடனுக்கு வழி காட்டக்கூடுமோ? ஆதலால் நமக்கு வேண்டிய நன்மையைக் கொடுக்கத் தகுதியுள்ளவரையேயன்றி, மற்றொருவரை விசுவாசிக்கிறதினாலே ஒரு பிரயோஜனமும் வராது.

விசேஷம். **Special**. லூக் $1^{3}$ அப் $25^{27}$ 1 தீமோ $4^{10}$ $5^{8}$ தீத் $1^{10}$.

விஸ்தாரம் ஆக்குகிறது. **Enlarge**. யாத் $34^{24}$ உபா $12^{20}$ $19^{9}$.

விஷப்பனி. **Mildew**. உபா $28^{22}$ ஆமோ $4^{9}$ ஆகாய் $2^{16}$.

விஷம். **Poison**. பாம்புகளின் விஷம். உபா $32^{24,33}$ சங் $58^{4}$ $140^{3}$.

பொல்லாத போதனை. ரோம $3^{13}$ யாக் $3^{8}$.

விடியற்காலம். **Morning**. ஆதி $1^{5}$ யாத் $12^{10}$ $16^{13}$ $23^{18}$ $29^{34}$ லேவி $6^{9}$ $7^{15}$ எண் $9^{12}$ உபா $28^{67}$ ரூத் $3^{13}$ 1 சாமு $3^{15}$ யோபு $11^{17}$ $38^{7}$ சங் $30^{5}$ $130^{6}$ எசா $17^{14}$ $21^{12}$ எசா $24^{18}$ யோவா $21^{4}$.

விடி வெள்ளி. **The Morning Star**. எசா $14^{12}$ வெளி $2^{28}$ $22^{16}$.

விடுதலை. **Liberty**.

1. அஞ்ஞானம், குற்றம், காமம், அவபத்தி, சடங்காசாரம் ஆகிய இவை அடிமைத்தனத்தின் அடையாளங்கள். ரோம $1^{21}$ $7^{14}$ எபே $2^{3}$ $4^{18}$ 1 பேது $1^{14}$ 1 யோவா $2^{11}$. ஆதலால் பாவஞ்செய்கிறவன் அடிமைத்தனத்தில் இருக்கிறான். யோவா $8^{34}$.

2. இந்த அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்படுதலே விடுதலை. இதற்கு மெய்ஞானம், ஞானஐக்கியம், பரிசுத்தம், ஆவிக்குரிய ஜீவன் ஆகிய இவை குறிப்புகள். பக்தர்கள் சுவிசேஷத்தின் மூலமாய் இதை அடைவார்கள். ரோம $6^{7,17}$ $7^{25}$ $8^{2,15}$ கலா $4^{9}$ 1 யோவா $4^{14}$. இயேசுவின் 'நுகம்' மெதுவாய் இருக்கும். மத் $11^{29}$. அவருடைய மார்க்கம் 'சுயாதீனப் பிரமாணம்.' யாக் $1^{25}$ கலா $5^{1}$. பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் நாம் அடைந்த சத்தியம் நம்மை விடுதலையாக்கும். யோவா $8^{32}$ 2 கொரி $3^{17}$. இந்த விடுதலையை அடைந்து உலகத்தை ஜெயிப்போம் (1 யோவா $5^{4}$); ஆவியின்படி நடக்கிறோம் (கலா $5^{17}$); மரணப் பயத்தை நீக்குகிறோம். (எபி $2^{15}$.)

'விடுதலையின் வருஷம்'. **'The year of release'**. உபா $31^{10}$. பண்டிகை காண்க.

விட்டில். **Locust**. ஒருவிதமான கிளி. உபா $28^{42}$. கிளி காண்க.

விண்ணப்பம். **Supplication**. நியா $13^{8}$ 1 இரா $8^{28}$ யோபு $41^{3}$ சங் $28^{2}$ தானி $6^{13}$ செப் $3^{10}$ பிலி $4^{6}$ 1 தீமோ $2^{1}$. ஜெபம் காண்க.

விதவை. **Widow**. மோசேயின் பிரமாணத்தில் சந்தானமில்லாத விதவையை புருஷனின் சகோதரன் கலியாணம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்று கட்டளையிருக்கிறது. ஆதி $38^{6}$ உபா $25^{5}$ ரூத் $3^{12}$ $4^{1}$ மத் $22^{25}$. பிரதான ஆசாரியன் விதவையை விவாகம் பண்ணிக்கொள்ளக்கூடாது. லேவி $21^{14}$. விதவைகளைக் கனஞ்செய்து பராமரிக்கவேண்டும். யாத் $22^{22}$ உபா $10^{18}$ $14^{29}$ $16^{11}$ $24^{17}$ சங் $68^{5}$ ஏசா $1^{17}$ $10^{2}$ எரே $22^{3}$ மத் $23^{14}$ 1 தீமோ $5^{3-10}$. விவாகம் காண்க. ஆதிக்கிறிஸ்தவர்கள் இதைக் குறித்து ஜாக்கிரதையுள்ளவர்களாயிருந்தார்கள். அப் $6^{1}$ 1 தீமோ $5^{3,16}$ யாக் $1^{27}$. விதவைகள் நிறைவேற்றவேண்டிய கடமை. 1 தீமோ 5 அதி. கலியாணம் காண்க.

விதி. **Fate, Destiny, Decree**. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன வொரு பொருட்சொற்களாம்.

'தாந்தாமுன் செய்தவினை
தாமே யனுபவிப்பார்,
பூந்தா மரையோன்
பொறிவழியே,—வேந்தே;
யெறுத்தாரை யென்செயலா
மூரெல்லா மொன்ருய்,
வெறுத்தாலும் போமோ
விதி.

சிவாய நமவென்று
சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு
மில்லை,—யுபாயம்
இதுவே மதியாகு
மல்லாத வெல்லாம்
விதியே மதியாய்
விடும்.' (நல்வழி)

'ஊழிற் பெருவலி யாவுள, மற்ருென்று
சூழினுந் தான்முந் துறும்.'
'தெய்வத்தா லாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.'
'ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.'
(குறள் 380, 619, 620.)

விதி தேவச் செயல்களையும் மனிதசுயாதீனத்தையும் விரோதிக்கிறது.

விதை, வித்து. **Seed**.

1. விதை. ஆதி $1^{11}$ $8^{22}$ $47^{19}$ மத் $13^{24}$ 1 கொரி $15^{38}$.

2. இந்திரியம். ஆதி $38^{9}$ லேவி $15^{16}$ 1 யோவா $3^{9}$.

3. சந்ததியார். ஆதி $3^{15}$ $9^{9}$ $12^{7}$.

4. வேதவசனம். மத் $13^{19}$ லூக் $8^{11}$.

5. பக்தர். மத் $13^{38}$. சந்ததி காண்க.

விதைப்புக்காலம். **Seed time**. யூதர்கள் வழங்கிவருகிற எத்தானீம் மாசத்தில் பிற்பாதியும் பூல் மாசம் முழுவதும் கிசிலேயு மாசத்தில் முற்பாதியும், அதாவது அக்டோபர், நவெம்பர் மாதங்களில் விதைப்புக்காலமாம். அந்தக்காலத்திலே ஆகாயம் மேகமும் பனியுமுள்ளதாயிருக்கும்.

ஆதி $8^{22}$ லேவி $26^{5}$. 'தினைவிதைத்தவன் தினையையறுப்பான், வினை விதைத்தவன் வினையையறுப்பான்.' கலா $6^{7}$. வித்து காண்க.

வித்தியாசம். **Division**. யாத் $8^{23}$ $11^{7}$ லேவி $10^{10}$ எசே $22^{26}$ அப் $15^{9}$ ரோம $3^{22}$ $10^{12}$ 1 கொரி $7^{34}$ $12^{5}$.

வித்தியாசாலை. **School**. அப் $19^{9}$. பள்ளிக்கூடம் காண்க.

விநோதம். **Curious**. யாத் $35^{32}$ சங் $139^{15}$.

விபசாரம். **Adultery**.

1. 'விபசாரம் செய்யாதிருப்பாயாக' என்பது ஏழாங்கற்பனை. யாத் $20^{14}$. இதிலே விவாகம் பண்ணாதவர்கள் கூடிப் புணருகிறதும், விவாகம் பண்ணினவர்கள் ஒருவரை ஒருவர் விட்டு மற்றவர்களைச் சேருகிறதும், முறைகேடு செய்கிறதும், ஆணோடே ஆண் சேர்ந்து அவலட்சணத்தைச் செய்கிறதும், மிருகங்களோடே புணருகிறதும், விபசாரத்திற்கேதுவான யோசனைகளையும் மோகங்களையும் கொள்ளுகிறதும், மோகத்துக்கேதுவான பேச்சுகள், இச்சையோடே ஸ்திரீகளை நோக்குகிறதும் விலக்கப்பட்டிருக்கிறது. மத் $5^{28}$ யோவா $8^{4}$ ரோம $13^{9}$ யாக் $2^{11}$. கலியாணம் காண்க.

2. விக்கிரகாராதனை. எரே $3^{9}$ $29^{23}$ எசே $23^{27}$ ஓசி $4^{2}$. விக்கிரகாராதனை காண்க.

விபசாரன், விபசாரி. **Adulterer, Adulteress**. லேவி $20^{10}$ யோபு $24^{15}$ சங் $50^{18}$ நீதி $6^{26}$ ஏசா $57^{3}$ எரே $9^{2}$ $23^{10}$ எசே $23^{45}$ ஓசி $3^{1}$ $7^{4}$ மல் $3^{5}$ லூக் $18^{11}$ ரோம $7^{3}$ 1 கொரி $6^{4}$ எபி $13^{4}$ யாக் $4^{4}$.

விபரீதம். **Error**. ஏசா $32^{6}$.

விமோசனம். **Expiation**. பாவநிவாரணம் காண்க.

வியாகுலம். **Tribulation**. ரோம 2⁹ 8³⁵. துயரம், துன்பம் காண்க.

வியாஜ்யம். **'Cause'**. 2 சாமு 15⁴.

வியாதி. **Disease.**

1. வேதாகமநூல்களை இயற்றினவர்கள் நமக்கு விளங்காத வைத்திய சாஸ்திரப்பதங்கள் பலவற்றினால் பல வியாதிகளைக் குறிப்பிட்டுச் சொன்னதினாலும், வியாதிகளைக் குறித்துப் பொதுவாய்ப் பேசினதினாலும், பல வசனங்களில் சொன்ன வியாதிகளைக் குறித்த நமக்கு விபரம் தெரியாது. பலஸ்தீனு தேசம் சுகமான இடம். மேலும் யூதர்கள் தங்கள் நியாயப்பிரமாணத்தில் சொன்ன ஏற்பாட்டின்படி நடந்ததினிமித்தம் அவர்கள் நல்ல சுகதேகிகளாய் இருந்தார்கள் என்று நாம் சொல்லக்கூடும்.

2. வியாதியானது பாவத்தினிமித்தம் கடவுள் அனுப்பின தண்டனை என்று யூதர்கள் உறுதியாய் நம்பினார்கள். யாத் 4¹¹ உபா 32³⁹ 2 சாமு 24¹⁶ யோபு 2⁷ யோவா 9². வியாதியினின்று சுகம் அடைதல் கடவுள் ஈந்த பாவமன்னிப்புக்கு அடையாளம். யாத் 15²⁶. எபிரெயர்களுக்குள் வைத்திய சாஸ்திரத்தின் உண்மையைத் தெரிந்துகொண்டவர்கள் இல்லை. பிந்தின காலங்களில் யூதர்களில் சிலர் அந்தச் சாஸ்திரத்தைச் சிறிது அறியவந்தார்கள்.

3. வேதாகமத்தில் கூறிய வியாதிகள் அனைத்தையும் சொல்லுவது நம்மால் கூடாதெனினும், அவற்றுள் சிலவற்றைப் பின் வருமாறு கூறுவோம்.

i. ஈளை. உபா 28²². இது வெகுகாலம் இருக்கும் ஜுரம். இதினிமித்தம் வியாதியஸ்தன் மெலிந்துபோய், பலமெல்லாம் அற்றுக் கடைசியிலே மரித்துவிடுவான்.

ii. காய்ச்சல். லேவி 26¹⁶. இது பல வகைப்படும்.

iii. உஷ்ணம். உபா 28²². இது ஒருவித குளிர் காய்ச்சல்.

iv. எரிபந்தம். இது ஒருவித அம்மை. வியாதியஸ்தன் தேகத்தில் வீக்கங்கண்டு காய்ச்சல் அடிக்கும். சிலர் நினைக்கிறபடி எகிப்துதேசத்தின்மேல் வந்த ஆறும் வாதையாகிய கொப்புளம் ஒருவித அம்மை தான். உபா 28²² சங் 38⁵ 39¹¹ லேவி 26³⁹.

v. கொள்ளைநோய். இஸ்ரவேலர் வனாந்தரத்திலே பிரயாணம் பண்ணும்பொழுது நாலுதடவை அவர்களுக்கு வாதை நேரிட்டது. எண் 11³³ 14³⁷ 16⁴⁶ 25⁹. இதற்குப்பின் அவர்கள் சரித்திரத்தில் கொள்ளை நோயைப்பற்றி அடிக்கடி சொல்லியிருக்கிறது. 2 சாமு 24¹⁵ 2 நாளா 21¹⁴ சங் 91³ எரே 21⁹ 42¹⁷. இந்தக் கொள்ளைநோய் இந்தியாவில் நம்மெல்லாருக்கும் தெரிந்த பூபானிக் பிளேக் என்னும் மகாமாரி நோயே. தேவனுடைய பெட்டியைப்பிடித்த பெலிஸ்தியருக்கு வந்த மூலவியாதி ஒருவித 'பிளேக்' நோய் என்றே தோன்றுகிறது. 1 சாமு 5⁶.

vi. ஈரலிலும் குடலிலும் உண்டாகும் ரத்தபேதி, முதலியவை அஜீரணத்தினால் வந்த வியாதிகள். 2 நாளா 21¹⁹ யோபு 16¹³ நீதி 7²³ எரே 4¹⁹ அப் 28⁸.

vii. மிதமிஞ்சிய மதுபானத்தினால் வரும் வியாதிகளைப்பற்றி விபரமாய்ச் சொல்லியிருக்கிறது. நீதி 23²⁹ ஏசா 19¹⁴.

viii. இருதய வியாதிகளைப்பற்றி விபரம் இல்லை. ஆயினும் சில வசனங்களில் அது குறிப்பிக்கப்பட்டிருக்கலாம். ஆதி 45²⁶ 1 சாமு 4¹⁸ 28²⁰. அப் 5⁵.

ix. திமிர்வாதம். புதிய ஏற்பாட்டில் பல வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மத் 4²⁴ 8⁶ லூக் 5¹⁸.

x. கைகால்களில் உண்டாகும் வியாதிகளையும் பலயீனங்களையும்பற்றி அடிக்கடி சொல்லியிருக்கிறது. சூம்பின கை. மத் 12¹⁰ மாற் 3¹ லூக் 6⁶. சப்பாணி. யோவா 5³ அப் 3². திடீரெனக் கைகால் வழங்காமை. 1 சாமு 25³⁷. இந்த வியாதியினால் ஜனங்கள் திடீரென்று மரித்துவிடுவார்கள்.

xi. செவிடு, ஊமை. மத் 9³² மாற் 7³² 9²⁵ ஏசா 28¹¹. 'கொன்னைவாயுடைய' செவிடன். மாற் 7³².

xii. சந்திரரோகி. சங் 121⁶ மத் 4²⁴ 17¹⁵ மாற் 9¹⁸ லூக் 9³⁸.

சூரியோஷ்ணத் தலையிடி. 2 இரா 4¹⁹ சங் 121⁶ ஏசா 49¹⁰.

xiii. நீர்க்கோவை. லூக் 14².

xiv. வாதரோகம். இந்நோய் பலஸ்தீனுதேசத்தில் அபூர்வம். ஆனால் ஆசா ராஜாவின் காலில் உண்டான நோய் ஒருவித வாதம் என்று சிலர் நினைக்கிறார்கள். 1 இரா 15²³ 2 நாளா 16¹².

xv. பலவீனம். லூக் 13¹¹. ஒரு கிழவிக்கு உண்டான பலவீனம். பல வருஷக் காலமாய் வயல்வெளிகளில் குனிந்துகொண்டு வேலைசெய்கிற ஸ்திரீகளுக்குத் தாங்கள் நிமிரமுடியாதபடி பலவீனமும் கூனும் நேரிடும். கூனன் ஆசாரியனாயிருக்கக் கூடாது. லேவி 21²⁰. இது முதுகெலும்பிலுள்ள பலயீனத்தினால் உண்டாகும்.

xvi. மண்டையுடைதல். நியா $9^{53}$ அப் $20^{9}$.

xvii. நொண்டி. பாலிய பிராயத்தில் நேரிட்ட அபாயத்தினால் நொண்டியாதல். ஆதி $32^{31}$ 2 சாமு $4^{4}$ $19^{24}$. நொண்டி ஆசாரியனாயிருக்கக்கூடாது. லேவி $21^{18}$.

xviii. குஷ்டரோகம். பலெஸ்தீனாதேசத்தில் குஷ்டரோகம் அதிகம். 2 இரா $15^{5}$ லேவி $14^{55}$. குஷ்டம் காண்க.

xix. சிரங்கு. உபா $28^{27}$. சிரங்கு காண்க.
சொறி. உபா $28^{27}$.
அசறு. லேவி $21^{20}$.
பருக்கள். லேவி $13^{30}$. பருக்கள் காண்க.
பிளவை. யோபு $2^{7}$ உபா $28^{27}$.
வெள்ளைத்தேமல். லேவி $13^{39}$.
கொப்புளம். யாத் $9^{9}$ 2 இரா $20^{7}$. கொப்புளம் காண்க.

xx. புழுப்புழுத்தல். மகா துன்மார்க்கமாய் ஜீவித்த ஏரோதுராஜா புழுப்புழுத்து இறந்தான். அவனுடைய துன்மார்க்க ஜீவியத்தினால் அவனுக்கு உண்டான பிரமியங் காரணமாக வந்த புண்களை ஆற்றுகிறதற்கு அக்காலத்து வைத்தியர்களுக்குத் தெரியாததினால் அப்புண்களில் புழுவுண்டாயின என்று நாம் நினைக்கவேண்டும். அப் $12^{23}$. பிரமியத்திட்டு. லேவி $15^{19}$.

xxi. பெரும்பாடு. மத் $9^{20}$.

xxii. குருடு. பலெஸ்தீனாவில் குருடர் ஏராளம். குருடர் காண்க.

தற்காலத்தைப்போலவே அக்காலத்திலும் குழந்தைகளுக்குப் பலவித வியாதிகள் உண்டு. 2 சாமு $12^{15}$ 1 இரா $17^{17}$.

குறிப்பு. ஆறுவிரல் உள்ளவனும் குள்ளனும் ஆசாரியனாயிருக்கக்கூடாது. 2 சாமு $21^{20}$ 1 நாளா $20^{6}$.

4. விபரமாய்ச் சொல்லாத வியாதிகளாவன:

| | | | |
|---|---|---|---|
| அபியாவுக்கு | வந்த | நோய் | 1 இரா $14^{1}$. |
| பெனாதாத்துக்கு | ,, | ,, | 2 இரா $8^{7}$. |
| எலிசாவுக்கு | ,, | ,, | 2 இரா $13^{14}$. |
| யோவாஸுக்கு | ,, | ,, | 2 நாளா $24^{25}$. |
| லாசருவுக்கு | ,, | ,, | யோவா $11^{1}$. |
| தொற்காளுக்கு | ,, | ,, | அப் $9^{37}$. |
| எப்பாப்பிரோதீத்துவுக்கு | | | பிலி $2^{17}$. |
| துரோப்பீமுவுக்கு | | ,, | 2 தீமோ $4^{20}$. |

5. வியாதியஸ்தருக்கு வைத்தியர் கொடுத்த மருந்துகளைப்பற்றி அவுஷதம் காண்க.

6. பேய் பிசாசுக்கள் மனுஷர்களைப் பிடித்து, அவர்களைப் பலவித வியாதிகளினால் வதைப்பதாகப் பூர்வகால எபிரெயரும் பிந்தியகாலத்து யூதர்களும் அபிப்பிராயங் கொண்டிருந்தார்கள். இதினிமித்தம் ஒருவனுக்கு எவ்விதமான பைத்தியமாவது மனவீழ்ச்சியாவது இருந்தால் பிசாசுக்கள் அவனைத் துன்பப்படுத்துவதாக ஜனங்கள் நினைத்தார்கள். 1 சாமு $16^{14}$ $18^{10}$ $19^{9}$ லூக் $11^{14}$ மத் $12^{22}$ அப் $16^{16}$ $19^{12}$. பிசாசு காண்க.

வியாபாரம். **Merchandise.** நீதி $31^{18}$ ஏசா $23^{18}$ எசே $27^{9.27}$ $28^{16}$ மத் $22^{5}$ யோவா $2^{16}$.

வியாபாரி. **Merchant.** எசே $27^{15}$ மத் $13^{45}$. 'கானான் தேசத்தான்.' ஓசி $12^{7}$ யோபு $41^{6}$.

வியாபித்தல். சர்வ வியாபகம். **Omnipresence.** தேவன் ஒருவரே சர்வ வியாபி. **Omnipresent.** ஆதி $16^{13}$ $28^{16}$ 1 இரா $8^{27}$ சங் $139^{7}$ ஏசா $66^{1}$ எரே $23^{24}$ அப் $17^{27}$ எபி $1^{3}$.

அவர் எங்குமிருக்கிற வகை நமக்குத் தெரியாது. அறியவேண்டிய தென்னவெனில், அவர் தூணிலும் துரும்பிலும் இருக்கிறாரென்றும், அப்படி இருக்கிறபடியால் தூணையும் துரும்பையும் தொழுதுகொள்ளலாமென்றும், விக்கிரகபத்திக்காரர் எண்ணுகிறபடி ஒருக்காலும் எண்ணக்கூடாது. அவர் எங்குமிருந்தும், தம்முடைய தன்மையை ஒருபொருளுக்கும் கொடுக்கிறதில்லையே. கொடுப்பாரானால், அப்பொழுது அந்தந்தப் பொருள்களும் தேவ குணங்களையுடையவைகளாய் இருக்குமே. அப்படிக் காணோமே. ஆகையால் அவர் எங்கும் இருக்கிறதும் பொருள்களைவிட்டுப் பிரிந்திருக்கிறதும் நிச்சயம். அன்றியும் அவர் சகலத்தையும் உண்டாக்கிக் காப்பாற்றி நடப்பித்துத் தமது வல்லமையை எங்கும் செலுத்திவருகிறதினாலே, அவர் அசுத்தமான இடங்களிலும் எங்குமிருக்கிறாரென்று விளங்குகிறது. அவர் ஒரு பொருளால் தொடப்படாதவரானபடியால், அந்த அசுத்தம் அவரைச் சேராது. அன்றியும் அவர் எங்குமிருந்தும் அவர் தம்முடைய மகிமையையும் கிருபையையும் அதிகமாய் வெளிப்படுத்துகிற இடங்களிலேயும், மனிதர்களிலேயும் விசேஷமாய் இருக்கிறாரென்பது அவருடைய தன்மைக்கு விரோதமல்ல. திருஷ்டாந்தமாக அவர் பரமண்டலத்திலே தமது மகிமையை விசேஷமாய் வெளிப்படுத்துகிறபடியால், அவர் பரமண்டலத்தில் இருக்கிறாரென்றும், பரமண்டலம் அவருடைய சிங்காசனமாயும் மாளிகையாயும் பரிசுத்த ஸ்தலமாயும் இருக்கிறது என்றும் சொல்லப்படும். நம்முடைய

ஆசைகளையும் யோசனைகளையும் பூமியின் மேலல்ல, பரமண்டலத்தின்மேலே வைக்கும்படி அப்படிச் சொல்லியிருக்கிறது. மேலும் ஓரிடத்திலேயும் அடக்கப்படாத அவர் மெய்யாய் இயேசுகிறிஸ்துவினிடத்தில் வாசமாயிருக்கிறதுமல்லாமல் தம்முடைய ஆவியினாலும் கிருபையினாலும் தம்முடைய ஜனங்களிடத்தில் விசேஷமாயிருக்கிறார் என்பதும் அத்தன்மைக்கு விரோதமல்ல; அவர் அப்படிச் செய்யச் சித்தமும் வல்லமையுமுள்ளவரா யிருக்கிறாரே.

வேதத்திலுள்ள சில வசனங்களில் தேவன் ஏறினார், இறங்கினார், சமீபமாயிருக்கிறார், தூரமாய்ப் போகிறார் என்று சொல்லியிருக்கிறது. அதுவும் அவருடைய தன்மைக்கு விரோதமல்ல. மனிதருடைய அறிவுக்குத் தோன்றத்தக்கதாக அப்படிச் சொல்லியிருக்கிறது. அல்லாமலும் அவர் தம்முடைய பிரசன்னத்துக்குச் சாட்சியாக அடையாளங்களைக் கொடுக்கிறபோது அவர் சமீபிக்கிறார் என்றும் இறங்குகிறார் என்றும் சொல்லப்படும். அந்த அடையாளங்கள் நீங்கும்போது அவர் தூரமாய்ப் போகிறார் என்றும் ஏறுகிறார் என்றும் சொல்லப்படும்.

விரகதாபம். **Lust.** ரோம $1^{27}$.

விரதத்துவம். **(Asceticism.)** 1கொரி $7^{5}$.

விரத்தர். **(Celibates.)** துறவிகள். 1 கொரி $7^{9}$ வெளி $14^{4}$.

விரல். **Finger.**

1. கை விரல். யாத் $29^{12}$ லேவி $4^{6}$ 2 சாமு $21^{20}$ லூக் $11^{46}$ யோவா $20^{27}$.

2. தேவ வல்லமை. யாத் $8^{19}$ $31^{18}$ சங் $8^{3}$ லூக் $11^{20}$.

3. மனிதனுடைய திறமை. சங் $144^{1}$ ஏசா $2^{8}$ $17^{8}$.

4. 'சுண்டு விரல்.' 1 இரா $12^{10}$ 2 நாளா $10^{10}$.

5. 'விரல் நீட்டுதல்.' ஏசா $58^{9}$. 'விரல்களால் போதனை செய்தல்.' நீதி $6^{13}$.

6. ஆறு விரல். 2 சாமு $21^{20}$ 1 நாளா $20^{6}$.

விரியன். **Asp, Viper.** உபா $32^{33}$ யோபு $20^{14}$ சங் $140^{3}$ நீதி $23^{32}$ ஏசா $11^{8}$ $30^{6}$ மத் $3^{7}$ $12^{34}$ $23^{33}$ லூக் $3^{7}$ அப் $28^{3}$. சர்ப்பம் காண்க.

விருட்சம். **Tree.** எசே $6^{13}$ $17^{24}$. மரம் காண்க.

விருதா (காரியம்.) **Vain thing.** சங் $2^{1}$ $33^{17}$.

விருது. **Banner.** கொடி காண்க.

விருத்தசேதனம். **Circumcision.**

இஸ்ரவேலரைத்தவிரச் சேமியர்களில் அநேகரும் எகிப்தியர்களும் விருத்தசேதனம்பண்ணினார்கள். இருப்புக் கத்திகள் இல்லாத பூர்வகாலத்தில், ஜனங்கள் கூர்மையான கல்லுகளை எடுத்து, அவைகளைக் கத்திகளாக உபயோகிப்பார்கள். ஆதி காலத்தில் இஸ்ரவேலர் கல்கத்திகளைக் கொண்டு விருத்தசேதனம் பண்ணினபடியால் (யோசு $5^{2}$) இது அதி பூர்வகாலச் சடங்கு என்று தோன்றுகிறது. இந்த ஜனங்கள் முதலில் இதைப் பண்ணுகிறதற்குக் காரணம் தெரியவில்லை. ஆயினும் ஓர் இஸ்ரவேலனுக்கு இந்தச் சடங்கானது யேகோவா இஸ்ரவேலரோடு செய்த உடன்படிக்கையின் சிலாக்கியங்களைத்தான் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாயிருக்கிறது. விருத்தசேதனம் இல்லாதவன் உடன்படிக்கையின் சிலாக்கியங்களில் பங்கு பெறமாட்டான். ஆதலால் எபிரெய பாஷையில் 'விருத்தசேதனம்பண்ணப்பட்டவன்' என்பதும் உண்மையான இஸ்ரவேலன் என்பதும் ஒன்றுதான். ஆதியிலே ஆபிரகாம் இந்தச் சடங்கை அனுசரித்தான். ஆதி $17^{14}$. தன் சந்ததியாருக்குமட்டும் அல்ல, எபிரெயர்களுடைய வீடுகளிலுள்ள அடிமைகளுக்குங்கூட இந்தச் சடங்கைச் செய்ய வேண்டும். ஆதி $17^{12}$. இஸ்ரவேலரில் சிலர் எகிப்துதேசத்திலே இந்தச் சடங்கை நடத்தியும், அவர்களில் அநேகர் அதைச் செய்யாமலிருந்ததால், மோசே அந்தச் சடங்கை மறுபடியும் அவர்களுக்கு ஏற்படுத்தினான். யாத் $4^{25}$. யோசுவா மறுபடியும் இதைக்குறித்து எச்சரிப்புள்ளவனாயிருந்தான். யோசு $5^{4}$. பிந்தின காலங்களில் அந்நிய மார்க்கத்திலிருந்து யாராவது யூதமார்க்கத்துக்கு வந்தால் யூதர்கள் அவனுக்கு இந்தச் சடங்கைச் செய்வார்கள். அப் $16^{3}$. பிறந்த எட்டாம் நாளிலே, பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணும்பொழுது, அவனுக்குப் பெயரிடும் வழக்கம் சிறையிருப்புக்காலமுதல் உண்டானது. லேவி $12^{3}$ லூக் $1^{59}$ $2^{21}$.

ஆதிச்சபையில் யூதமார்க்கத்திலிருந்து கிறிஸ்துமதத்துக்கு வந்தயூதர்கள் சகல கிறிஸ்தவர்களும் இந்தச் சடங்கைப்பெற்று, மோசேயின் நியாயப்பிரமாணத்துக்குச் சர்வ விஷயங்களிலும் அடங்கி நடக்கவேண்டும் என்று விரும்பினார்கள். அப்போஸ்தலரோ முதற்பொதுவான சங்கத்தில் கிறிஸ்தவர்கள் எல்லாரையும் சடங்காசாரங்களினின்று விடுதலையாக்கினார்கள். அப் 15 அதி.

ஆனால் யூதமார்க்கத்திலிருந்து வந்த கிறிஸ்தவர்களுக்கும் அந்நிய மார்க்கத்திலிருந்து வந்த கிறிஸ்தவர்களுக்கும் பலகாலம் பிரிவு இருந்தது. பரி. பவுல் நியாயப்பிரமாணத்துக்குரிய பக்திவைராக்கியத்தைக் குறிக்கும்படி 'விருத்த சேதனம்' என்னும் பதத்தைச் சொல்லுவான். ரோம $2^{25}$ கலா $5^{2}$ $6^{15}$. சில வசனங்களில் விருத்தசேதனம் என்பது யூதமார்க்கத்தைக் குறிக்கும். எபே $2^{11}$ தீத்து $1^{10}$.

உவமையாக விருத்தசேதனம் இல்லாமையேகோவாவின் கட்டளைகளை மீறுகிறதைக் குறிக்கும். இப்படியே விருத்தசேதனமில்லாத இருதயம் (லேவி $26^{41}$), விருத்தசேதனமில்லாத உதடுகள் (யாத் $6^{12}$), விருத்தசேதனமில்லாத செவி (எசே $6^{10}$) முதலியவற்றைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. இங்கே இருதயம், உதடு, செவி முதலியவைகள் பாவமுள்ள சுபாவத்தைக் குறிக்கும். அப் $7^{51}$. பாவத்திலிருந்து பிரிக்கப்பட்டவன் தன் இருதயத்திலே ஆவிக்குரியவிதமாய் விருத்தசேதனத்தை அடைவான். ரோம $2^{29}$.

விருந்தாளி. **Guest, Hospitality.**

1. வனாந்தரங்கள் மிகுதியாயுள்ள சீரியா அரபியா முதலிய தேசங்களில், அவசியம் நேரிட்டாலொழிய, மற்றபடி சந்தோஷத்திற்காக ஒருவரும் பிரயாணம் செய்யமாட்டார்கள். ஆகையால் அத்தேசங்களில் பிரயாணிகளுக்கு யாவரும் உபசரணை செய்ய வேண்டும். இவ்வித உபசரணைகளைப்பற்றிப் பல திருஷ்டாந்தங்கள் வேதத்தில் உண்டு. ஆபிரகாமும் (ஆதி 18 அதி) லோத்தும் (ஆதி 19 அதி) தூதர்களை உபசரித்தார்கள். இப்படி வழிப்போக்கர்களை ஏற்றுக்கொள்ளாமல் விடுவது மிகவும் வெட்கமான காரியம். நியா $19^{15}$. சமாரியர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளாத விஷயம் தப்பிதமே. லூக் $9^{53}$. விசேஷமாய்த் தனவான்கள் யாவருக்கும் உபசரணை செய்யவேண்டும். யோபு $31^{31}$. தமது சீஷர்களுக்கு, தாங்கள் போகிற இடங்களில் உபசரணை நடக்கும் என்று இயேசு அறிந்து, சுவிசேஷ ஊழியம்செய்ய அவர்களை வெறுமையாக அனுப்பினார். மத் $10^{9}$ லூக் $10^{4}$. விருந்தாளிகள் வீட்டுக்குள் பிரவேசிக்கும்போது அவர்கள் கால்களில் படிந்த தூசியைக் கழுவும்படி வீட்டெஜமான் தண்ணீர் ஊற்றவேண்டும். லூக் $7^{44}$. கிறிஸ்தவ சபை உண்டானபோது கிறிஸ்து மார்க்கத்திற்கு அநேக விரோதிகள் உண்டானதினாலே கிறிஸ்தவர்கள் தங்கள் ஊருக்கு வரும் கிறிஸ்தவர்களை உபசரிப்பது வழக்கம். ரோம $12^{13}$ 1 தீமோ $3^{2}$ எபி $13^{2}$ 1 பேது $1^{4}$.

2. தன் வீட்டுக்காவது கூடாரத்துக்காவது வந்தவர்களை அதின் எஜமான் எப்படியாவது காப்பாற்றவேண்டும். ஆதி $19^{8}$ நியா $19^{24}$. சூரியன் அஸ்தமித்தபின் வந்தவனுக்கு இடங்கொடுக்கவேண்டியது அவசியமானாலும், அவன் காலதாமதமாய் வந்தபடியால் அவனுக்கு ஆகாரங்கொடுப்பது கட்டாயமல்ல. லூக் $11^{6}$. பிரயாணி சாதாரணமாய் ஒரு இராப்பகல்மட்டும் ஒரு வீட்டில் தங்குவான். அதன்பின் போய்விடவேண்டும். தற்காலத்திலே அரபிய பிரயாணிகள் ஒரு வீட்டில் இரண்டுநாள் தங்கி மூன்றாம் நாளிலே போய்விடவேண்டும்.

3. அரபியர்கள் இக்காலத்தில் வனாந்தரத்தில் ஒருவனைக் கண்டால் அவனைச் சத்துருவாக பாவித்து அவனைக் கொன்றுவிடுவது நியாயம் என்று நம்பினாலும், ஒரு விரோதி தங்கள் கூடாரத்துக்கு வந்து கூடார ஆணியைத் தொட்டால் அவனுக்கு எவ்விதத் தீங்கும் செய்யமாட்டார்கள். மேலும் இருவர் ஒருமித்து ஆகாரம் புசித்தால், அவர்களிருவரும் சகோதரரைப்போல் ஒருவனை ஒருவன் காப்பாற்றவேண்டும். இவ்வித சகோதரத்துவம் ஒரு இராப்பகலுக்குள் உண்டாகும். யாகேல் சிசெராவைக் கொன்றவிஷயம் பாடகியினால் புகழப்பட்டபோதிலும் எந்த ஆசாரத்துக்கும் விரோதமாயிருந்தது. நியா $4^{17}$ $5^{24}$.

4. பழைய ஏற்பாட்டுக் காலங்களில் சத்திரங்கள் கிடையாது. ஆதி $42^{27}$-ல் சொல்லப்படும் 'தங்குகிற இடம்' என்பது வழியோரத்தில் நீரூற்றுள்ள ஒரு இடம்தான். எரே $9^{2}$-ல் சொல்லப்படும் 'வழிப்போக்கரின் தாபரம்' ஊற்றண்டையிலுள்ள ஒரு கட்டடமாயிருக்கலாம். லூக் $10^{34}$-ல் சொல்லப்படும் 'சத்திரம்' நாம் அறிந்த வண்டிப்பேட்டைகளைப் போன்றது. சத்திரம் காண்க.

விருந்து. **Feast.** ஆதி $19^{3}$ நியா $14^{10}$ 1 சாமு $25^{36}$ 2 சாமு $3^{20}$ 1 இரா $3^{15}$ எஸ்தர் $1^{3}$ $2^{18}$ $8^{17}$ நீதி $15^{15}$ ஏசா $5^{12}$ தானி $5^{1}$ மத் $23^{6}$ மாற் $12^{39}$ லூக் $5^{29}$ $14^{13}$ $20^{46}$ 2 பேது $2^{13}$ யூதா $1^{12}$. ஆகாரம், பந்தி காண்க.

விருப்பம், விரும்புகிறது. **Desire.** 2 சாமு $3^{21}$ சங் $51^{16}$ நீதி $13^{12}$ ஏசா $1^{29}$ எசே $24^{16.25}$ ஓசி $6^{6}$ ஆகா $2^{7}$ லூக் $9^{9}$ 1 தீமோ $3^{1}$.



எகிப்தியர் உழுகிறதும் விதைக்கிறதும்

விரோதம். **Enmity, Strife.** ஓசி $10^{10}$ ரோம $8^{7}$ 1 கொரி $16^{9}$ கலா $5^{17}$ பிலி $1^{16}$ எபி $2^{2}$ $12^{3}$ யாக் $4^{4}$.

விரோதி. **Adversary.** 1 இரா $11^{2}$. 1 தீமோ $5^{14}$ எபி $10^{27}$. 'விரோதிக்கிறது.' சங் $38^{20}$ $71^{13}$ $109^{20}$ லூக் $21^{15}$.

விலங்கு. **Chains.** நியா $16^{21}$ 2 நாளா $33^{11}$ சங் $105^{18}$ $149^{7}$ ஏசா $45^{14}$ எரே $40^{4}$. சங்கிலி காண்க.

விலா. **Side.** யோவா $19^{34}$ $20^{20,25,27}$ அப் $12^{7}$.

விலை. **Price.** லேவி $25^{16}$ 2 சாமு $24^{24}$ 2 நாளா $1^{16}$ யோபு $28^{13}$ நீதி $31^{10}$. கிரயம் காண்க.

வில். **Bow.** எபிரெயர்கள் பூர்வீககாலம் முதல் வில்லை உபயோகித்தார்கள். ஆதி $48^{22}$. மரத்தினாலும், இரும்பினாலும் வில் செய்யப்படும். ஆதி $27^{3}$ சங் $18^{34}$ $44^{6}$ ஆப $3^{9}$. பென்யமீனர் அதிகத் திறமையோடு வில் உபயோகிப்பார்கள். 1 நாளா $12^{2}$ 2 நாளா $14^{8}$ $17^{17}$. 'மோசம் போக்கும் வில்'. சங் $78^{57}$ ஓசி $7^{16}$. ஆயுதம் காண்க.

**விவசாயம்**, வெள்ளாண்மை. **Agriculture.**

1. எபிரெயர்கள் எப்போதும் வெள்ளாண்மையில் திறமையுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய அபிப்பிராயத்தின்படி எல்லா நிலங்களும் யேகோவாவினுடையது. லேவி $25^{23}$. ஒவ்வொரு ஊரிலும் மேய்ச்சலுக்காக நிலத்தில் மிகுதியான பாகத்தை விட்டுவைப்பது வழக்கம். மற்றப் பாகங்களைச் சாகுபடி செய்யும்படியாக ஊரார் அதைப் பிரித்துக்கொள்வார்கள். யேகோவா சமுசாரிகளுக்கு வெள்ளாண்மையைக் கற்பித்தார் என்று சொல்லி அதையே சிலாக்கியமாகக் கொண்டாடி வந்தார்கள். ஆதி $4^{2}$ 2 நாளா $26^{10}$ ஏசா $28^{26}$.

2. ஆகாரம், தோட்டம், ஒலிவமரம், களம், மண்வெட்டி முதலியவைகளைக் குறித்து அப்பெயர்கள் கொண்ட நிபந்தனங்களில் காண்க. இவைகளில் எபிரெயர்களுடைய விவசாய விஷயங்களைப்பற்றிய பொதுவான விபரங்களை அறியலாம்.

3. அக்டோபர் மாசம் முன்மாரி பெய்யும்போது சமுசாரிகள் நிலத்தை உழுது விதைக்கும்படி அதை ஆயத்தம் செய்வார்கள். அப்படியே தோட்டங்களையும் மண்வெட்டிகளினாலே பண்படுத்துவார்கள். ஆமோ $6^{12}$ ஏசா $7^{25}$. சாதாரணமாய்க் கையினாலே விதையைத் தூவுவார்கள். சில சமயங்களிலே விதைப்பெட்டியைக் கலப்பையின் கைபிடியிலே தொடுத்து அப்பெட்டியிலிருந்து ஒரு சிறு குழாய்வைத்து, உழுதுகொண்டு போகும்போதே அக்குழாயின் மூலமாய் விதைகள் விழுந்துகொண்டே போகும்படி செய்வார்கள். இந்த முறையை ஆபிரகாம் கண்டுபிடித்து அனுசரித்து வந்ததாகச் சொல்லிக்கொள்வார்கள்.

4. பின்மாரியின் தாழ்ச்சி, கருக்காய், விஷப்பனி, கல்மழை வெட்டுக்கிளி முதலியவைகளினாலே விளைகிற பயிருக்குப் பல மோசங்கள் உண்டாகி நஷ்டம் ஏற்படும். ஆமோ $4^{9}$ ஆகா $2^{17}$. இப்படிப்பட்ட நஷ்டம் நேரிடாவிட்டால் தக்க லாபம் கிடைக்கும். மத் $13^{8}$.

5. பலெஸ்தீனா தேசத்தில் மலைநாடுகளும் பள்ளத்தாக்குகளும் ஏராளமாயிருப்பதால், எல்லா இடங்களிலும் அறுப்பு ஏககாலத்தில் இருக்கமாட்டாது. எபிரெயர்களுடைய பிரமாணத்தின்படி 7 வாரங்களுக்கு அறுப்புக்காலமிருக்கும். வழக்கமாய் அறுப்புக்காலம் எப்பிரல்மீ மத்தியில் ஆரம்பித்து சூன்மீ துவக்கத்தில் முடிவாகும். லேவி $23^{15}$ உபா $16^{9}$. அறுப்புக்காலத்தில் கதிர்களை அறுத்துக் குவியல்களாகச் சேர்த்து,

களத்துக்குக் கொண்டுபோவார்கள். தவறி விழுகிற கதிர்களையும், வயலின் ஓரங்களி லுள்ள பயிர்களையும் ஏழைகளுக்காக விட்டு விடவேண்டும். உபா $24^{19}$. கதிர்களைத் தடியினால் அடித்துக் களத்திலே தூற்றுவார் கள். ரூத் $2^{17}$. கதிர்கள் மிகுதியாயிருந் தால், மாடுகளைக்கொண்டு இத்தேசத்தில் போரடிப்பது போலப் போரடிப்பார்கள், அல்லது ஒருவித வண்டிலின் உருளை கதிர் களின்மேல் சுற்றப்படும், அல்லது ஒருமா திரி கனத்த பலகை அதின்மேல் இழுக்கப் படும். 2 சாமு $24^{22}$ நீதி $20^{26}$ ஏசா $28^{27}$. பின்பு தூற்றுக்கூடையினாலே தூற்றிப் பதரைப் பறக்கடித்து, சல்லடையினால் சலித்து (ஆமோ $9^{9}$), உபயோகிக்கப்போ கிற தானியத்தைக் குடங்களில் போட்டு வைத்து, மற்றவைகளைக் களஞ்சியத்திலே சேர்ப்பார்கள். மத் $6^{26}$ லூக் $12^{18}$ $22^{31}$. பயிரின் முதற்பலன் யேகோவாவுக்குச் சேர் வதுடன், தசமபாகமும் செலுத்தப்பட வேண்டும் என்று நினைக்கலாம். லேவி $2^{14}$ $19^{10}$ $23^{22}$ உபா $24^{19}$ $26^{1-15}$.

விவாகம். **Marriage**. கலியாணம் காண்க.

விவாதம். **Contention**. நீதி $17^{14}$ $18^{6}$ எபி $6^{16}$.

விவேகம். **'Justice.'** உபா $32^{5}$ நீதி $1^{3}$ மத் $24^{45}$ லூக் $12^{42}$.

விவேகி. **'A man of understanding.'** நீதி $1^{5}$ $15^{24}$ 1 கொரி $6^{5}$.

விழிக்கிறது. **Awake**. ஆதி $28^{16}$ நியா $5^{12}$ 1 கொரி $15^{34}$ எபே $5^{14}$.

விழுகிறது. **Fall.**

1. விழுந்துபோகிறது. யாத் $21^{33}$ மத் $7^{25}$ அப் $26^{14}$ $27^{29}$ 1 கொரி $10^{8}$.

2. பிழைகளுக்குட்படுகிறது. ரோம $11^{11}$ 1 கொரி $10^{12}$.

3. நஷ்டப்படுகிறது. சங் $5^{10}$ $27^{3}$ $37^{24}$ நீதி $11^{14}$ ஞானி $11^{19}$.

4. மரிக்கிறது. ஆதி $14^{10}$ 2 இரா $14^{10}$ சங் $91^{7}$.

5. சண்டை பண்ணுகிறது. 1 சாமு $22^{18}$ 1 இரா $2^{29}$.

6. நேரிடுகிறது. எபி $11^{31}$ 1 தீமோ $6^{9}$.

விழுங்குகிறது. **Devour**. நீதி $19^{28}$ $20^{25}$ 1 பேது $5^{8}$.

விளக்கு. **Lamp.**

1. தீபம். யாத் $25^{31}$ மத் $5^{15}$ $25^{1}$.

2. தேவ அறிவு. 2 சாமு $22^{29}$ செப் $1^{12}$ நீதி $6^{23}$.

3. வேதம். நீதி $6^{23}$. 'தீபம்.' சங் $119^{105}$.

4. சந்ததி. சங் $132^{17}$ 2 சாமு $21^{17}$.

5. போதகன். யோவா $5^{35}$. குத்து விளக்கு காண்க.

விளக்குத்தண்டு. **Candlestick**. மத் $5^{15}$ மாற் $4^{21}$ லூக் $8^{16}$ $11^{33}$. குத்துவிளக்கு காண்க.

விளையாடுகிறது. **Play**. யாத் $32^{6}$ யோபு $40^{20}$ $41^{5}$ சங் $104^{26}$ ஏசா $11^{8}$ சக $8^{5}$ 1 கொரி $10^{7}$.

விறகு. **Wood, Fuel**. உபா $19^{5}$ நீதி $26^{20}$ எசே $24^{10}$. 'விறகு வெட்டுகிறவன்.' யோசு $9^{21}$.

விற்கிறது. **Sell**.

1. விலைக்கிரயப்படுத்துகிறது. ஆமோ $8^{5}$ யோவா $2^{14}$ 1 கொரி $10^{25}$.

2. எபிரெயர் சிலவேளைகளில் தங்களை அடிமைகளாக விற்றுப்போட்டார்கள். (லேவி $25^{39}$) கடன்காரர் கடன்பட்டவர் களையும் அவர்களுடைய பிள்ளைகளையும் விற்றுப்போட்டார்கள். ஆதி $37^{27}$ 2 இரா $4^{1}$ யோவே $3^{8}$ மத் $18^{25}$. மனிதரைத் திருடி விற்கக்கூடாது. யாத் $21^{6}$.

3. 'விற்றுப்போடப்படுகிறது', 'ஒப்புவிக் கப்படுகிறது' என்னும் அருத்தங்கொள் ளும். உபா $32^{30}$ ஏசா $50^{1}$.

4. 'ஜேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப் போட்ட ஏசா.' எபி $12^{16}$ ஆதி $25^{31}$.

வினவுகிறது. **Salute**. 2 இரா $4^{29}$ லூக் $10^{4}$ அப் $21^{7}$.

வினவுகிறது. **'Be Wise'**. நீதி $1^{3}$ மத் $10^{16}$.

வினை. **Deed**. கிரியை காண்க.

## வீ

வீசுகிறது. **Blow**. யோவா $3^{8}$.

வீடு. **House**.

1. பூர்வீக காலம். பூர்வீக காலத்தில் (ஏறக்குறைய கி–மு. 2500ஞு) கானான் தேசத்தில் இருந்தவர்கள் வழக்கமாய் ஊர்களிலும் வீடுகளிலும் அல்ல, கெபி களிலும் குகைகளிலும் வசித்தார்கள். பிந்திய காலத்தில் எபிரெயர்கள் தங்க ளுக்கு அபாயம் நேரிடுங் காலத்திலும் உபத் திரவம் உண்டாகுங் காலத்திலும் இவை களில் ஒளித்துக்கொள்ளுவார்கள். நியா $6^{2}$ 1 சாமு $13^{6}$ எபி $11^{38}$. ஆபிரகாம் முத லிய ஆதிப்பிதாக்கள் கூடாரங்களில் வாசஞ் செய்தார்கள். அவர்களுடைய காலத்தில் கானான் தேசத்தில் பல ஊர்களும் கோட் டைகளும் இருந்தன. இஸ்ரவேலர் எகிப்து

தேசத்திலிருந்து கானான் தேசத்துக்கு வந்த போது, அவர்கள் கானானியர் கட்டின ஊர் களிலும் வீடுகளிலும் குடியேறினார்கள்.

2. பூர்வீக காலத்து வீடுகள். பூர்வகாலத்து ஜனங்கள் காட்டுமரங்களால் வீடு கட்டினார்கள். இஸ்ரவேலர் கூடாரப்பண்டிகைகளின் காலத்தில் போட்டுக்கொண்ட பந்தல்கள் இதற்குத் திருஷ்டாந்தம். பிறகு, வெறும் மண்ணினால் சிறு சுவர்களைக் கட்டி அவைகளின்மேல் கிளைகளினாலும் இலைகளினாலும் ஒரு மேற்கூரையைக் கட்டுவார்கள். இதற்குப்பின்பு, அவர்கள் மண்ணெடுத்து, அதைச் செங்கல் முதலிய வடிவமாக அறுத்து, வெயிலிலே காய வைத்து, அவைகளினால் வீடுகளைக் கட்டுவார்கள். சில சமயங்களில் இந்தப் பச்சைச் செங்கல்களைச் சூளையிலே போட்டுச் சுட்டு, அப்புறம் அவைகளை வீடு கட்ட உபயோகிப்பார்கள். பச்சைச் செங்கற்களால் கட்டின வீடுகளுக்கு மண்வீடு என்று பெயர். கள்ளர்கள் திருடும்பொழுது, இந்த வீடுகளின் சுவரில் இலேசாய் கன்னமிடலாம். எசே 12[5] யோபு 4[19] மத் 6[19]. எபிரெயர் முதலியவர்கள் செய்த செங்கற்கள் ஒரே அளவாய் அல்ல, பெரிதும் சிறிதுமாய் இருக்கும். அவர்கள் சாதாரணமாய்க் கற்களினால் வீடுகட்டுவார்கள். லேவி 14[40] எசா 9[10]. சில சமயங்களில் வயல்வெளிகளில் பொறுக்கியெடுத்த வெறுங்கற்களையும், சில சமயங்களில் வெட்டியெடுத்த கற்களையும், சில சமயங்களில், வெகு பத்திரமாய் வாளால் அறுக்கப்பட்ட கற்களையும் உபயோகிப்பார்கள். 1 இரா 5[17] 7[9]. கற்கள் ஒன்றோடொன்று ஒட்டும்படி மண்ணை வழக்கமாய் உபயோகிப்பார்கள். சில சமயங்களில் சாந்து அல்லது நிலக்கீல் இவ்விஷயங்களுக்கு உபயோகிக்கப்படும். ஆதி 11[3].

3. எபிரெயருடைய வீடுகள்.

(*a*) கானானியர் கட்டின வீடுகளின் விபரம் என்னவென்றால், முதலிலே ஒரு முற்றமும் அதற்குப்பின் ஒரு அறையும் இருக்கும்; அல்லது முதலிலே ஆடுமாடுகளுக்காக மதிலினால் சூழப்பட்ட ஒரு முற்றமும், அதற்குப்பின் ஒரு முழ உயரமான திண்ணையும், அதற்குப்பின் மேற்கூறிய அறையும் இருக்கும். பிந்தின காலங்களில் ஜனங்கள் முற்றத்தின் இரண்டு அல்லது மூன்று பக்கங்களிலும் அறைகளைக் கட்டினார்கள்; அல்லது வீடு பெரியதாயிருக்க வேண்டுமானால் மூன்று பக்கங்களில் திண்ணைகளையும் அறைகளையும் கட்டுவார்கள்.

(*b*) எபிரெயர் கானான் தேசத்தில் பிரவேசித்தபின்பு கானானியருடைய வீடுகளைத் தங்கள் கைவசப்படுத்தினார்கள். அவர்கள் தங்களுக்கு வீடுகளைக் கட்டும்பொழுது, கானானியரைப்போல முற்றத்தின் பக்கங்களில் திண்ணைகளையும் அறைகளையும் கட்டுவார்கள். உபா 6[10] 2 சாமு 17[18] எரே 32[2]. இந்த அறைகள் 15 அடி நீளமும் 12 அடி அகலமும் ஏறக்குறைய 13 அடி உயரமுமாய் இருக்கும். தனவான்கள் தங்களுடைய பெரிய வீடுகளில் வெளிமுற்றம் உள்முற்றம் என்ற இரண்டு முற்றங்கள் கட்டி உள்முற்றத்தின் பக்கத்தில் வழக்கமாய்ப் பெண்களின் அறைகளைக் கட்டுவார்கள். எஸ்தர் 4[11]. அத்தேசத்தில் மழை அபூர்வமானதினால், அறைகளின் மேற்கூரையின்மேல் விழுந்தண்ணீர் சேரும்படி ஒரு தொட்டி இருக்கும். 2 சாமு 17[18]–ல் சொன்ன கிணறு இவ்விதத் தொட்டிதான்.

4. பிரதிஷ்டை. அஸ்திபாரத்திற்கு மூலைக்கல் வைக்கும்பொழுது, பிரதிஷ்டைக்கொண்டாட்டம் நடக்கும். 2 நாளா 8[16] யோபு 38[6] எசா 28[16]. கானானியர் புதுக்கட்டடங்களுக்கு அஸ்திபாரம் போடும்பொழுது பூமியில் வசிக்கும் தேவதைகளைப் பிரியப்படுத்தும்படி குழந்தைகளைப் பலிசெலுத்தி அஸ்திபாரத்துக்குள் புதைப்பார்கள். மேலும் இதைக்குறித்து ஆராய்ச்சி செய்தவர்கள் ஒரு கோட்டையில் 15 வயதுள்ள பெண் பிள்ளையின் எலும்புகளையும் இன்னொரு கோட்டையில் 10 வயதுள்ள பெண்ணுடைய எலும்புகளையும் வேறு சில கட்டடங்களின் அஸ்திபாரத்தில் பெரியவர்களுடைய எலும்புகளையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். சிலர் நினைக்கிறபடி எரிகோப் பட்டணம் திரும்பக் கட்டப்பட்டபோது அதைக் கட்டினவன் தன் மகனைப் பலியாக செலுத்தினான். ஆனால் இதற்குப் போதிய அத்தாட்சி இல்லை. யோசு 6[26] 1 இரா 16[34]. எபிரெயர் வீடு கட்டும்பொழுது, பிரதிஷ்டைச்சடங்கு செய்வார்கள். உபா 20[5]. ஆலயப்பிரதிஷ்டை, அரமனைப் பிரதிஷ்டை முதலியவற்றைப்பற்றி வேதாகமத்தில் விபரமாய்ச் சொல்லியிருக்கிறது. லேவி 8[10] 1 இரா 8[1] எஸ்றா 6[16] நெகே 3[1] 12[27].

5. சுவரும் தளமும். கொற்றர்கள் இல்லாத பூர்வகாலத்தில் ஒவ்வொருவனும் தன் தன் வீட்டைத் தானே கட்டிக்கொள்ளுவான். இதினிமித்தம் பூர்வகாலத்து வீடுகளின் சுவர்கள் ஒழுங்கற்றிருக்கிறது. 'வீடு கட்டுகிறவர்கள்' என்ற கல்தச்சர்கள் தங்

கள் வேலையில் சாமர்த்தியம் அடைந்தபின், அவர்கள் கல்லுகளை அளவுப்பிரகாரம் நன்றாய் வெட்டி, 'பொலிந்த கற்களினால்' ராஜாக்களுக்கும் தனவான்களுக்கும் வீடுகளைக் கட்டுவார்கள். 1 இரா $5^{17}$ சங் $118^{22}$ ஏசா $9^{9}$ ஆமோ $5^{11}$. வீட்டின் வெளி மதில்கள் 18 அங்குலம்முதல் 24 அங்குலம் வரையில், உள்மதில்கள் 9 அங்குலம்முதல் 12 அங்குலம்வரையில் கனமுள்ளவையாய் இருக்கும். இரண்டு சுவர்களை இணைக்கும் அஸ்திபாரத்தினுடைய மூலையின் அடியில் ஓர் பெரிய கல் வைப்பது வழக்கம்; இந்தக் கல்லுக்கு 'அஸ்திபாரக்கல்' அல்லது 'மூலைக்கல்' என்று பெயர். அஸ்திபார மூலைக்கல் மூலையின் மேல்பக்கத்தில் வைக்கப்பட்டது என்றும் சிலர் நினைக்கிறார்கள். மாற் $12^{10}$ அப் $4^{11}$ 1 பேது $2^{7}$. வீடுகளுக்குள்ளே சுவரின் உட்புறத்தின்மேல் சாந்து பூசுவார்கள், அல்லது அவைகளைச் செதுக்கி வெள்ளையடிப்பார்கள். எசே $3^{13}$ $22^{28}$ தானி $5^{5}$ மத் $23^{27}$ அப் $23^{3}$. தேவாலயம் மாளிகை என்பவைகளின் சுவர்களும் மேற்கூரையும் கேதுருமரப் பலகைகளினாலும் தேவதாரு விருக்ஷப் பலகைகளினாலும் மூடப்பட்டிருக்கும். 1 இரா $6^{15}$ $7^{7}$ 2 நாளா $3^{5}$ உன்.பா $1^{17}$ எரே $22^{14}$ ஆகா $1^{4}$. சில சமயங்களிலே யானைத் தந்தத்தினாலே இந்தக் கேதுருமரப் பலகைகளை அலங்கரிப்பார்கள். இதினிமித்தம் ஆகாப் ராஜா கட்டின ஒரு அரமனைக்குத் 'தந்த மாளிகை' என்று பெயர். 1 இரா $6^{15}$ ஆமோ $3^{15}$.

வழக்கமாய் மண்ணை நன்றாய்க் கெட்டித்துத் தளம் போடுவார்கள். சில சமயங்களில் கற்பலகைகளினாலே தளம் போடுவார்கள். தேவாலயத்தின் தளம் தேவதாரு முதலிய பலகைகளினால் போடப்பட்டிருந்தது. 1 இரா $6^{15}$. சில வீடுகளில் வீட்டுக்குக் கீழே பூமியிலே திராக்ஷரசம், எண்ணெய் முதலியவை வைக்கும்படி அறைகளைக் கட்டுவார்கள். 1 நாளா $27^{27,28}$.

6. மேற்கூரை, மேல்வீடு. கானானியர் சுவரிலிருந்து சுவருக்குப் பெரிய மரங்களைப் பாவி அவைகளின் குறுக்கே சிறு மரங்களைப்போட்டு, இவற்றின்மேல் நாணல் முதலியவற்றைப் பரப்பி, இதற்கு மேல் நாலு அல்லது ஐந்து அங்குல கனத்துக்கு மண் பூசுவார்கள். சில சமயத்தில் இதன்மேல் தட்டோடு வைப்பார்கள். தென் இந்தியாவிலுள்ள மெத்தை வீடுகளைப்போலவே எபிரெயருடைய வீடுகளின்மேலும் ஜனங்கள் படுக்கிறதற்கும் உலாவுவதற்கும் இடம் இருக்கும். 1 இரா $6^{9}$ உன்.பா $1^{17}$ ஏசா $9^{10}$ லூக் $5^{19}$. இதன்மேல் படுக்கைக்காகக் கூடாரம் அல்லது பந்தல் போடுவார்கள். 2 சாமு $16^{22}$ நெகே $8^{16}$. சில சமயங்களில் இதன்மேல் அறை வீடுகளையும் மண்டபங்களையும் கட்டுவார்கள். நியா $3^{20}$ 2 இரா $4^{10}$. இம்மெத்தைகளின்மேல் பெண்கள் பலவிதமான வேலைகளைச் செய்வார்கள். யோசு $2^{6}$. சாயங்காலத்தில் ஜனங்கள் இதன்மேல் உலாவுவார்கள். 2 சாமு $11^{2}$. மற்றவர்கள் கேட்காதபடி ஏதாவதொரு விஷயத்தைக் குறித்துப் பேசவேண்டுமானால், மேல் மெத்தையிலே போய்ப் பேசுவார்கள். 1 சாமு $9^{25}$. இங்கே ஜெபத்தியானம் செய்வார்கள். அப் $10^{9}$. துக்கங்கொண்டாடுதலும் இவ்விடத்திலே நடக்கும். ஏசா $15^{3}$ எரே $48^{38}$. சமயா சமயங்களில் இங்கே விக்கிரகாராதனை நடத்தப்படும். எரே $19^{13}$ செப் $1^{5}$. மழைகாலத்தில் இம்மெத்தைகள் ஒழுகும். நீதி $27^{15}$. பிர $10^{15}$. இங்கேயிருந்து முற்றத்திலுள்ள தொட்டிக்குள் மழைத்தண்ணீர் இறங்கிப் பாயும்படி ஒரு சிறு கால்வாய் இருக்கும். ஒருவேளை 2 சாமு $5^{8}$-ல் சொன்ன 'சாலகம்' என்பது இவ்விதக் கால்வாயைக் குறிக்கும். இந்த மெத்தையைத் தாங்கும்படி சாதாரணமாய் வீட்டுக்குள்ளே சில கற்களின்மேல் வைக்கப்பட்ட மரத்தூண்கள் இருக்கும். சிம்சோன் தள்ளின தூண்கள் இவைகள்தான். நியா $16^{29}$. மேல் மெத்தையின் நாலு பக்கங்களிலும் கைபிடிச் சுவர் இருக்கவேண்டும். உபா $22^{8}$. இம்மெத்தையின்மேல் ஏறுகிறதற்கு முற்றத்தில் ஒரு ஏணி அல்லது படிக்கட்டு இருக்கும். தேவாலயத்து சுவருக்குள் அதின் மேல்மெத்தைக்கு ஏறும்படி சுழற்படிகள் இருந்தன. 1 இரா $6^{8}$.

தனவான்களும் ராஜாக்களும் மாத்திரம் தங்களுக்கு இரண்டடுக்கு மூன்றடுக்கு மெத்தை வீடுகளைக் கட்டுவார்கள். 2 இரா $1^{2}$. சில வசனங்களில் 'மேல்வீடு' என்றும், 'மேல்மச்சு' என்றும் 'உப்பரிகை' என்றும் சொல்லியவை இவ்வித வீடுகளைக் குறிக்கும். 2 சாமு $11^{2}$ $16^{22}$ 1 இரா $6^{15}$ 2 இரா $1^{2}$ $9^{33}$ சங் $104^{13}$.

அப் $20^{9}$-ல் சொன்ன மூன்று மெத்தை வீடு யூதர்கள் அல்ல கிரேக்கர் கட்டின மூன்றடுக்கு மெத்தைவீடு.

7. கதவு, வாசல். எபிரெயர்கள் நிலைக்கால்வைத்து அவைகளின்மேல் சட்டம் போட்டு, அதற்குள் கதவு வைப்பார்கள்.

யாத் $12^{7}$. இந்தக் கதவு ஒற்றைக் கதவாகவாவது இரட்டைக்கதவாகவாவது இருக்கும். சில சமயங்களில் கதவுநிலைகள் கல் தூண்களாயிருக்கும். 1 இரா $7^{5}$ எசே $41^{21}$. அவர்கள் இரும்புக்கீல்களை உபயோகியாமல் கதவுப்பலகையின் ஒரே பக்கத்திலுள்ள இருமுனைகளில் தைக்கப்பட்டு, நிலையிலுள்ள துவாரங்களுக்குள் செல்லுகிற குச்சிகளை கீல்களுக்குப் பதிலாக உபயோகிப்பார்கள். நீதி $26^{14}$ 1 இரா $6^{34}$. வாசற்படி கல்லாய் இருக்கும். நியா $19^{27}$ 1 இரா $14^{17}$. உபா $6^{4-9}$ $11^{13-21}$–ல் சொன்ன வேதவாக்கியங்களைக் கதவின் நிலைக்காலில் கட்டுவது எபிரெயர்களுடைய வழக்கம். கதவுகளுக்குத் தாழ்ப்பாள் பூட்டு இருக்கும். உன்.பா $5^{5}$ நெகே $3^{3}$. திறவுகோல் காண்க. பெரியவர்களின் வீட்டு வாசலில் காவற்காரர் இருப்பார்கள். 1 இரா $14^{27}$ மாற் $13^{34}$. வாசல் காண்க.



எகிப்தியரின் வீட்டு வாசல்.

8. ஜன்னல் முதலியவை. ஏழைகளின் வீடுகளுக்கு ஜன்னல்கள் இல்லை. பெரிய வீடுகளில் சிறு ஜன்னல்கள் இருந்தன. இவைகள் சிறிதாய் இருந்தாலும் இவற்றுள் ஒரு ஆள் நுழைந்து செல்லலாம். யோசு $2^{15}$ 1 சாமு $19^{12}$ யோவே $2^{9}$. இவைகளுக்குக் கண்ணாடியில்லை. சிலவற்றிற்குத் துவார பலகை, அல்லது பலகணிகள் இருக்கும். 2 இரா $13^{17}$ நீதி $7^{6}$.



சீரியா தேசத்து தனவானின் வீடு.

9. அடுப்பு. வீட்டுக்குள்ளே ஒரு மூலையில் ஒரு சிறு பள்ளந்தோண்டி, அதிலே அடுப்பு மூட்டிச் சமையல்வேலை செய்வார்கள். ஏசா $30^{14}$. புகை வழக்கமாய் ஜன்னல் வழியாயும் வாசல் வழியாயும் வெளியே போகும். நீதி $10^{26}$ ஓசி $13^{3}$. குளிர்காலத்தில் தனவான்கள் தங்கள் அறைகளில் கணப்பு மூட்டி வைப்பார்கள். எரே $36^{22}$ சக $12^{6}$.

10. வீட்டு சாமான். வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்களைப்பற்றி, கட்டில், மஞ்சம், நாற்காலி, தர்ப்பணம், மண்பாண்டங்கள், தூடம், சட்டி பானை முதலியவை காண்க.

11. தமிழ் பதங்கள். தமிழ் வேதாகமத்தில் வீட்டுக்கடுத்த பல பதங்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

அறை. ஆதி $43^{4}$ அப் $1^{13}$.
உத்திரம். மத் $7^{3}$.
எண்ணெய்க் கிடங்கு. 1 நாளா $27^{28}$.
படுக்கை அறை. யாத் $8^{3}$.
மேல் மச்சு. 1 இரா $6^{15}$.
குடில். ஏசா $24^{20}$ செப் $2^{6}$.
குடிசை. ஏசா $1^{8}$.
சயனவீடு. 2 நாளா $22^{11}$.
உள்முற்றம். எஸ்தர் $5^{1}$.
மலஜலவாதை யிடம். 2 இரா $10^{27}$.
மேற்கூரை. மாற் $2^{4}$.
போஜனசாலை. 1 சாமு $9^{22}$.

12. 'வீடு' என்பது உவமையாய்ச் சொன்ன சில அர்த்தங்களாவன :

பொருள். 1 இரா $13^{8}$ மத் $23^{14}$.



பழையகாலத்து வீடு.

உடம்பு. பிர $12^{2}$ 2 கொரி $5^{1}$.
குடும்பம். மத் $12^{25}$.
திருச்சபை. 1 தீமோ $3^{15}$ எபி $3^{6}$.
பரலோகம். யோவா $14^{2}$.

வீட்டார். **Household**. ஆதி $12^{17}$ அப் $10^{2}$ மி.

வீணன். **Fool, Base**. மத் $5^{22}$ (ராகா காண்க.) அப் $17^{5}$.

வீணை. **'Sackbut'**. தானி $3^{5}$. கீதவாத்தியம் காண்க.

வீண். **Vain**. யாத் $20^{7}$ உபா $5^{11}$ யோபு $35^{16}$ மத் $6^{7}$ எபே $5^{6}$ 1 தீமோ $1^{6}$. விருதா காண்க.

வீதம். **Portion**. யோசு $19^{9}$.

வீதி. **Street**. 2 சாமு $1^{20}$ 1 இரா $20^{34}$ 2 நாளா $29^{4}$ நெகே $8^{1}$ எஸ்தர் $6^{9}$ யோபு $18^{17}$ நீதி $1^{20}$ பிர $12^{6}$ எசா $24^{11}$ $33^{10}$ $42^{2}$ $59^{14}$ எரே $5^{1}$ புல $4^{1}$ மத் $6^{5}$ $12^{19}$ அப் $12^{10}$ வெளி $11^{8}$ $21^{21}$ $22^{2}$. தெரு காண்க.

வீம்புக்காரன். **Boaster**. சங் $5^{5}$ $73^{3}$ $75^{4}$ ரோம $1^{30}$ 2 தீமோ $3^{2}$.

வீரன். **Men**. குதிரைவீரர். ஆதி $50^{9}$ யாத் $14^{9}$ $15^{19}$ 1 சாமு $8^{11}$ 1 இரா $4^{26}$ எசா $21^{7}$ எசே $23^{6}$ ஓசி $1^{7}$ அப் $23^{23}$.

## வெ

வெகுமதி, வெகுமானம். **Present**. ஆதி $32^{13}$ சங் $72^{10}$ நீதி $18^{16}$ எசா $39^{1}$ தானி 5.

வெடிப்பு. **'Cleft.'** உன்.பா $2^{14}$ எரே $49^{16}$ ஆமோ $6^{11}$ ஒப $1^{3}$.

வெடியுப்பு. **Nitre. (R. V. marg. 'Soda'.)** நீதி $25^{20}$.

வெட்கம். **Shame**.
நாணமாகிய வெட்கம். ஆதி $2^{25}$ லூக் $14^{9}$ 1 கொரி $1^{27}$ $11^{6}$.
குற்றத்தினால் தோன்றுகிற வெட்கம். சங் $35^{26}$ எசே $7^{18}$ மீகா $1^{11}$ ரோம $5^{5}$ $6^{21}$ 1 கொரி $6^{5}$ $16^{34}$ 1 பேது $2^{6}$.

வெட்டாந்தரை. **Dry land**. ஆதி $1^{9}$ யாத் $4^{9}$ $14^{16}$ சங் $95^{5}$.

வெட்டுகிறது. **Hew**. யாத் $34^{13}$ உபா $19^{5}$ எசா $51^{1}$ மத் $3^{10}$ $27^{60}$ லூக் $13^{7}$ $23^{53}$.

வெட்டுக்கிளி. **Grasshopper. Locust**. நியா $6^{5}$ யோபு $39^{20}$ எரே $45^{20}$ நாகூ $3^{17}$ ஆமோ $7^{1}$. கிளி, பச்சைப்புழு காண்க. பொல்லாதவர்கள், நஷ்டமுண்டாக்கின சத்துருக்கள். எசா $33^{4}$ யோவே $1^{4}$ வெளி $9^{3}$.

வெண்கலகடல்தொட்டி. **The brazen sea**. 2 இரா $16^{17}$ $25^{13}$ 1 நாளா $18^{8}$ எரே $52^{17}$. தேவாலயம் காண்க.

வெண்கலச் சர்ப்பம். **The brazen serpent**. எண் $21^{6}$ யோவா $3^{14}$. சர்ப்பம் காண்க.

வெண்கலத் தூண். **Pillars of brass**. 1 இரா $7^{15}$ 2 இரா $25^{13}$. தூண் காண்க.

வெண்கலம். **Bronze**. செம்பும் வெள்ளீயமும் கலந்த ஒரு லோகம். யாத் $25^{3}$ $30^{18}$ $35^{24}$ லேவி $26^{19}$ உபா $28^{23}$ நியா $16^{21}$ 2 சாமு $8^{10}$ எஸ்றா $8^{27}$ யோபு $40^{18}$ $41^{27}$ தானி $2^{32}$ சக $6^{1}$ 1 கொரி $13^{10}$ வெளி $1^{15}$. செம்பு, பித்தளை, தகரம் காண்க.

வெண்காயம். **Onion**. எகிப்தியரும் எபிரெயரும் வெண்காயத்தை அதிகமாய் விரும்பினார்கள். எண் $11^{5}$.

வெண்ணெய். **Butter**. ஆதி $18^{8}$ உபா $32^{14}$ நியா $5^{25}$ 2 சாமு $17^{29}$ சங் $55^{21}$ நீதி $30^{33}$ எசா $7^{15}$.

வெண்மை, வெள்ளை. **White**.
i. வர்ணம். ஆதி $30^{35}$ $49^{12}$ எஸ்தர் $1^{6}$ பிர $9^{8}$ சக $1^{8}$ மத் $5^{36}$ வெளி $1^{14}$.
ii. பரிசுத்தம், சங் $51^{7}$ எசா $1^{18}$ தானி $12^{10}$ மத் $28^{3}$ மாற் $16^{5}$ லூக் $9^{29}$ யோவா $20^{12}$ வெளி $3^{4}$ $4^{4}$ $6^{11}$ $7^{9}$ $15^{6}$ $19^{8}$.

வெதாண். **Vedan. (R. V.)** எசே $27^{19}$.

வேது வேதுப்பு. **Lukewarmness.** வெளி $3^{16}$.

வெந்தயம். **A. V. Anise. R. V. Dill.** பலெஸ்தீனுதேசத்தில் இது ஏராளம். கறிப் பதார்த்தங்களில் ஒன்று. மருந்துக்கு உதவும். மத் $23^{23}$.

வெயில். **Light.** 1 சாமு $11^{9}$ வெளி $7^{16}$.

வெல்லுகிறது. **Overcome.** ரோம $12^{12}$.

வெளி. **Open, Abroad.** ஆதி $4^{8}$ $15^{5}$ யாத் $21^{19}$ லேவி $14^{7}$ $17^{5}$ எண் $19^{16}$ உபா $24^{11}$ எசே $16^{5}$ மாற் $4^{22}$ லூக் $8^{17}$.

வெளிச்சம். **Light.** ஆதி $1^{3}$ யாத் $10^{23}$ எஸ்தர் $8^{16}$ பிர $12^{2}$ சங் $119^{105}$ ஏசா $30^{26}$ $58^{8}$ $60^{3}$ மீகா $7^{8}$ மத் $4^{16}$ $5^{14}$ $6^{23}$ யோவா $5^{35}$ எபே $5^{8}$. ஒளி காண்க.

வெளிப்படுகிறது, வெளிப்படுத்துகிறது, வெளியாக்குகிறது. **Reveal.** நீதி $11^{13}$ மத் $10^{26}$ $11^{25}$ $16^{17}$ லூக் $17^{30}$ யோவா $2^{11}$ $3^{21}$ ரோம $8^{19}$ 2 கொரி $4^{2}$ கலா $1^{16}$ எபே $3^{6}$ கொலோ $3^{4}$ 2 தெச $2^{3}$ 2 தீமோ $1^{10}$ 1 பேது $5^{4}$ 1 யோவா $2^{28}$.

வெளிப்படுத்தல். **Revelation.**

1. பதம். தமிழ் பாஷையில் 'வெளிப்படுத்துகிறது' என்னும் வினைச்சொல்லினால் மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க பதத்தின் அர்த்தம் என்னவென்றால், 'மறைந்திருக்கிற பொருளுக்கு முன்போடப்பட்ட திரையை நீக்கி அப்பொருளைக் காண்பிப்பதாம்.'

2. வெளிப்படுத்தல். மனுக்குலத்தாரைத் தீமையிலிருந்து மீட்டு ரட்சிக்கும்படி இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கடவுள் தம்மை மனுஷருக்குத் தெரிவித்ததே, கிறிஸ்தவ வேதசாஸ்திரத்திலுள்ள வெளிப்படுத்தலாம். கிறிஸ்துமார்க்கத்துக்கும் கிறிஸ்தவ வேதத்திற்கும் இதுவே மூலம்.

3. வெளிப்படுத்தலின் வகைகள். கடவுளின் அருளைப் பூரணமாய் அறியத்தக்க வகைகள் ஐந்து:

i. இவ்வுலகத்தில் அவர் செய்திருக்கிற மகத்துவமான கிரியைகளும், நமக்கு அவர் கொடுத்திருக்கிற ஞானம் யுக்தி விவேகம் முதலியவைகளும் அவருடைய லக்ஷணங்களில் சிலவற்றை நமக்கு இயற்கையாய்த் தெரிவிக்கின்றன. சங் $19^{1}$ ரோம $1^{20}$.

ii. நன்மை தீமையைப்பற்றிய பகுத்தறிவும், தீமையை வெறுத்து நன்மையையே தெரிந்துகொள்ளவேண்டுமென்று நமக்குக் காட்டுகிற மனச்சாட்சியும், நான் கடவுளை அறிந்துகொள்ளக்கூடும் என்கிற எண்ணமும் கடவுளின் உத்தம நீதியை நமக்கு வெளிப்படுத்துகிறது. ரோம $2^{16}$ யோவா $1^{9}$.

iii. இவ்வுலகத்திலுள்ள ஜனங்களின் சரித்திரத்தை நாம் வாசிக்கும்போது, கடவுள் தாமே அநியாயத்தைக் கண்டித்து, நீதி நியாயத்தை ஸ்தாபித்து, இவ்விதமாய் இவ்வுலகத்தாரை வழிநடத்தி வருகிறதைக் கவனித்து அவர் நீதியுள்ளவராயிருக்கிறார் என்பதை அறிகிறோம்.

iv. யூதமார்க்கத்திலும் எபிரெய தீர்க்கதரிசிகள் உரைத்த தீர்க்கதரிசனங்களிலும், சன்மார்க்கம் இன்னதென்று கடவுள் யூதருக்கு மாத்திரமல்ல, சகலருக்கும் அறிவித்திருக்கிறார்.

v. கடவுளைக்குறித்தும் அவருடைய சித்தத்தைக்குறித்தும் நமக்குள்ள அறிவு குறைவானதாயிருந்தபோதிலும், இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தில் அவதாரம் செய்த காலத்தில் போதித்த போதனைகளினாலும், சாதித்த முன்மாதிரியினாலும், அவருடைய சீஷர்கள் இயற்றிய நூல்களினாலும், அந்த அறிவு பூரணப்படுகிறது.

4. வெளிப்படுத்தலின் நிச்சயம்.

கடவுள் நீதிநியாயமுள்ள பூரண சற்குணராகையால், இந்த லக்ஷணங்களை விரும்புகிற மனுஷர்களுக்கு அவைகளை வெளிப்படுத்துவது அவசியம் என்று நாம் அறிய வேண்டும். இந்த நீதிநியாயத்தைப்பற்றிய அறிவைத் தெரிவிக்கும் வகைகள் பல உண்டு.

சொப்பனங்களின் மூலமாய்த் தெரிவிக்கிறார். ஆதி $37^{5}$ $40^{5}$ 41 அதி. 1 இரா $3^{5}$ தானி $7^{1}$ மத் $1^{20}$.

தரிசனங்களின் மூலமாய் வெளிப்படுத்துகிறார். ஆதி $15^{1}$ $46^{2}$ எசே $1^{1}$ தானி $8^{2}$ அப் $9^{10}$ $10^{3}$ $23^{11}$ $27^{23}$ 2 கொரி $12^{1}$.

தேவதூதர்கள் மூலமாய்த் தெரிவிக்கிறார். லூக் $1^{11,28}$ $9^{35}$ யோவா $12^{28}$.

மேலும் கிறிஸ்தவ வேதசாஸ்திரத்திலுள்ள நூல்களின் மூலமாயும், தீர்க்கதரிசிகள் அப்போஸ்தலர் பிரசங்கிகள் மூலமாயும் அவர் நமக்குத் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். விசேஷமாக வேதத்தின் மூலமாய், நம்பத்தக்க போதனைகளை அவர் நமக்குக் கொடுத்ததினாலே கிறிஸ்தவர்களை 'நூலின் ஜனங்கள்' என்று சொல்வது நியாயமே.

5. வெளிப்படுத்தலின் விருத்தி.

*a*. பூர்வீகத்தில் கடவுள் தம்மைக்குறித்து அருளிய அறிவு அக்காலத்தாருடைய மனதின் நிலைமைக்குத் தக்கதாக இருந்தது.

*b.* எபிரெயர்களுடைய மார்க்கத்தையும் பூர்வீக மற்ற மார்க்கங்களையும் நாம் ஒப்பிட்டு, கடவுள் எபிரெயர்களுக்குத் தமது தன்மையை விசேஷித்த விதமாய் வெளிப்படுத்தினர் என்று சொல்வது நியாயமே. மற்றப்படி நரபலியையும் அகோரமான வேசித்தனம் முதலிய துன்மார்க்கங்களையும் விரும்பின சேமியர்களுடைய தேவர்களை வெறுத்து எபிரெயர்கள் யேகோவாவை எப்படி அறிந்து தொழுதுகொண்டார்கள்?

*c.* மற்றத் தேசங்களிலுள்ள ஞானிகளைப் பார்க்கிலும், தீர்க்கதரிசிகள் பல நூற்றாண்டுகளாகக் கடவுளின் உன்னத தன்மையைப் படிப்படியாக ஜனங்களுக்குத் தெளிவாய்ப் போதித்து வந்தார்கள். அவர்கள் தங்கள் சொந்த முயற்சியினாலும் சுய யோசனையினாலும் இந்த ஞானத்தைப் பெற்றதாகச் சொல்லாமல் கடவுள் தாமே இந்த மெய்ஞ்ஞானத்தை அவர்களுக்குத் தந்தருளினதாக அடிக்கடி சொல்லுகிறார்கள்.

*d.* இயேசுகிறிஸ்து மெய்ஞ்ஞான பதவியை நாம் அறிந்துகொள்ளும்படி கடவுளின் உத்தம லட்சணத்தைச் சதாகாலங்களிலும் நமக்குத் தெரிவித்துவருகிறார். இவ்வண்ணமாய் நாம் நித்தியஜீவனை அடையக்கூடும் என்று உணர்ந்து, அவரே மறைவானவைகளையெல்லாம் பூரண பிரகாசமாய் நமக்கு வெளிப்படுத்துகிறார் என்று அறிந்து அவரையே புகழுகிறோம். எபி 1[1].

## வெளிப்படுத்தின விசேஷம். The Book of Revelation.

1. ஆக்கியோன்.

வெளிப்படுத்தின விசேஷம் என்னும் ஆகமத்தைப்போலத் தரிசனம் எச்சரிப்பு வாக்குத்தத்தம் முதலியவைகள் நிறைந்த வெளிப்படுத்தலின் ஆகமங்களை ஆதிக்கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். பேதுரு முதலிய அப்போஸ்தலர் இந்த ஆகமங்களுக்கு ஆசிரியர் என்று ஆதிக்கிறிஸ்தவர்களில் சிலர் நம்பினாலும் பரி. யோவானேயன்றி வேறு அப்போஸ்தலர் இவைகளை எழுதினார்கள் என்பதற்கு அத்தாட்சி இல்லை. ஆயினும் அப்போஸ்தலனாகிய யோவானே இதை எழுதினான் என்பதற்கும் போதிய அத்தாட்சி இல்லை. ஆகவே தற்காலத்து வேதசாஸ்திரிகளில் சிலர் அப்போஸ்தலனாகிய யோவான் இதற்கு ஆசிரியன் என்றும், வேறு சிலர் மூப்பனாகிய யோவான் இதை எழுதினான் என்றும் சொல்லுகிறார்கள். மூப்பனாகிய யோவானைப்பற்றி நமக்கு விபரமாய் ஒன்றுந் தெரியாது. இந்நூலை ஆராய்ச்சி செய்யும்போது, இதற்கும் பரி. யோவான் எழுதின சுவிசேஷம் நிருபங்கள் என்னும் நூல்களுக்கும் பாஷைநடையில் பல பேதங்கள் உண்டு என்று நாம் சொல்லவேண்டுமானாலும், பரி. யோவான் தன் நடுப்பிராயத்தில் வெளிப்படுத்தின விசேஷத்தையும் நிருபங்களையும், முதிர்வயதில் சுவிசேஷத்தையும் எழுதினதினால் இவ்வேறுபாடு தோன்றினதுபோலும்.

மேலும் இந்த நூலாசிரியன் இன்னான் என்று நமக்குச் சுத்தமாய்த் தெரியாததினிமித்தம் நமக்குக் குறைவில்லை. ஏனெனில் இந்நூலாசிரியனது பெயரல்ல, இதில் எழுதப்பெற்ற விஷயமே நமக்கு விசேஷம்.

2. சபையின் அபிப்பிராயம்.

சகல கிறிஸ்தவர்களும் அங்கிகரிக்கத்தக்க வேதாகம நூலட்டவணையில் இந்நூலைச் சேர்க்கலாமோ சேர்க்கலாகாதோ என்பதைப்பற்றி ஆதிக்கிறிஸ்தவர்களுக்குக் கொஞ்சம் சந்தேகம் இருந்தது. ஆனால் கி—பி. 150-ம் வருஷத்துக்குள்ளே இந்த ஆகமம் சகல கிறிஸ்தவர்களுக்கும் நன்றாய்த் தெரிந்திருந்தது என்றும், பரி. யோவானே இதை எழுதினதாக அவர்கள் அபிப்பிராயங்கொண்டிருந்தார்கள் என்றும் அறிகிறோம். பிந்தின காலத்து வேதசாஸ்திரிகளில் சிலர் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் தற்காலத்து வேதசாஸ்திரிகளில் பெரும்பாலோர் பரி. யோவானே இதின் ஆக்கியோன் என்று நம்பி இதை வேதாகமமாக அங்கிகரிக்கலாம் என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

3. காலம்.

கி—பி. 64-ம் ஆண்டில் நேரோ ராயன் கிறிஸ்தவர்களை மகா பயங்கரமாய் உபத்திரவப்படுத்தியபொழுது, அத்துன்பங்களில் அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்படி பரி. யோவான் இந்நூலை எழுதினான் என்று தோன்றுகிறது. பிறகு கி—பி. 81-ம் ஆண்டு முதல் 96-ம் ஆண்டு மட்டும் தொமித்தியான் என்னும் ராயன் மறுபடியும் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தும்பொழுது அவர்களுக்குப் புத்திபோதனைகளும் ஆறுதலும் சொல்லும்படி இந்த நூலைத் திரும்பவும் பிரசுரம் பண்ணினதாகத் தெரிகிறது. ஆகவே இந்நூல் முதலாவது கி—பி. 64-ம் ஆண்டில் இயற்றப்பட்டு, ஏறக்குறைய 90-ம் ஆண்டில் திரும்பவும் பிரசுரமாக்கப்பட்டது என்று நினைக்கிறதற்கு இடம் உண்டு.

4. பொருள் அட்டவணை.

1 அதி. முகவுரை. இயேசு யோவானுக்கு அருளிய தரிசனம்.

2–3 அதி. சின்ன ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு எழுதிய நிருபங்கள். இவைகளில் அன்புக்குறைவு, மரணத்தின்மேல் ஜெயம், வேசித்தனம், சோதனை, உபத்திரவம், பொறுமை, முதலியவற்றைக்குறித்து எச்சரிப்புகள் உண்டு.

4–7 அதி. உபத்திரவமும் துன்பமும். இயேசு மகிமையில் தோன்றி, முத்திரையிட்ட ஆகமத்தை எடுத்து, ஸ்தோத்திரிக்கப்பட்டவராய், புஸ்தகத்தின் மேலுள்ள ஏழு முத்திரைகளை உடைக்கிறார். முத்திரையை உடைக்கும்பொழுது குதிரையின்மேல் ஏறியிருந்தவர்கள் உலகத்தை நியாயந்தீர்க்கும்படி வெளியேறுகிறார்கள். கொலையுண்ட பரிசுத்தவான்கள் பழிவாங்கும்படி விண்ணப்பஞ்செய்கிறார்கள். பூமியதிர்ச்சி, மெய்க்கிறிஸ்தவர்களுக்கு நெற்றியிலே முத்திரையிடல்.

8–14 அதி. மேசியா தீமையோடு செய்த போர். ஏழு தூதர்கள் எக்காளங்களைத் தொனித்து, பூமியின்மேல் வரும் நியாயத்தீர்ப்புக்களைச் சொல்லுகிறார்கள். நக்ஷத்திரம் விழுதல். வெட்டுக்கிளி வருதல். குதிரை வீரர் படையெடுத்தல். தூதன் சிறு புஸ்தகத்தை எடுத்து இறங்கி வருதல். ஏழு இடி முழக்கம். தேவாலயத்தை அளந்துபார்த்தல். இரண்டாம் பூமியதிர்ச்சி. ஏழாம் தூதன் எக்காளம் தொனித்தல். மேசியா ராஜ்யத்தின் வருகை. உடன்படிக்கைப்பெட்டி தரிசனமாய்த் தோன்றுதல். ஸ்திரீயும் வலுசர்ப்பமும். சமுத்திரத்தினின்று இன்னொரு மிருகம் வருதல். (இம்மிருகம் ரோம ராஜ்யம்.) மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் செய்த ஊழியம். மூன்று தூதர் விளம்பரம் செய்தல். நியாயாதிபதி வருதல்.

15–20 அதி. மேசியாவின் ஜெயம். ஏழு தூதர்கள் தேவாலயத்தில் தோன்றுதல். அவர்கள் தேவகோபாக்கினையால் நிறைந்த ஏழு பொற்கலசங்களை எடுத்து அவைகளைப் பூமியின்மேல் ஊற்றினதினால், அதற்கு நியாயத்தீர்ப்பு ஏழுவிதமாய் உண்டாதல். பாபிலோன் என்னும் ரோமராஜ்யத்தின் மேன்மையும் துன்மார்க்கமும். ரோமராஜ்யமாகிய மிருகம் சபைக்குக் காட்டின விரோதம். அம்மிருகத்தின் அழிவு அதினிமித்தம் மூப்பர் முதலியவர்கள் வானலோகத்தில் செய்த ஸ்தோத்திரம். பரிசுத்த எருசலேமின் மேன்மை. ஆட்டுக்குட்டியானவர் தம் மனையாட்டியாகிய புதிய எருசலேமை ஏற்றுக்கொள்ளுமுன் மிருகத்தோடு கடைசியாய்ச் சண்டைசெய்து ஜெயம்பெற்று, கள்ளத்தீர்க்கதரிசி, மிருகம், வலுசர்ப்பம், ஆகிய கிறிஸ்தவ சபையின் விரோதிகள் யாவர்மேலும் வெற்றிசிறந்து விளங்குகிறார்.

ஆயிர வருஷக்காலம் கிறிஸ்தவ சபை அடையும் சுகக்ஷேமம்.

$21^{1}$–$22^{5}$. மேசியா செய்த நியாயத்தீர்ப்பு. அவருடைய ஆளுகை. புது ராஜ்யம். அதன் க்ஷேமம். புதிய எருசலேமின் மேன்மை. அதிலிருக்கிறவர்களின் பாக்கியம்.

$22^{20-21}$. முடிவுரை.

5. இந்நூலின் வியார்த்தி.

வேதசாஸ்திரிகள் தானியேலின் ஆகமத்தை எப்படிப் பலவிதமாய் வியாக்கியானம் பண்ணுகிறார்களோ அப்படியே வெளிப்படுத்தின விசேஷத்துக்கும் பலவித வியாக்கியானங்கள் செய்திருக்கிறார்கள். இந்த ஆகமம் வருங்காலத்து விஷயங்களைக் குறித்துச் சொல்லுகிறதென்று சிலர் நினைக்கிறார்கள். இவர்கள் பல நூற்றாண்டுகளில் நிகழும் சம்பவங்களைப்பார்த்து இவற்றை வெளிப்படுத்தின விசேஷம் முன்னறிவிக்கிறதென்று சொல்லுகிறார்கள். ஆனால் இவர்கள் இவ்விதமாய் முன்னறிவிப்பதாகக் கூறிய வசனங்களுக்கு வெவ்வேறு நூற்றாண்டுகளில் வெவ்வேறு அருத்தம் சொன்னதினால் இவர்கள் செய்த வியாக்கியானத்தைக் குறித்துச் சந்தேகம் இருக்கலாம். வேறு சிலர் நாம் இந்நூல் எழுதப்பட்ட காலத்தைத் திட்டமாய் அறிந்திருந்தால் அக்காலத்தில் ரோம ராயன் கிறிஸ்தவசபைக்கு உண்டாக்கின உபத்திரவத்தின் விபரத்தை அறிந்து இந்த நூலுக்கு வியாக்கியானம் சொல்லக்கூடும் என்றும், அவ்வித விபரம் நமக்குத் தெரியாததினாலே அதன் அர்த்தமும் நமக்குத் தெரியவில்லை என்றும், ஆகையால் இதற்கு வியாக்கியானம் சொல்வது பிரயோஜனமற்ற காரியம் என்றும் கூறுவார்கள்.

தீர்மானமாய்ச் சொல்லவேண்டுமானால் இந்த ஆகமத்தை எழுதினவன் கிறிஸ்தவ சபைக்கும் ரோம ராஜாங்கத்துக்கும் நேரிடப்போகிற விஷயங்களைப்பற்றிப் பேசினதும் அல்லாமல் இயேசுவின் திருநாமத்துக்காகக் கிறிஸ்தவர்கள் அனுபவிக்கவேண்டிய துன்பங்களைக்குறித்து உரைத்து, அவர்கள் அந்தக்காலத்தில் வழக்கமாய்க் கையாடவேண்டிய உண்மை, பொறுமை, தைரியம், நல் நம்பிக்கை முதலிய குணங்களைப்பற்றியும் கூறி, கொடூரமான ரோம ராஜ்யத்

துக்கு மாத்திரம் அல்ல, நீதி நியாயத்துக்கு விரோதமாய் நடந்த எந்த ராஜ்யத்துக்கும் சபைக்கும் ஆளுக்கும் நேரிடும் தண்டனையை உவமையாய்ச் சொல்லி, தன்காலத்தில் இருக்கிறவர்களிடத்தில் மட்டும் அல்ல, சர்வகாலங்களிலும் சகல கிறிஸ்தவர்களிடத்திலும் பக்தி விருத்தியை உண்டாக்கும்படி புத்திமதிகளையும் வாக்குத்தத்தங்களையும் எழுதி இவ்விதமாய் எவ்வித துக்ககாலத்திலும் கிறிஸ்தவ சபைக்கு மிகப் பிரயோஜனமாயிருக்கக்கூடிய இந்நூலை இயற்றியிருக்கிறான்.

இந்த நூலில் பல உவமைகள் உண்டு. இவைகளில் சிலவற்றிற்கு நாம் சந்தேகமின்றி அருத்தஞ் சொல்லலாம். சிலவற்றின் அருத்தம் நமக்குத் தெளிவாய் விளங்குகிறதில்லை. வேறு சிலவற்றின் அர்த்தத்தையோ நாம் அறியவே முடியாது. இதை மறந்துவிட்ட அநேக வேதசாஸ்திரிகள் இந்நூலிலுள்ள எந்த வசனத்துக்கும் எந்தப் பதத்துக்கும் அருத்தஞ்சொல்லப் பிரயாசப்படும்பொழுது புத்திக்கு ஏற்காத பல வியாக்கியானங்களை எழுதியிருக்கிறார்கள். இது ஓர் உவமை நூல் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் இதில் தைரியத்துக்கும் பக்தி விருத்திக்கும் உரியவைகளையும் இயேசுகிறிஸ்துவின் ராஜ்ய விருத்தியைக்குறித்துச் சொல்லிய வாக்குத்தத்தங்களையும் நாம் ஏற்றுக்கொண்டு, விசேஷமாய் ஏழு சபைகளுக்கு எழுதின நிருபங்களை ஆராய்ந்து வாசித்தால், ஆதிக்கிறிஸ்தவர்களைப்போல நாம் இதில் பரிசுத்தத்தைத் தேடவும் கிறிஸ்தவ மார்க்கத்தில் பயமின்றி நடக்கவும் பல ஏவுதலைப் பெறுவோம். நமக்குத் துன்ப துக்கங்கள் நேரிடுங்காலத்தில் நாம் இவற்றை வாசித்தால் இயேசுகிறிஸ்து தமக்கு விரோதமாயிருக்கிற சர்வ அதிகாரத்தின்மேலும் அடையவேண்டிய ஜெயத்தைக்குறித்து நாம் அசையாத நல் நம்பிக்கை யுடையவர்களாயிருப்போம்.

வெளிப்படுத்துகிறது. **Reveal**. வெளிப்படுகிறது காண்க.

வெளிப்புறமான வாசல். **'Parbar.'** எருசலேமின் மதிலில் இருந்த 'பர்பார்' வாசல். 1 நாளா $26^{18}$.

வெளிமான். **Roe**. உபா $14^{5}$ உன்.பா $4^{5}$ $7^{3}$. பலெஸ்தீன தேசத்திலுள்ள மான்கள் பலவகை. 'வெளிமான்' என்பதினால் மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய பதம் குறித்த மான் இன்ன வகை என்று தீர்மானமாய்ச் சொல்ல முடியாது.

வெளியரங்கம். **Manifest**. மத் $6^{4}$ மாற் $4^{22}$ அப் $18^{28}$ $20^{20}$ கலா $5^{19}$ எபே $5^{13}$ கொலோ $2^{15}$ வெளி $15^{4}$.

வெளியாக்குகிறது. **Reveal**. வெளிப்படுகிறது காண்க.

வெள்ளம், பிரவாகம். **Flood**.

1. ஜலப்பிரளயம். யோபு $14^{11}$ $22^{16}$ உன்.பா $8^{7}$ மத் $7^{25}$.

2. சத்துருக்கள். 2 சாமு $22^{5}$ சங் $18^{4}$ ஏசா $59^{19}$.

3. துன்பம். சங் $32^{6}$ $69^{2}$ வெளி $12^{15}$.

4. நோவாவின் காலத்தில் உண்டான வெள்ளம். ஆதி 6–9 அதி. சலப்பிரளயம் காண்க.

வெள்ளரிக்காய். **Cucumber**.

பலெஸ்தீனாவில் இருவகை வெள்ளரிக்காய்கள் உண்டு. சாதாரண ஜனங்கள் சாப்பிட்ட வெள்ளரிக்காய் நமது நாட்டிலுள்ள புடலங்காயைப் போன்றது. எண் $11^{5}$. தென் இந்தியாவிலே கம்பங்காடுகளில் கதிர்விடும் சமயத்தில் பட்சிகளினால் சேதமுண்டாகாதபடி காவற் காக்கிறவனுக்காக ஒரு சிறு பந்தல் போட்டு அதின்மேல் சிறு குடிசை போடுவதுபோல, பலெஸ்தீனாவிலுள்ள வெள்ளரித்தோட்டங்களை முள்ளம் பன்றி நரி முதலிய ஜெந்துக்கள் நஷ்டப்படுத்தாதபடி அங்கிருந்து காவற்காக்கிறவனுக்காக ஒரு குடிசை போடுவது வழக்கம். காய் காலம் ஓய்ந்துபோனபின் அந்தக் குடிசை பாழாய்ப்போகும். இதினிமித்தம் ஏசாயா தீர்க்கதரிசி எருசலேமுக்கு வரும் கேவலமான நிலைமையைக் காட்டும்படி, வெள்ளரிக்காய்த் தோட்டத்திலுள்ள குடிசைக்கு அதை ஒப்பிட்டுப்பேசுகிறான். ஏசா $1^{8}$.


சீரியா தேசத்து செம்மறியாடு

வெள்ளாடு. **Goat**.

ஆடுகளும் வெள்ளாடுகளுமே சீரியா தேசத்தாருக்கு விசேஷித்த ஆஸ்தியாயிருந்தது.

நாபாலுக்கு ஆயிரம் வெள்ளாடுகளிருந்தன. ஆதி $13^{5}$ $30^{35}$ 1 சாமு $25^{2}$. அத்தேசத்தில் வெள்ளாடுகளும் செம்மறியாடுகளும் சாதாரணமாய் ஒருமித்து மேய்ந்தபோதிலும் சில சமயங்களில் மேய்ப்பர்கள் இவைகளை வெவ்வேருகப் பிரிப்பதுண்டு. மத் $25^{32}$. வெள்ளாடுகளுக்கு நல்ல மேய்ச்சல் அவசியமில்லை. வனாந்தரங்களிலுங்கூட இவைகள் தங்களுக்கு வேண்டிய இரையைச் சம்பாதிக்கும். இவைகள் மாஞ்செடிகளை மிகுதியாய்ச் சேதப்படுத்திவிடும். வெள்ளாட்டுப் பால் ஆகாரத்திற்கு மிகவும் ஏற்றது. நீதி $27^{27}$. எபிரெயர்கள் வெள்ளாடுகளைப் பலி செலுத்துவார்கள். லேவி $16^{5}$ எண் $28^{17}$ 29 அதி. இதின் மாம்சத்தைப் புசித்தார்கள். ஆதி $27^{9}$. சீரியர் தேசத்து வெள்ளாடு நமது நாட்டு வெள்ளாட்டைப்போன்றது. ஆனால் அவைகளின் காது நீளமாயிருக்கும். (ஆடு காண்க.) இதின் ரோமத்தினால் வஸ்திரங்கள் நெய்வார்கள். ஆசரிப்புக் கூடாரத்திரைகளும் இதினால் செய்யப்பட்டது. யாத் $26^{7}$ $36^{14}$. வெள்ளாட்டுத் தோலினால் தண்ணீர் துருத்திகள் செய்வார்கள்.

வெள்ளாட்டுக்கடா. **A. V. Scapegoat R. V. Azazel.** 'பண்டிகை' என்னும் அதிகாரத்தில் 'பாவ நிவிர்த்தி செய்யும் நாள்' காண்க.

வெள்ளாண்மை. **Husbandry.** விவசாயம் காண்க.

வெள்ளி. **Silver.**

பூர்வீககாலத்தில் சீரியா அசீரியா முதலிய தேசங்களிலிருந்த வியாபாரிகள் வெள்ளிப்பாளங்களையும் நிறைகளையும் உபயோகித்தார்கள். ஆதி $13^{2}$ $13^{15}$. எபிரெயர்கள் ஆசரிப்புக் கூடாரத்தையும் தேவாலயத்தையும் கட்டினபோது வெள்ளி உபயோகிக்கப்பட்டது. யாத் $26^{19}$ 1 நாளா $28^{14}$.

பூரிகைகள், ஆபரணங்கள், பணிமுட்டுகள் முதலியவைகள் வெள்ளியினுற் செய்யப்பட்டன. ஆதி $24^{53}$ $44^{2}$ எண் $7^{13}$. சில சமயங்களில் சிலைகளை வெள்ளித்தகட்டால் மூடுவதுண்டு. உபா $29^{17}$ ஏசா $40^{19}$ தானி $5^{4}$.

எபேசு பட்டணத்திலிருந்த தட்டார்கள் அப்பட்டணத்தின் தேவியாகியதியானாளின் கோவிலைப்போல வெள்ளியினால் சிறியகோவில்களைச் செய்து ஆதாயம் சம்பாதித்தார்கள். அப் $19^{24}$. வெள்ளி விசேஷமாய் அரபியா, தர்சீஸ் என்ற தேசங்களிலிருந்து இறக்குமதியானது. 2 நாளா $9^{14}$ எரே $10^{9}$ எசே $27^{12}$. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் வெள்ளிக்காசு சாதாரணமாய் வழங்கப்பட்டது. லூக் $15^{8}$.

எபிரெயர்களும் ரோமர்களும் பலவிதமான வெள்ளி நாணயங்களை அச்சிட்டார்கள். பணம் காண்க.

சாதாரணமாய் சுரங்கங்களிலிருந்து வெள்ளி எடுக்கப்படும். இவ்விஷயத்தைப்பற்றியும், வெள்ளியைப் புடமிடுதலைப்பற்றியும் பல வசனங்களில் வாசிக்கிறோம். சங் $66^{10}$ நீதி $17^{3}$ $25^{4}$ $27^{21}$ ஏசா $48^{10}$ எரே $6^{30}$ எசே $22^{17}$ சக $13^{9}$ மல் $3^{3}$.

வெள்ளிக்கயிறு. **Silver Cord.** = ஜீவன். பிர $12^{6}$.

வெள்ளிக்காசு. **Kesita.** ஆதி $33^{19}$ யோசு $24^{32}$-ல் சொன்ன 'வெள்ளிக்காசு' என்பதும், யோபு $42^{11}$-ல் சொன்ன 'தங்கக்காசு' என்பதும் ஒரு பாளமேயன்றி காசு அல்ல.

வெள்ளிப்பணம். **A piece of silver. A shekel.** பணம் காண்க.

வெள்ளீயம். **Tin.** தகரம் காண்க.

வெள்ளைக்கல். **White stone.** வெளி $2^{17}$. கல் காண்க.

வெள்ளைத்தடிப்பு. **White rising.** லேவி $13^{2,19}$ $14^{56}$. குஷ்டம் காண்க.

வெள்ளைத்தேமல். **White spot.** லேவி $13^{39}$. குஷ்டம் காண்க.

வெள்ளைப்படர். **Bright spot.** லேவி $13^{2}$ $14^{56}$. குஷ்டம் காண்க.

வெள்ளைப்பூண்டு. **Garlic.** எபிரெயர்கள் வெள்ளைப்பூண்டை அதிகமாய் விரும்பினார்கள். எண் $11^{5}$.

வெள்ளைப்போளம். **Myrrh.** நல் வாசனையுள்ள ஒரு மரத்தின் பிசின். அந்த மரம் அரபிதேசத்திலும் இந்தியா தேசத்திலும் வளரும். மருந்துக்கும் பிரேத அலங்கரிப்புக்கும் உதவும். ஆதி $37^{25}$ $43^{11}$ யாத் $30^{34}$ சங் $45^{8}$ நீதி $7^{17}$ உன்.பா $1^{13}$ $3^{6}$ $4^{6}$ மாற் $15^{23}$ யோவா $19^{39}$.

வெறி. **Drunkenness.** ரோ $13^{13}$ கலா $5^{21}$. மது, மதுபானம் காண்க.

வெறுக்கிறது. **Hate.** யாத் $18^{21}$ உபா $12^{31}$ $16^{22}$ $22^{13}$ 2 சாமு $13^{15}$ சங் $11^{5}$ $45^{7}$ $97^{10}$ $119^{104}$ நீதி $5^{12}$ $6^{16}$ $8^{13}$ $13^{5}$ $15^{27}$ பிர $2^{17}$ ஆமோ $5^{15}$ மத் $16^{24}$ லூக் $14^{26}$ யோவா $12^{25}$ எபி $1^{9}$.

வெறுமை, வெறும். **Emptiness, Empty.** ஆதி $31^{42}$ $37^{24}$ யாத் $3^{21}$ $23^{15}$ $34^{20}$ ரூத் $1^{21}$ யோபு $22^{9}$ சங் $142^{8}$ ஏசா $24^{3}$ மாற் $12^{3}$ லூக் $1^{53}$ பிலி $2^{7}$.

வெறுமை ஆக்குதல். **Kenosis, Emptying.**

இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தில் அவதாரம் செய்தபோது தமது மகிமையைக் குறைத்து, தாழ்மையடைந்த விஷயத்தைக்குறித்துப் பரி. பவுல் இரண்டு வசனங்களில் சொல்லுகிறான். 2 கொரி $8^{9}$ பிலி $2^{7}$.

இவ்விதமாய் மேன்மையைக் குறைப்பதற்குக் கிரேக்கு பாஷையிலே 'வெறுமையாக்குதல்' என்று அர்த்தங்கொண்ட 'கெனேசிஸ்' (*Kenosis*) என்ற பதம் வழங்குகிறது.

வெறுமை ஆக்குதலைப்பற்றிய புதிய ஏற்பாட்டிலே தெளிவும் திட்டமுமான போதனை இல்லாதிருந்தும் அதைப்பற்றிய சில பொதுவான குறிப்புகளுண்டு.

i. இயேசு தமது சுயசித்தத்தினாலும் அதிகாரத்தினாலும் தமது மேலான பதவியை நீக்கி மானிட ரூபம் பூண்டார்.

ii. தாம் இவ்விதமாய்த் தமது தெய்வீக மகிமையைத் தள்ளிவிட்டபோது, அவர் தமது தெய்வீக சுபாவத்தை விட்டுவிடவில்லை. அவர் மனுஷனாயிருந்தபோதும், பராபரவஸ்துவில் ஒரு ஆளாகவே இருந்தார்.

iii. அவர் மானிட அவதாரம் செய்து சகல விஷயத்திலும் மனுஷனாகவே இவ்வுலகத்தில் சஞ்சரித்தகாலத்தில், தமது தெய்வீக தன்மைக்குரிய சர்வ வியாபகம், சர்வ ஞானம், சர்வ வல்லமை ஆகிய இவைகளுக்கு இடங்கொடாமல் சாதாரணமான ஜனங்களைப்போலவே ஜீவித்தார்.

iv. இதினிமித்தம் அவர் அக்காலத்திலிருந்த யூதர்களில் ஒருவரைப்போல் இருந்தார். ஆகையினால் அவர் படிப்படியாக ஞானத்திலும், அக்காலத்து கல்வியிலும் விருத்தியடைந்தார் என்கிற விஷயத்தைப் பற்றியும், அவர் மற்ற யூதர்களைப்போலவே பல காரியங்களில் அபிப்பிராயங் கொண்டார் என்பதைப்பற்றியும், தாம் பட்ப் போகிற பாடுகளை நினைத்து வியாகுலப்பட்டார் என்ற சம்பவத்தைப்பற்றியும் குறித்து நாம் ஆச்சரியப்பட அவசியமில்லை.

v. இப்படியிருக்க அவர் மானிட அவதாரத்தை எடுத்தகாலத்தில் அவர் தமது தெய்வீக சுபாவ லட்சணங்களை முற்றிலும் மறைத்து ஜீவித்தார் என்பதற்கு வேதாகமத்தில் அத்தாட்சியில்லை. கொலோ $1^{17}$ எபி $1^{3}$ காண்க. அவ்வண்ணம் அவர் தமது தெய்வீகத்தை முற்றிலும் வெறுமையாக்கியிருந்தால் அவர் பல அற்புதங்களைச் செய்ததும் மரணத்தை வென்று உயிரோடெழுந்ததும் எப்படி?

vi. ஆகிலும் இயேசு தமது மகிமையை வெறுமையாக்கின விஷயம் மனுஷனுடைய புத்திக்கெட்டாத இரகசியங்களில் ஒன்று என்று நாம் எப்போதும் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

## வே

வேகம். **Swiftness**. யோபு $9^{26}$ பிர $9^{11}$ ஏசா $5^{26}$ $19^{1}$ எரே $2^{23}$.

வேகிறது, வேவிக்கிறது. **Boil**. லேவி $8^{31}$ 1 கொரி $3^{15}$. உவமையாய். 1 கொரி $7^{9}$.

வேசி. **Harlot**. பூர்வீக கானானியர் தாங்கள் வணங்கிய காமதேவிக்காகத் தேவஸ்தலங்களிலே வேசித்தனம் செய்யும்படி பல ஸ்திரீகளை நியமிப்பது வழக்கம். இதினிமித்தம் இந்த ஸ்திரீகளுக்குப் 'பரிசுத்த ஸ்திரீகள்' என்ற பதம் மூலபாஷையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதி $38^{27}$. (தமிழ் வேதாகமத்தில் 'தாசி'.) இவர்கள் 'அந்நிய ஸ்திரீகள்' என்றும் அழைக்கப்படுகிறார்கள். நீதி $6^{24}$ $23^{27}$ 1 இரா $11^{1}$ எஸ்றா $10^{2}$.

இவர்கள் தங்கள் பாட்டுகளினாலே ஆடவரை ஏமாற்றி வசப்படுத்தி அவர்கள் ஆஸ்திகளை அபகரித்துக்கொள்வதோடு சில சமயங்களில் அவர்களைக் கொலைசெய்யும்படி கள்ளர் கையில் அவர்களை ஒப்புக்கொடுப்பார்கள். நீதி $6^{24}$ $7^{22}$ ஏசா $23^{16}$.

தனவான்களான துன்மார்க்கர் இவர்களுக்காக மிகுதியாக திரவியத்தைச் செலவிடுவார்கள். எசே $16^{33}$ $23^{26}$ லூக் $15^{30}$. ஒரு தகப்பன் தன் குமாரத்தியை வேசித்தன மார்க்கத்தில் பிரவேசிக்கிறதற்கு இடம் கொடுப்பது கண்டிக்கப்படுகிறது. லேவி $19^{29}$.

எபிரெயர்களுக்குள்ளே வேசிப்பிள்ளைகள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. உபா $23^{2}$ நியா $11^{1}$ யோவா $8^{41}$. கானானியர்கள் காமதேவியை வணங்கினதும் தங்கள் ஆலயங்களிலே வேசிகளை வைத்திருந்த விஷயமும், எபிரெயர்கள் பாவத்தில் விழுவதற்கு ஏதுவாயிருந்ததாகத் தோன்றுகிறது. ஆமோ $2^{4}$ ஓசி $4^{13}$. ஆகையால் இப்படி வேசித்தனம் செய்வது தகாத காரியமென்றும், விசேஷமாய் ஆசாரியனுடைய குமாரத்தி இந்தத் துன்மார்க்கத்திற்கு முற்றிலும் நீங்

கலாயிருக்கவேண்டுமென்றும் நியாயப்பிரமாணம் கூறுகிறது. லேவி $21^{9}$ உபா $23^{27}$.

புதிய ஏற்பாட்டுக் காலத்திலேயும், கொரிந்து எபேசு முதலிய பட்டணங்களிலிருந்த அந்நிய மதஸ்தர் அகோரமான வேசித்தனம் செய்துவந்த விஷயம் ஆதித்திருச்சபை கிறிஸ்தவர்களுக்கு இடையூறாயிருந்ததாகப் பல வசனங்களில் வாசிக்கிறோம். அப் $15^{20}$ ரோம $1^{24}$ 1 கொரி $6^{9}$ கலா $5^{19}$ வெளி $2^{14}$. அப்போஸ்தலர்கள் தாங்கள் எழுதிய நிருபங்களில் இப்பாவத்தை அடிக்கடி கண்டிக்கிறார்கள்.

வேசிக்கள்ளர். **Whoremongers.** 1 தீமோ $1^{10}$ எபி $13^{4}$.

வேசித்தனம். **Whoredom, Fornication.**

i. ஆதி $38^{24}$ லேவி $19^{29}$ எண் $25^{1}$.

ii. உவமையாய்: விக்கிரகாராதனை. ஏசா $1^{21}$ எசே $16^{17}$ $23^{14}$ ஓசி $4^{11}$ வெளி $19^{2}$. விபசாரம், வேசி காண்க.

வேசிப்பணயம். **Hire of a harlot.** உபா $23^{17}$ எசே $16^{33}$.

வேசிப்பிள்ளை. **Bastard.** உபா $23^{2}$ சக $9^{6}$ எபி $12^{8}$.

வேஷம். **Form.** 2 தீமோ $3^{5}$.

வேட்டை. **Hunting.** ஆதி $10^{9}$ $25^{27}$ $27^{5}$ யோபு $10^{16}$ சங் $140^{11}$ நீதி $6^{26}$ எசே $13^{18}$ எரே $16^{16}$ மீகா $7^{2}$.

வேண்டுதல். **Supplication.** ஆதி $25^{21}$ அப் $1^{14}$ 1 கொரி $4^{13}$ எபே $6^{18}$ பிலி $4^{6}$ 1 தீமோ $2^{1}$ $5^{5}$.



வேதபாரகர்

வேதபாரகர். **Scribes.**

1. பூர்வீக காலத்தில் எகிப்து, பாபிலோன் முதலிய தேசங்களில் படிப்பாளிகள் அபூர்வமாயிருந்தபடியால், இவர்கள் ராஜாக்களுக்கு ஆலோசனைக்காரரும் சம்பிரதிகளும் உக்கிராணக்காரருமாயிருந்து ராஜ்யத்தின் பொக்கிஷம், தீர்வை குடி



வேதபாரகன்

மதிப்பு முதலிய விஷயங்களைக் கவனித்து வந்தார்கள். ஆகையால் இவர்களுக்குக் 'கணக்கு எழுதுகிறவர்கள்' என்று அர்த்தங்கொண்ட எபிரெய பதம் மூலபாஷையில் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் வேதாகமத்திலே சொல்லப்படுகிற எகிப்திய 'ஆளோட்டிகளின்' வேலை கணக்கு எழுதுவதுதான். யாத் $5^{6}$.

எபிரெய ராஜாக்கள் தங்களுக்குக் கீழ் அதிகாரம் செலுத்தும்படி பல கணக்கர்களை ஏற்படுத்துவார்கள். இவர்களில் மிகுதியானவர்கள் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். 1 நாளா $24^{6}$ $27^{32}$ 2 நாளா $34^{13}$. ராஜாவின் பிரதான மந்திரிகளுக்குள்ளே சில சம்பிரதிகளும் இருப்பார்கள். 2 சாமு $8^{17}$ $20^{25}$ 1 இரா $4^{3}$ எரே $36^{16}$. இவர்களில் சிலர் ராஜாங்க வரவு செலவுகளை விசாரிப்பார்கள். 2 இரா $12^{10}$ $22^{3}$.

சமயாசமயத்திலே இவர்கள் ராஜாவுக்காக ஸ்தானாபதிகளாகப் போவார்கள். 2 இரா $18^{17}$ $19^{2}$ $22^{12}$. இவர்களில் சிலர் யுத்த வீரரின் விசாரிப்புக்காரராயிருந்தார்கள். 2 இரா $25^{19}$ 2 நாளா $26^{11}$.

ஏசாயா $33^{18}$-ல் சொல்லப்படும் 'கணக்கன்' என்பது அசீரிய சேனையில் இவ்வித உத்தியோகம் வகித்துவந்தவனைக் குறிக்கிறது.

கற்பலகைகளில் வெட்டப்பட்டிருக்கிற சித்திரங்களில், அசீரிய போர்ச்சேவகர்கள்

தாங்கள் கொன்ற சத்துருக்களின் தலைகளை யும் தாங்கள் கொள்ளையிட்ட பொருளையும் கணக்கு எழுதும் பாவனையை நாம் பார்க்கலாம்.

2. யூதர்கள் சிறையிருப்பிலிருந்தபோது, சங்கீதக்காரர்கள் தீர்க்கதரிசிகள் முதலிய வர்கள் இயற்றிய காவியங்களையும் சரித்திரங் களையும் வாசிக்க விரும்பி வந்தார்கள். ஆத லால், பாபிலோனிலே இந்த வேதநூல்களை இயற்றினவர்களுக்கு அதிக மேன்மை கிடைத்தது.

யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தபின்பு, நியாயப்பிரமாணத்தை அறிந்து, நூல்களை இயற்றத் திராணியுள்ளவர் களுக்கு யூதருக்குள்ளே மிகவும் அதிகார மும் செல்வாக்கும் இருந்தது. இக்கால முதல் இவர்கள் விசேஷமாய் 'வேதபாரகர்' என்று அழைக்கப்படுகிறார்கள். நெகேமி யாவின் சீர்திருத்தகாலத்தில் எருசலேமி லுள்ள வேதபாரகர் ஜனங்களுக்கு நியாயப் பிரமாணத்தைப் போதித்தார்கள். எஸ்றா ஒரு வேதபாரகனாயிருந்தான். எஸ்றா 7$^{6}$ நெகே 8$^{1}$.

பிறகு இரண்டு நூற்றாண்டுகளாக இவர் களைப்பற்றிய விசேஷம் திட்டமாய்த் தெரிய வில்லை. ஆயினும் இவர்கள் அக்காலத்தில் பழைய ஏற்பாட்டில் நமக்குத் தெரிந்த ஆக மங்களைச் சேர்த்து அவைகளைப் பிரசுர மாக்கி ஜெப ஆலயங்களிலே அவைகளை வாசிக்கப்படும்படி செய்துவந்தார்கள். ஏறக் குறைய கி-மு. 200-ம் ஆு முதல் இவர்கள் நியாயப்பிரமாணத்தை வியாக்கியானம் செ ய்து, பல கட்டுப்பாடுகளையும் சடங்காசாரங் களையும் ஏற்படுத்தி இந்தச் சடங்காசாரங் கள் நியாயப்பிரமாணத்தைப்போலவே அதி காரமுடையவை என்று போதித்தார்கள். மத் 15$^{1}$. இவர்களில் சிலர் பரிசேயர். மத் 12$^{38}$ மாற் 2$^{16}$ 7$^{5}$ லூக் 6$^{7}$. சிலர் சது சேயர்களாய் இருந்தார்கள் என்று நினைக்க வேண்டும்.

இவர்களில் சிலர் முதலிலே இயேசுவின் போதகத்திற்குச் சார்புள்ளவர்களாயிருந்தார் கள். மத் 8$^{19}$ மாற் 12$^{28}$.

மற்ற அநேகரோ அவருக்கு விரோதமா யிருந்தார்கள். மாற் 3$^{22}$ 11$^{18}$ 14$^{1}$ 15$^{1}$.

இவர்கள் சடங்காசாரத்தை எப்போதும் மேன்மைபடுத்தி வந்தார்கள். இதினிமித் தம் இயேசு இவர்களைக் கண்டிக்க நேரிட் டது. மத் 5$^{20}$ 23$^{1}$.

3. ஒரு வாலிபன் வேதபாரகனாயிருக்க விரும்பினால், அவன் பல வருஷக்காலம் ஒரு பெரிய நியாயசாஸ்திரியின் சீஷனா யிருக்கவேண்டும். அப்படியே பவுல் கமாலி யேலிடம் நியாயசாஸ்திரத்தைக் கற்றான். இவ்விதமாய்ச் சன்மார்க்கம், தத்துவம், நியா யப்பிரமாணம் முதலிய அறிவில், தேர்ச்சி யை அடைந்தவன்தான்.

ஏறக்குறைய 30 பிராயமாகும்போது சீஷன் வேதபாரகரின் சங்கத்தில் பரிசோதிக் கப்பட்டு, தேறினவனாக காணப்படும்பட்சத் தில், அவர்கள் அவன்மேல் கைகளை வைத்து 'வேதபாரகரின் நாற்காலிக்கு'ப் போக அனு மதி அளித்து அவன் கையிலே எழுத்துப் பலகையையும் திறவுகோலையும் கொடுப்பார் கள். லூக் 11$^{52}$. அந்தத் திறவுகோல் இவன் நியாயப்பிரமாணத்திலுள்ள மறைவானவை களின் அர்த்தத்தைத் 'திறக்கும்படி,' அல்லது தெரிவிக்கும்படி, அதிகாரம் பெற்றவன் என் பதற்கு அடையாளம். மத் 16$^{19}$ காண்க. இதற் குப்பின்பு இவன் வேதாகமங்களையும் நிரு பங்களையும் பெயர்த்தெழுதி ஜீவனம் பண் ணலாம். அல்லது நியாயப்பிரமாணம் முத லிய விஷயங்களில் பாண்டித்தியமடைந்து, கமாலியேல் முதலிய சாஸ்திரிமாரைப் போல் மேன்மைபெற்று மாணக்கருக்குக் குருவாக இருக்கவும் இடமுண்டு. இவ்விதக் குருக்கள் நியாயப்பிரமாண வியாக்கியானங் களைக்குறித்து உபந்நியாசம் செய்து, சன் மார்க்கத்தைப்பற்றி ஜனங்களுக்குப் போதிப் பார்கள். நியாய விசாரணையில் தீர்ப்புச்செய் வதும், குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிப் பதும் இவர்களுடைய ஊழியத்தின் ஓர் பாகமே. யூதருக்குள்ளே இவர்கள் போத கர்களாயும், நியாயாதிபதிகளாயும் இருந்தார் கள். தங்கள் ஊழியத்திற்காகச் சம்பளம் பெறாவிட்டாலும், அவர்களுடைய சீஷரிட மிருந்து தங்கள் சவரட்சணைக்காகக் காணிக் கைகளைப்பெற்றுக்கொள்ளலாம். முற்காலத் துத் தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்குப் போ தனைசெய்த வண்ணமாக, இயேசுவின்காலத் தில் வேதபாரகர் போதகர்களாயிருந்தார்கள், ஆனால் இவர்கள் சடங்காசாரத்தையே விசே ஷமாக எண்ணி, இயேசுவும் யோவான் ஸ்நானகனும் போதித்த ஆவிக்குரிய போத னையைத் தள்ளிவிட்டார்கள். மேலும் மே சியாவாகிய தாம் பாடுபட்டு மரணமடைய வேண்டும் என்று அவர் போதித்தவிஷயம், மேசியா எப்பொழுதும் ஜெயமுள்ளவரும் மேன்மையுடையவருமாயிருக்கிறார் என்ற அவர்களுடைய எண்ணத்திற்கு முற்றிலும் நேர்விரோதமாயிருந்தது. இயேசு மேசியா அல்ல என்று தீர்மானித்ததுடன், அவரைக் கொலை செய்வதற்கும் அனுசரணையாயிருந் தார்கள்.

இயேசுவின் காலத்திற்குப் பின்னும் 200 வருஷக்காலங்களாக வேதபாரகருக்கு யூதர்களுக்குள்ளே கண்ணியம் கிடைத்தது.

வேதப் புரட்டன், வேதப் புரட்டு. **Heretic. Heresy.** தீத் $3^{10}$ 2 பேது $2^{1}$. சமயம், பிரிவினை, மார்க்கபேதம் காண்க.

வேதம், **Law, Scripture.** = நியாயப் பிரமாணம். சங் 119 ஏசா $1^{10}$ $5^{24}$ எரே $18^{18}$ சக $7^{12}$ கலா $3^{22}$. 'வேதப்பிரமாணம்.' யோபு $22^{22}$. வேதாகமம் காண்க.

புதிய ஏற்பாட்டில் 'வேதம்' ரோ. $1^{2}$.

வேதனை. **Punishment.** யாத் $3^{7}$ ஏசா $13^{8}$ லூக் $16^{23}$. = உபத்திரவம். வெளி $9^{5}$. = வியாதி. மாற் $5^{29}$. ஆக்கினை காண்க.

வேதாகமம், சத்தியவேதம். **Bible.** 'வேதம்' என்ற பதம், கடவுள் தம்மை வெளிப்படுத்திய சரித்திரத்தை அடக்கிய புஸ்தகத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'வேதாகமம்', 'சத்தியவேதம்', 'விவிலியவேதம்', என்னும் இந்தப் பதங்களுக்கும் 'வேதம்' என்பதற்கும் ஒரே அர்த்தமாம். வேதாகமத்திலே பற்பலவிதமான 66 புஸ்தகங்கள் உண்டு. ஒவ்வொரு புஸ்தகத்தின் ஆக்கியோன், காலம், பொருள் முதலியவைகளை இந்த அகராதியில் அததற்கேற்ற இடத்திலே அறிந்துகொள்ளலாம். இந்த நிபந்தத்திலே, 'சத்தியவேதம்' வெவ்வேறான ஆக்கியோன்களால் எழுதப்பட்ட பலவிதமான பங்குகள் சேர்க்கப்பட்டிருக்கிற ஒரே புஸ்தகமாக எண்ணி, அதன் பங்குகள் எப்படிச் சேர்க்கப்பட்டன என்பதையும், அதன் இலட்சணங்களையும், நோக்கத்தையும் பரிசோதிக்கப் போகிறோம்.

நமது வேதாகமத்திலிருக்கிற 66 புஸ்தகங்களில், 39 புஸ்தகங்கள் பழைய ஏற்பாட்டையும், மற்ற 27 புஸ்தகங்கள் புதிய ஏற்பாட்டையும் அடக்கியிருக்கின்றன. பழைய ஏற்பாட்டுப் புஸ்தகங்கள் முதன்முதல் எழுதி சேர்க்கப்பட்டு, யூதசபையிலே யூதர்களுடைய வேதமாக இருக்கின்றன. கிறிஸ்தவசபை இவைகளை ஏற்றுக்கொண்டு, இவைகளோடே முதலாம் நூற்றாண்டில், கிறிஸ்தவர்களால் எழுதப்பட்ட மற்ற 27 புஸ்தகங்களாகிய புதிய ஏற்பாட்டையுஞ் சேர்த்து, வேதத்தை முழுவதும் பூரணப்படுத்ினது. ஆகையால் ஒவ்வொரு ஏற்பாட்டையுந் தனித்தனியே ஆராய்ந்தபின்பு வேதம் முழுவதையுங் கவனிப்போமாக.

I. பழைய ஏற்பாடு.

1. அதன் அடக்கம்.

எபிரெய பாஷையில் எழுதப்பட்ட யூத வேதத்திலே, பழைய ஏற்பாட்டிலுள்ள புஸ்தகங்கள் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கிறதாகக் காண்போம் அவையாவன:

(i) தோரு (*Torah*) என்னும் நியாயப் பிரமாணம். இதில் சேர்ந்த ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் என்னும் ஐந்து புஸ்தகங்களும் மோசேயினால்தான் எழுதப்பட்டதாக யூதர்கள் நம்பினார்கள்.

(ii) நபியீம் (*Nebiim*) என்னும் எட்டுத் தீர்க்கதரிசன புஸ்தகங்களும். வேதத்திலிருக்கிற புஸ்தகங்கள் 8 சுருள்களில் எழுதப்பட்டபடியினால், தீர்க்கதரிசன புஸ்தகங்கள் 8 புஸ்தகங்களாக எண்ணப்பட்டன.

(*a*) முந்திய தீர்க்கதரிசிகள். யோசுவா, நியாயாதிபதிகள், 1 சாமுவேல், 2 சாமுவேல், 1 ராஜாக்கள், 2 ராஜாக்கள், இவைகள் சரித்திரங்களானாலும், இஸ்ரவேலரின் சரித்திரத்தின் மூலம் விளங்கின கடவுளுடைய சித்தத்தை விரித்துரைக்கிறதினால், இவைகள் தீர்க்கதரிசனங்களென்ற பெயர் பெற்றன.

(*b*) பிந்திய தீர்க்கதரிசிகள். ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா.

(iii) கெதூபீம் (*Kethūbim*) என்னும் 'எழுதப்பட்டவை.' அதாவது, மற்றும் எழுதப்பட்ட நூல்களாகிய நானாவிதமான புஸ்தகங்களும்.

(*a*) சங்கீதம், நீதிமொழிகள், யோபு என்ற மூன்றும் செய்யுள் நடையான புஸ்தகங்கள்.

(*b*) அவ்வவற்றுக்குரிய ஐந்து பிரதான மான பண்டிகைகளில் வாசிக்கப்பட்ட 'மெக்கில்லோத்' (*Megilloth*) அதாவது சுருள்கள் என்னும் உன்னதப்பாட்டு, ரூத், பிரசங்கி, புலம்பல், எஸ்தர் ஆகிய ஐந்து புஸ்தகங்களும்.

(*c*) தானியேல், நாளாகமம், நெகேமியா, எஸ்றா.

இந்த ஒழுங்கின்படி மூன்று பிரிவுகளிலும் புஸ்தகங்கள் ஒன்றோடொன்றாக சேர்க்கப்பட்ட பழைய ஏற்பாடு இவ்விதமாய் இயற்றப்பட்டதாதலால், இந்த ஒழுங்கு விசேஷமானது. யூதர்கள் பாரம்பரையாய், தோரு தேவாலயத்திலிருந்த மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும், தீர்க்கதரிசனங்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கும், கெதுபீம் ஆலயத்தின் பிராகாரத்துக்கும் ஒப்பாயிருந்தன என்று சொன்னார்கள்.

இந்தப் புஸ்தகங்கள் பொருளிலும் விஷயத்திலும் பின்வரும் விதமாய் வகைப்படுத்தலாம்:

(1) சரித்திர புஸ்தகங்கள்: ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம், யோசுவா, நியாயாதிபதிகள், ரூத், 1 சாமுவேல், 2 சாமுவேல், 1 இராஜாக்கள், 2 இராஜாக்கள், 1 நாளாகமம், 2 நாளாகமம், எஸ்றா, நெகேமியா, எஸ்தர்.

(2) செய்யுளும் நாடகமும்: சங்கீதம், யோபு, யோனா, உன்னதப்பாட்டு, புலம்பல்.

(3) நீதியாகமங்கள்: நீதிமொழிகள், பிரசங்கி.

(4) தீர்க்கதரிசன புஸ்தகங்கள்: ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா.

(5) வெளிப்படுத்தலுக்குரிய புஸ்தகங்கள் தானியேல், எசேக்கியேல் 40–48 அதி சகரியா 9–14 அதி.

2. பழைய ஏற்பாட்டில் புஸ்தகங்கள் சேர்க்கப்பட்ட விதம். (*Canon of the Old Testament.*)

பழைய ஏற்பாட்டுப் புஸ்தகங்கள் எழுதப்பட்டு எப்படிச் சேர்க்கப்பட்டன என்பதையும், இந்த புஸ்தகங்கள் விசேஷித்த பிரகாரமாய்க் கடவுளிடத்திலிருந்து வந்தவைகளாய் எப்படி அதிகாரம் பெற்றன என்பதையும், இந்தப் புஸ்தகங்களைப்போன்றமற்றப் புஸ்தகங்கள் அநேகம் ஏற்றுக்கொள்ளப்படாமல் ஏன் தள்ளப்பட்டன என்பதையுங் குறித்துச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இந்தப் புஸ்தகங்கள், பங்கு பங்காகக் காலத்துக்குக் காலம், படிப்படியாய் அதிகாரம்பெற்ற புஸ்தகங்களென்று அறியப்பட்டுவந்தன. பழைய ஏற்பாட்டின் மூன்று பிரிவுகளும், கிரமங்கிரமமாகவெவ்வேறான காலங்களிலும் நிறைவேற்றம் பெற்றன.

i. இந்தப் புஸ்தகங்கள் ஒரேகாலத்திலே, ஒரே ஆக்கியோனால் எழுதப்படவில்லையென்று அறிவோம். அவைகளிற் சில பூர்வீக பாட்டுகள். எண் $21^{14-15,17,18,27-30}$. ஆதி $4^{23,24}$. அவைகளில் சிறு சரித்திரங்களும் பல பாரம்பரியமாய் வாய்மொழியினால் வந்து, கடைசியாக நூல்களில் எழுதப்பட்டனவை. மோசேயின் காலம்முதல், நியாயப்பிரமாணங்கள் பிரசித்தப்பட்டுப் பங்கு பங்காக எழுதிவைக்கப்பட்டன. பிற்பாடு, சில ஆக்கியோன்கள் இந்தக் கையெழுத்துப் பிரதிகளை ஒழுங்குபண்ணிச் சேர்த்து, சில புஸ்தகங்களை முடித்தார்கள். ஆதியாகமம், யாத்திராகமம், எண்ணாகமம், உபாகமம் முதலியவை காண்க. இந்த வேலை காலக்கிரமத்திலே செய்யப்பட்டு, எஸ்றாவினுடைய காலத்துக்குமுன் முடிக்கப்பட்டது. (கி–மு. 450.) இப்படியே பழைய ஏற்பாட்டிலுள்ள 'தோரா' என்னும் முதல் ஐந்து புஸ்தகங்கள் இயற்றப்பட்டன. ஆதிமுதல் இந்தப் பாரம்பரியங்களை யூதர்கள் மதித்துவந்தார்கள். விசேஷமாய் நியாயப்பிரமாணம் முழுவதும் மோசேயினால் எழுதப்படாமலிருந்தாலும், அது அவருடைய பெயர் பெற்றதினாலும், அவர் கடவுளிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட மூலப் பிரமாணத்தைக் கொடுத்ததினாலும், யூதர்கள் 'தோரா' என்னும் நூலை அதிக அதிகாரமுள்ளதாக எண்ணினார்கள்.

இப்படி, யோசியாராஜாவினுடைய காலத்திலே, பிரதான ஆசாரியனாகிய இல்க்கியா, தேவாலயத்திலே நியாயப்பிரமாணம் அடங்கிய ஓர் புஸ்தகச்சுருளைக் கண்டுபிடித்தபோது, யோசியா ஜனங்களை அழைத்து, அந்தப் புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்கு வாசித்து, அவைகளை நிறைவேற்ற உடன்படிக்கை பண்ண, ஜனங்களும் உடன்படிக்கைக்கு உட்பட்டார்கள் என்று சொல்லியிருக்கிறது. 2 இரா 22, 23 அதி. இவ்விதமாய் கி–மு. 621–ம் ஆண்டில் அதிகாரம் அடைந்த புஸ்தகம் உபாகமமே.

கி–மு. 458–ல் எஸ்றாவும், கி–மு 444–ல் நெகேமியாவும் பாபிலோனிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள். பாபிலோனிலே 'தோரா' என்னும் ஐந்து புஸ்தகங்களை எஸ்றா எருசலேமுக்குக் கொண்டுவந்தான் என்று தோன்றுகிறது. நெகேமியா வந்தபோது, இவைகளை எஸ்றா ஜனங்களுக்கு முன்பாக வாசித்து, கடவுளுடைய நியாயப்பிரமாணத்தின் அர்த்தத்தைக் கொடுத்தான். நெகே $8^{1-12}$. ஜனங்கள் அதைக்கேட்டு ஏற்றுக்கொண்டு, அதின்படி நடக்கச் சத்தியம் பண்ணினதினால் (நெகே $9^{38}$ $10^{29}$) அவர்கள் அந்த நியாயப்பிரமாணம் கடவுளுடையதாக மதிக்கப்பட்டதென்பதைச் சாதித்தார்கள். இப்படியே, யூதவேதத்தில், முதலாம்பிரிவு அதிகாரத்தைப் பெற்றது.

(ii) கி–மு. 200 ஆண்டுக்குமுன், 'தோரா' என்னும் புஸ்தகங்களோடே,

'தீர்க்கதரிசனங்கள்' என்னும் மற்ற எட்டுச்சுருள்கள் சேர்க்கப்பட்டிருந்தன. அவைகள் மேலே சொல்லியிருக்கிற புஸ்தகங்கள் (I. 1 காண்க). யூதர்கள் பாபிலோன் தேசத்திலிருந்தகாலத்திலே, வேதபாரகர் முன்னே எழுதப்பட்ட சரித்திரங்களை எடுத்துச் சேர்த்துக்கொண்டு, 'முந்தின தீர்க்கதரிசனங்கள்' என்னப்பட்ட நாலு சரித்திர புஸ்தகங்களை இயற்றினார்களென்று உத்தேசிக்கலாம். ஆமோஸ் காலம்வரையும், தீர்க்கதரிசிகள் தாங்கள் உரைத்த தீர்க்கதரிசனங்களை எழுதாமல், பிரசங்கத்தில் மாத்திரமே அவைகளை ஜனங்களுக்குத் தெரிவித்தார்கள். அக்காலத்துக்குப் பிறகு தீர்க்கதரிசிகள் அநேக தீர்க்கதரிசனங்களெழுதி, தீர்க்கதரிசன புஸ்தகங்களாகச் சேர்த்தார்கள். மல்கியா என்பவன் (கி-மு. 460) கடைசியான தீர்க்கதரிசி என்பது தோன்றுகிறது. சங் 74[9]. தீர்க்கதரிசன வரம் ஒழிந்தபிற்பாடு, ஜனங்கள் எழுதப்பட்டிருந்த தீர்க்கதரிசனங்களை அதிகமாய் மதித்துவந்தார்கள். 400-ம் ௵த்துக்கும் 200-ம் ௵த்துக்கு மிடையிலே, இந்த எட்டுப் புஸ்தகங்களும் நல்ல அதிகாரத்தை அடைந்து, நியாயப்பிரமாணத்தைப்போல் கடவுளுடைய சித்தத்தைப் பூரணமாய் அறிவிக்கக்கூடிய ஆகமங்களாக எண்ணப்பட்டன. சீராக்கு என்பவன் ஏறக்குறைய கி-மு. 180-ம் ௵த்தில் ஞானம் என்னும் புஸ்தகத்தை எழுதி, நியாயப்பிரமாணமும் சரித்திரங்களும் தீர்க்கதரிசனங்களுமாகிய இவைகளிலிருந்து வசனங்களெடுத்துக் காட்டுகிறதினால், இவைகளெல்லாம் அவனுக்குத் தெரிந்தது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். அவன் பேரன் கி-மு. 132-ம் ௵த்தில் அந்தப் புஸ்தகத்துக்கு முகவுரை எழுதி, அதில் இரண்டுதடவை 'நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களும், மற்றவைகளும்' என்று சொல்வது மாத்திரமல்ல, 'அநேக பெரிய காரியங்கள், எங்களுக்கு நியாயப்பிரமாணத்தினாலும் தீர்க்கதரிசிகளாலும் அவர்களைப் பின்பற்றின மற்றவர்களாலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன' என்றுஞ் சொல்லுகிறான். அவன் காலத்துக்குமுன்னே, தீர்க்கதரிசன புஸ்தகங்களெட்டும், நியாயப்பிரமாண புஸ்தகங்களோடே ஒரே வேதாகமத்தில் சேர்க்கப்பட்டிருந்தனவென்று காண்கிறோம்.

(iii) சீராக்கும் அவன் பேரனும் எழுதின வசனங்களால் யூதர்கள் நியாயப்பிரமாண புஸ்தகங்களையும், தீர்க்கதரிசன புஸ்தகங்களையுமல்லாமல், வேறு சில புஸ்தகங்களையும் மதித்து, அவைகள் வேதாகமங்களோடே சேர்க்கப்படத்தக்கவைகளாக எண்ணினார்களென்று கண்டிருக்கிறோம். சீராக்கின் பேரன் 'மற்றவைகள்' என்று குறித்த புஸ்தகங்கள் இன்னவையென்று திட்டமாய்ச் சொல்லமுடியாது. சீராக்கு தன் புஸ்தகத்திலே கீர்த்தியடைந்த பெரியோர்கள் சிலரைக்குறித்துச் சொல்லுகிறதினால், நாளாகமம், எஸ்றா, நெகேமியா என்னும் இம்மூன்று புஸ்தகங்களை நன்றாய் அறிந்தான் என்றும்; வேறு வசனங்களில் நீதிமொழிகள் என்னும் புஸ்தகத்துக்குப்பின் அவனுடைய புஸ்தகம் எழுதப்பட்டது என்றும் நிச்சயமாய் அறியலாம். கீதங்கள் தேவாலயத்தில் பாடகரால் பாடப்பட்டனவாதலால், அவைகள் அடங்கிய சங்கீதமென்னும் புஸ்தகம் யூதருக்குள் அதிக அதிகாரத்தையும் மதிப்பையும் பெற்றது. மற்றப் புஸ்தகங்கள் எவ்விதமாயும் எக்காலத்திலும் வேதாகம புஸ்தகங்களாக எண்ணப்பட்டவைகளானதைக் குறித்து அறிய வழியில்லை. எஸ்தர், உன்னதப்பாட்டு, பிரசங்கி என்பவைகளிலிருந்து புதிய ஏற்பாட்டிலுள்ள ஆசிரியர்கள் ஒருவசனமுமெடுத்துக் காட்டவில்லை. கி-பி. முதலாம் நூற்றாண்டில் யூத சாஸ்திரிகளில் சிலர் எஸ்தர், பிரசங்கி இவைகளைத் தள்ளிப்போட்டார்கள். கிரேக்கபாஷை பேசின யூதர்கள், அந்தப் பாஷையில் மொழிபெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டோடே சேர்க்கப்பட்ட வேறு சில கிரேக்க புஸ்தகங்களை அங்கீகரித்து, அவைகளை மதித்தார்கள். அப்போகிரிப்பா, நீதிநூல்கள் காண்க. ஆனால் கி-பி. 70-ம் ௵ யம்னியா (*Jamnia*) என்னும் பட்டணத்திலே நடந்த யூத சங்கம் இந்த அப்போகிரிப்பா புஸ்தகங்களைத் தள்ளிவிட்டு, உன்னதப்பாட்டையும், பிரசங்கியையும் ஏற்றுக்கொண்டது என்பது தோன்றுகிறது. யூத சரித்திரக்காரனாகிய யோசேபஸ் (*Josephus*) என்பவன் (ஏறக்குறைய கி-பி. 90) 'யூதர்களாகிய நாங்கள் எல்லாக் காலங்களையும்பற்றிய சரித்திரங்கள் அடங்கிய நீதியாய் நம்பத்தக்க 22 புஸ்தகங்களைமாத்திரம் வைத்திருக்கிறோம்' என்று சொல்லுகிறான். 22 புஸ்தகங்களென்றால், எபிரெய வேதத்திலிருந்த 24 புஸ்தகங்களுள் ரூத்தை நியாயாதிபதியோடும், புலம்பலை எரேமியாவோடுஞ்சேர்த்து எண்ணுகிறான்.

(iv) இவ்விதமாய்ப் பழைய ஏற்பாடாகிய யூதவேதம் இயற்றப்பட்டது. யூதருடைய முதனூல் இதுவே. யேகோவா வேதபுஸ்தகங்களின் ஆக்கியோன்கள்மூலம்

தமது சித்தத்தை வெளிப்படுத்தியிருக்கிறு ரென்று யூதர்கள் எண்ணினதால், அவர்கள் மற்றப் புஸ்தகங்களைப்பார்க்கிலும் இந்த 24 புஸ்தகங்களையும் அதிகப் பயபக்தியோடே மதித்தார்கள். யேகோவா மோசேயிடத்தில் தோரு என்னும் நியாயப்பிரமாண புஸ்தகங்களைச் சொல்சொல்லாக எடுத்து எழுதுவித்தாரென்பதும், எருசலேம் நேபுகாத்நேச்சாரால் அழிந்த காலத்தில் இழந்துபோன வேதாகமங்களை, எஸ்று தேவ உதவியினுல் முற்றுய் எழுதிக்கொடுத்தானென்பதுமாகிய யூதர்களின் பாரம்பரியங்களில் வேதத்தைப்பற்றி அவர்கள் கொண்ட அபிப்பிராயம் தோன்றுகிறது.

3. பழைய ஏற்பாட்டின் மூல பாஷையும் மூல பாடமும். *Language and Text of the Old Testament.*

i. பாஷை.

அரமேய பாஷையில் எழுதப்பட்ட மூன்று வசனங்களையன்றி (தானி $2^{4}$-$7^{28}$ எஸ்று $4^{8}$–$6^{18}$ $7^{12-26}$), பழைய ஏற்பாட்டிலுள்ள புஸ்தகங்கள் எபிரெய பாஷையில் எழுதப்பட்டிருக்கின்றன. இது யூதர்களுடைய பாஷை. பாபிலோன் தேசத்திலிருந்து திரும்பிவந்த பிந்தியகாலத்திலே, எபிரெய பாஷை கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைய, அரமேய பாஷையை ஜனங்கள் பேசிவந்தார்களேயாலுல், வேதத்தை எபிரெய பாஷையிலே எழுதி, அந்தப் பாஷையைமாத்திரம் ஜெபஆலய ஆராதனையில் வழங்கிவந்தார்கள். ஜெபஆலய ஆராதனையில், ஜனங்கள் விளங்கும்படிக்கு, வாசிப்போன் எபிரெய வேதபாடத்தை வாசிக்க வியாக்கியானக்காரன் அரமேய பாஷையில் அதன் கருத்தை விளக்கினுன். இயேசுவினுடைய காலத்திலே, வேதசாஸ்திரிகளும், நன்றுய்ப் படித்தவர்களும் மாத்திரம், மூலபாஷையை விளங்கத்தக்கவர்களாயிருந்தார்கள்.

ii. சுருள்கள்.

யூதர்கள் தங்கள் வேதத்தைத் தோலினுல் செய்த புஸ்தகச் சுருள்களில் எழுதினுர்கள். சில தோல்கள் ஒன்ருேடொன்று கட்டப்படுகிறதினுல், 'தோரு' என்னும் நியாயப்பிரமாண புஸ்தகங்களும் ஒரே சுருளில் எழுதப்பட்டிருக்கக்கூடும். வேதபாரகர் ஜெப ஆலயத்திலே வாசிக்கப்படும் சுருள்களை மிக நுட்பமாய் எழுதுவார்கள். ஒரு சுருளில் ஒரே பிழை கண்டுபிடித்திருந்தால், அந்தச் சுருளை ஜெப ஆலயத்தில் பாவிக்கமாட்டார்கள். அப்படியிருக்க, தற்காலத்திற் காணக்கூடிய அதிகப் பழமையான புஸ்தகச் சுருள்கள் கி-பி. 10-ம் 11-ம் நூற்றுண்டுகளில் எழுதப்பட்டாலும், இவைகளிலும், இவைகளுக்குப் பின்பு எழுதின மற்றச் சுருள்களிலும், பழைய ஏற்பாட்டிலுள்ள உண்மையான மூலபாடம் வித்தியாசமில்லாமல் அடங்கியிருக்கின்றது என்று நாம் சொல்லலாம்.

iii. மொழிபெயர்ப்புகள்.

கிரேக்க பாஷையை மாத்திரம் பேசின தூரதேசத்திலுள்ள யூதர்கள், தங்கள் வேதத்தை எபிரெய பாஷையிலிருந்து கிரேக்க பாஷையில் மொழிபெயர்த்தார்கள். முக்கியமான மொழிபெயர்ப்பு கி-மு. 150-ம் வூத்துக்கு முன்னே முடிந்தது. கிரேக்க சத்தியவேதம் காண்க. இதுவும், மற்றக் கிரேக்க பாஷையிலுள்ள கையெழுத்துப் பிரதிகளும் எபிரெய வேதத்தோடே ஒத்துப் பார்க்கிறதினுல், வேத சாஸ்திரிகள் மூலபாடத்தைப் பற்றிய நல்ல அறிவைப் பெற்றுக்கொள்ளக்கூடும். சமாரியர் நியாயப்பிரமாண பஞாகமம் மாத்திரம் வேதமாக ஏற்றுக்கொண்டு, அவைகளில் யூதர்கள் அங்கீகரித்த மாதிரிக்கு வேருெருமாதிரியைக் கவனமாய்க் காத்துக்கொண்டு அதிலிருந்து தங்கள் பிரதிகளை எல்லாம் எழுதினுர்கள். தற்காலத்திலிருக்கிற அதிகப் பழைய சமாரிய பிரதிகளில் ஒன்று ஏறக்குறைய கி-பி. 12-ம் நூற்றுண்டில் எழுதப்பட்டது.

எபிரெய வேதத்தை விளக்கின வியாக்கியானக்காரர், அரமேய பாஷையிற் சொன்ன மொழிபெயர்ப்புகளையும் விளக்கங்களையும், காலத்துக்குக்காலம், யூத சாஸ்திரிகள் எழுதினுர்கள். 'தர்க்கூம்' என்னுமிந்தப் புஸ்தகங்களில், யூதர்கள் தங்கள் பாரம்பரியங்களின்படி கைக்கொண்ட வேதத்தின் கருத்து காணலாம். இவைகளெல்லாம் வேதத்தின் மூலபாடம் இன்னதென்று அறிகிறதற்குப் பிரயோஜனமுள்ளவைகள். தர்க்கூம் காண்க.

4. பழைய ஏற்பாடு யூத சபையில் வழங்குதல்.

யூதர்கள் வேதத்தைத் தங்கள் ஜீவியங்களை நடத்தக்கூடிய தேவசத்தியமாகவே மதித்தார்கள். தங்களோடே கடவுள் உடன்படிக்கையை உறுதிப்படுத்தினதால், அந்த உடன்படிக்கைக்குரிய தாங்கள் செய்யவேண்டிய கடமைகளையும், கடவுள் அருளிச்செய்த வாக்குத்தத்தங்களையுமடக்கிய புஸ்தகங்களை யூதர்கள் அதிகமாய்க் கவனிக்கப்படத் தக்கவைகளாக எண்ணினது இயல்பானது. 'தேவன் பேசிச்சொல்லிய சகல வார்த்தைகளும்' என்பதும் (யாத் $20^{1}$) 'உங்கள் தேவ

ஞகிய கர்த்தர் கற்பித்த கற்பனைகளும் கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே' என்பதும் (உபா $6^{2}$) ஆகிய இப்படிப்பட்ட தொடர்மொழிகளும், உபா $6^{4-9}$ வசனமும், 119-ம் சங்கீதமும், மற்ற அநேக வசனங்களும், அவர்களுடைய மதிப்பு எவ்வளவென்பதைக் காட்டுகின்றன. தீர்க்கதரிசிகளும் தாங்கள் உரைத்த பிரசங்கங்களைக் 'கர்த்தர் சொல்லுகிறது' என்றும், 'கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டானது' என்றும், கடவுளுடைய சித்தத்தை வெளிப்படுத்தினவர்களாகப் பேசிஞர்கள். இப்படியிருக்க, வேதம் முடிந்தபிற்பாடு வேதபாரகரும் நியாயசாஸ்திரிகளும் 'ரபி' என்பவர்களும் சமயக்கொள்கையை ரூபிக்கிறதற்கும் ஒழுக்கத்தைப் போதிக்கிறதற்கும் வேதத்திலிருந்து கட்டளைகளையெடுத்துச் சொல்லிவந்தார்கள்.

இவர்கள் தொழில் என்னவென்ருல் பழைய ஏற்பாட்டையும், விசேஷமாய் நியாயப்பிரமாணத்தையும் படித்து விவரணஞ் சொல்வதே. வேதபாரகர் காண்க. இயேசு கிறிஸ்துவே நியாயப்பிரமாணத்திலுள்ள சில விதிகளை விலக்கிப்போட்டாலும், 'நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்' என்று சொல்லி (மத் $5^{17}$), தமது போதனைக்கு ஆதாரமாக, பல முறை, இவைகளிலிருந்து எடுத்துரைத்தார்.

தோலில் கையிஞல் எழுதப்பட்ட புஸ்தகங்கள் முற்காலத்தில் விலையேறப்பெற்றவைகளாதலால், ஒரு கிராமத்தில் ஒரே வேத புஸ்தகம்மாத்திரம் இருந்தாலும், யூதர்களுக்குள் படித்தவர்களும், வேதத்தை நன்ருய் அறிந்தவர்களும், அநேகம்பேர் இருந்தார்கள். பெற்ருேர் பாரம்பரியமாய் வந்த வேத வசனங்களைத் தங்கள் பிள்ளைகளுக்குப் போதித்தார்கள். உபா $4^{9}$ $6^{7, 20-25}$. பிற்காலத்தில், ஒவ்வொரு ஜெப ஆலயத்தோடே சேர்ந்த பள்ளிக்கூடங்களில், பிள்ளைகள் வேதத்தை வாசிக்கப் படித்து, அநேக வேத வசனங்களைப்பாடமாக்கிவந்தார்கள். பள்ளி காண்க. வேதத்தில் நல்ல தேர்ச்சியை விரும்பினவர்கள், கீர்த்தியடைந்த 'ரபி' என்பவர்களிடம் படித்தார்கள். அப் $22^{3}$.

யூத ஆராதனையில், வேதவசனங்கள் வழக்கமாய் வாசிக்கப்பட்டன. தேவாலய ஆராதனையில் சங்கீதங்களைப் பாடகர்கள் பாடிஞர்கள். ஜெபஆலய ஆராதனையில் நியாயப்பிரமாணத்தில் ஒரு பாகமும் தீர்க்கதரிசனங்களில் ஒரு பாகமும் வாசிக்கப்படும். ஜெபஆலயம் காண்க. விசேஷமான கூட்டங்களில் தேவகட்டளைகளாலும், சமயத்துக்கேற்ற சரித்திரத்திஞலும் சபையாருக்கு தேவ சித்தம் பிரசித்தப்படுத்தப்படும். சங் $78^{2-6}$ நெகே 8 அதி உபா $31^{9-13}$ 2 இரா $23^{2}$.

II. அப்போகிரிப்பா. (**Apocrypha**) கிறிஸ்துவுக்கு முந்திய இரண்டு மூன்று நூற்ருண்டுகளில் யூதர்களுக்குள், மார்க்க நூல்கள் அநேகம் இயற்றப்பட்டன. கிரேக்கபாஷை பேசின யூதர்கள் இவைகளிற் சிலவற்றை வேதாகமங்களாக அங்கீகரித்து, விசேஷமாய் அலெக்சந்திரியா பட்டணத்தில், கிரேக்க பாஷையில் மொழிபெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டுப் புஸ்தகங்களோடே இவைகளைச் சேர்த்துக்கொண்டு வந்தார்கள். அப்போகிரிப்பா காண்க. 'செப்துவகிந்த்' என்னப்பட்ட கிரேக்க சத்திய வேதத்தோடே இந்தப் புஸ்தகங்கள் சேர்க்கப்பட்டாலும், பலெஸ்தீஞ தேசத்திலுள்ள யூதர்கள் இவைகளை அங்கீகரிக்கவில்லை. இப்படியிருக்க, யூதசபையிலே வேதத்தைப் பற்றி இரண்டு அபிப்பிராயங்களிருந்தன.

ஆதிக்கிறிஸ்தவ சபையார் கிரேக்க சத்தியவேதம் வழக்கமாய் வாசித்தபடியிஞல், யூத சமயக்காரர் தள்ளிவைத்த புஸ்தகங்களை வாசிப்பார்கள். ஆஞலும், இந்த நூல்கள் யதார்த்தமான வேதாகமங்களோ இல்லையோ என்பதைக்குறித்து, அவர்களுக்குள்ளே ஏக சிந்தையில்லை. புதிய ஏற்பாட்டிலே, இவைகளிலிருந்து எடுத்துரைக்கப்பட்ட வசனம் ஒன்றுமில்லை. ஆதிக்கிறிஸ்தவ பிதாக்கள் அநேகர், இவைகளை வாசித்து, பிரயோசனமுள்ளவைகளாக எண்ணினும், இவைகள் மற்ற வேதநூல்களுக்குச் சமமாய் அதிகாரமுள்ளவைகளென்று ஒத்துக்கொள்ளவில்லை. ஜெரோம் (*Jerome*) என்பவன், லத்தீன் சத்தியவேத மொழிபெயர்ப்பைத்திருத்தியபோது (கி-பி. 404) அப்போகிரிப்பா என்னும் இந்தப் புஸ்தகங்களை மற்ற வேதாகமங்களோடு சேர்த்துக்கொண்டும், இவைகள் எபிரெய வேதத்திலிராததிஞல், இவைகளை அதிகமாய்க் கவனியாமல், கிறிஸ்தவர்கள் கொள்கைகளை ரூபிக்கிறதற்கல்ல, தங்களைப் பக்தி விருத்தியாக்குகிறதற்கே இவைகளை வாசிக்கலாம் என்று சொன்ஞன். ஆஞலும், ரோமான் சபை, திரெந்த் (*Trent*) பட்டணத்தில் நடத்தப்பட்ட பொது சங்கம் (கி-பி. 1545-63) இவைகளைப் பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் போன்ற அதிகாரமுள்ள வேதாகமங்களாக ஒத்துக்கொண்டது. புரோட்டெஸ்டாண்டு சபைகள் வேதத்திலிருந்து இவைகளைத்

தள்ளிப்போட்டு, இவைகளிலுள்ள கால சரித்திரத்தையும் புத்தி போதனையையும் அறியும்படிமாத்திரம் இவைகளை வாசித்துக் கொண்டு வந்தன. அப்போகிரிப்பா என்ற புஸ்தகங்கள் பழைய ஏற்பாட்டிலுள்ள கடைசியான புஸ்தகத்துக்கும் கிறிஸ்து பிறந்த காலத்துக்கு மிடையிலே, யூதருடைய கொள்கைகள், சரித்திரம், மார்க்கவிருத்தியாகிய இவ்விசேஷங்களை தெளிவிக்கத் தக்க நூல்கள் என்று சொல்லலாம். அப்போகிரிப்பாவிலுள்ள. புஸ்தகங்களைக் குறித்து 'யெரோம் என்பவன் சொல்லியிருக்கிறபடி, நன்மாதிரியைக் கண்டு, நல்லொழுக்கத்தில் தேறும்படியாகத் திருச்சபை அவைகளை வாசிக்கும்படி நியமிக்கிறதேயல்லாமல், அவைகளைக்கொண்டு யாதொரு உபதேசத்தையும் ரூபிக்க அவைகளைப் பிரயோகிக்கிறதில்லை' என்று அங்கிலேய சபையின் 'வேதசித்தாந்தப் பிரமாணங்களில் (*Articles of religion*) சொல்லியிருக்கிறது.

III. புதிய ஏற்பாடு.

1. அதன் அடக்கம். புதிய ஏற்பாட்டிலே 27 புஸ்தகங்களைக் காண்கிறோம். இவைகள் பின்வருமாறு வகுக்கப்படும்:

(1) சரித்திரங்கள். சுவிசேஷங்களென்னும் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்; அப்போஸ்தலர் நடபடிகள்.

(2) நிருபங்கள்.

i. கொள்கைக்குரியநிருபங்கள். ரோமர், 1-ம் 2-ம் கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், 1-ம் 2-ம் தெசலோனிக்கேயர் ஆகிய பவுல் எழுதின நிருபங்களும்; எபிரெயருக்கு எழுதின நிருபமும்.

ii. தேவ ஊழியக்காரருக்குரிய நிருபங்கள். 1-ம் 2-ம் தீமோத்தேயு, தீத்து.

iii. பொதுவான நிருபங்கள். யாக்கோபு 1-ம் 2-ம் 3-ம் யோவான், யூதா.

(3) தீர்க்கதரிசன புஸ்தகம். வெளிப்படுத்தின விசேஷம்.

2. புதிய ஏற்பாட்டின் இயற்றுகை. *Canon of the N. T.*

i. ஏறக்குறைய கி-பி. 50-ம் வருஷத்துக்கும் 100-ம் வருஷத்துக்குமிடையிலே புதிய ஏற்பாட்டிலுள்ள வெவ்வேறான புஸ்தகங்கள் எல்லாம் எழுதப்பட்டிருந்தது. வெவ்வேறான இடங்களில் பிரசித்தப்படுத்தப்பட்டன. முதன் முதல், பரி. பவுல் தமது சுவிசேஷ கிருத்தியத்தை நடத்திவருகையில், பல சபைகளுக்குக் கடிதங்களை யனுப்பினான். அவன் செய்ததுபோல மற்ற அப்போஸ்தலரில் சிலர் ஒரே தேசத்திலுள்ள சபைகளுக்கு அல்லது ஒரு வகுப்பான சபையாருக்குத் தங்கள் கடிதங்களை எழுதியனுப்பினார்கள். இயேசுகிறிஸ்துவினுடைய ஜீவிய சரித்திரத்தையும் போதனைகளையும்பற்றி வாய்மொழியினால் வந்த சங்கதிகளை மாற்கு, மத்தேயு, லூக்கா இவர்கள் சேர்த்து, சபைகளுக்குக் கற்பிக்கிறதற்கென்று, சுவிசேஷமென்னும் மூன்று புஸ்தகங்களையும் எழுதினார்கள். அதற்குப் பிற்பாடு யோவான், இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவென்று ரூபிக்கிற நோக்கத்தோடே, புதிதாய் வேறொரு சுவிசேஷத்தை எழுதினான். இவைகளைத்தவிர, வேறு பல சுவிசேஷங்களும், நிருபங்களும், மார்க்கத்துக்குரிய புஸ்தகங்களும், ஆதிக்கிறிஸ்தவ சபைகளுள் பிரசித்திப் பெற்றன. (சுவிசேஷம், நிருபம் காண்க.)

ii. புதிய ஏற்பாட்டிலுள்ள புஸ்தகங்கள் அதிகாரத்தையடைந்து, வேதாகமங்களாக அங்கீகரிக்கப்பட்ட விதத்தைப்பற்றி நாம் திட்டமாய்ச்சொல்லக்கூடாது. பரி. பவுல் எழுதின நிருபங்களைப் பெற்றுக்கொண்ட சபைகள், அவைகளைச் சபை ஆராதனையில் வாசித்திருக்கவேண்டும். சிலவேளை, ஒரு நிருபத்தை ஏற்றுக்கொண்ட சபை, அந்த நிருபம் அடுத்த பட்டணங்களிலுள்ள சபைகளில் வாசிக்கப்படும்படிக்கு அதை அந்தச் சபைகளுக்கு அனுப்பியிருக்கலாமென்று தோன்றுகிறது. கொலோ $4^{16}$ 1 தெச $5^{27}$. ஆனால், இவைகள் ஒழுங்காய் வேத பாடங்களாக வாசிக்கப்பட்டவைகளென்று சொல்லமுடியாது.

iii. ஜஸ்தின் மார்ட்டர் (*Justin Martyr*) தன்னுடைய காலத்தில் (ஏறக்குறைய கி-பி. 150) சுவிசேஷங்கள் கிறிஸ்தவர்களின் பகிரங்கக் கூட்டங்களில் வாசிக்கப்பட்டன என்று சொல்லுகிறான். தாதியன் (*Tatian*) ஏறக்குறைய கி-பி. 160-ல் நாலு சுவிசேஷங்களை ஒன்றாய் இசைத்துத் தொடர்ச்சியான ஒரு சரித்திரத்தை எழுதினான். இரண்டாம் நூற்றாண்டில் சீரியாதேசத்திலுள்ள சபைகளுக்குள் இது ஒழுங்காய்க் கூட்டங்களில் வாசிக்கப்பட்டது.

iv. அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டை வாசித்ததுபோல் இந்தப் புதிய புஸ்தகங்களையும் வாசித்து வந்ததினால், இவைகளையும் வேதாகமங்களாக மதித்து வந்தார்கள் என்று தோன்றுகிறது. ஆதிக் கிறிஸ்தவ பிதாக்கள், புதிய ஏற்பாட்டிலுள்ள புஸ்தகங்களிலிருந்து எடுத்துக்காட்டிப் பேசின விதத்தினால், அவர்கள் இவைகளை

எவ்வளவு அதிகாரமுள்ளவைகளாக எண்ணினார்கள் என்று காணலாம். இதற்கு அத்தாட்சி யதிகமாயினும், நாலு, ஐந்து உதாரணங்கள் மாத்திரம் கூறுவோம்.

மார்சியன் (*Marcion*. ஏறக்குறைய கி-பி. 140) பதிதனாயிருந்து, சில புஸ்தகங்களைத் தள்ளிப்போட்டும், தனக்குரிய விசேஷமான கொள்கைகளை ஸ்தாபிக்கிறதற்கு லூக்கா எழுதின சுவிசேஷத்தின் சில பகுதிகளையும், பரி. பவுல் எழுதின பத்து நிருபங்களையுஞ் சேர்த்து இவைகளை வேத புஸ்தகங்களாக உபயோகித்தான்.

இத்தாலிய பண்டிதனாகிய முராதோரி (*Muratori*) என்பவன் கண்டுபிடித்த ஒரு கையெழுத்துப் பிரதியில், இரண்டாம் நூற்றாண்டில், ரோமாபுரியிலுள்ள சபை அங்கிகரித்த புஸ்தகங்களைப்பற்றிய அட்டவணை உண்டு. இந்தப் பிரதி கொஞ்சம் கிழிந்து போனது; ஆனாலும் இது எபிரெயர், யாக்கோபு, 2-ம் பேதுரு, யோவானின் நிருபங்களிலொன்று ஆகிய இவைகளைத் தவிர, புதிய ஏற்பாட்டிலுள்ள மற்றப் புஸ்தகங்களின் பெயர்களைச் சொல்லி இவைகள் வேதாகமமாக ஏற்றுக்கொள்ளப்பட்டும், சபைகளில் வாசிக்கப்பட்டும் வந்தன என்று காட்டுகிறது. இவைகளோடே புதிய ஏற்பாட்டிலில்லாத இரண்டு புஸ்தகங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகள் அப்போகிரிப்பாவிலுள்ள சாலொமோனுடைய நீதி என்பதும், பேதுருவுக்கு வெளிப்படுத்தின விசேஷம் என்பதுமே. மேலும் ஏர்மா இயற்றின 'மேய்ப்பன்' என்னும் ஒரு புஸ்தகமும் (*Shepherd of Hermas*) அந்தரங்கக் கூட்டங்களிலல்ல, பகிரங்கமாய் கிறிஸ்தவர்களால் வாசிக்கப்படத் தக்கது என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

பதிதர்களுடைய போதனைகளை நிராகரிக்கிறதில், ஐரேனியு (*Irenaeus*. ஏறக்குறைய கி-பி. 140-203), அலெக்சந்திரியா கிலெமெந்து (*Clement of Alexandria*, கி-பி. 165-220), தெர்த்துலியன் (*Tertullian*, கி-பி. 160-220) என்பவர்கள், நாலு சுவிசேஷங்கள், பவுல் எழுதின பதின்மூன்று நிருபங்கள், நடபடிகள், 1 பேதுரு, 1 யோவான் ஆகிய இவைகளை யெடுத்துக் காட்டினதினால், இந்தப் புஸ்தகங்களைத் தென் பிரான்சிலும், எகிப்திலும், வட ஆப்பிரிக்காவிலுமுள்ள சபைகள் வேதாகமங்களாக எண்ணிவந்தனவென்று அறியலாம். எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்தின் ஆசாரியன் யாரென்று திட்டமாய்ச் சொல்லக்கூடாததினால், இந்த நிருபத்தை அநேகர் ஏற்றுக்கொள்ளாமலிருந்தும், கிலெமெந்து இந்த நிருபத்தையும் உபயோகித்தான். அலெக்சந்திரியாவிலும் செசரியாவிலும் ஊழியஞ்செய்த ஓரிகேன் என்பவன் (*Origen*, கி-பி. 184-253) இவைகளெல்லாவற்றையும், வெளிப்படுத்தின விசேஷத்தையும், பழைய ஏற்பாட்டையும், அப்போகிரிப்பாவின் சில புஸ்தகங்களையும் அங்கீகரித்தான்.

சரித்திரக்காரனாகிய ஐசேபியஸ் (*Eusebius*, ஏறக்குறைய கி-பி. 270-340) என்பவன் கிறிஸ்தவர்கள் வாசித்த பலவித புஸ்தகங்கள், வேதாகம புஸ்தகங்களோ அல்லவோ என்ற விஷயத்தைத் தீர்மானித்து, பின்வருமாறு அவைகளை வகைப்படுத்தினான்:

(*a*) எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்ட புஸ்தகங்கள்: நாலு சுவிசேஷங்களும், அப்போஸ்தலர் நடபடிகளும், பவுல் எழுதின நிருபங்களும். மேலும் எபிரெயரும், 1 பேதுருவும், 1 யோவானும், வெளிப்படுத்தின விசேஷமுமாகிய இந்த நாலு புஸ்தகங்களையுங் குறித்து கொஞ்சச் சந்தேகமிருந்தும் இந்த வகுப்பிலடக்கினான்.

(*b*) சிலர் தர்க்கஞ்செய்த புஸ்தகங்கள்: யாக்கோபு, யூதா, 2 பேதுரு, 2, 3 யோவான்.

(*c*) தள்ளப்படவேண்டிய புஸ்தகங்கள்: புதிய ஏற்பாட்டிலில்லாத, கிறிஸ்தவர்கள் வழக்கமாய் வாசித்த சில புஸ்தகங்கள்.

ஐசேபியஸ் செசரியாபட்டணத்தில் வசித்திருந்ததால், அவனுடைய வகுத்தல், மூன்றாம் நூற்றாண்டின் முதற்பகுதியில், செசரியா சபை கைக்கொண்ட அபிப்பிராயத்தைக் காட்டுகிறது. அந்த நூற்றாண்டில் எழுதின கீழ்த்தேசங்களிலுள்ள கிறிஸ்தவ பிதாக்கள் வெளிப்படுத்தின விசேஷத்தைத் தவிர, மற்றப் புதிய ஏற்பாட்டுப் புஸ்தகங்களெல்லாம் வேதாகமங்களாக அங்கீகரித்தார்களென்பதற்கு அத்தாட்சியுண்டு. அதனாசி (*Athanasius*, கி-பி. 296-373) என்பவன் வெளிப்படுத்தின சுவிசேஷத்தையும் மற்றப் புஸ்தகங்களோடே சேர்த்தான்.

மேற்குத்தேசங்களில் வசித்த பிதாக்களுக்குள், ஜெரோம் (*Jerome*, ஏறக்குறைய கி-பி. 340-420) அகுஸ்தீன் (*Augustine*, கி-பி. 354-430) என்பவர்கள் புதிய ஏற்பாட்டிலுள்ள புஸ்தகங்களையெல்லாம் வேதாகமங்களாக மதித்தார்கள். ஆனாலும் சில சபைகளில் எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபமும் வெளிப்படுத்தின விசேஷமும் ஆகிய புஸ்தகங்களைப்பற்றிச் சந்தேகமிருந்

தது. ஜெரோம் சத்தியவேதத்தை லத்தீன் பாஷையில் மொழிபெயர்த்தபோது இந்தப் புஸ்தகங்களெல்லாவற்றையும் அதில் அவன் சேர்த்தான்.

கி-பி. 397-ல் கார்தேஜில் (*Carthage*) கூடின மூன்றும் பொது சங்கத்தில், நம்முடைய புதிய ஏற்பாட்டில் அடங்கியிருக்கிற புஸ்தகங்களும், அப்போகிரிப்பாவும், பழைய ஏற்பாடும், சுத்த சத்தியவேத புஸ்தகங்கள் என்றும், இவைகள்மாத்திரம் கிறிஸ்தவ சபையில் வாசிக்கப்படத்தக்கவைகள் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டன. இதற்குப் பிற்பாடு, மேல் தேசங்களிலுள்ள சபைகளுக்குள் வேதாகமங்கள் எவையென்ற விஷயத்தைப்பற்றித் தர்க்கமும் சந்தேகமுமில்லை.

தற்காலத்திலே, ரோமான் சபையாரும் புரோட்டெஸ்டாண்டாரும் புதிய ஏற்பாடு அடங்குகிற 27 புஸ்தகங்களையும் ஏற்றுக் கொள்ளுகின்றார்கள்.

3. புதிய ஏற்பாட்டின் மூலபாஷையும் கையெழுத்துப் பிரதிகளும்.

புதிய ஏற்பாட்டின் ஆகமங்கள் கிரேக்க பாஷையில் எழுதப்பட்டன. அந்தப்பாஷை இயேசுவினுடைய காலத்தில் ரோம ராஜாங்கத்திலுள்ள ஏறக்குறைய எல்லாத்தேசங்களிலும் வழங்கின பாஷையாயிருந்தது. இயேசுவும் அப்போஸ்தலரும் 'அரமேயா' என்னும் சீரியா தேசத்துப் பாஷையைப் பேசினார்கள் என்றும்; முதலில் யூதகிறிஸ்தவர்களுக்குள் கிறிஸ்தவ பாரம்பரியங்களும் போதனைகளும், வாய்மொழியினால் அந்த அரமேய பாஷையில் பரம்பினது என்றும்; புதிய ஏற்பாட்டின் மூலக்கையெழுத்துப் பிரதிகள் கிரேக்கபாஷையில் எழுதப்பட்டிருக்கின்றன என்றும் வேத சாஸ்திரிகள் சொல்லுவார்கள்.

இந்தக் கையெழுத்துப் பிரதிகள் 'பபீரஸ்' (*Papyrus*) என்னப்பட்ட நாணலிலிருந்து செய்த காகிதத்திலே எழுதப்பட்டு, சீக்கிரமாய் அழிந்துபோக, இப்பொழுது இவைகளில் ஒன்றேனும் காணக்கூடாது. ஒரே சுவிசேஷம் அல்லது இரண்டு மூன்று நிருபங்களும், ஒரே சின்னக் காகிதச் சுருளில் எழுதப்படக்கூடியதாயிருக்கும். இவைகளிலிருந்து, கையினால் பிரதிகள் பெயர்த்தெழுதப்பட்டதினால், அநேக ஆகமச் சுருள்கள் பிரசித்தப்படுத்தப்பட்டு வந்தன. நாலாம் நூற்றாண்டில், 'பபீரஸ்' என்ற காகிதத்துக்குப் பதிலாக, புத்தகங்களைப் பிரசுரம் செய்தவர்கள் ஆட்டுத்தோலிலிருந்து செய்த தோல் ஏடுகளைப் பிரயோகிக்கத் தொடங்கினார்கள். இந்தக் காலம்முதல் தோல் ஏடுகளைச் சேர்த்ததினால், சுருள்களாக அல்ல, நமது புஸ்தகங்களைப் போலவே தங்கள் புஸ்தகங்களைச் செய்தார்கள். அப்படிச் சேர்க்கப்பட்ட புஸ்தகங்களைத் தங்கள் இஷ்டப்படி எவ்வளவுக்கும் பெரியதாக்கக்கூடும். இப்படியே நாலாம் நூற்றாண்டில், சுவிசேஷங்களையும் நிருபங்களையுஞ் சேர்த்து எழுதி, ஒரே வேத புஸ்தகமாக அவைகளை உபயோகித்து வந்தார்கள். இந்தப் புஸ்தகங்களிற் சில, பிந்தின காலங்களில் கண்டுபிடிக்கப்பட்டு, இக்காலமட்டும் இருக்கின்றன. இவைகளில் அதிக முக்கியமான கிரேக்க கையெழுத்துப் பிரதிகளாவன:

i. சீனாய் மலையில் ஒரு ஆச்சிரமத்தில் 1844-ல் ஒரு பண்டிதன் கண்டுபிடித்த முழு வேதத்தையு மடக்குகிற ஒரு புஸ்தகம். இது நாலாம் நூற்றாண்டில், ஒருவேளை செசரியாவிலே எழுதப்பட்டிருக்கலாம்.

ii. நாலாம் நூற்றாண்டில் எழுதப்பட்டு, ரோமாபுரியிலுள்ள பெரிய புஸ்தகசாலையில் வைக்கப்பட்டிருக்கிற ஒரே வேதபுஸ்தகம். இதிலிருந்து சில நிருபங்களும் வெளிப்படுத்தின விசேஷமும் இழந்துவிடப்பட்டன.

iii. ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வேறொரு வேதபுஸ்தகம். இது இப்பொழுது லண்டன் பட்டணத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

iv. ஐந்தாம் அல்லது ஆறாம் நூற்றாண்டில் லத்தீன், கிரேக்க பாஷைகளிலெழுதப்பட்டு சுவிசேஷங்களையும் நடபடிகளையும் மாத்திர மடக்குகிற ஒரு புஸ்தகம் இருக்கிறது.

இந்த முக்கியமான பிரதிகளைத் தவிர, ஆறாம் நூற்றாண்டுமுதல் பத்தாம் நூற்றாண்டுவரையும் எழுதப்பட்டிருக்கிற நூற்றுக்கணக்கான கையெழுத்துப் பிரதிகளுண்டு.

4. மொழிபெயர்ப்புகள்.

பற்பல தேசங்களில், அந்தந்தத் தேசத்திலுள்ள கிறிஸ்தவசபைகளில் பேசின பாஷைகளில், வேதாகமங்கள் காலத்துக்குக் காலம் மொழிபெயர்க்கப்பட்டன. வேதத்தின் விசேஷித்த மொழிபெயர்ப்புகளாவன:

(i) கி-பி. 200 முன்னே புதிய ஏற்பாடு சீரிய பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது. இதற்குமுன்னே, தத்தியன் (*Tatian*) சீரியாவிலுள்ள சபைகளுக்கென்று, அந்தப் பாஷையில் தனது சுவிசேஷ அட்டவணை செய்தானென்று அநேக பண்டிதர்கள்

நினைக்கிறார்கள். ஐந்தாம் நூற்றாண்டுக்கும் ஏழாம் நூற்றாண்டுக்கு மிடையிற் சீரிய பாஷையில் மற்ற நாலு மொழிபெயர்ப்புகளின் பிரதிகள் உண்டு.

(ii) புதிய ஏற்பாடு இரண்டாம் நூற்றாண்டில் லத்தீன் பாஷையில் முதன் முதல் மொழிபெயர்க்கப்பட்டதென்று தோன்றுகிறது. இந்த மொழிபெயர்ப்பு, வட ஆப்பிரிக்காதேசத்திலே அதிகமாய் உபயோகிக்கப்பட்டது. இதை ஜெரோம் (கி-பி. 340-420) கவனமாய்த் திருத்தினான். அவன் செய்த இந்த மொழிபெயர்ப்பை ரோம சபையார் சரியானதென்று ஒப்புக்கொண்டு, தற்காலத்திலே உபயோகித்து வருகிறார்கள்.

(iii) எகிப்து தேசத்திலே பேசப்பட்ட கொப்திக் என்னும் பாஷையிலும் மூன்றாம் நூற்றாண்டில் புதிய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது.

இவைகளிலும் மற்றச் சில பாஷைகளிலும் எழுதப்பட்ட பலவித கையெழுத்துப் பிரதிகளுண்டு. வேதசாஸ்திரிகள் இந்தப் பிரதிகளை யெடுத்துக் கவனமாயுந் திட்டமாயும் ஆராய்ந்து பார்த்து ஒத்துக்கொண்டு, புதிய ஏற்பாட்டு ஆகமங்களை இயற்றினவர்கள் எழுதின மூல பதங்களையும் தெரிந்துகொள்ளக்கூடியவர்களாயிருக்கிறார்கள். யாதாம் ஒன்றைக் கொஞ்சமேனும் பிழையில்லாமல் பெயர்த்தெழுதுவது அதிகக் கஷ்டமென்று அறிவோம். அப்படியிருக்க, இந்தப் பூர்வீக பிரதிகளெல்லாம் ஒன்றுக்கொன்று பூரண ஒற்றுமையில்லாதிருப்பது நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதல்ல. ஆனால் இவைகளிலுள்ள ஒற்றுமையின்மை சொற்பமாயும், பிரதான மற்றதாயுமிருக்கிறது. புதிய ஏற்பாட்டின் வெகு சில வசனங்களில் கிரந்த கர்த்தாக்கள் எழுதின மூல பதங்களைப்பற்றிச் சிலவேளைகளில் நாம் தீர்மானமாய்ச் சொல்லக்கூடாதிருந்தும், வேதசாஸ்திரிகளுடைய கல்விப்பயிற்சியினால், எந்த வசனத்திலும் வேதாகமங்களின் மூலக்கருத்தை நாம் பூரணமாய் அறியக்கூடும். அந்தக் கருத்தை தமிழ் வேதாகமத்திலே நாம் அதிகத் தெளிவாய்க் காணலாம்.

IV. வேதாகமத்தின் இலட்சணங்கள். சத்தியவேதத்தின் விசேஷித்த இலட்சணங்கள் எவையென்று அறியவிரும்பினால், வேதத்திலுள்ள புஸ்தகங்களைத்தானே ஆராய்ந்து பார்க்கவேண்டும். பராபரன் மனுஷருக்கு எவ்விதமாய்த் தம்மை வெளிப்படுத்துவாரென்ற இந்த உத்தேசத்தைச் சிந்தியாமல், வேதாகமத்திலே எந்தெந்த இலட்சணங்கள் காணக்கூடும் என்பதும், வேதாகமம் தன்னைக்குறித்து என்ன போதிக்கிறது என்பதும், அதன் போதனை உண்மையோ இன்மையோ என்பதும் ஆகிய இப்படிப்பட்ட கேள்விகளைத் தியானிக்கிறதினாலே, பராபரன் தம்மை வெளிப்படுத்தின முறையை நாம் அறிந்துகொள்ளக்கூடும்.

1. வெளிப்படுத்தல். இயேசுகிறிஸ்து தாம் ஒப்பில்லாத பிரகாரமாய்க் கடவுளை வெளிப்படுத்துகிறாரென்று சாதிக்கிறார். யோவா $14^{9}$ $12^{45}$. அவர் சத்தியம். $14^{6}$. பிதாவாகிய கடவுள் அவரை இவ்வுலகத்துக்கு அனுப்பியிருக்கிறார். $5^{36}$ $7^{28,29}$. கடவுள் அவருக்குக் கட்டளையிட்டபடியே அவர் உபதேசிக்கிறார். $7^{16}$ $12^{49}$ $14^{24}$. அவர் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயு மிருக்கிறது. $6^{63}$. இப்படியிருந்தால், அவருடைய ஜீவியத்தையும் உபதேசத்தையும் பற்றிய சரித்திரத்தை அடக்குகிற புஸ்தகங்கள், தேவ வெளிப்படுத்தலுள்ளவைகளே.

மேலும், இயேசு, மோசேயுந் தீர்க்கதரிசிகளுந்தம்மைக்குறித்துப் பேசினார்களென்று போதித்தார். யோவா $5^{46}$ லூக் $4^{17-21}$ $24^{27}$. அதாவது: யூதமார்க்கமானது மேசியாவின் வருகைக்கு ஆயத்தம் பண்ணினது என்றும், தாம் மேசியாவைப்பற்றிய உபதேசங்களை நிறைவேற்றினார் என்றும் அவர் போதித்தார். சில வேளைகளில் இயேசு, பழைய ஏற்பாட்டிலுள்ள போதனைகளைத் திருத்தி (மத் 5 அதி) நியாயப்பிரமாணத்தையாகிலும் தீர்க்கதரிசனங்களையாகிலும் அழிக்கிறதற்கல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேனென்று சொன்னார். மத் $5^{17}$. அவர் இவ்வுலகத்தைவிட்டுப் போனபின்பு, பரிசுத்த ஆவியானவர், அவருடைய சீஷர்களுக்குச் சத்தியத்தை யின்னும் வெளிப்படுத்துவாரென்று அவர் வாக்குத்தத்தம் பண்ணினார். யோவா $16^{13}$ $14^{26}$. இப்படியே, இயேசு, தாமே கடவுளை வெளிப்படுத்தினாரென்பதை மாத்திரமல்ல, பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கிற திவ்விய வெளிப்படுத்தல் பலவிதமாய் யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியானவரால் இன்னுஞ் சத்தியம் அறிவிக்கப்படும் என்பதையும், தெளிவாய்ப் போதித்தாரென்று காண்கிறோம்.

நியாயப்பிரமாணங்களை உண்டாக்கினவர்களும், தீர்க்கதரிசிகளும், மற்றவர்களும், தாங்கள் பேசின வார்த்தைகள் கடவுளுடைய சித்தத்தைக் கூறினவென்று உணர்ந்தார்களென்பதற்குப் போதிய அத்தாட்சிகளுண்டு. 'கர்த்தர் சொல்லுகிறதாவது' என்றும் (ஏசா $22^{15}$ $43^{1}$ ஆமோ $1^{3}$); 'கர்த்தருடைய வார்த்

தையைக் கேளுங்கள்' என்றும் (ஏசா $28^{14}$ எரே $2^{4}$ $10^{1}$ ஓசி $4^{1}$ ஆமோ $3^{1}$); 'கர்த்தருடைய வாய் இதைச்சொல்லிற்று' என்றும் (ஏசா $58^{14}$); கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டானது' என்றும் (எரே $1^{4}$ எசே $6^{1}$ ஓசி $1^{1}$ யோவே $1^{1}$ யோனு $1^{1}$ மீகா $1^{1}$ செப் $1^{1}$ ஆகா $1^{1}$ சக $1^{1}$); கர்த்தர் என்னை நோக்கி............என்ருர்' என்றும் (எரே $3^{6}$); 'கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் காண்பித்ததாவது' என்றும் (ஆமோ $7^{1}$ $8^{1}$); 'கர்த்தர் இஸ்ரவேலுக்குச் சொன்ன வார்த்தையின் பாரம்' என்றும் (மல் $1^{1}$ நாகூ $1^{1}$) சொல்லி, தீர்க்கதரிசிகள் தங்களைக்கொண்டு கடவுள் பேசினதாகத் தீர்க்கதரிசனங்களை வழக்கமாய் உரைத்தார்கள். (தீர்க்கதரிசனம் காண்க.) ஏசா 6 அதி. எரே 1 அதி.

மோசேயும் மற்றவர்களும் தாங்கள் செய்த சகலத்தையும், கடவுள் கட்டளையிட்டவைகளாக எண்ணினர்கள். இஸ்ரவேலரை யேகோவா நடத்தினரென்று நாம் சொல்லக் கூடும்.

இயேசு நோயாளிகளைச் சுகமாக்குகிறதற்கும், பிசாசுகளைத் துரத்துகிறதற்கும், ஜனங்களுக்குத் திவ்விய சத்தியத்தைப் போதிக்கிறதற்கும் சீஷர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். மத் $10^{8}$ மாற் $3^{13-15}$ மத் $28^{18-20}$. அப்போஸ்தலர் செய்த அற்புதங்கள், இயேசுவின் நாமத்தினலே செய்யப்பட்டன. அப் $3^{11-16}$ $4^{8-10}$. அவர்களுடைய போதனை இயேசுவினிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட போதனையே. அவர்கள் இயேசுவிலிருந்து கடவுளையும், அவருடைய ராஜ்யத்தையும்பற்றிய வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொண்டு, அதை மற்றவர்களுக்குத் தெரிவித்தார்கள். பவுல் இயேசுவினுடைய சீஷனல்லாதபோதிலும், நேராய்க் கடவுளிடத்திலிருந்து வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொண்டான். கலா $1^{11-17}$ 2 கொரி $12^{1-4}$.

இப்படியே வேதாகமத்திலுள்ள மகான்கள் தங்களை மூலமாய்க் கடவுள் தம்முடைய நற்குணத்தையும் சத்தியத்தையும் உலகத்தாருக்கு வெளிப்படுத்தினரென்று வற்புறுத்துகிருர்கள். இந்த வெளிப்படுத்தலை வேதாகமத்திலே நாம் காணலாம்.

ஆனல், அவர்கள் சொன்னது உண்மையோ இன்மையோ எனக் கேட்கப்படக் கூடும். அந்தக் கேள்வியைப்பற்றி இங்கே அதிகமாய் விசாரணைசெய்ய இயலாது. கிறிஸ்துமார்க்கம் உண்மையே என்றும், இயேசுகிறிஸ்துவே தேவகுமாரன் என்றும் சொல்லக்கூடியவர்களா யிருப்போமேயானல், சத்திய வேதத்தில் தேவனைப்பற்றிய வெளிப்படுத்தல் அடங்கியிருக்கிறதென்று ஒத்துக்கொள்ளவேண்டும். இதற்கு அத்தாட்சி கொடுக்கக்கூடிய நாலு விஷயங்கள் சுருக்கமாய்ச் சொல்லப்படும்.

i. இயேசுவினுடைய குணத்தையும் பாவமில்லாத தன்மையையும் வல்லமையையும் கவனிக்கவேண்டும். பிரதான ஆசாரியரின் சேவகர் அவரைக்குறித்து 'அந்த மனுஷன் பேசுகிறதுபோல் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை' என்று சொன்னர்கள். யோவா $7^{46}$. (மத் $7^{28}$ மாற் $1^{27}$ $2^{12}$ $6^{2}$ லூக் $7^{17}$ காண்க.) அவருடைய சரித்திரத்தை வாசித்த எல்லாரும் 'அந்த மனுஷன் ஜீவிக்கிறதுபோல் ஒருவனும் ஒருக்காலுஞ் ஜீவித்ததில்லை' என்று சொல்லுவார்கள். இந்தச் சற்குரு மற்றவர்களுக்குச் சத்தியத்தை அறிவிக்கும்படிக்கு, தாம் கடவுளிடத்திலிருந்தே அதைப் பெற்றுக்கொண்டாரென்ற அவருடைய மனதிலிருந்த உணர்வு மயக்கமான எண்ணமாயிருக்கிறதில்லை.

ii. தீர்க்கதரிசிகள் சொன்னவைகளில் அநேகம் பிந்திய காலங்களில் நிறைவேற்றம் பெற்றன. விசேஷமாய் நெடுங்காலமாக மேசியாவின் வருகைக்குக் காத்திருந்த யூதர்கள் கடைசியாகக் கிறிஸ்துவில் அதைப் பூரணமாய்க் கண்டடைந்தார்கள். ஆனபடியால் இந்தத் தீர்க்கதரிசனங்களிலும், மேசியாவைப்பற்றிய நம்பிக்கையிலும், கடவுள் தமது நோக்கத்தை அறிவித்தாரென்று சொல்லக்கூடும்.

iii. வேதாகமம் எட்டின தேசங்களில் எல்லாம் அதை ஏற்றுக்கொண்ட ஜனங்கள் எல்லாருக்கும் நல்ல செல்வாக்கு உண்டாகிறது. இருளிற் பிரகாசிக்கிற வெளிச்சத்தைப்போல வேதாகமம் ஜாதிகளுக்கு நல் ஒழுக்கத்தையும், புதிய நம்பிக்கையையும், கடவுளைப்பற்றிய போதிய அறிவையும் கொடுத்திருக்கிறது.

iv. நாம் வேதாகமத்தைப் படிக்கும்போது, அதன் போதனை இருதயத்திற் பதிகிறதாகக் காண்கிருேம். அது மனச்சாட்சியை நடத்தி, மனதைக் கற்பித்து, சித்தத்தை ஏவுகிறது. இதை வாசிக்கிற காலத்திலே, இது உண்மையென்பதையும், இதனுல் கடவுள் என்னிடம் பேசுகிருரென்பதையும் நாம் உணருகிருேம். வேதாகமம் மனுஷர் கடவுளோடேகூட ஐக்கியமாயிருக்கிறதற்கு வழிகாட்டும் என்று கிறிஸ்தவர்கள் சாதிக்கிருர்கள்.

2. கடவுள் தம்மை வெளிப்படுத்தின முறையைக் குறித்து வேதாகமத்தில் கவனிக்க வேண்டியதாவது:

(1) யூதமார்க்கத்திலும் கிறிஸ்துமார்க்கத்திலும் கடவுள் தமது அடியார்மூலமாய்ச் சத்

தியத்தை அறிவித்திருக்கிறார். கடவுள் தாமே வேதாகமத்தை எழுதவில்லை. இந்தப் புஸ்தகம் வானத்திலிருந்து விழுந்ததல்ல. கடவுள் தமது கையின் கருவிகளாக மனுஷரை எடுத்து, அவர்கள் விளங்கக்கூடிய அளவு, அவர்களுக்கு அறிவைக் கொடுத்து, அவர்கள் வார்த்தைகளினாலும் கிரியைகளினாலும், தமது சித்தத்தையும் கிருபையையும் விளக்கியருளினார். மோசேயினாலும் தீர்க்கதரிசிகளினாலும் வந்த வெளிப்படுத்தல் பூரணப்படுத்தப்பட வேண்டிய காலத்திலே, மனுஷீகசாயலாய் ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழான வருமாகிய தமது குமாரனைப் பராபரன் அனுப்பினார். மனுஷராகிய கடவுளுடைய அடியார் தொடங்கின வெளிப்படுத்தலை, மனுஷனாய்த் தோன்றின தேவகுமாரன் நிறைவேற்றினார். எபி $1^{1}$. கடவுள் நடத்தினவர்களாகிய இவர்களுடைய ஜீவிய சரித்திரங்களை ஆராய்ந்து பார்க்கிறதினால் நாம் அவைகளின் மூலமாய்க் கடவுளுடைய தயவுள்ள சித்தம் இன்னதென்று அறிந்துகொள்ளக்கூடும். அந்த ஜீவிய சரித்திரங்கள் வேதாகமத்திலிருப்பதே அதில் கடவுளைப்பற்றிய வெளிப்படுத்தல் அடங்கியிருக்கிறது என்பதைத் தெளிவாய்க் காட்டும்.

(2) இந்த வெளிப்படுத்தல் படிப்படியாய் அதிகரித்து வந்திருக்கிறது. ஆதியிலே இஸ்ரவேலர் அநேக தேவதைகள் உண்டென்று எண்ணினார்கள். மோசே அவர்கள் வணங்கவேண்டிய ஒரே கடவுள் யேகோவாவே என்று போதித்தான். எல்லாவற்றிற்குங் காரணராகிய கடவுள் ஒருவரேயென்ற இந்தச் சத்தியத்தை முதன் முதல் தீர்க்கதரிசிகளுடைய போதனைகளிற் காண்கிறோம். அவர்கள் படிப்படியாய்க் கடவுளுடைய இலட்சணங்களையும், மனுஷர் அவருக்குச் செய்யவேண்டிய பணிவிடையையும்பற்றி நல்ல அறிவை அடைந்தார்கள். பூரண ஞானத்தை அறிவித்த இயேசுகிறிஸ்து முற்காலத்தில் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட அநேக கற்பனைகளைத் திருத்தினார். மத் 5 அதி. மாற் $10^{1-12}$. அப்படியிருக்க, கடவுளுடைய உத்தம சத்தியம் இன்னதென்றறியும்படிக்கு, பழைய ஏற்பாட்டிலுள்ள போதனைகளை இயேசு கொடுத்த உபதேசத்தோடே ஒத்துக்கொள்ளவேண்டும். அவர் எல்லாவற்றையும் நிறைவேற்றுகிறவர்.

(3) அருட்புலமை. கிறிஸ்தவசபைகடவுள் தமது அடியாருக்குக் கொடுத்த வெளிப்படுத்தல், பரிசுத்த ஆவியினுடைய உதவியினால் எழுதப்பட்டதென்று எப்பொழுதுங் கைக்கொண்டிருக்கிறது. வேதாகம ஆசிரியரைப் பரிசுத்த ஆவி ஏவினார். இதற்கு அத்தாட்சிகளுண்டு:

இயேசுகிறிஸ்து ஒரு சங்கீதத்திலிருந்து ஒரு வசனத்தை எடுத்துக்காட்டி, தாவீது பரிசுத்த ஆவியினாலே பேசினாரென்று சொன்னார். மத் $22^{43}$. தீர்க்கதரிசிகள் தங்கள் போதனைகளில் தம்மைக்குறித்துச் சொன்னார்களென்று அவர் சாதித்தார். லூக் $24^{27.44}$. பழைய ஏற்பாட்டிலுள்ள ஆகமங்களைத் திவ்விய அதிகாரமுள்ளவைகளாக அவர் எண்ணுகிறார். மாற் $7^{9}$ $12^{26-31}$ லூக் $4^{4-12}$.

அவ்வாகமங்கள் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கின்றன என்று பவுல் சொல்லுகிறான். 2 தீமோ $3^{16}$.

தீர்க்கதரிசிகள் தேவாவியினால் ஏவப்பட்டுப் பேசினார்களென்று பேதுரு சொல்லுகிறான். 2 பேது $1^{21}$.

புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் பழைய ஏற்பாட்டிலுள்ள வசனங்கள் அநேகம், நம்பத்தக்கச் சரித்திரத்தையும் போதனைகளையுமுள்ள தேவவாக்கியங்களாக எடுத்துக் காட்டுகிறார்கள். புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டார்கள் என்பதற்குப் பரிசுத்தஆவி அப்போஸ்தலருக்குச் சத்தியத்தை அறிவிப்பார் என்று இயேசு சொன்ன வாக்குத்தத்தம் அத்தாட்சியாயிருக்கும். யோவா $14^{26}$ $16^{13}$. அப்போஸ்தலனாகிய பவுல் சிலமுறை தமது சொந்த அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறவனாய்ப் பேசினும், வேறு சில தருணங்களில் கிறிஸ்துவினுடைய சித்தத்தை அறிவிக்கிறதாக எழுதுகிறான். 1 கொரி $7^{6.10.12.25.40}$ $11^{23}$ $15^{3}$ கலா $1^{11}$.

(4) பரிசுத்தஆவி வேதாகம ஆசிரியர்களை எப்படி ஏவி, அவர்களுக்கு எவ்விதமாய் உதவிசெய்தாரென்ற இவ்விஷயத்தைக்குறித்துப் பலவித அபிப்பிராயங்களுண்டு.

(i) ஆதிக்கிறிஸ்தவ பிதாக்களில் அநேகர், வாத்தியக்காரன் யாழ்வாசிக்கிறதுபோல் பரிசுத்தஆவி ஆசிரியர்களை கையிற் கருவிகளாக எடுத்து, தமது சித்தத்தின்படி அவர்களிலிருந்து இன்னவின்ன வாக்கியங்கள் வெளிவரச் செய்தார் என்று நினைத்தார்கள். அவர்கள் மனதிலுள்ள எண்ணங்கள் கடவுளால் ஏவப்பட்டதுமல்லாமல், அவர்கள் எழுதின வார்த்தைகள் சொல் சொல்லாகக் கடவுளால் கொடுக்கப்பட்டிருந்தன என்று சிலர் சொல்லியிருக்கிறார்கள்.

(ii) ஆனால் அவர்கள் எழுதின புஸ்தகங்களைக் கவனமாய் ஆராய்ந்துபார்த்தால், அவைகளில் வெவ்வேறான பாஷை நடைகளையும், ஒன்றுக்கொன்று சில வித்தியாசங்களையுங் காண்கிறோம். பவுலினுடையபாஷைநடை

ஒரு விதம்; யோவானுடைய பாஷை நடை வேறொருவிதம். ஆமோஸ் தீர்க்கதரிசியும், ஓசியா தீர்க்கதரிசியும் ஒரேவிதமாய்ப் பேசினதில்லை. இஸ்ரவேலரைப்பற்றிய சரித்திரம், ராஜாக்களின் புஸ்தகங்களில் ஒரு விதமாயும், நாளாகம புஸ்தகங்களில் வேறொருவிதமாயும் சொல்லியிருக்கிறது. புதிய ஏற்பாட்டிலே இயேசுகிறிஸ்து இராப்போஜன நற்கருணையை ஸ்தாபிக்கிறதைப் பற்றிய விவரங்களில், சில விஷயங்களில் இசையாத நாலு சரித்திரங்களை நாம் காண்கிறோம். மத் $26^{26}$ மாற் $14^{22}$ லூக் $22^{17}$ 1 கொரி $11^{23}$. பண்டிதர்கள் சரித்திரங்களை எழுதும்போது அவர்கள் இயல்பாய் விடும் பிழைகள் எப்படிப்பட்டவைகளோ, அப்படிப்பட்ட பிழைகள் வேதத்திலே காணப்படும். அப்படியிருந்தால், பரிசுத்தஆவி வேதாகம ஆசிரியருக்குச் சொல் சொல்லாக வேத சரித்திரத்தை உரைத்திருக்கிறதில்லையென்பது நிச்சயம்.

(iii) லூக்கா தனது சுவிசேஷத்தை எழுதினமாதிரியை விளக்கியிருக்கிறான். லூக் $1^{1-4}$. இதிகாசர் அதிகமாய்ப் படித்து, கவனமாய்ப் பாரம்பரியங்களையும் சேர்த்துக்கொண்டு, ஒத்துப்பார்த்து, திட்டமாய் விசாரித்தறிந்து, கடைசியாகப் புஸ்தகத்தை இயற்றுகிறதுபோல, லூக்கா கடவுள் தனக்குக் கொடுத்த புத்தியினாலும், சாமர்த்தியத்தினாலும், தனது சுவிசேஷத்தை எழுதினான்.

(iv) ஒரு மனுஷன் தானே செய்யக்கூடியதைக் கடவுள் அவனுக்காகச் செய்யமாட்டார் என்றும், கடவுள் ஒவ்வொரு ஆசிரியனின் மனுஷீக திறமையின்படியும் சுவாபத்தின்படியும், வேதாகமங்களை எழுதுகிறதற்கு இடங்கொடுத்தார் என்றும் சொல்லவேண்டும். ஆசிரியருடைய கைப்பிசகுகளினாலும் அறியாமையினாலும் வந்த பிழைகள் வேதாகமத்திலேயிருந்தாலும், வேதாகமத்திலிருக்கிற வெளிப்படுத்தல் நம்பத்தகாததாக எண்ணக்கூடாது. உலகத்தாருக்கு அந்த வெளிப்படுத்தல் தலைமுறை தலைமுறையாகக் கொடுக்கப்படக் கூடுமென்பது வேதாகமத்தைப்பற்றியகடவுளுடையநோக்கமேஎன்று நாம் சொல்லலாம். அதை நிறைவேற்றும்படி ஆசிரியருக்கு உதவிசெய்வார் என்று நினைக்கலாம். மனுஷர் கடவுளைப்பற்றிய வெளிப்படுத்தல் அடையும்படிக்கும், நம்பத்தக்கச் சாதனங்கள் எழுதப்படும்படிக்கும் வேண்டியவைகள் எவைகளோ, அவைகளைப் பராபரன் செய்வார். சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் வேதாகமத்தின் நோக்கத்தின் அளவுக்குத் தக்கதாக, கடவுள் ஆக்கியோன்களை ஏவ, அவர்கள் தேவ அருளுக்குக் கீழ்ப்படிந்து, நாம் நம்பக்கூடிய ஆகமங்களை எழுதினார்கள்.

(5) வேதாகமத்தின் நோக்கம். 2 தீமோ $3^{16-17}$. கடவுளுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாயிருக்கும்படியாகவும், வேதவாக்கியங்களெல்லாம்உபதேசத்துக்கும்சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்கிறதற்கும் அருளப்பட்டிருக்கின்றன. வேத சரித்திரங்களிலும் பலவித விவரணங்களிலும் சிறு சிறு பிழைகளை நாம் கண்டுபிடித்தால், வேதத்தின் சரியான நோக்கமென்னவென்று ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும். அதாவது: சரித்திரத்தையும், சகல சாஸ்திரத்தையும், தத்துவ ஞானத்தையும் போதிக்கிறதற்கல்ல, உலகத்தார் தம்மை அறியும்படிக்கும், அவரைச் சேவிக்கும்படிக்கும், கடவுள் வேதாகமங்களை எழுதுவித்தார்.

V. வேதாகமம் கிறிஸ்தவ சபையில் வழங்குதல். கிறிஸ்தவர்கள் எப்படி வேதத்தை உபயோகித்தார்கள் என்பதைக்குறித்து இந்தப் பிரிவில் சுருக்கமாய்க் காட்டுவோம்.

1. தொடக்கத்தில் புஸ்தகங்களெல்லாம் கையினாலெழுதப்பட வேண்டுமாதலால், வேத புஸ்தகம் மிகவும் அருமை. வேத புஸ்தகத்தை வைத்திருக்க விரும்பின எவனும் தன் சொந்தக்கையினால் பிரதியை எழுதவேண்டும். ஐசுவரியமுள்ளவர்கள் சபையிற் சேரத் தொடங்கின காலமுதல், புஸ்தக வியாபாரிகள் தங்கள் அடிமைகளைக்கொண்டு, வேதாகம புஸ்தகங்களைப் பெயர்த்தெழுதுவித்து, ஆதாயத்துக்காக அவைகளை விற்றுவந்தார்கள். ஆச்சிரமங்கள் ஸ்தாபித்தபின், அவைகளிலிருந்த சந்நியாசிகளுடைய முக்கிய ஊழியம், வேதப்பிரதிகளைப் பெயர்த்தெழுதுவதே. பிற்காலங்களில் அச்சியந்திரங் கண்டுபிடித்ததால் இலட்சக் கணக்கான வேத புஸ்தகங்கள் பிரசுரம் ஆகின்றன. பிரதேசங்களிற் சுவிசேஷத்தை அறிவிக்கிறதற்கு ஆதாரமாக வேதாகம சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. லண்டன் சத்தியவேத சங்கம் (*British and Foreign Bible Society*), செய்த முயற்சியினால் தற்காலத்தில் (1926) 579 பாஷைகளில் தேவவாக்கு பிரசுரம் பண்ணப்பட்டிருக்கிறது.

2. கிறிஸ்தவசபை ஆராதனைகளில் வேதாகமத்தைப் பலவிதமாய் உபயோகித்திருக்கிறது. யூதர்கள் ஜெப ஆலய ஆராதனையில் நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் வாசித்ததுபோல், ஆதிக்கிறிஸ்தவர்கள் இவைகளை மாத்திரமல்ல சுவிசேஷங்களையும் நிருபங்களையும் ஒழுங்காய் வாசித்து

வந்தார்கள். தற்காலத்திலே ஒவ்வொரு கிறிஸ்தவசபையும் வேத வசனங்களுக்குச் செவிகொடுக்கிறது. வியாக்கியானமில்லாமல் வேத வசனங்களை வாசிக்கிறதோடே தெரிந்துகொண்ட ஒரே வாக்கியத்தை விளக்கி, அதன் போதனையை வற்புறுத்திப் பிரசங்கஞ்செய்வது எல்லாச் சபைகளின் வழக்கம். சங்கீதங்களும் வேதாகமத்தில் வேறு பல கீதங்களும் (லூக் $1^{46-55,68-79}$ $2^{14}$ $2^{29-32}$) சபையாரால் அடிக்கடி பாடப்படும். கர்த்தருடைய ஜெபம் எங்குமுள்ள சபைகளால் சொல்லப்படுகிறது மாத்திரமல்ல, பலவித ஜெப ஒழுங்குகளுக்கு வேதாகமத்திலிருக்கிற பிரார்த்தனைகளும் வேண்டுதல்களும் ஆதாரமாயிருக்கின்றன. ஓய்வுநாட் பள்ளிக்கூடங்களிலும், வேதவகுப்புகளிலும் பிள்ளைகளும் மற்றவர்களும், கிரமமாய் வேதத்தைப் படிக்கிறார்கள்.

பகிரங்கமான கூட்டங்களில் மாத்திரமல்ல அவரவர் வீடுகளில் வேதத்தை வாசிப்பது கிறிஸ்தவர்களுக்கு அதிகப் பிரயோஜனமுள்ளதும், அவர்களுக்குப் பிரதானமான கடமையுமாயிருக்கிறது.

3. வேதாகமம் கிறிஸ்தவ ஜீவியத்தைமுழுவதும் விசேஷமாய்த் திருச்சபையின் ஜீவியத்தையும் வணக்கத்தையும் ஊழியத்தையும் நடத்தும் ஒரு வழிகாட்டியாக, கிறிஸ்தவர்கள் வேதத்தை எப்பொழுதும் எண்ணியிருக்கிறார்கள். நமது விசுவாசத்துக்கும் நடைக்கும் போதிய பிரமாணம் இதுவே. சத்திய வேதம் கடவுளுடைய அதிகாரத்துடன் நமது இருதயத்திற் பேசுகிறது. 'இரட்சிப்படைவதற்கு அவசியமாய் அறியவேண்டியவைகள் எல்லாம் பரிசுத்த வேதவாக்கியங்களில் அடங்கியிருக்கிறது. ஆகையால் அவைகளிற் கண்டிராததும், அவைகளால் ரூபிக்கப்படாததுமான யாதொன்றையும் விசுவாசிக்க வேண்டிய பிரமாணம் என்று ஒப்புக்கொள்ளவும், இரட்சிப்புக்கு அவசியம் என்றும் எண்ணவும், ஒருவருக்குக் கட்டளையிடக்கூடாது' என்று அங்கிலேய சபையார் கைக்கொள்ளுகிற இந்தப் பிரமாணத்தை ஏறக்குறைய எல்லாக் கிறிஸ்தவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

வேர். **Root**. யோபு $14^{8}$ மத் $13^{21}$ மாற் $4^{17}$.

சந்ததியான். ஏசா $11^{10}$ $14^{29}$ வெளி $5^{5}$ $22^{16}$.

காரணம். உபா $29^{18}$ 1 தீமோ $6^{10}$ எபி $12^{15}$.

மூலம். யோபு $19^{28}$ ரோம $11^{16}$.

வேர்வை. **Sweat**. ஆதி $3^{19}$ எசே $44^{18}$ லூக் $22^{44}$.

வேலி. **Hedge**. 'அடைப்பு'. சங் $80^{12}$ பிர $10^{8}$.

'சுவர்'. எசே $13^{5}$.

'மதில்'. சங் $89^{40}$.

'வேலி'. யோபு $1^{10}$ ஏசா $5^{5}$ நாகூ $3^{17}$ மாற் $12^{1}$ லூக் $14^{23}$.

'முள்வேலி'. நீதி $15^{19}$.

வேலை. **Work**. ஆதி $5^{29}$ யாத் $12^{16}$ $20^{9}$ $31^{3}$ $35^{31}$ லேவி $16^{29}$ $23^{3}$ எண் $28^{18}$ உபா $5^{13}$ 1 இரா $7^{14}$ 1 நாளா $22^{15}$ $28^{21}$ 2 நாளா $24^{13}$ நெகே $10^{33}$ எரே $17^{24}$ ஆகா $1^{14}$ லூக் $10^{40}$ 1 தீமோ $3^{1}$ 2 தெச $3^{10}$.

'வேலையாட்கள்'. மத் $9^{37}$ $20^{1}$ லூக் $10^{2}$.

'உடன் வேலையாட்கள்' பிலி $4^{3}$ 1 தெச $3^{2}$ பிலே $1^{1,24}$.

வேலைக்காரன். **Servant**. **Slave**.

I. பழைய ஏற்பாடு.

பூர்வ காலத்தில் பலவித வேலைக்காரர் இருந்தார்கள். சிலர் தங்கள் எஜமான்களுக்குத் தோழர்கள். 2 சாமு $9^{2}$. சிலர் எஜமான்களுடைய வீட்டிலிருந்தார்கள். சிலர் எஜமான்களுக்கு உக்கிராணக்காரரும் லிகிதருமாய் இருந்தார்கள். ஆனால் எபிரெயருடைய வேலைக்காரர் சாதாரணமாய் அவர்களுடைய அடிமைகளாயிருந்ததினாலே அடிமைகளைப்பற்றி நியாயப்பிரமாணத்திலும் மற்ற எபிரெய நூல்களிலும் விபரமாய்ச் சொல்லியிருக்கிறது.

1. அடிமை தன் எஜமானுடைய பொருள்களில் ஒன்று. இவனுடைய நிலைமை ஆடுமாடுகளைப்போல இருந்தது. ஆதி $12^{16}$ யாத் $20^{17}$. எஜமான் இவனைக் கொடூரமாய் அடித்துத் தண்டிக்கிறதற்குத் தடையில்லை. யாத் $21^{21}$. ஆனால் எஜமான் அவனை அடிக்கும்பொழுது அவன் இறந்துபோனால், எஜமானே குற்றவாளியாவான். நீதி $29^{19}$. அடிமைகளுக்கு வெகு கஷ்டம் இருந்தது. ஆதி $16^{6}$ 1 சாமு $25^{10}$ 1 இரா $2^{39}$. அடிமைப் பெண்களுங்கூடத் தங்கள் எஜமான்களின் கைவசத்திலிருந்தார்கள். யாத் $21^{7}$ $22^{16}$ லேவி $19^{20}$ உபா $22^{28}$. வீட்டின் வேலைகளையெல்லாம் அடிமைகள் செய்வார்கள். 1 சாமு $25^{41}$.

2. எபிரெயர் தாங்கள் யுத்தத்திலே சிறைபிடித்தவர்களை அடிமைகளாக்கினார்கள். தேவாலயத்திலே வேலைசெய்யும்படி சிலர் நியமிக்கப்பட்டார்கள். யோசு $9^{23}$ நெகே $7^{57}$. சமாதான காலங்களில் தூரதேசத்திலிருந்து வரும் அடிமைகளை விற்கிற வியாபாரிகளிடத்திலிருந்து அடிமைகளை வாங்கிக்கொள்ளுவார்கள். எசே $27^{13}$ ஆமோ $1^{6}$. எபிரெ

யர்களில் திருட்டுக்குற்றத்தில் அகப்பட்டவர்கள் அடிமைகளாக்கப்பட்டார்கள். யாத் $22^{3}$. எபிரெயரில் சிலர் தரித்திரத்திலும் கடனிலும் விழுந்து அவற்றைத் தீர்க்கும்படியாகத் தங்களை அடிமைகளாக விற்றுப் போடுவார்கள். யாத் $21^{2}$ லேவி $25^{39}$ உபா $15^{12}$ ஆமோ $2^{6}$ $8^{6}$. சில சமயங்களிலே அவர்கள் தங்கள் பிள்ளைகளை அடிமைகளாக விற்பார்கள். யாத் $21^{7}$ 2 இரா $4^{1}$ ஏசா $50^{1}$.

3. அக்காலத்தில் ஒருவன் மனைவிகளையும் மறுமனையாட்டிகளையும் கிரயத்துக்கு வாங்குவான். ஆகையால் பல விஷயங்களில் அவர்கள்மேல் அவனுக்கு அதிகாரம் உண்டு. இதினிமித்தமே அடிமைகளுக்கும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அத்தனை வித்தியாசம் தோன்றுகிறதில்லை. எஜமான் அடிமையின்மேல் நம்பிக்கை வைக்கிறதைப்பற்றி வேதாகமத்தில் பல தடவை வாசிக்கிறோம். ஆதி 24 அதி. அடிமை எஜமானுக்குச் சுதந்தரவாளியாயும் இருக்கலாம். ஆதி $15^{1}$. எஜமானுக்கும் அடிமைக்கும் சிநேகம் உண்டு. நியா $19^{11}$ 1 சாமு $9^{5}$. அடிமை எஜமானுடைய மகளை விவாகஞ் செய்யலாம். 1 நாளா $2^{34}$. அடிமை கனம் அடையலாம். 1 சாமு $9^{22}$ 2 இரா $8^{4}$. அடிமைகள் கண்ணியம் அடைகிறதைக் குறித்துப் பழமொழிகள் உண்டு. நீதி $14^{35}$ $17^{2}$ $19^{10}$ $30^{22}$. வீட்டெஜமாட்டி அடிமைப் பெண்களின் ஊழியத்தை மேற்பார்வையிடுவாள். நீதி $31^{15}$. அடிமைப்பெண் எஜமானுக்கு மறுமனையாட்டியாய் இருக்கும்பொழுதே அவனுக்குச் சித்தமானால் அவள் மகனுக்குக் குடும்பசுதந்தாம் உண்டு. ஆதி $25^{6}$. தங்கள் எஜமான்கள் துன்மார்க்கஞ் செய்கிறதற்கு அடிமைகள் உதவிசெய்வார்கள். 1 சாமு $2^{13}$ 2 சாமு $13^{17}$.

4. அமஞ்சிவேலை செய்யும்படி ராஜாக்கள் ஆயிரக்கணக்கான அடிமைகளை ஏற்படுத்துவார்கள். ஆனால் இவர்கள் சாதாரண அடிமைகள் அல்ல. 1 இரா $5^{13}$. சவுலின் காலத்தில் தனவான் ஒருவனுக்கு இருபது அடிமைகள் உண்டு. 2 சாமு $9^{10}$. பிந்தின காலத்தில் அடிமைகள் ஏராளம். நெகே $7^{66}$. நியாயப்பிரமாணத்தின்படி ஒரு அடிமையின் விலை 30 சேக்கல்=60 ரூபாய். யாத் $21^{32}$.

5. அடிமைகளைப்பற்றிய பிரமாணங்கள். அடிமைகள் விஷயத்தில் இஸ்ரவேலர் கைக்கொண்ட பிரமாண நூலில் பூர்வீகத்திலும் ராஜாக்களின் காலத்திலும் பிந்தின காலங்களிலும் இயற்றின நியாயப்பிரமாணங்கள் மூன்று சேர்க்கப்பட்டிருக்கிறது என்று வேதசாஸ்திரிகள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அவையாவன:

(a) உடன்படிக்கையின் புஸ்தகம். யாத் 21–23 அதி.

(b) உபாகமம்.

(c) லேவியராகமம்.

இவைகளில் ஆதி நியாயப்பிரமாணங்கள் விசேஷமாய் எபிரெய அடிமையைப்பற்றிப் பேசுகிறது. உபாகமம் எல்லா அடிமைகளுக்கும் காண்பிக்கவேண்டிய நல் இரக்கத்தையும் ஒழுக்கத்தையும்பற்றிச் சொல்லுகிறது. லேவியராகமத்தில் இஸ்ரவேலர் அடிமைத்தனத்திலிருப்பது தகாத காரியம் என்றும் அவர்கள் அந்த நிலைமையில் விழுந்தால் விடுதலை யடையவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறது.

i. பத்துக்கற்பனை என்னும் பிரமாண நூலின்படி அடிமை முற்றிலும் தன் எஜமானுடைய கைவசத்திலிருந்தான். ஆனால் இவன் தன் எஜமானின் குடும்பத்தாரில் ஒருவன் என்றும், எஜமானுடைய சன்மார்க்கப் பிரமாணத்துக்கு அடங்கினவன் என்றும் தோன்றுகிறது. யாத் $20^{17}$ இதினிமித்தம் இவனுக்கு ஓய்வுநாளில் இளைப்பாறுதல் உண்டு.

உடன்படிக்கையின் நூல் (யாத் $20^{22}$-$23^{33}$) இப்படியே பிரமாணங்களை ஏற்படுத்துகிறது. யாத் $23^{12}$. அடிமையானவன் பண்டிகையில் பங்கு பெறவேண்டுமென்று உபாகமத்தில் சொல்லியிருக்கிறது. உபா $12^{12}$. ஜனங்கள் செலுத்தின பலிகளை ஆசாரியனுடைய அடிமை ஆசாரியனைப்போலவே சாப்பிடலாம் என்று லேவியராகமத்தில் சொல்லியிருக்கிறது. லேவி $22^{10}$.

ii. உடன்படிக்கை நூலின்படி, எஜமான் அடிமையைக் கொன்றுபோட்டால் அவன் மரிக்கவேண்டும். யாத் $21^{12}$ = லேவி $24^{17}$. எஜமான் கொடூரமாய் அடிமையை அடித்தால் அவனுக்குத் தண்டனை உண்டு. யாத் $21^{20}$. எஜமான் செய்த கொடூரத்தினால் அடிமைக்குப் பெரிய சேதம் நேரிட்டால் எஜமான் அவனை விடுதலையாக்கவேண்டும். யாத் $21^{26}$. எபிரெயர்கடன் தீர்க்கும்படி எபிரெயனாகிய கடனாளியை அடிமைத்தனத்தில் விற்றபோதிலும் அடிமைகளாக்கும்படி எபிரெயர்களைத் திருடுவது மகா பாவம் என்று அவர்கள் எண்ணினார்கள். யாத் $21^{16}$ = உபா $24^{7}$. உபாகமத்தின்படி புறதேசத்திலிருந்து ஒரு அடிமை தங்கள் தேசத்துக்கு ஓடிவந்தால், எபிரெயர் அவனை அவனுடைய எஜமான் கையில் ஒப்புக்கொடுக்கக்கூடாது. உபா $23^{15}$. யுத்தத்தில் சிறையாக்கப்பட்ட பெண்களுக்கு நீதி

நியாயம் செய்யவேண்டுமென்று உபாகமத்தில் சில பிரமாணங்கள் உண்டு. உபா 21[10].

iii. அடிமைத்தன நிலையில் அகப்பட்ட எபிரெயனுக்கும் அந்நியஜாதி அடிமைக்கும் இந்த விஷயத்தில் வித்தியாசம் என்னவென்றால், எபிரெய அடிமை விடுதலை பெறும்படிக்கு சிலாக்கியம் பெற்றவனாயிருந்தான். உடன்படிக்கைப் பிரமாணத்தின்படி ஆறு வருஷக்காலம் வேலைசெய்த பிறகு அவனுக்கு விடுதலை கிடைக்கும். யாத் 21[5] விடுதலைபெற அவனுக்குப் பிரியம் இல்லாவிட்டால், இவனுடைய எஜமான் தன் வாசல் நிலைக்கு இவனைக் கொண்டுவந்து இவன் காதில் ஊசியினால் ஒரு துவாரமிட்டு, இவ்விதமாய்த் தான் தன் குடும்பத்தில் எப்பொழுதும் இவனை ஏற்றுக்கொள்ளுகிறதாகக் காண்பிக்கிறான். யாத் 21 அதி மு. பூர்வகாலத்தில் அடிமைப்பெண்கள் தங்கள் எஜமான்களுக்கு மறுமனையாட்டிகளாயிருந்ததினாலே, அவர்களுக்கு வழக்கமாய் விடுதலை இல்லை. ஆனால் இவளுடைய குடும்பத்தார் இவளை மீட்கலாம். எஜமான் தன் மகனுக்கு அடிமைப் பெண்ணை மனைவியாகக் கொடுக்கலாம். எஜமான் வேறொருத்தியைத் தனக்கு மனைவி அல்லது மறுமனையாட்டியாகச் சேர்த்துக்கொள்ளும்பொழுது, தான் தள்ளிவிட்ட வேலைக்காரியைத் தகுந்தவிதமாய்ச் சவரக்ஷணை செய்யவேண்டும். அவன் அப்படிச் செய்யாவிட்டால் விடுதலை பெறும்படி இவளுக்குப் பாத்தியம் உண்டு. யாத் 21[7].

iv. உபாகமத்தில் அடிமைகளுக்கு விடுதலை செய்கிறதைப்பற்றிய பிரமாணங்கள் உண்டு.

*a*. ஆண்களுக்கும் போலவே பெண்களுக்கும் விடுதலை இருக்கவேண்டும். அடிமைப் பெண்ணுக்கு அடிமைதான் புருஷனாய் இருக்கலாம். அடிமைப்பெண்கள் சாதாரணமாய்த் தங்கள் எஜமான்களுக்கு மறுமனையாட்டிகள் அல்ல.

*b*. எஜமான்கள் அடிமைகளை இரக்கமாய்க் காப்பாற்றவேண்டும். உபா 15[12].

v. விடுதலையைப்பற்றிக் கவனிக்கவேண்டிய பல விஷயங்கள் லேவியராகமத்தில் உண்டு.

*a*. தரித்திரத்தினாலே தன்னை அடிமைத்தனத்துக்கு விற்றுப்போட்ட எபிரெயன் யூபிலி வருஷத்தில் விடுதலையடைவான். லேவி 25[39].

*b*. எபிரெயர் அந்நிய ஜாதி அடிமைகளை மாத்திரம் வாங்கவேண்டும்.

*c*. அந்த அந்நிய ஜாதி அடிமைகளுக்கு விடுதலையில்லை. லேவி 25[46].

*d*. இஸ்ரவேலன் அந்நிய ஜாதியாருக்குத் தன்னை விற்றுப்போட்டால் இவனுடைய இனத்தார் இவனை மீட்கவேண்டும். யூபிலி வருஷத்தில் எப்படியாவது இவனுக்கு மீட்பு உண்டு. லேவி 25[47].

இந்தப் பிரமாணங்களை நாம் விசாரிக்கும்பொழுது இஸ்ரவேலர் சிறையிருப்புக்காலத்தில் அவர்கள் இஸ்ரவேலின் அடிமையாயிருப்பது தகாது என்றும், எபிரெயர் அடிமைகளின்மேல் இரக்கம் காட்டவேண்டுமென்றும் அறிந்தார்கள் எனக் காண்கிறோம். யோபின் ஆகமத்திலும் யோவேல் தீர்க்கதரிசியின் ஆகமத்திலும் கடவுளுக்கு முன்பாக எல்லாருக்கும் நீதி நியாயத்தைச் செய்யவேண்டுமென்றும்; கடவுள் யாதொரு பேதமுமின்றி யாவர்மேலும் தமது பரிசுத்த ஆவியை அருளுவார் என்றும் சொல்லி இருக்கிறது. யோபு 31[13] யோவேல் 2[29]. இந்த வசனங்களை நாம் பார்த்தால் அடிமைத்தனத்தில் ஆட்களை வைப்பது தகாதது என்றும், சகலரும் கடவுளுக்கு முன்பாக ஒரே நிலைமையிலிருந்தார்கள் என்றும் எபிரெயரில் சிலர் நினைத்ததாகத் தோன்றுகிறது.

II. புதிய ஏற்பாடு.

இயேசுகிறிஸ்து தமது காலத்திலுள்ள ஜனங்கள் அனுசரித்த குடும்ப ஆசாரங்களையும் ராஜாங்கவிஷயங்களையும் பலவந்தமாய் மாற்றும்படி பிரயாசப்படவே இல்லை. ஆதலால் அடிமைத்தனத்தின் கொடூரத்தையும் அநியாயத்தையும்பற்றி அவர் ஒன்றும் போதிக்கவும் இல்லை, தாம் சொன்ன உவமைகளில் அதைக்குறித்துப் பேசி அதைக் கண்டிக்கவும் இல்லை. மத் 18[25] 24[45] மாற் 12[2] லூக் 17[7] யோவா 8[35]. இதினிமித்தம் அடிமைத்தனமானது குற்றமில்லை என்று இயேசுகிறிஸ்து நினைத்தார் என்று சிலர் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்வது தப்பிதம். அடிமைத்தனத்தை நீக்கும்படி இயேசு வெளிப்படையாய் ஒன்றும் சொல்லாவிட்டாலும், இந்த விஷயத்தில் அவர் அருளிய சுவிசேஷமானது ஓர் நல்ல விதையைப்போல் முளைத்து வளர்ந்து, தகுந்த பலன் கொடுக்கிறதைப்போல, பிந்தின வருஷங்களில் கிறிஸ்தவர்கள் அடிமைகளை உடையவர்களாயிருப்பது மகா அநியாயம் என்று எல்லாரும் தீர்மானிக்கும்படி அவர்களை ஏவினது.

அவ்வண்ணமே பரி. பவுலும் கிறிஸ்தவர்கள் அடிமைகளை யுடையவர்களா யிருப்பதைக் கண்டியாவிட்டாலும், கிறிஸ்தவ மார்க்கத்தில் பிரவேசித்த அடிமைகளைக் குறித்து அவன் போதித்தவைகளை நாம்

விசாரித்தால் அவனுடைய போதனைக்கு அமைந்து நடக்கிறவர்கள் கடைசியில் அடிமைகளை உடையவர்களாயிருப்பது பெரிய அநியாயம் என்பதை அறிவார்கள் என்று நாம் நன்றாய் அறியலாம். ஒரு சபையைச் சேர்ந்த ஒரு 'சகோதரன்' அந்தச் சபையைச்சேர்ந்த இன்னொரு சகோதரனை அடிமைத்தனத்தில் வைக்கலாமா? கலா 3²⁸ 1 தீமோ 6².

சில வசனங்களில் பரி. பவுல் சொன்ன 'வீட்டார்' என்பவர்களில் அநேகர் அடிமைகள். ரோம 16¹⁰ 1 கொரி 1¹¹ பிலி 4²² இவர்கள் தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்து நீதி நியாயத்தைச் செய்யவேண்டுமென்று அவன் போதிக்கிறான். ஒருவன் அடிமையாயிருந்தால் அவன் கிறிஸ்துவுக்கு முன்பாக உத்தமனாயிருந்து, ஒழுங்காய் நடந்து, நற்குணங்களை அடையவேண்டும். 1 கொரி 7²¹ எபே 6⁵ கொலோ 3²² 1 தீமோ 6¹ தீத் 2⁹.

ஒநேசிமு என்னும் அடிமை தன் எஜமானாகிய பிலேமோனை விட்டு ஓடிப்போனபொழுது, தனக்குப் பிரியமான சகோதரனாகிய அந்த அடிமை பிலேமோனுக்குக் கர்த்தருக்குள் பிரியமுள்ளவனாயிருக்க வேண்டும் என்று பரி. பவுல் சொன்னதினால், இயேசுகிறிஸ்துவுக்குள் அடிமைகள் அடையப்போகிற சிலாக்கியத்தைக் குறிப்பிட்டுப் பேசுகிறான். மேலும் அவன் இயேசுகிறிஸ்துவுக்குள் அடிமைகளுக்கும் சுயாதீனருக்கும் வித்தியாசம் இல்லையென்று போதித்ததினாலே அடிமைகள் அனைவரையும் அடிமைத்தனத்திலிருந்து மீட்கும்படிக்கான காரணத்தைக் காண்பித்தான். அந்தப் போதனையை ஏற்றுக்கொண்டவர்கள் தங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எஜமான்களாகித் தங்களுக்கும், தங்கள் அடிமைகளுக்கும், யாதொரு வித்தியாசத்தையும் ஏற்படுத்தாமலிருக்கும்பொழுது, தாங்கள் அவருடைய சித்தத்துக்கு விரோதமாய் வித்தியாசங்களை உண்டுபண்ணுவது பாவம் என்பதை உணரவந்தார்கள். 1 கொரி 12¹³ கலா 3²⁸ கொலோ 3¹¹.

வேலைக்காரி. **Maid-servant.** ஆதி 12¹⁶ 20¹⁸ 31³³ யாத் 20¹⁰·¹⁷ 21⁷ உபா 5¹⁴ 12¹² 15¹⁷ நீதி 27²⁷ 31¹⁵ சங் 123² எரே 34⁹ மாற் 14⁶⁶ லூக் 12⁴⁵ 22⁵⁶. வேலை காண்க.

வேவிக்கிறது. **Boil.** வேகிறது காண்க.

வேவுகாரர். **Spies.** ஆதி 42⁹·¹⁴·¹⁶ எண் 13¹⁶ யோசு 2¹ 6²² 1 சாமு 26⁴ 2 சாமு 10³ 15¹⁰ லூக் 20²⁰ எபி 11³¹.

வேளை. **Time.** எண் 9³ அப் 1⁷.

வேற்றுமை. **(Difference)** யாக் 1¹⁷.

## வை

வைக்கோல். **Straw.** ஆதி 24²⁵ யாத் 5⁷ நியா 19¹⁹ 1 இரா 4²⁸ யோபு 41²⁷ ஏசா 11⁷ 65²⁵.

வைடூரியம். **Agate, Chrysoprase.** யாத் 28¹⁹ 39¹² வெளி 21²⁰.

வைத்தியம். **Medicine.** அவுழ்தம், ஔஷதம், வியாதி காண்க.

வைத்தியன். **Physician.**

1. வைத்திய சாஸ்திரம் அறிந்தவன். ஆதி 50² யோபு 13⁵ மத் 9¹² லூக் 4²³ கொலோ 4¹⁴.

2. 'இரண வைத்தியன்' எரே 8²².

3. 'பரிகாரிகள்'. 2 நாளா 16¹².

4. 'இயேசு பரம வைத்தியன்'. மத் 9¹² மாற் 2¹⁷. அவுழ்தம், வியாதி காண்க.

வைப்பாட்டி. **Concubine.** தாணி 5². மறுமனையாட்டி காண்க.

வைரம். **Adamant.** சக 7¹². வச்சிரம், இரத்தினம் காண்க.

வைராக்கியம். **Zeal.** எண் 25¹¹ 2 இரா 10¹⁶ 19³¹ சங் 69¹⁰ 119¹³⁹ ஏசா 9⁷ 37³² அப் 21²⁰ 22³ கலா 4¹⁷.

'பக்தி வைராக்கியம்'. யோவா 2¹⁷ ரோம 10² 2 கொரி 7¹¹ பிலி 3⁶ கலா 1¹⁴ தீத் 2¹⁴.

## வௌ

வௌ. **Vau** எபிரெய எழுத்தட்டவணையில் ஆறும் எழுத்து. சங் 119⁴¹⁻⁴⁸-ல் ஒவ்வொரு வசனத்தின் முதல் பதத்தின் முதல் எழுத்து வௌ என்பதே.

வௌவால். **Bat.** லேவி 11¹⁹ உபா 14¹⁸. துரிஞ்சல் காண்க.

# INDEX

OF

## ENGLISH TITLES AND OF SPECIAL TERMS

THIS index is intended to help the reader who knows the English title (*e.g.* Atonement, High Places or a special technical term (*e.g.* Papyrus, Agrapha) to find the Tamil equivalent.

A number of proper names have been included, because the transliteration in Tamil differs from that in English (*e.g.* Jehu) or because they are the titles of important articles (*e.g.* Paul), but this is not a complete index of all the proper names.


### A

| | |
|---|---|
| Abomination | அருவருப்பு |
| 'Abomination of desolation' | பாழாக்கும் அருவருப்பு |
| Abraham | ஆபிரகாம் |
| Adamant | வைரம் |
| Adoption | புத்திர சுவிகாரம் |
| Adultery | விபசாரம் |
| Advent, The Second | வருகை |
| '*Aion*' | மாணிக்கெயர் |
| '*Agape*' | அன்புவிருந்து |
| Agate | வைடூரியம் |
| '*Agrapha*' | இயேசுகிறிஸ்து சொன்ன வாக்குகளில் எழுதப்படாதவை |
| Agriculture | விபசாயம் |
| Ahasuerus | அகாஸ்வேரு |
| Alabaster | கல் |
| Almond | வாதுமை |
| Alms | தருமம் |
| ,, | பிச்சை |
| Almug tree | வாசனைமரம் |
| Altar | பலிபீடம் |
| Ambassador | ஸ்தானாபதி |
| Amos | ஆமோஸ் |
| '*Anathema*' | சாபத்தீடு |
| Angel | தூதன் |
| Anointing | அபிஷேகம் |
| Antichrist | அந்திக்கிறிஸ்து |
| Antiochus Epiphanes | மக்கபெயர் |
| Apocrypha | அப்போகிரிப்பா |
| Apollo | பீத்தோதேவன் |
| Appeal | அபாயம் |
| Apple of the eye | மணி |
| Arians | அரியானர் |
| Armenian Church | அர்மேனிய சபை |
| Arms | ஆயுதம் |
| Army | சேனை |
| Ascents, Psalms of | ஆரோகண சங்கீதம் |
| '*Ashera*', '*Asherim*' | அசேரா |
| Asp | விரியன் |
| Assembly | சபை |
| Assurance of faith | விசுவாசத்தின் பூரண நிச்சயம் |
| Assyria | அசிரியா |
| Athanasius | அதனாசி |
| Atonement | பாவ நிவாரணம் |
| ,, | பிராயச்சித்தம் |
| ,, | மீட்கும் பொருள் |
| ,, Day of | பாவநிவிர்த்திசெய்யும் நாள் |
| Augustine | அகுஸ்தீன் |
| Auricular confession | பாவசங்கீர்த்தனம் |
| Avenger | பழிவாங்குகிறவன் |
| '*Azazel*' | பண்டிகை |

### B

| | |
|---|---|
| Baal | பாகால் |
| Babel, Tower of | பாபேல் |
| Babylon | பாபிலோனிய ராஜ்யம் |
| Bag | பை |
| Balaam | பிலேயாம் |
| Balm | பிசின்தைலம் |
| '*Bamah*' | மேடை |
| '*Bamoth*' | மேடை |
| Ban | சாபத்தீடு |
| Band | போர்ச்சேவகர் |
| ,, | சேனை |
| Banner | கொடி |

| | | | |
|---|---|---|---|
| Baptism | ஞானஸ்நானம் | | |
| ,, | 'பாப்டிஸம்' | | |
| Barley | வாற்கோதுமை | | |
| Baruch, Book of | பாருக்கின் ஆகமம் | | |
| Bat | வௌவால் | | |
| Bay-tree | புன்னைமரம் | | |
| Bdellium | பிதோலாகு | | |
| Beard | கூந்தல் | | |
| ,, | தாடி | | |
| Beast | மிருகம் | | |
| Behemoth | பிகெமோத் | | |
| Bel and the dragon | பேல் விக்கிரகமும் வலிய சர்ப்பமும் | | |
| Bell | மணி | | |
| Bible | வேதாகமம் | | |
| ,, Old Testament | ,, | I. | 1. |
| ,, Canon of O.T. | ,, | I. | 2. |
| ,, Language and text of O.T. | ,, | I. | 3. |
| ,, Apocrypha | ,, | II. | |
| ,, New Testament | ,, | III. | 1. |
| ,, Canon of N.T. | ,, | III. | 2. |
| ,, Language of N.T. | ,, | III. | 3. |
| ,, Translations | ,, | III. | 4. |
| ,. Characteristics | ,, | IV. | 1. |
| ,, Revelation | ,, | IV. | 2. |
| ,, Church usage | ,, | V. | |
| Birth | பிரசவம் | | |
| ,, | பேறு | | |
| Birth right | சேஷ்ட புத்திரபாகம் | | |
| ,, | புத்திர சுதந்தரம் | | |
| Bishop | கண்காணி | | |
| Blasphemy | தூஷணம் | | |
| Blessedness | பாக்கியம் | | |
| Boat | கப்பல் | | |
| Body | சரீரம் | | |
| Book | எழுத்து | | |
| ,, | புஸ்தகம் | | |
| Bow | வில் | | |
| Bowl | மொக்கு | | |
| Branch | கிளை | | |
| Brass | பித்தளை | | |
| Bread | அப்பம் | | |
| Breast plate | மார்பதக்கம் | | |
| Brethren of Jesus Christ | இயேசுகிறிஸ்துவின் சகோதரர் | | |
| Brotherly love | சகோதர சிநேகம் | | |
| Brick | செங்கல் | | |
| Bride | கலியாணம் | | |
| ,, | மணமகள் | | |
| Bridegroom | கலியாணம் | | |
| ,, | மணவாளன் | | |
| Bronze | வெண்கலம் | | |
| Bullock | மாடு | | |
| Burial | பிரேத அடக்கம் | | |


## C


| | |
|---|---|
| 'Calamus' | வசம்பு |
| Calling, Election | அழைப்பு |
| Calvary | கல்வாரி |
| Camphire | மருதோன்றிச் செடி |
| Canaan | கானான் |
| Candlestick | குத்துவிளக்கு |
| Captain | சேனாபதி |
| ,, | தளகர்த்தன் |
| Captivity, The | சிறையிருப்பு |
| Cart | வண்டில் |
| Castor and Pollux | மிதுனம் |
| Catholic | கத்தோலிக்கு |
| Cattle | மாடு |
| Caves | மலைக்குகைகள் |
| Census | குடிமதிப்பு |
| Centurion | நூற்றுக்கதிபதி |
| Channel | சாலகம் |
| ,, | மதகு |
| ,, | வாய்க்கால் |
| Chariot | இரதம் |
| Cherubim | கேருபீம் |
| Child-birth | பிரசவம் |
| Christian | கிறிஸ்தவன் |
| Christianity | கிறிஸ்தவ மார்க்கம் |
| Christology of N.T. | இயேசுகிறிஸ்துவின் தத்துவத்தைப் பற்றிய புதிய ஏற்பாட்டிலுள்ள கோட்பாடுகள் |
| Chronicles, Book of | நாளாகமம் |
| Chronology, Scripture | இஸ்ரவேல் (காலக் கணிதச் சுருக்கம்) |
| Chrysostom | கிறிசொஸ்தம் |
| Church | சபை |
| Circumcision | விருத்தசேதனம் |
| Cistern | கிணறு |
| Cities of the Plain | சமபூமியிலுள்ள பட்டணங்கள் |
| ,, Refuge | அடைக்கலப் பட்டணங்கள் |
| City | பட்டணம் |
| Cloud | மேகம் |
| Colossians, Epistle to the | கொலோசெயருக்கு எழுதின நிருபம் |
| Commandments, Ten | கற்பனைகள் |
| Communion | ஐக்கியம் |
| Compassion | இரக்கம் |
| Concubine | மறுமனையாட்டி |
| 'Conduit' | சாலகம் |
| Confession, Auricular | பாவ சங்கீர்த்தனம் |
| Congregation | சபை |
| Conscience | மனச்சாட்சி |

| | |
|---|---|
| Constantine | கொன்ஸ்தந்தின் |
| Conversion | குணப்படுதல் |
| Coral | பவளம் |
| '*Corban*' | 'கொர்பான்' |
| Corinth | கொரிந்து |
| Corinthians, First Epistle to the | கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம் |
| Corinthians, Second Epistle to the | கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபம் |
| Corner stone | மூலைக்கல் |
| Councillor | ஆலோசனைக்காரன் |
| ,, | பிரதானி |
| ,, | மந்திரி |
| Councils, General | சங்கம் |
| Counsellor | ஆலோசனைக்காரன் |
| ,, | பிரதானி |
| ,, | மந்திரி |
| Covenant | உடன்படிக்கை |
| Covetousness | பொருளாசை |
| Cow | மாடு |
| Creation | சிருஷ்டிப்பு |
| Creed | விசுவாசப்பிரமாணம் |
| Crimes | தீங்கு |
| ,, | தீமை |
| ,, | பாவம் |
| Crocodile | முதலை |
| Cross | சிலுவை |
| Crown | கிரீடம் |
| Cucumber | வெள்ளரிக்காய் |
| Cup | பாத்திரம் |
| ,, | பானபாத்திரம் |
| Cup-bearer | பானபாத்திரக்காரன் |
| 'Cutting of the flesh' | கீறுதல் |
| Cypress | மருதமரம் |
| Cyprian | சிப்பிரியன் |
| Cyrenius | சிரேனியு |
| Cyrus | கோரேஸ் |

**D**

| | |
|---|---|
| Dagon | தாகோன் |
| Damascus | தமஸ்கு |
| Dan | தாண் |
| Daniel, Book of | தானியேலின் ஆகமம் |
| Darius | தரியு |
| Daughter-in-law | மருமகள் |
| David | தாவீது |
| Deacon | உதவிக்காரன் |
| Deaconess | உதவிக்காரி |
| Dead, The | மரித்தோர் |
| Dead, The | ஆதேஸ் |
| ,, | ஷெவோல் |
| Death | மரணம் |
| Death | ஆதேஸ் |
| ,, | ஷெவோல் |
| Debt | கடன் |
| Deceit | மோசம் |
| Decrees, Divine | தேவதீர்மானம் |
| Deer | மான் |
| ,, | வெளிமான் |
| ,, | வரையாடு |
| ,, | மரை |
| Deluge | சலப்பிரளயம் |
| Delphi | பீத்தோதேவன் |
| Demons | பிசாசுகள் |
| 'Deputy' | அதிபதி |
| Destine | விதி |
| Deuteronomy | உபாகமம் |
| Devils | பிசாசுகள் |
| Devil-possession | பிசாசு பிடிக்கிறது |
| Dew | பனி |
| Diamond | வச்சிரம் |
| Diana | தியானாள் |
| Disciple | சீஷன் |
| Disease | வியாதி |
| 'Dispersion,' The | சிதறியிருக்கிறவர்கள் |
| Divination | சூனியவித்தை |
| ,, | பீத்தோதேவன் |
| Donatists | தோனாதிஸ்தர் |
| Door | வாசல் |
| Dove | காட்டுபுறா |
| ,, | புறா |
| 'Dragon' | வலுசர்ப்பம் |
| Dress | உடை |
| Drunkenness | மது |

**E**

| | |
|---|---|
| 'Earnest,' The | அச்சாரம் |
| Earth | பூமி |
| Earthen vessel | மண்பாண்டம் |
| Earthquake | பூமி அதிர்ச்சி |
| Ecclesiastes | பிரசங்கியின் புஸ்தகம் |
| Ecclesiasticus | ஞானம் |
| ,, | நீதி நூல்கள் |
| ,, | அப்போகிரிப்பா |
| Eden | ஏதேன் |
| Education | பள்ளிக்கூடம் |
| Egypt | எகிப்து |
| Elders | கண்காணிகளும் மூப்பர்களும் |
| ,, | மூப்பன் |
| Election | தெரிந்துகொள்ளுதல் |
| 'Elect lady' | 'தெரிந்துகொள்ளப்பட்டவள்' |
| Elijah | எலியா |
| '*Eloi, eloi! lama sabacthani*' | 'எலோயீ எலோயீ லாமா சபக்தானி' |
| Embalming | பிரேத அடக்கம் |
| Emmanuel | இம்மானுவேல் |

| | |
|---|---|
| Envy | பொறாமை |
| Ephesians, Epistle to the | எபேசியர் நிருபம் |
| Ephesus | எபேசு |
| '*Ephphatha*' | 'எப்பத்தா' |
| Epicureans | எப்பிக்கூரர் |
| Essenes | எசேனெயர் |
| Esther, Book of | எஸ்தரின் சரித்திரம் |
| Eternal life | நித்திய ஜீவன் |
| Eternity | நித்தியம் |
| Eucharist | இராப்போஜனம் |
| Eunuch | அண்ணகன் |
| Euraquilo | யூரோக்கிலிதோன் |
| Evangelist | சுவிசேஷகன் |
| 'Evil eye' | வன்கண் |
| Evil | தீமை |
| ,, | தீங்கு |
| ,, | பாவம் |
| Excommunication | சாபத்திடு |
| Exodus, Book of | யாத்திராகமம் |
| Extreme unction | அவஸ்தை பூசுதல் |
| Ezekiel | எசேக்கியேல் |
| Ezra | எஸ்றா |

## F

| | |
|---|---|
| Face | முகம் |
| Faith | விசுவாசம் |
| Faith, Full assurance of | விசுவாசத்தின் பூரண நிச்சயம் |
| Falcon | வல்லூறு |
| Falsehood | பொய் |
| Family | குடும்பம் |
| Famine | பஞ்சம் |
| Fasting | உபவாசம் |
| Fate | விதி |
| Father | குடும்பம் |
| ,, | பிதா |
| ,, | பிதாக்கள் |
| Fellowship | ஐக்கியம் |
| Feast and festivals | பண்டிகை |
| Fig tree | அத்திமரம் |
| Finger | விரல் |
| Fire | அக்கினி |
| First-born | சேஷ்டபுத்திரன் |
| Fish | மீன் |
| Flood, The Noachian | சலப்பிரளயம் |
| Flour | மா |
| Fly | ஈ |
| ,, | வண்டு |
| Food | ஆகாரம் |
| ,, | புசிக்கிறது |
| ,, | போஜனம் |
| Forehead | நெற்றி |
| Forgiveness | மன்னிப்பு |
| Form | சாயல் |
| ,, | ரூபம் |
| Fortress | கோட்டை |
| ,, | முற்றுகை |
| Fuller | வண்ணான் |

## G

| | |
|---|---|
| Galatia | கலாத்தியா |
| Galatians, Epistle to | கலாத்தியருக்கு எழுதின நிருபம் |
| Gall | பிச்சு |
| Garlic | வெள்ளைப்பூண்டு |
| Gate | வாசல் |
| Gehenna | கெகென்னா |
| Genealogy | வம்ச அட்டவணை |
| Genealogy of Jesus | இயேசுவின் வம்ச அட்டவணை |
| Genesis, Book of | ஆதியாகமம் |
| Gentiles | ஜனங்கள் |
| ,, | புறஜாதி |
| Giants | இராட்சதர் |
| Gift | ஈவு |
| ,, | வரம் |
| Gift of tongues | பாஷைகள் பேசும் வரம் |
| ,, | வரம் |
| Glory | மகிமை |
| Gnostics | கிஞோஸ்திகிகர் |
| Goat, wild | வரையாடு |
| ,, | வெள்ளாடு |
| God | கடவுள் |
| ,, | பராபரன் |
| Gold | பொன் |
| Golgotha | கல்வாரி |
| Gospel | சுவிசேஷம் |
| Gospel, Harmony of the | சுவிசேஷ அட்டவணை |
| Grace | கிருபை |
| Grass | புல் |
| Greece | கிரேக்க தேசம் |
| Greek Church | கிரேக்க சபை |
| Guile | வஞ்சகம் |
| Guest | விருந்தாளி |
| 'Gulf' | அகாதம் |

## H

| | |
|---|---|
| Habakkuk | ஆபகூக் |
| Hades | ஆதேஸ் |
| Hair | கூந்தல் |
| ,, | மயிர் |
| ,, | ரோமம் |
| Hand | கை |
| Hand, Right | வலதுகை |
| Hands, Laying on of | கைகளை வைப்பது |

| | |
|---|---|
| Harlot | வேசி |
| Harmony of the Gospels | சுவிசேஷ அட்டவணை |
| Harrow | பாரை |
| Hart | மரை |
| Hasmoneans | மக்கபெயர் |
| Hatred | பகை |
| ,, | வெறுக்கிறது |
| Heart | இருதயம் |
| 'Heathen' | 'அஞ்ஞானி' |
| Heaven | ஆகாயம் |
| ,, | பரமண்டலம் |
| ,, | வானம் |
| Heaven, The Host of | வானசேனை |
| Hebrews, Epistle to the | எபிரெயருக்கு எழுதின நிருபம் |
| Hell | ஆதேஸ் |
| ,, | கெகென்னா |
| ,, | ஷேவோல் |
| ,, | நரகம் |
| ,, | பாதாளம் |
| 'Heresy' | மார்க்கபேதம் |
| Herods, The | ஏரோது |
| Hezekiah | எசேக்கியா |
| 'High place' | மேடை |
| '*Hijra*' | மகமது |
| Hittites | ஏத்தியர் |
| Holiness | பரிசுத்தம் |
| Holy Communion | இராப்போஜனம் |
| Holy Land, The | கானான் |
| Holy of Holies | தேவாலயம் |
| ,, | மகா பரிசுத்த ஸ்தலம் |
| Holy Spirit | பரிசுத்த ஆவி |
| Hope | நம்பிக்கை |
| Hosea | ஓசியா |
| Hospitality | விருந்தாளி |
| Hour | மணி |
| House | வீடு |
| Hymn | கீதம் |
| ,, | பாட்டு |
| Hypocrite | மாயக்காரன் |

## I

| | |
|---|---|
| '*I—ch—th—u—s*' | மீன் |
| Idol (*see* Image) | விக்கிரகம் |
| Idolatry (*see* Image) | விக்கிரகாராதனை |
| Idumea | இதுமேயா |
| Image | சிலை |
| ,, | சொரூபம் |
| ,, | விக்கிரகம் |
| Incense | தூபம் |
| India | இந்துதேசம் |
| Ink | எழுத்து |
| ,, | மை |
| Ink-horn | மைக்கூடு |
| Ionians | யாவான் |
| Ir-ha-heres | நிர்மூலமான பட்டணம் |
| Isaac | ஈசாக்கு |
| Isaiah | ஏசாயா |
| Islam | மகமது, இஸ்லாம் மார்க்கம் |
| Israel | இஸ்ரவேல் |
| Ivory | தந்தம் |

## J

| | |
|---|---|
| Jacob | யாக்கோபு |
| Jacobites | யாக்கோபித்தர் |
| James | யாக்கோபு |
| Jehoiakim | யோயாக்கீம் |
| Jehoshaphat | யோசபாத் |
| Jehovah | கடவுள் |
| Jehu | ஏகூ |
| Jeremiah | எரேமியா |
| Jerusalem | எருசலேம் |
| Jesus Christ, The brothers of | இயேசுகிறிஸ்துவின் சகோதரர் |
| Jesus Christ, Christology of the New Testament. | இயேசுவின் தத்துவத்தைப்பற்றிய கோட்பாடுகள் |
| Jesus Christ, Discourses of | இயேசுகிறிஸ்து அருளின உபந்யாசங்கள் |
| Jesus Christ, Genealogy of | இயேசுவின் வம்ச அட்டவணை |
| Jesus Christ, Life of | இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் |
| Jesus Christ and Paul | பவுல் அப்போஸ்தலனும் இயேசுகிறிஸ்துவும் |
| Jesus Christ, Resurrection of | இயேசுவின் உயிர்த்தெழுதல் |
| Jesus Christ, Teaching of | இயேசுகிறிஸ்து அருளின உபதேசம் |
| Jesus Christ, Unwritten Sayings of | இயேசுகிறிஸ்து சொன்ன வாக்குகளில் எழுதப்படாதவை |
| Jewel | இரத்தினம் |
| Jezebel | ஏசபேல் |
| Jezreel | யெஸ்ரயேல் |
| Job | யோபின் ஆகமம் |
| Joel | யோவேல் |
| John the Apostle | யோவான் அப்போஸ்தலன் |
| ,, Gospel of | யோவான் எழுதின சுவிசேஷம் |
| ,, Epistles of | யோவான் எழுதின நிருபங்கள் |
| ,, Baptist | யோவான் ஸ்நானகன் |
| Joshua | யோசுவா |

| | |
|---|---|
| Jonah | யோனா |
| Jordan | யோர்தான் நதி |
| Joseph | யோசேப்பு |
| Joseph son of Jacob | 1 யாக்கோபின் மகன் |
| Joseph husband of Mary | 2 கன்னிமரியாளின் புருஷன் |
| Joseph of Arimathea | 3 அரிமத்தியா ஊராகிய யோசேப்பு |
| Joy | சந்தோஷம் |
| Jubilee, Year of | பண்டிகை |
| Judah | யூதா |
| Judas | யூதா |
| ,, | யூதாஸ் |
| Jude, Epistle of | யூதாவின் நிருபம் |
| Judges, Book of | நியாயாதிபதிகளின் புஸ்தகம் |
| Judith, Book of | யூதித்தின் ஆகமம் |
| Justice | நியாயம் |
| ,, | நியாய விசாரணை |
| ,, | பழி |
| ,, | பழியானது |
| ,, | பழிவாங்குகிறவன் |
| Justification | நீதிமான்களாக்குகிறது |

## K

| | |
|---|---|
| Kaaba, The | மகமது |
| *Kenosis* | வெறுமையாக்குதல் |
| 'Kettle' | பானை |
| Keys, The Power of the | திறவுகோல் |
| King | இராஜா |
| Kingdom | இராஜ்யம் |
| ,, of God | ,, |
| ,, of Heaven | ,, |
| Kings, Book of | இராஜாக்களின் புஸ்தகம் |
| Kiss | முத்தம் |
| Knee | முழங்கால் |
| Knowledge | அறிவு |
| ,, | ஞானம் |
| ,, | கல்வி |
| Koran, The | மகமது |

## L

| | |
|---|---|
| Lamentations, Book of | புலம்பல் |
| Latin | லத்தீன் |
| Law, The | பிரமாணம் |
| ,, Moral | ,, |
| ,, Ceremonial | ,, |
| ,, Civil | ,, |
| ,, Natural | ,, |
| Law, Moral | சன்மார்க்கப் பிரமாணம் |
| Law, The | நியாயப் பிரமாணம் |
| Lazarus | லாசரு |
| Leah | லேயாள் |
| Leaven | புளித்தமா |
| Lebanon | லிபனோன் |
| Legion | போர்ச்சேவகர் |
| ,, | லேகியோன் |
| Leviathan | பிகெமோத் |
| ,, | முதலை |
| ,, | லிவியாதான் |
| ,, | வலுசர்ப்பம் |
| Levites | ஆசாரியர் |
| ,, | லேவியர் |
| Leviticus, Book of | லேவியராகமம் |
| 'Libertines,' The | லிபர்த்தீனர் |
| Liberty | விடுதலை |
| Life | ஜீவன் |
| Light | ஒளி |
| ,, | வெளிச்சம் |
| Lightning | மின்னல் |
| Lilith | சாகுருவி |
| Lily | லீலிபுஷ்பம் |
| Lion | சிங்கம் |
| Lizard | பல்லி |
| Locust | கிளி |
| ,, | வெட்டுக்கிளி |
| ,, | பச்சைப்புழு |
| '*Logos*'. | யோவான் சுவிசேஷம் XI |
| ,, | வார்த்தை |
| 'Long-suffering'. | பொறுமை |
| Lord's day | ஓய்வுநாள் |
| ,, | பண்டிகை |
| Lord's Supper, the | இராப்போஜனம் |
| Love | அன்பு |
| Love-feast | அன்புவிருந்து |
| Loving-kindness | இரக்கம் |
| Luke | லூக்கா |
| ,, Gospel of | லூக்கா சுவிசேஷம் |
| Lust | மாமிச இச்சை |
| ,, | மோக இச்சை |
| ,, | விகாரம் |
| ,, | விரகதாபம் |
| Lying | பொய் |
| ,, | மோசம் |

## M

| | |
|---|---|
| Maccabees | மக்கபெயர் |
| Magi, The | சாஸ்திரி |
| Magic | சூனியவித்தை |
| Mahomet | மகமது |
| Mahometanism | ,, |
| Malachi | மல்கியா |
| Malta | மெலித்தா |
| Mammon | மம்மோன் |

| | |
|---|---|
| Man | மனுஷன் |
| ,, The Son of | மனுஷகுமாரன் |
| ,, | மனுஷப்புத்திரன் |
| Manichaeans, The | மாணிக்கேயர் |
| Manna | மன்னா |
| Mantra | மந்திரம் |
| Manuscripts | எழுத்து |
| ,, | வேதாகமம் III. 3 |
| '*Maranatha*' | மாரநாதா |
| Marcionites | மார்சியோனித்தர் |
| Mark | மாற்கு |
| Marriage | கலியாணம் |
| ,, | மறுமணையாட்டி |
| 'Marshall' | தளகர்த்தன் |
| Mary | மரியாள் |
| ,, Mother of James and Joses | ,, |
| Mary, Sister of Lazarus | ,, |
| Mary Magdalene | ,, |
| ,, Mother of Jesus | ,, |
| Mary, Mother of John Mark | ,, |
| Mary of Rome | ,, |
| Mastic | பிசின் தைலம் |
| Mattathias | மக்கபெயர் |
| Matthew | மத்தேயு |
| 'Mattock' | மண்வெட்டி |
| '*Mazzebah*' | தூண் |
| '*Mazzeboth*' | பாகால் |
| Meal | ஆகாரம் |
| Meal | போஜனம் |
| Measures | அளவு |
| Medes | பார்சியரும் மேதியரும் |
| Mediation | மத்தியஸ்தர் |
| Medicine | அவுழ்தம் |
| ,, | ஔஷதம் |
| ,, | வியாதி |
| Mediterranean Sea | பெருங்கடல் |
| '*Mene, mene, tekel, upharsin*' | மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின் |
| Mercury | மெர்க்கூரி |
| Mercy | இரக்கம் |
| Micah | மீகா |
| Michael | மிகாவேல் |
| Midrash | தல்முத் |
| Millennium | ஆயிரம் வருஷம் |
| Mill stone | எந்திரம் |
| Messiah | மேசியா |
| Might | வல்லமை |
| Mile | மைல் |
| Mind | மனசு |
| Minister | பிரதானி |
| ,, | மந்திரி |
| ,, | உதவிக்காரன் |
| Minister | தேவ ஊழியக்காரன் |
| Miracles | அற்புதம் |
| Mishna | தல்முத் |
| Mitre | பாகை |
| Moab | மோவாப் |
| 'Molten image' | வார்ப்பு விக்கிரகம் |
| Monachism | வனவாசம் |
| Money | பணம் |
| Month | மாசம் |
| Moon | சந்திரன் |
| Moral Law | ச்ன்மார்க்க பிரமாணம் |
| Moses | மோசே |
| Moses' seat | ஆசனம் |
| Mountain | மலை |
| Mourning | பிரேத அடக்கம் |
| Mouth | வாய் |
| Muhammad | மகமது |
| Musical instruments | கீதவாத்தியம் |
| Myrrh | வெள்ளைப்போளம் |
| Myrtle | மிருதுச்செடி |
| Mystery | இரகசியம் |


## N


| | |
|---|---|
| Nabateans | சேலா |
| Nahum | நாகூம் |
| Nail | ஆணி |
| Names | நாமம் |
| Nations, The | ஜனங்கள் |
| ,, | புறஜாதி |
| '*Negeb*,' The | தென்தேசம் |
| Nehemiah | நெகேமியா |
| Nero | நேரோ |
| Nestorians | நெஸ்டோரியானர் |
| Net | வலை |
| Nethinim, The | நெதனீமியர் |
| New Moon | சந்திரன் |
| ,, | பண்டிகை |
| ,, | மாதப்பிறப்பு |
| 'Night monster' | சாகுருவி |
| Nitre | வெடியுப்பு |
| North, The | வடக்கு |
| ,, | வடதேசம் |
| Numbers | எண்கள் |
| Numbers, Book of | எண்ணாகமம் |


## O


| | |
|---|---|
| Oak | கருவாலி |
| Oath | ஆணை |
| Obadiah, Book of | ஒபதியாவின் தரிசனம் |
| Offering | பலி, பலிகள் |
| Offering, Burnt | பலி, பலிகள் |
| Offering, Drink | ,, |
| Offering, Fire | ,, |
| Offering, Free-will | ,, |
| Offering, Guilt | ,, |

| | |
|---|---|
| Offering, Heave | பலி, பலிகள் |
| Offering, Meal | ,, |
| Offering, Memorial | ,, |
| Offering, Peace | ,, |
| Offering, Sin | ,, |
| Offering, Thank | ,, |
| Offering, Trespass | ,, |
| Offering, Votive | ,, |
| Offering, Wave | ,, |
| Olives, Mount of | ஒலிவமலை |
| Omnipresence | வியாபித்தல் |
| On, City of | ஆவேன் |
| Onion | வெங்காயம் |
| Ordination | அபிஷேகம் |
| ,, | கைகளை வைப்பது |
| Origen | ஒரிகேன் |
| Orion | நட்சத்திரம் |
| Ox | மாடு |
| ,, | ரிஷபம் |

**P**

| | |
|---|---|
| Palestine | கானான் |
| Palm | பனை |
| Palm | பேரீச்சம் |
| Papyri | இயேசுகிறிஸ்து சொன்ன வாக்குகளில் எழுதப்படாதவை |
| ,, | வேதாகமம் III. 3. |
| Parables | உவமைகள் |
| Passover | பஸ்கா |
| Patience | பொறுமை |
| Paul | பவுல் |
| Paul Epistles (see Romans, Philippians etc.) | |
| Paul and Jesus Christ | பவுல் அப்போஸ்தலனும் இயேசுகிறிஸ்துவும் |
| Peace | சமாதானம் |
| Peacock | மயில் |
| Pearl | முத்து |
| Pelagians | பெலாகியானர் |
| Pentecost | பண்டிகை |
| Persecutions, The Great | துன்பம் |
| Persians | பார்சியரும் மேதியரும் |
| Peter | பேதுரு |
| Peter, Epistles of | ,, |
| Pharisees | பரிசேயர் |
| Philemon | பிலேமோன் நிருபம் |
| Philip | பிலிப்பு |
| Philippians | பிலிப்பியருக்கு எழுதின நிருபம் |
| Philistines | பெலிஸ்தர் |
| Phoenicia | பெனிக்கே |
| Photinians | போத்தினியானர் |
| Phylactery | காப்பு நாடாக்கள் |
| Pigeon | காட்டுப்புறா |
| Pigeon | புறா |
| Pilate | பிலாத்து |
| Pillar | தூண் |
| Pinnacle | தேவாலயம் |
| Pitcher | மண்பாண்டம் |
| Pity | இரக்கம் |
| Plague | வாதை |
| Plain | சமபூமி |
| Pledge | அடகு |
| '*Politarchai*' | பட்டணத்து அதிகாரிகள் |
| Polycarp | பொலிகார்ப்பு |
| Pomegranate | மாதளம் பழம் |
| Pool | கிணறு |
| 'Pope' | 'பாப்பு' |
| Porch | மண்டபம் |
| Porcupine | முள்ளம்பன்றி |
| Post (messenger) | அஞ்சல்காரன் |
| Post | தூண் |
| Pot | மண்பாண்டம் |
| Power | வல்லமை |
| *Praetorium* | அரமனை |
| Prayer | ஜெபம் |
| Preaching | பிரசங்கம் |
| Priests | ஆசாரியர் |
| Priests | லேவியராகமம் |
| Prince | பிரபு |
| ,, | தலைவன் |
| *Proconsul* | அதிபதி |
| *Procurator* | தேசாதிபதி |
| Promise | வாக்குத்தத்தம் |
| Propitiation | கிருபாதாரபலி |
| Prophecy | தீர்க்கதரிசனம் |
| Proselyte | யூதமார்க்கத்தமைந்தவன் |
| 'Protestant' | 'புரோட்டெஸ்தாந்து' |
| Proverb | பழமொழி |
| Proverbs, Book of | நீதிமொழி |
| Providence | பராமரிப்பு |
| Province | நாடு |
| Psalms | சங்கீதங்கள் |
| Publican | ஆயக்காரன் |
| Punishment | ஆக்கினை |
| Purgatory | உத்தரிக்கிற ஸ்தலம் |
| Purim, Feast of | பண்டிகை |
| Purim | பூர் |
| Pytho | பீத்தோ தேவன் |

**Q**

| | |
|---|---|
| Queen-of-Heaven | வானராக்கினி |
| Quicksand | சொரிமணல் |
| Quirinius | சிரேனியு |
| Qur'an | மகமது |

## R

| | |
|---|---|
| '*Rabbi*' | ரபி |
| Races | பந்தயம் |
| Rain | மழை |
| Ransom | மீட்கும் பொருள் |
| Rechabites | ரேகாப் |
| Reconciliation | ஒப்புரவாகுதல் |
| 'Recorder' | சம்பிரதி |
| Redeemer | மீட்பர் |
| Redemption | மீட்பர் |
| Red heifer | செங்கிடாரி |
| Red Sea | சிவந்த சமுத்திரம் |
| Reed | மடலுள்ள செடி |
| Regeneration | மறுஜென்மம் |
| Rest | இளைப்பாறுதல் |
| Restoration | மறுஜென்மகாலம் |
| Resurrection | உயிர்த்தெழுதல் |
| Resurrection of Jesus | இயேசுவின் உயிர்த்தெழுதல் |
| Revelation | வெளிப்படுகிறது |
| Revelation of John | வெளிப்படுத்தின விசேஷம் |
| Rezin | ரேத்சீன் |
| Rhoda | ரோதை |
| Rhodes | ரோது தீவு |
| Righteousness | நீதி |
| Roll | சுருள் |
| ,, | வேதாகமம் III. 3. |
| ,, | எழுத்து |
| Romans, Epistle to the | ரோமருக்கு எழுதின நிருபம் |
| Rome | ரோமாபுரி |
| Rome History | ,, |
| Rome Emperors (*see also* Augustus, etc.) | ,, |
| Rose | ரோஜா |
| Rue | மருக்கொழுந்து |
| 'Ruler of feast' | 'பந்தி விசாரிப்புக்காரன்' |
| 'Ruler of this world' | லோகாதிபதி |
| Ruth, Book of | ரூத்தின் ஆகமம் |

## S

| | |
|---|---|
| Sabbath | ஓய்வுநாள் |
| ,, | பண்டிகை |
| Sabellians | சபெல்லியானர் |
| Sacraments, The | ஞானஅருமையான திரவியங்கள் |
| Sacrifice | பலி |
| Sacrifices | பலிகள் |
| Sadducees | சதுசேயர் |
| Salt | உப்பு |
| Salvation | இரட்சகர் |
| ,, | மீட்பர் |
| Samaria | சமாரியா |
| Samaritans | சமாரியர் |
| Samuel | சாமுவேல் |
| Samuel, Books of | சாமுவேலின் புஸ்தகங்கள் |
| Sanctification | பரிசுத்தமாக்கப்படுதல் |
| Sand | மணல் |
| '*Sanhedrin*' | ஆலோசனைச்சங்கம் |
| Sardis | சர்தை |
| Satan | சாத்தான் |
| Satan | பிசாசு |
| Saul | சவுல் |
| Saviour | இரட்சகர் |
| ,, | மீட்பர் |
| Saw | வாள் |
| 'Scape-goat' | பண்டிகை IV |
| School | பள்ளிக்கூடம் |
| Scourge | வார் |
| 'Screech-owl' | சாகுருவி |
| Scribes | வேதபாரகர் |
| Scythian | புறதேசத்தான் |
| Sea, The Great | பெருங்கடல் |
| Sea Monster | திமிங்கலம் |
| Seal, signet | முத்திரை |
| Seat | ஆசனம் |
| Second advent, The | வருகை |
| Seed | மணி |
| ,, | விதை |
| Seed-time | விதைப்புக்காலம் |
| Septuagint | கிரேக்கசத்தியவேதம் |
| Sermon | பிரசங்கம் |
| Servant | அடிமை |
| ,, | உதவிக்காரன் |
| ,, | பணிவிடைக்காரன் |
| ,, | வேலைக்காரன் |
| 'Servant of Jehovah' | யேகோவாவினுடைய தாசன் |
| 'Servant of the Lord' | ,, |
| Serpent | சர்ப்பம் |
| Serpent (dragon) | வலுசர்ப்பம் |
| Sheep | ஆடு |
| Shekel | பணம் |
| *Sheol* | ஷெவோல் |
| Shepherd | மேய்ப்பன் |
| Shewbread | சமுகத்து அப்பம் |
| Ship | கப்பல் |
| Shishak | சீஷாக் |
| Sidon | சீதோன் |
| Siege | முற்றுகை |
| Signet, seal | முத்திரை |
| Silver | வெள்ளி |
| Silver, Pieces of | பணம் |
| Sin | பாவம் |
| ,, | தீங்கு |
| ,, | தீமை |

| | |
|---|---|
| Sin, Confession of | பாவ அறிக்கை |
| ,, | பாவசங்கீர்த்தனம் |
| Sin, Man of | பாவமனுஷன் |
| Sirach, Wisdom of | ஞானம் |
| ,, | நீதிநூல்கள் |
| Sky | ஆகாயம் |
| Slavery | அடிமை |
| ,, | வேலைக்காரன் |
| Socinians | சொசினியர் |
| Soldiers | போர்ச்சேவகர் |
| ,, | லேகியோன் |
| ,, | அகுஸ்து பட்டாளம் |
| Solomon | சாலொமோன் |
| Solomon, The Wisdom of | ஞானம் |
| Song | கீதம் |
| ,, | பாட்டு |
| Song of Solomon, The | உன்னதப்பாட்டு |
| Song of the Three Holy Children | மூன்று பரி. பிள்ளைகள் பாடின பாட்டு |
| Sorcery | சூனியவித்தை |
| Sons of God | தேவகுமாரர் |
| Soul | ஆத்துமா |
| ,, | ஆவி |
| 'South country' | தென்தேசம் |
| Speech | பிரசங்கம் |
| Spirit | ஆத்துமா |
| ,, | ஆவி |
| Spirit, The Holy | பரிசுத்த ஆவி |
| Stars | நட்சத்திரம் |
| Stars, Worship of the | வானராக்கினி |
| Stars, Morning | விடி வெள்ளி |
| Steward | உக்கிராணக்காரன் |
| ,, | விசாரணைக்கர்த்தன் |
| '*Stigmata*' | அச்சடையாளங்கள் |
| Stoics | ஸ்தோயிக்கர் |
| Stone | கல் |
| Street | தெரு |
| Sun | சூரியன் |
| Sundial | சூரியகடிகாரம் |
| Sun-worship | சூரிய ஆராதனை |
| Superscription | மேலெழுத்து |
| Supreme Being, The | கடவுள் |
| Supreme Being, The | பராபரன் |
| Swine | பன்றி |
| Syene | செவெனே |
| Synagogue | ஜெப ஆலயம் |

## T

| | |
|---|---|
| Tabernacle, The | கூடாரம் |
| ,, | சப்பரம் |
| ,, | வாசஸ்தலம் |
| Tabernacles, Feast of | பண்டிகை |
| Table | மேசை |
| Talent | பணம் |
| '*Talitha Cumi*' | 'தலித்தாகூமி' |
| Talmud, The | தல்மூத் |
| Targums, The | தர்க்கும் |
| 'Task-master' | விசாரணைக்காரன் |
| Tattooing, 'cutting of the flesh' | கீறுதல் |
| Taxing | தீர்வை |
| Temple | தேவாலயம் |
| 'Temple-keeper' | பரிசாரகி |
| Temptation | சோதனை |
| 'Teraphim' | தேராபீம் |
| Tertullian | தெர்துலியான் |
| Testament | சாதனம் |
| Testament, Old | வேதாகமம் I |
| Testament, New | வேதாகமம் III |
| '*Theotokos*' | மரியாள் 4. |
| Thessalonians, Epistles to | தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபம் |
| 'Things strangled' | நெருக்குண்டுசெத்தது |
| Thomas | தோமா |
| Thorn | முட்செடி |
| Three Taverns, The | மூன்று சத்திரம் |
| Throne | ஆசனம் |
| Thunder | இடிமுழக்கம் |
| Timbrel | மேளம் |
| Time | காலம் |
| Timothy | தீமோத்தேயு |
| Tithes | தசம பாகம் |
| 'Title' | மேல் விலாசம் |
| Titus | தீத்து |
| Tobit, Book of | தோபித்து |
| 'Toll' | தீர்வை |
| Tomb | கல்லறை |
| Tongues, Gift of | பாஷைகள் பேசும் வரம் |
| Torture | ஆக்கினை |
| Torture | நேரோ |
| 'Town-clerk' | 'பட்டணத்துசம்பிரதி' |
| Tradition | தல்முத் |
| Tradition | பாரம்பரியம் |
| Transfiguration | மறுரூபம் ஆகுதல் |
| 'Treasury' | 'காணிக்கைப் பெட்டிகள்' |
| ,, | பொக்கிஷசாலை |
| Tree | மரம் |
| Tribute | தீர்வை |
| Trinity | திரியேகத்துவம் |
| Truth | சத்தியம் |

## U

| | |
|---|---|
| Uncleanness | அசுத்தம் |
| Unction, Extreme | அவஸ்தை பூசுதல் |

| | |
|---|---|
| Unicorn | காண்டாமிருகம் |
| Urim and Thummim | ஊரீம் தும்மீம் |
| Usury | வட்டி |

## V

| | |
|---|---|
| Valley | பள்ளத்தாக்கு |
| Valley of Baca | பாகா பள்ளத்தாக்கு |
| Valley of Decision | நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கு |
| Vanity | மாயை |
| Veil | முக்காடு |
| Vengeance | பழி |
| ,, | பழி வாங்குதல் |
| Vine | திராட்சரசம் |
| Virgin | கன்னிகை |
| Vision | தரிசனம் |
| Vow | பொருத்தனை |

## W

| | |
|---|---|
| Wagon | வண்டில் |
| Wall | மதில் |
| War | சண்டை |
| ,, | முற்றுகை |
| Wars of the Lord | கர்த்தருடைய யுத்த புஸ்தகம் |
| Washing | கழுவுகிறது |
| Water | நீர் |
| Way | வழி |
| Weapons | ஆயுதம் |
| Weaving | நெசவு |
| Week | வாரம் |
| ,, | பண்டிகை |
| Weights and measures | அளவு |
| Well | கிணறு |
| 'White stone' | கல் |
| Whirlwind | சுழல்காற்று |
| Widow | விதவை |
| Wife | குடும்பம் |
| ,, | கலியாணம் |
| ,, | மனைவி |
| Wilderness | வனாந்தரம் |
| Will | சித்தம் |
| Window | ஜன்னல் |
| ,, | மதகு |
| Wine and intemperance | திராட்சரசமும் மதுபானமும் |
| Winter | மாரிகாலம் |
| Wisdom | ஞானம் |
| ,, | நீதிநூல்கள் |
| Wisdom, Book of | ஞானம் |
| ,, | நீதிநூல்கள் |
| Wisdom literature | ஞானம் |
| ,, | நீதிநூல்கள் |
| Wisdom of Sirach | ஞானம் |
| ,, | நீதிநூல்கள் |
| Wisdom of Solomon | ஞானம் |
| Wisdom of Solomon | நீதிநூல்கள் |
| Wise men | சாஸ்திரி |
| Witch-craft | சூனிய வித்தை |
| Witness | சாட்சி |
| Woman | ஸ்திரீ |
| ,, | குடும்பம் |
| Wool | ஆட்டுமயிர் |
| Word, The (Logos) | யோவான் சுவிசேஷம் xi |
| ,, | வார்த்தை |
| Word, The (The Scriptures) | வேதாகமம் |
| World | உலகம் |
| Worship | ஆராதனை |
| Writing | எழுத்து |

## X

| | |
|---|---|
| Xavier, St. | சவரியார் |
| Xerxes | அகாஸ்வேரு (2) |

## Y

| | |
|---|---|
| Yoke | நுகத்தடி |

## Z

| | |
|---|---|
| Zechariah, Book of | சகரியாவின் ஆகமம் |
| Zedekiah | சிதேக்கியா |
| Zephaniah | செப்பனியா தீர்க்கதரிசி |
| Zidon | சீதோன் |
| Zion | சீயோன் |
| ,, | எருசலேம் |

# CONTRIBUTORS

| | | |
|---|---|---|
| The Rev. | A. Fehlberg ... | Miracles (அற்புதம்). |
| ,, | F. Goodwill ... | St. Matthew's Gospel (மத்தேயு சுவிசேஷம்). |
| ,, | ,, ... | The Epistle to the Romans (ரோமருக்கு எழுதின நிருபம்). |
| ,, | J. H. Maclean, M.A., B.D. | The Atonement (பாவநிவாரணம்). |
| ,, | ,, ,, ... | Sacrifice (பலி). |
| ,, | ,, ,, ... | Sin (பாவம்). |
| ,, | G. E. Phillips, B.A. ... | The History of Jesus Christ (இயேசு கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம்). |
| ,, | ,, ,, ... | The Teaching of Jesus (இயேசு கிறிஸ்து அருளின உபதேசம்). |
| ,, | ,, ,, ... | The Resurrection of Jesus (இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்). |
| ,, | ,, ,, ... | The Christology of the New Testament (இயேசுகிறிஸ்துவின் தத்துவத்தைப்பற்றிய புதிய எற்பாட்டிலுள்ள கோட்பாடுகள்). |
| ,, | ,, ,, | Jeremiah (எரேமியா). |
| ,, | H. A. Popley, B.A. ... | St. John's Gospel (யோவான் சுவிசேஷம்). |
| ,, | ,, ,, ... | St. John's Epistles (யோவான் எழுதின நிருபங்கள்). |
| ,, | L. Reichardt ... | Angels (தூதன்). |
| ,, | ,, ... | The Cross (சிலுவை). |
| ,, | ,, ... | Fasting (உபவாசம்). |
| ,, | H. Rice ... | The Epistle to the Philippians (பிலிப்பியருக்கு எழுதின நிருபம்). |
| ,, | H. Schomerus ... | The Epistle to the Hebrews (எபிரேயருக்கு எழுதின நிருபம்). |
| ,, | E. T. Selby ... | The Bible (வேதாகமம்). |
| ,, | ,, ... | Baal and all names beginning with 'Baal' (பாகால், பாகால் காத், மு). |
| ,, | ,, ... | Bethany and many names beginning with 'Beth' (பெத்தானியா, பெத்தாபாரா மு.). |
| ,, | ,, ... | Pilate (பிலாத்து). |

The Rev. E. T. Selby ... The Pharisees (பரிசேயர்).
,, ,, ... Philemon (பிலேமோன்).
,, ,, ... Also twelve other brief articles.
,, J. P. Shrimpton, B.A. Paul (பவுல்).

The following articles have been adapted from articles written by the late Dr. Bower:

The Arians (அரியானர்).
Augustine (அகுஸ்தீன்).
Calling (அழைப்பு).
Election (தெரிந்துகொள்ளுதல்).
Extreme Unction (அவஸ்தை பூசுதல்).
Faith (விசுவாசம்).
Fate (விதி.)
Fire (அக்கினி).
The Holy Spirit (பரிசுத்த ஆவி).
Justification (நீதிமான்களாகிறது).
The Law (நியாயப்பிரமாணம்).
The Mediator (மத்தியஸ்தர்).
Omnipresence (வியாபித்தல்).
The Olive (ஒலிவம்).
Preaching (பிரசங்கம்).
Sanctification (பரிசுத்தமாக்கப்படுதல்).
The Soul (ஆத்துமா).
The Supreme (பராபரன்).
The Trinity (திரியேகத்துவம்).

There are about 4,800 articles altogether.

---

## நூல் ஆசிரியர்கள்

இந்த அகராதியில் அடியிற்கண்ட விஷயங்களைப்பற்றி எழுதின நூல் ஆசிரியர்களும் அவர்கள் இயற்றிய நிபந்தனங்களும் அடங்கும்.

சங். A. பெல்பெர்க் — அற்புதம்.
,, F. குட்வில் — மத்தேயு சுவிசேஷம்.
ரோமருக்கு எழுதின நிருபம்.
,, J. H. மக்ளேன், M.A., B.D. — பாவநிவாரணம்.
பலி.
பாவம்.
,, G. E. பிலிப்ஸ், B.A. — இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம்.
இயேசுகிறிஸ்து அருளின உபதேசம்.
இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.
இயேசுகிறிஸ்துவின் தத்துவத்தைப்பற்றிய புதிய ஏற்பாட்டிலுள்ள கோட்பாடுகள்.
எரேமியா.
,, H. A. பாப்லே, B.A. — யோவான் சுவிசேஷம்.
யோவான் எழுதிய நிருபங்கள்.
,, L. ரைகார்ட் — தூதன்.
சிலுவை.
உபவாசம்.

| | |
|---|---|
| சங். H. ரைய்ஸ் | பிலிப்பியருக்கு எழுதின நிருபம். |
| ,, H. சோமேரஸ் | எபிரெயருக்கு எழுதின நிருபம். |
| ,, E. T. செல்பி | வேதாகமம். |
| | பாகால், பாகால்காத் மு. |
| | பெத்தானியா, பெத்தாபரா மு. |
| | பிலாத்து. |
| | பரிசேயர். |
| | பிலேமோன். |
| | இதோடு பன்னிரண்டு பற்பல நிபந்தனங்கள். |
| ,, J. P. சிறிம்ப்ற்றன், B.A. | பவுல். |

வேத சாஸ்திரியாகிய காலஞ்சென்ற பவர் ஐயர் எழுதிய வேத அகராதியில் கண்ட சில நிபந்தனங்கள் திருத்தப்பட்டு, இந்த வேத அகராதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவையாவன :

| | |
|---|---|
| அரியானர் | நியாயப்பிரமாணம். |
| அகுஸ்தீன் | மத்தியஸ்தர். |
| அழைப்பு | வியாபித்தல். |
| தெரிந்துகொள்ளுதல் | ஒலிவம். |
| அவஸ்தை பூசுதல் | பிரசங்கம். |
| விசுவாசம் | பரிசுத்தமாக்கப்படுதல். |
| விதி | ஆத்துமா. |
| அக்கினி | பராபரன். |
| பரிசுத்தஆவி | திரியேகத்துவம். |
| நீதிமான்களாகிறது | |

மற்ற ஏறக்குறைய 4,720 நிபந்தனங்களும் கனம்: A. C. கிலேற்றன் ஐயரால் எழுதப்பட்டன.

---

## ADDENDA

### சேர்க்கப்படவேண்டிய பதங்கள்

இத்தோ. **R. V. Iddo.** = யதாய். எஸ்று $10^{43}$.
யதாய். **A. V. Jadan. R. V. Iddo.** எஸ்று $10^{43}$.

C. L. S. PRESS, MADRAS—1927.

# Books for Christian Workers

## சென்னை சன்மார்க்கப் புத்தகச் சங்கத்தார்
## கிறிஸ்தவ ஊழியர்க்கு
## பயனுறுமாறு பிரசுரிக்கும் புத்தகங்கள்

OUR DAILY LIFE AND RELIGION. நமது தின ஜீவியமும் தெய்வ பக்தியும். அன்றாடக ஜீவியத்தில் நிகழுங் கஷ்டங்களை பொறுமையோடு சகிக்குமாறு வழிகாட்டும் ஓர் சிறந்த புத்தகம். மதபேதமின்றி மாதர்க்கும் மற்றவர்க்கும் இன்றியமையாதது. By Marie S. Christlieb. 96 pp. Paper cover, 6 As. Cloth binding, 12 As.

BESCHI'S INSTRUCTIONS TO CATECHISTS. வேதியரொழுக்கம். கிறிஸ்தவ சபை ஊழியர்க்கு பயன்படும் புத்திமதிகளடங்கியது. இப்புத்தகம் சத்தியமார்க்கக் குருவாய் தமிழ்ப்பாஷையில் பேர்படைத்த வீரமாமுனிவரால் எழுதப்பட்டது. 12mo. 168 pp. Stiff cover, 5 As. Cloth binding, 10 As.

CHRISTIAN EVIDENCES. கிறிஸ்துமார்க்க ரூபகாரங்கள். இவ்விஷயத்தை நன்கு ஆராய்ந்த ஓர் வேதசாஸ்திரியால் எழுதப்பட்டது. By the Rev. W. H. Campbell, B.D. Crown 8vo. 235 pp. Stiff cover, 8 As. Cloth binding, 14 As.

SATSAMAYA VILAKKAM. (The Explanation of the True Way.) சத்சமய விளக்கம். கிறிஸ்துமதக்கொள்கையை அனுசரிக்கும் பொருளடங்கிய தமிழ் காவிய செய்யுள்கள் பதவுரையுடன் அடங்கியது. An anthology of passages on ethical and religious subjects from Tamil Poetry. By the Rev. H. A. Popley, B.A. Crown 8vo. 128 pp. Stiff cover, 6 As. Cloth binding, 12 As.

BUNYAN'S HOLY WAR. திருப்போர். துர்ஜீவியத்தினின்று நற்சீவிய பக்தனாய் மாறிய ஜான் பன்யனின் அழியாப் புகழ்பெற்ற புத்தகங்களிலொன்று. Translated by the Rev. S. Winfred. Illustrated 12mo. 388 pp. Half cloth, 12 As. Cloth binding, Re 1–4.

BUNYAN'S PILGRIM'S PROGRESS. பரதேசியின் மோட்ச பிரயாணம். ஜான் பன்யன் முத்திவழியடைந்த வரலாறு. உபமானமாய் எழுதப்பட்டுள்ளது. 12mo. 498 pp. Half cloth, Re 1–6 ; Cloth binding, Re 1–14.

IMITATION OF CHRIST. கிறிஸ்துநாதர் அனுசாரம். (கிறிஸ்துவை பின்பற்றல்.) By Thomas à Kempis. Translated by the Rev. J. B. Gnanavolivu, B.A. Parts I, II and III. 10 As. each. Cloth Re 1–4–0 each. Part IV. LIVING BREAD, A Devotional Companion to the Loard's Supper. ஜீவ அப்பம் அல்லது ராப்போஜனத்தின்பேரில் தியானங்கள். Paper cover, 4 As. Cloth 10 As.

THE SHEPHERD AND THE SHEEP. ஆயனும் ஆடும். பற்பல வித போதகரையும் அவர்கள் போதகத் திறமையையும் அவர்கள் ஆட்சியின் கீழுள்ள அங்கங்களின் பிரசங்கங்களினால் உண்டாகும் மாறுதலையும் வெகு சிறப்பாய் தமிழ் நாட்டுச் சபைகளிற் காணுமாறு இந்த ஆசிரியனுக்கியல்பான இனிய தமிழில் எழுதப்பட்டுள்ளது. By C. Arumainayagam, Nagercoil. Crown 8vo. 146 pp. Half cloth 10 As; Cloth binding, Re 1.

STUDIES IN THE LORD'S PRAYER. கர்த்தருடைய ஜெப விளக்கம். இதில் பொதுவாய் ஜெபிக்கவேண்டிய முறையைக் காண்பித்து கர்த்தருடைய ஜெபத்தின் பல பாகங்களைத் தெளிவாய் விரித்து விளக்கியிருக்கிறது. By the Rev. W. Stanley Dodd. Crown 8vo. 79 pp. Paper cover, 4 As. Cloth binding, 10 As.

THE LORD'S PRAYER. கர்த்தருடைய ஜெபம். பற்பல பிரிவாகப் பிரித்து ஜெபத்தின் ஆழ்ந்த கருத்துகளையும் பொருட்களையும் தெளிவாய் விளக்கியிருக்கிறது. By S. G. Daniel, B.A. Crown 8vo. 116 pp. Paper cover, 6 As. Cloth binding, 12 As.

HELPS FOR THE PRAYER LIFE. ஜெப ஜீவியத்துணை. தமிழ்க் கிறிஸ்தவர்களுடைய உபயோகத்துக்காக எழுதப்பட்டது. By the Rev. E. T. Selby. Crown 8vo. 52 pp. Paper cover, 2 As. Cloth binding, 6 As.

VILLAGE PREACHING. கிராமப் பிரசங்கி. அறிவில் குறைந்த ஜனங்களிடையில் கிறிஸ்தவ ஊழியஞ் செய்வோருக்கு உபயோகமான பிரசங்கபோதனை அடங்கியது. Demmy 8vo. 48 pp. Paper cover, 6 As; Cloth binding, 14 As.

MISSIONARY IDEALS. சுவிசேஷகர் இலக்கு. இதில் சுவிசேஷத்தை பரவச்செய்யும் வேலைக்காகத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களுக்கு நேரிடும் சோதனைகளையும், அவற்றை மேற்கொள்ள கையாடவேண்டிய முறைகளையும் 'நடபடிக்கை' புஸ்தகத்திலிருந்தும் தமது சொந்த அனுபவத்திலிருந்தும் இவ்வாசிரியர் வெகு தெளிவாய் எடுத்துக்காட்டுகிறார். By the Rev. T. Walker, M.A. 100 pp. Paper cover, 5 As; Cloth binding, 10 As.

STUDIES IN FIRST CORINTHIANS. கொரிந்தியர் திருப்பாடங்கள். இதில் பரி. பவுல் கொரிந்தியருக்கெழுதிய முதலாம் நிருபத்தின்பேரில் வேத ஆராய்ச்சிப்பாடங்கள் அடங்கியிருக்கின்றன. Notes on difficult passages. By the Right Rev. V. S. Azariah, Bishop of Dornakal. Crown 8vo. 152 pp. Paper cover, 4½ As; Cloth binding, 10 As.

SADHU SUNDAR SINGH. சாது சுந்தர்சிங் By Mrs. A. Parker. Translated by G. V. Job, M.A. Crown 8vo. 118 pp. Paper cover, 8 As. Cloth binding, 14 As.

**The Christian Literature Society, Post Box 501, Madras**

## சென்னை கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கம்

---

**எபிரெயர் நிருப சுருக்க வியாக்கியானம் அல்லது பழைய புதிய சமய பரீட்சை.** (The Epistle to the Hebrews or The Old Religion and the New) C. H. மோனகன் ஐயரால் இயற்றப்பட்டது. பக்கம் 124. விலை 8 அணா.

**ஆமோஸ் தீர்க்கதரிசன புஸ்தகம்.** (The Book of Amos) T. C. விட்னி ஐயராலும் T. நரசிம்ம ஐயராலும் இயற்றப்பட்டது. பக்கம் 159. விலை 12 அணா.

**கர்த்தருடைய ஜெபம்.** (The Lord's Prayer) இதில் சில பிரசங்கங்கள் அடங்கியிருக்கின்றன. S. G. தானியேல், B.A., அவர்களால் இயற்றப்பட்டது. பக்கம் 116. விலை 6 அணா.

**நமது தினஜீவியமும் தெய்வ பக்தியும்.** (Our Daily Life and Religion) M. S. கிரிஸ்த் லீப் அம்மாள் அவர்களால் இயற்றப்பட்டது. பக்கம் 88. விலை 6 அணா.

**வேதாகம பாடங்கள்.** (Graded Bible Lessons) எ. சி. கிளேற்றன் ஐயரால் இயற்றப்பட்டது.

இந்தப் புஸ்தகங்களிலே, பாலர் வகுப்பு முதல் ஹைஸ்கூல் வரையிலுள்ள மாணாக்கருக்கு வேதத்தைப் போதிப்பதற்கேற்ற ஒழுங்கான பாடங்களைக் கனம் கிளேற்றன் ஐயர் எழுதியிருக்கிறார். ஆங்கில பாஷையில் எட்டு புஸ்தகங்கள் பிரசுரமாயிருக்கின்றன.

தமிழிலே முதலாம் புஸ்தகம் (விலை, அணா 12) இரண்டாம் புஸ்தகம் (விலை, ரூ. 1) மூன்றாம் புஸ்தகம் (விலை, அணா 14) நான்காம் புஸ்தகம் (விலை, அணா 14) ஐந்தாம் புஸ்தகம் (விலை, ரூ. 1) ஆகிய இப்புஸ்தகங்கள் உபாத்திமாருடைய உபயோகத்திற்கே ஏற்றவை. உபாத்திமார் பிள்ளைகளுக்கு லேசாய்ச் சொல்லத்தக்கதாக எல்லாப் பாடங்களும் முற்றிலும் கதைகளாகவே சொல்லப்பட்டிருக்கின்றன.

**மனுஷரைப் பிடிக்கும் வலையர்.** (Fishers of Men) B. C. ஸர்க்கார் ஐயர், M.A., என்பவரால் எழுதப்பட்டது. விலை 4 அணா.

**சாது சுந்தர் சிங்: தெய்வ அழைப்பைப் பெற்றவர்.** (Sadhu Sundar Singh: Called of God) விலை 8 அணா.

**பழைய ஏற்பாட்டு ஆகமங்களின் பொருள் அடக்கமும் சரித்திரச்சுருக்கமும்.** (Introduction to the Books of the Old Testament) கனம் A. O. பிரவுன் ஐயரால் இயற்றப்பட்டது. விலை 8 அணா.

**இயேசுகிறிஸ்துவும் அவருடைய ஊழியமும்.** (The Person and Work of Christ) கனம் C. G. Stapley ஐயரால் இயற்றப்பட்டது. விலை 1 ரூபாய்.

**சத்சமய விளக்கம்.** (Satsamaya Vilakkam) (கிறிஸ்துமதக் கொள்கையை அனுசரிக்கும் பொருள் அடங்கிய தமிழ் காவிய செய்யுள்கள் பதவுரையுடன் அடங்கியது.) கனம் H. A. பாப்லி ஐயரால் இயற்றப்பட்டது. பக்கம் 128. விலை 6 அணா.

**பண்டிதை ராமாபாய் ஸரஸ்வதி ஜீவிய சரித்திரம்.** (Pandita Ramabhai) ஸ்ரீமதி பால் அப்பாசாமி அம்மாள், B.A., அவர்களால் இயற்றப்பட்டது. பக்கம் 150. விலை 10 அணா.

**இரண்டு எருசலேம் பிரயாணிகள்.** (The Two Pilgrims to Jerusalem) கனம் S. D. சுந்தரம், B.A., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. விலை 2 அணா.